நிலாக்கள் தூர தூரமாக

பாரத தேவி



அணிந்துரை

பெண் பிள்ளைகள் தமிழ் உரைநடை இலக்கியத்துக்கு நிறையய வரவேண்டும், வருவார்கள். நாட்டுப்புறப் பட்டிதொட்டி களிலிருந்து வருவது அருந்தல். அதுவும் எழுதப் படிக்க மட்டுமே தெரிந்த பெண்கள் எழுதவருவது அருந்தலிலும் அருந்தல். மகள் பாரததேவி அப்படி வந்தவள்தான். நாட்டார் கதைகள் கேட்டுக் கேட்டு வளர்ந்தவள். அவள் படித்த பள்ளிக்கூடமே அதுதான். பள்ளிப்படிப்பை மேலும் படிக்க வேண்டும் என்கிற அவளுடைய சிறிய வயசு ஆசை கருகிப் போனது. மாடு மேய்க்கத்தான் லாயக்கு என்று ஆக்கப்பட்டாள்.

'தந்தையோடு கல்வி போம்' என்று 'கல்வி' அவளை விட்டுப் போய்விட்டது. போய்விட்டது என்று சொல்வதைவிட அவளிட மிருந்து பறிக்கப்பட்டது என்று சொல்லுவதே பொருத்தம்.

எனது பள்ளிநாட்களில் (1929லிருந்து 1939வரை) நான் படித்த போது எனது வகுப்பு பிராமணவாத்திகள் எங்களுக்குப் படிப்பில் மந்தம் ஏற்படும்போதெல்லாம் அவர்கள் எங்களைப் பார்த்து ஆங்காரத்தோடு சொல்லும் வார்த்தைகள் ''பேசாம மாடு மேக்கப் போங்களேண்டா'' என்பதுதான். இன்னும் ''ஆடு மேய்க்க'' ''கழுதை மேய்க்க'', ''பன்னி மேய்க்க'' என்றெல்லாம் அவரவர் சாதிகளை மனசில் வைத்துச் சொல்லுவதும் உண்டு. பிள்ளைகளின் மனசு புண்படுமே என்றெல்லாம் அந்தச் சாதிமேட்டிமை கொண்ட வாத்தியான்களுக்குத் தெரியாது; தெரிந்தாலும் கவலைகொள்ள மாட்டார்கள்.

'பாரத தேவி' என்ற பெயர் இவளுக்கு வந்ததன் காரணம் காந்தி இறந்த அன்று இவள் பிறந்ததினால் என்று சொன்னாள்.

ஆக, சுதந்திர நாட்டில் பிறந்த ஒரு பெண்பிள்ளை படிக்க முடியாமல் மாடு மேய்க்கப் போனாள். பெற்ற தாயே இவளுக்கு மாற்றாந்தாய்போல ஆனதுக்குக் காரணம் வாழ்க்கையை மெல்லும் வறுமைதான்.

இவளுடைய பால்ய கால வாழ்க்கை ஒரு கவித்துவம் கொண்ட தாக அமைந்திருக்கிறது. அவைகளை அற்புதமாகப் பதிவு செய்திருக் கிறாள்.

இந்த எழுத்தில், ஒரு இந்தியச் சிறுமி தனது பிழைப்புக்காக

தனது குடும்பத்துக்காக சிறிய வயசில் காடுகளில் மாடு மேய்த்துக் கொண்டு தனது பட்டறிவினால் வாழ்வியலைக் கண்டு கேட்டு அறிந்து கொண்டாள் என்பதோடு அதை தனது எழுத்தில் எவ்வளவு அழகாகாகப் பதிவு செய்திருக்கிறாள் என்று பார்க்கவேண்டும். இந்த எழுத்துப் பிரதி, ஒரு இதழில் வெளிவர கொஞ்சநாள் சென்னைக்குப் போய் தபசு இருந்தது. தோற்று வந்தது. அதன் பிறகு இரண்டு பதிப் பகங்களுக்குப் போய் புத்தகமாக முடியாமல் தோற்றுத் திரும்பி வந்தது. கடேசியில் கலைவாணியின் அருளால் (வேற எப்படிச் சொல்ல!) சு. வேணுகோபால், வசந்தகுமாரின் கண்களில் பட்டு இப்போது புத்தகமாகி விட்டது.

சிறந்த புத்தகங்கள் வெளியிடும் பதிப்பகங்களுக்கும் ஒரே விருது பெரிய அளவில் ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத் தினால் முதல் பரிசைத் தட்டிச் செல்வது தமிழினியாகத்தான் இருக்கும்.

மிகுந்த பாராட்டுக்களுடன்

கி.ரா

பாண்டிச்சேரி

29.11.2005

முன்னுரை

பத்து வயது முதல் காடுகளில்தான் அலைந்து திரிந்தேன். வெயில், மழை, காற்று, இடி, மின்னல் அனைத்தினூடாக இரவென்றும் பகலென்றும் இல்லாமல் நான் காடுகளில் மாடு மேய்த்துக் கொண்டும் வேலை செய்துகொண்டும் அலைந்தேன். இரவு சாப்பாடு மட்டும்தான் வீட்டில். காலைச் சாப்பாடும், மத்தியான சாப்பாடும் மரத்து நிழலிலும், கிணற்று ஓரங்களிலும்தான். நான் மட்டுமல்ல; என் வயதுப் பிள்ளைகளும் காடுகளில்தான் அலைவார்கள். பித்தளைத் தூக்குப்போணியில் புளித்த வாடையோடு சோளச்சோறும் கூழும் எங்கள் கைகளிலோ மரத்துக் கொப்புகளிலோ பசி போக்கக் காத்திருக்கும். சில சமயங்களில் தூக்குப்போணியில் இருக்கும் கஞ்சிக்காக காக்கைகளோடு போட்டி நடக்கும். அவை செயித்து விட்டால் அன்று நாங்கள் பட்டினி அல்லது எங்களுக்கு 'உணவுப்பொறை' சாப்பாடுதான். எஞ்சிய கஞ்சியைப் பகிர்ந்து குடிப்போம்.

ஐந்தாவது வரை படித்த எனக்கு அடுத்து படிப்பதற்கு வாய்ப்பில்லை. போலீஸாக இருந்த எனது அப்பா இறந்துபோனதால் எங்கள் வீடு வறுமையில் வீழ்ந்தது. பகல் முழுக்க மாடு மேய்ப்பது, காடுகளில் வேலைக்குப் போவது என்று அலைந்தால் இரவில் நடுச்சாமம் வரை விளையாடுவது, களவு புல்லுக்காகப் போவது என்று எனக்கும் இரண்டொரு சேத்திக்காரர்களுக்கும் ராப்பகல் வித்தியாசமே தெரியாமல் போனது.

தூரத்து மலைகளில் விறகுக்காக, வேலைக்காக, புளியம்பூவிற்காக, திருவிழாக்களுக்காக நடுச்சாமத்தில் நிலாவுடன் நடந்தபோது உறங்சமறந்து போனது. பேய்களும் பிசாசுகளும் எங்களைக் கண்டு அஞ்சி ஒதுங்கின. நாங்களே இரவு முழுக்கப் பேய்களாக அலைந்தோம். இன்றும் நினைவில் பசுமையாக இருக்கும் அந்த அனுபவங்களை நூலாக்கியதில் எனக்கு மிகுந்த சந்தோஷம்.

பதினேழு வயதில் எனக்குத் திருமணம் நடந்தது. பிறகு எனக்குள் இருந்த படிக்கும் ஆசையை, ஏக்கத்தைப் புரிந்துகொண்ட என் கணவர் என்னை ஹிந்தி படிக்க வைத்தார். வாழ்க்கை மாறிப் போன சூழ்நிலையில் என்னால் படிக்க முடியவில்லை. பிறகு தமிழாசிரியராக்கிவிட வேண்டுமென்று தமிழ் படிக்க வைத்தார். இலக்கணங்கள் எனக்கு ஒவ்வவில்லை. ஆக படிப்பு என்பது எனக்கு கிட்டாமலே போனது.

எனது மகன் பிறந்தபோது நான் படிக்காத படிப்பை எல்லாம் அவன் படிக்க வேண்டுமென்று விரும்பினேன். என் ஒரே மகன் அருண் சதீஷ் குமார் தற்சமயம் கலிபோர்னியாவில் வேதிப் பொறியியலில் பிஎச்.டி படித்துக்கொண்டு இருக்கிறான். ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தாயாக எனது அன்பு மகனுக்கு இந்த நூலைப் பரிசளிக்கிறேன்.

என்னை எழுத்துலகில் வளர வைத்து, என் இளமைக் கால நிகழ்வுகளை எழுதுமாறு ஊக்குவித்த அப்பாவிற்கு (திரு. கி. ராஜ நாராயணன்) எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சு.வேணுகோபால்தான் என்னை வசந்தகுமாருக்கு அறிமுகப் படுத்தினார். இந்தக் கதையை வேணுவுக்கு அனுப்பியிருந்தேன். இதைப் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொண்டு நூலாக்கியமைக்காக இருவருக்கும் நன்றி.

இந்த நூல் நன்றாக வரவேண்டுமென்று என்னைவிட அதிகமாக விரும்பிய எனது கணவருக்கும், சிறுவயதில் என்னோடு ஒன்றாக இயற்கையின் மடியில் விளையாடிய எனது சேத்திக்காரர் களுக்கும் சேத்திக்காரிகளுக்கும் இவ்வேளையில் அன்போடு நன்றி கூறுகிறேன்.

சொக்கலிங்கபுரம் - பாரததேவி

10.11.2005

அருண் சதீஷ் குமாருக்கு

இந்நூல் அன்பளிப்பு

1



அப்பா ஒருநாள் நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டு வந்தார். அவர் முகம் வாடியிருந்தது. ஆசையோடு ஓடிவந்த எங்களை அணைத்துக் கொள்ளவில்லை. ஒரு வார்த்தை பேசவில்லை. மெல்ல நடந்து வந்து படுக்கையில் படுத்து நெஞ்சைப் பிடித்தவாறு துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தார். அப்பா துடிப்பதைப் பார்த்தவாறு மூலைக்கு ஒருவராய் விதர்ப்பட்டு நின்றோம்.

நெஞ்சு வலியால் துடிக்கும் அப்பாவைப் பார்த்து நாங்கள் பயந்து கொண்டிருந்தோம். அப்பாவை நான்கு பேராக மெல்லக் கூட்டிப்போய் டாக்ஸியில் ஏற்றிக்கொண்டு பாளையங் கோட்டை ஆஸ்பத்திரிக்குப் போனார்கள்.

அன்று மாலையே ஊரிலிருந்து எனது சின்னம்மா, சித்தப்பா, மாமா என்று அனைவரும் வந்துவிட்டார்கள்.

கோவில்பட்டியில் எனது அப்பா போலிஸ் உத்தியோகத்திலிருந்தார். அம்மா கண்டிப்பும் கடுமையும் நிறைந்தவள். எப்போது பார்த்தாலும் சிடுசிடுத்தவாறு திட்டிக்கொண்டும் எங்களை அடித்துக் கொண்டும்தான் இருப்பாள்.

அம்மாவின் குணத்திற்கு நேர்மாறானவர் அப்பா. எங்கள் மீது அன்பைப் பொழிவார். மென்மையானவர். அப்பா வேலைக்குப் போன பின்பு எப்போது திரும்பி வருவார் என்று அவரது காலடி ஓசைக்காக காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டு காத்திருப்போம். வாசற்படியில் பூட்ஸ் சத்தம் கேட்டால் போதும், ஓடிப்போய் அப்பாவின் தோளிலும் மார்பிலும் தொற்றிக்கொள்வோம். அவரும் எங்களை அப்படியே அணைத்தவாறு வீட்டிற்குள் நுழைவார். அவரோடு சேர்ந்து விளையாடுவதில்

சொல்ல முடியாத சந்தோசம். அப்பா ஒரு சின்னப் பையனாகி எங்களோடு சரிசமமாக விளையாடுவார். எங்களுக்கு எது வேண்டுமென்றாலும் அம்மாவுக்குத் தெரியாமல் அப்பாவிடம்தான் கேட்போம். எது கேட்டாலும் அன்றைய பொழுதே எங்கள் கைக்குக் கிடைத்துவிடும்.

நாங்கள் என்றால் ஒரு அக்கா இரண்டு தம்பிகள். எனது அம்மாவின் சித்தப்பாவிற்கு ஏழு ஆண்பிள்ளைகள். அதனால் எங்களுக்கு ஏழு மாமாக்கள் இருந்தார்கள். அதில் கடைசி மாமாவிற்குத்தான் எனது அக்காவைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருந்தார்கள். மாமா சென்னை ஐ.சி.எப்பில் வேலை பார்த்தார். அக்காவிற்கு அப்போது பதினாலு வயது. அதனால் அவளும் எங்களுடன்தான் இருந்தாள். எனது மூத்த தம்பிக்கு நான்கு வயது. இளைய தம்பிக்கு இரண்டு வயது.

இரண்டு நாள். அப்பா இல்லாத வீடு வீடாக இல்லை. நாங்கள் அப்பா எப்போது வருவார், அவரோடு எப்போது விளையாடுவோம் என்று ஏங்கிக்கொண்டே இருந்தோம்.

சின்னம்மா என் அம்மாவின் உடன் பிறந்தவள். எனது அப்பாவைப் போலவே அன்பான குணம். அவளுக்கு எட்டுப் பிள்ளைகள். யாரையும் அணைத்துக்கொண்டு பிரியமாகத்தான் பேசுவாள். அவளிடம் எனது அக்கா, அப்பா எப்போது வருவார் என்று கேட்க, சின்னம்மாவும் இன்னைக்கு பொழுதூர உங்கள் அப்பா வந்து விடுவார் என்று சொன்னதுதான், எங்களுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை. அய்... அய்... அப்பா வரார், அப்பா வரார் என்று குதித்துக்கொண்டு இருந்தோம். அதோடு அப்பா வந்ததும் நான்தான் முதலில் அப்பாவின் மடியில் உட்காருவேன் என்று எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு இருந்தோம்.

கொஞ்ச நேரத்தில் சின்னம்மா சொன்ன மாதிரி அப்பா வந்தார். ஆனால் எப்போதும்போல் போலிஸ் உடுப்பில் வரவில்லை. பேச்சு மூச்சு இல்லாமல் காரில் வந்தார். நாலு பேர் தூக்கிக் கொண்டுவந்து வைத்தார்கள். எங்களுக்கு எதுவும் புரியவில்லை. நானும் தம்பிகளும் அப்பா ஏன் இப்படிப் படுத்திருக்கிறார், எங்களை ஏன் கூப்பிடவில்லை என்று நினைத்தவாறு அவரையே சுற்றிச் சுற்றி வந்தோம். அது மட்டுமில்லாமல் எந்த நேரமும் பூவும்பொட்டுமாக இருக்கும் எனது அம்மா தலைவிரி கோலமாக அப்பாவின் காலடியில் விழுந்து கிடந்தாள். வீடு நிறைய உறவினர்கள் வேறு. பக்கத்து வீட்டு ஆட்களும் நிறைய இருந்தார்கள்.

நானும் எனது தம்பியும் அப்பா பக்கத்திலிருந்த சித்தப்பாவிடம் போய், எதுக்கு அப்பா பேசாமல் படுத்திருக்கிறார் என்று கேட்டதுதான், உடனே அவர் எங்களைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு உங்கப்பா செத்துப் போயிட்டார் என்று கதற, வீடே அழுதது.

கோவில்பட்டியிலிருந்து எங்கள் அம்மாவின் சொந்த ஊரான மீனாட்சிபுரத்துக்கு நாங்கள் வரும்போது எனக்கு ஆறு வயது. இரண்டாம் வகுப்பு படித்தேன். ஊருக்கு போகிறோம் என்று குதித்துக்கொண்டு இருந்தேனே தவிர எனது அப்பாவின் இழப்பு அப்போது எனக்கு பெரியதாகத் தெரியவில்லை.

நாங்கள் சொந்த ஊரான மீனாட்சியாபுரம் வந்துசேர்ந்தோம். கூடவே எங்களது கஷ்டமும் வந்தது. அம்மாவின் உடன் பிறந்த மாமாக்கள் என்று உதவிக்கு யாரும் கிடையாது. ஒருவர் இருந்து இறந்து விட்டார். அதனால் அவருடைய வீட்டில், அம்மாவின் ஒன்றுவிட்ட ஏழு மாமாக்களின் பொறுப்பில்தான் இருந்தோம்.

நாங்கள் கோவில்பட்டியிலிருந்து வந்து ஆறுமாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. ஆனாலும் எங்களுக்கு கிராமம் பழக்கமாகவில்லை. ஒரு நாள் நானும் தம்பியும் ஊரையெல்லாம் சுற்றிச்சுற்றி விளையாடிக் கொண்டிருப்போம். பெரியவர்கள் எங்களைக் கூப்பிட்டு அனுதாபத்தோடு தடவிக் கொடுப்பார்கள்.

ஒருநாள் பொன்னம்மா அத்தை எங்களை அணைத்துக்கொண்டு, மயிலு கணக்கா புள்ளைக;ஆனா கடுகு அம்புட்டுகூட ராசி இல்லாம கோடிகோடியா அள்ளிட்டு வார அப்பன தொலச்சிட்டு நிக்கீகளே என்று கவலையோடு சொல்லிக் கொண்டிருந்தாள். எனக்கும் தம்பிக்கும் அவள் சொன்னது எதுவும் புரியவில்லை. நாங்க விளையாடப்போறோம் என்று சொல்லிவிட்டு அவள் வீட்டுக் கொல்லைப்புறமாக வந்தோம். நிறைய பூசணிக்காய்கள் சிறியதும் பெரியதுமாகக் காய்த்துக் கிடந்தன. அதைப் பிடுங்கி பந்து விளையாடலாம் என்று எங்களுக்குத் தோன்றியது. பத்துக் காய்க்குமேல் பிடுங்கிக்கொண்டு வந்துவிட்டோம்.

எங்கள் வீட்டுக் கொல்லைப்புறத்தில் நாங்கள் பாட்டுக்கு உருட்டியும் எத்தியும் விளையாடிக் கொண்டிருந்தோம். கொஞ்ச நேரத்தில் அந்தப் பொன்னம்மா அத்தை வசவான வசவு வஞ்சிகொண்டு வந்து விட்டாள். கடுகடுப்பான முகத்தோடு எங்களை நோக்கி கையை நீட்டி நீட்டி வய்ய நாங்கள் எதுவுமே புரியாமல் மூலையில் போய் பதுங்கிக் கிடந்தோம். இந்த மாதிரி எங்கள் அம்மா வய்யும் போதும், அடுத்த பிள்ளைகளிடம் சண்டை போட்டு அவர்கள் வய்யும்போதும் சரி, அப்பாவிடம்தான் ஓடுவோம். இப்போது அப்பா இல்லை என்கிற நினைப்போடு நாங்களும் ஓ... வென்று அழுக சின்னம்மா, மாமா எல்லோரும் அந்தப் பொன்னம்மா அத்தையிடம் வய்யாமல் இருக்கும்படி கெஞ்சி முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

சிறுபிள்ளையாகப் படித்துக் கொண்டிருக்கும்போது எங்களுக்கு காடுகரைகளைப் பற்றி எதுவும் தெரியாது. கணேசன்தான் எங்களை வெளியே கூட்டிப் போவான். விளைந்த கம்மங்கருது, சோளக் கருது, தட்டாங்காய், பாசிக்காய் எல்லாம் பிடுங்கிக் கொடுத்து திங்கச் செய்வான். ஒருநாள் இன்னைக்கு என் கூட வாங்க வண்டுருட்டி பழுத்த புடுங்கித் தாரேன் என்றதும் எங்களுக்கு ஆசை என்றால் அப்படி ஒரு ஆசை. அப்படி ஒரு பழம் அப்பா வாங்கித் தந்ததில்லை. நாங்கள் சாப்பிட்டதுமில்லை.

நாங்கள் அவனிடம் இப்பவே அந்த பழத்தைப் புடுங்கிக் கொடு என்று பாடாய்ப்படுத்த அவன் எங்களை குளக்கரைப்பக்கம் கூட்டிப் போனான். அங்கே வண்டுகள் சாணியை உருட்டிக்கொண்டு போவதைக் காண்பித்து இதுதான் வண்டுருட்டிப் பழம் என்று சொல்ல நாங்கள் அவன் பேச்சு 'கா' என்று சொல்லிவிட்டு வந்தோம். அவனுக்கு 'கா' என்றால் என்னவென்று தெரியவில்லை. அவன் அதைப் பற்றிய விவரம் கேட்டு நாங்கள் சொன்னதும் தெரிந்து கொண்டவன், வாங்க உங்கள ஏமாத்தினதுக்குப் பதிலாக கள்ளிப் பழம் பிடுங்கித் தாரேன், அது ரொம்ப நல்லாயிருக்கும்; வாயும் செவப்பா ஆயிரும் என்று சொல்லி கூட்டிப் போய் இரண்டு கள்ளிப் பழத்தைப் பிடுங்கி முள் உரசி எங்களுக்கு கொடுத்தான். நிஜமாகவே பழமும் நன்றாக இருந்தது. வாயும் சிகப்பாகி விட்டது.

உடனே எல்லாப்பழத்தையும் திங்க வேண்டுமென்று எங்களுக்கு ஆசை வந்துவிட்டது. அவனைப் பிடுங்கித் தரச் சொன்னோம். அவன் முள் இருக்கும், அதை உரச வேண்டுமென்றான். சும்மா முள் இருக்கட்டும், வீட்டில் போய் முள்ளை எடுத்துவிட்டுத் தின்போம் என்று நாங்கள் சொன்னதும் அவன் தம்பியின் டவுசர் பையிலும் எனக்கு மடியிலுமாக பிடுங்கிப் போட்டுவிட்டான். அவ்வளவுதான், எனக்கும் தம்பிக்கும் தொடையெல்லாம் முள்குத்தி ரத்தச் சிதறலாகிவிட்டது. அழுதுகொண்டே வீட்டுக்கு வந்தோம். அம்மா, சின்னம்மா எல்லோரும் அதைப் பார்த்துவிட்டு கணேசன் வீட்டிற்குப் போய் சண்டையான சண்டை போட்டார்கள்.

இரண்டு நாள்தான் அவனைப் பார்க்காமல் இருப்போம். பிறகு அவனைத் தேடித்தான் ஓடுவோம். அவன் நிறைந்து கெத்தளித்துக் கிடக்கும் குளத்திற்கு கூட்டிப் போவான். அங்கே நிறையக் கொக்குகள் வரிசையிட்டு நின்றுகொண்டிருக்கும்.

தம்பியும் நானும் கணேசா இந்த கொக்குகளப் பாத்தா எவ்வளவு அழகா இருக்கு. எங்களுக்கு ஒரு கொக்குப் புடிச்சி தா என்று கேட்போம். உடனே அவன், என்கிட்ட ஒரு மந்திரம் இருக்கு. அத சொன்னா போதும், உடனே உங்களுக்கு ஒரு கொக்கு கிடச்சிரும் என்பான். எங்க அந்த

மத்திரத்த சொல்லு சொல்லு என்று நாங்கள் அவசரப்படுத்துவோம். உடனே அவன் ஒரு கல்லைவிட்டு எறிவான். எல்லாக் கொக்குகளும் தூரமாய் பறந்துபோய் அங்கே இரை தேடிக்கொண்டிருக்கும்.

என்ன இது எல்லா கொக்கும் ஒடிருச்சி என்று கேட்டால், அவசரப் படாதீக; என்கூட வாங்க என்று கூட்டிப்போய் காடுமேடெல்லாம் அலைக்கழித்து ஏதாவது கூட்டில் உள்ள முட்டையை எடுத்துக் காட்டு வான்.

நாங்க உயிரோட இருக்க கொக்குல்ல கேட்டோம் என்று சொன் னால் மனுசங்க மந்திரம் போடும்போதே கொக்குக முட்டையாயி இப்படி மரத்தில வந்து படுத்துக்கிடும் என்பான். நாங்கள் அவனை ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டு நிற்போம்.

ஒருநாள் சின்னம்மா, மாட்டுக்கு தண்ணி விடணும்; அது படுத் திருக்கா, எந்திரிச்சி நிக்கான்னு பாத்துட்டு வா என்றாள். நான் கொட்டத் தில் போய் பார்த்தேன். அது படுக்கவுமில்லை; எழுந்து நிற்கவும் இல்லை; அசைபோட்டவாறு உட்கார்ந்திருந்தது. நான் சின்னம்மாவிடம் வந்து உக்காந்திருக்கு என்றேன். அவள் உடனே, என்னடியாத்தா இது உலகத்தில இல்லாத அருச்சவமா இருக்கு; எங்கேயாவது மாடு உக்காந் திருக்குமா? என்று கொட்டத்திற்கு வந்து பார்த்துவிட்டு மாடு இப்படி இருந்தா அதுக்கு படுத்திருக்கின்னுதேன் சொல்லணும் என்றாள். இப்படி கிராமத்தை நான் சிறுகச் சிறுகப் பழகி அறிந்து கொண்டேன்.

ஊருக்கு நாட்டாண்மையாக இருப்பது பெரிய கௌரவம். பெரிய விஷயமாகவும் இருந்தது. நான் நாட்டாக்கார மக, மகன் என்று சொல்வதில் நாட்டாமைக்காரர்கள் பிள்ளைகள் ரொம்பப் பெருமை கொண்டார்கள். ஊருக்குள் எது நடந்தாலும் அவர்கள்தான் முன்னோடி யாக நிற்பார்கள். அதிலும் பழைய சடங்கு சம்பிரதாயங்களை அயத்துப் போகக்கூடாது என்பதில் ரொம்பவும் கெடுபிடியாக இருந்தார்கள். வசந்தா, கணேசன், சரசு இன்னும் நிறையப் பேர் நாட்டாமைக்காரப் பிள்ளைகள். அதனால் அவர்களுக்கெல்லாம் உச்சி மண்டையில் மட்டும் வட்டமாய் குடுமி வைத்து சுற்றிலும் மொட்டை அடித்திருப்பார்கள். அதை நாங்கள் கேலி பேசிச் சிரிப்போம்.

ஒருநாள் பள்ளிக்கூடத்தைப் பார்வையிடுவதற்காக பெரிய அதி காரி வந்து இருந்தார். இந்த நாட்டாமையைச் சேர்ந்த பிள்ளைகள் எல் லாம் வழக்கம்போல் வட்டக்குடுமியோடு முன்வரிசையில் உட்கார்ந் திருந்தார்கள். அதிகாரியும் என்ன இது? காலம் எவ்வளவோ நாகரீகமாப்

போய்க்கிட்டிருக்கு, இவங்க ஏன் வட்டக் குடுமி வைச்சிருக்காங்க? என்று கேட்டார். நான் சட்டென்று எழுந்து, அவங்க எல்லாம் நாட்டாமைக்கார பிள்ளைக; அடையாளம் தெரியணுங்கதுக்காக அப்படி வச்சிருக்காக என்றதும் எல்லோரும் சிரித்துவிட்டார்கள்.

ஒரு மாமா கடுகடுவென்று என்னை முறைத்துப் பார்த்தார். அதிகாரியும் இனிமே இப்படி வைக்காதீங்க. ஊருக்கு நாட்டாமையா இருக்கவங்க ஊருக்கு எடுத்துக்காட்டா நாகரீகமா இருக்கணும் என்று சொன்னார்.

மறுநாளே என் அம்மா என்னையும் தம்பியையும் மந்தைக்கு கூட்டிக்கொண்டு போனாள். போகும்போதே ஒரு நாளைக்கொருநா உங்களுக்கு முடி மொந்து மொந்துன்னு வளந்துக்கிட்டு வருது. நமக்கு கெடக்க வேலயில குளுப்பாட்ட முடியுதா? முழுவாட்ட முடியுதா? முடி மூளயத் திங்கும்; பேனு ஆளத் திங்குமின்னு சும்மயா சொன்னாக! கொஞ்ச நாளைக்கு உங்க தல மொட்டத்தலையா இருக்கட்டும் என்று, நான் எவ்வளவோ அழுதும் கூட, மொட்டை எடுக்கச் சொல்லிவிட்டாள்.

ஏற்கெனவே நான் மாமா பிள்ளைகளை எல்லாம் எடக்குப் பண்ணியிருந்ததால் அவர்கள் எங்கள் மொட்டைத்தலையைப் பார்த்து ரொம்ப எடக்கு பண்ண ஆரம்பித்துவிட்டார்கள். மறுநாள் எங்களுக்குப் பள்ளிக்கூடம் போகவே மனசில்லை. எல்லோரும் கேலி பண்ணுவார்கள் என்று ஊருக்குச் சற்று தள்ளி இருந்த குருதவாலிக் காட்டுக்குள் போய் நானும் தம்பியும் உட்கார்ந்துகொண்டோம். அப்போது வீட்டுக்கு வீடு பிள்ளை கூப்பிட இரண்டு பெரிய பிள்ளைகளை வாத்தியார்கள் அனுப்பி வைப்பார்கள். எங்களைக் கூப்பிட்டு நாங்கள் வராதது தெரிந்ததும் காடெல்லாம் தேடிக் கடைசியில் கண்டுபிடித்தார்கள். அன்று என் அம்மா அடித்தது போதாதென்று வாத்தியாரும் சேர்ந்து அடித்தார்.

ஐ

நான் ஐந்தாம் வகுப்பும் தம்பி ராஜா மூன்றாம் வகுப்பும் படித்துக் கொண்டிருந்தோம். என்னைப்போல நிறையப் பெண்கள் படிப்பதற்காக வருவதற்கு இன்னொரு முக்கியமான காரணம் இருந்தது. வீட்டில் நய்நய்யென்று அழுதுகொண்டிருக்கும் பிள்ளைகளை பெற்றவளின் கண்முன்னால் வைத்திருந்தால் அவர்களை இன்னும் வேலை செய்ய விடாமல் தொந்தரவு செய்யும் என்பதற்காகவே பள்ளிக்கூடத்திற்குத் தூக்கிக்கொண்டு வருவார்கள். வந்ததிலிருந்து அவர்களுக்கு படிக்க நேரம் இருக்காது. அழுகிற பிள்ளைக்கு விளையாட்டு காட்டவும் அவர்கள் வெளிக்கிப் போனதை அள்ளவுமே நேரம் சரியாக இருக்கும். எனது சின்னம்மாவிற்கு ஏழு எட்டுப் பிள்ளைகள். எல்லாம் சின்னச்

சின்னப் பிள்ளைகள். அதனால் சின்னம்மாவின் மூத்த மகளான ராசம்மா விற்கு ஒரு தங்கையை மாற்றி, ஒரு தங்கையைத் தூக்கி வைத்திருக்கும் வேலைதான். அதிலும் வரிசையாக நாலு பெண் பிள்ளைகள் பிறந்து விட்டன. சித்தப்பாவுக்கும், சின்னம்மாவுக்கும் ரொம்பவும் விசாரமாகி விட்டது. நமக்கு இனிமேல் ஆண்பிள்ளையே பிறக்காதோ என்று பயந்து விட்டார்கள். பிறகு சோசியம், குறி என்று பார்த்ததில் ராமேஸ்வரம் போய் என்ன என்னமோ பூஜைகள் எல்லாம் செய்துவிட்டு வந்தால் ஆண் பிள்ளை பிறக்கும் என்று சொல்லிவிட்டார்கள். உடனே சித்தப்பா, சின்னம்மாவோடு ராமேஸ்வரம் போய் பூஜைகள் செய்து வரமும் தவமுமிருக்க ஐந்தாவதாக ஆண் குழந்தை பிறந்துவிட்டது. ஞாபகமாக ராமசாமி என்று அவனுக்குப் பெயர் வைத்து செல்லமாய் வளர்த்தார்கள்.

அக்காக்கள் நிறைய இருந்ததால் அவன் இடுப்பேறி பெருமாளைப் போல எப்போதும் யார் இடுப்பிலாவதுதான் உட்கார்ந்திருப்பான். என் சின்னம்மா அடிக்கடி 'தரையில் விட்டா என் பிள்ளைக்கு தண்டைக்கால் நோவும், புழுதியில் விட்டா என் பிள்ளைக்கு பொன்னுங்கால் நோவு மென்று' சொல்வாள். ஆள் மாற்றி ஆள் தூக்கி வைத்திருப்பார்கள். பிள்ளைகளுக்கெல்லாம் பாலைக் காச்சிக் கொடுப்பதோடு சரி, வேறு எதுவுமே வாங்கி கொடுக்கமாட்டார்கள். பால் குடி மாறியபின் குருத வாலிச்சோறு, வரகஞ்சோறு என்று அனைத்தையும் ஊட்டிவிடுவார்கள். இதில் பெரிய விஷயம் என்னவென்றால் முதன்முதலில் வண்ணாத்தி யிடம் கஞ்சி வாங்கிதான் ஊட்டவேண்டுமாம். ஏனென்றால் அவள் ஊர் முழுக்க கஞ்சி வாங்குவதால் எல்லாக் கஞ்சியும் சோறும் ஒன்றாகக் கலந்து இருக்குமாம். அதனால் அவளை, இந்தா பேச்சி... எம் புள்ளைக்கு வந்து இம்புட்டு சோறு ஊட்டிட்டுப் போ என்று பச்சைப் பிள்ளைகள் வைத்திருப்பவர்கள் எல்லாம் கூப்பிட அவளுக்கு ஏகக்கிராக்கி.

இருமத்தா வாரேன். எனக்கென்ன பன்னெண்டு கையும் சொச்ச முமா இருக்கு! ஆத்தாமாருக இப்படிப் பறக்கீக என்று செல்லச் சடவாக சடைத்துக்கொண்டு ஒவ்வொரு பிள்ளைக்கும் சோறு ஊட்டுவாள்.

ஆன்ால் தம்பி ராமசாமிக்கு மட்டும் பணக்கார வீட்டுப் பிள்ளை களுக்கு வாங்கிக்கொடுப்பது போல் குளுக்கோஸ், பிஸ்கட், ரொட்டி எல்லாம் வாங்கிக் கொடுப்பார்கள். சித்தப்பா என்றைக்கு கடைக்குப் போய் இதெல்லாம் தம்பிக்கு வாங்கிக்கொண்டு வருவார் என்று நான் நோட்டம் பார்த்துக்கொண்டிருப்பேன். அவர் வாங்கி வந்த உடனே தம்பியைக் கொஞ்சுவதுபோல் அவர்கள் வீட்டுக்குப் போய் ஒருவருக்கும் தெரியாமல் அதைத் தூக்கிக்கொண்டு போய்த் தின்றுவிட்டு வந்து விடுவேன். நாலைந்து தடவை இப்படி நடந்திருக்கிறது.

பாவம், சித்தப்பாவும் சின்னம்மாவும் அந்தப் பண்டங்களைத்

தேடு தேடு என்று தேடுவார்கள். அவர்களின் பிள்ளைகளையெல்லாம் கூப்பிட்டுக் கேட்பார்கள். அது போதாதென்று சித்தப்பா பள்ளிக்கூடத் திற்கும் வந்து வாத்தியார்களிடமெல்லாம் சொல்லி பிள்ளைகளிடம் விசாரிப்பார். என்னிடமும் கேட்பார். நான் தலையை மூட்டோடு அலைப்பதுமில்லாமல் அவர்கள் வீட்டுக்குப் போய் அவர்களோடு சேர்ந்து தேடு தேடு என்று தேடுவேன்.

என்னடா இது! இப்பத்தேன் வாங்கியாந்து வச்சிட்டு கால கையக் கழுவிட்டு இம்புட்டு கஞ்சி குடிப்போமின்னு வட்டுல்ல உக்காரமின்ன பண்டத்த காணமின்னா யாரச் சொல்ல... இதுக்கின்னு கள்ளப் பயலா பொட்டணம் கட்டிட்டு வந்துட்டான் என்று சித்தப்பா அங்கலாய்ப்பார்.

சரி விடும். நம்ம மேலதேன் குத்தம். வாங்கிட்டு வந்ததும் பொட்டி சட்டிக்குள்ள மறவா வச்சிருக்கணும். கை வாகா மாடாக்குழியில வைக்கப்போயி எலி கிலி தூக்கிட்டுப் போச்சோ என்னம்மோ. நீரு வந்து கஞ்சிய குடியும் என்று சின்னம்மா சொல்லியபிறகும் நான் மூலைமுடுக் கெல்லாம் தேடிக் கொண்டிருப்பேன்.

ooo

இரண்டு நாளாகத் தொடர்ந்து மழை பெய்துகொண்டே இருந்தது. மழையென்றால் அப்படி ஒரு மழை. வானத்துக்கும் பூமிக்கும் பாவு போட்டது போல் விடாமல் பெய்தது. மாடு மேய்க்கவோ, கடை கண்ணிக்குப் போகவோ முடியவில்லை. பகலில் சூரியனையும் இரவில் நிலாவையும் தொலைத்துவிட்டு வானம்இருண்டு கிடந்தது.

தெரு வெறிச்சிட்டுக் கிடந்தது. ஒன்றிரண்டு வீடுகளில்தான் குடை இருக்கும். மற்றவர்கள் எங்கேயாவது காடுகளுக்கு, கடைத்தெருவுக்குப் போக வேண்டுமென்றால் கொங்காணி போட்டுக் கொள்வார்கள். பக்கத்து வீட்டுக்குப் போக வேண்டுமென்றால் சொளகை தலையில் குப் புறக் கவிழ்த்துக்கொண்டு போவார்கள்.

எங்களுக்கு மழை பெய்தது சந்தோசம்தான். வீட்டிலிருந்த தாள்களையெல்லாம் கிழித்து கத்திக் கப்பல், சாதா கப்பல் செய்து ஓடும் தண்ணீரில் விட்டுக்கொண்டு ஈரமண்ணினால் வீடு கட்டி விளையாடு வதோடு அடிக்கடி மழையிலும் நனைந்துகொண்டு இருந்தோம்.

கொளம் வத்துனாலும் குத்துக்கல்லுக்கு வாட்டமென்னன்னு நானு கஞ்சிக்கு என்ன செய்வோம், வெஞ்ஞனத்துக்கு என்ன செய்வோமின்னு பரிதவிச்சிக் கெடக்கேன், உங்களுக்கு வெளயாட்டு நெரியுதா என்ற அம்மா என்னிடம் ஒரு சொளகைக் கொடுத்து, இந்தா இத தலயில கவுத்திட்டுப் போயி பாட்டி மருதாயிகிட்ட கருவாடு இருந்தா எங்கம்மா

கேட்டான்னு வாங்கிட்டு வா; அதனாச்சிலும் இம்புட்டுச் சாறு வச்சி வெதுவெதுன்னு சாப்புடுவோம். இந்த அடமழையில வெறும் கஞ்சிய என்னத்த குடிக்க? என்றாள்.

மருதாயிப் பாட்டி வீடு எங்கள் வீட்டிலிருந்து தெற்குப் பக்கமாக சற்று தூரத்திலிருந்தது. மருதாயிப் பாட்டியின் வீட்டை ஒட்டிதான் என் அம்மாவிற்கு பெரியாத்தாளான ராக்கம்மா பாட்டி வீடு இருந்தது. அந்தப் பாட்டிதான் எங்களுக்கு அடிக்கடி உதவி செய்வாள். இப்போது அந்தப் பாட்டிகூட என் அம்மா பேசமாட்டாள்.

நான் காலால் தண்ணியை எத்திக்கொண்டே போனேன். சுவர் ஓரங்களில் மழைக்கு பொதும்பிக்கிடந்த நாய்களையும், கோழிகளையும் விரட்டியவாறு மருதாயி வீட்டுக்குப் போய், கருவாடு இருந்தா கொடுப்பயாம் பாட்டி என்று கேட்டேன். அந்தப் பாட்டி ஒரு ஓலைக் கொட்டானைக் கொண்டுவந்து இந்தா பாரு என்று என்னிடம் காட்டினாள். கருவாட்டையெல்லாம் கொழம்பு வச்சிட்டேன்; அதுல பிச்சிப் போட்ட வெறும் மண்டதேன் இருக்கு; இத வேண்ணா கொண்டுபோயி உங்காத்தா கிட்ட கொடு என்று சொன்னாள்.

நானும் என் அம்மாவிடம் போயி கேட்டுட்டு வாரேன் என்று வெளியே வந்தேன். பக்கத்து வீட்டில் இருந்த ராக்கம்மா பாட்டி என்னைக் கூப்பிட்டாள். என்ன பாட்டி என்று கேட்டவாறு அவள் பக்கத்தில் போனதுதான் தாமதம், அப்படியே என்னைக் கட்டிக்கொண்டு ஓ... என்று அழுதாள். பிறகு அணைவாக என்னைக் கூட்டிக்கொண்டு எங்கள் வீட்டுக்கு வந்து வாசற்படி ஏறும்போதே,

பட்டாளஉத்தியோகம்... என்அய்யா
உங்களுக்கு படை பொருந்தும் சேவுகமோ...
போலீசு உடுப்பு மாட்டி என்அய்யா...
நீங்க போனீகளோ கச்சேரிக்கு...

என்று அழுதுகொண்டே என் அம்மாவைக் கட்டிப்பிடிக்க அவளும் ஓ... என்று அழுதாள். உடனே என் குட்டித் தம்பி தருமனும் சேர்ந்து அழுதான். நானும் தம்பி ராஜாவும் விதிர்விதிர்த்து நின்றோம். ராஜா என்ன நினைத்தானோ இனிமே நாங்க வெஞ்ஞனமே கேக்கமாண்டோம் என்று அழ அதற்குமேல் எனக்குப் பொறுக்க முடியவில்லை. நானும் அவர்களோடு எதற்கு என்று தெரியாமலே சேர்ந்து அழுதேன்.

எதிர் வீட்டிலிருந்த பெரியம்மா, என்னத்தா எதுக்கு இப்படி கூவே கொள்ளையேன்னு அழுவுதீக என்று கேட்டுக்கொண்டே வந்து என் அம்மாவையும் பாட்டியையும் அதட்டினார். இந்தா இப்ப எதுக்கு பாத்தவக சிரிக்கும்படியா அழுவுதீக? நீங்க அழுவுதீகன்னு புள்ளைகளும் சேந்து அழுவுதுக என்று சொன்னாள்.

என் சீமான், இந்த வீட்டு அதிகாரி இல்லாம செல்வாக்குல வளந்த புள்ளைக இன்னைக்கு என்னமா சீரழிஞ்சு நிக்குதுக என்று எங்கள் கண்ணீரைத் துடைத்த பாட்டி என் அம்மாவிடம், இந்தா ராக்கு இனிமே இந்தப் புள்ளைகள எவட்டயும் கருவாடு வாங்கிட்டு வா, கருவாட்டு மண்டய வாங்கிட்டு வான்னு வீடு வீடா அனுப்பி வச்சயோ உனக்கு வெளக்கமாறு பிஞ்சிபோவும். உன் பிள்ளைகள நானு கூட்டிட்டுப் போறேன் என்று சொல்லிவிட்டு நீங்க வாங்க கண்ணுகளா என்று எங்களைக் கூட்டிக்கொண்டு போனாள்.

ꕥ

கம்மாயை ஒட்டி சிறு ஓடை தெற்கிருந்து வடக்குத் திக்கமாக நீண்டு செல்லும். அதன் இரு பக்கங்களிலும் கத்தாழைச் செடிகளும் கார முள்ளும் அடர்ந்து கிடக்கும். நடுநடுவே குத்துக்குத்தாக மூங்கில் புதர்கள். அடிக்கடி வேலி ஓரமாக வரும் எங்கள் ஊர் பெண்கள், அடியாத்தாடி! எனக்கும் இம்புட்டு வயசாச்சி இன்னைக்குத்தேன் அந்த கங்காச்சிய என் ரெண்டு கண்ணாலயும் பாத்தேன் என்று முகமெல்லாம் அதிசயிக்க கண்களில் ஆச்சரியம் தெறிக்கச் சொல்லும்போது மற்றவர்கள் ஆவலுடன் அப்படி என்னத்தா கங்காச்சியப் பாத்தே என்று கேட்டவாறு சொன்ன வளைச் சூழ்ந்து கொள்வார்கள்.

சுருளி எம்மாந்தண்டி ஆளு...?

ஆமாமா! அவனுக்கென்ன?

அவனுக்கு ஒண்ணுமில்ல அவன் தொடத்தண்டியில ஒரு நல்ல பாம்பும், சாரப்பாம்பும் அந்த வேலிக்குள்ள என்னம்மா பின்னிக் கிடக்குன்னு பாத்தீக என்று சொல்ல இன்னொரு அத்தையோ அம்மியோ குறுக்கிடுவார்.

ஏவளே... நீயும் அந்த அருசவத்த கண்ணால பாத்திட்டியா? போன வெள்ளிக்கிழம... என்று உடனே இவளும் ஆரம்பித்துவிடுவாள். அன்னைக்கு மேலோடி புல்லரிச்சி வந்து படுத்தவதேன்; பெறவு அக்கா அய்யனாகிட்ட இம்புட்டு திடுக்குத்தண்ணி தொளிச்சப்பெறவு இல்ல ஒரு நெதானத்துக்கு வந்தேன் என்று சொல்லுமுன் இன்னொருத்தி ஆரம்பித்துவிடுவாள். ஆக ஒரு நாழி வரையிலும் இந்தப் பாம்புப் பேச்சு நடக்கும். சிரிப்பும் கூத்துமாய் இருக்கும். பேச்சில் பாதி எனக்குப் புரியாது.

நான் ஒரு நாள்கூட அந்த வேலியில் ஒரு பாம்பையும் பார்க்க வில்லை. அதை ஒட்டி எங்களுக்கும் பிஞ்சை இருந்தது. நானும் தம்பியும் ஒரு தடவை தட்டாங்காய் பிடுங்குவதற்காகப் போனோம். அடர்ந்த

வேலிக்குள் பத்து முட்டை வரை இருக்க அதில் நாலு முட்டையை எடுத்துக்கொண்டு வந்தோம். உடனே என் அம்மா கம்பை எடுத்துக் கொண்டு வந்து விரட்டினாள். எங்கேடி முட்டய எடுத்தீக? அந்த இடத்துக்கே திரும்பிப்போங்க என்று முடுக்கிக்கொண்டே வர நாங்களும் முட்டை கிடந்த இடத்திற்கு வந்தோம். உடனே சற்று எட்டத்தில் முட்டையை வைத்துவிட்டு வருமாறு சொல்ல நாங்கள் அப்படியே வைத்துவிட்டு வந்தோம். நாங்கள் எடுத்தது பாம்பு முட்டையாம். முட்டையின் வாசத்தை முகர்ந்து சாரைப்பாம்பு முட்டை எடுத்தவர்களின் வீட்டுக்கே வந்துவிடுமாம்.

ஜ

பொங்கலுக்கு பத்துப்பதினைந்து நாள் இருக்கும்போது சின்னப் பிள்ளைகளான எங்களுக்கு வயித்தை கலக்கும். ஏனென்றால் நிலத்தில் முளைத்த எல்லாச் செடிகொடிகளின் இலை, எல்லா மரங்களின் பட்டைகள் மட்டுமின்றி அதன் வேர்களையும் பத்துப் பேர் சேர்ந்து பிடுங்கிக் கொண்டு வருவார்கள். பிறகு நாலு குடம் தண்ணி பிடிக்கிற பெரிய மொடாவில் அந்தக் கொளை, வேர், பட்டை எல்லாவற்றையும் போட்டு பானை நிறையத் தண்ணியை ஊற்றி சனிக்கிழமை இரவு நாலு ஐந்து கட்டு மிளகாய், பருத்திமாறால் எரித்து அந்தத் தண்ணியை அரைப்பானையாக வத்த வைப்பார்கள். அந்த சாறைப் பார்த்தால் கரும்பச்சையில் இருக்கும். அதுமட்டுமல்ல; அதைப் பார்க்கும்போதே வயிற்றைக் குமட்டும். அப்படி ஒரு வீச்சம் அடிக்கும்.

இந்தச் சாறை ஒரு கும்பா நிறைய இறுத்து அதில் கால் மாகாணி, அரைக்கா மாகாணி என்று அவரவர் வயசுக்குத் தகுந்த மாதிரி விளக்கெண்ணெயை அதில் ஊற்றிக் குடிக்கச் சொல்வார்கள். வெளக்க மாத்துக்குப் பேரு பட்டுக்குஞ்சமாம். அதைப்போல் இப்படி குமட்டுகிற சாறுக்குப் பேரு பெத்த பேரு! நிலாச்சாறு! இந்தச் சாறை வெறும் வயிற்றில்தான் குடிக்கவேண்டும். ஒரு வாய் சோறோ வேறு எதுவும் பண்டமோ திங்கக் கூடாது. அம்புட்டுக்கு ஏன், பச்சைத்தண்ணி கூட குடிக்கக்கூடாது. நாளை எண்ணெய் குடிக்க வேண்டுமென்பதால் நானும் என் தம்பியும் சோத்துப் பானை நினைவாகப் படுத்திருப்போம். ஆனால் என் அம்மா என் மீது கண்ணாகப் படுத்திருப்பாள். கொஞ்சமாய் அசைந்தாலும் போதும். என்னடி எந்திரிக்கப் போறயா? என்று கூடவே எழுந்து விடுவாள். கண்கொத்திப் பாம்பாக எங்களையே பார்த்துக் கொண்டிருப்பாள். சாறு குடித்த பிறகு எதையாவது தின்றுவிட்டால் பச்சை இலைச்சாறு கையக்கால மொடக்கி விடுமாம்.

பிறகு மறுநாள் விடிந்தும் விடியாமல் எழுந்ததும் முதல் வேலை

செங்கலைத் தட்டி பல்லைத் தேய்க்க வேண்டும். ஊத்தை நிறைய இருப்பவர்கள் முயல் புழுக்கையைச் சுட்டு பல் தேய்ப்பார்கள். பிறகு எண்ணெய் குடிக்கும் வேலை ஆரம்பமாகிவிடும். வீட்டுக்கு வீடு ஆமணக்கை ஆட்டி கலயம் கலயமாக எண்ணெய் வைத்திருப்பார்கள். அப்படி ஆட்டாதவர்களுக்கு ஆட்டிவைத்திருப்பவர்கள் கொடுப்பார் கள். சின்னப்பிள்ளைகளாக பத்துப் பதினைந்து பிள்ளைகள் ஆணும் பொண்ணுமாக நிற்போம். முக்கால்வாசிக்கு மேல் சட்டையைக் கழட்டி விடவேண்டும். எண்ணெயாகப் போய்விடுமாம். வயிற்றைச் சுத்தப் படுத்தத்தான் இந்த நிலாச்சாறு.

பெரிய வெங்கலக் கும்பாவில் நிறைய எண்ணெய்யும் சாறுமாக ஊற்றியிருப்பார்கள். பக்கத்தில் ஓலைப்பெட்டியில் அரிசி! எண்ணை யைக் குடித்ததும் வாந்தி வராமல் இருப்பதற்காக கொஞ்சம் அரிசியை அள்ளிக் கொடுப்பார்கள். எங்கள் கையில் பனங்கருப்பட்டி. பெரியவர் கள் கையில் விளைந்த சோளத்தட்டை. நாங்கள் ஈசலாக மெலிந்துபோய் பயத்தோடு எண்ணெயையும் பெரியவர்கள் முகத்தையும் பார்த்துக் கொண்டு நிற்போம். அப்படி நிற்கும்போதுகூட என் தம்பி ராஜா, அவனைப்போல நான்கு பிள்ளைகள் குபீரென்று ஓட்டம் பிடிக்க அவர் களை விரட்டிக்கொண்டே இளவட்டங்கள் போய் தூக்கிவர ஒரே ஆர்ப் பாட்டம்தான்.

கும்பாவைத் தூக்கி குடி குடி என்று அவர்கள் அதட்ட அடிவயிற்றி லிருந்து குமட்டல்தான் வரும். நான் இரண்டு வட்டு கருப்பட்டியைத்தான் தின்பேனேதவிர எண்ணையைக் குடிக்கமாட்டேன். சோளத்தட்டைக்குப் பயந்து எப்படியோ ஒருவழியாய் எண்ணெயைக் குடித்து முடித்துவிட்டு ஒருவாய் அரிசியை வாயில் போட்டுக்கொண்ட பிறகுதான் விடுவார்கள். நாங்கள் ஆலமரத்தில் இருந்து நிலாச்சாறு குடித்துவிட்டு வென்னீர் குடிப் பதற்காக வீட்டிக்கு வந்தபோது என் அம்மாவை காணோம். உடனே பானையிலிருந்த சோற்றை வைத்து கத்தரிக்காய் குழம்பையும் ஊற்றி நான் திருட்டுத்தனமாக சாப்பிட்டபோது ராஜா வந்துவிட்டான். உடனே நான், நீயும் சோறு சாப்பிடு, அம்மாவிடம் சொல்லாதே என்றேன். அவனும் சரி என்று சாப்பிட தருமன் வந்துவிட்டான். நாங்கள் சாப்பிடு வதைப் பார்த்ததும் ஓடிப்போய் அம்மாவை கூட்டி வந்துவிட்டான். வரும்போதே நீளமான கம்போடு வந்தவள் எங்களை நாலு சாத்துச் சாத் தினாள். எண்ணெய் குடித்த கிறக்கமும், அடிவாங்கிய கிறக்குமுமாக நாங் கள் அன்று பூராவும் படுத்துக் கிடந்தோம்.

எங்கள் வீட்டில் ஆடுகள்தான் வளர்க்கவில்லை. மாடு, கோழி,

வாத்து என்று நிறைய வளர்த்தோம். பக்கத்திலிருந்த மாமா வீட்டிலும் வாத்து வளர்த்தார்கள். இந்த வாத்துகள் காலையில் கூட்டைத் திறந்த உடனே சுடுகாட்டுப் பக்கம் இருக்கும் கானாங்குளத்தை தேடி ஓடிவிடும். பிறகு மத்தியானம் இரை தின்பதற்காக ஒருமுறை வீட்டிற்கு வரும். இரையைத் தின்றுவிட்டு மீண்டும் குளத்திற்குப் போய்விட்டு இருட்டிய பிறகுதான் வீட்டுக்கு வரும்.

அம்மா ஒருநாள் தம்பியிடம் எங்கள் வாத்தைப் பிடித்துக்கொண்டு வரச்சொன்னாள். அவன் பிடித்துக்கொண்டு வந்ததும் தெருவில் வந்த வியாபாரிக்கு விற்றுவிட்டாள். அந்த வாத்தை நானும் தம்பியும் ஆசை ஆசையாக வளர்த்தோம். அதனால் எங்களுக்கு அழுகையாக வந்தது. எப்படியாவது இன்னொரு வாத்து வாங்கி வளர்க்க வேண்டுமென்று பேசிக்கொண்டோம்.

ஆனால் மத்தியானம் ஆன உடனே வழக்கம்போல் வாத்து இரைக்காக எங்கள் வீட்டைத் தேடி வந்துவிட்டது. நாங்கள் ஆச்சரியத் தோடு வாத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தபோது என் அம்மா வந்து விட்டாள். இந்த வாத்தைப் பார்த்ததும்தான் வாத்து மாறாட்டம் நடந்து விட்டது தெரிந்தது.

என்னடா நம்ம வாத்தப் புடிச்சிட்டு வாடான்னா... நீ மாமா வாத்தப் புடிச்சிட்டு வந்துட்ட பொலுக்கோ. இது தெரிஞ்சா அவம் பொண்டாட்டி வசவு உறிப்பாளே. நானு போயி அவகிட்ட வாத்தக் காணமின்னு வய்யாத. எம்மவன் தெரியாம உங்க வாத்தப் புடிச்சிட்டு வந்துட்டான். நானும் எங்க வாத்துதேன்னு வித்துப்போட்டேன். நீ வய்யாத, செய்யாத. பதுலுக்கு எங்க வாத்தப் புடிச்சிக்கோன்னு சொல்லிட்டு வாரேன் என்று சொல்லிவிட்டுப் போனாள்.

பொழுது அடைந்துவிட்டது. எங்கள் வாத்து வழக்கம்போல் கூட்டிற்குள் அடைய வந்தது. உடனே நானும் தம்பியும் ஒரு வேலை செய்தோம். அம்மா வந்தால் நம்ம வாத்தைப் புடிச்சி அத்தைக்கு கொடுத் துருவா; அதனால நாம அவளுக்குத் தெரியாம ஒளிச்சி வச்சிருவோம் என்று கூடிப் பேசி வாத்தைப் பிடித்துக் கொண்டுபோய் சுற்றி ஊனியிருந்த விறகுக் கட்டின் நடுவில் வைத்து பொட்டியைப் போட்டு கவுத்தி வைத்துவிட்டு வந்துவிட்டோம்.

வீட்டிற்கு வந்ததும் என் அம்மா, எங்கடி நம்ம வாத்தக் காணோம்? உன் அத்தயப் புடிச்சிட்டுப் போவச் சொன்னேன். அவ இப்ப வந்துரு வாளே! வாத்தக் காணமின்னா வைவாளே என்று கேட்டாள். நானும் தம்பியும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு நாங்கள் வாத்தைப் பாக்கவே இல்லை என்று சத்தியம் செய்தோம்.

எங்கள் வாத்தைக் காணோம் என்றதும் எதிர் வீட்டு அத்தை வய்ய

ஆரம்பித்துவிட்டாள். வசவென்றால் வசவு அப்படி வய்ய என் அம்மா வீடு, மூலை, முடுக்கு எல்லாம் தேடோ தேடு என்று தேடிக்கொண்டு, இதுவும் என் காலக்கொடுமதான! இம்புட்டு நாளும் கூட்டுக்குள்ள வந்து பொன்னா அடையித வாத்து இன்னைக்கிங்கவா காணாமப் போவணும். இவகிட்ட வசவு வாங்கணுமின்னு என் தலயில எழுதியிருக்கே என்று சொல்லிக்கொண்டே தேடினாள்.

அப்போது சின்னம்மா வீட்டிற்கு விளையாடப் போயிருந்த தர்மன் வந்து, எம்மா நம்ம வாத்த அக்காளும் அண்ணனுந்தேன் புடிச்சிட்டுப் போனாக என்று உண்மையைச் சொல்லிவிட்டான். நாங்கள் வாத்தைப் பிடித்து ஒளித்துவைக்கப் போகும்போது அவன் வந்துவிட்டான். அவன் என்ன விஷயமென்றாலும் முதலில் அம்மாவிடம் சொல்லிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான். அதனால் இதையும் சொல்லிவிடுவானே என்று நாங்கள் அவனிடம் கெஞ்சி அம்மாவிடம் சொல்லிவிடாதே என்று கேட்டுக்கொண்டோம். அம்மாவிடம் சொல்லாமல் இருக்க ஆளுக்கு ஒரு கடலை மிட்டாய் வேறு தருவதாகச் சொல்லியிருந்தோம். ஆனால் அவன் அரிச்சந்திரன் வீட்டு பிள்ளையைப்போல எங்கள் குட்டை உடைத்துவிட்டான்.

இது போதாதா என் அம்மாவுக்கு? முதலில் வாத்தைப் பிடித்துக் கொண்டு வரும்படி அடித்தாள். அழுதுகொண்டே போய் வாத்தைப் பிடித்து வந்தோம்.

பிறகு அத்தையிடம் வாத்தைக் கொடுத்துவிட்டு நாங்கள்தான் அதை ஒளித்துவைத்தோம் என்ற உண்மையைச் சொல்லிவிட்டு வரச் சொன்னாள். அப்படியே சொல்லிக் கொடுத்துவிட்டு வந்தபிறகும் எங்களை அடித்து விரட்டினாள்.

ரெண்டு பேரும் வீட்டுக்குள்ள மொளயாதீக. மொளஞ்சீக கால முறிச்சிப் போடுவேன். அப்படியே எங்கிட்டும் என் கண்ணுக்குத் தெரியாம ஒளிஞ்சிபோங்க. உங்களால நான் படுத பாடு சொல்ல முடியாது. இருக்க கழுதகைக கிட்டயெல்லாம் வசவு வாங்கி சீரழிஞ்சி சீப்படுதேன் என்று தெருவுவரை வந்து முடுக்கிவிட்டாள். நாங்கள் அழுது கொண்டே மந்தைக்கு வந்தோம். இருட்டு கீ என்று கிடந்தது. எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மந்தையிலிருந்த கிருஷ்ணன் கோயில் வாசலுக்கு வந்தோம். வானத்தில் நிறைய நட்சத்திரங்கள் முளைத்துக் கிடந்தன. எங்களுக்கு வாத்து போன கவலையும், இனிமே வீட்டுக்குள் வராத என்று அம்மா சொன்னதால் ஏற்பட்ட பயமுமாக ரொம்ப நேரம் அழுதோம்.

தம்பி சொன்னான். எக்கா, நம்ம சின்னம்மா வீட்டுக்குப் போயிருவமா?

அப்போது என் அம்மாவிற்கும் சின்னம்மாவிற்கும் சண்டை. அதனால் நாங்கள் அங்கே போகக்கூடாது என்று கட்டளை இட்டிருந்தாள். அதனால் அங்கே போகவும் பயமாய் இருந்தது.

என்ன செய்வதென்று தெரியவில்லை. அழுதுகொண்டே அங்கேயே படுத்து உறங்கிவிட்டோம்.

யக்கா, யக்கா... என்று யாரோ எழுப்புவதைக் கேட்டு நான் முழித்துப் பார்த்தேன். தர்மன் எங்களை எழுப்பிக்கொண்டிருக்க பக்கத்தில் என் அம்மா நின்றிருந்தாள். நாங்கள் எழுந்ததும் வீட்டுக்கு வாங்க என்று கூட்டிப்போக நாங்கள் அவள் பின்னாலேயே நடந்தோம். ராஜா சொன்னான். எக்கா, இனிம அம்மா வீட்டுக்குள்ள மொளயா தீகன்னு சொன்னா நீ ஒண்ணும் பயப்படாத; நம்ம நடந்தே மெட்ராசுக்குப் போயிருவோம்.

அவன் சொன்னதைக் கேட்டு எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. ஏண்டா, மெட்ராசுக்கு நடந்தே போயிரலாமா? உனக்கு வழி தெரியுமா? என்று கேட்டேன்.

வழி என்ன பெரிய வழி. சஞ்சீவி மலகிட்ட தண்டவாளம் இருக்கில்ல. அந்த தண்டவாளத்து மேலேயே நடந்து போனமின்னா மெட்ராசு வந்துரும் என்று அவன் சொல்ல எங்களுக்குப் பழைய சந்தோசம் வந்துவிட்டது.

ஒருநாள் பாம்பு பிடிக்கிறவன் எங்கள் ஊருக்கு வந்தான். பெரியவர்கள் எல்லோரும் அவனைச் சுற்றிக்கொண்டு நிற்க நாங்கள் அவர்களுக்கு முன்னால் போய் நின்றோம். அவன் தோளில் ஒரு சாக்கைப் போட்டிருந்தான். அதில் விதவிதமாக நான்கைந்து பாம்புகள் கிடக்க அவன் அதை எடுத்து எல்லோருக்கும் காண்பித்தான். அதோடு இதெல்லாம் விசமுள்ள பாம்பு; அத அப்படிப் புடிச்சேன், இப்படிப் புடிச்சேன் என்று வீரத்தோடு சொல்லிக்கொண்டிருக்க அந்த பாம்பை பார்த்து எல்லோரும் பயந்து ஓடினார்கள்.

எங்கள் சித்தப்பா அவனிடம், நீ பாம்பு புடிக்கதுல ரொம்ப கெட்டிக்காரந்தேன், நாங்க ஒத்துக்கிடுதோம்; முதல்ல பாம்ப சாக்குக்குள்ள போடு; எல்லாரும் பயப்படுதாகல்ல என்றார். அவனும் பாம்பை சாக்குக்குள் போட்டுக்கொண்டான். பிறகு யார் யார் வீட்டில், படப்பில் பாம்பு இருக்கிறது என்றும் அவன் அந்தப் பாம்பை பிடித்துவிட்டால் எவ்வளவு தானியம் கொடுப்பது என்றும் பேசிக்கொண்டார்கள்.

எனக்கும் தம்பிக்கும் அவன் எப்படிப் பாம்பு பிடிக்கிறான்

என்பதைப் பார்க்க ஆசையாய் இருந்தது. என் அம்மாவும் அவனிடம் பாம்பு பிடிக்கக் கூலி எவ்வளவு என்று கேட்டுக் கொண்டிருந்தாள். உடனே நான் இளைய தம்பி தர்மனிடம், நானும் ராஜாவும் வீட்டுக்குள்ள இருக்கோம். அம்மா பாம்பு பிடிக்கிறவன கூட்டிட்டு வந்தா நீ முன்னக் கூடி ஓடியாந்து எங்க கிட்ட சொல்லு. நாங்க குலுக்க கடவுக்குள்ள ஒளிஞ்சிக்கிட்டு அவன் எப்படி பாம்ப பிடிக்கிறான்னு பாக்கோம் என்றேன்.

தருமனும் சரி என்றான். உடனே நானும் ராஜாவும் வீட்டில் போய் நல்ல பிள்ளைகளாக இருந்தோம். வீட்டுக்கு முன்னால் காலடிச் சத்தம் கேக்கிறபோதெல்லாம் அம்மாதான் பாம்பு பிடிக்கிறவனோடு வந்து விட்டாளோ என்று குலுக்கை கடவுக்குள் ஒளிவதும் பிறகு ஏமாற்றத்தோடு வெளியே வருவதுமாய் இருந்தோம். ரொம்ப நேரம் கழித்து தருமன் ஓடிவந்தான்.

என்னடா என்று கேட்டேன். நம்ம வீட்டுல பாம்பு பிடிக்கலயாம்; சின்னம்மா வீட்டுலதேன் பாம்பு பிடிக்கப்போறாகளாம்; பாம்பாட்டிய கூட்டிக்கிட்டு எல்லாரும் சின்னம்மா வீட்டுக்குப் போறாக என்றான். இதைக் கேட்டதும் நானும் தம்பியும் குறுக்குவழியாக சின்னம்மா வீட்டிற்கு ஓடினோம். சின்னம்மா வீட்டில் தானியம் போடுவதற்காக இரண்டு மரிசல்கள் இருந்தன. அது நாலு ஐந்து மூடை தானியம் பிடிக்கும். கொல்லைப்புறமாக சின்னம்மா வீட்டிற்குள் போய் மரிசலில் ஏறி உட்கார்ந்துகொண்டோம். வீடு லேசான இருட்டாய் இருந்தது. எப்போதும் அப்படித்தான், வீடு என்பது தானியம் போடுவதற்கும் வப்பு சொப்புகளை பத்திரப்படுத்துவதற்கும் தானே தவிர மனிதர்களுக்காக இல்லை.

பாம்பாட்டியும் எனது சின்னம்மாவும் வர அவர்களைச் சுற்றி ஒரு கூட்டமே வந்தது. எங்களை யாருமே பார்க்கவில்லை. பாம்பாட்டி நடு வீட்டிற்குள் வந்து நின்றுகொண்டு சுற்றிலும் பார்த்தவாறு வாசம் பிடித்தான். பிறகு சின்னம்மாவிடம் நாளுபட்ட கட்டுவிருசன் வீட்டுக் குள்ள இருக்கு. நானு ஊத்தம் கொடுத்துப் புடிக்கும்போது அது சீறிக் கிட்டு வரும். உங்களால தாக்குப்புடிக்க முடியாது. அதனால எல்லாரும் வெளிய இருங்க என்று சொல்லிவிட்டான்.

என் சின்னம்மா பயந்த குரலில் பதறினாள். ஆத்தாடியோ! இம் புட்டு நாளும் கட்டுவிருசனுக்குள்ளதேன் குடி இருந்திருக்கோம் பொலுக்கோ. பகையாளிக்குள்ளனாச்சிலும் குடி இருந்துரலாம், பாம்புக் குள்ள குடியிருக்கலாமா? எய்யா, நீ மவராசனா இருப்பே. முத அந்த பாம்ப புடி. பெறவு வீட்டுக்குள்ள இருக்க பூச்சி பொட்டு அம்புட்டயும் ஒண்ணு இல்லாம அள்ளி உன் சாக்குல போட்டுட்டு போ. நானு

கண்ணும் கயிந்தலயும் கங்கூடா பாலகனுமா வீடு நிறைய புள்ளைகள வச்சிருக்கேன். ஏதும் ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிருச்சின்னா... அம்புட்டுத்தேன். நானு பூமியில இருந்தே புண்ணியமில்ல...

சரி சரி, நீரு விசாரப்படாம வெளிய போரும். நானு அம்புட்டு உசுப்பிராணியவும் புடிச்சி கொண்டு வாரேன் என்று அவன் சொல்லவும் சின்னம்மா வெளியேறினாள். பாம்பாட்டி கதவை அடைத்தான். இப் போது அவனுக்குத் தெரியாமல் நாங்களும் எங்கள் பார்வையில் அவனு மாக இருந்தோம். மீண்டும் ஒருமுறை சுற்றிலும் பார்த்துவிட்டு பீடியைப் பற்றவைத்தான். தீக்குச்சி வெளிச்சம் வீட்டிற்குள் இருந்த பொருள்களை அடையாளம் காட்டியது. பிறகு அவன் தன் சாக்குப் பைக்குள் இருந்த இரண்டு பாம்புகளை எடுத்து வெளியில் விட்டான். அவை ஊர்ந்துகொண்டு மூலை தேடிப் போக அவன் ஆ... ஊ... என்று கத்தியவாறு அவற்றைப் பிடிக்க, நாங்கள் அவனுக்கு மிச்சமாய் கத்தினோம்.

சின்னம்மா! பாம்பாட்டி சாக்குக்குள்ள இருந்த பாம்ப புடிச்சி வீட்டுக்குள்ள விட்டுட்டான்...

உடனே கதவைத் திறந்து எல்லோரும் உள்ளே ஓடி வந்தார்கள். நாங்களும் மரிசலிலிருந்து இறங்கி வெளியே வந்தோம்.

பாம்புகள் வீட்டுக்குள் ஊர்ந்துகொண்டு அலைய இந்த சத்தத்தில் நிறைய கூட்டம் கூடிவிட்டது. நாங்கள் எல்லோரிடமும் பாம்பாட்டியின் திருட்டுத்தனத்தை சொல்ல ஆள் ஆளுக்கு அவனைப் பிடித்துக் கொண்டார்கள். அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை. பரக்கப் பரக்க விழித்தவாறு வேர்க்க விறுவிறுக்க நின்றுகொண்டிருந்தான்.

எனது அம்மாவிடம் சின்னம்மா சொன்னாள். எக்கா, உம் புள்ளகள கண்ணுல காங்க விடாம அடிக்கயே, அதுக எம்புட்டு கெட்டிக் கார புள்ளைகன்னு இப்ப பாத்தியா? அதுக மட்டும் இப்ப இம்புட்டுக் கருத்தா வீட்டுக்குள்ள ஒளிஞ்சிக்கிட்டு இவன் களாணித்தனத்த பாக்காம இருந்தா ஊரெல்லாமில்ல இவன் பாம்பு புடிக்கேன்னு ஏமாத்தி ஒரு மூட தானியத்த அள்ளிட்டுப் போயிருப்பான் என்று சொன்னாள். எல்லாரும் என் அம்மாவிடம் ஆமா ஆமா உன் பிள்ளைக கெட்டிக்காரப்புள்ளைக, அதுகள நீதேன் போட்டு அடிச்சிக் கொல்லுதே என்று கூட்டுச்சேர்ந்து சொல்ல எனக்கும் தம்பிக்கும் சந்தோசமென்றால் சொல்லி முடியாது.

எப்படியோ ஐந்து வரை படித்தேன். உள்ளூரில் ஐந்து வரை பள்ளிக் கூடம் இருந்ததால் என் படிப்பில் எந்தப் பிரச்சனையும் இல்லை.

என்னோடு படித்தவர்கள் எல்லோரும் ஆறாம் வகுப்பில் சேர்ந்து விட்டார்கள். நானும் ஆறாவது படிக்கப் போவேன் என்று அழுது அடம் பிடித்தேன். எனது அழுகையையும் ஆசையையும் அம்மா கண்டு கொள்ளவே இல்லை. நானும் சொன்னதோடு நிற்காமல் ஆறாம் வகுப்பு போக ஆரம்பித்தேன். பத்து நாள் வரை ஒன்றும் பிரச்சனை இல்லை. போய்க்கொண்டுதான் இருந்தேன். புத்தகங்கள் வாங்கவும் பீஸ் கட்டவும் வாத்தியார் சொன்னார். அம்மாவிடம் பணமில்லை. ஸ்கூல் பீஸ் ஐந்து ரூபாய் ஐம்பது பைசா. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இரண்டு ரூபாய் எழுபத்தைந்து பைசா. கிராப்ட் சார் எனக்காக என் அம்மாவிடம் எவ்வளவோ வாதாடிப் பார்த்தார். கடைசியாக நான் வேண்டுமானால் தருகிறேன் என்றார். அவருக்கே நிறையப் பிள்ளைகள். என் அம்மா ஒப்புக் கொள்ளவில்லை.

வீட்டுக் கஷ்டம் எனக்குப் புரியவில்லை. எப்படியாவது படிக்க வேண்டும் என்று ஆசை. வெறி என்று கூடச் சொல்லலாம். எனது அப்பா உயிரோடு இருக்கும்போது எங்களை மடியில் வைத்துக்கொண்டு, பாரதி நீ வக்கீலாக வேண்டும்; ஒரு தம்பி டாக்டர்; ஒரு தம்பி கலெக்டர் என்று சொல்வார். அப்பா ஆசைப்படி நாம் ஒரு வக்கீலாக வேண்டுமென்று நினைத்துக்கொள்வேன்.

என் அம்மா என்னைப் படிக்கப் போட முடியாது என்று சொன்ன பிறகு யாரிடமாவது உதவி கேட்டுப் படிக்க வேண்டும் என்று துடித்தேன். ஏழு மாமாமாரில் மூத்த மாமா மகன் கணேசனும், இன்னொரு மாமா மகள் வசந்தாவும் எனக்கு உயிர் நண்பர்கள். கணேசன் எனக்கு இரண்டு வயது மூத்தவன். வசந்தாவிற்கு என் வயதுதான். அவர்களிடம் போய் படிப்பைத் தொடருவதற்கு என்ன செய்யலாம் என்று யோசனை கேட்க, அவர்கள் எனது சித்தப்பாவிடம் உதவி கேட்கும்படி சொன்னார்கள்.

எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் ஐந்து பேர். மூன்று அத்தை களும் ஒரு பெரியப்பாவும் ஒரு சித்தப்பாவும் இருந்தார்கள். ஒரு அத்தை யைத் தவிர எல்லோரும் மூன்று மைல் தொலைவில் பெருமாள்தேவன் பட்டியில் இருந்தார்கள். எனது அப்பாவின் ஊரும் அதுதான். ஆனால் நாங்கள் மீனாட்சிபுரத்தில் என் மாமா வீட்டில் குடியிருந்தோம்.

எனது சித்தப்பா மிலிடெரியில் கேப்டனாக இருந்ததால் ரொம் பவும் வசதியாக இருந்தார். அவர் ஒருமுறை மீனாட்சிபுரம் வந்தபோது எனது சேத்திக்காரிகள் யோசனைப்படி அவரிடம், நான் படிக்க வேண்டும் அம்மா படிக்கப்போடமாட்டேன் என்கிறாள் என்று சொல்லி அழுதேன். சாமாதானப்படுத்திய சித்தப்பா, நீ ஊருக்கு வா, உன்னை நான் படிக்கப் போடுகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனார்.

எனக்கு சந்தோசம் பொறுக்கவில்லை. குதித்துக்கொண்டே வந்து கணேசனிடம் சொல்லிவிட்டு எனது அம்மாவிடமும் சித்தப்பா படிக்கப்

போடுவதைப் பற்றிச் சொன்னேன். அவ்வளவுதான், அவளுக்கு வந்த கோபம் இந்த மட்டு அல்ல.

உங்கப்பா செத்த துட்டியக்கூட வந்து கேக்காதவரு உன்னைப் படிக்க போடுவாராமா? சித்தப்பா படிக்கப்போடுதாரு, பெரியப்பா படிக்கப்போடுதாருன்னு ஊருக்கு கீருக்குப் போனியோ காலை ஒடிச்சிப் போடுவேன். அஞ்சு வரைக்கும் படிச்சது போதும். அப்பனை தொலைச் சிட்டு வந்தவளுக்கு படிப்பு கேக்குதாக்கும் என்று அதட்டிவிட்டுப் போய்விட்டாள்.

சற்று நேரத்துக்கு முன்னால் இருந்த சந்தோசம் குதியாட்டம் எல்லாம் அப்படியே அமுங்கிவிட்டது. அழுதுகொண்டே வந்து கணே சனிடம் விவரத்தைச் சொன்னேன். அவன் சொன்னான், ஒன் அம்மாகிட்ட எதுக்காக இந்த விஷயத்தை சொன்னே! பெரியவங்க எல்லாம் சொந்தம் பந்தமின்னு சந்தோசமா இருக்கமாட்டாங்க. நீ பாட்டுக்கு ஊருக்குப் போயி உன் சித்தப்பா கிட்டச் சொல்லு. அவரு உன்னை ஹாஸ்டல்ல சேத்து படிக்க வச்சுருவாரு. உன் பாட்டுக்குப் படி. பத்தாவது பாஸ் பண்ணுன பிறவு நீ பெரிய பொண்ணா ஆயிருவே. அதுக்குப் பிறவு ஊருக்கு வா. உங்கம்மாவால ஒன்னை எதுவும் செய்ய முடியாது.

மீண்டும் எனக்கு உற்சாகம் வந்துவிட்டது. ஆனால் சித்தப்பா ஊருக்கு எப்படிப் போவது? அப்போது பஸ் வசதி இல்லை. காட்டுப் பாதை வழியாகத்தான் மூன்று மைல் தூரம் நடக்க வேண்டும். கருவேல மரங்களும், இலந்தச் செடி, கள்ளிச் செடிகளும் பாதை முழுக்க அடைந்து கிடக்கும். நான் ஒருமுறை பொங்கலுக்காகப் போயிருக்கிறேன். பாதை அடைந்து கிடப்பதுவுமில்லாமல் வாரண்டுக்குத் தப்பியவன் நடமாடு வதாகச் சொல்வார்கள். என்ன செய்வது என்று கணேசனிடம் கேட்டேன். அவன் சொன்ன யோசனை... எனது சித்தப்பாவின் ஒன்றுவிட்ட அக்கா எங்கள் ஊரில் இருந்தாள். பெயர் மாரிமுத்து. அவளது மகள் பஞ்ச வர்ணத்தை பெருமாள்தேவன்பட்டியில் கட்டிக்கொடுத்திருந்தாள். பஞ்ச வர்ணம் தனது இளைய மகள் தனத்தை தனது அம்மாவிற்கு ஒரு ஏண்ட வேலை எடுத்த வேலை செய்வதற்காக மீனாட்சிபுரத்தில் விட்டிருந்தாள். இப்போது ஊரிலிருக்கும் பஞ்சவர்ணத்திற்கு சேட்டமில்லை என்றும் அதனால் தனத்தை உடனே பெருமாள்தேவன் பட்டிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று நான் கடிதம் எழுத வேண்டியது. அந்த கடிதத்தை கொண்டு போய் மாரிமுத்துவிடம் கொடுக்க வேண்டியது. அவள் உடனே தனத்தை ஊருக்கு அனுப்பிவைக்க ஆள் தேடுவாள். அப்படித் தேடும் போது அவளுக்குத் துணை போவதுபோல் நான் போய் என் சித்தப் பாவிடம் படிப்பு பற்றிச் சொல்ல வேண்டியது.

இந்த யோசனைக்கு நான் சம்மதித்தேன். உடனே கணேசன் ஒரு தாளை எடுத்து எழுதினான். மகள் பஞ்சவர்ணம் ஆத்தாவுக்கு எழுதுவது, எங்களுக்கு சேட்டமில்லாமல் படுத்த படுக்கையாக வீட்டோடு கிடக்

கிறோம்; அதனால் நீ வெரசயா துணையாள் பிடித்து தனத்தை ஊருக்கு அனுப்பிவை.

எழுதின கையோடு நான் வாங்கிக் கொண்டுபோய் பெரியம்மா மாரிமுத்துவிடம் கொடுத்தேன். படித்தும் காண்பித்தேன். உடனே பெரியம்மா குய்யோமுறையோ என்று அழுதுகொண்டு என் மக ஊருல சேட்டமில்லாம கிடக்கா; என் பேத்தியை யார் கூட ஊருக்கு அனுப்பி வைப்பேன் என்று தவித்து தத்தளித்துக்கொண்டிருந்தாள்.

பெரியம்மா அழுவாதீங்க, தங்கச்சி கூட நான் போறேன் என்று அபயக்குரல் கொடுத்தேன்.

பெரியம்மா உடனே என் கன்னம் வழித்து என் கண்ணு... ராசாத்தி... கும்புடப் போன தெய்வம் குறுக்க வந்தாப்பல சொல்லுதே; பொக்கினு புறப்படுங்க என்று அவசரப்படுத்தினாள்.

உடனே ஓடிப்போய் கிணற்றில் இறங்கிக் குளித்துவிட்டு வெளுத்த பாவாடை, சட்டையைப் போட்டுக்கொண்டு நான் கிளம்பும்போது மாரி முத்துவின் மகள் பஞ்சவர்ணமே ஊருக்கு வந்துவிட்டாள். அன்று வியாழக்கிழமை. ராஜபாளையத்தில் சந்தை இருக்கும். சந்தைக்கு வந்தவள் தன் அம்மாவிற்காக சில பண்டங்கள் வாங்கிக்கொண்டு வந்து விட்டாள்.

மகளைக் கண்டதும் அவள் அம்மா, என்னடி இது, உனக்கு ரொம்ப சேட்டமில்ல, தனத்த அனுப்பிவையுன்னு கடுதாசி கொடுத்துவிட்டயே, மேலுக்கு சீரா இருக்கா? என்று கேக்க அவளும் எனக்கு சேட்ட மில்லேன்னு யாரு சொன்னது, அவளை கூட்டிவா என்று நின்றாள்.

பாரதாதான் கடுதாசி கொண்டு வந்தா; அவளை கூட்டி வாரேன் என்று பெரியம்மா சொன்னதும் அய்யய்யோ குட்டு உடைஞ்சு போச்சே என்று நான் பயந்துபோய் கணேசனைத் தேடி ஓடினேன்.

ஓடும்போதே வயிற்றுக்குள் திகில் பரவியது. எல்லா விஷயமும் அம்மாவுக்கு தெரிந்து போயிருக்கும். அவள் என்ன செய்வாளோ என்று பயத்துடன் கணேசனைத் தேடினேன். அவன் பிஞ்சையில் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தான். விஷயத்தைச் சொன்னேன்.

நீ ஒண்ணும் பயப்படாதே; அவங்க உன்கிட்ட கேட்டா கணேசன் தான் கொடுத்தான்; அவன்கிட்டப்போய் கேளுங்கன்னு சொல்லிரு; பிறகு நானு பாத்துக்கிடுதேன் என்று அவன் சொல்லிவிட்டான்.

நானும் கொஞ்சம் தைரியத்தோடு வீட்டுக்கு வந்தேன். ஊரின் முக்குவளைவில் ஊத்தாங்கல் ஓடை என்று ஒரு இடம் இருக்கிறது. ஏதாவது அவசரம் என்றால் ஊர்க்காரர்கள் அந்த இடத்தில்தான் காட்டுக்குப் போனவர்களை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். அன்று என் தம்பியும் அங்கே வந்து நின்றிருந்தான்.

பெரியம்மாவுக்கு எதுக்கு கடுதாசி எழுதிக் கொடுத்தே? உன்னை அடிக்கணுமின்னு அம்மா, பெரியம்மா எல்லாரும் காத்துக்கிட்டு கிடக்காக என்றான். நான் ஒண்ணும் கொடுக்கல, நீ வா என்று அவனோடு வீட்டுக்கு வந்தேன்.

என்னைக் கண்டதும் ஆள் ஆளுக்கு வைதுகொண்டு வர என் அம்மா பெரிய கம்போடு ஓடிவந்தாள். அந்தக் கடிதத்தைப் பற்றி எனக்குத் தெரியாது; கணேசன்தான் அந்த கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொல்லி என்கிட்ட கொடுத்தான் என்று சொல்ல மொத்தக் கூட்டமும் அவன் வீட்டை நோக்கி நடந்தது.

அவனிடம் உனக்கு யார் கடுதாசி கொடுத்தது என்று கேட்க அவன் கொடுத்த ஆளை எனக்கு அடையாளம் தெரியாது என்று சொல்லி விட்டான். தகவல் அவன் அப்பாவிற்கு போக அவர் சாட்டையோடு வந்துவிட்டார். சாட்டையைப் பார்த்தானோ இல்லையோ கணேசன் ஒரே ஓட்டமாக வீட்டைவிட்டே ஓடிவிட்டான்.

மூன்று நாள் கழித்துதான் வந்தான். எங்கே போனாய் என்று கேட்டேன். சட்டிக்கிணறு என்ற ஊருக்குப் போனதாகவும் அங்கே ஒரு வீட்டில் அமர்ந்து (வேலை செய்வது) இருந்ததாகவும் சொன்னான். பிள்ளைகள் தவறு செய்துவிட்டால் நாயடி பேயடி அடிப்பார்கள். அதற்குப் பயந்து ஆண் பிள்ளைகள் சுற்று வட்டாரக் கிராமங்களில் போய் அமர்ந்து விட்டு வருவார்கள்.

ஆக மொத்தத்தில் அன்றோடு என் படிப்பு ஆசை முடிந்துவிட்டது. மறுநாள் கொட்டத்தில் புதிதாக மூன்று மாடுகள் கட்டப்பட்டிருந்தன. அன்றிலிருந்து எனக்கு மாடு மேய்க்கும் வேலை ஆரம்பமாகிவிட்டது.

2

மாடு மேய்க்கப் போவதில் இருக்கும் கஷ்டத்தையும் சந்தோசத்தையும் அனுபவித்தால்தான் புரியும்.

நாம் கொஞ்சம் கவனிக்காத நேரத்தில் அடுத்தவர்களின் வெள்ளாமையில் மாடுகள் மேய்ந்து அதை காட்டுக்காரர்களும் பார்த்து விட்டால் அவ்வளவுதான், கையில் எது கிடைக்கிறதோ அதால் விளாசி விடுவார்கள். உடம்பெல்லாம் வரிவரியாகச் சிவந்து வீங்கிவிடும். அவர்கள் அடித்தது போதாது என்று வீட்டிலும் வந்து சொல்லிவிட இவர்களும் போட்டு அடிக்க இதனால் சில பிள்ளைக்கு குளிர் காய்ச்சல் கூட வந்துவிடும்.

அதே சமயம் பத்துப் பேரோடு சேர்ந்து மாடு மேய்ப்பதில் இருக்கும் சந்தோசம் சொல்லி முடியாது. மாடு மேய்க்கப் போகும்போது எங்களுக்குத் தின்பண்டங்கள் கொடுத்து அனுப்புவார்கள். கல்லுப்பயறு, காணப்பயறு, தட்டாம்பயறு, பாசிப்பயறை வறுத்து அதில் கொஞ்சம் அள்ளிக்கொடுப்பார்கள். பயறு இல்லையென்றால் குதிரைவாலி அரிசி, சாமை அரிசி, வரகு அரிசி கொடுப்பார்கள். அதை மடியில் கட்டி தண்ணீர் ஊற்றி வைப்போம், அரிசி நனைவதற்காக. சில சமயம் புளியங் கொட்டையை வறுத்துக் குத்தி நனைய வைத்து, அல்லது சோளத்தையும் உளுத்தம் பயறையும் ஒன்றாக அவித்துக் கொடுப்பார்கள். சில சமயம் அபூர்வமாக தோசை இட்லியும் தின்பண்டமாகக் கிடைக்கும். எங்களுக்கு கொண்டாட்டம்தான். வீட்டில் தோசை இட்லி என்று போடும்போது நெருங்கிய உறவினர்களிடமெல்லாம் நான் இட்லிக்குப் போடுகிறேன் என்று சொல்லிவிட்டுத்தான் போடுவார்கள். ஒருவர் சொல்லிவிட்டால் எல்லோருடைய வீட்டிலும் இட்லி, தோசையாகத்தான் இருக்கும். ஒன்றிரண்டு வீட்டில் போடாவிட்டால் கொண்டுபோய் கொடுத்துவிட்டு வருவார்கள்.

மாடு மேய்க்கும்போது வரதன் அண்ணன் என்பவர்தான் எங்களுக் கெல்லாம் வழிகாட்டி. அவருக்கு இருபது வயது இருக்கும். நல்ல குணம். பெரிய பத்து வரையில் படித்துவிட்டு வேலை கிடைக்காமல் மாடு மேய்த்துக்கொண்டிருந்தார். எல்லோரும் அவர் கூடவேதான் மாடு மேய்க்கப் போவோம். எங்கள் ஊரைச் சுற்றி மொட்டைமலை, வாடி மலை, சஞ்சீவி மலை என்று பல மலைகள் இருக்கின்றன. அந்த மலை களைச் சுற்றித்தான் மாடு மேய்ப்போம்.

மாடுகள் அது பாட்டுக்கு மேய்ந்துகொண்டிருக்கும். எங்களுக்கு விளையாட்டுத்தான். கம்புதள்ளி, கிளித்தட்டு, கண்ணாமூச்சு, எட்டாந் தட்டு இப்படிப் பல விளையாட்டுகள். விளையாடிக் களைத்த பிறகு அண்ணன் காப்பி போட ஆரம்பிப்பார். மலைப் பொந்திற்குள் இரண்டு சட்டிகளை ஒளித்து வைத்திருப்பார். அதோடு காப்பி பொடியும், கருப் பட்டியும் வாங்கி வைத்திருப்பார். அதற்கு எல்லோரிடமும் துட்டு வசூலித்து விடுவார்.

முக்காத்துட்டு, அரையணா, நாலணா என்று இருக்கும். அதில் ஓட்டைக் காலணா, சின்ன முறுக்கு போல் இருக்கும். அந்தத் துட்டைத் தான் நாங்கள் தேடி எடுப்போம். பாவாடைக் கயிற்றில் கோர்த்துக் கொள்ள வசதியாக இருக்கும். ஆண்கள் அருணா கயிற்றில் கோர்த்துக் கொள்வார்கள். அப்படிப் பத்திரப்படுத்தும் துட்டைத்தான் காப்பிக்காக அண்ணனிடம் கொடுப்போம்.

கல் அடுப்பு கூட்டி சருகு, முள் வைத்து தீ மூட்டுவோம். ஒவ் வொரு நாளும் ஒவ்வொருவரின் மாடு என்று முறை வைத்து அண்ணன் பால் கறந்து காப்பி போடுவார். நாங்கள் சோறு கொண்டுபோகும் தூக்குப்போணி மூடியில் காப்பியை எங்களுக்கு ஊற்றிக் கொடுப்பார். முகமெல்லாம் சூட்டில் வியர்த்துக்கிடக்க காப்பியை ஊதி ஊதிக் குடிப்போம். அந்த ருசியே தனி.

வாரத்துக்கு ஒரு தடவை வீடுகளிலிருந்து ஆளுக்கு ஒரு செறங்கை அரிசி, அது எந்த அரிசியாக இருந்தாலும் கொண்டுபோவோம். எல் லோருடைய அரிசியையும் ஒரே சட்டியில் போட்டு சோறு ஆக்குவோம். அதோடு தோட்டங்களில் பூசணிக்காய், கத்தரிக்காய், தக்காளி, பச்சை மிளகாய், வெங்காயம் என்று பறித்து வெஞ்ஞனம் வைத்து ஆமணக்கு இலையிலும், பூசணி இலையிலும் வைத்துக்கொண்டு கூட்டாஞ்சோறு சாப்பிடுவோம்.

தோட்டங்களில் சீனிக்கிழங்கு நிலக்கடலை விளைந்துவிட்டால் போதும், தோட்டக்காரர்களுக்குக்கூடத் தெரியாது, எங்களுக்குத் தெரிந்து விடும். அவற்றைப் பிடுங்கி குளத்து நீரில் கழுவிவிட்டு வேக வைத்து ஆளுக்கு சமபங்கு வைத்து தின்போம். செடிகளை மாட்டுக்குப் போட்டு விடுவோம். தோட்டக்காரர்கள் எங்களிடம் வந்து கேட்கும்போது

செடிகளை நாங்கள் பிடுங்கவே இல்லை என்று சத்தியம் செய்து, நரிகள் மீதும் எலிகள் மீதும் பழியைப் போடுவோம்.

மொட்டை மலை வரை மேய்ச்சலுக்குப் போவோம். அது உச்சியில் வழுக்கையாக இருக்கும். அந்த மலையின் வடபுறத்தில் பெரிய குகை ஒன்று இருந்தது. அந்தக் குகை கீழுருக்குப் போவதாகவும், கீழுரில் வால் முளைத்த மனிதர்கள் இருப்பதாகவும் பெரியவர்கள் பேசிக்கொள் வார்கள். எங்களுக்கு வால் முளைத்த மனிதர்களைப் பார்க்க வேண்டு மென்று ரொம்ப ஆசையாக இருந்தது. இதைப்பற்றி அண்ணனிடம் சொன்னோம். எனக்கும் அவங்களைப் பார்க்க ஆசையாத் தான் இருக்கு; வாங்க, நாம் போய் பாத்து முடிஞ்சாப் பேசிட்டு வருவோம் என்று சொன்னார்.

அதைக் கேட்டதும் சந்தோசம் என்றால் சொல்லிமாளாது. எல்லா மாடுகளையும் ஒரு இடத்தில் மடக்கி விட்டுவிட்டு நாங்கள் குகைக்குள் போனோம். அண்ணன் முதலில் போக நாங்கள் அவர் பின்னால் போனோம். ஒரே வீச்சம். ஆட்டுப்புழுக்கை காலில் மிதிபட்டது. கொஞ்ச தூரம் போனபின் ஒரு தேள் கொடுக்கை தூக்கிக்கொண்டு வர இரண்டு மூன்று பூரான்கள் ஓடின. எல்லோரும் சேர்ந்து அதை அடித்துவிட்டு இன்னும் கொஞ்ச தூரம் போக ஒரே இருட்டு. அதோடு ஏதோ இரைச்சல் ஒன்று கேட்க அது என்ன இரைச்சல் என்று நாங்கள் யோசிக்கும் முன்பே செங்குளவிகள் படை திரண்டு வந்தன.

ஆளுக்கு ஒரு திக்கமாகச் சிதறி ஓடினோம். ஆனாலும் குளவிகள் எங்களை விடவில்லை, நன்றாகக் கொட்டிவிட்டன. வலியைத் தாங்க முடியாமல் ஒருவர் ஒண்ணுக்கு இருந்ததை (அதுதான் மருந்து) மற்ற வருக்குப் போட்டுக்கொண்டு அழவும் முடியாமல், அழுகையை அடக் கவும் முடியாமல் கண்ணில் நீர் தளும்ப சிரித்து வைத்தோம்.

ஆனால் வால் முளைத்த மனிதர்களை எப்படியும் நாளைக்குப் பார்த்து விடுவது என்ற முடிவுடன் எல்லோரும் வீட்டுக்குக் கிளம் பினோம்.

மறுநாள் அண்ணன் ஒரு கயிறு, எண்ணெய் ஊற்றிய தீவட்டி எல்லாம் கொண்டு வந்தார். வழக்கம்போல் மாடுகளை ஒரு இடத்தில் விட்டுவிட்டு மலைக்குகைக்குள் நடந்தோம். கையில் ஆளுக்கு ஒரு கம்பு. அண்ணன் முதுகுப்புறமாக கயிறு கட்டி இருக்க அந்த கயிற்றையே இடுப்பில் சுற்றிக்கொண்டோம். தீவட்டியை கொளுத்திக்கொண்டு உள்ளே நுழைந்தோம்.

வாராய்... நீ வாராய்... போகுமிடம்
வெகுதூரமில்லை நீ வாராய்...

என்று பாடிக்கொண்டே வரத அண்ணன் முன்னால் நடந்தார். குகை ஊமைக்குழல்போல் திரும்பப் பாடியது.

முதலில் குளவிக் கூட்டை தீ வைத்துப் பொசுக்கினோம். அப்படியும் சில குளவிகள் கொட்டின. வால் மனிதனைப் பார்க்கும் ஆசையில் குளவி கொட்டியது பெரியதாகத் தெரியவில்லை. தீவட்டி வெளிச்சத்தில் நடக்க ஆரம்பித்தோம். உள்ளே போகப்போக வௌவால்கள் எங்கள் முகத்தில் அறைந்துவிட்டு ஓடின. ஒரு பாம்பு வேறு. அதை அடித்துவிட்டு நடந்தோம். இப்போது குகை குறுகிச் சின்னதாகப் போய்விட குனிந்துகொண்டே மெல்ல மெல்ல எட்டு வைக்க காற்று இல்லாமல் வியர்த்துக் கொட்டியது. கடைசியில் குகை அடைபட்டுக் கிடந்தது.

அந்த இடத்தில் அநியாயத்துக்கு வௌவால்கள் இருந்தன. வௌவால்கள் பறக்க தீவட்டி அணைந்துவிட்டது. வியர்த்து விறு விறுத்துப் போய் பயத்தோடும் ஏமாற்றத்தோடும் வெளியே வந்தோம். அதோடு குகை ஆசை விட்டுப்போனது.

மழைக்காலம் வந்து குளங்களெல்லாம் பெருகிவிட்டால் எங்களுக்கு ரொம்ப சந்தோசமாக இருக்கும். எங்களிடம் இருந்ததெல்லாம் எருமைமாடுகள். எங்கள் ஊர் பெரிய வீட்டுக்காரரிடம் மட்டும் ஒரே ஒரு பசு இருந்தது. அந்தப் பசுவின் கோமியத்திற்கு, சாணிக்கு, அதன் பாலுக்கு எப்போதும் கிராக்கித்தான். எங்கள் மாடுகள் எல்லாம் எருமைகளாக இருந்ததால் பேயா மழையும் பெருமழையுமாகப் பெய்தாலும் சரி, மாடு மேய்க்க நாங்கள் போய்தான் ஆகவேண்டும். ஒரு சாக்கை எடுத்துக் கொங்காணி போட்டுக்கொண்டு மடியில் நனைந்த அரிசியையோ, வறுத்த பயத்தையோ அள்ளி வைத்துக்கொண்டு போய்விடுவோம்.

மழைக்காலங்களில் ஊருக்கு அருகே மாடு மேய்க்க முடியாது. பிஞ்சைகளில் நடுவையும் நாத்துமாக இருப்பதால் மாடு மிதித்து உளப்பி விடுமென்று கடக்க மொட்டைமலைக்குப் போய்விடுவோம். மழைக் காலங்களில் மலையைச் சுற்றிலும் அங்கங்கே நீர் குட்டிக்குட்டி அருவியாய் விழுந்துகொண்டிருக்கும். அந்த அருவியில் நனைந்தவாறு எப்போதும் குளித்துக்கொண்டுதான் இருப்போம். கோரைக் கிழங்கு களைத் தோண்டித் தின்போம். கேப்பைக் கருதுகளும் கம்பங்கருதுகளும் விளைந்து சொடிந்து கிடக்கும். எங்கு பார்த்தாலும் பச்சைச் செடிகளும் மரங்களும் ஈரம் கோர்த்தவாறு புதுப்புதுத் தளிரும் கொழுந்துமாக பூவும் மொட்டுமாகச் சில்லெடுத்து செறட்டையை கவுத்திக்கொண்டிருக்கும்.

நாங்கள் விளைந்த கருதுகளைக் காம்போடு ஒடித்துக்கொண்டு வருவோம். ஆண்பிள்ளைகள் எல்லாம் மரங்களில் ஏறிக் காய்ந்த கொப்பு களை ஒடித்துக்கொண்டு வருவார்கள். மலைப்பொந்துகளுக்குப் போய்

தீ மூட்டி கருதுகளை வாட்டிக் கசக்கி வாய் வலிக்கத் தின்போம். குளத்துக் கருகில், குட்டைக்கருகில் போய் மாடு மேய்த்தால் இந்த மாடுகள் கொஞ்ச நேரம்தான் மேயும். பிறகு தண்ணீருக்குள் போய் அரைக் கண்ணை மூடியவாறு வாயை அசை போட்டுக்கொண்டு சுகமாகப் படுத்துவிடும். அது தண்ணிக்குள் போகும்போதே அதன் மீது ஏறி நடுக்குளம் வரைக்கும் நாங்கள் போட்டி போட்டுக்கொண்டு போவோம். சில மாடுகள் போகும்போதே திடீரென்று பல்டி அடித்துவிட நாங்கள் குப்புறத் தண்ணீருக்குள் முங்கித் தடுமாறி அவசர அவசரமாய் நீச்சல் அடித்தவாறு கரைக்கு வருவோம். ஆண்பிள்ளைகள் குளத்துக்குள் அலையும் முக்குளிப்பான்களைப் பிடிக்க எம்.ஜி.ஆர். நீச்சல் என்று கையை மாற்றி மாற்றிப் போட்டு வேகமாக நீந்துவார்கள்.

எங்களுக்கு நாலு மாடுகள் இருந்தன. அதில் ஒன்று நோஞ்சானாக இருந்தது. எல்லா மாடுகளும் வேகமாக நடக்கும். இந்த மாடு மட்டும் நடக்க முடியாமல் திண்டாடும். கொட்டத்திலேயே அதை விட்டு விட்டுப் போகலாம் என்றால் எனது அம்மா வசவு தொடங்கி விடுவாள். அதையும் பத்திக்கொண்டு போக வேண்டிய கட்டாயம்.

ஒருநாள் மூன்று மைலுக்கு அப்பால் முத்துலிங்கபுரம் காட்டுக்குப் போனோம். மேய்ந்து கொண்டிருக்கும்போதே எனது நோஞ்சான் மாடு படுத்துவிட்டது. எழுப்பி எழுப்பி பார்த்தேன். எல்லோருமே எழுப்பிப் பார்த்தார்கள். அது அசையாத கல்லாகக் கிடந்தது.

பொழுது கொஞ்சம் மேற்கே சாய்ந்துவிட்டால் போதும், கறவை மாடுகள் காட்டில் நிற்காது. ம்மா... ம்மா... என்று கத்திக்கொண்டு வீட்டைப் பார்க்க பால் கொடுப்பதற்காக கன்னுக்குட்டியைத் தேடி ஓடும். எல்லோருடைய மாடுகளும் கத்த அவர்களும், எங்களுக்கு நேரமாகிவிட்டது, பால் கறக்க வேண்டும்; நாங்கள் போய் உனது அம்மாவை அனுப்புகிறோம் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள்.

இரண்டு பக்கமும் மலை. நடுவே நான் மட்டும் தனியாக மாடுகளை மேய்த்துக்கொண்டு இருக்கிறேன். பொழுது மலை வாயில் விழ ஆரம்பித்து விட்டது. மஞ்சள் வெயில்.

மலையின் குறுக்கே ஒரு வண்டிப்பாதை போனது. அந்த வழியாக யாராவது வரமாட்டார்களா என்று வழியையே பார்த்துக்கொண்டிருந் தேன். ரொம்ப நேரம் கழித்து ஒரு மாட்டு வண்டி வந்தது. அந்த வண்டியை நோக்கி ஓடினேன். அந்த வண்டிக்காரரிடம் என் மாட்டைப் பற்றிச் சொல்லி அதைத் தூக்கி விடும்படி கேட்டேன்.

என்ன தாயீ, இந்நேரத்தில் இப்படி தனியா இருக்கியே என்று அவரும் இரக்கத்துடன் கேட்டுக்கொண்டே வந்தார். நானும் அவருமாக எவ்வளவு முயற்சித்தும் மாட்டைத்தூக்க முடியவில்லை. அவர் வண்டியி லிருந்த கூளத்தை கொஞ்சம் கொண்டுவந்து மாட்டுக்கு முன்னால் போட்டுவிட்டு இந்தக் கூளத்தை தின்னா மாடு தன்னால எந்திரிச்சு நிக்கும்; நான் அவசரமா டவுனுக்குப் போக வேண்டி இருக்கு; போயிட்டு வாரேன் தாயீ என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

பொழுது கருகருவென்று மசங்கிவிட்டது. என்னைத் தேடி யாரும் வரவில்லை. வருவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை. படுத்துக் கிடக்கும் மாட்டை அங்கேயே விட்டுவிட்டு வந்துவிட்டால் நரி நாய் வந்து தின்றுவிடுமோ என்று எனக்கு பயமாக இருந்தது. சற்று தூரத்திலி ருக்கும் ஊருக்குள் போய் ஆட்களைக் கூட்டி வரலாமா? அதுவரை கதறிக்கொண்டு ஓடத்தவிக்கும் மற்ற மூன்று மாடுகளை என்ன செய்வது என்று நான் கண்ணீரோடு காத்திருந்தேன். சிவபெருமானை வேண்டிக் கொண்டேன்.

எனக்கு நெருங்கிய சொந்தமான நாராயணன் அண்ணன் காலேஜில் படித்துக்கொண்டிருந்தார். நான், எனது மாமா மகள் வசந்தா, செல்லி, பூங்கோதை என்று நான்கு பேரும் எப்போதும் எங்கேயும் போக வர ஒன்றாகவே இருப்போம். ஒரே இடத்தில்தான் படுப்போம். இந்த அண்ணன் ஒரு நாள் எங்கள் நாலு பேருக்கும் சாமி படம் கொடுத்துவிட்டு நீங்கள் இந்த சாமியை கும்பிடுங்கள்; உங்களுக்கு கேட்டதெல்லாம் கிடைக்கும் என்றார். உடனே வசந்தா உங்களுக்கு எல்லாம் கிடைச்சதா என்று கேட்க அவரும் நான் காலேஜ் படிக்க வேண்டும் என்று கேட்டேன்; சாமி கொடுத்துவிட்டார்; அதேன் நான் படிக்கிறேன் என்று சொன்னார்.

நாங்களும் உடனே பக்தியாகி அவர் கொடுத்த சாமி படத்தை பிரித்துப் பார்த்தோம். எனக்கு சிவபெருமான் வந்தது. அன்றிலிருந்து நான் அதை கும்பிட்டு ஏதாவது கேட்பேன். கேட்டது எதுவும் கிடைக் காது. கேட்காத அடிதான் கிடைக்கும். ஆனாலும் மனத்தில் பக்தி வந்து சேர்ந்துகொண்டது.

அன்று கூட யாராவது வரமாட்டார்களா என்று சாமியை கும் பிட்டுக்கொண்டிருக்க எங்கள் ஊர்க்காரர் வீரய்யா ஆடுகளைப் பத்திக் கொண்டு வந்தார். வீரய்யா எனக்கு மாமா மகன். ஆடு மேய்ப்பது தான் அவர் தொழில். அந்த ஊரில் 'கெடை' போடுவதற்காக வந்திருக்கிறார். உடனே அவரிடம் விவரத்தைச் சொன்னேன். அட பாவமே, நீ பதறாம இரு என்றார்.

பிறகு பக்கத்து ஊருக்குள் போய் கயிறு, உலக்கையோடு நான்கு ஆட்களையும் கூட்டிவந்தார். உலக்கையை மாட்டின் அடிவயிற்றில் கொடுத்து கயிற்றால் கட்டி எல்லோரும் தூக்கி நிறுத்தினார்கள். மாடும்

கொஞ்ச நேரம் ஆடி அசைந்துவிட்டு பிறகு நடக்க ஆரம்பித்தது.

ஒருவழியாக இருட்டிய பிறகு ஊர் வந்து சேர்ந்தேன். ஊரின் திருப்பத்தில் எனக்காக காத்திருந்த அம்மா, ஏழரைக் கழுதை வயசாச்சு மாட்டைப் பத்திட்டு வர துப்பில்லை, இனி எந்நேரம் நான் பால் பீச்சி காயவச்சி உறை ஊத்திட்டுப் படுக்கிறது என்று வைது கொண்டு நின்றாள்.

முத்துலிங்கபுரத்தில் விழுந்து எழுந்த மாடு இன்னும் தேறாமல் நடக்க முடியாமல்தான் இருந்தது. ஆனால் அதற்கும் வினை வந்ததுபோல் ஆகிவிட்டது. யாரோ சொன்னார்கள் என்று என் அம்மா கொதிக்கக் கொதிக்க வென்னியை வைத்து மாட்டுக்கு ஊத்தியதில் அதற்கு உடம்பெல்லாம் பொத்துப் புண்ணாகிவிட்டது.

அப்போதும் அதை மேய்க்க பத்திக்கொண்டு போ என்று என் அம்மா கட்டாயப்படுத்த நான் மெல்ல மெல்ல நடக்கவிட்டு அதைப் பத்திக்கொண்டு போனேன். மொட்டைமலை வரை அந்த மாடு எப்படியோ நடந்து வந்தது. பிறகு விழுந்துவிட்டது. மற்ற மாடுகள் பொழுது சாய்ந்த உடன் வீட்டைப் பார்க்க ஓட்டம் பிடித்தன. நானும் கூடவே வந்துவிட்டேன். உடனே என் அம்மா சேட்டமில்லாத மாட்ட எங்கனடி விட்டே என்று கேட்டாள்.

நான் எங்க அத விடுறது? அது நடக்க மாண்டாம பாதையிலேயே படுத்துருச்சி. இந்த மாடுக அங்கன நிக்க மாணேங்கு. நானு என்ன செய்ய? அதேன் அந்த மாட்ட அங்க போட்டுட்டு இதப் பத்திட்டு வந்துட்டேன் என்று சொன்னேன்.

அடி பாதகத்தி கெடுத்துட்டயே... அது பணம் பெத்த மாடுன்னு நானு படப்போட திங்க விட்டேன். கொணம் பெத்த மாடுன்னு கொளத்தோரம் மேய விட்டேன்! என்று சொல்லிக்கொண்டு மொட்டை மலையை நோக்கி ஓடினாள். அங்கே போய்ப் பார்த்தால் அந்த மாடு செத்துக் கிடந்திருக்கிறது. அன்று முழுதும் அவள் என்னை வஞ்சி கொண்டு விசாரத்தோடு அலைந்தாள்.

❧

நாங்கள் மாடு மேய்க்கும் காலங்களில் எங்கள் ஊரில் பால் டிப்போ எதுவுமே இல்லை. கன்றுக்குட்டிகளுக்கு நன்றாக பால் விடுவார்கள். மீதிப் பாலைக் காய்ச்சி உறை ஊற்றி தயிர் விற்பார்கள். நானும் என் வயசுப் பொண்ணுகளும்தான் பக்கத்தில் இருக்கும் சத்திரப்பட்டியில் தயிர் ஊத்தப் போவோம். பிறகு மோர் கடைந்து வெண்ணெய், நெய் என்று விற்பார்கள். எப்போது பார்த்தாலும் பானையில் பால் காய்ந்து கொண்டிருக்கும். மற்றொரு பானையில் மோர். செழிப்புதான்.

சோளச்சோறு, கூழ், கம்மஞ் சோறுக்கெல்லாம் யாருமே வெஞ்ஞனம் தேட மாட்டார்கள். மோர், பாலை ஊற்றிச் சாப்பிடுவார்கள். வெங்காயம், பச்சைமிளகாய், அச்சுவெல்லம், சுட்ட வாளக்கருவாடு... இதுதான் வெஞ்ஞனம்.

முதன்முதலாக ராஜபாளையத்திலிருந்து ஒருவர் பால் வாங்க வந்தார். அவ்வளவுதான், கன்னுக்குட்டியாவது ஒண்ணாவது... ஒட்டக் கறந்து காசாக்கி விட்டார்கள். நன்றாகப் பால் குடித்த கன்றுக்குட்டி களெல்லாம் எலும்பும்தோலுமாக நடக்கவே சக்தி இல்லாமல் படு கிடையாகி செத்துக்கூடபோயின. வீட்டிலும் பால், மோர் கிடையாது. எங்களுக்குப் பாவமாக இருந்தது. என்ன செய்யலாம் என்று நான், கணேசன், வசந்தா எல்லோரும் யோசித்தோம். ஊர் உறங்கிய பிறகு ஒவ்வொரு மாட்டுத் தொழுவத்திற்கும் போய் கன்றுக் குட்டிகளை அவிழ்த்துவிட வேண்டியது. அவை விடிய விடிய பாலைக் குடிக்கட்டும்.

ஊரில் உள்ள நூறு வீடுகளில் பத்துப்பேர் தான் மாடு இல்லாமல் இருந்தார்கள். மற்றவர்கள் எல்லோரும் மாடு வைத்திருந்தார்கள். நாங்கள் இரவோடிரவாக ஒளிந்து ஒளிந்து போய் எல்லாக் கன்றுக்குட்டி களையும் அவிழ்த்து விட்டோம். அவை தாயிடம் முட்டி முட்டிப் பால் குடிப்பதைப் பார்த்துவிட்டு சந்தோசமாக வந்து படுத்தோம்.

மூன்றாம் கோழி கூப்பிடும்போது களவு புல்லுக்குப் போய்விட்டு வருகிறோம். ஊரே எழுந்து பரபரத்துக்கொண்டிருக்கிறது. என்ன என்று பார்த்தால் ஏழு எட்டுக் கன்றுக்குட்டிகள் மூச்சுத் திணறி வயிறு ஊதிக் கிடக்க இரண்டொன்று செத்துக்கிடக்கின்றன. என்ன நடந்தது என்றால் இத்தனை நாளும் ஒட்டிய வயித்தோடு கொலைபட்டினியாகக் கிடந்த கன்றுகள் ஒரே நேரத்தில் தாயிடம் இரண்டு படி மூன்று படி பாலைக் குடித்ததால் செரிக்காமல் மூச்சுத்திணறி கடைசியில் செத்தே போய் விட்டன. கன்றுக்குட்டிகளை அவிழ்த்துவிட்ட நாங்கள் அன்று முழுக்க சாப்பிடவே இல்லை. நல்லது செய்யப்போய் இப்படி ஆகிவிட்டதே என்று அழுகையும் கண்ணீருமாக இருந்தோம்.

எங்களைப் பார்த்த மாமா, அம்மா எல்லோரும் வருத்தப் பட்டார்கள். இந்தப் புள்ளைக முகமெல்லாம் குராவிப்போய் கிடக்கு. பாவம், அதுகதானே புல்லு புளிச்சி பிடுங்கியாந்து போட்டு மாடுகன்னு களை காப்பாத்துக. இது ஏதோ குறளிவித்தையாத்தேன் இருக்கும். இல்லாட்டா ஒண்ணுபோல வீட்டுக்கு ஒரு கன்னுக்குட்டி சாவுமா? என்று கூடிப்பேசி பக்கத்து ஊரில் இருக்கும் கோடாங்கிக்காரனை கூட்டி வந்து குறி கேட்டார்கள்.

கோடாங்கிக்காரன் வந்து அடித்தால் எப்போதும் முதல் ஆளாக அவன் முன்னால் போய் உட்கார்ந்திருப்போம். அன்று நாங்கள் ஊர்ப் பக்கமே தலை காட்டவில்லை. எங்கே நம்மைக் காட்டிக் கொடுத்து

விடுவானோ என்ற பயத்தில் அரண்டுபோய் காடுகளிலேயே பதுங்கிக் கிடந்தோம்.

ஆனால் கோடாங்கிக்காரன் இது செய்வினைக்கோளாறு என்றும் இருபத்தியொரு ரூபாய் கொடுத்தால் அதைச் சரி பண்ணி விடுவதாகவும் கூற ஊர்க்காரர்கள் அவனிடம் கெஞ்சாத குறையாகக் கெஞ்சி கொஞ்சம் குறைத்துப் பணம் கொடுத்தார்கள். அவனும் அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு எலுமிச்சம் பழத்தை அறுத்து குங்குமத்தில் துவைத்து நான்கு திசைகளிலும் வைத்துவிட்டுப் போனான். ஒரு வாரம் வரையிலும் அந்த எலுமிச்சம்பழம் ரத்தச் சிவப்போடு எல்லோரையும் பயமுறுத்திக் கொண்டிருந்தது. அதன் அருகில் வரப் பயந்து ஊர் ஆட்கள் ஒதுங்கி நடக்க நாங்கள் வழக்கம்போல் சிரித்தோம்.

ஜ۞ஜ

நாங்கள் வேலையில்லாத நேரங்களில் சின்னம்மா செல்லம்மாள் வீட்டில்தான் கூடியிருப்போம். சின்னம்மா வீடு என்றால் எங்களோடு இளைய தம்பி தருமனும் ஓடி வருவான். ஏற்கெனவே சின்னம்மாவிற்கு எட்டுப் பிள்ளைகள். அதோடு எங்களையும் பிரியமாக வைத்துக் கொள்வாள். அவர்களுக்கு விவசாய வேலை என்பதால் வீடு நிறைய தானியமும் தவசமும் குமிந்து கிடக்கும். சின்னம்மா போலவே சித்தப்பாவும் நல்ல குணம். 'செல்வாக்கா வளந்த புள்ளைக. இப்போ அவ அப்பா இல்லாம தவிக்குதுக' என்று அணைத்து, தின்பண்டங்கள் வாங்கிக் கொடுப்பார்கள்.

அடிக்கடி எனது அம்மாவிற்கும் சின்னம்மாவிற்கும் சண்டை வந்துவிடும். பிறகு நாங்கள் சின்னம்மா வீட்டிற்குப் போகக்கூடாது என்று என் அம்மா எங்களை கட்டுப்படுத்துவாள். இந்த விஷயத்தில் மட்டும் கட்டுப்படவேமாட்டோம். எங்கம்மா கொஞ்சம் அசந்தால் போதும், சின்னம்மா வீட்டிற்கு ஓடிவிடுவோம். சின்னம்மா எங்களுக்கு சோளத் தட்டையில் ராட்டினம், பனங்காயில் வண்டி என்று நிறைய விளையாட்டு சாமான் செய்து கொடுப்பாள். காலில் முள் குத்தினாலும் கீழே விழுந்து அடிபட்டாலும் எங்கள் அம்மாவிடம் சொல்லமாட்டோம். சின்னம்மாவிடம்தான் ஓடுவோம். அவர் பிள்ளைகளும் நாங்களும் எப்போதும் இரண்டு வீட்டுப் பிள்ளைகளாக இருந்ததில்லை; ஒரு வீட்டுப் பிள்ளைகளாகத்தான் இருப்போம்.

பிறந்து மூன்று மாதமே ஆன பிள்ளையை எங்களிடம் விட்டுவிட்டு சின்னம்மா நடுவைக்குப் போய்விட்டாள். கொஞ்சநேரம் சமத்தாக தூங்கிய அவன் பிறகு முழித்துக்கொண்டு கத்தோ கத்து என்று கத்துகிறான். நானும் என் தங்கச்சி (சின்னம்மா மகள்)யும் தான் அவனைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். என்ன செய்வதென்று தெரியவில்லை.

வீட்டில் பால் இருக்கும் இடம் தெரியாமல் கலயத்திலிருந்த விளக் கெண்ணெயை எடுத்து வந்தோம். அதையே சின்னச்சங்கில் மோந்து மோந்து அவனுக்கு ஊட்ட நன்றாகவே அதைக் குடித்தான். கொஞ்சம் நிறுத்தினாலும் உடனே அழ ஆரம்பித்துவிடுவான். அவன் அந்த எண்ணெயை குடிக்கக் குடிக்க வெளிக்கி வேறு போகிறது. என்ன செய்வது என்று தெரியவில்லை. அழுகையாய் வந்தது. தம்பியைத் தூக்கிக்கொண்டு பிஞ்சைக்குப் போகலாம் என்றால் எங்களால் தூக்க முடியவில்லை. தொட்டாலே கையை வழுக்கிக்கொண்டு போகிறான். நாங்களும் அவனுடன் சேர்ந்து அழ ஆரம்பிக்கும்போது எனது சின்னம்மாவே வந்துவிட்டாள். தம்பிக்கு விளக்கெண்ணெய் கொடுத்ததைச் சொன்ன போது அவள் இன்னும் சத்த நேரம் நானு வராம இருந்தேன்னா அம்புட்டுத்தேன், உன் தம்பி பிழைக்க மாட்டான் என்றாள். நாங்கள் புரியாமல் பார்த்துக்கொண்டு நின்றோம்.

ooo

மாடு மேய்க்கப் போகும்போது காப்பி போட்டு குடிப்பது, கூட்டாஞ்சோறு ஆக்கித் தின்பதோடு கொக்கு, குருவி, அணில்களை வேறு பிடித்து சுட்டுத் தின்பார்கள். இந்த விஷயத்தில் மட்டும் நான் சேரவே மாட்டேன். என் தம்பி ராஜா அதில் ஒண்ணாம் நம்பர். முதலில் என் அம்மா எங்கள் இரண்டு பேரையும் சேர்ந்து மாடு மேய்க்க விட மாட்டாள். ஒருவர் மாடு மேய்க்க வேண்டும். ஒருவர் வேறு வேலைக்குப் போகவேண்டும். நான்தான் வேலைக்குப் போக வேண்டும். ஆனால் என் தம்பிக்கு மத்தியானம் வரைக்கும் மாடு மேய்க்க வளையாது. அதனால் அம்மாவிடம் கெஞ்சிக் கூத்தாடி இந்தக் குருவி களை சுட்டுத் தின்பதற்காகவே வீட்டில் கிடக்கும் இரண்டு மூன்று கன்னுக்குட்டிகளை பத்திக்கொண்டு வருவான்.

கணேசன், என் தம்பி இன்னும் அவனைப் போல எல்லா ஆண்பிள்ளைகளும் எங்களிடம் மாட்டை விட்டு விட்டு அடர்ந்த வெள்ளாமைகளைத் தேடி கை நிறையக் கல்லோடு போவார்கள். அப்படிப் போகும்போது யார் நன்றாக மாட்டைப் பாத்துக்கிட்டு இருக்கீகளோ அவுகளுக்குத்தேன் சப்ப கறி கிடைக்கும். இல்லாட்டி வெறும் மண்டதேன் கிடைக்கும் என்று சொல்லிவிட்டுப் போவார்கள். பிறகு கொஞ்ச நேரம் வரையும் அந்தா ஒரு குருவி போவுது; இங்கிட்டாம ஒரு கொக்கு போவுது; தெக்காம ஒரு அணிலு ஓடுது; கல்லக் கொண்டி எறிடா என்று கூப்பாடுகள் கேக்கும். ஒரு மணிநேரம் கழித்து அணில், குருவி, எலி, சில நேரம் கொக்குகூட கொண்டுவருவார்கள். பிறகு குடலைப் பிடுங்கிவிட்டு அந்த இடத்தில் சீனிக்கல்லைப் பொதிய வைத்து அங்கிருக்கும் சண்டு சருகுகளைப் பெறக்கி தீயிட்டு அதில் இந்த

அணில், குருவி எல்லாவற்றையும் போட்டு நன்றாகச் சுடுவார்கள். பிறகு ஆளுக்கு கொஞ்சம் பங்கு வைத்துத் தின்பார்கள். காடை, கௌதாரி முட்டைகளும் இதில் அடங்கும். மயில் முட்டையை மட்டும் தொட மாட்டார்கள். முருகன் கண்ணைக் குத்திவிடுவாராம். பிறகு இரண்டு மூன்று கரட்டாண்டியைப் பிடித்துவந்து அதன் கண்ணில் மூக்குப் பொடியை போட்டு அது தலை சுற்றுவதைப் பார்த்து கரட்டாண்டி பேய் ஆடுது என்று சொல்லிக் குதிப்போம். பாறைகளின் இடுக்குகளில் இருக்கும் உடும்பைப் பிடித்து வந்து அதன் வாலில் கயிற்றைக் கட்டி பாறைகளின் மேல் ஏற்றி இறக்கி விளையாடுவோம். சிலநேரம் கீரிப் பிள்ளை, நரிகள் கண்ணில் தட்டுப்பட அதைச் சூழ்ந்தவாறு முடுக்கிக் கொண்டு ஓடுவோம். அவை பயந்து எங்கேயாவது போய் மறைந்து கொள்ளும். ஒருநாள் நான் ஒரு புதரின் ஓரம்போய் உட்கார்ந்தேன். பெரிய பாம்பு. இரண்டு கை வீச்சிலும் நீளமாக, உலக்கைத் தண்டியில் சரசர வென்று நகர நான் வீச்சென்று அலறினேன். எல்லோரும் என்ன என்ன என்று ஓடிவர நான் பாம்பை மட்டுமே காட்டினேன். என்னால் பேச முடியவில்லை.

போடு தீட்டு என்று எல்லோரும் ஓடினார்கள். ஆனால் அது அவர் களுக்கு மிச்சமாக ஓடிப்போய் மறைந்துவிட்டது. பிறகு எனக்கு திடுக்குத்தண்ணி தெளித்தார்கள். ஒரு தூக்குப் போணியில் தண்ணி கொண்டுவந்து அதில் வேப்பங்கொப்பை பிடுங்கி அந்த தண்ணியில் முக்கி அம்மன் பேரை சொல்லிக்கொண்டே முகத்தில் தண்ணியை தெளித்தார்கள்.

இப்படியெல்லாம் விளையாடிக் களைத்துப் போய் வீட்டுக்கு வருவோம். அம்மா தம்பியிடம், நீ படிக்கித புள்ள இப்படி சுத்துனா வெளங்குமா? சரி போனயே அந்த கழுதைக கூட சேந்துக்கிட்டு குருவி கொக்குன்னு புடிச்சி தின்னயா? என்று கேட்பாள். இல்லையே இல்லை; என் படிப்பறிய சத்தியம் என்பான் அவன். பிறகு என்னிடம், ஏண்டி இவன் தின்னானா என்று கேட்பாள். நான் என் கண்ணான சத்தியம் என்பேன். உடனே அவள், உங்கிட்டப் போயி கேட்டேன் பாரு கழுத விட்டையில முன் விட்டை வேற, பின் விட்டை வேறன்னா இருக்கு என்று சொல்லி விட்டு, பறவய அடிச்சவக பாழடைஞ்சு போவாக. அத அடிக்கக்கூடாது; ஏன்னா அதுவும் நம்மள கணக்கா ஒரு உசுருதேன் என்று சொல்லிவிட்டுப் போவாள்.

அம்மா தலை மறைந்ததுமே என் தம்பி பெரிய படிப்பாளி மாதிரி 'பறவய அடிச்சவக பால் குடிச்சி வாழ்வாக. ஏன்னா அதுவும் நம்மள கணக்கா ஒரு மசுருதேன்' என்பான். எங்களுக்கு சிரிப்பாணி அள்ளும்.

ooo

எங்கே வேலைக்குப் போனாலும் நானும் வசந்தாவும் சேர்ந்து தான் போவோம். வேடிக்கை பார்க்கவும் அப்படித்தான். ஆனால் அவள் களவு புல்லுக்கு மட்டும் வரமாட்டாள். பேய் பிசாசு என்று ரொம்பவும் பயப்படுவாள். விடியற்காலம் மூன்று மணிக்கே நாங்கள் முழித்து விடுவோம். மாட்டுச்சாணம் அள்ளி, கிணற்றிலிருந்து நாற்பது குடம் வரை தண்ணீர் எடுத்து பருத்தி விதை ஆட்டி தண்ணீர் விட்டுவிட்டு புல்லுக்குப் போவோம். கைகளில் இருக்கும் சாண வீச்சத்தைப் போக்க பச்சை இலை, துளசி இலையைப் பிடுங்கி கசக்கிக் கொள்வோம்.

இந்த வேலைகளை நாங்கள் செய்யும்போது வசந்தா நன்றாகத் தூங்குவாள். அவர்கள் வீடு விவசாய வீடு என்பதால் எந்த நேரமும் வேலை... வேலைதான். நாங்கள் வேறு அவள் அப்பாவிடம் போய் நாங்க இவ்வளவு வேலை செய்யிறோம், வசந்தாவை எழுப்பினா எந்திரிக்கவே மாட்டேங்கிறா என்று கோள் மூட்டி விடுவோம். உடனே அவள் அப்பா சோளத்தட்டையை எடுத்துக்கொண்டு அவளை அடிக்க வந்து விடுவார்.

ஒரு தடவை அவள் அம்மாவும் அப்பாவும் சேர்ந்து அவளை அடித்துவிட்டார்கள். அவள் என்னிடம் வந்து அழுதாள். அழுது கொண்டே தான் சாகப் போவதாகச் சொன்னாள். எனக்கும் அப்போது அம்மாவிடம் அடி வாங்கி வாங்கி செத்துப் போக வேண்டும் என்றுதான் தோன்றியது. ஆனால் எப்படிச் சாவது என்று தெரியவில்லை.

பிறகு வசந்தா நாலணாவை என்னிடம் தந்துவிட்டு இந்த துட்டை நான் பொங்கலுக்காக சேர்த்து வச்சிருந்தேன்; நான் சாகப்போறேன்; அதனால இந்த துட்டை நீயே வச்சிக்கோ; வேற யாருக்கும் கொடுக்க எனக்கு மனசில்ல ஒம்மேலதான் எனக்கு பாசம் என்றாள்.

என் சேத்திக்காரி சாகப்போகிறாளே என்று அழுகையும், நாலணா கிடைத்த சந்தோசமுமாக என்ன செய்வது என்று புரியாமல் தவித்தேன். பிறகு அவளிடம் எப்படி சாவப்போறே என்று கேட்டேன். தூக்கு மாட்டி சாவப்போவதாகச் சொன்னாள். ஆனால் தூக்கு எப்படி மாட்டுவது என்று எங்கள் இருவருக்குமே தெரியவில்லை.

இதற்குள் எனக்கு வேலைக்குப் போக நேரமாகிவிட்டது. வசந்தா கொடுத்த துட்டில் அரையணா வெல்லக்கட்டியும், அரையணாவிற்கு பயறும் வாங்கித் தின்றுவிட்டு மீதித் துட்டை பாவாடையில் கோர்த்த வாறு வேலைக்குப் போய்விட்டேன். என்னிடம் அவ்வளவு துட்டு இருப்பது சந்தோசமாக இருந்தது.

காட்டில் குருதவாலிக் கருது பெறக்கிக்கொண்டு இருந்த எனக்கு கருது அறுக்கவே மனமில்லை. நினைப்பு மொத்தமும் வசந்தா மீதுதான் இருந்தது. இந்நேரத்திற்கு அவள் செத்திருப்பாள். எல்லோரும் அழுது கொண்டிருப்பார்கள். ஆனால் அவளுக்குப் பிரியமான நான் மட்டும்

போவாம வேலை செஞ்சிக்கிட்டு இருக்கேனே என்ற நினைத்துக் கொண்டே இருந்தேன்.

உச்சிப்பொழுது தாண்டியவுடன் கஞ்சி குடிப்பதற்காக வீட்டிற்கு வந்தேன். வீட்டிற்குக்கூடப் போகாமல் வசந்தாவின் வீட்டிற்கு ஓடினேன். அவள் வீடு அமைதியாக இருந்தது. என்ன இது என்று நினைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தேன். அவள் எங்கள் வீட்டிலேயே இருந்தாள்.

என்ன வசந்தா இன்னும் சாகாம இருக்கே என்று கேட்டேன். சாக மனசில்ல; அதனால நான் கொடுத்த துட்டை கொடு என்று அவள் கேட்டாள். நான் ஒரணாவிற்கு வாங்கித் தின்று விட்டதை சொல்லிவிட்டு அவளிடம் மீதித் துட்டைக் கொடுக்க அவள் வய்ய ஆரம்பித்துவிட்டாள். பிறகு சீக்கிரத்தில் மீதித் துட்டை கொடுப்பதாகச் சொன்னேன். சீக்கிரம் கொடுத்துரு என்று சொல்லிவிட்டுப் போனாள். அவள் சாகாததையும் ஒரணாவைத் திருப்பிக்கேட்டதையும் நினைத்து மறுநாள் முழுக்க அவள் கூட நான் பேசவில்லை.

எங்கள் ஊருக்கு புதிதாக ஒரு தையற்காரர் வந்திருந்தார். அப் போது ஊருக்குள் பெரியவர்கள் யாரும் அவ்வளவாக லவுக்கை தைத்துப் போடுவதில்லை. வியாழனுக்கு வியாழன் ராஜபாளையத்தில் சந்தை கூடும். அந்த சந்தைக்கு அத்தை, பெரியம்மா, சின்னம்மா என்று பத்துப் பேர் வரை கூடிக்கொண்டு பெரிய பெரிய கடாப்பொட்டிகளோடு இது பொங்க சந்த, இது ஆனி மாத்தச் சந்த என்று மாதத்துக்கு ஒரு முறை சந்தைக்குப் போவார்கள். அப்படி போய்விட்டு வரும்போது எல்லாச் சரக்குகளோடு எங்களுக்கு வேண்டிய சட்டை பாவாடை எல்லாம் எடுத்து வந்து விடுவார்கள். பச்சை, சிவப்பு, நீலமாக எடுத்து வரும் பாவாடை, சட்டையெல்லாம் ஒரே வெள்ளையில் சாயம் போய் ஒரு தினுசான கலரில் இருக்கும். ஒருமுறை 'நாடோடி மன்னன்' சட்டை என்று ஊரோடு எடுத்துப் போட்டதோடு பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

உடனே என் சேத்திக்காரி பொன்னி, யாத்த:.. எனக்கும் நாடோடி மன்னன் சட்டை வேண்டுமென்று அவள் அம்மாவிடம் அழுது அழிச் சாட்டியம் பண்ணிவிட்டாள். சரி அழுவாத எடுத்து தாரேன் என்று சமாதானப்படுத்திவிட்டு மறு சந்தைக்கு போன அவள் ஆத்தாவிற்கு நாடோடி மன்னன் என்று பெயர் சொல்லத் தெரியவில்லை. கடைக்குக் கடை போய், அய்யா 'ஓடிப்போனவன்' சட்டை இருந்தா கொடுங்க, எம் மவளுக்கு என்று கேட்டிருக்கிறாள். கடைக்காரர்கள் எல்லாம் அப்படி ஒரு சட்டயே இல்லம்மா என்று சொல்லிவிட்டார்கள். கொஞ்சம் தெரிந்த கடைக்காரரிடம் அய்யா பாத்து குடுங்க. 'ஓடிப்போனவன் சட்டய'

எடுவாமப் போனா எம்மவ கஞ்சியே குடிக்கமாண்டா என்று கெஞ்ச அவரும், நீ கேக்குத சட்ட இங்க இல்ல; உம்மவள நானு கூட்டிட்டு ஓடுனாத்தேன் உண்டு என்று சொல்லிவிட்டார். அவ்வளவுதான், பொன்னி அம்மா அன்றைக்குப் பார்த்து புதுகுறத்திமாறு வேறு வாங்கி யிருக்க, அந்த விளக்கமாற்றை எடுத்துக்கொண்டு சேலையை வரிஞ்சி கட்டியவாறு, ஏலே எடுவட்டபயலே... உம் வாய இன்னைக்கு கிழிக்காம விடமாண்டேன் என்று இன்னும் கெட்ட கெட்ட வசவு வஞ்சிகொண்டு அவரை அடிக்கப் போக கூட்டம் சேர்ந்துவிட்டதாம். ஒரு வழியாக எல்லோரும் சண்டையை விலக்கிவிட்டு பொன்னியின் ஆத்தாவை வீட்டுக்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

இப்படி சந்தைத் துணி எடுத்துப் போடுகிறவர்களின் ஊரில் தையற்காரர் வந்து இருந்தால் அவருக்கு என்ன வேலை வரும்? ஆனாலும் ஒன்றிரண்டு அக்காமார்கள் அவரிடம் சட்டை தைக்கப் போடுவார்கள். அவர் துணியை வெட்டும்போதே நாங்கள் அவர் காலடியில் பட்டுத் துணியை பெறக்க ஓடுவோம். அவர் எங்களைப் பார்த்த உடனே, வாங்க... ஓடியாங்க... இங்க துணியா வந்து குமிஞ்சி கெடக்கு, பெறக் கிட்டுப் போங்க என்று கடுகடுப்பார். பிறகு இந்த ஊருக்கு வந்த கொடுமைக்கு எம் புத்திய செருப்பால அடிக்கணும் என்று புலம்பிக் கொண்டிருப்பார்.

ஒருநாள் அவர் புதுத் துணியை வெட்டியும் வெட்டாமலும் இருக்கும்போதே நானும் பாக்கியமும் அந்தத் துணியை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தோம். அவருக்கு கோபமான கோபமில்லை. எங்களை முடுக்கிக்கொண்டே வந்ததோடு என் அம்மாவிடம் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி இழுத்துவிட்டுவிட்டார். எனக்கு அன்று சரியான அடி. பாக்கியத்திற்கும் அடி.

ஒருநாள் எனது தம்பிகள் இரண்டு பேருக்கும் அம்மா வெள்ளைத்துணி எடுத்திருந்தாள். அதைக் கொண்டுபோய் தையற் காரரிடம் கொடுத்துவிட்டு வரச் சொன்னாள். நான் பாக்கியத்திடம் சொல்ல இரண்டு பேருமாக அங்கே போனோம்.

தையற்காரர் வீட்டில் ஒருவரையும் காணோம். மிஷின் மீது மட்டும் நிறைய வெள்ளைத்துணிகளாக அடுக்கியிருந்தது. நான் பாக்கியத் திடம், அன்னைக்கு இவரு எப்படி நம்மள அடி வாங்க வச்சாரு. இப்ப நம்ம இந்த வெள்ளத்துணியில ரெண்ட எடுத்து ஒளிச்சி வச்சிருவமா என்று கேட்க அவள், நீ எடுக்காட்டி நானு எடுக்கத்தேன் போறேன்; எங்கய்யா அடிச்சது இன்னும் வலிச்சிக்கிடக்கு என்றாள். உடனே இரண்டு சட்டைத்துணிகளை எடுத்துவிட்டோம். அதை எங்கே ஒளித்துவைப்பது என்று சுற்றும்முற்றும் பார்த்தோம். சற்று தள்ளி பெரிய படப்பு இருந்தது.

அதன் அடியில் கொண்டுபோய்த் திணித்துவிட்டு பழையபடிக்கு மிஷின் முன்னால் போய் நல்லபிள்ளைகளாக நின்றுகொண்டிருந்தோம்.

ஒரு கடவு வழியாக தையற்காரர் வந்தார். எங்களையே குறுகுறு வென்று பார்த்தவர், இப்ப எதுக்கு ரெண்டு பேரும் வந்துருக்கீக என்று அதட்டலோடு கேட்டார். நானும் தம்பிக்கு சட்டை தைப்பதைச் சொல்லி துணிகளை எடுத்துக் காண்பித்தேன். உடனே அவர் உங்கள நம்ப முடியாது என்று சொல்லிவிட்டு மிஷின் மீது இருந்த துணிகளை எண்ணினார். எங்களுக்கு மனத்துக்குள் திடுக் திடுக்கென்று சத்தம் கேட்டது. இருந் தாலும் ரொம்ப ரொம்ப அப்புராணிகளாக நின்றோம். அவர் துணியை எண்ணி முடித்துவிட்டு, பாத்தியா... பாத்தியா நானு நினைச்சேன், நடந் திருச்சி! நானு எண்ணி வச்சிட்டுப் போன துணியில ரெண்டு துணியக் காணோம்; நீங்கதேன் எடுத்துருக்கணும் என்றார்.

எங்க கண்ணுக்குள்ள இருக்க கிட்ணனுக்குப் பொதுவா எடுக்கவே இல்ல என்று நாங்கள் சாதித்தோம். உடனே அவர் நானு சூடம் வாங்கி பொருத்தி வைப்பேன். நானு எடுக்கலேன்னு சூடத்த அமத்தி நீங்க சத்தியம் செய்யணும் என்றார்.

எங்களுக்கு சூடத்தை அமத்தவும் பயமாயிருந்தது. எடுத்தோம் என்று சொல்லவும் பயமாயிருந்தது. அழுகை தொண்டைக்குள் எட்டிப் பார்க்க நாங்க சூடத்த அமத்துதோம் என்று சொன்னோம். உடனே அவர் வீட்டுக்குள் போய் ஒரு சூடத்தைக் கொண்டுவந்து பொருத்திவிட்டார். அது அமரப் போகும் நேரம் எங்களை அமத்த சொன்னார். எங்களுக்கு கை நடுங்கியது. ஆனாலும் எப்படியோ நாங்க துணிய எடுக்கவே இல்லை யென்று அமந்த சூடித்தின்மீது சத்தியம் பண்ணிவிட்டோம். அவர் உடனே பொய் சத்தியம் பண்ணுனவங்களுக்கெல்லாம் ராத்திரியே வவுத்துல புத்து பொறப்பட்டு அது வாய் வழியே வெளியே வளந்துக் கிட்டே வரும். பெறவு அவுகதேன் களவாணின்னு ஊர்க்காரங்களுக் கெல்லாம் தெரிஞ்சி போவும் என்று சொல்ல நாங்கள் திடுக்கிட்டுப் போனோம்.

சட்டையை அவரிடம் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தபோது எங்களால் நடக்கவே முடியவில்லை. இதைப்பற்றி யாரிடமாவது கேட் கலாம் என்றாலும் அதற்கும் பயமாயிருந்தது. எப்போதும் துரு துரு வென்று இருப்பவள் அன்று மூலையில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்த என் அம்மா என்னடி இப்படி உக்காந்திருக்கே என்றாள். நான் ஒண்ணு மில்லை என்று சொல்ல அவள் நம்பவில்லை.

சொல்லுடி யாராச்சிம் என்னமும் சொன்னாகளா? இல்ல யார் கூடயும் சிலுவ (சண்டை) புடிச்சிட்டு வந்தயா என்று கேட்க நான் அதற்கும் இல்லையென்று தலை ஆட்டினேன்.

என்னம்மோ ஒண்ணு நடந்திருக்கு. இல்லேன்னா நீயா கையவும் காலவும் அமுக்கி வச்சிக்கிட்டு உக்காந்திருப்பே! ஆதாளி போட்டுக் கிட்டுல்ல அலைவே! இப்பதைக்கு ஒண்ணும் இல்லேன்னு மண்டய மண்டய அலைக்கே. விடிஞ்சாப்பெறவு இல்ல உன் குட்டும் நெட்டும் தெரியும். அப்ப எவளும் வீடு தேடி வரட்டும். உன்ன வச்சிக்கிடுதேன் என்று சொல்லிவிட்டுப் போனாள். நான் ரொம்ப பயந்து போனேன். அப்போதே எனக்கு வயிறு வலிக்கிற மாதிரி இருந்தது. பாக்கியத்தை தேடிப் போனேன். அவளும் கலங்கிப்போய் மூலையில் உக்கார்ந்திருந் தாள். இரண்டு பேரும் இருட்டாக இருந்த கடவுக்குள் போய் ஒருவர் வயிற்றை ஒருவர் தொட்டுப் பார்த்தோம். அது என்னமோ அன்றைக்குப் பார்த்து வயிறு பெரிதாக இருப்பதுபோல் தோன்றியது.

பாக்கியத்தின் அம்மா எனக்கு சின்னம்மாதான் வேண்டும். மிகவும் நல்லவள். அவளிடம் போய் நாங்கள் துணி திருடியதை மட்டும் சொல்லாமல் தையற்காரர் சொன்னது, சூடம் பொருத்தியது, நாங்கள் அமத்தியது எல்லாவற்றையும் சொல்லிவிட்டோம். சொல்லி முடிக்கு முன்பே பாக்கியம் அம்மா நாலைந்து பேரைத் திரட்டிக்கொண்டு தையற்காரரிடம் சண்டைக்குப் போய்விட்டாள்.

ஏலேய்... ஊர் ஊரா சீரழிஞ்ச பயலே! வெளிய வாடா. இந்த பச்ச மண்ணுகள களவு சாட்டுனதுமில்லாம சூடத்த அமத்தச் சொல்லி இதுக வவுத்துல புத்து பொறப்படுமின்னு வேற சொல்லிருக்கேன். ஒன் வவுத்தில புறப்படும்டா புத்து. அதுக பாவம்! பொழுதூர இருந்து கஞ்சியும் குடியாம தண்ணியும் குடியாம வேலை செஞ்சி கண்ணுக்குள்ள உசுர வச்சிக்கிட்டு பரிதவிச்சிக்கிட்டு வருதுக. ஏலேய் நீ களாணி... உங்காத்தா களாணி... என்று இன்னும் என்னஎன்னமோ வைது கொண்டிருந்தாள்.

நாலு ஐந்து பேர் எங்களிடம் வந்து, நெசமாத்தானா தாயீ உங்கள சூடத்த அமத்த சொன்னான் என்று எங்கள் கன்னத்தையும் உடலையும் தடவியவாறு ஆதரவோடு கேட்க நாங்கள் இவ்வளவு நேரமும் அடக்கி வைத்திருந்த அழுகையையெல்லாம் அழுது தீர்த்தோம்.

எங்கள் ஊருக்கு கிழக்கே முரப்பான் மேடு என்று ஒரு இடம் இருக்கிறது. வெறும் பொட்டல் வெளி. அந்த வழியாகத்தான் பெருமாள் தேவன்பட்டிக்குப் போக வேண்டும். போகிற வழியில் ஒரு இடத்தில் கருப்பான நீளக் கல் கிடக்கும். அதன் பக்கத்தில் உடைந்த மண் பானைச் சில்லுகளும் கிடக்கும். அந்தக் கல் இருக்கும் இடத்தில்தான் ஒரு அண்டா புதையல் இருப்பதாகவும் அதை ஒரு முனி காவல் காத்துக்கொண்டு

இருப்பதாகவும் ஊர்க்காரர்கள் சொல்வார்கள். அந்தப் புதையலை எடுக்க வேண்டுமென்றால் நிறைமாத கர்ப்பிணிப்பெண், நிறைமாதப் பசு, ஒரு கரும்பூனை இந்த மூன்றையும் காவு கொடுத்து ரத்தப்பொலியைக் காட்டினால் முனி மிகவும் சந்தோசப்பட்டு அண்டா பணத்தை பூமிக்கு வெளியே கொண்டுவந்து போட்டுவிடும் என்றும் சொல்வார்கள்.

மொட்டைமலையின் ஊரணிக்கரையில் நாங்கள் மாடு மேய்க்கும் போதெல்லாம் இந்த அண்டா பணத்தைப் பற்றியே பேசுவோம். எங்கள் ஊருக்கு துணி வெளுத்துக்கொடுக்கும் பேச்சி என்பவளும் இதைப் பற்றி அடிக்கடி எங்களிடம் பேசுவாள். அந்த ஊரணியில்தான் அவள் வெள்ளாவி போட்டு துணி துவைப்பாள். அதோடு எங்களுக்கு தலைக்கு குளிக்க கரம்பை மண்ணும் அள்ளிக்கொண்டு வருவாள். அவளிடம் நாங்கள் நன்றாகப் பழகுவோம். அவள் புருசன் சுருளியும் எங்களில் ஒருவராகத்தான் பழகுவார்.

அண்டா பணத்தைப் பற்றிப் பேசிய மறுநாள் நாங்கள் அதே ஊரணிக் கரைக்கு மாடு மேய்க்கப் போனோம். அப்போது பேச்சி வந்து ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் அந்த அண்டா பணத்தை எடுத்து விடலாம் என்றாள்.

நாங்களும், அது எப்படி? அதுக்கு வவுத்தப் புள்ளகாரி, பசு, பூன எல்லாம் வேணுமே என்றோம். அதற்கு பேச்சி புருசன் சுருளி, அண்ணன் கோபாலிடம் சொன்னார்: அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நான் தாணிப்பாறையில இருக்க சாமியார்கிட்ட கேட்டுட்டு வந்துட்டேன் அப்பச்சி. ஒண்ணுக்கு மூணு கரும்பூனயவும் ஒரு கருஞ் சேவலயும் கருங் கெடாவயும் காவு கொடுத்து ரத்தப் பொலி காட்டுனா அண்டா பணத்த கொடுத்துட்டு எங்க எங்கன்னு முனி ஓடிப்போயிரும் சாமி.

நிசமாத்தேன் நீ சொல்லுதயா? என்று கோபால் அண்ணன் கேட்க அந்த மாரியாத்தா மேல சத்தியம் சாமி என்றார். எங்களுக்கு சந்தோசமாக இருந்தது.

வரத அண்ணன் வடக்கே எங்கோ வேலைக்குப் போய்விட்டார். இப்போது கோபால் அண்ணன்தான் மாடுமேய்க்கும்போது தலைவர். இவர் பள்ளிக்கூடமே போனதில்லை.

நாங்கள் எட்டுப் பேர் இருந்தோம். ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும்; பிறகு வீட்டிலிருந்து ஒரு கூறு பருத்தியும் கொடுக்க வேண்டும் என்று பேசி முடித்தோம். ஆனால் அண்டா பணம் வெளியே வருவதை நாங்கள் பார்க்க வேண்டும் என்றோம். துணி வெளுப்பவர் நீங்கள் அந்த நேரத்துக்கு அங்கே வரக்கூடாது என்று சொல்ல, அப்ப எங்களுக்கு அண்டா பணமே வேண்டாம் என்றதும் சுருளியும் பேச்சியும் அதற்கு சம்மதித்தார்கள்.

வெள்ளிக்கிழமை காவு கொடுப்பதாகப் பேச்சு. அதனால்

வியாழக்கிழமை சந்தையில் போய் கருங்கிடா புடிக்க ரூபாய் வேண்டும் என்று சுருளி கேட்க நாங்கள் முக்காத் துட்டாக சேத்த துட்டு எல்லாத் தையும் கொடுத்து ஒரு கூறு பருத்தியையும் கொடுத்தோம்.

சேவலுக்கும் பூனைக்கும் என்ன செய்வே? என்று கேட்டதற்கு தன் சொந்தக்காரக வீட்டிலேயே அது இருக்கு என்று சுருளி சொல்லிவிட்டார்.

மறுநாள் சுருளி அண்டா பணத்தை எடுக்கும்போது போய்ப் பார்க்க வேண்டும். அங்கே போவதற்கு வீட்டில் பொய் சொல்லிவிட்டுத் தான் போக வேண்டும். என்ன பொய் சொல்லிவிட்டுப்போவது என்று யோசித்தபோது கோபால் அண்ணன் அந்தப் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொண்டார். ஊரில் அவருக்கு நல்ல மதிப்பு இருந்ததால் அவர் என்ன சொன்னாலும் ஊர்க்காரர்கள் நம்புவார்கள். அதனால் அவர் எங்களிடம் தட்டை அறுப்பு பேசி இருக்கேன், அதை அறுக்கப் போறோமின்னு உங்க வீட்டுல சொல்லிருதேன்; அவுகளும் உங்கள அறுப்புக்கு போகச் சொல்லிருவாக. நம்ம அண்டா பணத்த எடுக்கப் போவோம்; அத எடுத்த பெறவு தட்டையும்கிட்டையும் எதுக்கு அறுத்துக்கிட்டு என்றார்.

வியாழக்கிழமை இரவு. சந்தைக்குப் போன சுருளி ஆடு பிடித்துக் கொண்டு வந்து விட்டாரா என்று எல்லோரும் அவர் வீட்டிற்குப் போய் பார்த்தோம். சுருளியின் வீடு ஊரின் கிழக்குப் பக்கத்தில் ஒதுக்குப்புறமாக இருந்தது. அது அவர்களின் சொந்த வீடு இல்லை, ஊர்க்காரர்கள் அவர் களுக்காகக் கொடுத்தது.

நாங்கள் போய்ப் பார்த்தபோது பேச்சி மட்டுமே உட்கார்ந் திருந்தாள். கோபால் அண்ணன், என்ன பேச்சி... உம் புருசன் இன்னுமா ஆடு புடிச்சிட்டு வரல? என்று கேட்டார்.

என்ன அப்பச்சி! பாக்கிற ஆட்ட பத்திட்டு வந்திர முடியுமா? கருங் கிடாவில்ல நமக்கு வேணும்; அத தேடிப்பாத்து புடிச்சிட்டு வரும் என்றாள் பேச்சி.

பிறகு நாங்கள் போய் படுத்துவிட்டோம். மறுநாள் வெள்ளிக் கிழமை. விடிந்தும் விடியாததுமாய் சுருளி வீட்டிற்கு ஓடினோம். வீடு வெறிச்சோடிக் கிடந்தது. அண்ணன் கோபாலிடம் ஓடிப்போய் சொன் னோம். அவரும் வந்து பார்த்துவிட்டு அப்பவும் காவு கொடுக்க வீட்டுல இருக்க சட்டிபொட்டி எல்லாத்தையுமா பெறக்கிட்டு போவாக என்று கேட்க, எதுவும் புரியாமல் நின்றோம்.

நாங்கள் அண்டா புதையலுக்காக பேச்சிக்கு காசு கொடுத்தது தெரிந் தால் வீட்டில் கொன்னே போடுவார்கள் என்பதால் எல்லோரும் விடியக் காலையிலேயே கஞ்சியைக் குடித்துவிட்டு மாடுகளை அவசரமாய் பத்திக்கொண்டு ஊரணிக்கரைக்கு ஓடினோம். அங்கு எல்லோரும் வெள்ளாவி போட்டிருக்க பேச்சியையும் சுருளியையும் மட்டும் காணோம்.

ஒருவேளை அண்டா பணம் எடுப்பதற்காக பூசை செய்கிறார் களோ என்று முரப்பான் மேட்டுக்கு ஓடினோம். அங்கும் யாரையும் காணவில்லை. முரப்பான் மேடு வெறும் செம்மண் பொட்டலாகத் தனித்துக்கிடக்கும். பேய்க் குறளிச்செடிகள் மட்டும் குத்துக்குத்தாய் முளைத்திருக்கும். அங்கிருக்கும் முனி ஒத்தைசத்தையாய் போகும் ஆட்களை அடித்துக் கொன்றுவிடுமென்றும் சொல்வார்கள். யாருமே அந்த வழி தனித்துப் போக மாட்டார்கள். எப்போது பார்த்தாலும் மயான அமைதியாகத்தான் இருக்கும். நாங்கள் சுருளியைத் தேடிப்போன நேரம் பார்த்து சண்டுசருகுகளைச் சுருட்டியவாறு ஒரு சூறாவளிக் காற்று பம்பரமாக கிறுகிறுவென்று பேயாய்ச் சுற்றிக்கொண்டு வந்தது.

நாங்கள் அந்த சூறாவளிக்குள் சிக்கி விடக்கூடாது என்று தூ...தூ... என்று சொல்லியவாறே ஓடினோம். எங்களோடு வந்த விஜயா மட்டும் கால் தடுக்கி கீழே விழுந்து பிறகு எழுந்து ஓடிவந்தாள். சூறாவளிக் காற்று பேய் என்றும் நாம் அதிலிருந்து ஒதுங்க வேண்டுமென்றும் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

கடைசியாக சுருளியைப் பற்றி விசாரித்தபோது தெரிந்தது. இந்த ஊரு அரமனையில குடியும்வேண்டாம், இந்த ஊரு ராசாக்களுக்கு வெளுக்கவும் வேண்டாம் என்று சொல்லிவிட்டு ராவோடு ராவாக வீட்டைக் காலி பண்ணிவிட்டு அவர் போய்விட்டதாகச் சொன்னார்கள். அடுத்த ஊருக்குப் போனதும் செலவுக்குப் பணம் வேண்டும் என்பதால் எங்களை ஏச்சு துட்டு வாங்கியிருக்கிறார்.

இந்த விஷயம் தெரிந்த உடன் நாங்கள் மூச்சு விடவில்லை. பொங்கலுக்கு சேர்த்து வைத்த துட்டு எல்லாம் போய்விட்டதே என்று விசாரப்பட்டுக் கிடந்தோம். இந்தப் பாட்டில் கீழே விழுந்த விஜயா காய்ச்சலோடு படுத்துவிட்டாள்.

அவளுக்கு திருநீறு போட சாமியாடியைக் கூட்டி வந்தார்கள். அவர் சாமியாடிக்கொண்டே அவளை அதட்ட அவள் எல்லா விவரத்தை யும் சொல்லிவிட்டாள். அவ்வளவுதான், எல்லாருடைய அம்மாவும் அய்யாவும் பச்சை சோளத்தட்டையை எடுத்துக்கொண்டு கண் மூக்கு என்று இல்லாமல் எங்களை விளாசித் தள்ளினார்கள். அதோடு சின்னப் பிள்ளைகளை ஏய்த்து துட்டு வாங்கிய சுருளியையும் தேடினார்கள். சுருளியைக் காணோம். அண்டா பணம் இன்னும் அதே இடத்தில்தான் இருக்கிறது.

எங்கள் வீட்டுப் பக்கத்தில்தான் நாங்கள் இரவு நேரங்களில் விளையாடுவோம். நாலு தெருவும் சேரும் நாச்சந்தி அது. பொது இடம்.

ரொம்ப விசாலமாக இருக்கும். எங்களை மறந்து நாங்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது யாராவது என் பெயரை சத்தம் போட்டு கூப்பிட்டுவிட்டால் போதும், அடுத்த நிமிஷமே எனது அம்மா அங்கே வெள்ளையாய் பிரசன்னமாகி விடுவாள். என் அப்பா இல்லாததால் அம்மா வெள்ளைப் புடவைதான் கட்டியிருப்பாள்.

பொம்பளப் புள்ள நடுச்சாம வரைக்கும் வெளயாண்டா என்னத்த வெளங்கும், வாடி என்று கூட்டிப் போய்விடுவாள். அம்மாவை எப்படி ஏமாத்துவது என்று எனக்குத் தெரியும். அதனால் நான் அப்பாவியாக அவள் பின்னால் போவேன். முதலில் என்னை வீட்டிற்குள் நுழைய விட்டு பிறகு அவள் நுழைந்து கதவைப் பூட்டி விடுவாள். விளக்கு இல்லாததால் வீட்டிற்குள் இருட்டு கருப்பு பூத்துக் கிடக்கும். நான் படுப்பதுபோல் பாவனை காட்டிவிட்டு எழுந்து கதவைத் திறப்பேன். அம்மா என்ன என்று கேட்க ஒன்னுக்கு போயிட்டு வாரேன் என்பேன்.

இம்புட்டுத்தேரம் விளயாண்டவளுக்கு ஒன்னுக்குப் போவ நேரமில்லையாம். சரி சரி, பொக்குன்னு போய்ட்டு வந்து படு என்பாள். நானும் வெளியே வந்து கொஞ்ச நேரம் நின்றுவிட்டு பிறகு வெளியே இருந்தே கதவைப் பூட்டுவேன். உடனே என் அம்மா என்னடி வந்து படுத்துட்டயா? என்பாள். நானும் 'ம்' என்று முனங்கிவிட்டு இன்னும் கொஞ்ச நேரம் அங்கேயே நிற்பேன். எங்கள் கதவருகில் என் சேத்திக் காரர்கள் எனக்காக நிற்க என் அம்மாவிடமிருந்து பிறகு பேச்சு இருக்காது. அவ்வளவுதான். ஒரே ஓட்டமாக தெருவை நோக்கி ஓடுவோம்.

பிறகு விடிய விடிய குளிர்ந்த நிலா ஒளியில் விளையாட்டுத்தான். மூன்றாம் சாமத்திற்குப் பிறகு வெளிறிப் போய் இருக்கும் நிலாவை வழி அனுப்பி வைத்துவிட்டு வருவோம். விளையாடிய விளையாட்டை நினைத்துக்கொண்டே படுக்கையில் விழுகிறவள்தான். காலை நான்கு மணிக்கு என் அம்மா பால் கறப்பதற்காக எழுப்பினால் எழுந்திரிக்க மனசே இருக்காது. உடம்பு துவண்டு கிடக்க கண்ணில் உறக்கம் அப்பி இருக்க முனங்கியவாறு புரண்டுகொண்டே இருப்பேன். இந்தா ஒரு சோளத்தட்டய எடுத்துட்டு வாரேன் என்று சொன்னால் போதும், மறு நிமிஷமே எழுந்து ஓடுவேன்.

நானும் சரசுவும் எந்த விளையாட்டு என்றாலும் முதல் ஆளாக இருப்போம். என்னமோ இந்த உலகத்தையே ஆளப் போவதுமாதிரி ஒருவரை ஒருவர் ஜெயிப்பதிலேயே குறியாயிருப்போம். இரண்டு பேரில் யாராவது ஒருவர் ஜெயிப்பதுபோல் தெரிந்தால் விளையாட்டை நிறுத்திவிட்டு சண்டையை ஆரம்பித்து விடுவோம்.

இப்படி நாங்கள் ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு இருப்பதை பார்த்த கோபால் அண்ணன் ஒரு நாள் எங்களின் சண்டையை விலக்கியதோடு நீங்கள் இரண்டு பேரும் கெட்டிக்காரிகள்தான். ஆனா

நான் சொல்ற வேலய யார் செஞ்சுட்டு வாரீகளோ அவுகதேன் மொத கெட்டிகாரக என்றார்.

நாங்கள் அவர் மேலே விழாத குறையாக என்ன என்ன... பொக்குன்னு சொல்லுண்ணே என்று கேட்க அவரும், நீங்க ஆளுக்கொரு களையான் குஞ்சி புடிச்சிட்டு வாங்க; யாரு முதல்ல புடிச்சிட்டு வாரீகளோ அவுக கூடதேன் எல்லாரும் சேருவோம் என்று சொன்னார்.

இந்தக் களையான் சிட்டுக்குருவியிலும் பாதிதான் இருக்கும். அடர்ந்து இருக்கும் சின்ன கொழிஞ்சி செடி, தும்பைச் செடியின் அடியில் புழுதியை சிறு குழியாகக் கிளைத்துவிட்டு முட்டையிடும். நம்மால் அதைப் பிடிக்கவே முடியாது. அதன் பக்கத்தில் போகும்வரை ரொம்ப அப்புராணியாக கண்களை உருட்டியவாறு படுத்திருக்கும். பக்கத்தில் போனதும் விருட்டென்று பறந்துவிடும். வெறும் குழிதான் நமக்கு பல்லாங்குழியை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும்.

கோலமும் வர்ணமுமாய் இரண்டு முட்டைதான் இடும். குஞ்சு பொறித்த மாயத்தில் குடுகுடுவென்று எங்கேயாவது கூட்டிக்கொண்டு போய்விடும். அண்ணன் இந்த குஞ்சியைப் பிடித்து வரச் சொன்னதிலிருந்து எனக்கு அதே ஞாபகம்தான். போகும் இடங்களில் எல்லாம் அந்தக் குருவியைத் தேடிக்கொண்டிருந்தேன்.

இந்தமாதிரி குருவி பிடிப்பது, கொக்குப் பிடிப்பது என்றால் என் தம்பிக்கு கொண்டாட்டம்தான். அவனிடம் இந்த குஞ்சியைப் பற்றி சொன்னேன்.

எக்கா, உனக்கு ஒரு குஞ்சி போதுமா? நாலஞ்சு வேணுமா? ஏன்னா அய்யா குருவிப் புடிக்க போனார்ன்னா நிறய குஞ்சியப் பிடிச்சிருவாரு. அதுக்குத்தேன் கேக்கேன் என்றான்.

அவன் வாயால்தான் சவுடால் விடுவான். ஆனால் இந்த 'களையான்' குஞ்சியை நிச்சயமாக அவனால் பிடிக்க முடியாது என்று எனக்குத் தெரியும். சரி கூடக்குறைய சொல்லிவைத்தால் என்ன குறைந்தாபோகும் என்று நினைத்து நிறைய குஞ்சியைப் பிடிச்சிட்டு வா என்றேன்.

கடைசிவரை அந்த குஞ்சியைப் பிடிக்கவே முடியவில்லை. நானும் இதே சோலியாக செடிக்குச் செடி பதுங்கிப் பதுங்கிப் போனதுதான் மிச்சம். குருவியைப் பிடித்து விட்டோம் என்கிறமாதிரி நான் அதன் பக்கத்தில் போகும்வரை படுத்திருக்கும். ஆனால் இன்னும் ஒ...ரு...எ...ட்...டு என்கிறபோது விருட்டென்று பறந்துவிடும். அந்தக் குருவியால் நெடுந்தொலைவு பறக்க முடியாது. தான் இருந்த இடத்திலிருந்து கொஞ்ச தூரம் பறந்து இன்னொரு செடியின் அடியில் போய் பொத்தென்று விழுந்துவிடும். நாங்கள் ஒவ்வொருவராக பிடிக்க முயன்று முடியாமல் தம்பியும் நானுமாக குனிந்தவாறே செடிகளினூடே

அலைந்தோம். ஆனாலும் குருவியைப் பிடிக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் இருவரும் தலையோடு தலை முட்டிக்கொண்டு வலி தாங்க முடியாமல் ஒருவருடன் ஒருவர் சண்டை போட்டவாறு வீட்டை நோக்கி நடந்தோம்.

வழியில் நிறையக் கிணறுகள் இருந்தன. ஒரு கிணற்றின் கமலைக் குழியின் நெடுக தண்ணி இறைப்பவர்களின் சௌகரியத்துக்காக பூவரச மரங்கள் அடர்ந்து கிடந்தன. கிணற்றைச் சுற்றிலும் மஞ்சனத்தி மரங்களும் குறிஞ்சான் செடிகளும், கோவை, முஷ்டைக் கொடிகளும் படர்ந்து கிடந்தன. அந்தப் பசிய செடிகளினூடே சிவந்த கோவைப்பழம் கனிந்து இருக்க மரத்தைச் சுற்றிலும் தூக்கணாக் குருவிக்கூடுகள் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்தன.

தம்பி சொன்னான். அக்கா பேசாம ரெண்டு தூக்கணாங் குஞ்சிய புடிச்சிட்டு போயிருவோம். அக்கா சரசு எப்படியும் களயாங் குஞ்சியப் புடிச்சி வச்சிருப்பா. இந்தக் குஞ்சிய கொண்டு போயி அவகிட்ட வச்சிட்டு அவ வச்சிருக்க குஞ்சிய நம்ம எடுத்துட்டு வந்துருவோம்.

எனக்கும் அது நல்ல யோசனையாக இருந்தது. உடனே இரண்டு குஞ்சுகளைப் பிடித்துக்கொண்டு வந்துவிட்டோம். எங்கள் வீட்டில் அந்தக் குஞ்சிகளை வைத்தால் அம்மா பார்த்துவிடுவாள் என்று பாட்டி வீட்டில் விறகுக்கு அடியில் ஒரு ஓலைப்பெட்டியில் போட்டு மூடிவைத்து விட்டோம்.

இருட்டி விட்டது. நான் சரசு வீட்டிற்குப் போனேன். அவள் இல்லை. உடனே அத்தையிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டே அவளின் ரகசிய இடங்களில் களையான் குஞ்சி இருக்கிறதா என்று தேடினேன்.

அவர்களுக்கு ஆறேழு மாடுகள் இருந்தன. இரண்டு சோடி உழவு மாடுகள், பால் மாடுகள் என்று வரிசையாய் தொழு நிறைய மாடுகள் கட்டிக் கிடக்கும். அவர்களுக்கு பிஞ்சை வேலைக்கென்று ஆட்கள் இருந்தார்கள். அவள் அப்பா கங்கையா வேலைகளை ஏவுவாரே தவிர அவர் ஒரு வேலையும் செய்து யாருமே பார்த்ததில்லை. வெள்ளையுஞ் சள்ளையுமாய் சில்லென்று அலைவார். குதிரையில் இருக்கும் அய்யனார் சாமிபோல ஒங்குதாங்காக இருப்பார். பெரிய மீசையை இன்னும் பெரிதாகத் திருக்கிவிட்டிருப்பார். இந்த லச்சணத்தில் கையில் அரிவாள் வேறு. எப்போதும் வீடு தங்கமாட்டார். அவர் இல்லாத நேரங்களில் அவர் வளர்க்கும் நாய்தான் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு கேது கேது என்று மூச்சு வாங்கியவாறு பயங்கரமாக அலையும்.

பழக்கமில்லாத ஆட்கள் போய்விட்டாலோ யார் மீதாவது நாம் உசுக்காட்டி விட்டாலோ குறைந்தது கால்வீசைக் கறியையாவது பிடுங்காமல் வராது. மாமா பிள்ளைகளையும் பொண்டாட்டியையும் கவனிப்பதைவிட இந்த நாயைத்தான் ரொம்பவும் கவனிப்பார். தினமும் அதற்கு

பன்னிக்கறி, கோழிக்கறி என்று வாங்கி வந்து போடுவார். காலையும் மாலையும் அவர்கள் வீட்டில் நான்கு படி, ஐந்து படி பால் வரையும் கறப்பார்கள். அப்போது இதற்குத்தான் முதல் சொம்பு பாலை கறந்த நுரையோடு ஊற்றுவார்கள். இது போதாதென்று பிஸ்கட், ரொட்டி என்று டவுனில் வாங்கிவந்து போடுவார். அவர் பிள்ளைகளும் சரி, நாங்களும் சரி அதை ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டிருப்போம்.

இப்போது நான் களையான் குஞ்சியைத் தேடினேன். மாடுகளுக் கென இருந்த காடியில் ஒரு மூளையில் சரசு அந்தக் குஞ்சுகளை அடைத் திருந்தாள். அப்போது எங்கும் இருட்டுதான் பரவியிருந்தது. ராம்பு வெளிச்சம் அந்தந்த இடத்தில்தான் மஞ்சள் ஒளியைக் காட்டிக் கொண்டிருந்தது, அதுவும் மங்கலாக.

நான் குஞ்சுகளைக் கண்டுபிடித்துவிட்ட சந்தோசத்தில் எங்கள் வீட்டுக்கு ஓடிவந்தேன். தம்பியிடம் விஷயத்தைச் சொன்னேன். உடனே எங்கள் வீட்டிலிருந்த குஞ்சுகளை எடுத்துக்கொண்டு சரசு வீட்டிற்குப் போனோம்.

பாவம் அந்த அத்தை! இதையெல்லாம் கண்டுகொள்ளவே மாட்டாள். மாமா எந்த நேரத்திலும் வந்து விடுவாரே, வந்ததுமே என்ன குற்றத்தை சொல்லி அடிப்பாரோ என்ற திகிலில்தான் உறைந்திருப்பாள். எங்களைப் போன்ற சிறு பிள்ளைகள் அங்கே விளையாடிக் கொண்டிருந் தாலும் கூட அவர்களை அனுமதிக்கமாட்டாள். அத்தைக்கு ஒரு அம்மா மட்டும்தான் இருந்தாள். அண்ணன் தம்பி என்று யாரும் இல்லை. ஒருதடவை இந்த அத்தை அடி தாங்காமல் மாமாவிடம் கோபித்துக் கொண்டு அவர் அம்மா வீட்டிற்குப் போய்விட்டாள். பிள்ளைகளும் கூடவே போய்விட்டார்கள். வழக்கம்போல் இருட்டி ஒரு சாமத்திற்குப் பிறகு வீட்டிற்கு வந்த மாமா ஆட்கள் இல்லாமல் வெறிச்சோடிக் கிடக்கும் வீட்டைப் பார்த்திருக்கிறார். அவ்வளவுதான், அவருக்கு கோபம் பொறுக்க முடியவில்லை. நாலே எட்டில் தன் மாமியார் வீட்டுக்குப் போய் எல்லோரையும் அடி அடி என்று அடித்து தன் வீட்டுக்கு இழுத்து வந்தாராம். மாமியாருக்கும் அன்று பலத்த அடி. அதிலிருந்து இந்த அத்தை யார் வீட்டுக்கும் போகமாட்டாள். யாரையும் வரவழைக்க வும் மாட்டாள்.

அவர்கள் வீட்டு பின்வாசலில் நிறைய இடமிருக்கும். நாங்கள் ஓடியாடி விளையாடுவோம். கொஞ்சமாய் இருட்டிவிட்டால் போதும். அத்தை வந்து எங்களைப் போகச் சொல்லிவிடுவாள். தாயீ, உன் மாமன் பொல்லா கோவக்காரரு. இந்நேரத்துக்கு அவரு கண்ணுமண்ணு தெரியாமத்தேன் வீட்டுக்கு வருவாரு. வந்த வேகத்தில அவருக்கு தன் பிள்ளையும் தெரியாது. ஊரா பிள்ளையும் தெரியாது. இவுகள அடிக் கேன்னு உங்களையும் அடிச்சிப் போடுவாரு. பெறவு நானு இவருகிட்ட பேச்சு வாங்குனது காணாதுன்னு உங்காத்தா அய்யாகிட்ட வேற பேச்சு

வாங்கணும் என்று எங்களை கட்டாயப்படுத்தி வெளியே அனுப்பி விடுவார்.

அதனால் அந்த அத்தையைப் பற்றி எப்போதும் நாங்கள் கவலைப் பட மாட்டோம். இப்போதும் அப்படித்தான். நாங்கள் பாட்டுக்குப் போய் குஞ்சியை மாற்றி எடுத்து வந்துவிட்டோம். பிறகு இரண்டு பேரும் விளையாடுவதற்குப் போய்விட்டோம்.

கொஞ்சநேரம் கழித்து கோபால் அண்ணன் என்னையும் சரசுவையும் கூப்பிட்டு குஞ்சிகளைக் கொண்டு வரச்சொன்னபோது நான் ஆவலோடு எடுத்துக்கொண்டு ஓடினேன். தெருவிலிருந்த கல் விளக்கு வெளிச்சத்தில் என் குஞ்சியைப் பார்த்தால் என்ன ஆச்சரியம், நாங்கள் பிடித்து வந்த 'தூக்கணாங் குஞ்சிகள்'தான் இருக்கின்றன. சரசு இரண்டு 'நாடவந்தான் குஞ்சிகளை'ப் பிடித்துகொண்டு வந்திருக்கிறாள்.

அண்ணன் இரண்டு பேருடைய குஞ்சுகளையும் பார்த்துவிட்டு இது களையான் குஞ்சு இல்லைன்னு உங்களுக்கே தெரியும்; பெறவு எதுக்கு புடிச்சிட்டு வந்தீக என்று சத்தம் போட்டார். எங்களுக்கு குஞ்சு மாறிய அதிசயத்தில் பேச்சே வராமல் நின்றோம்.

வீட்டிற்கு போனபிறகு அம்மா சொன்னாள். எங்கடி போனே நீ, உன் மாமா மவ சரசு வந்து என்னத்தையோ தேடிகிட்டே இருந்தா என்று.

உடனே என் தம்பி, எக்கா நம்ம வீட்டில் வந்து அவ களாண்டுக்கிட்டு போயிருக்கா. நானு போயி அவள அடிச்சிட்டு வரட்டுமா? என்று விறைப்பாகக் கேட்டான். உடனே பக்கத்தில் இருந்த என் அம்மா என்ன விஷயம் என்று கேட்டாள். நான் பயத்தோடு மிரண்டவாறு நின்று கொண்டிருந்தேன். இப்படி குஞ்சுகளைப் பிடிப்பது தெரிந்தால் கொன்றே போடுவாள். இந்த விஷயத்தில் தம்பி சுறுசுறுப்பத்தான். என் புளிய முத்தையெல்லாம் எடுத்துட்டுப் போயிட்டா என்றான், நெஞ்சம் அழுகையான குரலில். என் அம்மாவும், சரிடா எடுத்துட்டுப் போனா டையடுக்காத புளி இருக்கு; உனக்கு றவுல்.

[redacted]போ [redacted] என்ன காரணத்

தாலோ டிப்போவை எடுத்துவிட்டு ஒரு ஆளை விட்டு பால் வாங்கிக் கொண்டு இருந்தார். பால் வாங்குவதற்கு ஒரு இளந்தாரி அண்ணன் வருவார். எல்லோர் வீட்டிலும் ராம்பு (லாந்தல்) விளக்கு பொருத்தி யிருப்பார்கள். அந்த அண்ணன் வந்தவுடன் பால் கறக்க அந்த விளக்கைப் பொருத்தி மாட்டுத் தொழுவத்தில் வைப்போம். உடனே அந்த அண்ணன் விளக்கை இங்க கொண்டாந்து வைங்க, நீங்க பாலு பீச்சிட்டு

வரதண்டியும் நானு பாட்டு புத்தகத்தப் பாத்து படிச்சிக்கிட்டு இருக்கேன் என்று சொல்வார்.

என் அம்மா விளக்கை அந்த அண்ணன் பக்கத்தில் வைத்துவிட்டு என்னிடம் வந்து, அவன் பாட்டுக்கு அப்படி பாட்டுப் படிச்சிக்கிட்டு இருக்கான்; நானு இருட்டுக்குள்ள பாலு பீய்ச்சுதேன்; நா ஒவ்வொரு மாட்ட பீச்சேல நீ ஒத்த ஒத்த சொம்பா தண்ணிய மோந்து கட்ட மண்ணு சொவரு வழியா கொடு; பால்ல ஊத்திருவோம் என்பாள்.

தொழுவை ஒட்டி ஒரு சுவர் சின்னதாக இருந்தது. அப்போது தேன்நிலவு, பாலும் பழமும், தாய் சொல்லைத் தட்டாதே என்ற படங்கள் வெளியாகி பாடல்கள் எல்லோருடைய மனத்தையும் கவர்ந்திருந்தன. இந்த அண்ணன் தன் பாட்டுக்கு, பாட்டுப் புத்தகத்தில் மெய் மறந்திருக்க இங்கு நேற்று வரை ஒரு படியாக இருந்த பால் இன்று இரண்டு படியாக அதிகரித்துக்கொண்டிருந்தது. இதைப் பற்றி நான் கணேசனிடமும் என் சேத்திக்காரிகளிடமும் சொல்ல, அவர்கள் எங்கள் வீட்டிலும் பால் கூடி விட்டது என்று சொல்லிச் சிரித்தார்கள்.

ஒருநாள் நானும் வசந்தாவும் சத்திரப்பட்டியிலிருந்து வரும்போது அந்த அண்ணன் பால் வாங்குவதற்காக சைக்கிளில் எங்களைத் தாண்டிப் போனார். உடனே நாங்கள் அவரைக் கூப்பிட்டு விஷயத்தை சொல்லி விட்டோம். அவ்வளவுதான், அவர் பால் வாங்கும் வீடுகளுக்கெல்லாம் போய், நானு உங்க மேல எம்புட்டு நம்பிக்க வச்சு பாலு வாங்குதேன்; நீங்க எங் கண்ண மறச்சி தண்ணிய ஊத்தி எந் தலயில மிளகாய அரச்சுட்டீகளே; இனிமே உங்க ஊரும் வேண்டாம்; பாலும் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். உடனே எல்லோரும் நாங்க தண்ணியே ஊத்தல; தண்ணிய ஊத்துனோமின்னு யாரு சொன்னது என்று கேட்டிருக்கிறார்கள்.

நானு ஊரச் சொன்னாலும் பேரச் சொல்லமாட்டேன்; ஆனா உங்க ஊருக்காரகதேன் சொன்னாக என்று இந்த அண்ணனும் சொல்ல எல்லோருக்கும் எங்கள் மீதுதான் சந்தேகம்.

எங்களுக்கும் மனசுக்குள் பயம்தான், விஷயம் வெளியாகி விட்டால் எங்களுக்கு குழியைத் தோண்டிவிடுவார்களே என்று. அந்த அண்ணனிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார்கள். அவர் எங்கள் பெயரை மட்டும் சொல்லாததோடு இனிமே உங்க பாலும் வேண்டா மென்று புறப்பட்டுவிட்டார்.

உடனே அம்மா, மாமா எல்லோரும் எங்களிடம் வந்து சொன்னார்கள். இதெல்லாம் உங்க வேலதேன். உங்க பேச்சக் கேட்டுக் கிட்டு அவன் பாலு வாங்க மாண்டேன்னு போறான். இங்க இருக்க வேலைப் பாட்டுல பாலக் காய்ச்சவும் கடயவும் யாருக்குத் தேரமிருக்கு. பால காச்சி வச்சா ஆட காணாமப் போவுது. கடஞ்சி வச்சா வெண்ண காணாமப் போவுது. நாங்க எங்க வேலய பாப்பமா, உங்களுக்கு காவலு

இருப்பமா? ஓடுங்க. அவன் எங்கன இருந்தாலும் கூட்டிட்டு வாங்க. இனிமே பால்ல தண்ணி ஊத்த மாட்டோம், போங்க என்று எங்களை விரட்டிவிட்டார்கள். எங்களுக்கு பெருமையாகவும் சந்தோசமாகவும் இருந்தது. ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு ஓடினோம்.

அந்த அண்ணன் எங்கேயும் போகவில்லை. பெரிய ஆலமரத் தடியில்தான் உட்கார்ந்திருந்தார். எங்களைப் பார்த்ததும் அவருக்கு சந்தோசமாகிவிட்டது. நாங்கள் அவரிடம் இனிமே யாரும் பால்ல தண்ணியே ஊத்த மாட்டாங்களாம், நீங்க வந்து பாலை வாங்குங்க என்று சொன்னோம்.

அவரும் சிரித்துக்கொண்டு சொன்னார். பால் வாங்காம நான் போனா என் முதலாளி என்ன ஏதுன்னு கேட்டு கடைசியா இந்த ஊருக்கே விசாரிக்க வந்துருவாரு. இங்க வந்தா நானு பாலு கறக்கத கவனிக்காம பாட்டு புத்தகம் படிச்சது தெரிஞ்சு போவும். அப்படி தெரிஞ்சிருச்சினா என் வேல போறதோட என்கிட்ட அவராதமும் வாங்கிருவாரு இந்த வேலய என்னால விடமுடியாது. சும்மா உங்க ஆத்தாக்கள பயமுறுத்து வோமின்னுதேன் இப்படி செஞ்சேன் என்றார். அதோடு உண்மையை ஒளிக்காமல் சொன்னதற்காக எங்களுக்கு ஆளுக்கொரு பாட்டுப் புத்தகமும் கொடுத்தார். 'போனால் போகட்டும் போடா' என்று கொஞ்ச நாள் பாடிக்கொண்டு திரிந்தோம்.

ஜ

என் அம்மாவும், வசந்தாவின் அப்பாவும் சித்தப்பா, பெரியப்பா பிள்ளைகள் என்பதால் இருவருக்கும் காடுகள் பக்கம் பக்கமாகத்தான் இருக்கும். கம்மாயோரம் இருக்கும் பிஞ்சைகளில் பூலான்முள்ளும், காரமுள் செடியும் அடர்ந்து கிடக்கும். வெள்ளாமைக் காலங்களில் இந்த வேலியோரம் பூசணி, சுரை, பீர்க்கை என்று விதையை ஊனிவிடுவார்கள். கொஞ்சநாள் போனதும் அது காயாகச் சவண்டு கிடக்கும்.

பீர்க்கங்காயும், சுரைக்காயும் முள்வேலிகளின் நடுவில் பசுமை யோடி நீள நீளமாய் நகைபோல நீண்டு கிடக்கும். அதைச் சுற்றி சுரையின் வெள்ளைப்பூக்களும், பீர்க்கையின் மஞ்சள் பூக்களும் இன்னும் பிஞ்சு விடுவதற்குத் தயாராக காம்பின் அடி கனத்து விளைந்த காய்களை வெள்ளோட்டம் பார்த்தவாறு இருக்கும். பூசணிக்காய்கள் பசுமை யினூடே வெள்ளை நாமங்களை சுற்றிலும் போட்டுக்கொண்டு பெரிய பெரிய மஞ்சள் பூக்களின் நடுவில் எங்களுக்காகக் காத்திருக்கும்.

அந்தக் காய்களைப் பார்க்கும்போது எங்களுக்கு மலைப்பாக இருக்கும். ஏனென்றால் நாங்கள்தான் அந்த காய்களைப் பிடுங்கிக் கொண்டுபோய் சத்திரப்பட்டியில் விற்கவேண்டும். தலைச் சுமையோடு

சத்திரப்பட்டிக்குள் போவதென்றால் பெரிய அச்சலாத்தி. அந்த ஊரில் அனைவரும் நெசவாளர்கள்தான். அதனால் தெரு முழுக்க நீண்ட நீண்ட பாவாகப் போட்டு அந்தப் பாவில் ஏதேதோ வேலை செய்துகொண்டு இருப்பார்கள். நாங்கள் சுமையை இறக்கி கையில் தூக்கிக்கொண்டு அதனூடே குனிந்து குனிந்து செல்லவேண்டும். அப்படி மூன்று தெரு போக வேண்டும். அதுவும் காய் சுமையை எங்களால் தனியாக இறக்கவும் முடியாது, தூக்கவும் முடியாது. இதையெல்லாம் என் அம்மாவிடம் வசந்தாவின் அய்யாவிடம் சொன்னால் அடிக்கத்தான் வருவார்கள். அதனால் நாங்கள் பாதிக்காய்களைப் பிடுங்கி கம்மாயில் இருக்கும் கருவேலங்காட்டில் ஒளித்து வைத்துவிடுவோம். மீதிக்காய்களைப் பிடுங்கி ஒரு பெட்டிக்குள் வைத்து வீட்டுக்குக் கொண்டு வருவோம்.

என்னடி, இம்புட்டுத்தானா காயீ என்பாள் என் அம்மா. நானும் ஆமாம் என்று தலையை ஆட்டுவேன்.

என்னடி அநியாயம்! நேத்து பொழுதூர பிஞ்சைக்குப் போயி பாத்தேன். காயி சலங்கையா நெருஞ்சிகட்டி கிடந்துச்சி. அஞ்சி ஆறு ரூவாயிக்கு காய வித்து அந்த துட்டுல வீட்டுக்கு வேணுங்க எண்ண புண்ணய வாங்கலாமின்னு கெம்பிதமா நினச்சிக்கிட்டு இருந்தேன். அதுக்குமுன்ன எந்த பயலுக்கோ சிறுக்கிக்கோ பேதி வந்துருச்சு பொலுக்கோ. எவன்னாலும் சரி, ராவு புடுங்கியிருக்க முடியாது. ஏன்னா நானு பிஞ்சயிலிருந்து வாரேலேயே இருட்டு கீ...ன்னு காலு தடங்கூட தெரியாம இருந்துச்சு. விடியங்காட்டி மம்மலோடதேன் களாணிப் பயக போயிருக்கணும். இப்படி களாங்கத எடுவட்ட களுதைகள ஒரு பூச்சி பொட்டு புடுங்க மாணேங்கே! இந்த வவுத்தெரிச்சலும் உண்டுமா? என்று அந்தப் பக்கம் போகிறவருகிறவர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்து அலைமோதிக் கொண்டிருப்பாள். நான் பேசாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன்.

இப்படியே கொஞ்ச நேரம் வஞ்சிவிட்டு பிறகு சொல்வாள். இந்தக் காய என்னத்த சத்திரப்பட்டிக்கு கொண்டு போவ. இத கொண்டு போறேன்னு பொழுத அடச்சிட்டு வருவே. மாடு பட்டினியாக் கிடக்கும். காய களாண்ட முண்டைக களமா போவட்டும்! நீ இந்தக் காயக் கொண்டு போயி சின்னம்மா வீட்டுல, அக்கா வீட்டுல போயி எங்கம்மா கொடுத்தா, வெஞ்ஞனம் வச்சிக்கிடுவீகளாமின்னு கொடுத்துட்டு வா என்று அனுப்புவாள்.

எனக்கு சந்தோசம் தாங்காது. எல்லாக் காய்களையும் அள்ளிக் கொண்டு ஓடுவேன். வசந்தா வீட்டிலும் இதே கதைதான்.

பிறகு இரண்டு பேரும் சாவகாசமாக கணேசனுடன் தெற்கு கம்மாயிக்கு மாடு மேய்க்கப் போவோம். நாங்கள் ஒளித்து

வைத்திருக்கும் காய்களை கணேசன் சின்னக் கத்தியால் வெட்டி வெட்டி மாடுகளுக்குப் போட அவை புல் மேய்வதை விட்டுவிட்டு இதைத் தின்றுகொண்டிருக்கும்.

நானும் எனது மாமா பிள்ளைகளும் எப்போதும் ஒன்றுக்குள் ஒன்றாக சண்டை போட்டுக்கொண்டும் சமாதானமாகிக் கொண்டும்தான் இருப்போம். வேணு எனக்கு மாமா மகன்தான். என்னைவிட இளையவன். அவன் ஒரு நாள் எங்களிடம் வந்து சொன்னான்.

என் சித்தப்பா எங்க வீட்டுக்கு வந்து எங்க ஆத்தாள கண்டமானக்கி வஞ்சி சண்ட போட்டுட்டுப் போயிட்டாரு. இப்ப எங்க ஆத்தா அழுதுக்கிட்டு இருக்கா. நானு அவர்கிட்டப் போயி சண்ட போடப்போறேன். நீங்க எங்கூட தொணைக்கு வாங்க.

நானும் என் தம்பியும் சேர்ந்துகொண்டு உன் சித்தப்பா பெரிய ஆளு. நீ சின்னப் பையன். அவரு உன்னயும் அடிச்சிப் போட்டா என்ன செய்வே? என்று கேட்டதும் அவன் அண்ணாகயிற்றில் கோத்திருந்த சிறிய கத்தியை எடுத்துக்காட்டினான். அவரு என்ன அடிக்க வந்தா இந்தா இந்தக் கத்திய வச்சி அவரு வவுத்துல ஒரே குத்து குத்திருவேன் என்றான்.

எங்களுக்கு ஆச்சரியமாய் இருந்தது. இம்புட்டுக்காணு பய அவ்வளவு பெரிய ஆள குத்திருவேன்னு சொல்லுதானே என்று நாங்கள் சொல்லிக் கொண்டிருந்தபோது வேணு, நீங்க அவர ஒண்ணும் செய்ய வேண்டாம்; எனக்கு தொணயா மட்டும் வந்து நில்லுங்க என்றான்.

இந்த விஷயம் எனக்கு சந்தோசத்தை கொடுத்தது. வேணு அவன் சித்தப்பாவிடம் சண்டை போடுவதைப் பார்க்க ஆசையாய் இருந்தது.

உடனே நான், சரி நாங்க வாரோம்; ஆனா மாடு மேய்க்க போவணுமில்ல! எப்படி உங்கூட வாரது என்று கேட்டேன்.

நீங்க மாட்டப் பத்திட்டு வாங்க. நானும் உங்க கூட வாரேன். எல்லாரும் மேய்க்கித எடத்தில மாட்டக் கொண்டி விட்டுருவோம். பெறவு அவுககிட்ட சத்தோடம் எங்க மாட்டப் பாத்துக்கோங்க. நாங்க சத்திரப்பட்டிக்குப் போயி உங்களுக்கு நிலக்கடல, சவ்வுமிட்டாய் வாங்கிட்டு வாரோமின்னு சொல்லுங்க. அவுக ஆட்டுமின்னுருவாக. அந்தமான நீங்க எங்கூட வாங்க, நானு சித்தப்பாவ குத்திட்டு வரும்போது எல்லாம் வாங்கிட்டு வந்துருவோம். அதுக்குத்தேன் இந்த ஒரணா வச்சிருக்கேன் என்று நாலு முக்காத் துட்டைக் காட்டினான்.

எங்கள் ஊரில் கடைகள் இல்லையாதலால் வறுத்த நிலக்கடலை, சவ்வுமிட்டாய் இதற்கெல்லாம் ரொம்பவும் ஆசைப்படுவோம்.

அதனால் ரொம்ப சந்தோசமாக இதற்கு ஒத்துக்கொண்டோம். மாட்டைப் பத்திக்கொண்டு மொட்டைமலைக்குப் போனோம். கூட மேய்க்கும் பிள்ளைகளிடம், எங்க மாட்டப் பாத்துக்கோங்க; நாங்க சத்திரப்பட்டியில போயி திம்பண்டம் வாங்கிட்டு வாரோம் என்று சொன்னதும் அவர்களுக்கு இன்னும் சந்தோசம்.

சத்திரப்பட்டியில் இருந்த தறிமில்லில்தான் வேணுவின் சித்தப்பா வேலை பார்த்துக்கொண்டிருந்தார். போகும்போதே வேணு பெரிய, பெரிய கற்களைப் பெறக்கி தன் டவுசர் பைக்குள் போட்டான். எதுக்கு கல்லப் பெறக்கிப் போடுத என்று நான் கேட்க அவனும் எங்க சித்தப்பாவ அடிக்க முடியாட்டி இந்தக் கல்லக் கொண்டி எறிஞ்சி அவரு மண்டய உடைக்கப்போறேன்! நீங்களும் கல்லப் பெறக்கிட்டு வந்து எறிங்க என்றான். சரி என்று நான் மடி நிறைய கல்லைப் பெறக்கி வைத்துக் கொள்ள தம்பி டவுசர் பையை கல்லால் நிரப்பிக்கொண்டான். மூன்று பேரும் போய் தறிமில்லுக்கு சற்றுத் தள்ளி இருந்த ஒரு வாவராச்சி மரத்தடியில் நின்றுகொண்டோம். வேணுவிடம், நீ மில்லுக்குள்ள போயி அவரக் குத்திட்டு வந்துரு என்றான் ராஜா.

நான் உள்ள போயி குத்துனா என்ன எல்லாரும் புடிச்சிருவாக. அவரு மத்தியானம் சாப்புடுதுக்காக வெளிய வருவாரு. அப்ப குத்திட்டு ஓட்டம் புடிச்சிரலாம். அவரால என்னப் புடிக்க முடியாது என்றான்.

எங்களுக்கு அதுவும் சரிதான் என்று தோன்றியது. ரொம்ப நேரம் அங்கேயே நின்றுகொண்டிருந்தோம். யார் யாரோ மில்லுக்கு வந்து போய்க்கொண்டு இருந்தார்களே தவிர வேணுவின் சித்தப்பாவைக் காணோம்.

பொழுது மேற்கில் திரும்ப எங்களின் நிழல் கிழக்குத் திக்கமாக நீண்டுகொண்டிருந்தது. எனக்குப் பயம் வந்துவிட்டது. மாட்டை மொட்டைமலையில் அடுத்தவர்களின் பொறுப்பில் விட்டுவிட்டு இப்படி சத்திரப்பட்டிக்கு வந்தது தெரிந்தால் அம்மா கொன்றே போடுவாள் என்று நினைத்தேன்.

வேணு, உன் சித்தப்பாவயும் காணோம் ஒண்ணும் காணோம். எங்க மாடு வேற மொட்ட மல கிட்ட மேஞ்சிக்கிட்டு இருக்கு. தேரமும் ரொம்ப ஆயிருச்சி. நாங்க போறோம் என்றேன்.

இன்னும் கொஞ்ச நேரம் நில்லுங்க, பாத்துட்டுப் போயிருவோம் என்றான்.

பிறகும் கொஞ்சநேரம் நின்றோம். அவர் வரவே இல்லை.

வேணு, மில்லுக்கு முன்னால நிக்கித அந்த ஆளுகிட்டப் போயி உங்க சித்தப்பா எப்ப வெளிய வருவான்னு கேளு, அவன் கரைட்டா சொல்லிருவான் என்றேன். அவன் எங்களையும் கூட்டிக்கொண்டுதான்

போனான். நாங்கள் போய் அந்த ஆளிடம் கேட்டபோது அவரு வேலைக்கு வல்லயே, நேத்தே லீவு கேட்டுட்டுப் போயிட்டாரு என்று சொல்லிவிட்டார். வேணுவிற்கு முகம் தொங்கிவிட்டது. எனக்கு பயம் பிடித்துக்கொண்டது. யாரும் எதுவும் பேசாமல் விறுவிறுவென்று மாடு மேய்க்கும் இடத்துக்கு வந்தோம். அங்கே ஒரு மாடு கூட இல்லை. வேணு ஒரே ஓட்டமாய் ஊரைப் பாக்க ஓடிவிட்டான். தம்பியும் அவனைத் தொடர்ந்து ஓட நான் மட்டும் நின்றேன்.

வெயில் சுற்றிலும் தகித்துக்கொண்டிருந்தது. அது போதாதென்று தலைவிரிந்து கிடக்கும் கத்தாழைகளிலும் பாழடைத்து பூத்து இருந்த எருக்கலையிலும் இருந்த வெக்கையும் சேர்ந்து தகித்தது. ஊருக்குள் நுழையவே எனக்கு பயமாய் இருந்தது. ஊர் எப்போதோ மறைந்து விட்டது. அதற்குப் பதில் என் அம்மா முகம்தான் அனல் பொறிந்தவாறு என் கண்களுக்கு எதிரே தெரிய நான் மனத்தை திடப்படுத்திக்கொண்டு ஊரை நோக்கி ஓடினேன்.

வாசலில் தம்பி கலங்கிப்போய் நின்றிருக்க அவன் முன்னால் அம்மா பச்சை சோளத்தட்டையை ஓங்கியவாறு அதட்ட அவன் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான். அவனுக்கு முன்னால் கற்கள் சிதறிக் கிடந்தன. அப்போதுதான் என் மடியிலிருந்த கற்களின் ஞாபகம் எனக்கு வந்தது. எங்களுக்கு இருந்த அவசரத்திலும் பயத்திலும் பெறக்கி வைத் திருந்த கற்களைக் கீழே போட மறந்துவிட்டோம். இப்போது நானும் என் மடியிலிருந்த கற்களை அவள் முன்னால் போட்டேன்.

அம்மாவின் பார்வை இப்போது அனல் கொழுந்தாக என் பக்கம் திரும்பியது. எதுக்காவடி ரெண்டு பேரும் இம்புட்டு கல்ல பெறக்கி வச்சிருக்கீக? என்றாள்.

நான் தம்பியைப் பார்த்தேன், அவன் இந்த கேள்விக்கு என்ன பதில் சொன்னான் என்று தெரிந்தால் அதே பதிலை நானும் சொல்லித் தப்பிக் கலாமென்று. ஆனால் அவன் எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்தான்.

மீண்டும் அம்மாவின் அதட்டல் பெரியதாய்க் கேட்டது. சொல்லுடி, எதுக்காவ இம்புட்டு கல்ல பெறக்குனீக?

மாட்ட பத்தத்தேன்!

மாட்ட எந்திரிச்சிப் போயி பத்த முடியாதா உனக்கு?

கால்ல முள்ளு தைச்சிருச்சி. ஓடமுடியல!

சத்திரப்பட்டிக்கு மட்டும் போவ முடியுமாக்கும்?

போயிட்டு வரும்போது தான முள்ளு தைச்சிச்சு. அதேன் ஓட முடியாம பய்ய பய்ய நடந்து வந்தேன். அதுக்குள்ள எல்லாரும் மாட்டப் பத்திட்டு வந்துட்டாக.

இம்புட்டு பொய் பேச எங்க கத்துக்கிட்ட? என்று அவள் வழக்கம்போல் அடிக்க சோளத்தட்டை நார்நாராய்ப் பிய்ந்தது.

ஒருமுறை நானும் கணேசனும் மாடு மேய்த்துக்கொண்டிருந்த போது எங்களை அடுத்து இருந்து புதருக்குள்ளிருந்து சரசரவென்று சத்தம் கேட்டது. என்ன அது என்று உற்றுப் பார்த்தால் முரட்டு நல்ல பாம்பு. அது உடம்பைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு ஓடைக்குள் இறங்க நாங்கள் சத்தக்காடு போட்டோம். எங்கள் சத்தத்தைக் கேட்டு பக்கத்துப் பிஞ்சையில் வேலை செய்கிறவர்கள் எல்லாம் என்ன என்ன என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்தார்கள். பாம்பைக் காட்டியதும் ஆள் ஆளுக்கு கம்பை எடுத்து வந்து அடித்துக் கொன்றுவிட்டார்கள். முரட்டுப் பாம்பு. ஒரு ஆள் உயரம் இருக்கும். ராக்கன் சீயான் சொன்னார். இது கோடி நல்ல பாம்பு. இதை இப்படியே வேலிக்காட்டுல கொன்னு போட்டமின்னா அது நமக்கு நல்லதில்ல. பெரிய குழியாத் தோண்டி அதுல இந்த பாம்ப போட்டு ஒரு செறங்க பால ஊத்தி பொதைக்கணும் என்றவர் எங்கிட்டும் கெடைக நின்னுச்சின்னா நானு போயி இம்புட்டு பாலு பீச்சிட்டு வாரேன் என்றார். உடனே கணேசன், நான் என் மாட்டுல பால் பீச்சி, குழி தோண்டி புதைச்சிருதேன்; நீங்க போய் வேலையச் செய்யுங்க என்று சொல்லிவிட்டான்.

அவர்கள் போனபிறகு நாங்கள் அந்த பாம்பை இழுத்துக்கொண்டு நடுச்சாலைக்கு வந்தோம். பாம்பு போவதுபோல் அதை வழியில் படுக்க வைத்து கொஞ்சம் மண்ணைக் குவித்து தலையை உயரமாக்கி வைத்து விட்டு மறைவாக வந்து என்ன நடக்கிறது என்று பார்த்தோம்.

தூரத்தில் நாலைந்து பெண்கள் புல்லுக்கட்டுச் சுமையோடு வந்து கொண்டிருந்தார்கள். முதலில் வந்த பெண் இந்த பாம்பைப் பார்த்தவுடன் புல்லுக்கட்டைக் கீழே போட்டுவிட்டு, அய்யோ பாம்பு... ஓடியாங்க, ஓடியாங்க... என்று அலறிக்கொண்டே ஓட மற்றவர்களும் அப்படியே சுமையைப் போட்டுவிட்டு அலறியவாறு ஓடினார்கள். உடனே நாங்கள் மறைவிலிருந்து ஓடிவந்து எங்கே பாம்பு என்று கேட்டோம். அவர்களும் எங்களுக்கு காண்பிக்க, மாடு மேய்க்கும் கம்போடு அதன் அருகில் ஓடிப்போய் இரண்டு பேரும் மாற்றி மாற்றி அடித்தோம்.

நாங்கள் ரொம்ப உற்சாகமாய் பாம்பை அடிக்கும்போதே அவர்களுக்கு இது எங்களுடைய விளையாட்டு என்று தெரிந்துவிட்டது. அவர்களுக்கு வந்த கோபம் இந்த மட்டுமில்லை. எங்களை அடிக்க விரட்டிக்கொண்டு வந்தார்கள். நாங்கள் அம்புடுவோமா! ஒரே ஓட்டம்தான். அவர்கள் பக்கத்து ஊர்க்காரர்கள்தான். எங்களையார், எவர் என்று விசாரித்து வீட்டில் போய் சொல்லிவிட்டார்கள். நான் மாடு

மேய்த்துவிட்டு வீட்டுக்குப்போகும்போது என் அம்மா கம்பை கையில் வைத்துக்கொண்டு நின்றாள்.

தினமும் என்னாலும் என் மூத்த தம்பி ராஜாவாலும் ஏதாவது ஒரு புகார் என் அம்மாவிடம் வராமல் இருக்காது! அப்படி வரும் போதெல் லாம் இவள் கம்பும் கையுமாக நிற்பாள். எங்களைக் கண்டதும் அடிக்க வருவாள். என் தம்பி ஓடியே விடுவான். நான் எனது பாட்டி வீட்டில் போய் இருந்து கொள்வேன். இந்தப் பாட்டி என் அக்கா கணவரின் அம்மா. ஒரே வளைவுக்குள் தெற்குப் பாத்து எங்கள் வீடும், வடக்குப் பாத்து அவர்கள் வீடும் இருக்கும். அவர்கள் தெற்கு வழியாய் நடக்க வேண்டும். நாங்கள் வடக்கு வழியாய் நடக்க வேண்டும். இருவருக்கும் பொதுவாக பெரிய வாசல். பாட்டி வீட்டின் முன்னால் நீளமான திண்ணை இருக்கும்.

பாட்டிக்கு என் அம்மாவைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது. அதனால் என் அம்மா எங்கள் வாசலை விட்டு ஒரு அடி தள்ளி பாட்டி வாசலில் கால் வைத்துவிட்டால் போதும், ஏண்டி சக்களத்தி என் வாசலில் கால் வைக்கிற என்று வரிஞ்சி கட்டிக்கொண்டு பாட்டி சண்டைக்குப் வருவாள். என் அம்மா எங்களைத்தான் அடித்து வைவாளே தவிர்த்து ஊருக்குள் யாரிடமும் சண்டைக்குப் போகமாட்டாள். யாராவது சண்டைக்கு வந்தாலும் எல்லாம் இந்த சனியன்களால எனக்கு இந்த இம்சு என்று சொல்லிக்கொண்டு வீட்டிற்கு வந்துவிடுவாள்.

நான் பாட்டியின் திண்ணைக்கு வந்ததும் என் அம்மா இப்ப இங்க வாரயா, நான் அங்க வரட்டுமா? என்று கேட்கும் முன்னே பாட்டி, அடியே இங்க வா, வந்து எம் பேத்தி மேல கைய வையி; உன் கைய ஒடிச்சி அடுப்பில வச்சிருதேன் என்று எனக்கு முன்னால் நிற்பாள்.

இப்படி பாட்டி என் அம்மாவிடம் சண்டைக்குப் போவதைப் பார்க்கையில் எனக்கு சந்தோசமாகவும் வசதியாகவும் இருக்கும். கொஞ்ச நேரம் கூப்பிட்டுப் பார்த்துவிட்டு, வீட்டுக்கு வா அப்ப உன்ன சொல்லு தேன் என்று அதட்டிவிட்டுப் போய்விடுவாள். நான் அப்படியே படுத்துத் தூங்கி விடுவேன். பாட்டி என்னை சாப்பிடச் சொல்லிக் கெஞ்சுவாள். என்னதான் பசி என்றாலும் ஆசை என்றாலும் அடுத்த வீட்டில் சாப்பிடு வதும் துட்டு வாங்குவதும் எங்களுக்குப் பழக்கமில்லை.

பாட்டி வீட்டுத் திண்ணையிலேயே தூங்கிவிட்டு விழித்துப் பார்த்தால் நடுச்சாமம் ஆகியிருக்கும். கணேசன், வசந்தா எங்கள் வீட்டு முற்றத்தில் படுத்திருப்பார்கள். நான் அவர்களைத் தாண்டிக்கொண்டு போவேன். எங்கள் அடுப்படி வீட்டுக்கு எப்போதும் தாழ்பாள் கிடை யாது. வெறும் கதவைத்தான் அடைத்து வைத்திருப்போம். நான் அந்தக் கதவை அப்படியே தூக்கித் தள்ளி வைத்துவிட்டு கைமெனாவாகவே சோற்றை வைத்து சாப்பிட்டு விடுவேன். அதே மாதிரி விடியுமுன்னே

எழுந்து சாப்பிட்டுவிட்டு வேலையெல்லாம் முடித்துவிட்டு புல்லுக்குப் போய்விடுவேன்.

புல்லுக்கட்டு கொண்டுவரும்போது எட்டு மணிக்கு மேல் ஆகிவிடும். நான் வரும்போது என் அம்மா இரண்டு மூன்று பேரோடு பேசிக்கொண்டிருப்பாள். என்னைக் கண்டதும், அடியே புல்லை போட்டுட்டு இப்பனாச்சிலும் சாப்பிடு என்பாள். எனக்கு சோறு வேண்டாம் ஒண்ணும் வேண்டாம் போ என்று சொல்லிவிட்டு மாடு மேய்க்கவோ காட்டு வேலைக்கோ புறப்பட்டு விடுவேன்.

அங்கே இருப்பவர்களிடம் என் அம்மா சொல்வாள், ராவு இவள வஞ்சேன்; அந்தமான சாப்பிடாம என் பெரியாத்தா வீட்டுல போயி படுத்துக்கிட்டா; விடியமின்ன எந்திரிச்சி சாப்பிடல; இப்பவும் பாரு சாப்பிட மாணேங்கா; கொல பட்டினியா அலையுதா!

வளருத புள்ள இப்படி வெறும் வவுத்தோட வேல செஞ்சா விளங்குமா? நீயும் இம்புட்டு வேல செய்தவள கண்ணுல காங்க விடாம கரிச்சிக்கொட்டுத! பிறவென்னத்த சாப்பிடுவா? அப்படியே சாப்பிட்டாலும் அது உடம்புக்குள்ளதேன் சேருமா? என்பார்கள் அவர்கள். எனக்கு சிரிப்பும் அழுகையுமாய் வரும்.

எங்கள் ஊர் பெண்களுக்கெல்லாம் தலைச்சுமை எடுத்து, எடுத்து தலையில் இருக்கும் முடியெல்லாம் கட்டையும் குத்தியுமாக வளராமல் பறிந்துபோய் கிடக்கும். ஆனால் பெரியவர்கள் இப்படி முடிக்கு மொசலு ரத்தத்த தேய்ச்சா போதும், முடி கருகருன்னு வளந்து மொளிங்கால தொட்டுரும் என்று சொல்வார்கள். நாங்கள் மாடுகளைப் பத்திக் கொண்டு போய் ஓடைகளிலும் தாவுகளிலும் விட்டுவிட்டு புதர் புதராக முயல்களைத் தேடி அலைவோம். ஒரு முயல் எங்கள் கண்ணில் பட்டு விட்டால் போதும், ஆண்கள் அதை விரட்டியவாறு ஓட நாங்கள் அதற்கு மிச்சமாக ஓடுவோம். ஓடும்போதே எங்கள் முடி தரையைத் தொடுவது போல் மனசுக்குள் ஒரு எண்ணம் தோன்ற எங்கள் ஓட்டம் இன்னும் நாலுகால் பாய்ச்சலாகும்.

நான்கு ஐந்து முயல்கள் தப்பிவிடும். கல்லெறியில் சிக்கி கொண்ட ஒரு முயலை அறுத்து அதன் ரத்தத்தை ஒரு பெரிய துணி முழுக்க நனைத்துக் காயவைப்போம். பிறகு அந்தத் துணியை ஆளுக்கு கொஞ்சமாய் கிழித்துக் கொடுப்பார்கள். அதைக் கொண்டுபோய் எண்ணெய்ச் சீசாவில் போட்டு வைத்துவிட்டு எண்ணெய் தேய்க்கும் போதெல்லாம் முடியை ஒருவருக்கொருவர் அளந்து பார்ப்போம். 'செல்லப்பிள்ளைக்கு முடி செவியை விட்டு இறங்காது' என்பதுபோல் எங்கள் தலைமுடி

எப்போதும்போல் கட்டையாக பறிந்து போய்தான் கிடக்கும்.

யாராவது ஒருவர் பச்சைப் பாம்பை அடித்துவிட்டால் அதை அடித்த ரக்குலேயே போட்டுவிட்டு வரமாட்டார்கள். அதை ஊருக்குள் கொண்டு வருவதோடு சின்னப்பிள்ளைகளை விட்டு பாம்பு அடித்த விஷயத்தை ஊருக்குள் தெருவுக்கு தெரு சொல்லிவிடுவார்கள். சின்னப் பிள்ளைகள் விஷயத்தை சொல்லிவிட்டு அங்கிட்டுப் போவதுதான் தாமதம், பொம்பளைகள் எல்லாம் மந்தையில் கூடிவிடுவார்கள். அடி பட்ட பாம்பு மந்தையில் இருக்கும் வேப்பமரத்தின் தாழ்ந்த கொப்பில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். எல்லாப் பெண்களும் அதை உருவிவிட்டு வருவார்கள். அப்படிச் செய்தால் அவர்கள் வைக்கும் வெஞ்ஞனம் நன்றாக இருக்குமாம்.

மறுநாள் வழக்கம்போல் முற்றங்களிலும் வாசல்களிலும் கூட்டாஞ்சோறு சாப்பிடும்போது ஒருவருக்கொருவர், ஏவளே... என்றோ, அக்கா, சின்னாத்தா என்றோ கூப்பிட்டுக்கொண்டு இந்தா இந்த வெஞ்ஞனத்தை இம்புட்டு தின்னுபாரு. இத்தனைக்கு நானு வேவவச்சிக் கூட ஊத்தல (தாளிப்பு இல்லாதது), வெறுமே வெங்காயமும் மொளாயுந் தேன் போட்டு இத்னீ விளக்கெண்ணய விட்டு வதக்குனேன் என்று கொடுப்பார்கள். .

அவர்களும் தின்றுவிட்டு, அடியாத்தா நீ வச்ச வெஞ்சனம் எப்படித் தேன் இருக்கு! எட்டு மணமணக்கு! எட்டுண்டார் கைமணக்கு, இம்புட்டு காணம் வெஞ்சனத்த எடுத்து நாக்குல இளுவிகிட்டு ஒரு கும்பா சோத்த தின்னுரலாம் பொலுக்கோ என்று சொல்வார்கள்.

நேத்து அண்ணன் வெள்ளேப்பன் அடிச்சிட்டு வந்த பச்சப்பாம்ப நாலஞ்சி தரக்கா உருவுனேல்ல. அதேன் நானு வச்ச வெஞ்ஞனம் நல்லா இருக்கு! என்று இவர்கள் சொல்வார்கள்.

நானு நேத்துப் பாக்க கடக்க வேலைக்குப் போயி தொலஞ் சிட்டேன். யாராச்சிலும் எட்டி ஒரு வாத்த சொல்லியிருந்தா வேல கெடந் தாலும் கெடக்கின்னு ஓடியாந்திருப்பேன் என்று பாம்பை உருவுவதற்கு வாய்ப்பு இல்லாதவர்கள் விசாரத்தோடு பெருமூச்சு விடுவார்கள். எங்களுக்கு வெஞ்ஞனம் எப்போதும் போலத்தான் இருக்கும்.

மீனாட்சிக்கு அண்டியும் சவலையுமாக ஏழு எட்டுப் பிள்ளைகள். வீடு எப்போதும் கசகசவென்று அழுகையும், சிணுங்கலுமாகத்தான் இருக்கும். விடிந்தும் விடியாமல் மீனாட்சியும் அவள் புருசனும் அவதி தொவதியாக காட்டுக்கு ஓடிவிடுவார்கள். மூத்த பெண்ணாகப் பிறந்து விட்ட பத்மாதான் அத்தனை பிள்ளைகளையும் பார்த்துக்கொள்ள வேண்டும். நடக்கமுடியாமல் நகண்டுகொண்டிருக்கும் அண்டித்தம்பி யையும் கவனித்து, பிறந்து வருசம் திகையாமலிருக்கும் சவலைப்

புள்ளையையும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஒருநாள் ரொம்பவும் இருட்டிவிட்டது. இன்னும் அவள் ஆத்தாவும் அய்யாவும் காட்டிலிருந்து வரவில்லை. பத்மா புகையும் அடுப்பில் மன்றாடிக் கொண்டிருந்தாள். சின்ன கை விளக்கு ஒரு ஓரமாக இருந்தது. அடுப்பைச் சுற்றி இருந்த பெரிய பெரிய பானைகள் அந்த வெளிச்சத்தை மறைத்துக்கொண்டிருந்தன. பத்மா சோறு ஆக்கிவிட்டாள். சீனியவரக்கா வெஞ்ஞனமும் வெந்துவிட்டது. கொஞ்சம் வேகவைத்து தாளித்து ஊத்திவிட்டால்போதும். வெஞ்சனச் சட்டியை எடுத்து சோத்து சட்டிப் பக்கத்தில் வைத்தாள். கரண்டியில் எண்ணெயை ஊற்றிக் காய வைக்கும்போது கடைசி இரண்டு பிள்ளைக்கு முந்தியவன் எனக்கு வயிறு பசிக்கு, வயிறு பசிக்கு என்று ஆலாய்ப் பறக்க... பத்மா, சத்த இருடா இந்தா எண்ண காஞ்சிருச்சி, கடுவப் போடுதேன் என்று சொல்லிக் கொண்டே கடுகைப் போட்டாள். ஆனால் தம்பிக்காரனுக்குப் பொறுமை இல்லை. அகப்பையை எடுத்து அவனே சோற்றை மோந்துபோட்டுக் கொண்டிருக்க பத்மா தாளித்த கரண்டியை எடுத்தாள். படபடத்தவாறு எரிந்த விளக்கின் வெளிச்சத்தில் எதுவும் சரியாகத் தெரியவில்லை. சோற்றுப்பானை பக்கத்தில் தானே வெஞ்ஞனச்சட்டி இருந்தது என்ற நினைப்போடு கை மெனாவாக தாளித்ததை ஊற்றிவிட்டாள். உடனே வெஞ்ஞனத்தை மறைத்தவாறு சோறு வைத்துக்கொண்டிருந்த அவள் தம்பி துடியாய்த் துடித்து அலறினான். பாவம் பத்மா! அரை வெளிச் சத்திலும், தம்பி படுத்திய பாட்டிலும் அவசரத்துடன் தம்பி முதுகிலேயே தாளித்து ஊத்திவிட்டாள்.

❧

சித்திரைப் பிறப்பை விசேஷமாகக் கொண்டாடுவார்கள். வீட்டில் இருக்கும் நகைகளையெல்லாம் எடுத்துப் போட்டுக்கொண்டு அழகு பார்ப்பார்கள். புதுத்துணி உடுத்துவார்கள். அன்றைக்கு யார் வேண்டு மானாலும் எந்தக் கோயிலுக்கும் போகலாம். சித்திரைப் பிறப்புக்கு முதல் நாள் வசந்தா தண்ணீர் பாய்ச்சப் போனாள். அப்போது அவளுக்கு தூக்கமாக வந்திருக்கிறது. ஒரு நிறை முழுக்க வெட்டி விட்டு விட்டு பேசாமல் படுத்துவிட்டாள். அன்று அவள் அய்யா இறைக்கவில்லை. அவர் அடிக்கடி வெளியே போய்விடுவார். கூலி ஆள் இறைத் திருக்கிறார்.

தண்ணீர் ஒரு நிறை முழுக்கப் பாய்ந்து தத்தளித்து வரப்பு சின்னதாக இருந்ததால் வெளியேறி அடுத்தவர் பிஞ்சைக்குப் போய்விட்டது. அங்கும் நாலு பாத்தி பாய்ந்துவிட்டது. அந்தப் பக்கமாக வந்தவர் ஒருவர் அதைப் பார்த்துவிட்டு இறைப்பவரிடம் சொல்ல அவர் வந்து தண்ணீரை

அடைத்துவிட்டு வசந்தாவை எழுப்பியிருக்கிறார். அவளுக்கு பயம் வந்துவிட்டது.

நானும் ஒரு தப்பு செய்துவிட்டேன். கிணற்றுக்கு உள்ளே கிணற்றின் இரண்டு பக்கமும் தொட்டுக்கொண்டிருக்கிற மாதிரி ஒரு நீண்ட பட்டியல் கல்லைப் போட்டிருப்பார்கள். கிணற்றுச் சுவரில் ஒரு பக்கம் மொட்டையாக இருக்கும். அந்த வழியாக இறங்கி அந்தப் பட்டியல் கல்லில் குடத்தை வைத்துவிட்டு தண்ணீரை இறைத்து ஊற்ற வேண்டும். இந்த மாதிரி தண்ணீர் இறைப்பதை நினைத்தாலே பயமாக இருக்கும்.

கிணற்றுக்குள் இறங்கும்போதோ பட்டியல் கல்லில் நின்று இறைக்கும்போதோ கால் கொஞ்சம் தவறினாலும் கிணற்றுக்குள்ளே விழ வேண்டியதுதான். அப்படி எத்தனையோ பேர் விழுந்து செத்துப் போயிருக்கிறார்கள்.

இந்த மாதிரி கிணற்றுக்குள் இறங்கி சின்னப்பிள்ளைகள் எப்படி இறைப்பார்கள் என்று யாரும் யோசிக்க மாட்டார்கள். யோசிக்காததோடு அப்பவும் இந்த புள்ளைக்கு கூறு வேண்டாம்; கருத்தா வேலையைப் பாத்து செஞ்சாவில்ல விளங்கும்; மெனாக்கெட்டாப்பல இறைச்சா உள்ள விழுவாம என்ன செய்வா என்று குற்றம்தான் சொல்வார்கள். அதோடு கிணற்றில் உருளை ஒன்றும் கிடையாது. கயிற்றை வீசி வீசித்தான் இரண்டு கையாலும் இழுக்க வேண்டும். நானும் அப்படித்தான் இறைத் தேன். அப்போது கயிறு சருவத்தை இழுக்க சருவம் கிணற்றுக்குள் விழுந்து விட்டது. விழுந்த வேகத்தில் சருவம் நெளிந்துவிட்டது. நான் கிணற்றுக்குள் இறங்கி சருவத்தை வெளியே கொண்டுவந்து ஒருவருக்கும் தெரியாமல் வீட்டிற்குள் வைத்துவிட்டேன்.

மறுநாள் சித்திரைப் பிறப்பு என்பதால் எங்கள் தவறுகளை யாருமே கண்டுகொள்ளவில்லை. அரிசி பருப்பு வாங்குவதிலும் இட்லி, தோசைக்குப் போடுவதிலும்தான் கவனமாக இருந்தார்கள்.

சித்திரைப் பிறப்பு அன்று ஊரோடு கோயிலுக்குப் போவார்கள். எந்தக் கோயில் என்றாலும் நடந்துதான் போக வேண்டும். வழி நெடு கிலும் கருப்பட்டியும் புளியும் சேர்த்த பானக்காரமும் மோரும் ஊற்று வார்கள். பாதையின் இருபுறமும் புளிய மரத்து நிழல்கள் அடர்ந்து கிடக்கும். கொஞ்ச நேரம் மரநிழலில் ஓய்வு எடுத்துவிட்டு நடக்க வேண்டியதுதான்.

பொழுது அடையுமுன்னே அன்றைக்கென்று நிலா சோளத்தோசை போல் கிழக்கில் கிளம்பி கறந்த பாலாக வெளிச்சத்தை சிந்திக் கொண்டிருக்கும். அதனால் எந்தப் பயமும் கிடையாது. எங்கள் ஊர்க் காரர்கள் அனைவரும் கூட்டம் கூட்டமாக கிளம்புவதால் ஒரே பாட்டும் படிப்புமாந்தான். கதைவேறு சொல்லிக்கொண்டு வருவார்கள். வீடு வந்து

சேர நடுச்சாமம் ஆகிவிடும். அதைப் பற்றி யாரும் கவலைப்பட மாட்டார்கள். வீட்டில் இருக்கும் ஆடுமாடு கோழிக்குஞ்சுகளை பார்த்துக் கொள்ள வயசான ஆட்களை விட்டுவிடுவார்கள். அதனால் அன்றைய பொழுது எல்லோருக்கும் கொண்டாட்டம்தான்.

நெளிந்த சருவத்தைப் பார்த்தால் அம்மா என்ன சொல்வாளோ என்று எனக்கு பயம். வசந்தாவிற்கு அடுத்த பிஞ்சையில் தண்ணீர் பாய்ந்து விட்டதால் அவள் அய்யா அடிப்பாரோ என்று பயம். இருவரும் நாம் இன்னைக்கு கோயிலுக்குப் போறோம். ஆனால் இனி திரும்பி வரக் கூடாது. யார் வீட்டிலாவது வேலை செய்து பிழைத்துக்கொள்வோம் என்று கூடிப்பேசி கணேசனிடம் போய் இதைப் பற்றி சொன்னோம்.

நானும் உங்களுடன் வாரேன். தினமும் அப்படி வேலை செய்யிறேன். இந்தா கோயிலுக்குப் போக எங்கப்பா துட்டு கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டார். அவர்கிட்ட இருக்கிறத விட நம்ம எங்கேயாவது போயிடுவோம் என்றான் அவன்.

மூன்று பேரும் சேர்ந்து மேற்கு மலையில் இருக்கும் அய்யனார் கோயிலுக்குப்போய் விடுவது என்றும் அங்கேயே பளியர்களுடன் இருந்து விடுவது என்றும் பேசி முடித்தோம். ஏனென்றால் வருசா வருசம் அந்தக் கோயிலுக்குப் போனதில் பளியர்களிடம் எங்களுக்கு கொஞ்சம் பழக்கம் இருந்தது. அதோடு எல்லா மாமாக்களுக்கும் அவர்களைத் தெரியும். பளியர்கள் அந்த வனத்திலேயே வேட்டையாடி மான் கறி, முயல் கறி என்று தின்றுவிட்டு எந்த வேலையும் செய்யாமல் சந்தோசமாக இருக்கிறார்கள். கறி மட்டுமா... எல்லாப் பழமும் கிடைக்கிறது. தேனும் கிடைக்கிறது. அந்தக் கோயில்தான் இனி நமது இருப்பிடம் என்று பேசிக் கொண்டோம். வசந்தா குறுக்கிட்டு சொன்னாள். அய்யனார் கோயிலில் சோத்து கத்தாழை நிறைய இருக்காம். அதை அறுத்தா சோறு நிறைய வருமாம். அவள் சொன்னதைக் கேட்டதும் இன்னும் சந்தோசமாய் இருந்தது. சோத்து கத்தாழையில் சோறு இருக்கும்போது யாராவது அடுப்பு பத்த வச்சு சோறு காய்ச்சுவாகளா என்று பேசிச் சிரித்தோம்.

சித்திரை பிறந்த அன்று விடியற்காலமே கோயிலுக்குப் புறப் பட்டோம். எந்தக் கோயிலுக்குப் போகலாம் என்று கேக்க வந்த சரசு விடம் நாங்கள் கோயிலிலேயே இனி இருக்கப் போவதைச் சொன்னதும் அவள் சொன்னாள். நீங்களாவது தப்பு செஞ்சுட்டு அடி வாங்குதீக. என் அய்யா எந்நேரமானாலும் சரி, திமுதிமுன்னு ஆளை கூட்டிட்டு வந்து அதை செய்யி இதை செய்யின்னு முடுக்கி வேலை ஏவுவாரு. அவுகளுக்கு முன்னாலேயே எங்காத்தாளயும் என்னையும் போட்டு அடிக்காரு. நானும் உங்க கூட வாரேன். நம்ம போயி பளியங்க கூடவே இருந்துக்கிடுவோம் என்று அடித்து சொன்னாள்.

உடனே ஆள் ஆளுக்கு தூக்குப்போணியில் வீட்டில் இருந்த

சாப்பாட்டை போட்டுக்கொண்டு நடக்க ஆரம்பித்தோம். வழி நெடு கிலும் மோரு, பானக்காரம் என்று வாங்கிக் குடித்துக்கொண்டே ஆடெழும்புற (பத்து மணி) நேரத்துக்கு அய்யனார் கோயில் வந்து விட்டோம். அன்று சித்திரை மாதமாக இருந்ததால் கோயிலிலும் சுற்றிலும் கூட்டமாக இருந்தது. கோயிலுக்கு வந்தவர்கள் ஏவிய வேலைகளைப் பளியர்கள் சுறுசுறுப்பாய் செய்துகொண்டிருந்தார்கள். எங்களைக் கண்டுகொள்ளவே இல்லை. ஏமாற்றமாக இருந்தது.

நாங்கள் பளியர்களுக்காக அங்கேயே காத்துக்கிடந்தால் எங்கள் ஊர்க்காரர்கள் யாராவது வந்துவிடுவார்கள் என்று பயந்துபோய் மறைவாக ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தோம். உச்சிப்பொழுது வந்துவிட்டது. இனியும் இப்படி உட்கார்ந்திருந்தால் நாள் முழுக்க இப்படியே இருக்க வேண்டியதுதான் என்று நினைத்து எல்லோரும் பளியரின் குடிசைக்குப்போனோம். அங்கே ஆண்கள் யாருமில்லை. பெண்களும் குழந்தைகளும்தான் இருந்தார்கள். அவர்கள் குடிசையைச் சுற்றிலும் சுத்தமில்லாமல் மோசமாகக் கிடந்தது. ஈ, எறும்பு, கொசுக்கள் எல்லாம் அப்பிக் கிடந்தன. துணிகளும் தும்புகளும் போதாதென்று எலும்புகள் மாம்பழக் கொட்டைகள் எல்லாம் குமிந்து கிடக்க குப்பை மேடு போல் அந்த இடம் இருந்தது. எங்களுக்கு அங்கே இருக்கவே மன மில்லை. இடம்தான் அசிங்கமாக இருந்ததென்றால் அவர்கள் அதைவிட மூக்கை வடித்துக்கொண்டு, புண்ணும் புழுவுமாக கலைந்த தலையுமாக இருப்பதைப் பார்க்கவே சகிக்கவில்லை.

மனசில் இதுவரை இருந்த தைரியம் போய்விட்டது. இவர்களுடன் இருப்பதை விட நம் ஊருக்கே போய்விடலாம் என்று தோன்றியது. இதற்கா இவ்வளவு நடை நடந்து அவசரமாக வந்தோம் என்று அழுகை யாக வந்தது. கணேசன் சொன்னான். நான் எனக்குத் தெரிந்த பளியனிடம் சொல்லி நமக்கு மட்டும் குடிசை போட்டுத் தான்னு கேட்டு வாரேன். அப்படி அவன் போட்டுக் கொடுத்தா நாம இருந்துகிடுவோம் என்றான். மீண்டும் எல்லோருக்கும் சந்தோசம் வந்துவிட்டது.

அங்கே மரங்களில் இருந்த புளியங்காய் மாங்காய்களை அடித்துத் தின்றுவிட்டு கோயிலுக்கு வந்தோம். பொழுது ஆகிவிட்டதால் கூட்டம் கொஞ்சம் குறைந்துவிட்டது. கணேசன் ஒரு பளியனைத் தேடிப் போனான். போகும்போது இருந்த சந்தோசம் வரும்போது அவன் முகத்தில் இல்லை. என்ன என்று ஆவலோடு கேட்டோம். நம்ம இப்பவே இந்த காட்டை விட்டுப் போவணுமாம்; இல்லாட்டா அவன் நம்ம ஊருக்குப் போயி நம்ம ஆத்தா அய்யாவையெல்லாம் இங்க கூட்டிட்டு வந்துருவானாம்; இந்த மலையில பளியங்க மட்டும்தான் இருக்கணு மாம்; மத்தவங்க யாரும் இருந்தா இங்கே இருக்க சாமிக்கு பிடிக்காதாம்; பிடிக்காதவங்கள அன்னைக்கு ராத்திரியே அடிச்சி கொன்னு போடுமாம் என்றான்.

இதைக் கேட்டதும் மிச்சமிருந்த சந்தோசமும் போய்விட்டது. திரும்பவும் வீட்டுக்குத்தான் போகணும் என்று நினைத்தபோது அழுகையாய் வந்தது. வேறு எந்த வழியும் தெரியாததால் எல்லோரும் வீட்டுக்குப் போவது என்று முடிவெடுத்தோம். ஆனால் போகுமுன் ஒரு சோத்துக் கத்தாழை வாங்கி அறுத்து அதிலிருக்கும் சோற்றை சாப்பிட்டு விட வேண்டுமென்று ஆசைப்பட்டோம்.

கணேசனுடன் நாங்களும் போய் அந்தப் பளியனிடம், ஒரு சோத்து கத்தாழை வெட்டிக்கொடு; நாங்கள் போய் விடுகிறோம் என்று சொன்னோம். பளியன் சிரித்துக்கொண்டே கணேசனை அவனோடு கூட்டிப் போனான். ஆவலோடு அவனுக்காகக் காத்திருந்தோம். பச்சையாக வெட்டிய கத்தாழையோடு அவன் வந்தான். வரும்போதே சோறு மில்லை ஒண்ணுமில்லை, வசந்தா பொய் சொல்லியிருக்கா என்று சொல்ல அவளும் எங்க ஆத்தாதேன் சோறு இருக்குன்னு சொன்னா என்றாள்.

அவன் கையிலிருந்த கத்தாழையை வாங்கிப் பார்த்தோம். முள்வாங்கியில் இருக்கும் கத்தியால் துண்டு துண்டாக வெட்டினோம். சோறு விழவில்லை. வாயில் வைத்துப் பார்த்தோம். கசப்பு குடலைப் புரட்டியது. வயிற்றுக்குள் இருப்பதெல்லாம் வெளியே வந்துவிடுவது போல் வாந்தி வர புளித்த மாங்காய், துவர்ப்பான விளாங்காய் எல்லாவற்றையும் தின்று தண்ணியைக் குடித்து ஒருவழியாக கசப்பை மாற்றி வீட்டை நோக்கி நடந்தோம். ரொம்ப நேரம் கழித்து வீட்டுக்கு வந்து அவரவர் பாட்டுக்கு பேச்சுமூச்சு இல்லாமல் படுத்துக்கிடந்தோம். எனக்கு நெளிஞ்சு போன சருவம்தான் நினைவிற்கு வந்தது.

வீட்டில் நெத்து, தப்புக்கருது எது கிடந்தாலும் நெறிக்கவும் குத்தவும் முடியாதவர்கள் நெத்து இல்லாதவர்களிடம் அள்ளிக் கொடுத்து குத்திக்கொண்டு வரச்சொல்வார்கள். எவ்வளவு பயறு, தானியம் இருக்குமோ அதில் ஆளுக்குப் பாதி. எங்கள் வீட்டில் இருக்கும் நெத்தை அள்ளி அடுத்தவர்களிடம் அம்மா கொடுக்கும்போது பக்கத்திலிருப் பவர்கள், இந்தா மெட்ராஸ் ராக்கு... உனக்கென்ன கிறுக்கா புடிச்சிருக்கு? திங்குத புள்ளைகள வச்சிக்கிட்டு அடுத்தவகளுக்கு பவுந்து கொடுக்கே. உம் மவளயும், மவனயும் வச்சிக்கிட்டு நெறிச்சி புடச்சிப் போட் டேன்னா வருசத்துக்கு செழும்பா இம்புட்டு பயறு அவிச்சி தின்னுக் கிடலாம். கை குளுர பருப்ப அள்ளிப்போட்டு கடஞ்சிக்கிடலாம் என்று சொல்லும்போது என் அம்மா என்னையும் தம்பியையும் எரிச்சலோடு பார்ப்பாள். ஊரில் ஏகப்பட்ட ராக்குகள் இருந்ததால் என் அம்மாகூட மெட்ராஸ் சேர்ந்துகொண்டது. என் அக்கா மெட்ராஸ்காரியாம்.

இதுகள வச்சிக்கிட்டா? அவன்னாலும் பள்ளிக்கூடம் போறான். இவள வச்சிக்கிட்டு நானு என்ன வேலய செய்ய முடியும்?

ஒரு வேல ஏவிட்டு திரும்பி பாக்கங்குள்ளயும் காணாமப் போயிருதா. அதோட எம் மவ மூத்தவளச் சொல்லு... பசுவதி! இங்கன நில்லுன்னா நானு மறுக்கா சொல்லந்தண்டியும் அந்த எடத்த விட்டுப் போவமாட்டா. அலுத்துப் போயி ம்...ன்னு மூச்சுவிட்டாக் கூட என்னம் மான்னு துடிச்சிப்போயி ஓடியாருவா. அப்படி அமராவதி எம் பக்கத்தில இருந்தான்னா நானுல்ல அம்புட்டு பேரு நெத்தயும் வாங்கி குத்தி கொடுத்துருவேன். இவள வச்சிக்கிட்டு ஒரு வேல செய்ய முடியுமா? என்னம்மோ எந்நேரம் தங்க பவுனு கணக்கா ரெண்டு புள்ள பெத்த வவுத்துல (அக்காவும் இளையதம்பியும்) இந்த ரெண்டு கழிசட கழுதை களையும் பெத்துட்டேன். சரி பெத்தேன்ல, அன்னைக்கே மூக்குல சாம்பலப் போட்டு கொல்லாம வளத்துட்டு இப்ப சீரழிஞ்சி கிடக்கேன் என்பாள்.

உடனே ராஜா அடுப்பிலிருக்கும் சாம்பலை அள்ளிக் கொண்டு வந்து, இந்தா இப்பக் கொல்லு; நாங்க செத்துப்போறோம் என்று சொல்ல, மீண்டும் அவனோடு சேர்த்து எனக்கும் வசவு விழும்.

தினமும் குருதவாலி, சாமை, தினை, வரகு, இதையெல்லாம் குத்திப்புடைத்து அரிசி ஆக்கிதான் சாப்பிடவேண்டும். அது மட்டும் போதாமல் இரண்டு நாளைக்கு ஒரு முறை சோளம் கம்பு என்று இரண்டு படி இடிக்கவேண்டும். ஏனென்றால் தினமும் காலையிலும் இரவிலும் துணிவெளுப்பவர், முடிவெட்டுபவர், ஊர் வேலை செய்கிறவர் என்று கஞ்சி எடுக்க வந்துவிடுவார்கள். அதோடு வீட்டிற்கு இரண்டு, மூன்று கன்றுக்குட்டிகள் கட்டிக்கிடக்கும். கன்றுகளுக்கே சரியாக பால் விட மாட்டார்கள். அதனால் இருவேளையும் இந்த கஞ்சியைக் கரைத்துதான் கன்னுக்குட்டிகளுக்குப் புகட்டுவார்கள். ஊருக்கு யாராவது புதிதாய் வந்துவிட்டால் அவர்களுக்கு ஊர்க்கஞ்சி வேறு, அதோடு யாருமே இல்லாமல் தனிப்பட்டுப் போன உறவுக்காரர்கள் வீட்டிற்கு வந்து கஞ்சி கேட்டு சாப்பிட்டுப் போவார்கள். இதனால் எப்போதும் உரலும் உலக்கையுமாக ஊரில் இடிக்கும் சத்தம் கேட்டுக்கொண்டிருக்கும்.

காலையில் மாடு மேய்க்கப் போகும்போதோ, காட்டு வேலைக்குப் போகும்போதோ தானியங்களை காயப்போட்டுவிட்டுத் தான் போகவேண்டும். ஆள் இருப்பவர்கள் வீட்டுத் திண்ணைகளில் காயப்போடுவார்கள். ஆள் இல்லாதவர்கள் ஊரைவிட்டு சற்று தூரத்தில் இருக்கும் களங்களில் காயப்போட்டுவிட்டுப் போவார்கள். எங்கள் வீட்டில் யாரும் இருக்கமாட்டார்கள் என்பதால் நாங்கள் களத்தில்தான் காயப்போடுவோம். என் அம்மா தூரத்துக் காடுகளுக்கு வேலைக்குப்

போனால் நான்தான் காயப்போட்டு அதை அள்ளி முதல் குத்து குத்தி யாராவது பாட்டியை புடைத்துப் போடச் சொல்லி மறுபடி குத்தி அரிசி யாக்கி வைக்கவேண்டும். என் அம்மா காட்டுக்குப் போகும்போதே, வரகை எடுத்து களத்தில காயப்போட்டுட்டுப் போ; மாடு மேய்ச்சிட்டு வந்து குத்திவையி என்று சொல்லிவிட்டுப் போவாள். நானும் அவள் சொன்ன மாதிரி வரகை அள்ளி காயப்போட்டுவிட்டுப் போவேன்.

ஆனால் மாடு மேய்த்துவிட்டு வந்ததும் களத்தில் இருக்கும் தானியத்தை மறந்துவிடுவேன். அதுவும் வரகை குத்தவே மாட்டேன். அது குத்துவதற்கு கஷ்டமாக இருக்கும். அதற்கு ஏழு உமியாம். இந்த லட்சணத்தில் அதற்கு பாட்டுபோல ஒரு விடுகதை உண்டு.

ஏழு அரங்குக்குள் இருக்கும் குயில் பெண்ணே,
என்னதந்தா வருவே?
பட்டுடுத்தி, பனியிலிட்டு, இம்புட்டு விபூதி போட்டா வருவேன்.

வரகு கருஞ்சிவப்பாக இருக்கும். வரகைத் திரிப்பதற்காக இந்தப் பாட்டு.

நான் மாடு மேய்த்துவிட்டு வந்ததும் மறக்காமல் சாப்பிட்டு விடுவேன். பிறகு விளையாட்டுதான். கொல்லையில் இருக்கும் பூவரச மரக் கொப்புகளில் ஊஞ்சல் கட்டி விளையாடுவது; மாங்கொட்டையை குவித்து கல்லால் அடிப்பது; ஒட்டாஞ்சில்லியை வைத்து நொண்டி விளையாடுவது; தட்டாங்கல் பிடிப்பது இப்படி ஒரே விளையாட்டுதான். பொழுது மேற்கே சாய்ந்தது போக கொஞ்சம் மிச்சம் இருக்கும். அப்போதுதான் எனக்கு களத்தில் கிடக்கும் தானியம் நினைவுக்கு வரும். பொட்டியையும் விளக்குமாற்றையும் எடுத்துக்கொண்டு ஓட்டமாக ஓடுவேன். காயப்போட்ட தானியங்களை எல்லாரும் அள்ளிவிட, எங்கள் தானியம் மட்டும் காக்கா குருவி தின்று சிதறிக்கிடக்கும். அதைக் கூட்டி அள்ளிக்கொண்டு வருவேன். வந்ததே சரி என்று வரகு மூடையில் கொட்டிவிடுவேன். பிறகு மழைக்காலத்திற்காக, நடுவை நாற்று என்று அவசர வேலைக் காலத்திற்காக, ஏற்கெனவே ஆறு, ஏழு படி அரிசியைக் குத்தி பானையில் சேமித்திருப்பாள் என் அம்மா. அதில் கொஞ்சம் அள்ளி பொட்டியில் வைத்து விடுவேன். அம்மா வந்ததும், என்ன வரவ அள்ளி குத்துனயா? என்பாள்.

குத்திட்டேன் இந்தா அரிசி... என்று பொட்டியில் இருக்கும் அரிசியை கொண்டுபோய் காண்பிப்பேன்.

யாரு பொடச்சிப் போட்டது?

யாரும் பொடச்சிப் போடல. நானாத்தேன் பொடச்சேன்!

நீயா பொடச்சியா? தவிட்ட எங்கே?

தவிட்டயெல்லாம் அப்பவே மாட்டுக்குப் போட்டு தண்ணிக்கு விட்டுட்டேன்.

உடனே அம்மாளுக்கு சந்தோசம் பொறுக்காது. அடியாத்தா... என்ன மாதிரி அழகா குத்திப் பொடச்சி அரிசிய முத்துக்கணக்கா வச்சிருக்க என்று பாராட்டிவிட்டு அங்கே இருக்கும் பெரியம்மா, அத்தையிடமும் இதைப்பற்றி சொல்லுவாள்.

பாரதா என்ன இருக்க இருக்க பெரிய புள்ளயா? சின்னப்புள்ளயா? அவ எப்பவும் நல்லாத்தேன் வேல செய்தா. நீதேன் அவள வஞ்சிக்கிட்டே இருக்கே என்பார்கள் அவர்கள்.

எனக்கும் எங்கே குட்டு உடைந்துவிடுமோ என்று மனசுக்குள் திடுக்கிட்டு கொண்டுதான் இருக்கும். பிறகு இரண்டுபடி சோளத்தை எடுத்து இடிச்சி கரைச்சி வச்சிரு என்று சொல்லிவிட்டுப் போய் விடுவாள். எனக்கு குத்துவதற்கு உடம்பு வளையவே வளையாது. எப்போது விளையாட ஓடுவோம் என்று கால்கள் பரபரத்துக் கொண்டிருக்கும்.

ஒரு படி சோளத்துக்கும் கொஞ்சம் அதிகமாக எடுத்து ஒரே வாயில் போட்டு பத்தாப்பரக்கா குத்திக் கரைத்து வைத்துவிட்டு விளையாட ஓடி விடுவேன். மறுநாள் என் அம்மா சோளச்சோறு காய்ச்சுவாள். பானை நிறையவே சோறு வராது; தண்ணியாக வேறு இருக்கும்.

உடனே என்னிடம், என்னடி இது ரெண்டுபடி சோளம்தான எடுத்து இடிச்சே? என்பாள்.

நானும் அப்புராணியாக ஆமாம் என்பேன்.

பெறவு எதுக்கு கஞ்சி நிரக்க மாணேங்கு; தண்ணியாக் கெடக்கு என்று யோசித்தவாறு சின்னம்மாவிடம், அத்தையிடம் சொல்வாள்.

நீ பாட்டுக்கு காட்டு வழி போயிருத. உன் பிள்ளைக அதது பாட்டுக்கு பானய தொறந்து கஞ்சிய எடுக்குகள்ள. எவளோ கொள்ளிக் கண்ண வச்சிப் பாத்துருக்கா! அதேன் கஞ்சி இப்படி நீத்துப் போயி கெடக்கு. பண்ணருவாள நல்லா காய வச்சி கஞ்சி கொதிக்கும்போது குறுக்கும் மறுக்குமா ரெண்டு இழுவ இழுத்துரு; கஞ்சி நல்லா இருக்கும் என்று சொல்வார்கள். என் அம்மாவும் அப்படியே செய்ய நான் ரொம்ப நல்லபிள்ளையாக அதைப் பார்த்துக் கொண்டிருப்பேன்.

๙๙

பக்கத்து ஊரிலிருந்து ஒரு தாத்தா எங்கள் ஊருக்கு வருவார். அவர் பெயர் வேலப்பன். எல்லோரும் அவரை வேலு சீயான்... வேலு சீயான் என்றுதான் கூப்பிடுவார்கள். அவர் இரண்டு, மூன்று மாதத்துக்கொரு முறைதான் வருவார். என் அம்மா போன்றவர்களுக்கு அவரிடம் ரொம்ப

மதிப்பு, பிரியம். ஏனென்றால் அவர் மம்பட்டி, சொறண்டிக்கு வாக்கூரு கூர்மையாகத் தட்டிக் கொடுப்பார். புதுக்கணை போடுவார். அருவாமனை தீட்டிக் கொடுப்பார். வாளியின் ஓட்டைகளை அடைப் பார். இன்னும் பல சின்னச் சின்ன வேலைகளைச் செய்து கொடுப்பார். அவரை வீட்டுக்கு வீடு சாப்பிடக் கூப்பிடுவார்கள். அதோடு அவருக்கு வெற்றிலை, பாக்கு, போயிலை, பொடி வேறு. எப்போது பார்த்தாலும் அவர்மீது கொச்சைவாடை அடிக்கும். இந்த அழகில் வெள்ளைத் தாடியும் மீசையும் மொல்லென்று இருக்கும்.

பெரியவர்கள் எங்களிடம்தான் சுரண்டியையோ, மம்பட்டி யையோ கொடுத்து சீயானிடம் போயி இத செம்ம பண்ணிக் கொடுக்கச் சொல்லு என்று அனுப்பிவைப்பார்கள். எங்களுக்கு அவரிடம் போகவே மனசிருக்காது. ஏனென்றால் அவர் உனக்கு சுரண்டிய சரி பண்ணனு மின்னா இந்த சீயானுக்கு ஒரு முத்தம் கொடு என்பார். அவரைப் பார்க்கவே எங்களுக்குப் பிடிக்காது. பிறகு எங்கே கிட்டே போவது? இதைப் பெரியவர்களிடம் சொன்னால் கண்டுகொள்ள மாட்டார்கள்.

பெரிய மனுசன். அதுலயும் கல்யாணம், காச்சி முடியாதவரு. அப்புராணி உங்கமேல பிரியப்படுதாரு. உங்க சீயானுக்கு, அம்மிக்கு கொடுக்கது கணக்கா ஒரு முத்தம் கொடுத்துட்டு வாங்களேன். கொறஞ்சா போவீக. அவரு நமக்கு எம்புட்டு வேல செஞ்சி தாராரு என்று சொல்லி விடுவார்கள்.

இவரிடம் கொடுக்கும் வேலைக்காக நான் ராஜாவைத் தேடிப் போய் அவனிடம் சொல்லி சீயானிடம் அனுப்பி வைப்பேன். ஒரு தடவை நாங்கள் நாலுபேர் சேர்ந்து தம்பியிடம் போனோம்.

போங்க போங்க! உங்களுக்கு வேலை இல்ல. நீங்க கொண்டு போயி சீயானிட்ட கொடுக்க வேண்டியதுதான. எதுக்காவ என்னயே கூப்பிடுதீக என்று அவன் கோபப்பட்டான்.

அந்த சீயான் நாங்க முத்தம் கொடுத்தாத்தேன் வேலய செஞ்சி கொடுப்பாராம். அவருகிட்டப் போனாலே வீச்சம் புடுங்குது என்று பாக்கியம் சொன்னாள்.

சீயானுக்கு முத்தம் வேணுமாக்கும்! நீங்க போங்க நானு வாரேன் என்று சொல்லிவிட்டுப் போனான்.

நாங்கள் வேலுத்தாத்தாவிடம் போனோம். அவரும் வாங்க வாங்க... இந்த சீயான் பக்கத்தில வந்து... என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே தம்பி வந்துவிட்டான். சீயான் முதல்ல நான்தேன் உமக்கு முத்தம் கொடுப்பேன் என்றவன் அவர் பக்கம் போன மாயத்தில் தாத்தா, அய்யய்யோ அப்பா... என் காலு போச்சே... என்று அலற நாங்கள் பயந்துபோய் மூலைக்கு ஒருவராகச் சிதறி ஓடினோம். பிறகு அன்று இரவு

தம்பியிடம் தாத்தா எதுக்குடா அப்படி அலறுனாரு என்று கேட்டோம்.

அந்த தாத்தா தொடையில காக்காமுள்ள வச்சி ஒரு எறக்கு எறக்கிட்டேன். இனிமே உங்ககிட்ட பேசவே மாண்டாரு என்று சொல்லிவிட்டு அவன் போய்விட்டான்.

அப்போது ஆவடை அக்கா, பாத்தியா ஆம்பளபுள்ள ஆம்பள புள்ளதேன். அவுகளுக்கு மூணு கொலவ போடதுல குத்தமில்ல என்றாள். ஆண்குழந்தை பிறந்தால் மூணு குலவை போடுவார்கள்.

பிறகு அந்தத் தாத்தா எங்கள் ஊருக்கு வரவே இல்லை. என் அம்மாதான் ஒருநாள் அத்தை, சின்னம்மா, பெரியம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். நானு இன்னைக்கு வேலு அப்பச்சியப் பாத்தேன். பாவம் ரொம்ப சொடிஞ்சி போனாரு. என்ன அப்பச்சி, ஊரு திக்கமே வரக் காணோம். நீரு வராம எங்களுக்கு கை முறிஞ்சாப்பல இருக்கு. என்னைக்கு வாரீருன்னு கேட்டேன்.

அதுக்கு அவரு என்ன சொன்னாரு என்று அத்தை ஆவலாய் கேட்டார்.

அவரு என்னத்தா சொல்லுதாரு! தாயீ, இனிமே நானு அங்கிட்டு வராப்பல இல்ல. உங்க ஊருல அம்புட்டும் படுக்காளி பய புள்ளைகளாப் போயிருச்சுன்னு சொல்லுதாரு. என்ன அப்பச்சி, யாரும் உம்ம என்னமும் சொன்னாகளான்னு நானும் கேட்டுப் பாத்துட்டேன். வாயத் தொறக்க மாணேங்காரு. வெள்ளந்தி மனுசன், கறந்த மனசா இங்கன வந்துகிட்டும் போய்கிட்டும் இருந்தாரு. இனிமே தட்டும் எங்க வரப் போறாரு என்று ஆதங்கத்தோடு சொல்ல எல்லோரும் அதே ஆதங்கத் தோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் என் அம்மா இளைய தம்பியைத் தூக்கிக்கொண்டு ஏதோ வேலையாக ஸ்ரீவில்லிப்புத்தூர் போய்விட்டாள். எனக்கும் ராஜாவுக்கும் ரொம்ப கொண்டாட்டம். ஊஞ்சல் கட்டி ஆட விரும்பினோம். வீட்டில் கயிறு இல்லை. உடனே வாளிக் கயிறை எடுத்துஅதை அருவாமனையால் அறுத்து வீட்டிற்குள்ளேயே ஊஞ்சல் கட்டினோம். அவன் உட்கார்ந்து ஆட நான் தள்ளிவிடவேண்டும். பிறகு என்னை அவன் தள்ளிவிட வேண்டும். இரண்டு பேரும் ஊஞ்சலில் ஆடிக்கொண்டே கிழக்கு மேற்கு சுவரைத் தொடவேண்டும். ஒவ்வொருவராக ஆடிப்போய் தொட்டு விட்டு வந்தோம். எங்களுக்கு சிரிப்பாணி அள்ளியது. பிறகு இரண்டு பேருமாக சேர்ந்து ஆடிப்போய் தொடுவோம் என்று உட்கார்ந்து கொண்டு இரண்டுமுறை ஆடினோம். சுவரைத்தொட முடியவில்லை. மூணாவது முறையாக உன்னி மிதித்தோம். கயிறு படார் என்று அறுந்து ஆளுக்கு ஒரு மூலையில் போய்விழுந்தோம். நாங்கள் விழுந்த வேகத்தில் அடுக்குப்பானையும் சேர்ந்து விழுந்தது. தலையில் இருவருக்கும் சரியான

அடி. அழுதுகொண்டு ஒரு மூலையில் படுத்திருந்தோம். அடுக்குப் பானை வேறு விழுந்து அதில் இருந்த எல்லாப் பொருள்களும் ஒன்றாகிக் கிடந்தது. ஊரிலிருந்து வந்த அம்மா நாங்கள் விழுந்த அடி காணாது என்று பிறகும் இரண்டு அடி அடித்தாள்.

❧

நானும் தம்பியும் பிஞ்சையில் நெத்து எடுத்துக் கொண்டிருந் தோம். எங்கள் பிஞ்சை சாலையை ஒட்டி இருந்ததால் ஆட்கள் சைக்கிளில் அவ்வப்போது போய் வந்துகொண்டு இருந்தார்கள். எங்களுக்கு நெத்து எடுப்பதைவிட வேடிக்கை பார்ப்பதே ரொம்ப பிடித்திருந்தது.

அப்போது ஒரு ஆள் ஈண்ட வாசனை கூட மாறாத பச்சை கன்னுக் குட்டியை சைக்களில் வைத்துக் கட்டி வேகமாக ஒட்டிக்கொண்டு வந்தார். சைக்களின் பின்னால் பசு ஓடமுடியாமல் ஓடிவந்து கொண்டு இருந்தது. ரொம்ப தூரத்திலிருந்து ஓடிவந்திருக்கும் போல. அதன் வாயெல்லாம் நுரை தள்ளி இளைத்துக் களைத்துப் பார்க்கவே பாவமாக இருந்தது. ஆனாலும் அது கன்றுக்குட்டிக்காக ஓடமுடியாமல் ஓடி ஓடி வந்து கொண்டிருந்தது.

எங்கள் பிஞ்சையிலிருந்து ஒரு நாலு பிஞ்சை தள்ளி எங்கள் பெரியப்பா இறைத்துக் கொண்டிருந்தார். கன்றுக்குட்டியோடு வந்த ஆள் சைக்கிளை நிறுத்திவிட்டு அந்த கிணற்றுக்கு தண்ணீர் குடிக்கப் போனார். உடனே மாடு எங்கள் பிஞ்சை அருகே படுத்துவிட்டது. நாங்கள் நெத்து எடுப்பதைப் போட்டுவிட்டு மாட்டைப் போய் பார்த்தோம். கேது கேது என்று மூச்சு வாங்கியவாறு இளைத்துக்கொண்டிருந்தது. வாயில் நுரை வந்துகொண்டே இருந்தது. இன்னும் இந்த மாடு எவ்வளவு தூரம் ஓட வேண்டுமோ என்று எங்களுக்கு கவலையாக இருந்தது. இரண்டு மைல் வரையிலும் ஊர்களே இல்லை. வெறும் பொட்டல் காடுதான். இரண்டு மைல் கழித்தபிறகுதான் வன்னியம்பட்டி வரும். அதைவிட்டால் பிறகு ஸ்ரீவில்லிப்புத்தூர்தான். அதற்கு நான்கு மைலுக்கு மேல் போக வேண்டும். நாங்கள் தூரத்தையும், மாட்டையும் பற்றியும் பேசிக் கொண்டிருந்தபோது மாட்டுக்கு சொந்தக்காரர் வந்து அதை எழுப்பினார். மாடு இளைத்தவாறு படுத்துக்கொண்டுதான் இருந்ததே தவிர கொஞ்சங் கூட அசையவில்லை. உடனே அவர் மாட்டை அடித்தும் அதட்டியும் எப்படியெல்லாமோ எழுப்பிப் பார்த்தார். அது எழுந்திரிக்கவே இல்லை. உடனே மாட்டுக்காரர் அங்கே கிடத்த செத்தை செருகுகளை அரிக்க ஆரம்பித்தார். வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த நாங்கள் அவரிடம் எதுக்காவ இப்படி செத்தய அரிக்கீக? என்று கேட்டோம். அவரும் தாயளி மாடு படுத்துக்கிட்டு எந்திரிக்க மாண்டேன்னு களாணித்தனம் பண்ணுது.

இந்த செத்தய அரிச்சி அது வாலோரம் தீயப் பொருத்தி வச்சா மருவாதயா எந்திரிச்சி ஓடியாருமில்ல. மனுசன் இன்னும் எம்புட்டுத் தூரம் போவணும். இது மயிரு போச்சின்னு படுத்துக்கிட்டா விட்டுருவனா? என்று கோபமாகச் சொல்ல எனக்கும் தம்பிக்கும் அவர் சொன்னதைக் கேட்டு அழுகையே வந்துவிட்டது.

நான் தம்பியிடம் சொன்னேன். பாவம் இந்த மாடு! இப்பவே இப்படி படுத்துக் கெடக்கு. இன்னும் ரொம்ப தூரம் ஓடணுமாம். இவரு இப்படி பத்திக்கிட்டுப் போனா இந்த மாடு ஓடி ஓடியே செத்துப் போவும் பொலுக்கோ! என்னடா செய்யது? எனக்குப் பாவமா இருக்கு.

எனக்கும் பாவமாத்தேங்கா இருக்கு என்றவன், எக்கா இதுக்கு ஒரு வழி இருக்கு என்றான். நானும் ஆவலோடு என்னடா வழி இருக்கு? இருந்தா அத செய்யிடா என்றேன். உடனே அவன் அங்கே வேலியி லிருந்து ஒரு காக்கா முள்ளை ஒடித்தான்.

அந்த ஆள் மாட்டின் வால்அருகே தீயைப் பொருத்தி வைத்து விட்டார். படுத்துக்கிடந்த மாடு புதறித் துடித்து எழுந்தது. அவன் அதை இரண்டு அடி அடித்துப் பத்திவிட்டு ரொம்ப வேகமாய் சைக்களில் ஏறி மிதித்தான். பிறகு ஏறிய வேகத்தில் கீழே இறங்கி சைக்கிள்டயரைப் பார்த் தான். அது துவண்டு மண்ணில் புதைந்து கிடக்க அவனும் கோபமாக முனங்கிக்கொண்டு சைக்கிளை உருட்டிக்கொண்டே போனான். மாடு அவன் பின்னால் தன் கன்னுக்குட்டியை ஆசையோடு பார்த்தவாறே மெல்ல நடைபோட்டுப் போனது. அதைப் பார்த்த எனக்கும் என் தம்பிக்கும் சந்தோசம் பொறுக்கவில்லை. தம்பி நடந்துபோகும் மாட்டுக் காரனைப் பார்த்துச் சொன்னான். தாயளி சைக்கிளு களாணித் தனமில்ல பண்ணுது.

❧

தீச்சட்டியாக வெயில் பொசுக்கும் காலங்களில் மாடுகளுக்கு கடிக்க கரடு இருக்காது. குடிக்கத் தண்ணி கிடைக்காது. வெறும் கமலை மட்டும் கிணறுகளில் கோர்வைபோட்டு நிற்க அதன் வழியே கிணற்றுக் குள் எட்டிப் பார்த்தால் தலையே அந்து போகிற மாதிரி ஆழம் கீழோடிக் கிடக்கும். இலைகளை உறிஞ்சிய தண்ணீர் ஒரு திரவம் போல நம்ம முகத்தைக்கூட தெளிவாக காட்ட மறுத்து அழண்டு கிடக்கும். கிணற்றுப் பாம்பரைகளில் கருப்பாங்கொளையும் அருவாத்தாங்கி கொளையும் பசேல் என்று செழித்துக் கொடியோடிக் கொத்தாக மண்டிக் கிடக்கும். நீள மான கம்போடு ஒருவர் கிணற்றுக்குள் இறங்க ஒருவர் வெளியே நிற் போம். கிணற்றுக்குள் இறங்கும்போதே வெளியே ஓடத் தயாராக பாவாடையைச் சுருட்டியவாறு நெஞ்சில் பதற்றமும் பயமுமாக

எட்டுகளை எடுத்துவைத்து பாம்பரையில் தூரமாக நின்றுகொண்டு கம்பால் அந்த கொளைகளைத் தட்டுவோம். சில நேரம் அதன்மீது அடைந்து கிடக்கும் கருப்புப் பூச்சிகள் மட்டும் பொடிச் சிதறலுடன் அங்குமிங்கும் பறக்க நாங்கள் கொளைகளை அறுத்துச் சுருட்டி வெளியே நீட்ட அங்கே நிற்பவர்கள் வாங்கிக்கொள்வார்கள். சிலநேரங்களில் கம்புபட்ட உடனே சீத்தென்று பாம்புகள், நட்டுவாக்களிகள், தேள் எல்லாம் ஊரிக்கொண்டு வர உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பாம்பரையிலிருந்து படிக் கட்டைத் தாவி பின்னங்கால் பிடரியில் பட ஓடுவோம்.

விறகை விலைக்கு வாங்க மாட்டோம். காடுகளில் கிடக்கும் மாறு மட்டை, பெரிய விவசாய வீடுகளில் மாடுகள் கழித்துப் போடும் தட்டைகள் இதைத்தான் முக்கால்வாசிப் பேர் எரிப்பார்கள். அதோடு வேலிகளுக்காக இருக்கும் கத்தாழையில் காய்ந்ததாக இருப்பதை அறுத்து வருவோம்.

காட்டுக்காரர்கள் வேலிக்காக இந்தக் கத்தாழைகளை அடர்வாக வளர்த்திருப்பார்கள். அந்த கத்தாழைகளை ஒட்டி 'சிவநோம்பு' என்று ஒரு செடி இருக்கும். இந்தச் செடி எத்தனை பெரிய மழை பெய்தாலும் சரி. ஒரு தீக்குச்சியை உரசி அதன் மேல் வைத்தால் போதும், உடனே பற்றிக் கொள்ளும். இந்த கத்தாழைகள் பாதி பாதியாய் காய்ந்து இருக்கும். அதை அறுத்துக்கொண்டுவந்து இந்த 'சிவநோம்பு' செடியுடன் வைத்தால் அடுப்பு அழகாக எரியும். நனைந்த விறகைப் பற்றியும் கண்ணை எரிக்கும் புகையைப் பற்றியும் கவலை இருக்காது. இந்த கத்தாழைக்குள் பாம்புகள் நிறைய இருக்கும் என்று சொல்வார்கள்.

நானும் கணேசனும் கத்தாழை அறுக்கப் போனோம். உச்சி மத்தியானம். காட்டில் வேலை செய்தவர்கள் எல்லாம் கஞ்சி குடிக்க மரத்து நிழலில் ஒதுங்கிவிட்டார்கள். கத்தாழை நெருக்கமாகக் கிடக்க அதுக்கு அந்தப்புறம் யாரோ பெருமூச்சு விடுவதுபோல் கேட்டது. ரெண்டு பேரும் பதட்டத்தோடு மெல்ல சத்தம் போடாமல் எட்டிப் பார்த்தோம். அங்கே இரண்டு பாம்புகள் ஒன்றோடு ஒன்று பின்னிக்கிடந்தன.

பாம்புகள் இப்படிக் கிடக்கும்போது ஒரு துண்டை அவற்றின் மீது போட்டுவிட்டால் நல்லது; பாம்புகள் போன பிறகு அதை எடுத்து தோளில் போட்டுக்கொண்டால் நினைத்த காரியமெல்லாம் நடக்கும் என்று எங்க ஊர் பெரியவர்கள் சொல்வார்கள். கணேசன் என்னிடம், பாரதா நம்ம சும்மாட்டுத் துணிய பய்ய அந்த பாம்பு மேல போட்டுரு தேன்; பிறவ் நம்ம ஓடிருவோம்; நாளைக்கு வந்து அந்த துணியை எடுத்துக்குவோம் நம்ம நினைச்சதெல்லாம் நடக்கும் என்றான்.

துணியை நீ போடப்போறே; நான் நினைச்சது எப்படி நடக்கும் என்று கேட்டேன்.

நம்ம ரெண்டு பேருமே முதல்ல துணியைத் தொட்டு நம்ம

நினைச்சது நடக்கணுமின்னு சாமியை கும்பிட்டுக்கிடுவோம்; பிறகு பாம்பு மேல போட்டுட்டு ஓடுவோம் என்றான்.

இரண்டு பேரும் சும்மாட்டு துணியை எடுத்து சாமியைக் கும் பிட்டு அதுக்குள்ளே ஒரு கல்லையும் வைத்தோம். பாம்புகளைக் குறி பார்த்து கணேசன் எறிந்தவுடன் நாங்கள் ஓட்டம் பிடித்தோம். கொஞ்ச தூரம் போன பிறகு திரும்பிப் பார்த்தோம். ஒரு பாம்பும் எங்களை விரட்டவில்லை. பிறகு எங்கள் இரண்டு பேருக்குமே கத்தாழை அறுக்க மனமில்லை. ஏதோ பேருக்கு விறகைப் பெறக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தோம்.

ஊருக்குள் வந்ததும் முதல் வேலையாக எங்கள் வயசுப்பிள்ளை களைக் கூப்பிட்டு பாம்பு மேல துணியைப் போட்ட விஷயத்தை சொன் னோம். அதோட நாங்கதான் இந்த ஊருக்கே பணக்காரகளா ஆவணு மின்னு கேட்டிருக்கோம்; அந்தத் துணி எங்களை பணக்காரங்களா ஆக்கிடும்; பிறகு நீங்கள்லாம் நாங்க சொன்னபடிதேன் கேக்கணும் என்று சொன்னோம். எல்லோருக்கும் பயங்கர எதிர்பார்ப்பு. எப்போ துணியை எடுக்கப் போறீங்க; அப்படிப் போவும்போது எங்களையும் கூட்டிட்டுப் போங்க; நாங்களும் எதாவது கேட்கிறோம் என்றார்கள். அந்தத் துணியிடம் எனக்கு ஒரு இடவார் கேட்டு வாங்கணும் என்றான் என் தம்பி. அன்று முழுதும் பிள்ளைகளுக்கு இதே பேச்சுத்தான்.

மறுநாள் எப்போது மத்தியானம் வரும் என்று காத்திருந்து பத்துப் பிள்ளைகள் வரை துணி கிடந்த இடத்திற்குப் போனோம். துணி மட்டும் கிடந்தது. துணியை எடுத்தோம். கணேசன் அதைத் தலையில் தலைப்பா கட்டு கட்டிக்கொண்டு வர எல்லோரும் அவன் பின்னால் கூச்சலும் கும்மாளமுமாய் வந்தோம். ஊத்தாங்கல் ஓடையிலேயே என் இளைய தம்பி எங்களை எதிர்பார்த்து நின்றிருந்தான். அவனைப் பார்த்ததும் எங்கள் சந்தோசம் பறந்துவிட்டது. என்னடா இங்கே வந்து நிக்கிறே என்று கேட்டேன். அவனும் நீங்க காட்டுவழியே அலையிறதுமில்லாம படிக் கிற பயகளையும் கெடுக்குறீகளாம்; பள்ளிக்கூடத்து வாத்தியாரு வந்து அம்மாகிட்டவும் மாமாகிட்டவும் சொல்லிட்டுப் போறாரு; அதனால மாமாவும் (கணேசனின் அப்பா) அம்மாவும் நீங்க எப்ப வருவீகன்னு சோளத்தட்டைய கையில் வச்சிக்கிட்டு காத்துக்கிட்டு இருக்காக என்றான்.

அதன் பிறகும் தலைப்பா கட்டோட ஊருக்குள் போக எங்களுக் கென்ன பைத்தியமா? பயத்தில் ஆளுக்கொரு திக்கமாகச் சிதறி ஓடினோம்.

பழையபடி கணேசன் கொஞ்சநாள் சட்டிக்கிணறுக்கோ, சங்கம் பட்டிக்கோ ஓடிவிட்டான். பாம்புத்துணியை எடுத்த பலன் உடனே தெரிந்துவிட்டது.

சிறு வயதிலேயே எனக்கு கதைப் புத்தகம் என்றால் உயிர். எங்கே ஒரு சின்னத் துண்டு பேப்பர் கிடைத்தாலும் சரி, அதை விடாமல் படித்து விடுவேன். அப்போதெல்லாம் கடைகளில், சந்தைகளில் சரக்கு வாங்கினால் பேப்பரில்தான் கூமாச்சியாகக் கட்டிக்கொடுப்பார்கள். அதைப் பிரித்து பொட்டியில் போட்டுவிட்டு மறக்காமல் அந்த பேப்பரை படித்து விடுவேன்.

என் அம்மாவிற்கு நான் படிப்பதே பிடிக்காது. நான் படிக்கும் போது பார்த்துவிட்டால் எரிச்சலோடு கத்துவாள். இப்ப நீ அந்த தாள எறிஞ்சிட்டு வரப்போறியா? இல்ல நானு அங்க வரட்டுமா? இப்பத்தேன் பெரிய படிப்பு, படிச்சி கிழிச்சி கிளாருக்க வேலக்குப் போயிர்ர மாதிரி படிக்காளாம் படிப்பு! என்று வைவாள்.

நான் என்றைக்கு அவள் வசவுக்குப் பயந்தேன்? சந்திரன் என்று ஒரு சித்தப்பா பட்டாளத்தில் இருந்தார். அவருக்கு நல்ல குணம். அவர் லீவில் வரும்போதெல்லாம் புதுப்புது புத்தகங்களாக நிறைய வாங்கிக் கொண்டு வருவார். அவர் லீவில் வந்துவிட்டார் என்று தெரிந்ததுமே அவர் வீட்டை நோக்கி ஓடுவேன். அவருக்குப் பெண் குழந்தைகள் இல்லை. மூன்றும் ஆண் பிள்ளைகள். அதனால் அவர் என்னைப் பிரியமாக வைத்துக் கொள்வார். என்னைக் கண்டதுமே, என்னடா... பொய்த்தகம் வாங்க வந்தியாக்கும். உங்கம்மா உன்னை படிக்கவிடமாண்டாளே! என்பார்.

எங்கம்மாவுக்கு தெரியாம நானு படிச்சிட்டு கொடுத்திரு தேன்ப்பா என்ற கெஞ்சிக் கேட்பேன்.

உனக்கு பொய்த்தம் கொடுக்கதுல எனக்கு ஒரு சொணக்கமுமில்ல; ஆனா உங்கம்மா பொய்த்தம் படிக்கித உன்னயும் வஞ்சி பொய்த்தம் கொடுத்த என்னையும் வைவாகளேன்னுதேன் பாக்கேன் என்று தயங்கிக் கொண்டே ஒரு புத்தகத்தைக் கொடுப்பார்.

நான் புத்தகத்தை பாவாடைக்கும் சட்டைக்கும் இடையில் யாருக்கும் தெரியாமல் மறைத்துக்கொண்டு ஓடுவேன். வீட்டிற்கு வந்ததும் அம்மாவுக்கும், என் தம்பிக்கும் தெரியாமல் அடுக்குப்பானை இடுக்கில் மறைத்து வைத்துவிடுவேன்.

தம்பி ராஜாவும், நானும் சேர்ந்து நிறைய திருட்டுவேலைகள் செய்வோம். ஆனால் எங்களுக்குள் சண்டை வந்துவிட்டால் அம்மா விடம் கோள் சொல்லிவிடுவான். அதனால்தான் அவனுக்கும் தெரியா மல் மறைத்துவைப்பேன்.

பிறகு என் அம்மா இல்லாத நேரங்களில் கதையைப் படித்து முடிக்கும் வரையும் குட்டிபோட்ட பூனையாக வீட்டிற்கள்ளேயே சுற்றிச் சுற்றி வருவேன். சமயம் கிடைக்கும்போதெல்லாம் புத்தகத்தைப் படிப்பேன். நடுத்தெருவில் ஏற்றப்பட்டிருக்கும் கல்விளக்கின் வெளிச்

சம் எங்கள் வீட்டு கட்டை மண் சுவரைத் தாண்டி புண்ணியத்திற்கு தருமம் செய்ததுபோல் கொஞ்சமாய் உள்ளே வரும். எல்லோரும் உறங்கிய பிறகு நான் மெல்ல எழுந்து அந்த வெளிச்சத்தில் படிப்பேன். இந்த மாதிரி புத்தகத்தின்மீது கண்ணாக இருக்கும் விவரத்தை என் அம்மா கண்டு பிடித்து விடுவாள். எப்போதும் வீடு தங்காதவள் வீட்டிற்குள்ளேயே சுற்றிச் சுற்றி வருகிறாளே என்ற நினைத்துக்கொண்டு சில சமயங்களில் அரவமில்லாமல் வீட்டிற்குள் வந்து என்னடி செய்றே என்று கேட்பாள். அப்போது நான் கையும்களவுமாக புத்தகத்தோடு பிடிபட்டுவிட, ஒன்றும் பேசமுடியாமல் திருதிருவென்று விழிப்பேன். உடனே அவள் புத்தகத்தைப் பிடுங்கி அடுப்பு எரிந்துகொண்டிருந்தால் அதில் போட்டு விடுவாள். அடுப்பு எரியாவிட்டால் இந்தப் புத்தகத்தை வைத்தே தீ மூட்டி விடுவாள்.

கண் நிறையக் கண்ணீரோடும் மனம் நிறைய அச்சத்தோடும் சந்திரன் அப்பாவைத் தேடிப் போவேன். என்னைப் பார்த்ததுமே அவர் எல்லா விஷயத்தையும் புரிந்துகொள்வார்.

என்ன, உங்கம்மா பொய்த்தத்த கிழிச்சிப் போட்டாகளா? என்று கேட்பார். என்னால் பதில் சொல்ல முடியாது. விக்கி விக்கி அழுவேன். என் அம்மா கம்பாலும் கையாலும் அடிக்கும்போதுகூட நான் அப்படி அழமாட்டேன். 'துடைக்குமேல் தொண்ணூறு அடி. துடைச்சுப் பார்த்தா ஒண்ணுமில்ல' என்பதுபோல் அதைப்பற்றிக் கவலையே படமாட்டேன். ஒரு சின்ன விசும்பல், ஒரு பொட்டுக் கண்ணீர் கூட எனக்கு வராது.

ஆனால் இப்போது மட்டும் தாங்க முடியாமல் அழுகை வரும். என்னைப் பொறுத்துக்கோங்கப்பா. எங்கக்கா வரட்டும். எப்படியாவது உங்களுக்கு பதில் பொய்த்தம் வாங்கி தந்துருதேன் என்று சொல்லவும் அவர் என்னை அணைத்துக் கொள்வார்.

நீ ஒண்ணும் எனக்கு பதிலுக்கு வாங்கித்தரவேண்டாம். பொழுதூர நான் கம்மாய்பக்கம் பொய்த்தத்த கொண்டுக்கிட்டு வாரேன். நீயும் அங்கிட்டு மாடு மேய்க்க வா. உன் மாட்ட நானு பாத்துக்கிடுதேன். நீ செழிக்க பொய்த்தத்தப் படி என்று சொல்வார். ஆனால் நான் அப்படி ஒரு நாளும் படித்ததில்லை.

அதேபோல் எனது தோழி வீரலட்சுமியின் அண்ணன் காலேஜில் படித்துக்கொண்டிருந்தார். அவர் ஊருக்கு வரும்போதெல்லாம் கலை மகள், ஆனந்தவிகடன் என்று வாங்கிக்கொண்டு வருவார். நான் அவரிடம் அந்தப் புத்தகங்களை கேட்டால் விரட்டு விரட்டென்று விரட்டுவார். ஏனென்றால் அந்தப் புத்தகங்களை மாடு மேய்க்கும் இடத்திற்கு கொண்டு போவேன். திரும்பி வரும்போது புத்தகங்கள் சாணி, மண் கறைபட்டு கசங்கிப்போய்க் கிடக்கும். அதனால் அவர் எனக்கு பத்திரிக்கை

கொடுக்கவே மாட்டார். ஆனால் என் தோழியிடம் கெஞ்சிக் கூத்தாடி வாங்கிக் கொண்டுபோய்விடுவேன். எப்படித்தான் பத்திரப்படுத்தினாலும் அது கசங்கிவிடும். அவர் இல்லாத நேரத்தில் அதை அவளிடம் கொடுத்துவிட்டு பிறகு அவர் மீண்டும் காலேஜிற்குப் போகும்வரை அவர் கண்ணில் படாமல் ஒளிந்துகொண்டு அலைவேன்.

ooo

எனது அம்மாவின் மூர்க்கமான குணத்தைக் கண்டு நாங்கள் எப்போதும் பயந்து கொண்டேதான் இருப்போம். உடம்பில் எப்படி காயம் பட்டாலும் வெளியே சொல்லுவதில்லை. ஒருமுறை எனக்கு முட்டியில் ஈக்கி நுழைந்துவிட்டது. நடக்க முடியாமல் கால் வீங்கி பெரிய புண்ணாகிவிட்டது. நான் அம்மாவிடம் சொல்லப் பயந்துகொண்டு கணேசனிடம் சொன்னேன். அவன் தும்பை இலையைப்போல் எந்த மருந்தும் கிடையாது என்று அதைப் பிடுங்கி வந்தான். அதைக் கசக்கி சாறை புண்ணில் விட ஈக்கி தானாகவே வெளியே வந்து புண்ணும் ஆறிவிட்டது.

என் தம்பி ராஜாவும் எனது மாமா பிள்ளைகளோடு கபடி விளையாடிக்கொண்டிருந்தோம். அப்போது எனது மாமா மகனின் பல் எனது தம்பியின் நெற்றியில் பதிந்து உடைந்தும் விட்டது. இதை அம்மாவிடம் சொன்னால் அடிப்பாள் என்ற பயத்தில் இருவருமே சொல்லவில்லை.

நான் எப்படியாவது அந்தப் பல்லை எடுத்துவிட வேண்டும் என்று முயற்சி செய்தேன். என் தம்பி வலியில் துடித்ததுதான் மிச்சம், உடைந்த பல்லை எடுக்க முடியவில்லை. இரவெல்லாம் தம்பி வலியில் அனத்திக் கொண்டும் முனங்கிக்கொண்டும் கிடந்தான். நான் அவனை சமாதானப் படுத்தி உடம்பைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே படுத்திருந்தேன். கொஞ்ச நேரத்தில் அவன் உடம்பு அனலாய் கொதிக்க முகமெல்லாம் வீங்கிவிட்டது. கண்ணே தெரியவில்லை.

விடியும் நேரம். நான் அவனைப் பார்த்துவிட்டு கதறி அழ அதன் பிறகு அம்மா வந்து விவரம் கேட்டாள். பிறகு டாக்டரிடம் போய் பல்லை எடுத்து ஊசி போட்ட பிறகு அவன் குணமானான்.

ooo

ஒருமுறை எங்கள் பிஞ்சையில் கேப்பை நடவேண்டியிருந்தது. நடுவை என்றால் விடியும் முன்பே பிஞ்சைக்குப் போய் நாற்றுகளைப் பிடுங்கி வைக்க வேண்டும். நாற்றைப் பிடுங்கி வைத்திருந்தால்தான் பாத்திகளில் தண்ணீர் பாயப்பாய ஈரத்திலேயே நட்டுவிடுவார்கள்.

இல்லையென்றால் ஈரம் காய்ந்துவிடும். நடுகிறவர்களுக்கு கட்டைவிரல் வலி எடுக்கும். தண்ணி பாய்ந்த பாத்திகளை நட்டு முடிகிறவரைக்கும் இறவையை நிறுத்தச் சொல்லி விடுவார்கள். இதனால் ஒரு நாள் வேலை இரண்டு நாளாக பிஞ்சைக்காரர்களுக்குத்தான் நஷ்டம் உண்டாகும்.

எங்கள் பிஞ்சையின் நடுவைக்கு முதல்நாளே எனது அம்மா டவுனில் மாடு வாங்குவதற்காக விலை பேசி மறுநாள் வந்து பத்திக் கொண்டு போவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டாள். மறுநாள் சீக்கிரம் போய் மாட்டை பத்திக்கொண்டு வந்தால்தான் நடுவைக்குப் போக முடியும். எங்கள் ஊருக்கும் ராஜபாளையத்திற்கும் மூன்று மைல் தொலைவு. வழியில் ஓடையும் தாவும், முள்ளும் மொடலுமாகக் கிடக்கும்.

என் அம்மா நடுவையின் அவகாச்சியில் இரவு ஒரு மணி சங்கை காலை ஐந்துமணி சங்கு என்று நினைத்துவிட்டாள். ஒரு மணிக்கு எழுந்து என்னையும் எழுப்பி, நான் போய் மாட்டைப் பத்திக்கிட்டு வாரேன்; நீ எல்லா வேலையவும் பாத்துட்டு வெள்ளனத்தில் நாத்து பிடுங்கப் போ என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். நானும் உறக்கச் சடவில் உம் கொட்டிக்கொண்டே உறங்கிவிட்டேன்.

அம்மா கொஞ்ச தூரம் போயிருக்கிறாள். கீ... என்று கிள்ளி வச்ச ஆள் கிட்டத்தில் நின்றால் கூட தெரியாதபடிக்கு இருட்டாக ஆளரவமத்து இருந்திருக்கிறது. உடனே திரும்பி வந்து என்னை எழுப்பினாள். நான் எழுந்து அவள் முகத்தை அண்ணாந்து பார்த்தேன். தெரு விளக்கின் வெளிச்சத்தில் அவள் முகம் கலவரப்பட்டுக் கிடந்தது. அப்பொதெல் லாம் தெருவில் இருக்கும் தூண்களில் சீமைத்தண்ணி விளக்கு இருக்கும். ஒருவர் வந்து பொருத்திவிட்டுப் போவார். காலையில் வந்து அமத்து வதும் அவர் வேலைதான்.

அம்மா என்னிடம் சொன்னாள். நானும் எம்புட்டோ தைரியமா தெம்பா இருப்பேன். இன்னைக்கு என்னன்னு தெரியல. மேலக்களம் தொலைவு போனேன். அதுக்குப் பெறவு போக முடியல. கொஞ்சம் விடிஞ்சப்பிறவு போவமின்னா நடுவைக்கு வரணும். இப்ப போனாத் தேன் ஆளுக காடேறமின்ன வந்துரலாம். நீ என் கூட சொக்கலிங்கப்புரத் தொலைவு வா. அதுக்கங்குட்டு ரோடு. எம் பாட்டுக்குப் போயிருவேன். நீ மாமா வீட்டில் படுத்திருந்துட்டு விடியவும் வந்துரு என்றாள். நானும் சரி என்று சொக்கலிங்கபுரம் வரை போனேன். என்னை அந்த ஊரின் மந்தையில் விட்டு விட்டு, நீ இங்க மாமா வீட்டுக்குப் போ; நான் போறேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

நான் சுற்றிலும் பார்த்தேன். இருட்டு கரேர் என்று இருந்தது. எனக்கு அவ்வளவாக அந்த மாமா வீட்டில் பழக்கம் கிடையாது. மந்தை யில் நிற்கவும் பயமாக இருந்தது. மெல்ல மாமா வீட்டுக்குப் போனேன்.

அங்கேயும் இருட்டுதான். எல்லோரும் நன்றாகத் தூங்கிக்கொண்டு இருந் தார்கள். குறட்டைச்சத்தம் வந்தது. எனக்கு மாமாவை எழுப்ப பயமாக இருந்தது. வெறுமே அங்கே நின்றுகொண்டு இருந்தால் யாராவது எழுந்து என்னைப் பார்த்து பயந்து விட்டால் என்ன செய்வது என்று நினைத்த வாறு மீண்டும் மந்தைக்கு வந்தேன்.

அந்த ஊர் பள்ளிக்கூடத் திண்ணையில் நிறையப் பேர் படுத்திருந் தார்கள். நானும் அங்கேயே படுத்தேன். தூக்கமே வரவில்லை. பள்ளிக் கூடத்தைச் சுற்றி காளை மாடுகளும், எருமை மாடுகளும் படுத்தவாறு அசை போட்டுக்கொண்டிருந்தன. அவை திரும்பும் போதெல்லாம் ஒளிச் சிதறலோடு கண்கள் பளபளத்தன. தச்சர்கள் கதவுக்கு மரம் அறுப்பது போல் எழுந்த குறட்டைச் சத்தம் என்னை அதிகமாக பயமுறுத்தியது. ஒருவர் ஏதோ சொல்லிக்கொண்டே திரும்பிப் படுத்தார். இன்னொருவர் திடீரென்று எழுந்து உட்கார்ந்து தலையை இரு கையாலும் பரபரவென்று சொறிந்துவிட்டு திரும்பவும் படுத்துக் கொண்டார்.

நம் ஊருக்கே போய்விடுவோம் என்று புறப்பட்டு விட்டேன். அது மழைக்காலம். நிலம் குளிர மழை வேறு பெய்ததில் பூமியில் புதிதாகத் துளிர் விட்டிருந்த புல் வாசத்தோடு குளிர்ந்த காற்று வீசியது. ஆனால் என் மனத்தில் இருந்த பயத்தால் வேர்த்துக் கொட்டியது. இனியும் கொஞ்ச நேரம் அங்கே நின்றால் நாமே பயத்தில் அலறிவிடுவோம் நினைத்து எழுந்து வெளியே வந்தேன். ஓடை வரையிலும் பயமில்லாமல் நடந்து விட்டேன்.

ஓடை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த ஓடைதான் பேய்களின் இருப்பிடம் என்றும் நடுச்சாமம் எல்லாப் பேய்களும் அந்த ஓடையில் வந்து விளையாடும் என்றும் பெரியவர்கள் சொல்வார்கள். அது மட்டு மில்லாமல் முன்பு ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. சொக்கலிங்கப்புரத்துப் பெண் ஒருத்தியை மீனாட்சிபுரத்தில் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அவள் நிறைமாசமாக இருக்க பிரசவத்திற்கு அவள் அம்மா வந்து கூப்பிட இவர்கள் அவளை அனுப்ப வில்லை. ஏதோ மனக் கசப்பு காரணமாக என் பொண்டாட்டிக்கு நானே பிரசவம் பாத்துக்கிடுவேன் என்று புருசன் சொல்லி விட்டான். ஆனால் அந்த பெண்ணிற்கு புருசன் வீட்டில் மாமியார் நாத்தனார் என்று ரொம்ப இடைஞ்சல் இருந்திருக்கிறது. பிரசவத்தை சாக்கு வைத்தாவது ஆத்தா வீட்டில் போய் இருந்து கொள்வோம் என்று நினைத்திருக்கிறாள். ஆனால் அதற்கும் வழி இல்லாமல் போய்விட்டது.

பெற்றவள் போன பிறகு இவள் புருசன் வீட்டாரோடு சண்டை போட்டிருக்கிறாள். பிறகு எல்லோரும் உறங்கிய பிறகு இருட்டுச் சாமத்திலேயே ஆத்தா வீட்டிற்கு புறப்பட்டு விட்டாள். அவள் கொஞ்ச தூரம் வந்த உடனே புருசன் விழித்துவிட்டான். வீட்டிற்குள் படுத்திருந்த பொண்டாட்டியைக் காணவில்லை. அங்குமிங்கும் தேடிப் பார்த்து

விட்டு, அவ இந்நேரத்துக்கு ஆத்தா வீட்டுக்குத்தேன் போவா; என்னதேன் இருந்தாலும் கட்டுன புருசனைவிட பெத்தவதான பெருசாப் போச்சு; இருட்டுன்னும் பாராம வவுத்துப் புள்ளையோட புறப்பட்டுட்டாளே என்று கோபத்தோடு அரிவாளையும் எடுத்துக்கொண்டு இவளைத் தேடி வந்துவிட்டான். இவளுக்கு நிறை மாசமாக இருந்ததால் நடக்க முடிய வில்லை. அதோடு பயம் வேறு. மெல்ல நடந்து ஓடைக்குள் இறங்கும் போது அவள் புருசனும் வந்துவிட்டான். பின்னால் காலடிச் சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தவள் திடுக்கிட்டாள். நிலா வெளிச்சத்தில் புருசன் அரிவாளோடு வருவது தெரிந்துவிட்டது. உடனே அவள் ஓட, ஓடாதே நில்லு; ஓடுனே அரிவாளால போட்டுருவேன் என்று அவனும் சொல்ல இவள் பயந்துவிட்டாள். எப்படியும் ஓடையைக் கடந்துவிட வேண்டும் என்ற அவசரத்தில் கரை ஏறப்போக மரத்து வேர் தடுக்கி அப்படியே பள்ளத்தில் விழுந்தபோது வயிற்றில் இருந்த பிள்ளை வெளியே வந்துவிட்டது. அந்த நேரத்தில் புருசனும் கிட்டே வர, கூ... கூ... ஓடியாங்க... யாராச்சும் ஓடியாங்க புள்ளயவும் தாயவும் கொல்ல வாரான் என்று கூச்சல் போட்டதோடு அவள் மூச்சு நின்றுவிட்டது.

அவள் இப்போதும் இந்த ஓடையில் பிள்ளையைத் தேடி அலைகிறாள் என்றும் சின்னப்பிள்ளைகள் யாராவது இருட்டுக்குள் ஓடைக்குள் போனால் உடனே ஆசையோடு வந்து கட்டிக்கொள்வாள் என்றும் சொல்வார்கள். நான் ஓடை அருகில் வந்துவிட்டேன். அதைக் கடந்துதான் எங்கள் ஊருக்குப் போக வேண்டும். வரும்போது அம்மா கூட வந்ததால் எனக்கு பயம் தெரியவில்லை. ஆனால் இப்போது பயமாக இருந்தது. எதிர்க்கரையில் வயிற்றுப்பிள்ளைக்காரி நிற்பதுபோல் தெரிய கண்ணை இறுக மூடிக்கொண்டேன். மனத்திற்குள் சிவபெருமான் நினைவுக்கு வந்தார். மனசு திக்திக்கென்று அடித்துக்கொண்டது. எதிர்க்கரையின் ஒவ்வொரு அசைவும் என் வயிற்றைக் கலக்கியது. திரும்பி சொக்கலிங்கபுரமே போய்விடலாமா என்று பார்த்தால் அதுவும் பயமாகத்தான் இருந்தது. எவ்வளவு நேரம்தான் பயத்தோடு நிற்பது! இருட்டுக்குள் மரங்களும் கிளைகளும் சரியாகத் தெரியில்லை. அதனால் அங்கங்கே கருப்பான திட்டுகள் அலையலையாக அந்தரத்தில் மிதப்பது போல் தெரிய வியர்வை பெருகியது. ஓடையின் இருகரைகளும் பொந்தோடிக் கிடந்தன. கரையோரத்தில் பரட்டையாய் நின்றிருந்த விடலைப் பனைமரங்கள் என்னை நெருங்கிவருவதுபோல் தோன்றியது. அந்நேரத்துக்கு ஒரு கரிச்சான் குருவி அலற நான் கண்களை இறுக மூடிக் கொண்டேன். கொஞ்சநேரம் அப்படியே நின்றுவிட்டு அரைக்கண்ணால் சுற்றிலும் பார்த்தேன். மேகத்தடுப்பினூடே கருத்திருந்த வானத்தில் ஒன்றிரண்டு வெள்ளிகள் மட்டும் நுரைக்குள் மிதந்த முகங்களைப்போல் தெளிவில்லாமல் தெரிய அந்தத் தெம்பில் நான் ஊரைப் பார்த்து நடந்தேன். தரையைப் பார்த்துக்கொண்டே விறுவிறுவென்று நடந்தேன்.

இரண்டு பக்கமும் பேய்களும் அதன் கைகளும் என்னை நெருங்குவது போல ஒரு பிரமை! எப்படியோ ஒருவழியாக கண்ணை மூடியும் மூடாமலும் ஊர் வந்து சேர்ந்தேன். அதன் பிறகுதான் மூணே முக்கால் சங்கு அடிக்கிறது. அப்படியென்றால் இரண்டு மணிக்கு ஓடையில் நின்றிருக்கிறேன். எனது தைரியத்தை நானே மெச்சிக்கொண்டு வேலைகளைச் செய்ய ஆரம்பித்தேன்.

காலையில் மாடு வாங்கிக்கொண்டு வந்த அம்மா நல்லா நடுச் சாமத்தில் உன்ன மந்தையில விட்டுட்டுப் போனேனே எப்படி வந்தேன்னு விவரத்தை கேட்க நானும் சொன்னேன். அவளும் தன் கதையைச் சொன்னாள்: நான் ரோட்டுவழியே போனேன். கொஞ்சதூரம் போனதும் ஒரு களவாணிப்பய பின்னாலேயே வந்தான்; நான் பதறிப் போய் வெரசயா எட்டு வச்சேன். நல்லவேளை அந்நேரத்துக்கு ஒரு வாழைக்காய் வண்டி வந்துச்சு. அவனை தொணப் பிடிச்சிப் போயிட்டேன். அங்கே போயி மாட்டுக்காரகள எழுப்புனேன். ரெண்டு மணிக்கு உனக்கு யாரு மாடு பத்தி விடுவா, பேசாம வெளியே உக்காந்திருன்னு சொல்லிட்டாக. விடிஞ்சாப் பெறவு மாட்டை பத்திட்டு வாரேன்.

•

பிஞ்சைகளுக்கு உரத்துக்கென்று குப்பை அடிப்பதோடு ஆட்டுக் கெடைதான் அமத்துவார்கள். அப்போது பெரியவர்களோடு சின்னப் பிள்ளைகளான நாங்களும் போவோம். பெரியவர்களோடு கெடைக்குப் போவதென்றால் எங்களுக்கு ரொம்ப ரொம்ப ஆசை. ஏனென்றால் அவர்கள் முன்னோர்களின் வீரதீரமான கதைகளோடு பேய்க்கதைகளையும் சொல்வார்கள். அதோடு கல்லடுப்பு கூட்டி நிலக்கடலை வறுப்பார்கள். கடுங்காப்பி வேறு போடுவார்கள். சில சமயம் ஆட்டுப்பாலைப் பீச்சி காப்பியில் ஊற்றுவார்கள்.

நேரம் ஆக ஆக இருட்டு கருத்துக்கொண்டு வரும். குட்டிகளுக்கு பாலூட்டும் ஆடுகளின் மே... என்ற கத்தல்கள் காதைப் பிய்த்துக்கொண்டு போகும். சூறாவளித் தாத்தாதான் கெடைகளுக்கு கீதாரியாக இருந்தார். சில சமயங்களில் கிழக்குப் பக்கமாக வானத்தை உத்துப் பார்ப்பார். இளவட்ட அண்ணன்கள், சீய்யா... அங்க என்னத்தப் பாக்கீரு என்றால் 'ஈளையும், கொங்கையும் எதுத்து மின்னுது. பள்ளத்தில கெடக்க கூட்டத் தூக்கி மேட்டுல போடுங்க' என்பார்.

சில சமயங்களில் எங்களை வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள். நாங்கள் போக மாட்டோம் என்று அடம்பிடித்தால், சரி விடுங்க; அங்கன தெருவுல படுத்துக்கிடக்கதுக இங்கன படுத்துட்டு போவுதுக. நமக்கும் புள்ளகுட்டிக கூட படுத்திருக்கோமின்னு நெஞ்சுக்கு ஒரு நெறவா

இருக்குமில்ல என்று சொல்லிவிடுவார்கள்.

நடுச்சாமம் சிலவேளை கூகூ என்று சத்தக்காடாயிருக்கும். புடி, விடாத, நம்ம கண்ண பொட்டுன்னு போடாம பொட்டான் பொட்டான்னு முழிச்சிக்கிட்டு இருக்கையிலேயே தாயோளி நரி வந்து அரவமில்லாம ஆட்டுச் சங்கப் புடிச்சி தூக்கிட்டுப் போவுதே. கொஞ்சம் கண் அசந்திருந்தா குடி இல்ல கெட்டுப் போயிருக்கும் என்று சின்ன தீப் பந்தத்தை கொளுத்திக்கொண்டு கெடையைச் சுற்றிச் சுற்றி வருவார்கள். நரியிடம் கடிபட்ட ஆடு நாலு காலை நீட்டியவாறு உயிருக்குத் துடித்துக்கொண்டிருக்கும். சில சமயம் அந்த ஆடுகளுக்கு பச்சை இலை வைத்துக் கட்டி பண்டுவம் பார்ப்பார்கள். இனிதப்பாது என்று தெரிந்தால் இவர்களே அந்த ஆட்டை அறுத்து அந்நேரத்துக்கே 'கொய்யாப்பூ' கொளுத்தி வேக வைத்து விடுவார்கள். இவர்களின் கூச்சல் கேட்கும் போதே நாங்கள் எழுந்து விடுவோம். சிவப்பாய் மொழுமொழுவென்று எரியும் தீவட்டி வெளிச்சத்திற்கு சுற்றிலும் உள்ள இருட்டு எங்களை அதிகமாய் பயமுறுத்தும். மரங்கள் எல்லாம் தலைவிரித்தாடும் பேயைப் போல் எங்கள் கண்ணுக்குத் தெரிய பெரியவர்களை ஒட்டிக்கொண்டு நிற்போம்.

ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு மழை தேவையிருந்தது. மழையால் கஷ்டமும் இருந்தது. சுற்றியுள்ள குளங்களெல்லாம் பெருகி ஊரே தண்ணியில் மிதக்கும். அப்போது தினமும் மந்தையில் பெரிய ஆட்கள் ஒரு கூட்டம் போடுவார்கள். இவர்களுக்கு சூறாவளி தாத்தாதான் தலைவர். யார் யார் வீட்டில் எந்த் எந்தப் பிள்ளைகளைக் காணோம், எங்கு போனார்கள் என்று விசாரிப்பார்கள். பிறகு அந்தந்தப் பக்கத்துக்கு ஆட்களை விட்டு அக்கரையில் இருப்பவர்களை ஊருக்கு கூட்டி வருவார்கள்.

இந்த சூறாவளித் தாத்தா பெயர் செல்லாண்டி. ஒருமுறை பட்டாளத்துக்காரர் ஒருவர், இந்தாரும் தாத்தா நீரு அடிக்கடி கெடை காவலுக்குன்னும் தண்ணி பாய்ச்சன்னும் இருட்டுக்குள்ளேயே அலைதவரு; இந்த பேட்ரி லைட்ட வச்சிக்கோரும் என்று அதை எரியவிட்டு தாத்தா கெடைக்குப் போய்க்கொண்டிருக்கும்போது கையில் கொடுத்து விட்டார். இவர் கெடைபார்த்துவிட்டு நடுச்சாமம் மாத்து ஆள் வந்த பிறகு தூங்க புறப்பட்டார். தூங்கும்போது இந்த லைட்டு எதுக்கு எரியணும் என்று நினைத்து அதை அமத்துவதற்கு ஊதி ஊதிப் பார்த்திருக்கிறார். தொண்டையும் வயிறும்தான் வலித்திருக்கிறதே தவிர லைட்டு அணையவில்லை.

தாயோளி என்ன மசுரு மாதிரி லைட்டு கொடுத்திருக்கான், மனுசன் என்ன ஊதுனாலும் அமர மாணேங்கு என்று சொன்னவர் தலைமாட்டில் வைத்துப் படுத்துக்கொண்டார். விடியற்காலம் செல்லில் மருந்து

இல்லாததால் அதுவாகவே அணைந்துவிட்டது. இவர் ஊருக்குள் வந்து, என்னடா லைட்டு! ஊதுகாத்துக்கும் அமரல! நான் வாயால ஊதுனதுக்கும் அணயல! ஒரு சூறாவளிக் காத்துக்கில்ல இது அமந்து போச்சு என்று சொல்ல பட்டாளத்துக்காரர் சிரித்துவிட்டு பேட்ரியை அணைக்க வேண்டிய முறையை சொல்லியிருக்கிறார். அதிலிருந்துதான் அவருக்குப் பெயர் சூறாவளித் தாத்தா.

ஙஙங

வைத்துக்கொண்டு நடப்போம்.

இதற்குள் இருட்டிவிடும். அந்த இருட்டை நிலவில் வடியும் பால் வெளிச்சம் கலைத்துவிடும். வழி நெடுக பூவரசு, வாகை, வேம்பு என்று மரங்களின் சேர்க்கையான ஊதுகாற்று. செம்மண்ணூடே இரு பிரிவாக நீண்டு செல்லும் வண்டிப்பாதை. வரும்போது மடியில் நாங்கள் பறித்து வைத்திருக்கும் எலந்தப்பழம், முள் சேர்க்கையில்லாத கத்தாழைப் பழம், சொடிஞ்சி கிடக்கும் காரம் பழங்களின் கனம் குறைந்துகொண்டே வரும். எங்கள் சந்தோசத்தை சொல்லி முடியாது.

ஊருக்குள் தலைச்சுமையோடு நுழையுமுன்பே புதிதாக கல்யாண மான அக்கா, சித்திகள் எல்லாம் எங்களை ரகசியமாகக் கூப்பிட்டு ஆளுக்கு கொஞ்சம் மண்ணை அள்ளிக்கொண்டு எங்களுக்கு சீனிக் கிழங்கு, பணியாரம் என்று பதிலுக்கு கொடுப்பார்கள். நாங்க மண்ண அள்ளுனத யாருகிட்டயும் சொல்லிராதீக; பிள்ளயாரு கொளத்து மண்ணு திங்கத் திங்கத் தேனா இருக்கு! நானு இப்படி கரம்ப மண்ண திங்கது தெரிஞ்சா என் மாமியாளும் புருசனும் வசவு உரிப்பாக. பிறக்க புள்ள கருப்பா போயிருமாம். இவுக லச்சணம் கணக்காத்தேன் புள்ளயிருக்கும். இந்த கரம்ப மண்ணு தின்னாப்பலயா கருப்பா போவப்போவுது என்று புலம்புவார்கள். எங்களுக்கு அதைப்பற்றி கவலை இல்லை. தின்பதற்கு திண்பண்டம் கிடைத்ததா; அதுபோதும் என்று இன்னும் கொஞ்சம் சந்தோசத்தோடு வருவோம்.

ஜ ஜ

மந்தையிலிருந்த வெட்டவெளியில்தான் எங்கள் ஊர் அம்மன் இருந்தது. இந்த அம்மன்தான் மீனாட்சிபுரத்திற்கு முதலில் வந்தது. பிறகு தான் ஊர் உருவானது. அதற்குப் பின்னால் ஒரு வரலாறு இருக்கிறது. நாலைந்து தலைமுறைக்கு முன் சாப்டூர் ஜமீன் ஆட்களில் ஒருவரான சங்கரபாண்டியன் என்பவர் என்ன காரணத்தாலோ வேப்பங்குளம் ஜமீனுக்கு வந்து விட்டார். சத்திரப்பட்டி பகுதியின் நிர்வாகியாக இங்கே வந்தார். சங்கிலிக்காளை என்ற மறவருக்கு இவர் பணம் கொடுக்க வேண்டியிருந்ததாம். மங்கம்மா மண்டபத்துக்கருகே இருக்கும் திலாக் கிணற்றுக்கருகே ஒரு நாள் இருவருக்கும் வாய்த்தகராறு முற்றிவிட்ட தாம். பணத்தைக் கொடு இல்லைன்னா ஒன் பொண்டாட்டியக் கொடு அவர் கேட்க, சங்கரபாண்டியன் வெறியோடு சூரியை எடுத்து அவரைக் குத்த சங்கிலிக்காளை உயிர் பிரிந்துவிட்டது. கொலைக்கான பிராயச் சித்தமாக ஏழு ஊர்களை அந்த வட்டாரத்தில் வேப்பங்குளம் ஜமீனுக்கு உட்பட்ட புறம்போக்கு நிலத்தில் உருவாக்குவதாக மதுரை மீனாட்சி யிடம் வேண்டிக் கொண்டாராம். மீனாட்சி பெயரில்தான் எங்கள் ஊர்; மதுரையிலிருந்து குற்றாலம் போகும் மங்கம்மா சாலை மேலேயே

இருக்கிறது. இன்னும் ஆறு ஊர்கள்: சொக்கலிங்கபுரம், சங்கரபாண்டிய புரம், அழகாபுரி, ராமலிங்கபுரம், கிருஷ்ணாபுரம், சிவகாமிபுரம். பெருமாள்தேவன்பட்டியிலிருந்து எங்கள் கிருஷ்ண வகை சாதியினர் மாடுகளோடு வந்து மீனாட்சிபுரத்திலும் சொக்கலிங்கபுரத்திலும் குடியேறினார்களாம். 25 வருஷம் கழித்து சங்கரபாண்டியன் எங்கள் ஊர் கானாங்குளம் கம்மாய்க்கரையில் சங்கிலிக்காளையின் வாரிசுகளால் வெட்டுப்பட்டு இறந்தார். கம்மாக்கரையில் அம்மச்சியா கோவிலில் அவருக்கு சிலை வைத்துக் கும்பிடுகிறார்கள்.

ஆடுகளை அடைக்கும் ஓலையால் வேய்ந்த கூடுதான் அம்மனுக்கு மேல் குடை போல் நின்று நிழல் கொடுத்துக் கொண்டிருக்கும். அருகில் இரண்டு வேப்பமரங்கள். நிலத்தில் கோலப்புள்ளி வைத்ததுபோல் பூ பரத்தியிருக்கும். அடர்ந்த பச்சையினூடே காற்று வீச வெளியிலிருக்கும் வெக்கையை வேம்பு விரட்டி அடிக்கும்.

அம்மனுக்கு பாதுகாப்பாய் இருக்கும் அந்த வேப்பமரங்களில் எந்த குருவியாவது கூடுகட்டினால் அதற்குப் பாதுகாப்பில்லை. ஒரு முட்டைகூட மிஞ்சாது. என் தம்பியே முதலில் மரத்தில் ஏறி அந்த கூட்டைக் கலைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான்.

வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் பாட்டி, அத்தை என்று பெரியவர்கள் வந்து சூடமும் பத்தியும் ஏற்றி வைத்துக் கும்பிட்டுவிட்டுப் போக வேப்பமரக் காற்றோடு சேர்ந்து மணக்கும்.

சில சமயங்களில் காத்து, கருப்பு பட்ட வயசுப் பெண்களை திருநூறு போடுவதற்காக கோயிலுக்குக் கூட்டிப் போவார்கள். அப்போது நாங்கள் பூசாரியைக் கூப்பிட ஓடுவோம். அவர் மாட்டுக்கு தண்ணி காட்டிக்கொண்டோ, படப்பில் கூளம் பிடுங்கிக்கொண்டோ ஏதாவது வேலைகளில் இருப்பார். நாங்கள் விஷயத்தை சொன்ன உடனே வேலையை அப்படியே போட்டுவிட்டு கை கால்களைச் சுத்தம் பண்ணி விட்டு வருவார். சிலசமயம் இன்னைக்கு சாப்புட்டுட்டேன்; நாளைக்கு வாரேன் என்று சொல்லிவிடுவார்.

சித்திரை மாதம் பெருமாள்தேவன் பட்டியில் பொங்கல் என்றால் வைகாசி மாதம் எங்கள் ஊரில் பொங்கல் வரும். இந்தப் பொங்கல் பௌர்ணமியை ஒட்டிய செவ்வாய் புதன்கிழமையில் வரும். உற்றார் உறவினரோடு சேர்ந்து கொண்டாடுவோம்.

வைகாசி மாதம் பொங்கல் சாட்டியவுடன் ஊர் ஆட்கள் எல் லோரும் வீட்டுக்கு ஒரு கிடுவையைக் கொண்டுபோவார்கள். அது தங்கள் கிடுவை என்பதற்கு அடையாளமாக சுண்ணாம்பு, கரியால் குறி ஏதாவது போட்டிருப்பார்கள். பொங்கல் சாட்டிய மறுநாளே அம்மன் இந்த கிடுவையின் வளையத்தில் சிக்கிக்கொண்டு மனிதர்களின் கைப்பாவை

யாகிவிடும். பிறகு அதற்கு தினமும் மஞ்சள் குளியலும், பால் குளியலும் தான். வெறும் கற்சிலையாக இருக்கும் அம்மன் கண்மலர், புருவமலர் வைத்து மஞ்சள்பட்டில் பொன்னாக ஒளிரும்.

பெரியவர்கள் எல்லாம் ஒரு மாதத்திற்கு முன்பே பொங்கல் வர இன்னும் ஒன்னு குறைய முப்பது நா, நிறைய முப்பது நா இருக்கு என்று கணக்கு போட ஆரம்பித்து விடுவார்கள். நாங்கள் துட்டு சேர்த்து வைப்போம்.

பொங்கலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னாலேயே ஊர் சாட்டி விடுவார்கள். அன்றையிலிருந்து யாரும் ஊரை விட்டுப் போகக்கூடாது. செருப்புக் காலோடு நடக்கக்கூடாது. அப்போதிருந்து பொங்கல் பேச்சு தான். வேப்பிலைதான். பொங்கலுக்கு மட்டும் அரிசிச் சோறு, பருப்பு, வெஞ்ஞனம் எல்லாம் கிடைக்கும். அதோடு கறிக்குழம்பும். பொங் கலுக்கு வரும் விருந்தாளிகள் துட்டு தருவார்கள். நாங்கள் மாடு மேய்க் கவோ வேலைக்கோ போக வேண்டாம். அடியோ வசவோ கிடையாது.

புதுச்சட்டை, பாவாடை கிடைக்கும். பெரியவர்களுக்குப் பிடித்ததுதான் எங்களுக்குப் பிடிக்கவேண்டும். சுடச்சுட சோறும் குழம்பும் கிடைக்கும்போது உடையைப் பற்றிய கவலை இல்லை. முக்கால்வாசி நாள் வெறும் கஞ்சி குடிக்கிறவர்களுக்கு இது எவ்வளவு சந்தோசம்! பொங்கல், தீபாவளி தவிர்த்து மற்ற நாட்களில் இரவில் மிஞ்சிய வெஞ்ஞனம், பிறகு புளிச்ச தண்ணியில் உருட்டிப் போட்டிருக்கும் வெறும் சோறு, கூழுதான் கிடைக்கும்.

பொங்கலுக்கு பெரியவர்கள் அரிசி, பருப்பு, விறகு என்று சேர்த்து வைப்பார்கள். எங்கள் சேமிப்பையும் சொல்ல வேண்டும். அப்போது பவுடர் கிடையாது. குங்குமம் கிடைக்கும். காட்டு வேலைக்கு குங்குமம் சரிப்படாது. வியர்வையில் அழிந்துவிடும். அதனால் நாங்கள் கம்மாயில் போய் கருவேலங்காயைப் பறித்து வருவோம். அதை நன்றாக இடித்து சிரட்டையில் பிழிந்து ஒரு இரும்பைப் போட்டு வைத்து விடுவோம். இரண்டு நாளில் அது கருப்பாக மாறிவிடும். அதுதான் பொட்டு.

பிறகு சத்திரப்பட்டிக்குப் போவோம். எங்கள் ஊரில் கடைகளே கிடையாது. அதனால் எதற்கெடுத்தாலும் அங்குதான் போக வேண்டும். அந்த ஊரில் நெசவாளர்கள்தான் குடியிருப்பார்கள். அதனால் தெரு முழுக்க பாவு நூலை விரித்துவிடுவார்கள். நாங்கள் குனிந்துதான் போக வேண்டும். அங்குதான் தையற்காரர்கள் இருக்கிறார்கள். அங்கு போய் அவர்கள் காலடியில் கிடக்கும் புதுவெட்டுத் துணிகளை பெறக்கி வருவோம். தலைக்கு குளிப்பதற்கு கரம்பை மண்தான். எங்கள் சாதியில் அப்போதெல்லாம் பித்தளைக் கம்மலோ, பாசியோ போடக்கூடாது. காது வளர்த்தவர்கள் மட்டும் ஈயக்குணுக்கு போட்டிருப்பார்கள்.

அதனால் நாங்கள் காது மூளி கழுத்து மூளியாக இருப்போம்.

காடுகளில் சவுரிச் செடி நீளமாய் தரையில் படர்ந்து கிடக்கும். அதைப் பிடுங்கி வருவோம். யாரும் வீட்டில் குளிப்பது கிடையாது. அதைப்பற்றி பெரியவர்கள் கவலையும் படமாட்டார்கள். குளிப்பாட்டியும் விடமாட்டார்கள். ஒரு மஞ்சள் எடுத்து இரண்டு ஆமணக்கு விதை (முகத்தில் நன்றாக மஞ்சள் பிடிக்குமாம்) வைத்து அரைத்து எடுத்துக்கொண்டு குளம், கிணறு என்று போவோம். எல்லோருக்கும் நீச்சல் தெரியும். கிணற்று கமலையில் தூரி ஆடிக்கொண்டே விளையாட்டுக்கு கூ.... கூ... என்று கூவிக்கொண்டே கிணற்றுக்குள் விழுவோம். பக்கத்தில் வேலை செய்பவர்கள் இந்த கூச்சலைக் கேட்டு பதறியடித்து ஓடிவருவார்கள். நாங்கள் கூடிக்கிடந்து சிரிக்க, வைதுவிட்டுப் போவார்கள்.

செவ்வாய், புதன் இரண்டு நாள் பொங்கல். பண்டாரம் வந்து ஊருக்குள் இருக்கும் எல்லா வீட்டிற்கும் 'பூ' கொடுத்துவிட்டு போவார். அதற்கு 'சுதந்திரம்' களத்தில் தானியம் அளக்கும்போது இவர்களுக்கும் கொடுப்பார்கள். வாங்கிக் கொள்வார். அவர் மட்டுமல்ல, துணி துவைப்பவர்கள், செருப்பு தைப்பவர்கள், தச்சுஆசாரி, கொல்லாசாரிகள், பானை செய்பவர்கள் எல்லோரும் கருது அடிக்கும்போது களத்திற்கு வந்துதான் தானியம் வாங்கிக்கொண்டு போவார்கள். வண்ணார், சக்கிலியர் மட்டும் காலையும் மாலையும் வீட்டில் வந்து கஞ்சி வாங்கிக்கொண்டு போவார்கள்.

நாங்கள் குளித்துவிட்டு அந்த சவுரிச் செடியை வைத்து சடை போட்டுக் கொள்வோம். தையற்காரர்களிடம் பெறக்கி வந்த துணிகளை அழகாக அடுக்கி சடையில் குஞ்சரமாகக் கட்டிக்கொள்வோம். பொங்கலுக்கு முதல்நாளே மருதாணியைப் பறித்து வந்து கோழியின் கழிவை வைத்து அரைத்து உள்ளங்கை, உள்ளங்கால், கால் விரல், கைவிரல் எல்லாவற்றிலும் போட்டுக்கொண்டு கருப்புச் சாந்தைக் குழைத்து நெற்றியில் பொட்டு வைத்து கண்களிலும் தடவிக்கொள்வோம். கண் எரியும். காதில் முன்புறம் கொஞ்சம் பெரியதாக, பின்புறம் சிறியதாக இருக்கும் வேப்பங்குச்சியைக் குத்த அது முன்புறம் சின்னதாக வெள்ளைப் பொட்டாகத் தெரியும். இதில் சிவப்பு மிட்டாய் வேறு. உதடு சிவப்பாக இருக்கும். உச்சந்தலையில் எந்த நேரமும் சுமை எடுப்பதால் மயிர் மட்டும் கத்தரித்ததுபோல் நிமிர்ந்து நிற்கும். இந்த அலங்காரத்தோடு பொங்கல் முடிந்துவிடும்.

வைகாசி மாதம் பிறந்துவிட்டாலே முத்தையா சீயானுக்கு கௌரவம் கூடிவிடும். அவர்தான் எங்கள் ஊர் சாமிகொண்டாடி. எங்களுக்கும் பொங்கல் என்றால் கொண்டாட்டம்தான். மரங்களில் ஒட்டிக்கிடக்கும் நத்தைக் கூடுகளைக் கொண்டுவந்து ஓட்டையிட்டு நூலில் கோர்த்து காலில் கையில் கழுத்தில் வளையம் வளையமாகக் கோர்த்துக்கொண்டு சாமி ஆடியபடி போகும் சீயான் பின்னாலும் முன்னாலும் நாங்களும் ஆகோய் அய்யாகோய் என்று ஆடிக்கொண்டு போவோம்.

அன்றைக்கென்று நெருஞ்சி முள்ளை கணேசன், என் தம்பி, இன்னும் சில பையன்கள் பைநிறையப் பெறக்கிக்கொண்டு வருவார்கள். இந்த சீயானுக்கு சாமி வந்துவிட்டால் வில்லாக வளைந்துகொண்டு பின்னாலேயே போவார். இளவட்டப் பையன்கள் எல்லாம் பின்னால் நின்று அவரைப் பிடிக்க வேண்டும். ஆனால் அவர்களின் பிடிக்கு அகப் படாமல் அநியாயத்திற்கு அவர் குதிப்பார். உடனே பெரியவர்கள், ஏலேய் சாமிகொண்டாடிய நல்லாப் புடிங்கடா; விழுந்துட்டாருன்னா உடம்பு சேதமாயிருமில்ல என்று இளவட்டங்களை அதட்டுவார்கள்.

பிறகு சீயானின் முன்னால் போய் நெடுஞ்சாங்கிடையாகக் காலில் விழுந்து கிடப்பார்கள். சாமி எந்திரிப்பா என்று சொல்லும்வரை அப் படியே படுத்திருப்பார்கள். இவர் எந்திரி என்றே சொல்லமாட்டார். ஆவேசமாகக் குதிக்கத்தான் செய்வார். உடனே பையன்கள் எல்லோரும் மெல்ல, சீயான்... இதுக்கு மேல குதிச்சீரு, நெரிஞ்சி முள்ளப் போட்டுரு வோம்; பேசாம இரும் என்று சொல்வார்கள். இவர்கள் இப்படி சொன்னதைக் கேட்டதும் சீயானுக்கு கோபம் எக்கச்சக்கமாக வரும்.

உடனே பின்னால் முன்னால் நிற்கும் பையன்களின் உச்சிமயிரைப் பிடித்து தன் முன்னால் நிறுத்திக்கொண்டு சாட்டையை ஓங்க பையன்கள் தூசிக்கோட்டையாக ஓடுவார்கள். பெரியவர்கள் ஆசாரம் ஆசாரம் என்று பணிவுடன் கும்பிட்டுக்கொண்டே அவர் பின்னால் வருவார்கள். கோயி லுக்கு முன்னால் வந்து சாமி ஆடுவதோடு பக்தர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக 'வருதி' சொல்லவேண்டும். பையன்கள் அவர் ஆடும் இடத்தில் நெருஞ்சி முள்ளைப்போட்டுவிட்டு சற்று தள்ளி நின்று கொண்டு வேடிக்கை பார்ப்பார்கள். சீயான் கையில் அப்போது தீவட்டி யைக் கொடுப்பார்கள். அதன் அனல் தங்கள் மேல் அடிக்கும் என்பதால் யாரும் அவரை நெருங்க மாட்டார்கள். சீயான் ஆய்... என்று அவயம் போட்டுக்கொண்டு இரண்டு எட்டுதான் எடுத்து வைப்பார். காலில் நெரிஞ்சிமுள் அப்பிக்கொள்ள சீயானுக்கு சாமி விட்டுவிடும்.

மீண்டும் அவர் மீது சாமியை வரவழைப்பதற்காக கொட்டடித்து குலவை போட சாமி வந்துவிடும்! ஆனால் கோயிலுக்கு முன்னால் நின்று ஆடவே ஆடாது. ஊர் நாட்டாமையும், பூஜை பண்ணுகிறவர்களும் பையன்களைத் திட்டிக்கொண்டே அந்த முள்ளை மாற்றி மாற்றி மிதித்துவிட்டு சுத்தம் செய்வார்கள்.

3

அக்கா சொல்லித்தான் எனக்கு அப்பாவின் கதையெல்லாம் தெரியும். ஊருக்கு வரும்போதெல்லாம் முற்றத்தில் படுத்துத் தூங்குமுன் பழைய கதைகளைச் சொல்வாள்.

எனது பெரியப்பா போலீஸாக சென்னையில் இருந்தார். அப்போது எனது அப்பா வேலையில்லாமல் இருக்க பெரியப்பா, தம்பி நீ இங்கன இருந்தா நல்ல கஞ்சி தண்ணி குடிக்காம மெலிஞ்சி போயிருவ. மெட்றாசுக்கு வந்து என்கூட இரு. தேரத்துக்குத் தேரம் நல்லா சாப்பிட்டு பாலு கீலு குடிச்சி கொஞ்சம் உடம்ப தேத்து. உன்னயும் போலீசுல சேத்து விட்டுருதேன் என்று அவரை கூடவே கூட்டிப்போய் விட்டார்.

பெரியப்பாவிற்கும் ஆறு பிள்ளைகள். பெரியப்பா மனைவியின் துணைக்காகவும் அழுகிற பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வதற்காகவும் அவரது மாமியாரும் மெட்றாஸ் போய்விட்டார். அவளுக்கு என் அப்பாவைக் கண்டாலே பிடிக்காமல் போய்விட்டது. நிதமும் வெட்டியில அலஞ்சிக்கிட்டு ஒவ்வொரு வட்டுலு சோத்த வேறு தின்னுக்கிட்டு இங்கன எதுக்கு இருக்கான்? ஒரு முழுத்த எளந்தாரிக்கு மூணு தேரத்துக்கும் கஞ்சி ஊத்த முடியுமா? என்று நினைத்துக்கொண்டு அவரைக் கண்ட போதெல்லாம் கடுகடுத்திருக்கிறாள். அதோடு மகளிடமும், ஏத்தா உம் புருசனுக்கு ஒரு கூறுமில்ல கணக்குமில்ல. ஒத்த ஆளு சம்பாரிச்சி உனக்கும் உம் புள்ளைகளுக்கும் கஞ்சி ஊத்தறதே பெருசு. இதுல இவன் வேற எதுக்கு வந்து கெடக்கான்? உம்புருசன் கிட்ட இத ஒளிவுசுளுவா எடுத்துச் சொல்லி உங் கொழுந்தன முடுக்கிவிட வழியப்பாரு என்று சொல்லியிருக்கிறாள்.

பெரியம்மாவும் இதைப் பற்றி பெரியப்பாவிடம் சொல்லியிருக்கிறாள்.

என் தம்பி எங்கிட்ட இல்லாம எங்கிட்டு போவான்? அவனுக்கு ஒரு வேல கெடைக்கதண்டியும் இங்கனதேன் இருப்பான். நீ இருக்கன்னா இரு. இல்லேன்னா உங்காத்தாளக் கூட்டிக்கிட்டு ஊருல போயி இரு. என் தம்பிக்கு வேல கெடச்சப் பெறவு உனக்கு நானு கடிதாசி போடுதேன், வா என்று சொல்லிவிட்டார்.

அதன்பிறகு பெரியம்மா பேசவில்லை. ஆனால் மாமியாருக்கு தன் மருமகன் மீது சொல்ல முடியாத கோபம். நாளைக்கு ஒரு லாவம் நட்டமின்னு வந்தா கட்டுன பொண்டாட்டிதேன் அனுபவிப்பா. கூடப் பெறந்தவனா வருவான்? என் பங்கப் பிரிச்சிக் கொடுரான்னு நெஞ்சில ஏறி மிதிச்சாப்பல கேட்டு அடிக்க வருவான். இந்த அப்புராணி மனுசனுக்கு இது தெரியலயே என்று முகத்தைப் பொரிய வைத்துக் கொண்டு அப்பாசாப்பிட வரும்போதெல்லாம் முணுமுணுத்தவாறு தன் கோபத்தைக் காட்டியிருக்கிறாள்.

என் அப்பா அவர் சாப்பிடுவது மட்டுமில்லாமல் அடிக்கடி தன் நண்பர்களைக் கூட்டி வருவார். ஏதாவது வேலையாக சென்னைக்கு வரும் எங்கள் ஊர்காரர்களையும், வாங்க நம்ம வீடு இருக்கேல எதுக்கு அங்கிட்டு இங்கிட்டுப் போய்கிட்டு என்று கூட்டிக்கொண்டுபோய் தங்க வைப்பார். அதோடு அவர்களோடு ஜாலியாக பேசுவது சிரிப்பது என்று இருப்பதைப் பார்த்த பாட்டிக்கு வெளம் வந்துவிட்டது.

தாயீ, இங்கன நடக்க அக்ரமத்தயும் அநியாயத்தையும் பாத்துக் கிட்டு என்னால இனியும் இருக்க முடியாது. நானு ஊருக்கு போறேன் என்று மகளிடம் சொல்லிவிட்டு பொட்டணத்தைக் கட்டிவிட்டாள்.

ஆத்தா நீ போய்ட்டேனா நானு வாய்ப்புள்ளையும் கைப்புள்ளை யும் வச்சிக்கிட்டு ஒத்தயில என்ன செய்வேன் என்று மகளும் கெஞ்சி யிருக்கிறாள்.

வாய் செத்த கழுதய மவளா பெத்த கொடுமைக்கு என்ன செய்ய? உன் புருசன் கிட்டச் சொல்லி உங் கொழுந்தன முடுக்கத் துப்பில்ல. நானு உன் புருசன் கிட்ட ஊருக்குப் போறேன்னு சொல்லப்போறேன். அவுக எதுக்கு அயித்த போறீக இருந்துட்டுப் போங்கன்னு மட்டும் ஒரு வாத்த சொல்லட்டும், அப்ப வச்சிக்கிடுதேன். நானு ஒண்ணு வீங்கச்சி, வெறுங் கச்சி இல்ல, உங்க புள்ள குட்டிய பாத்துக்கிட்டு உக்காந்திருக்க! எனக்கும் கோடி சனத்தோட, கோடி காடுகரையும் இருக்கு. நானு இங்கன இருக்கணு மின்னா சின்ன மருமவன ஒரு கட கண்ணியப் பாத்து இருக்கச் சொல்லு மின்னு கட்டுன்ன பேச்சும் கடிய வாத்தையுமா சொல்லிப் போடுதேன் என்று சொல்லிவிட்டாள்.

மருமகனிடம் போய், அய்யா இன்னைக்கு நானு ஊருக்குப் போறேன்; என்னய வண்டியேத்தி விடுங்க என்று சொல்லியிருக்கிறாள்.

போய்ட்டு வாங்க அயித்த, உங்களுக்கு அங்கேயும் உண்டனா சோலி இருக்கும் என்ற பெரியப்பா ஒரு மழைக் கோட்டை எடுத்துக் கொடுத்தார். இந்தாங்க அயித்த. இங்க இருந்தாப்பல அங்க வீட்டுக் குள்ளயே இருக்க முடியாது. வயலு வரப்புன்னு போவணும். மழ தண்ணி காலத்தில இந்த கோட்ட தலவழியா போட்டுக்கோங்க. ஒத்தப் பொட்டு தூத்த மேல விழாது. காரவீட்டுக்குள்ள இருந்தாப்பல கதகதன்னு இருப் பீக என்று கொடுத்துவிட்டு, உங்கள வண்டியேத்திவிட எனக்கு நேர மில்ல; எந்தம்பிய அனுப்பி வைக்கேன் என்றவர் அப்பாவைக் கூப்பிட்டு, தம்பி அயித்த ஊருக்குப் போறாகளாம்; நீ அவுக கூடப் போயி டிக்கெட்டு எடுத்துக் கொடுத்து ரயிலேத்தி விட்டுட்டு வா என்று பணத்தையும் கொடுத்துவிட்டார்.

பாட்டிக்கு கோபம் என்றால் அப்படி ஒரு கோபம். மகளிடம் போய், பாரு உம்புருசன் பவுமாணத்த! நானு ஊருக்குப் போறேன்னு சொல்லுதேன்; ஒரு பேச்சிக்காச்சிலும் எதுக்குப் போறீக, இருங்க அயித்தன்னு சொல்லுதாகளா? அதுவுமில்லாம அவுகளுக்கு என்ன வண்டியேத்திவிட நேரமில்லயாம். வெட்டியா திரியித உங் கொழுந் தனப் போவச் சொல்லுதாக. இம்புட்டு எடஞ்சல்ல உன்ன ஒத்தில விட்டுட்டுப் போவவே எனக்கு மனசில்ல. மொகமறியாத இந்த பட்டணத்தில உன்ன தவிக்கவிட்டுட்டுப் போறேன் என்றாள்.

மாரியாத்தா... தாயே, தும்பினார் வாழட்டும். தூதுவிட்டார் வாழட்டும். எல்லாரு எடஞ்சலுல எம் மவளும் வாழட்டும். நீதேன் அவள் கங்கலங்காம பாத்துக்கிடணும் என்று வணங்கிவிட்டு ஊருக்குப் புறப்பட்டுவிட்டாள்.

மாமியாரை வழி அனுப்பி வைப்பதில் அப்பாவிற்கு ரொம்ப சந்தோசம். அதோடு அவள் தன்னைப் படுத்திய பாட்டிற்கு தானும் அவளைக் கொஞ்சம் படுத்த வேண்டுமென்று ஸ்டேஷனுக்கு வந்து ராஜபாளையத்திற்கு டிக்கெட் எடுக்காமல் கொல்லத்திற்கு டிக்கெட் எடுத்துவிட்டார். பிறகு பாட்டியிடம் அந்த டிக்கெட்டைக் கொடுத்துச் சொன்னார்... எயித்த! காலம் ரொம்ப கெட்டுக்கெடக்கு. உங்க பாட்டுக்கு பக்கத்தில இருக்கவககிட்ட ராசபாளையம் வந்துருச்சான்னு கேக்காதீக. ஏன்னா உங்க பக்கத்தில இருக்க களாணிப்பயக நீங்க இராசபாளையத்தில எறங்கப் போறீகன்னு தெரிஞ்சிக்கிட்டு உங்க பின்னாலயே எறங்கிரு வான். பெறவு உங்ககூட வருதாப்பல வந்து நீங்க வச்சிருக்க அம்புட்டு பொருளயும் புடுங்கி அதுக்குள்ள அவன் சாமான்கள திணிச்சி வச்சிட்டு நீங்கதேன் களாண்டீகன்னு போலீசுல பிராது கொடுத்துருவான். அதனால நீங்க ராசபாளையமின்னு அயத்துப் போயி கூட சொல்லிராதீக. இந்த டிக்கெட்ட எடுத்து இந்த ஊரு வந்துருச்சான்னு மட்டும் கேளுங்க. வந்துருச்சின்னு சொன்னா எறங்குங்க; மத்தபடி எறங்கிராதீக.

பாட்டிக்கு இருந்த அச்சலாத்தியை சொல்ல முடியாது.

வீட்டுலதேன் ஒரு போக்காளிப் பய இருந்துக்கிட்டு உசுர வாங்கு தான்னா வண்டிக்குள்ளயுமா இந்தப் போக்காளிக இருக்கணும் என்று முணுமுணுக்க அப்பா, என்ன அயித்த என்று கேட்டிருக்கிறார்.

ஒண்ணுமில்ல, எங் கொடுமைக்கு நொந்துக்கிடுதேன் என்று எரிச்சலோடு கூறிவிட்டாள். ரயில் புறப்பட்டு விட்டது. அப்பா நல்ல படியா ஊரு போயிச் சேருங்க அயித்த என்று சொல்லிவிட்டு வந்து விட்டார்.

இந்தப் பாட்டி, அப்பா சொன்ன மாதிரி அடிக்கடி தன் மடியில் பத்திரப்படித்திருந்த டிக்கெட்டை எடுத்து, அய்யா இந்த டிக்கெட்டுல இருக்க ஊரு வந்துருச்சாய்யா? என்று கேட்டுக்கொண்டே வர அவர்களும் அதுக்கு இன்னும் தூரமிருக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகக்கூடி வண்டி மறுநாள் செங்கோட்டை தாண்டி மலைமேல் ஏறுகிறது.

பாட்டிக்கு திக்கும் திசையும் தெரியவில்லை. பேமுழி முழித்துக் கொண்டு ராஜபாளையத்தைப் பற்றி கேட்க வண்டிக்குள் யாருக்கும் பாட்டி பேசுவதும் புரியவில்லை. எல்லாம் மலையாளமாக இருந்திருக் கிறது. பிறகு எப்படியோ ஒரு தமிழ்காரரிடம் தன் ஊரைப்பற்றிச் சொல்ல அவரும் புனலூரில் இறங்கச் சொல்லிவிட்டார். இதே வண்டியில இன்னைக்கு ராத்திரிக்கு ஏறிப்போ, ராஜபாளையத்திற்கு போயிருவே என்று விவரத்தை சொல்லியிருக்கிறார். ராஜபாளையத்திற்கு வர பாட்டி யிடம் பணமில்லை. பிறகு அவரிடமே கெஞ்சி, பெரியப்பா கொடுத்த மழைக்கோட்டை விலைக்குக் கொடுத்துவிட்டு அந்தப் பணத்தில் ஊர் வந்து சேர்ந்திருக்கிறாள்.

பிறகு அப்பாவிற்கு தற்காலிகமாக ஸ்ரீவில்லிப்புத்தூரிலேயே கண்டக்டர் வேலை கிடைத்துவிட்டது. அப்பாவுடன் பிறந்தவர்கள் நாலு ஆண்கள். மூன்று பெண்கள். அந்த ஊரிலேயே அப்பாவும், அப்பாவுடன் பிறந்த பெரியப்பா, சித்தப்பா எல்லோருமே கவருமெண்டு உத்தியோகம் பார்த்ததில் ஊர்காரர்களை விட எல்லா விஷயங்களிலும் கொஞ்சம் நாகரீகமாகி விட்டார்கள். அதிலும் சித்தப்பா பட்டாளத்தில் அதிகாரி யாக இருக்க அவர்களிடம் கூடுதல் நாகரீகம் வந்துவிட்டது.

அப்போது பெண்பிள்ளைகள் எல்லாம் லவுக்கை போட மாட்டார்கள். பள்ளிக்கூடத்திற்கும் போகமாட்டார்கள். இந்த அப்பாக் கள் நாலு பேருக்கும் கடைக்குட்டித் தங்கை மீது ஏகப்பட்ட பிரியம். மற்ற இரண்டு அத்தைகள் இவர்களுக்கு மூத்தவர்கள் என்பதால் கல்யாணம் முடிந்து பிள்ளைகுட்டிகளோடு இருந்தார்கள். நமது தங்கைக்கு சட்டை தைத்துப்போட்டு ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு படிக்க அனுப்பவேண்டு மென்று அப்பாக்கள் கூடிப்பேசி சட்டை எடுத்து வந்ததோடு போட்டும்

விட்டார்கள். இந்த அதிசயத்தைக் காணவும் எதிர்ப்பு சொல்லவும் ஊரே திரண்டு விட்டது.

லவுக்கை போட்டு பள்ளிக்கூடம் போக எதிர்ப்பு இருந்தாலும் நாலு அப்பாக்களையும் மீறி யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை. அதிலும் இரண்டு அப்பாக்கள் போலீஸாக வேறு இருந்திருக்கிறார்கள். அதனால் இவர்களிடம் வம்பு பண்ணினால் நம்மைக் கொண்டுபோய் தாணாவில் அடைத்தாலும் அடைத்துவிடுவார்கள் என்று முணு முணுத்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள்.

ஆனால் அப்பா ஊர் பெரியவர்களைக் கூப்பிட்டு, அப்பச்சி நம்ப புள்ளைக நாலு பேரு கண்ணுல படக்கூடாது. நானு என் தங்கச்சி மட்டும்தேன் லவுக்க போடணுமின்னு சொல்லல. இந்த ஊருல இருக்க கொமரிப்புள்ளைக எல்லாம் லவுக்க போடட்டும். நானே ஆளுக்கு ஒரு லவுக்கத் துணி எடுத்துத் தாரேன் என்று சொல்லிவிட்டார்.

உடனே பெண்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோசம். எங்களுக்கும் லவுக்க போடாம இருக்கறதுக்கு சீ...ன்னுதேன் இருக்கு... இனிமே நாங்களும் போட்டுக்கிடுதோம் என்று சொல்ல, நல்லபடியாக அந்தக் காரியம் முடிந்துவிட்டது. பிறகு அத்தையை ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருந்த பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைக்க, அத்தை கூடவே ஊரிலிருந்து நாலைந்து பெண்கள் படிக்கப்போக நாகரீகம் மெல்ல ஊருக்குள் எட்டிப் பார்த்துவிட்டது.

அத்தை ஊரிலிருந்தால் பஸ் ஸ்டாப்பில் ஓடிப்போய் நிற்பாளாம். கண்டக்டராக இருக்கும் அப்பா கைநிறைய சில்லறைகளை அள்ளி, தங்கச்சி அண்ணன் துட்டப் போடுதேன்; நீ துட்ட எடுத்துக்கிட்டு வேணுங்கிறத வாங்கித்தின்னு என்று பஸ்ஸிலிருந்தே வீசி விட்டுப்போக அத்தைக்கு சந்தோசமும் பெருமையும் சொல்லி முடியாதாம்.

பிறகுதான் அப்பா கண்டக்டர் வேலையை விட்டுவிட்டு போலீஸிற்குப் போய்விட்டார்.

எங்கள் வீட்டில் எனக்கு மூத்ததாக மூன்று பெண்கள் வரிசையாகப் பிறந்து அதில் இரண்டு இறந்துவிட அப்பாவிற்கும்அம்மாவிற்கும் ஆண் குழந்தை மேல் ஆசை வந்துவிட்டது. நாலாவதாக அம்மா பிள்ளை உண்டானபோது இந்தப் பிள்ளையாவது ஆண்பிள்ளையாகப் பிறக்க வேண்டுமென்று அப்பா, அம்மா இருவரும் ஏக்கத்தோடு காத்திருந்திருக் கிறார்கள்.

அப்பா ஸ்டேஷனில் இருந்திருக்கிறார். அப்போது காந்தியை சுட்டு விட்டார்கள் என்று தகவல் வர ஊரே அல்லோலகல்லோலப் பட்டுப் போனது. எனது அப்பா போலீஸாக இருந்ததால் டில்லியில் கலவரம் என்று அங்கே டூட்டி போட்டுவிட்டார்கள். அப்பா டில்லிக்கு புறப்படும்

போது எங்கள் வீட்டிலிருந்தும் ஒரு தகவல் போய்விட்டது, நான்காவதும் உனக்கு பெண் குழந்தைதான் பிறந்திருக்கிறது என்று. தகவலைக் கேட்டதும் அப்பா மனத்தில் என்ன தோன்றியதோ, நான் இப்போது டில்லிக்கு போகிறேன்; வந்த பிறகு குழந்தையைப் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

சித்தப்பா இராணுவத்தில் கேப்டனாக அப்போது இருந்தார். அவருக்கு திருமணமாகி மூன்று வருசங்கள் வரை குழந்தை இல்லை. அதனால் அவரும் லீவு எடுத்துக் கொண்டு பிறந்த குழந்தையான என்னைப் பார்க்க டில்லியிலிருந்து அப்பாவோடு வந்திருக்கிறார்.

என்னைப் பார்த்துமே 'காந்தி' இறந்த தினம்தான் ஞாபகம் வந்திருக்கிறது. அதனால் அவர் இறந்த அன்று பிறந்த இந்த குழந்தைக்கு அவர் ஞாபகமாக ஏதாவது பெயர் வைக்க வேண்டுமென்று அப்பா சொல்ல, எனது மாமா காந்தி நமக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்ததால் 'சுதந்திர தேவி' என்று பெயர் வைக்கலாமென்று சொல்லியிருக்கிறார். உடனே சித்தப்பா 'பாரத தேவி' என்று சொல்ல என் அப்பாவும் சம்மதித்து விட்டார்.

❧

நடுத்தெருவில் பெரிய ஆட்டுக்கல் கிடக்கும். ஒரு நல்லநாள், திங்கநாள் வந்துவிட்டால் இந்த உரலுக்கும் ரொம்ப கிராக்கி வந்து விடும். சோளம், கம்பு, வரகரிசி, தினையரிசி என்று சட்டிகளில் நனைந்து கிடக்கும். ஆட்டுவதற்காக நீளமான வரிசையில் பாத்திரங்கள் காத்திருக்கும். சின்னப் பிள்ளைகளான எங்களுக்கு எங்கள் சட்டி ஆட்டுக்கல்லை நெருங்கிவிட்டதா என்று பார்த்துவிட்டு வருவதுதான் வேலை. சட்டிகள் மெல்ல நகன்று கொண்டிருக்குமாதலால் ஊர் அடங்கும்வரை மாவாட்டும் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும்.

பிறகு எப்போதுதான் படுப்பார்களோ தெரியாது, ஆனால் நடுச்சாமம் கொஞ்சம் கழிந்துவிட்டால் போதும், விளக்கெண்ணெயிட்டு சுடும் தோசையின் மணம் காற்றினூடே புகையலையாக ஊருக்குள் பரவிவிடும். முக்கால்வாசி வீடுகளில் வெளியே மறைவில்தான் அடுப்பு இருக்கும். உள் வீடுகள் எல்லாம் சின்ன தட்டடியாகத்தான். அதற்குள் நாலு குலுக்கைகளும் இரண்டு அடுக்குப் பானைகளும் இடம் பிடித்துக் கொண்டு வீட்டு ஆட்களை அண்டவிடாமல் விரட்டி அடிக்கும். தட்டி மறைவில் அடுப்பு இல்லாதவர்கள் வெளியே கல்லடுப்புக் கூட்டி தோசை சுடுவார்கள்.

தங்காயி பாட்டி வேலைக்குப் போகும் அவகாச்சியில் நடுச்சாமம் எழுந்து தோசையை சுட ஆரம்பித்திருக்கிறாள்.

யாராவது வயசுப் பெண்கள் தற்கொலையில் மாண்டுவிட்டால் அவள் பேயாகிவிட்டாள் என்ற புரளி உடனே கிளம்பிவிடும்.

பிறகு தெருவுக்கோ மந்தைக்கோ போகவேண்டுமென்றால் சின்னப் பிள்ளைகளான நாங்கள் கண்ணைப் பொத்திக்கொண்டு சிறு ஓட்டை வழியாக பாதையை மட்டுமே பார்த்தவாறு ஓடுவோம். பெரிய ஆட்கள் கையில் வெற்றிலை, அல்லது மஞ்சள் காப்பை எடுத்துக்கொண்டு போவார்கள்.

நலைந்து வருஷம் முன்பு சரஸ்வதி என்று ஒரு அத்தை கிணற்றில் விழுந்து இறந்து போனாள். அவளுக்குக் கல்யாணமாகி புருசனுடன் மூன்று மாதம்தான் சந்தோசமாக வாழ்ந்திருக்கிறாள். பிறகு அத்தையின் கணவர் கிணறு வெட்டும்போது எப்படியோ தவறி விழுந்து செத்துப் போனார். இந்த அத்தை இரண்டு வருசமாக விதவைக்கோலத்தில் இருந்திருக்கிறாள்.

எங்கள் சாதியில் விதவைகள் லவுக்கை போடாமல் வெறும் வெள்ளைப் புடவை மட்டுமே கட்டவேண்டும். இப்போது வெள்ளைத் துணியிலேயே லவுக்கை போடுவதோடு ஒருசில நகைகளும் போட்டுக் கொள்கிறார்கள்.

ஒருநாள் அத்தையின் வீட்டில் இருந்த அனைவரும் கோயிலுக்கு 'குளுமை' கொடுப்பதற்காக ஆறேழு வண்டி கட்டி தூரத்து அய்யனார் கோயிலுக்குப் போய்விட்டார்கள். போகும்போது ஊரில் உள்ள பாதி ஆட்களையும் கூட்டிப் போய்விட்டார்கள். இந்த அத்தை மட்டும் வீட்டில் தனியாக இருந்திருக்கிறாள். திடீரென்று அவளுக்கு தன்னை சுமங்கலிக் கோலத்தில் பார்க்க வேண்டுமென்று ஆசை வந்துவிட்டது.

உடனே மஞ்சள் பூசிக் குளித்து பூப்போட்ட சேலையை உடுத்தி அதற் கேற்றாற் போல் லவுக்கையும் போட்டுக்கொண்டாள். பிறகு வீட்டில் இருந்த தண்டட்டி, பாம்படம், முடிச்சு என்று நகைகளையும் போட்டுக் கொண்டாள். கழுத்திற்கும் பதக்கம் சங்கிலி. நெற்றிக்கு குங்குமமும் இட்டுக்கொண்டாள். இது போதாதென்று கோவிலுக்குப் போனவர்கள் சாமி படத்துக்குப் போட்டிருந்த மாலையைப் பிரித்து அதில் உதிரிப் பூக்களாக எடுத்து அழகாகத் தொடுத்து தலையில் வைத்துக்கொண்டு கண்ணாடியில் அழகு பார்த்திருக்கிறாள். பார்க்கப் பார்க்க அவளுக்கே பொறுக்கவில்லை. கதறி அழுதிருக்கிறாள்.

இவள் அழுகைச்சத்தம் கேட்டு வழியில் போனவர்கள்தாயீ... என்று கதவைத் தட்டி விவரம் கேட்க அவர்களுக்கு ஏதோ சாக்குப்போக்கை சொல்லி அனுப்பிவிட்டாள். பிறகு என்ன நினைத்தாளோ தெரியவில்லை! கட்டக்கட்ட உச்சி நேரம். ஊருக்குள் ஒரு சுடு குஞ்சி இல்லை. பாதிப்பேர் கோயிலுக்குப் போய்விட மீதிப்பேர் வயலுக்கும் பிஞ்சைக்கும் வேலைக்கென்று போய்விட்டார்கள். வயதான இரண்டொரு தாத்தா

பாட்டிகள்தான் வாசலில் காயப் போட்டிருந்த தானியங்களை கோழி கொத்திவிடாமல் காவலுக்கு இருந்திருக்கிறார்கள். இந்த அத்தை அவர் களின் கண்ணுக்குப் படாமல் மறைவாகப்போய் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டாள்.

கோயிலுக்குப் போனவர்கள் வீட்டிற்கு வர இருட்டிவிட்டது. வந்ததும் வராததுமாய் அத்தையைக் காணாமல் தேடு தேடு என்று ஊரெல் லாம் தேடியிருக்கிறார்கள். பிறகு கிணறு கிணறாகத் தேட ஊருக்கு ஒதுக்குப்புறமாய் இருந்த கிணற்றில் அத்தையின் பிணம் விறைத்துக் கிடந்திருக்கிறது. சத்தமில்லாமல் பிணத்தை தூக்கிக்கொண்டு வெளியே வந்தவர்கள் பாதி நிலா வெளிச்சத்தில் அத்தையின் சுமங்கலிக் கோலத்தைப் பார்த்து திடுக்கிட்டுப் போனார்கள். அவர்கள் தலையில் இடி விழுந்ததுபோல் ஆகிவிட்டது. அடிப்பாவி! கெடுக்காமல் கெடுத் தாளே... இதை வம்புதும்புக்காரர்கள் பார்த்துவிட்டால் சொளகு இல்லாமல் புடைத்து நாவி கேவலப்படுத்தி விடுவார்களே என்று அவசர அவசரமாக சுடுகாட்டுக்குத் தூக்கிக்கொண்டு போயிருக்கிறார்கள்.

அப்போது ஒரு தாத்தா, அட... கூறுகெட்ட கழுதைகளா, அவதேன் இப்படி விவரமில்லாம அதங்கொதமான வேல செஞ்சிட்டான்னா நீங்களுமா அவள அப்படியே தூக்கிட்டுப் போறது, அவள கீழ எறக்கி வச்சுட்டு வீட்டுக்குப் போயி ரெண்டாம் பேருக்கு தெரியாம ஒரு வெள்ளச் சேலய கொண்டாந்து அவளுக்கு உடுத்திட்டுப் பெறகு சுடுகாட்டுக்கு கொண்டுபோங்க என்று சொல்லியிருக்கிறார். உடனே இவர்களும் அவரசமாக பிணத்தை அங்கே வைத்துவிட்டு வெள்ளைச் சேலையை எடுப்பதற்காக வீட்டிற்கு வந்திருக்கிறார்கள்.

கிணற்றில் விழுந்தவர்களைத் தூக்கியதும் எங்கேயும் இறக்கி வைக்காமல் நேராக சுடுகாட்டுக்கு கொண்டுபோய் விடுவார்கள். இது இப்போதும் உள்ள நடைமுறை. ஏனென்றால் அவர்களை வழியில் இறக்கிவைத்தால் அவர்கள் ஆவி அந்த இடத்திலேயே தங்கிக்கொண்டு ஊருக்குள் பேயாக அலையுமாம், வெறும் கட்டைதான் சுடுகாட்டுக்குப் போகுமாம்.

அவர்கள் இறக்கிவைத்த இடத்தில் அத்தையின் ஆவி நின்றுகொள்ள இவர்கள் பிணத்தை மட்டும் சுடுகாட்டுக்கு கொண்டுபோய் எரித்திருக் கிறார்கள். அதனால் அந்த அத்தை ஊருக்குள் பேயாக அலைவதாகவும் எல்லோருடைய கண்களுக்கும் தெரிவதாகவும் பேசிக் கொண்டார்கள்.

ஏற்கெனவே தங்காயிப் பாட்டி சரஸ்வதி அத்தையைப் பற்றிய அச்சத்தோடுதான் தோசையை சுட்டிருக்கிறாள். அது தீபாவளி நேரம். எங்கும் கரிய இருட்டு. எப்போதும் வானத்தில் பரவலாக சிந்திச்சிதறிக் கிடக்கும் நட்சத்திரங்களில் இப்போது ஒரு சிறு துணுக்கைக்கூட காணோம். அதோடு போகாமல் தூறல் வேறு புணுபுணு என்று மாமியார்

இறந்ததற்கு மருமகள் அழுத கண்ணீராக விழுந்திருக்கிறது.

சீமைத்தண்ணிக் கூட்டின் விளக்கு வெளிச்சம் சிறு வட்டத்துக்குள் கட்டுப்பட்டு ஊசலாட்டத்தோடு எரிந்துகொண்டிருந்திருக்கிறது. முதலில் மெல்லிய முனங்கல் சத்தம் கேட்டிருக்கிறது. பாட்டியின் வயிற்றில் பல்லாங்குழிகள் தடம் பதிய ஆரம்பித்துவிட்டது. இருந்தாலும் என்ன முனங்கல் சத்தம் அது என்று கொஞ்சம் தைரியமாக வெளியே வந்து எட்டிப் பார்த்திருக்கிறாள். வடக்குப் பக்கத்து கட்டை மண் சுவரில் நீள நீளமாக விறகுக் கட்டுகள் நெடுகச் சாத்தியிருக்க பாட்டியின் கண்களுக்கு பேய்கள் வரிசையிட்டு இருப்பதுபோல் தெரிந்திருக்கிறது. பாட்டி பதட்டத்தோடு வீட்டிற்குள் வந்துவிட்டாள். தோசையை சுடுவோமா வேண்டாமா என்று நினைத்துக்கொண்டே இரண்டு தோசையை சுட்டுவிட்டாள். மூன்றாவது தோசையை சுடும் போது எனக்...கு தோ...சை என்று ஒரு கை கருப்பாக அடர்ந்த ரோமத்தோடு பாட்டியை நோக்கி நீட்டியிருக்கிறது. அவ்வளவுதான், பாட்டி அலறி அடித்துக்கொண்டு முச்சந்தி தெருவுக்கு வந்து ஊரையே எழுப்பி விட்டாள்.

மாவாட்டிய அலுப்பில் உறங்கியவர்கள், வேலை செய்த அலுப்பில் குறட்டை விட்டவர்கள் எல்லாம் என்ன... என்ன என்று கேட்டவாறே பதட்டத்துடன் எழுந்து பாட்டியை வளைத்துக் கொண்டார்கள். பாட்டியால் கொஞ்ச நேரம் பேச முடியவில்லை. பிறகு எப்படியோ தன்னை சமாளித்துக்கொண்டாள்.

ஆட்டக்கார தெவிடியா கணக்கா சொவடிச்சிக்கிட்டுப் போயி கெணத்துக்குள்ள விழுந்து செத்தாளே, அந்த எடுவட்ட சிறுக்கி... அவ அங்கன நிக்கா, இங்கன நிக்கான்னு கடசியில என் வீட்டுக்கேயில்ல வந்துட்டா என்று பாட்டி சொன்னாள்.

எல்லோருக்கும் தூக்கம் கலைந்துபோன அச்சலாத்தி. ஏத்தா சொல்லுறத வெவரமா சொல்லு என்று ஆட்கள் எரிந்து விழ, பாட்டி நடந்ததைச் சொல்லிவிட்டு அந்த முண்ட தோசைக்கு என்னம்மா கைய நீட்டுதா தெரியுமா? என்று கேட்டதும் எல்லோரும் பயந்து விட்டார்கள்.

எல்லாரும் சேந்து ஒன்று போல வாங்க, அவள வெளக்கமாத்தக் கொண்டி அடிப்போம் என்று பாட்டி சொன்னதும் எல்லோரும் நீ போ, நான் போ என்று பின்னுக்குத்தான் போகிறார்களே தவிர முன்னுக்கு யாருமே நகர மாட்டேன் என்கிறார்கள். வீரம்மா பாட்டி மட்டும் பெயருக்கு ஏற்றாற்போல் முன்னால் வந்து 'போங்கடா பொண்டாட்டிக்கு மெய்க்க புழக்கட வெட்டுன பயகளா' என்று சொல்லி விட்டு முன்னால் நடக்க அவள் பின்னாடியே எல்லோரும் போனார்கள். அங்கே போனால் பாட்டி வீட்டு அடுப்புக்கு முன்னால் பேய் நிஜமாகவே தோசை சுட்டுக்கொண்டிருக்கிறதாம்!

சீமைக் கூட்டு விளக்கு வெளிச்சத்தில் பேயின் நிழல் மண்சுவரில் விழுந்து பூதாகாரமாக ஒரு ஆட்டம் போட எல்லாரும் அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள். வீரம்மா பாட்டிக்கு மட்டும் ஒரு சந்தேகம். பேயி இப்படியும் உக்காந்து தோசை சுடுமா என்று நினைத்து,ஏ...எவடி அது? இப்ப என்னன்னு கேக்கப் போறயா? இல்ல கல்லக் கொண்டி எரியட்டுமா? என்று கேட்டாள்.

என்ன பெரியாத்தா, வெது வெதுன்னு நாலு தோசய சுட்டு திங்க விடமாணேங்கே என்று சொல்லிக்கொண்டே அடுப்பு முன்னாலிருந்து சின்னாண்டி எழுந்து வந்தார். வீரம்மா பாட்டிக்கி சிரிப்பு பாதி, கோபம் பாதி.

ஆத்தாடி இவன் தின்னி மாடப்பன் இல்ல! இவன் கையிலயா மாவுச் சட்டி அம்புட்டுருச்சி? சட்டியக் கூட விடமாண்டானே என்று சொல்ல ஆள் ஆளுக்கு அவரை வஞ்சி அடிக்கப் போனார்கள்.

நானு என்ன செய்யட்டும்? எனக்கு வவுத்துப் பசி பொறுக்க முடியல. இந்நேரத்துக்கு ஊருக்குள்ள என்னமும் கிடைக்குமான்னு அலஞ்சி பாத்தேன். இந்த சின்னாத்தாதேன் தோச சுட்டுக்கிட்டு இருந்தா. ரெண்டு தோசய வாங்கி தின்னுட்டுப் போயிருவோமின்னு கைய நீட்டுனா இவ அலறிஅடிச்சிக்கிட்டு ஓடுதா. நானு இவ பின்னாலயே போயா எனக்கு தோச சுட்டுக் கொடுன்னு கேக்க முடியும்? அதேன் அவ போனாப் போறான்னு நானா அஞ்சாறு தோசய சுட்டுத் தின்னேன். உளுந்துதேன் கொஞ்சம் காணாது. மத்தபடிக்கு தோச நல்லாத்தேன் இருந்துச்சி என்று சொன்னார். எல்லோரும் அவரை சத்தம் போட்டு விட்டுப் போனார்கள்.

இந்த சின்னாண்டி கொஞ்சம் புத்திபேதலித்தவர். அவருக்கென்று யாருமில்லை. வீடு வீடுக்கு கிடைத்ததை சாப்பிட்டுவிட்டு இரவு பக லென்று இல்லாமல் அவர் பாட்டுக்கு ஊருக்குள் தன்னிச்சையாகத் திரிவார். கோயில் திண்ணையில் முடங்கிக் கொள்வார்.

மீனாட்சி பாட்டி ராஜபாளையத்திற்கு மோர் விற்கப் போயிருக் கிறாள். அப்போதெல்லாம் கலயத்தில்தான் மோரைக் கொண்டு போவார்கள். மோர் விற்று முடிந்ததும் ஊருக்குப் புறப்பட்டபோது அங்கே 'ஐஸ்'விற்றிருக்கிறார்கள். அப்போது ஒரு ஐஸ் கால் துட்டு. எல்லோரும் ஐஸ் வாங்கி சாப்பிட இந்தப் பாட்டியும் ஒரு ஐஸ் வாங்கியிருக்கிறாள். எப்போதும் ஐஸ் திங்காத பாட்டிக்கு ஐஸின் இனிப்பும் குளிர்ச்சியும் ரொம்ப பிடித்துவிட்டது. உடனே இப்படி ஒரு தின்பண்டத்தை தான் மட்டும் தின்றால் போதாது, நம்ம பேரப்பிள்ளை களுக்கும் வாங்கிக் கொண்டுபோய் கொடுக்கவேண்டுமென்று நினைத்து நான்கு ஐஸ்களை வாங்கி கலயத்துக்குள் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்தாள்.

வீட்டுக்கு வந்ததும் பிள்ளைகளுக்கு ஐஸ் கொடுப்பதற்காக கலயத்திற்குள் பார்த்தபோது ஐஸைக் காணோம். வெறும் குச்சிகள் மட்டும் கிடந்தன. அவ்வளவுதான், எல்லோரும் பயந்துவிட்டார்கள். ஐஸின் ருசிக்கு பேய்தான் வந்து ஐஸைத் தின்றிருக்கிறது என்று சொல்ல பாட்டிக்கு ஒரே பயம். காய்ச்சலில் படுத்துவிட்டார். பிறகு மூன்று நாளாக கோடாங்கி அடித்து பேயை விரட்ட காய்ச்சலோடு பேயும் ஓடிவிட்டது.

ஜ۞ஜ

தூரக்காடுகளுக்குப் போவதென்றால் உச்சி சாமத்தை மட்டும் கழித்து விட்டு விறகுக்கோ, கருது, தட்டை அறுக்கவோ புறப்பட்டு விடுவார்கள். உச்சி சாமம் பேய்களுக்கு உகந்த நேரம். நாம் குறுக்கிட்டால் ஒரேஅடி. அடிவாங்கியவர்களுக்கு அடுத்து சாவுதான்! இப்படி செத்தவர்களைப் பற்றி பெரியவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வார்கள்.

அவன குளிப்பாட்டேல பாத்தேன். முதுவுல அஞ்சு விரலு பட்டமானதடம் தெரிஞ்சிச்சி!

நீ அதமட்டுந்தேன் பாத்த பொலுக்கோ. இடது தோளோரம் நெஞ்ச சேந்தமான நகத்துல கீறுனாப்பல ஒரு காயம். அப்பவே நானு இந்த உசுரு பொழைக்காதுன்னு நினைச்சிட்டேன் என்று பேசிக்கொண்டே போவார்கள். அப்படி போகும்போதே கையைத் தட்டிக்கொண்டு போவார்கள். வழியில் பூச்சி, பொட்டு இருந்தால் கைதட்டும் சத்தத்திற்கு விலகி ஓடுமாம். முன்னாலும் ஆண்கள் பின்னாலும் ஆண்கள். எங்களைப் போன்ற சின்னப் பிள்ளைகளை ஊடாடவிட்டவாறு பெரியவர்கள் நடப்பார்கள்.

சத்திரப்பட்டிக்குப் போகும்போது ஊர் சுடுகாட்டைக் கடந்துதான் போக வேண்டும். நெல் அரைக்க, பள்ளிக்கூடம் போக, கடைக்கு, ஆஸ்பத்திரி என்று எல்லாவற்றுக்கும் அங்கேயே போவதால் ஆட்கள் போய்க்கொண்டும் வந்துகொண்டும்தான் இருப்பார்கள்.

எங்கள் ஊருக்குத் தெற்கே 'கானாங்குளம்' என்ற பெரிய கம்மாய் இருக்கிறது. கரையை ஒட்டவைத்தாற் போல் வெறிச்சிட்டு இருக்கும் இந்த கம்மாயின் வடக்குப்புறமாய் நூறுசடைமுடிகளோடு ஒரு ஆலமரம் பத்துப் பேர் சேர்ந்து அணைச்சாலும் அணையமுடியாத அளவுக்குப் பருத்து விரிந்து கிடக்கும். இந்த ஆலமரத்தை ஒட்டிதான் சுடுகாடு.

இருட்டிவிட்டால் சுடுகாடு இருக்கிறதென்று யாரும் தனியாக வர மாட்டார்கள். தைரியசாலிகள் வருவார்கள் அல்லது இரண்டு மூன்று பேர் சேர்ந்துதான் வருவார்கள். அப்படி தனியாக வர நேர்ந்தால் அங்கிருக்கும் கரையிலிருந்து ஓங்கி ஒரு குரல் கொடுப்பார்கள். தனியாக வருகிறவரை எதிர்பார்த்து இந்தப் பக்கம் இருப்பவர்கள் போய் கூட்டி வருவார்கள்.

போலீஸில் இருந்த ராமசாமி [redacted]சான் இந்த பழக்கத்தைப் பார்த்து ஊர்க்காரர்களை கேலி பண்ணுவார். [redacted] பிசாசாவது! நரி[redacted] நடுச் சாமம் அந்த சுடுகாட்டுக்கு போறேன். அந்தப் [redacted] முன்னால வரச்சொல்லுங்க பார்ப்போம் என்று வீறாப்பு பேசுவார்.

ஒருதடவை அவர் காட்டில் நீர் இறைத்துவிட்டு கூனையைத் தலையில் வைத்துக்கொண்டு வந்தார். இருட்டிவிட்டது. வரும் வழியில் வெட்டிவிட்ட ஆலமரக்கொப்பில் கூனை மாட்டிக்கொண்டது. இவருக்கு நிமிர்ந்து பார்க்க பயம். நிமிர்ந்து பார்க்காமலே அது எவன்டா என் கூனையைப் பிடிக்கிறது? என் முன்னாலே வாடா! என்று சத்தம் போட்டிருக்கிறார். இவர் சத்தத்திற்கு எந்தப் பதிலும் இல்லை. அவ்வளவுதான், இவர் பயந்து அலறியபடி ஊருக்குள் ஓடி வந்தார்.

சுடுகாட்டுப் பேய்க என் கூனையைப் பிடுங்கிக்கிட்டு ஆதாளி போட்டுக்கிட்டு இருக்குக. நீங்க இங்கே சிரிச்சிப் பேசிக்கிட்டு இருங்க. இன்னைக்கு என் கூனையை பிடுங்கின பேயி நாளைக்கு மனுசனை அடிச்சிக் கொல்லாதுன்னு என்னத்தக் கண்டோம் என்று சத்தம் போட்டார்.

வாங்க இன்னைக்கு அந்த பேயை ஒரு கை பாப்போம் என்று தீவட்டியோடு ஊரே திரண்டு போனது. நாங்களும் கூடப் போய் பார்க்க கூனை வெறும் கொப்பில் மாட்டியது தெரிந்தது. எல்லோருக்கும் ஒரே சிரிப்பு. இப்படி ஒரு தைரியசாலி நம்ம ஊருக்கு கண்டிப்பா வேணும் என்று கேலி பேசியவாறு கொப்பில் மாட்டியிருந்த கூனையை எடுத்துக் கொண்டு வந்தார்கள்.

வெளிஆட்கள்தான் இந்த மரத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார் கள். அதை ஒட்டி இருக்கும் சுடுகாட்டைப் பார்த்து பயப்படுவார்கள். எங்களுக்கு அது தாய் மாதிரி. போகும்போதும் வரும்போதும் குரங்கள் போல அந்த மரத்தில் ஏறி கிளைக்குக்கிளை தொத்திக்கொண்டு விளை யாடுவோம்.

பகலில்தான் இந்த ஆட்டமெல்லாம். இருட்டிவிட்டால் அந்தப் பக்கம் ஒரு ஈக்குஞ்சிகூட போகாது. பக்கத்தில் சுடுகாட்டில் இருக்கும் பிணங்கள் எல்லாம் இருட்டியபிறகு இந்த மரத்தில் வந்து ஆட்டம் போடுவதாகச் சொல்வார்கள்.

நாங்கள் பெரிய தைரியசாலிகள் போல் எப்படியாவது சுடு காட்டுக்குப் போய் பேயைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டோம். என் தம்பி ராஜா தினமும் இருட்டிய பிறகுதான் வீட்டிற்கு வருவான். நான் சுடுகாட்டு வழி வந்தேன், அப்போது பேயைப் பார்த்தேன், பிசாசைப் பார்த்தேன் என்று நிறைய கதை சுத்துவான்.

வருசத்திற்கு ஒரு தடவை ஒருவன் நடுச்சாமத்தில் எங்கள் ஊருக்கு வருவான். ஒரு மாதிரியாக ஊ... ஊ... என்று குரல் கொடுத்துக்கொண்டு

தெரு வழியே ஓடுவான். அமைதியாக இருக்கும் ஊருக்குள் இவன் சத்தம் பயங்கரமாகக் கேட்கும். நெஞ்சுக்குள் திகிலை எழுப்பும். அவன் எதிரில் யாராவது வந்துவிட்டால் ரத்தம் கக்கி செத்துப் போவார்கள் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அவன்தான் காலபைரவனாம். அவன் முகத்தைப் பார்க்கக்கூடாதாம். அதனால் பாட்டிகளிலிருந்து, பெரிய பெண்கள் வரை அவன் தெருவின் மறுமுனைக்குப் போன பிறகு அவசரமாக சொளகில் தானியத்தை வைத்துவிட்டு ஓடி விடுவார்கள். அவனோடு வரும் ஒரு பெண் இந்த தானியத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு சொளகில் கொஞ்சம் திருநீறு வைத்துவிட்டுப் போவாள்.

இந்த காலபைரவன் பிணங்களைத் தின்பான். எரிந்த பிணத்தின் சாம்பலை உடல் முழுக்கப் பூசிக்கொள்வான். அவனுக்கு மந்திரங்களும் மாயங்களும் தெரியும். அவனை எதிர்த்துப் பேசுகிறவர்களின் கால் கைகளை முடக்கிவிடுவான். சிறுபிள்ளைகளை அவன் பின்னாலேயே வரவழைத்து தீயில் போட்டு விடுவான் என்று இன்னும் என்ன என்னமோ சொல்வார்கள்.

ஒரு நாள் நடுச்சாமம். காலபைரவன் வந்துவிட்டான் என்று என் தம்பி ராஜா எழுப்பினான். நான் உடனே எழுந்து வாசலில் போய் எட்டிப் பார்த்தேன். ஊ.... ஊ... என்று ஓலமிட்டவாறு அவன் தெருக் கடைசிக்கு ஓடிக்கொண்டிருந்தான்.

அப்போதே கணேசன், செல்வியை எழுப்பினோம். அவர்களும் எழுந்து விட்டார்கள். வசந்தா பயந்தாங்கொள்ளி. வரமாட்டாள். நாங்கள் நால்வரும் ஒரு இடத்தில் ஒளிந்துகொண்டு காலபைரவனை எட்டிப் பார்த்தோம். எங்களுக்கு முன்பே நாய்கள் சள் சள் என்று குரைத்துக் கொண்டே அவன்மீது பாய்ந்தன. நாய்கள் அவனை நெருங்கும்போதெல்லாம் சூ... சூ... என்று விரட்டியவாறு சுவர் மூலையில் பதுங்கினான்.

அதைப் பார்த்த உடன் எங்களுக்கு அவன் மீதிருந்த பயம் குறைந்து விட்டது. நாயைப் பார்த்து ஒரு மந்திரவாதி பயப்படுவானா? அவனைப் பார்த்து நாயே பயப்படவில்லை; நாம் ஏன் பயப்பட வேண்டும் என்று பேசிக்கொண்டோம். பிறகு நாயைக் கூப்பிட்டோம்.

சரசுவின் அய்யா கங்கையா மாமா பெரிய சண்டியர். எப்போதும் கையில் அரிவாள்தான். ஆளையும் மீசையையும் பார்த்தால் பயங்கரமாக இருக்கும். அவர் வளர்க்கும் நாயும் அவரை மாதிரியே முரடாக இருக்கும். அந்நியரைக் கண்டால் கொஞ்சம் சதையைப் பிய்க்காமல் இருக்காது. நாங்கள் அவருக்கு வேண்டியவர்கள் என்பதால் இந்த நாயும் எங்களோடு ஒட்டுதலாக இருந்தது. இந்த நாய் நாங்கள் எங்கே போனாலும் வந்து விடும்.

நாங்கள் நாலு பேரும் நாயைக் கூட்டிக்கொண்டு கால பைரவனுக்கு முன்னால் போய் சுடுகாட்டின் ஓரத்தில் இருந்த வேலியில்

பதுங்கிக்கொண்டோம். காலபைரவன் பிணத்தை தோண்டித் தின்பானா? என்ன செய்வான்? என்று யோசித்தவாறு ஆவலோடு காத்திருந்தோம். அவனும் அவன் பெண்டாட்டியும் சுடுகாட்டுப் பக்கமே வரவில்லை. தூர நின்றவாறு பையை எடுத்து தானியத்தை அதில் போட்டார்கள். இதுவரை எங்கள் கட்டுக்குள் அடங்கியிருந்த நாய் குரைத்துக்கொண்டே அவனை நோக்கி ஓடியது. அவனும் அவளும் அலறிக்கொண்டு ஓடினார்கள். அவன் ஓட்டத்தைப் பார்த்துவிட்டு எங்கள் பயம் போயே போய்விட்டது. நான்கு பேரும் நாயை அடக்கிவிட்டு அவனிடம் போனோம். அவன் கண்ணைச் சுற்றி மையால் கருவளையம் போட்டிருந்தான். வாயின் இரு பக்கமும் வெள்ளையாக கோடு இழுத்திருந்தான். பொய் முடியை தலையில் கவிழ்த்திருந்தான்.

எதற்காக இப்படி வேஷம் போட்டு நடுச்சாமம் வந்து எல்லோரையும் பயமுறுத்துறே என்று கணேசன் அவனிடம் கேட்டான்.

நான் எங்கே ஊரை பயமுறுத்துறேன்! காலையில் வந்தா ஒரு கை சோத்தோட என்னை பிச்சைக்காரனாக்கி முடுக்கி விட்டுருவீக. இந்நேரத்துக்கு இப்படி ஊளையிட்டுக்கிட்டு வந்தா பயந்துக்கிட்டு தவசமா கொடுப்பீக. எல்லாம் வவுத்துப் பொழப்புக்காகத்தான் என்று அவன் சொல்ல எங்களுக்கு சீ... இவ்வளவுதானா என்று போய்விட்டது.

நாங்கள் வீட்டிற்கு வந்தபோது எங்களைத் தேடி எனது அம்மா வாசலிலேயே நின்றாள். அவளைப் பார்த்ததும் திடுக்கிட்டோம். நாங்கள் சுடுகாடு போனது தெரிந்தால் அங்கேயே கொன்று போடுவாள். எனது அம்மாவைப் பார்த்ததுமே மற்றவர்கள் சைடு வாங்கிவிட்டார்கள்.

இந்நேரத்துக்கு எங்கே போனீக என்று கேட்க, நான் தம்பியை வெளிக்கி கூட்டிப் போனேன் என்று சொல்ல அவனும் ஆமாம் என்று தலையை ஆட்டினான்.

ஆண்கள் கூனையோடு காளைகளைப் பத்திக்கொண்டு பிஞ்சைக்குப் புறப்பட்டால் தண்ணீர் பாய்ச்சுவதற்காக பெண்களும் புறப்பட்டுவிடவேண்டும். காலை நேரத்தில் அடுப்பும் துடுப்புமாக அய்யோ தண்ணி முருசவாய்க்காலுக்கு வந்துருமே, அந்த மனுசன் தீக்கோட்டையா எரிஞ்சிக்கிட்டு இருப்பாரே என்று பயந்தவாறே அடுப்பு வேலையை முடித்து பிள்ளைகளுக்கு எண்ணெய் தேய்த்து மிச்சம் மீதி சில்லறை வேலைகளை மூத்த மகனிடம், மகளிடம் ஒப்படைத்துவிட்டு பிஞ்சையைப் பார்க்க ஓடுவார்கள். புருசன் கலப்பையோடு போனால் இவர்கள் விதையை எடுத்துக்கொண்டு ஓடவேண்டும். அவர்கள் உழுது கொண்டே போக இவர்கள் விதையைப் போட்டு அதை மண்ணால்

மூடிக்கொண்டே போகவேண்டும்.

அன்று அப்படித்தான், ராசம்மாவின் அய்யா கூனையோடு பிஞ்சைக்குப் போய்விட அவள் அம்மா சோளக் கஞ்சியை காச்சி முடித்து விட்டாள். சோளக்கஞ்சியை ஆக்கி முடித்த உடனே சாப்பிடமுடியாது. உமியும் எருவுமாக அடுப்பில் ஒரு மணி நேரத்துக்கு கஞ்சி அனலில் புழுங்க வேண்டும். பிறகு பெரட்டிப் போடுவார்கள். அடியில் இருக்கும் கஞ்சி மேலேயும், மேலே இருக்கும் கஞ்சி கீழேயும் போகும்படியாகத் துடுப்பை வைத்து கிண்டிய பிறகுதான் அந்தக் கஞ்சி ஒரு நிலைக்கு வரும்.

ராசம்மாளிடம் அவள் அம்மா, ஏத்தா... நானு பிஞ்சைக்குப் போறேன். நீ சத்தோடம் கழிச்சி சோளக்கஞ்சிய பெறட்டி போட்டுட்டு நீயும் சாப்புட்டு தம்பிய பெறாட்டிக்கு பிஞ்சைக்கு தூக்கிட்டு வா; நானு பாலக் கொடுத்து அங்கன இருக்க வேப்பமரத்தில தொட்டிகட்டி போடுதேன்; நீ பாத்துக்கிட்டு இருப்பே என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

ஆத்தா சொன்னபடி சோளக்கஞ்சியை பெறட்டிப் போட்ட ராசம் மாவிற்கு ஒரு ஆசை வந்துவிட்டது - அதாவது சுடுகஞ்சியில் குழிபறித்து நல்லெண்ணையை ஊற்றி அதில் கருப்பட்டியைத் தட்டிப்போட்டு சாப்பிட வேண்டுமென்று,

சோளக்கஞ்சியை வட்டிலில் எடுத்து வைத்துவிட்டாள். எண்ணெய்க் கலயத்தைப் பார்த்திருக்கிறாள். அது கூரையின் முகட்டில் உறியில் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கிறது. இவளுக்கு எட்டாது. இவள் உடனே சருவத்தைக் கவிழ்த்தி அதன்மேல் ஒரு கட்ராவைக் கவிழ்த்தி மேலே ஏறி எண்ணெய்க் கலயத்தை எடுக்கும்போது கட்ரா வழுக்கிவிட கையிலிருந்த எண்ணெய்க் கலயம் கைதவறி கீழே விழுந்து உடைந்துவிட்டது. வீடு முழுக்க எண்ணெய். ராசம்மா பயந்துவிட்டாள். ஆத்தாவும் அய்யாவும் பிஞ்சையிலிருந்து வந்தால் நம்மைக் கொன்று போடுவார்கள் என்று அழுதுகொண்டு கால் போன போக்கில் ராஜபாளையம் போய்விட்டாள்.

அங்கே நிறையப் பெண்கள் தோப்பு வேலைக்காக அய்யனார் கோயிலுக்குப் போக இவளும் அவர்கள் கூடவே கோயிலுக்குப் போய் விட்டாள். அங்கே வந்ததும் பயம், அசதி, பசி இத்தனையும் சேர கோயிலை ஒடடிப் படுத்தவள் தூங்கிவிட்டாள்.

ரொம்ப நேரம் கழித்து கண்ணை முழித்துப் பார்த்தால் கரே லென்று இருட்டு. அந்த இருட்டில் உயர உயரமாய் பேய்கள் தலைவிரித்த வாறு ஆடிக்கொண்டிருக்க, கூகைகளும் ஆந்தைகளும் அலறியவாறு தாளம் போட்டுக்கொண்டிருக்கின்றன. இது போதாதென்று இவள் பக்கத்திலேயே ஒரு பேய் குத்தவைத்தவாறு உட்கார்ந்திருக்கிறது.

ராசம்மாவிற்கு எப்படி இருக்கும்! கண்ணை மூடியவாறு அய்யய்யோ ஆத்தா... என்று அலறி எழுந்தாள்.

எதுக்கு தாயீ அலறுதீரு? நான்தேன் தாயீ. கண்ண முழிச்சிப்பாரும் என்று சொண்ணங்கத்தோடு குளுந்த வார்த்தையாக கேட்க இவள் அரண்டுபோய் மெல்ல கண்ணைத் திறந்து பார்த்திருக்கிறாள். அப்போது தான் அவளுக்குத் தன் பக்கத்தில் குத்த வைத்திருந்தது பேயில்லை, பளியன் என்று தெரிந்தது.

பிறகு அவன் அவளுக்குத் தின்பதற்கு மான் கறியும், தேனும் கொடுத்து யார், என்ன என்று அடையாளம் கேட்டு அவளைக் கூட்டிப் போய் தன் குடும்பத்தாரோடு படுக்க வைத்துக்கொண்டான். இவ்வளவு நேரமும் உறங்கிய ராசம்மாவிற்கு இப்போது உறக்கம் வரவில்லை. பளியர்கள் அறைகுறைத் துணிகளோடு கால்மாடும், தலைமாடுமாகப் படுத்திருந்தார்கள். அதோடு அவர்கள்விட்ட குறட்டை இவளை ரொம்ப பயமுறுத்தியது.

கொப்போடிக் கிடக்கும் பெரிய பெரிய மரங்கள் எல்லாம் அந்த இருட்டுக்கு தலையை ஆட்டிக்கொண்டிருக்கும் பேய்களாக இவள் கண்ணுக்குத் தெரிய, கண்களை இறுக மூடிக்கொண்டாள். அப்போதும் பயம் விடவில்லை. பக்கத்தில் காலடிச்சத்தம் கேட்க அதைத் தொடர்ந்து மிருகங்களின் கனைப்பு. இவளால் படுக்கவே முடியவில்லை. வேர்த்து விறுவிறுத்துப்போய் எழுந்து உட்கார்ந்தாள். மனசில் தெம்பை வரவழைத்துக்கொண்டு கண்ணைத் திறந்து பார்த்தால் எங்கும் கரேலென்று இருட்டு. ஊ... ஊ... என்று நரியின் ஊளைச்சத்தம் கேட்க இவள் திடுக்கிட்டு பக்கத்தில் படுத்திருந்த பளியனை எழுப்பினாள். அவன் கண்ணைத் திறக்காமலே என்ன என்று முனங்க இவளும் நரி கணக்கா ஊளயிடுது; எனக்கு பயமா இருக்கு என்று சொன்னபிறகும் கூட அவன் எழுந்திருக்கவில்லை.

ஆத்தா, வனத்துக்குள்ள அம்புட்டு உசுப்பிராணியும் அலயத்தேன் செய்யும். நம்மளும் அதோட அதா ஒரு உசுப்பிராணிதான! பேசாம படும் என்று சொல்லிவிட்டான்.

இவளால் படுக்கவே முடியவில்லை. ஹோவென்று மலையி லிருந்து விழும் அருவியின் சத்தத்தோடு சிங்கம் உறுமுவது போலவும் யானை கத்துவது போலவும் கேட்டிருக்கிறது. எங்கேயாவது கொஞ்சம் வெளிச்சம் தெரிகிறதா என்று வானத்தை உற்றுப்பார்த்தால் ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் மினுக்கிட்டுவிட்டு பிறகு மரங்களின் அசைவில் காணாமல் போய்விட்டன. அவளுக்கு ஒரே ஆறுதல். அந்தக் கரிய இருட்டுக் குள் நெருப்புப் பொறியாக மினுக்கட்டான் பூச்சிகள் அங்கும்இங்கும் திரிய அதைப் பார்த்துக்கொண்டே கொட்டக் கொட்ட

முழித்துக்கொண்டு இருந்தாள். பசியில் தின்ற மான் கறி இப்போது வயிற்றைக் கலக்கியது. படுத்த இடத்தைவிட்டு கொஞ்சம் புரண்டால் கூட நெருநெருவென்று கல்லும் மண்ணும் அப்பிக்கொள்ள சுற்றிலும் கெட்ட வீச்சம். எங்கே வாந்தி எடுத்து விடுவோமோ என்று பயந்து கொண்டு குப்புறப்படுத்துவிட்டாள். கொஞ்ச நேரத்தில் முதுகில் பெரிதாக ஏதோ ஒன்று ஊரிக்கொண்டு போக வீலென்று அலறி எழுந்து உட்கார்ந்தாள். கொஞ்சம் தள்ளி ஏதோ ஊர்ந்து வளைந்து போவதுபோல் தெரிந்ததும் மீண்டும் அலறினாள். பக்கத்தில் படுத்திருந்தவர்களிட மிருந்து சிறு அசைவுகூட இல்லை. இப்படியே பயத்தோடு அந்த வனம் வெளுத்துக்கொண்டு வருவதைப் பார்த்தவாறே இரவு முழுக்க உட்கார்ந் திருந்தாள்.

கொஞ்சம் விடிந்ததும் ஒரு பளியனோடு அவள் அய்யா வந்து விட்டார். இவளுக்கு தன் அய்யாவைப் பார்த்ததும் நெஞ்சில் முட்டிக் கொண்டு அழுகை வர ஓடிப்போய் அவரைக் கட்டிக்கொண்டு அழுதாள். அவரும் அவளை அணைத்து தோளில் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தார். ராசம்மாவிற்கு அன்று பிடித்த காய்ச்சல்தான் விடவே இல்லை. ஒரு வாரம் படுக்கையிலிருந்து விட்டு செத்துப்போனாள். அய்யனார் சாமி காவு ஏத்துவிட்டதாக எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

ooo

கார்த்திகை மாதம் போல் வேறு எந்த மாதமும் எங்களுக்கு சந்தோசத்தை கொடுத்ததில்லை. ஏன் என்றால் அந்த மாதத்தில் மட்டும் பௌர்ணமியோடு மூன்று நாட்களுக்கு விளையாட்டு என்றால் அப்படி யொரு விளையாட்டு விளையாடுவோம். ஊரில் இருக்கும் பெரியவர் களும் விளையாடுவார்கள். நிலா உச்சிக்கு வந்ததும் போய் படுத்துவிடு வார்கள். நாங்கள் விடிய விடிய விளையாடுவோம்.

விளையாட்டில் நிறைய வகைகள். எட்டாம் தட்டு, கம்பு தள்ளி, கிந்தி, துரோசணி, ஒரு குடம் தண்ணி விட்டு, பொறி பொறிச்சான், கண்டு, உடும்புதடும்பு, தவுடு கண்ணி, சில்லுக்கருப்பட்டி, மாது மாது, நாழி நாழி சுண்டக்கா, வரவரிசி, தினையரிசி, திரி திரி பொம்மக்கா, சூப்பலடி, சடுகுடு, கட்டைவிரல், கால் வாங்கி, தட்டாங்கல்லு, தோசை பிரட்டி! இத்தனை விளையாட்டுகள் போதாதென்று சிறு சிறு மண் கலயத்தில் சோறு ஆக்கி குழம்பு வைத்து எல்லோருக்கும் கொடுத்து நாங்களும் சாப்பிடுவோம்.

எப்போது பார்த்தாலும் இந்தக் கார்த்திகை மாதத்தில் குள மெல்லாம் பெருகி ஊரைச்சுற்றித் தண்ணீர்தத்தளித்துக் கொண்டிருக்கும். நாங்கள் உடும்புதடும்பு விளையாடிக் கொண்டிருந்தோம். நல்ல நிலா

வெளிச்சம். நான் ஓட பூமணி என்னைப் பிடிக்க வேண்டும். அவளிடம் நான் அகப்படுவதாக இல்லை. அவளும் என்னை விடுவதாக இல்லை. நான் கரையின் கீழேயே ஓடுகிறேன். அவள் கரை மேலேயே என்னைப் பிடிக்க வருகிறாள். இரண்டு பேரும் போட்டி போட்டுக்கொண்டு ஓடுகிறோம். என்னை ஒட்டி குளத்து நீர் சின்னச் சின்ன அலைகளாக நுரையெழுப்பிக் கொண்டிருந்தது. இப்படியே ஓடினால் அடுத்த ஊர் வந்துவிடும்.

கடைசியில் பூமணி நீ எப்படியும் மந்தைக்கு வந்துதானே ஆக வேண்டும் வா என்று சொல்லிவிட்டுப்போய்விட்டாள். நான் அடர்ந்து இருக்கும் வேலியூடே நுழைந்து நன்றாக விளைந்து கொடியோடு பின்னிக்கிடக்கும் வெள்ளாமையில் புகுந்து மெல்ல நடந்து போய் தொட வேண்டியவரைத் தொட்டுவிட்டேன். பிறகு நினைத்தபோது பயமாக இருந்தது. முரட்டுப் பாம்புகள் அங்கே பின்னிக்கிடக்கும்.

எனது துணிச்சலை சிலர் பாராட்டினார்கள். சிலர் சரியான கிறுக்கு, பூச்சி கீச்சி தீண்டிட்டா என்ன செய்வே என்றார்கள். ஆனாலும் ஜெயித்து விட்டோம் என்ற சந்தோசம் எனக்கு. எங்கள் விளையாட்டு முடியும்போது நிலா மேற்கில் போய்விட விடியற்காலை ஆரம்பமாகும். அப்போது தான் படுக்கப்போவோம். படுத்த கொஞ்ச நேரத்தில் வீட்டில் எழுப்பி விடுவார்கள். எழவே முடியாது. இரண்டு கால்களிலும் ரணமாய் வலி எடுக்கும்.

நாளையிலிருந்து விளையாடவே போகக்கூடாது என்று சபதம் எடுத்துக்கொண்டு எழுவோம். ஆனால் மீண்டும் நிலா கிழக்கே எட்டிப் பார்க்கும்போது எங்கள் சபதம் காணாமல் போய்விடும்.

மூன்றாவது கார்த்திகை சொக்கப்பனை கொளுத்தும் நாள். ஊரிலி ருக்கும் அத்தனை விவசாயிகளிடமும் விறகு கேட்போம். அவர்களும் ஒரு கட்டு மிளகாய் மாறு, பருத்தி மாறு என்று கொடுப்பார்கள். பொடிப்பயபிள்ளைகளுக்கு மாறு வேறே கேக்குதாக்கும் போங்க போங்க என்று சிலர் விரட்டி விடுவார்கள். அவர்களுக்குப் பிடித்தது சனியன். அன்போடு கொடுப்பவர்களுக்கு ஒரு கட்டோடு போகும். கொடுக்காதவர்களின் தலை எப்போது மறையும் என்று கண்காணித்து அவர்களின் விறகுப் படப்பையே கொளுத்திவிடுவோம்.

சொக்கப்பனை வெளிச்சம் கண்ணைக் கூசவைக்கும். ஒரு காத தூரத்துக்கு வெளிச்சம் தெரிய அதில் தேங்காய்த் துண்டுகளையும் வெல்லக்கட்டிகளையும் எரிவார்கள். அதை ஓடி ஓடிப் பெறக்கி யார் அதிகம் பெறக்கியது என்று கணக்குப் பார்ப்பதில் எங்களுக்கு ரொம்ப சந்தோசம்.

காட்டு வேலை, மாட்டு வேலை காணாது என்று எங்கள் பிஞ்சையில் கெடை போட்டால் நாங்கள்தான் காவலுக்கும் போக வேண்டும். இந்த வேலைக்குப் போவதென்றால் எங்களுக்கு குஷியாக இருக்கும். நானும் எனது தம்பிகளும் இருட்டி இரண்டு மூன்று நாழி கழித்து என் அம்மாவோடு கெடை காவலுக்குப் போவோம். நிலக்கடலை, பட்டாணி என்று தின்பதோடு குடிக்க கடுங்காப்பியும் கிடைக்கும். பிஞ்சையிலேயே கல்லடுப்பு மூட்டி காப்பி போடுவோம். அதைவிட என்றும் சிடுமூஞ்சியாக வஞ்சிகொண்டே இருக்கும் அம்மா அன்று ஊரில் அகப்பட்ட விஷயங்களையெல்லாம் பேசுவாள். என்னதான் பேசினாலும் சரி, பத்து மணிக்குள் என் தம்பிகள் தூங்கிவிடுவார்கள். என் தம்பி ராஜா மட்டும், நான் தூங்க மாட்டேன்; அப்படியே தூங்கினாலும் நரி பேய் பிசாசு கள்ளன் யார் வந்தாலும் அக்கா நீ என்ன லேசாத் தொடு; நான் அப்பவே எந்திரிச்சு அதுகளை கண்டந்துண்டமா வெட்டிப்போடுவேன் என்று வீறாப்பு பேசிவிட்டு படுப்பான். ஆனால் தூங்கிய பிறகு மலையே சாய்ந்தாலும் எந்திரிப்பது என்பது அவன் சரித்திரத்தில் கிடையாது. மறுநாள் காலை அதுவும் வெயில் அவன் மூஞ்சியில் சுள்ளென்று உறைத்தால்தான் எந்திரிப்பான். வீட்டிலும் ரொம்ப சேட்டை பண்ணுவான். வெண்ணெய், பாலாடை, வெல்லம் இதையெல்லாம் நானும் அவனும் சேர்ந்து திருடுவோம். ஆனால் பழியையெல்லாம் என் மீது போடுவான். காலையில் எழும்போதே இன்னைக்கு வாத்தியார் யாராவது செத்துப் போனாங்களா? என்று கேட்டுக்கொண்டுதான் எழுவான். அப்படி நடந்தால் லீவு விடுவார்களாம்.

பறவைகளை இம்சிப்பது என்றால் அவனுக்கு ரொம்ப பிடிக்கும். அம்மாவிடம் ஒன்றுக்கு இரண்டாக சொல்லி கோள் மூட்டி விடுவான். யாரிடமாவது சண்டை போடாமல் ஒரு நாளும் வீட்டிற்கு வரமாட்டான். இவன் சேட்டை பொறுக்க முடியாமல் அம்மா அடித்தால் இரண்டு நாள் ஊரை விட்டுப் போய்விடுவான்.

இவனுக்கு நேர்மாறான குணம் எனது இளைய தம்பிக்கு. ரொம்பவும் அமைதி. பெயர் திருமால். ஆனாலும் அவன் குணத்துக் காவே ஊர்க்காரர்கள் அவனுக்கு தர்மன் என்று பெயர் வைத்து விட்டார்கள். எந்த வம்புக்கும் போக மாட்டான். கடைசிப்பையன் என்பதால் எல்லோருக்கும் செல்லப்பிள்ளை. நாங்கள் அம்மாவைப் பார்த்து பயந்து ஒதுங்க அவன் எந்த நேரமும் அவள் கூடத்தான் இருப்பான்.

பிஞ்சைக்கு வந்ததுமே மண்புழுவாய் சுருண்டு எங்கள் மடியில் தூங்கிவிடுவான். நானும் அம்மாவும்தான் கொட்டக்கொட்ட முழித்திருப்போம். எங்கள் பிஞ்சை கம்மாயை ஒட்டி இருந்தது. வெறிச்சோடி ஹோ என்ற வறுமையான குளம் எங்களை பயமுறுத்திக் கொண்டிருப்பது போல் தோன்றும். கருவேலமரங்கள் இருட்டோடு இருட்டாகப் புதைந்து கிடக்க அதன் படர்ந்த கொப்புகள் அங்கங்கே கைக்கு எட்டும் தூரத்தில்

மிதப்பதுபோல் மாயம் காட்டும். இரண்டு மூன்று குட்டிகள் அடையக் கூடிய கூட்டில் அதிகமாக இரண்டு குட்டிகளை அடைத்துவிட்டால் அவ்வளவுதான். நரிகள் பதுங்கிப் பதுங்கிஅந்த கூட்டையே வளைய மிடும். கெடை காவலாளிகள் கொஞ்சம் அசந்தாலும் போதும். சின்ன இடைவெளியில்கூட தன் நீண்ட முகத்தை நுழைத்து குட்டியை இழுத்துக் கொண்டு ஓடி விடும். ஒரு குட்டியை இழுத்துக்கொண்டு ஐந்தாறு நரிகள் படையோடு ஓடும்போது நமக்கு அடிவயிற்றிலிருந்து நெஞ்சுவரை பயம்தான் தோன்றுமே தவிர விரட்டத் தோன்றாது. அது மட்டு மில்லாமல் ஆடுகள் குபீரென்று அடிக்கடி கலைந்து, கலைந்து ஓடும். அவற்றை ஒரு வட்டத்துக்குள் கொண்டு வருமுன் போதும் போது மென்று ஆகிவிடும். இது போதாதென்று குளத்தின் கரையை ஒட்டி குபீர் குபீர் என்று தீப்பந்தம் எரிவது போல் தெரியும். பிறகு அணைந்துவிடும். இதைப் பற்றி அம்மாவிடம் கேட்டால் அவள் எரிந்து விழுவாள். சரியாக பதில் சொல்லமாட்டாள்.

பிறகு கிடையெல்லாம் முடிந்த பிறகு சாவகாசமாக அது தீ வெளிச்சமில்ல கொள்ளிவாய் பிசாசு, நீ பயப்படுவேன்னுதான் சொல்லல என்பாள்.

விடிய விடிய கெடையையே பார்த்துக்கொண்டிருப்போம். நரி ஊளையிடும். ஆந்தையின் அலறலோடு வேறு ஏதேதோ சத்தமெல்லாம் கேட்கும். எனது அம்மாவின் கோபத்திற்குப் பயந்து நடுச்சாமம் வரைக்கும் முழித்திருப்பேன். அதன் பிறகு எனக்குத் தெரியாமலே தூங்கி விடுவேன். பாவம், அம்மாதான் ஒத்தையில கிடையைப் பார்த்துக் கொண்டிருப்பாள். கிடைக்கு கூலி ஆள் கூப்பிட்டுவிடலாம். ஆனால் அவருக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமே!

ஒருநாள் எனது அம்மா பால் கறக்கும்போது பால் குறைந்து விட்டது என்று அங்கலாய்த்துக்கொண்டே இருந்தாள். தம்பி ராஜா பெரிய மனிதன் மாதிரி எதுக்கும்மா பாலு கொறஞ்சிச்சி என்று கேட்க அம்மாவும் நேத்து நானு பாலு பீச்சும்போது அந்த அழகம்மா பாட்டி பார்த்தாள்ல; அவ ஒரு கொள்ளிக் கண்ணு முண்ட; அவ பாத்தா வெளங்காது என்றவள் இனி அவ காலு மண்ண அள்ளி மாட்டுக்கு சுத்திப் போடணும் என்றாள்.

இரண்டு நாள் கழித்து நாங்கள் மந்தைக்கு விளையாடப் போனோம். அந்த அழகம்மா பாட்டி இரண்டு பேரோடு பேசிக் கொண்டிருந்தாள்.

எக்கா அந்தா அந்தப் பாட்டி பேசிக்கிட்டு இருக்காங்க; நாம போயி அவுக காலுமண்ண அள்ளிட்டு வந்துருவமா என்று என் தம்பி கேட்க நானும் சரி என்றேன்.

பிறகு இரண்டு பேரும் அந்தப் பாட்டியின் எதிரில் போய் நின்றோம். எங்களைப் பார்த்ததும் அந்த பாட்டி என்னடா கண்ணுகளா என்றார்.

பாட்டி, கொஞ்சம் காலை எடுங்க என்று என் தம்பி சொன்னான். பாட்டியும் எதுக்கு தாயீ கால எடுக்க சொல்லுத என்றார்.

என் தம்பி ரொம்ப வேகமாக, எங்கம்மா பாலு ஊத்தும்போது நீங்க பாத்துட்டீகளாம்; அதேன் மாட்டுல பாலு கொறஞ்சிருச்சாம்; அதனால உங்க காலு மண்ண அள்ளி மாட்டுக்கு சுத்திப்போட்டா நிறைய பாலு கொடுக்குமாம்; எங்கம்மா சொன்னா என்றான். அவ்வளவுதான், பாட்டியின் முகமே மாறிப் போனது.

என்ன உங்காத்தா அப்படியா சொன்னா, அவ வாய கிழிக்கேன் என்று வஞ்சி கொண்டே புயல்மாதிரி அவள் எங்கள் வீட்டுக்குப் போக நாங்கள் பயந்துகொண்டே அவர் பின்னால் போனோம். அன்று மத்தியானம் வரை சண்டை ஓயவில்லை.

ooo

பக்கத்து ஊரான சத்திரப்பட்டிக்கு தினமும் காலையில் எங்கள் ஊர் பிள்ளைகள் எல்லோரும் தயிர் விற்கப் போவோம். வழியில் ஒரு மாந்தோப்பு. மாங்காய்கள் நிறைய காய்த்துக் கிடக்கும். எனக்கு அந்தத் தோப்பு பக்கத்தில் போனவுடன் நடையே கொடுக்காது.

நான், கணேசன், வசந்தா, சரசு எல்லோரும் இப்படி மாங்காய், பப்பாளி, கொய்யா என்று பழங்களையோ காய்களையோ பார்த்து விட்டால் திருடித் தின்னாமல் விடமாட்டோம். இந்த மாங்காயைப் பார்த்ததும் கையிலும் வாயிலும் ஊறல் எடுக்கும். எப்படியாவது இரண்டு காயைப் பிடுங்கினால்தான் மனசு நிம்மதியாக இருக்கும் என்று தோன்றியது. ஆனால் நாங்கள் காலை நேரத்தில் தயிர் கொண்டு போவதால் யாராவது இரண்டு பேர் தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டோ புல் வெட்டிக்கொண்டோ இருப்பார்கள்.

ஒரு நாள் என் அம்மா இரண்டு படி பாலைக் காய்ச்சி ஆறுவதற்காக இறக்கி வைத்துவிட்டுப் போய்விட்டாள். அதில் ஒரு பூனைக்குட்டி வந்து விழுந்துவிட்டது. உடனே பூனையைத் தூக்கி வெளியே போட்டுவிட்டு அந்தப் பாலை வடிகட்டினாள். பிறகு உறை ஊத்தினாள். ஆனால் கடைய வில்லை. அந்த இரண்டு படி தயிரையும் விற்று வரும்படி சொல்லி விட்டாள். தினமும் அரைப்படி தயிர் கொண்டு போகிறவள் இன்று இரண்டுபடி கொண்டுபோனதால் தயிர் மொத்தத்தையும் விற்று வர நேரமாகிவிட்டது. ஜெயா சீக்கிரம் விற்றுவிட்டாலும்கூட எனக்காகக் காத்திருந்து என் கூடவே வந்தாள்.

வழக்கம்போல் மாந்தோப்பு வழியே வந்தோம். நேரமாகிவிட்ட தாலோ என்னமோ தோப்பிலும் சரி தோப்பைச் சுற்றியும் சரி, ஒரு ஆளையும் காணோம். எனக்கு அதற்குமேல் நிலை கொள்ளவில்லை. தயிர் சட்டியைத் தங்கையிடம் கொடுத்துவிட்டு வேலி தாண்டி தோப்புக்குள் இறங்கினேன். காய்கள் ரொம்ப கிட்டத்தில் தொங்கிக்கொண்டிருந்தன. மடி நிறையக் காய்களைப் பிடுங்கிப் போட்டேன். இதற்குள் ஆள் அரவம் கேட்டதால் அவசர அவசரமாய் வேலி தாண்டிக் குதித்து ஓட்டம் பிடித் தேன். ஓடும்போதே ஜெயாவை வா என்று சொல்லிவிட்டு ஓடினேன். அவளும் என் பின்னாலேயே ஓடிவந்தாள்.

எங்கள் ஊரை நோக்கி இருவரும் ஓட தோட்டக்காரனும் எங்களை விரட்டிக்கொண்டே ஓடி வந்தான். ஊர் நெருங்கிவிட்டது. பின்னால் திரும்பிப் பார்த்தால் அவனும் நெருங்கி வந்துவிட்டான். இனி ஊருக்குள் தான் ஓட வேண்டும். இப்படி மாங்காய் திருடிக்கொண்டு நான் ஓடி வருவது தெரிந்தால் அவ்வளவுதான், எம் அம்மா கொன்று குழி தோண்டிப் புதைத்து விடுவாள். அதனால் வேறு வழி இல்லாமல் மாங்காய்களைக் கீழே போட்டுவிட்டு ஓடினேன். தோப்புக்காரனும் அந்த மாங்காய்களைப் பெறக்கிக்கொண்டே இனி அந்தப் பக்கம் வாங்க உங்கள வச்சிக்கிறேன் என்று சொல்லிவிட்டு திரும்பி நடந்தான். நான் அண்ணே அண்ணே, என்று கூப்பிட அவன் திரும்பிப் பார்த்தான். நான் அவனிடம், நா எம்புட்டு கஷ்டப்பட்டு மாங்காய புடுங்குனேன்; வேலி தாண்டி ஓடியாந்ததுல மேலுகாலெல்லாம் வேலி முள்ளு கீச்சி ரத்தமா வருது; எங்களுக்கு ரெண்டு மாங்கா கொடுத்துட்டுப் போங்க என்றேன்.

பழத்துக்கு விட்ட மாங்காய புடுங்கினதுமில்லாம உனக்கு மாங்கா வேற வேணுமா? எனக்கிருக்க கோபத்தில உன்ன ஒரு அடியாவது அடிச்சாத்தேன் என் மனசு ஆறும் என்று சொல்லியவாறே அவன் மீண்டும் ஓடிவர நாங்கள் பின்னங்கால் பிடரியில் பட ஓட்டம் பிடித்தோம். சுடுகாட்டு ஆலமரத்தில் நின்று மூச்சு வாங்கிவிட்டு ஊருக்குள் நடந்தோம்.

மறுநாள் காலை தயிர் விற்கப் போகவேண்டும். அதுவும் அந்த மாந்தோப்பு வழிதான் கொண்டுபோக வேண்டும். எனக்கு பயமென்றால் அப்படி ஒரு பயம். ஜெயா அழுதேவிட்டாள். ஆனால் எப்படியும் போய்த்தான் ஆக வேண்டும். போகமாட்டேன் என்று சொன்னால் காரணம் கேட்பாள் அம்மா. உண்மையான காரணத்தை சொன்னால் அடியும் வசவும் கிடைக்கும். அதனால் எல்லாப் பெண்களோடும் சேர்ந்து நடந்தோம். தோப்பு நெருங்க நெருங்க நடக்க கால் வரவில்லை. எல்லோரும் சிரிப்பும் பேச்சுமாக நடக்க நாங்கள் பின்தங்கியவாறு மெல்ல மெல்ல நடந்தோம். எல்லோரும் தோப்பைக் கடந்துவிட்டார் கள். ஜெயா விக்கலும் விம்மலுமாக அழுதுகொண்டே வந்தாள். எனக்கு மனசு பயத்தில் அடித்துக்கொண்டாலும் அவளை தைரியப்படுத்திக்

கொண்டு நடந்தேன். தோப்பைக் கழித்து விட்டோம் என்று நினைத்த போது பின்னாலிருந்து யாரோ கூப்பிடுவது கேட்டது. திரும்பிப் பார்த் தால் நேற்று எங்களை விரட்டிய தோப்புக்காரன்தான். எங்களால் ஓட முடியாது. தயிர் கொட்டிவிடும். நானும் ஜெயாவும் பேசாமல் நின்றோம். அவன் எங்களை நெருங்கி வந்தான்.

ஆனால் அவன் எங்கள் பக்கத்தில் வந்ததும் ஆழாக்கு தயிர் எம் புட்டு என்றான். நான் விலையைச் சொல்ல ஆழாக்கு தயிர் வாங்கினான்.

பாவம் நீங்க சின்னப்புள்ளைக! நேத்து மாங்காய்க்கு ஆசைப்பட்டு புடுங்கிட்டுக; நான் கோவத்தில உங்கள விரட்டிட்டு வந்து மாங்காய மொத்தமா உங்ககிட்ட இருந்து கொண்டுக்கிட்டு வந்துட்டேன். அப் பவும் கூட வாய்விட்டு கேட்டீக. நானு கொடுக்கல. இந்தாங்க இப்ப ஆளுக்கு ஒரு மாங்கா தாரேன்; தின்னுக்கிட்டுப் போங்க என்று கொடுத் தான். அதோடு அங்கே இருந்த ஒரு கிளப்பு கடைக்கு தினமும் ஒரு படி தயிர் வேறு கொடுக்கும்படி சொன்னான். எங்கள் சந்தோசத்திற்கு கேட்கவா வேண்டும்.

தயிரை ஊற்றிவிட்டு ஒரே ஓட்டம்தான். கணேசனிடம் விஷயத்தை சொன்னதும் அவன் நல்லவேளையாப் போச்சு. தயிரை கடையில ஊத்திட்டு காலா காலத்தில மாடு மேய்க்க வந்துரு என்றான்.

ஜ

விறகு பெறக்குவதற்காக நானும் கணேசனும் மலைக்குப் புறப் பட்டோம். இந்த விறகு பெறக்கும் வேலைக்கு சரசுவும் வசந்தாவும் வர மாட்டார்கள். அவர்கள் பெரிய சம்சாரி ஆனதால் அவர்கள் வீட்டிலேயே மாறு மட்டை என்று நிறைய இருக்கும். மலையில் தரவுப்புல் இருப்பதால் அவர்கள் தரவு அறுப்பதற்காக எங்களுடன் வந்தார்கள். மொட்டை மலைக்கு சற்று தள்ளி வாடி மலை இருக்கிறது. அந்த மலையில்தான் வாரண்டுக்குத் தப்பியவன் இருக்கிறான் என்றும் அங்கே போகும் பொம்பளைகளிடம் களவு செய்கிறான் என்றும் பெரியவர்கள் சொல்வார்கள்.

நம்ம இன்னைக்கு வாடிமலைக்குப் போவோம்; வாரண்டுக்கு தப்பியவனைப் பாப்போம் என்று கணேசன் சொன்னபோது எனக்கு சந்தோசமாக இருந்தது. என் மூத்த தம்பிக்கு பள்ளிக்கூடம் லீவாக இருந்ததால் அவனும் எங்களோடு வந்தான். நாங்கள் பெரிய பெரிய காட்டு மொச்சிக் கம்பாக ஒடித்துக்கொண்டு வீறாப்பாக பேசியவாறு நடந்தோம். மலையில் ஏறும்போதே எல்லோருக்கும் பயம். வாடிமலை யில் ஏற ஏற சுண்டக்காய்ச் செடிகளும் தரவுப் புற்களும் மண்டிக்கிடந்தன. கணுக்கணுவாய் முள் எந்திய கத்தாழைகள் வேறு புதரோடிக்கிடக்க அதனூடே கிக்கி... கிக்கி... என்று வினோதமான சத்தம் கேட்டது. பெரிய

கொப்போடிக் கிடந்த கிளுவை மரத்தில் நின்றிருந்த கூகை எங்களைக் குறுகுறுவென்று பார்த்து விட்டு விருட்டென்று பறந்து ஓடியது. வழுக்கை யாக மேலோடிய மலையினூடே நீர் பாய்ந்த தடங்கள். நாங்கள் அதன் வழியே நடந்து வாடி மலைக்குப் போனோம். மலையில் ஏறிக்கொண்டு சுற்றிலும் பார்த்தோம். அங்கே மரத்து நிழலில் உட்கார்ந்திருந்த இரண்டு பேர் எழுந்து வந்து எங்களிடம், நீங்க எந்த ஊரு? இங்க எதுக்கு வந்தீக என்று கேட்க, நாங்கள் விறகு பெறக்கவும் தரவு அறுக்கவும் வந்ததாகச் சொன்னோம்.

உடனே அவர்கள், இனிமே இங்க வராதீக; இது எங்க மல; அப்படி எங்க பேச்ச கேக்காம வந்தீகன்னா உங்கள மலயில இருந்து உருட்டி விட்டுருவோம் என்றார்கள்.

அதைக் கேட்டதும் எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. மலை யாருக்காவது சொந்தமாக இருக்குமா? உடனே நாங்கள், மொட்டை மலை எங்க மலை; அங்க நீங்க வரக்கூடாது; வந்தாத்தேன் இருக்கு வேட்டு என்றோம்.

நேத்துப் பிறந்த பொடிக் களுதைக. என்னமா வாயி பேசுதுக! வாடா ரெண்டு வெளு வெளுப்போம் என்று கம்பைத் தூக்கிக்கொண்டு பொய்க்காகவோ, நிஜமாகவோ கொஞ்ச நேரம் எங்களை விரட்டிக் கொண்டு வந்தார்கள்.

கணேசன் சொன்னான், அவங்கதேன் வாரண்டுக்குத் தப்பினவங்க. உனக்கெப்படி தெரியும் என்றோம். அவுக நெசத்துக்கு ஆடுமாடு மேய்க்கிறவங்களா இருந்தா நம்மள இப்படி முடுக்கமாண்டாக என்றான். நாங்கள் இப்படிப் பேசிக்கொண்டே அவர்களுக்குப் பயந்து இறங்க மாண்டாமல் இறங்கி ஓடிவந்தோம். வரும்போது வழியில் ராஜா விழுந்து முழங்காலில் ரத்தக் காயம். உடனே வீட்டுக்குப் போய் விட்டான். பிறகு நானும் கணேசனும் கிடைத்த விறகை பெறக்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தபோது என் அம்மா பத்ரகாளியாக நின்றாள். என்னைக் கண்டதும் என் தலையில் நாலு அடியும் அவள் தலையில் இரண்டு அடியும் அடித்துக்கொண்டு கணேசன் வீட்டிற்கு இழுத்துக் கொண்டு போனாள்.

அங்கே போய் அவன் அப்பாவை கூப்பிட்டு என் மவனயும் மவளயும் ஒம் மவன் மல மட்ட காடு கரைன்னு இழுத்து அடிக்கான்; நாளைக்கு எம் புள்ளைகளுக்கு எதுவும் ஒரு சேதமின்னா உன்ன சும்மா விடமாண்டேன் என்றாள்.

கணேசன் அப்பா குதித்தார். எம் மவன் ஆயிரம் கூப்புடுதான்; உம் புள்ளைக எதுக்கு அவன் கூட போறாக?

பன்னியோட சேந்த பசுவும் 'பீ' திங்குமின்னு இதுக அலையிதுக, ஆமா சொல்லிட்டேன் என்று மீண்டும் என் தலையில் அடித்து வீட்டிற்குக்

கூட்டி வந்தாள். வீட்டில் என் மூத்த தம்பியைக் காணோம். அவன்தான் எதையாவது வண்டி வண்டியாய் புளுகி இருப்பான் என்று நினைத்தேன். இளைய தம்பி ஓடி வந்தான்.

ஏங்க்கா இன்னைக்கு வாடிமலைக்கு போனீகளாமே; அங்க கள்ளங்க அண்ணன அடிச்சி கீழே புடிச்சி தள்ளிட்டாகளாமே; அண்ணன் கால்ல ரத்தமா வந்துச்சு என்றான்.

எனக்குப் புரிந்துவிட்டது. விழுந்தது தெரிந்தால் அம்மா அடிப் பாள் என்று கணேசன் மீது பழியைப் போட்டுவிட்டான். எங்கள் வீட்டுக்கு வழக்கமாக வரும் கணேசன் அன்று இரவு வரவில்லை. அதோடு மறுநாள் என்னைக் கூப்பிடாமலே புல்லுக்கும் மாடு மேய்க்க வும் போய்விட்டான். எனக்கும் அவன்மீது கோபமாக வந்தது. என் தம்பி செஞ்ச வேலைக்கு நான் என்ன செய்ய முடியும்? வசந்தா வந்து சொன் னாள். இனிமே கணேசன் உன் கூட பேசமாண்டானாம்.

நானும் கோபமாய் சொன்னேன். ரொம்ப நல்லதாப் போச்சு. நானும் இனிமே அவன் கூட பேசமாட்டேன். இப்படியே பத்துநாள் வரையும் நானும் அவனும் பேசாமலே போய்விட்டது.

நாங்கள் இரண்டு பேரும் பேசாமல் இருந்தது எங்களுக்கு கஷ்டமாக இருந்ததைவிட வசந்தாவிற்கும் சரசுவிற்கும் தான் ரொம்ப கஷ்டமாய் இருந்தது.

எங்கள் ஊருக்கு ஒரு சாமியார் வந்திருந்தார். எல்லோரும் அவரை விழுந்து விழுந்து வரவேற்றார்கள். இப்படி ஊருக்குள் யாராவது புது ஆட்கள் வந்துவிட்டால் நாங்கள் வீடு வீடாக ஊர்க்கஞ்சி எடுத்து அவர் களுக்குக் கொடுப்பது வழக்கம். அது எங்களுக்கு ஒரு விளையாட்டு போல. பத்துப் பிள்ளைகள் வரை சேர்ந்துகொண்டு சட்டி நிறைய கஞ்சி வாங்கி புதிதாய் வந்தவர்களுக்குக் கொடுக்கும்போது ரொம்ப சந்தோசமாக இருக்கும். பெரியவர்களும் எங்களைப் பாராட்டுவார்கள்.

நாங்கள் அன்று ஊர்க்கஞ்சி எடுக்கப் புறப்பட்டபோது எல்லோரும் எங்களைத் தடுத்து விட்டார்கள். சாமியாரெல்லாம் கடவுளுக்கு சமமானவர் என்றும் அவரை வீட்டு வீட்டுக்கு கூட்டிப் போய் விருந்து படைக்க வேண்டுமென்றும் சொல்லிவிட்டார்கள். இதில் எங்களுக்கு ரொம்ப வருத்தம்தான்.

அந்த சாமியார் வந்ததிலிருந்து ஊர்ப் பெரியவர்கள் அவரைச் சுற்றிதான் கூடி கதை பேசிக்கொண்டிருந்தார்கள். படிக்கிற பிள்ளைகளைக் கூட்டிப்போய் அவர் முன்னால் நிறுத்தி இவன் நல்லா படிக்கணுமின்னு துண்ணூரு பூசுங்க சாமி என்பார்கள். அவரும் கண்ணை மூடிக்கொண்டு

எதையோ முணுமுணுத்தவாறு திருநீறு பூசுவார். என் அம்மா தினமும் என் தம்பி ராஜாவை, வாடா உனக்கு நல்லா படிப்பு வரட்டுமின்னு அந்த சாமியார்கிட்ட திருநீறு பூசிட்டு வருவோம் என்று கூப்பிடுவாள். அவனும் நானு பரிச்ச எழுதாமயே பாசு ஆவ அந்த சாமியார் ஏதாவது மந்திரம் வச்சிருக்காரா என்பான்.

ஒருமுறை அவர் அடுத்த அமாவாசையில் மூன்று நாளைக்கு சூரியன் புறப்படவே புறப்படாது, இருட்டாகத்தான் இருக்கும் என்று சொல்லி விட்டார். பெரியவர்கள் எல்லாம் பதட்டத்துடன் ஏன் என்று கேட்க அவர் பூமா தேவி அறுவது வருசமா இந்த பூமியை வலது கையில் சுமந்து கொண்டிருக்கிறாள். இப்போது இடது கைக்கு மாற்றப் போகிறாள். அதனால்தான் இருட்டாகவே இருக்கும் என்று சொல்லிவிட்டார். அவ்வளவுதான், பெரியவர்கள் எல்லாம் பதறிப்போனார்கள். அய்யய்யோ அப்படி இருட்டியே கெடந்தா அரிசி பருப்புக்கு என்ன செய்ய? புல்லு புளிச்சிக்கு என்ன செய்ய... என்று பரிதவித்து அரிசியும் பருப்பும் சேர்க்க ஆரம்பித்துவிட்டார்கள். இரண்டு படி தானியத்தை குத்திய நாங்கள் அரிசி சேர்ப்பதற்காக நாலு படி தானியத்தை குத்த ஆரம்பித்தோம். ஆனாலும் எங்களுக்கு சந்தோசம்தான். இருட்டாகவே இருந்துவிட்டால் மாடு மேய்க்கவோ காட்டு வேலைக்கோ போக வேண்டாம். விளையாடுவதும் தூங்குவதும்தானே எங்கள் வேலை என்று நாங்கள் அந்த இருட்டுக்கு ஆவலுடன் காத்திருந்தோம்.

ஊருக்குள் எங்கு பார்த்தாலும் இதே பேச்சுதான். கூடிக் கூடி பெரியவர்கள் ஆச்சரியமும் அதிசயமுமாக இதையே பேசினார்கள். காலையிலும் சாயங்காலமும் வீட்டுக்கு ஒரு சொம்பு பால் என்று கணக்கு வைத்து அந்த சாமியாருக்கு எங்களிடம் பாலைக் கொடுத்து விட்டார்கள். சாமியார் எங்களிடம் பால் சொம்பை வாங்கி கடகடவென்று குடிப்பார். சிறு ஏப்பம் பரிவதை நாங்கள் ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருப் போம். ஒருநாள் ராஜாவிடம் பாலை சாமியாருக்காக கொடுத்துவிட்ட போது பாதி பாலைக் குடித்துவிட்டு சொம்பு நிறைய தண்ணீரை ஊற்றி கொண்டுபோய் கொடுத்துவிட்டு வந்தான்.

சாமியார் சொன்ன கெடுவும் கடந்துவிட்டது. எப்போதும் போலத் தான் விடிந்துகொண்டிருந்தது. அதனால் சாமியார் மீது எல்லோருக்கும் முன்பு இருந்த மதிப்பு இல்லை. யாரும் அவருக்காக எதுவும் கொண்டு போய் கொடுக்கவில்லை. அதனால் அவர் இரண்டொரு நாள் இருந்து பார்த்துவிட்டு ராவோடு ராவாக காணாமல் போய்விட்டார்.

ooo

அக்கா ராதாவும், அவள் தங்கை செல்வியும் கல்யாணமாகி எங்கள் ஊருக்கு வந்தபோது நாங்கள் அவர்களை ஆச்சரியத்தோடு

வேடிக்கை பார்த்தோம். அத்தை ராமாயி வீட்டுக்குத்தான் அவர்கள் மருமகளாக வந்திருந்தார்கள். அத்தை எங்களுக்குச் சொந்தக்காரர். அதோடு என் அம்மாவும் அத்தையும் எப்போதும் ரொம்பப் பிரியமாக இருப்பார்கள். அத்தையின் மருமகள் இரண்டு பேரும் எனக்கு ஒன்று விட்ட பெரியப்பா மகள்கள்தான். அதனால் நான் வேலை முடிந்த சமயங்களில் அக்கா அக்கா... என்று அவர்களிடம்தான் ஒட்டிக்கிடப்பேன்.

அக்காமார் இருவரும் பட்டணத்திலேயே வளர்ந்தவர்கள். எங்கள் ஊரில் யாரும் பழக்கம் கிடையாது. அதனால் என் மீது பிரியமாக இருப்பார்கள். அவர்களுக்கு என்ன விஷயமென்றாலும் சரி, என்ன தேவையென்றாலும் சரி என்னைத்தான் கூப்பிடுவார்கள். எனக்கு ரொம்பப் பெருமையாக இருக்கும். அவர்களுக்குக் கல்யாணமாகி கொஞ்சநாள் ஆகிவிட்டது. ஒருநாள் எனது அம்மாவும் நானும் அத்தை பிஞ்சைக்குகளை எடுப்பதற்காகப் போயிருந்தோம். எனது சின்னம்மாவும் அலமேலுச் சின்னம்மாவும் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் அத்தையின் மருமகளைப் பற்றி பேசிக்கொண்டு இருந்தார்கள்.

ஏங்க்கா நீ பொழுதுக்கும் கள வெட்டிட்டுப் போறயே, உன் மருமவ வென்னி போட்டுக் கொடுப்பாளா? என்று சின்னம்மா அலமேலு கேட்டாள்.

அதற்கு இந்த அத்தையும், அவ வெண்ணி போட்டுக் கொடுக்காட்டி ஒரு இடி இடிச்சிரமாட்டேன் என்றாள்.

எனது சின்னம்மா, ஒம் மருமக ரெண்டு பேரும் டவுனுலேயே வளந்த புள்ளைகளாச்சே கஞ்சி தண்ணி நல்லா காய்ச்சுதகளா என்று கேட்டாள்.

முத்துக்கணக்கா காய்ச்சுதாக! வாயில வைக்க முடியல. உவ்வேன்னு வருது. எங் கொடுமைக்கு என்ன செய்ய? என்று சொன்னாள்.

பட்டணத்தில வளந்த புள்ளைக! எங்களுக்கு சோறு கீறு ஆக்கத் தெரியாதுன்னு அதுக பாட்டுக்கு இருந்துட்டா நீ என்ன செய்வே; புண்ணியத்துக்குனாச்சிலும் இம்புட்டு கஞ்சி தண்ணி காய்ச்சி வைக்காகளேன்னு இரு என்றாள் என் அம்மா.

புண்ணியம் என்ன புண்ணியம்! அப்படி அவுக காய்ச்சி வைக்காட்டா உன் அப்பன் வீட்டுக்கு ஓடுன்னு முடுக்கி விட்டுரமாண்டேன் என்றாள்.

இப்படியே இரண்டு அக்காக்களையும் பற்றி பொறணி பேசிக் கொண்டு இருந்தார்கள். நான் அவர்கள் பேசியதை எல்லாம் கேட்டு விட்டு வந்து ஒன்றைக்கூட விடாமல் இரண்டு அக்காக்களிடமும் சொல்லிவிட்டேன்.

வேலை முடிந்து வீட்டுக்கு வந்த அத்தை செல்வி அக்காவிடம், என்னத்தா வென்னி போட்டு வச்சிட்டயா? என்று கேட்க அக்காவும் வென்னி போடாட்டாத்தான் என்னை இடிச்சிருவீகள்ல என்று திருப்பி சொல்ல அத்தைக்கு அதிர்ச்சி!

அத்தை குளித்துவிட்டு சாப்பிடப்போகும்போது அக்கா, அத்தே இன்னைக்கு உப்பும் உரப்புமா சமைச்சி வச்சிருக்கேன். உங்களுக்கு வாயில வச்சா உவ்வேன்னு வராது என்று சொல்லவும் அவருக்கு இன்னொருமொரு அதிர்ச்சி! பிறகு அக்கா அத்தை சொன்ன வார்த்தை களையெல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டே எல்லா வேலை களையும் செய்ய அத்தை பொரிந்த முகத்தோடு எங்கள் வீட்டுக்கு வந்தார். பிறகு அலமேலு சின்னம்மா எனது சின்னம்மா எல்லோரையும் வைத்துக் கொண்டு நான் என் மருமகளைப் பற்றி பிஞ்சையில் பேசியதையெல்லாம் யார் இங்கே வந்து செல்விகிட்ட சொன்னது என்று கேட்டு சண்டைபிடிக்க அவர்கள் நான் சொல்லல, நீ சொல்லல என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அலமேலு சின்னம்மா நாம் யாருமே சொல்லவில்லை யென்றால் பாரதாதான் சொல்லியிருக்கணும் என்று சொல்லிவிட்டாள். எல்லோரும் என்னைக் கேட்க நான் சொல்லவே இல்லை என்று சத்தியம் செய்தேன். அக்கா செல்வியும் என்னுடன் சேர்ந்துகொண்டு, பாவம் பாரதா! அவ நீங்க பேசுனதையெல்லாம் ஞாபகம் வச்சிக்கிட்டு வந்து எங்கிட்ட சொல்லுவாளா? அவ என்ன அவ்வளவு பெரிய மனுசியா? என்று வேறு சொல்லிவிட்டார். உடனே அத்தைக்கு பெரியவர்கள் மீது சந்தேகம் வந்துவிட்டது. அன்று முழுதும் அவர்கள் நீ சொல்லலேன்னு சத்தியத்துக்கு வா, பெறத்தியத்துக்கு வா என்று சண்டை போட்டுக் கொண்டிருக்க நானும் செல்வி அக்காவும் சிரித்துச் சிரித்துப் பேசியவாறு தாயம் விளையாடிக் கொண்டிருந்தோம்.

எங்க அக்காவும் மாமாவும் ஊருக்கு வரும்போது எல்லாம் அவர்கள் குல தெய்வத்தை கும்பிடப் போவார்கள். அந்தக் கோயில் மேற்கு மலைப் பக்கம் இருக்கிறது. அதில் நிறைய சாமிகள் இருந்தாலும் இவர்களுக்கு அய்யனார்தான் குலதெய்வம். அதனால் அதை அய்யனார் கோயில் என்போம். பயங்கரமான வனத்திற்குள் அது இருந்தது. வருசம் ஒரு தடவை ஏழெட்டுக் கிடாய்களோடு பத்து வண்டிக்கு மேல் கட்டிக் கொண்டு புறப்பட்டு விடுவார்கள். எங்கள் ஊரிலிருந்து அது பன்னிரண்டு மைல் இருக்கும்.

நாளைக்கு கோயிலுக்குப் போக வேண்டும் என்று நினைத்துக்

கொண்டு படுப்பேன். பிறகு கண் விழித்துப் பார்த்தால் விடிந்திருக்கும். நாங்கள் வண்டியில் போய்க்கொண்டிருப்போம். மாமாக்கள் ஏழு பேரும் அவர்களின் பிள்ளைகளும் வருவார்கள். பெரிய பெரிய மரங்களும் காட்டுப் பூக்களும் அருவியுமாக பார்க்க சந்தோசமாக இருக்கும். காட்டுக்கோழி, குரங்கு, மயில் என்று திக்கத்துக்கு ஒன்றாக ஓடும்.

எங்களுக்கு ஒரே கொண்டாட்டாம்தான். கோயில் போய்ச் சேர்ந்த வுடன் பெரியவர்கள் பளியர்களைக் கூப்பிட்டு விறகு, இலை கொண்டு வரச் சொல்லிவிட்டு கிடாக்களை வெட்டி சமையல் வைக்கத் தொடங்கு வார்கள். எங்களைக் கண்டுகொள்வார் இல்லை என்பதால் நாங்கள் இஷ்டத்துக்கு ஆற்றுத் தண்ணியில் நீச்சல் அடிப்போம். புளித்த மாங்காய், விளாம்பழம், பனம்பழம் இத்தனையையும் பெறக்கித் தின்போம். தப்பிய மாட்டை மேய்ப்பாரும் இல்லை, மேய்த்த கூலி கொடுப்பாரும் இல்லை. கணேசன் கிளாக்காய், நெல்லிக்காய் என்று கொண்டுவருவான். இது போதாதென்று கறிச்சோறு வேறு.

நாங்கள் போவதற்கு முன்னால் இரண்டு மூன்று மாமாக்களும் கூட சிலரும் அதிகாலையிலேயே அந்தக் கோயிலுக்குப் போய் 'ஊட்டுக் கொடுத்தேன்' என்று ஒரு பன்னியை பலி கொடுப்பார்கள். அந்தப் பன்னியை யாரும் பன்னி என்று சொல்லக்கூடாது. அய்யனார் கோயிலுக் கென்று அதை வளர்ப்பதால் அங்கிருக்கும் சாமி பெயர் சொல்லித்தான் கூப்பிடுவார்கள். இதைக் கொண்டுவருவதே ஒரு வேடிக்கையான விஷயம்தான்.

முதலில் எல்லா மாமாக்களும் சேர்ந்து பூசாரியை வரவழைத்து குறி கேட்பார்கள். அவர் மீது சாமி வந்து ஆவேசமாக ஆடும். அப்போது ஒரு மாமா, தெய்வமே உன்னோட புள்ள எங்க பிறந்திருக்கு என்று கேட்பார். பூசாரியும் ஒரு இடத்தைச் சொல்லி அங்கே இத்தனை குட்டி போட்டிருக் கிறது; அதில் என் குட்டியை கொண்டு வா என்று சொல்வார். உடனே அவர் மீதிருந்த சாமி போய்விடும்.

பிறகு எல்லோரும் குளித்து சாமி கும்பிட்டு தேங்காய், பழம் மஞ்சக்காப்பு எல்லாம் எடுத்துக்கொண்டு கொட்டுமேளத்தோடு போய் குட்டிப் பன்னியை தூக்கி வருவார்கள். பிறகு அதற்கு செய்யும் பணி விடை சொல்லி முடியாது.

வீட்டு வீட்டுக்குப் பெண்கள் குளித்து வெங்கலக் கும்பாவை சீம்பாலாகத் தேய்த்து அதற்கு கஞ்சி ஊத்துவார்கள். அதற்கு எச்சில் கும்பாவில் கஞ்சி ஊத்தக்கூடாது. அதுவும் சுத்தமான பெண்கள்தான் ஊத்த வேண்டும். வாழைப்பழம், சீனிக்கிழங்கு, நுங்கு என்று அதற்கு ராஜ உபசாரம்தான். தினம் ஒருவர் அரப்பு போட்டு குளிப்பாட்ட வேண்டும். சின்னப் பிள்ளைகளான எங்களுக்குக் கூட இப்படி ஒரு செல்லம் கிடையாது. அதோடு நாங்கள் அதற்கு எச்சிப் பண்டம்

கொடுத்துவிட்டால் அவ்வளவுதான், விரட்டி விரட்டி எங்களை அடிப் பார்கள். அப்படி ஒரு வருசம் வளர்த்த பன்னி கொழுகொழுவென்று ஒரு குலுக்கையைப் படுக்கப் போட்ட சைசில் நீண்டு பருத்துக் கிடக்கும். ஒரு சனிக்கிழமை அன்று நடுச்சாமத்தை தவிர்த்து எல்லோரும் எழுந்து கோவிலுக்குப் புறப்பட்டு விடுவார்கள். நடுச்சாமம் ஆகாதாம். அந்நேரத்துக்கே டண்டணக்க, டண்டணக்கு என்று கொட்டு அடிக்க பிப்பீ... பிப்பீ... பீ... என்று ஊதும் குழல் சத்தத்தில் ஊரே எழுந்துவிடும், ஊருக்கு முன்னால் நாங்கள் எழுந்து விழுந்தடித்துக்கொண்டு அவர்கள் முன்னால் நிற்போம்.

உடனே தாத்தா வீரப்பன் மேல் சாமி வந்துவிடும். ஆவேசத்தோடு ஆடியவாறு, கொண்டாடா என் தலமலய என்பார். உடனே இந்தப் பன்னியை அவர் முன்னால் கொண்டுபோய் நிறுத்துவார்கள். எங்கேடா நிறகுடத்து தண்ணி என்று கேட்க அதற்கும் ஒருவர் ஓடுவார். தண்ணீரை இலை, தலை துளும்பாத நேரத்தில் எடுக்க வேண்டும். மரம், காற்று என்று எல்லாம் அப்போதுதான் தூங்குமாம். அவைகளை சீற்றமடைய செய்யக்கூடாது என்பதற்காக ஒரு மாமா சின்னக் கல்லை கிணற்றில் எறிவார். பிறகு ஒரு குடம் தண்ணீரை கிணற்றிலிருந்து எடுத்துக் கொண்டு வந்து அந்தப் பன்னியின் மீது ஊற்றுவார். அது தண்ணிபட்ட குளிரில் சிலிர்த்து நிற்கும். உடனே தாத்தா, தலமல அருள் வாங்கிட்டான்டா; மாலய கொண்டு வாங்க என்று சொல்ல முதல்நாளே பண்டாரத்திடம் வாங்கிவைத்த நந்தியாவட்ட மாலையை அதற்குப் போடுவார்கள். பிறகு குங்குமம் வைத்து தீபாரதனை காட்டி அதனைக் கொஞ்சிக் குலாவி, தலமல உன் எல்லைக்கு நடடா என்று சொல்வார்கள். அது பேசாமல் உறுமிக்கொண்டு படுத்துக் கொள்ளும். உடனே தாத்தா எவனோ இங்க 'அழி'வேல செஞ்சிட்டான், அதேன் தலமல கோவிச்சிட்டாரு என்று சொல்லி அதை மிரட்டி உருட்டி கோயிலுக்கு கூட்டிப் போவார்கள். அதுவாகவே அய்யனார் கோயிலுக்குப் போகுமாம். அதற்கென்று ஒரு பரண் கட்டியிருப்பார்கள். இதுவாகவே அதன்மீது படுத்துக்கொள்ளு மாம்! கத்தியால் தலையை அறுக்கும் போதும் அது துள்ளாது துடிக்காது பேசாமல் படுத்திருக்கும் என்று மாமாக்களும் மற்றவர்களும் பேசிக் கொள்வார்கள். ஆனால் நாங்கள் ஒரு நாள் கூடப் பார்க்கவில்லை.

இதைப்பற்றி மாமாவிடம் கேட்டால் சின்னப்பிள்ளைகளும் பொம்பளைகளும் வரக்கூடாதுன்னுதானே நாங்க இலைதல துளும்பாத நேரம் போறோம் என்று சொல்லிவிடுவார்கள். பாவம் அந்தப் பன்னி! எங்களை விட செல்லமாக வளர்ந்துவிட்டு இப்போது மாமாக்களின் வாயில் அரைபட்டுக் கொண்டிருக்கும். இந்தச் சோறு, கறியை மிச்சம் வைத்து வீட்டுக்குக் கொண்டுவரக் கூடாது. அதனால் அங்கிருக்கும் பளியர்களுக்கு கொடுத்து விடுவார்கள்.

இந்த சாமியைக் கும்பிட்டுவிட்டு ஒரு வாரத்திற்குள் இன்னொரு

சாமியைக் கும்பிடப் போவார்கள். அது இன்னமும் கொடுமையாக இருக்கும். இந்தச் சாமி கும்பிடவதற்கும் பூசாரி மீது சாமி வரவழைத்து குறி கேட்பார்கள். இதற்கு நிறைமாத சினை ஆட்டை அறுக்க வேண்டும். வெள்ளை, கருப்பு, சிவப்பு என்று அது மூன்று நிறத்தில் இருக்க வேண்டும்.

பூசாரி சாமி ஆடி இந்த ஆடு இருக்கும் இடத்தைச் சொல்வார். உடனே அதைக் கொட்டு முழக்கோடு போய் பத்திக்கொண்டு வருவார் கள். ஆட்டை கொண்டுவந்த உடன் கொட்டும் குலவையுமாக சாமி யாட்டம் போட்டுக்கொண்டு அந்த ஆட்டின் வயிற்றைக் கிழித்து குட்டியை வெளியே எடுத்துவிட்டு மீண்டும் தைத்து விடுவார்கள். இப் போது அந்த ஆடு குன்னிப்போய் தலையைக் கீழே போட்டுக்கொண்டு இருக்கும். அதைப் பார்க்கும்போது பரிதாபமாக இருக்கும். அதன் குட்டி ஒரு புறம் துடித்துக்கொண்டு இருக்கும். இந்த ஆடு தலையைக் குனிந்து கொண்டு இருப்பதைப் பார்த்து சிலர் அந்தா... அந்தா பாரு புல்லு மேயுது! எல்லாம் சாமியோட சக்திதான் என்பார்கள்! அதற்கும் சிலர் ஆமாமா, இல்லேன்னா ஆடும் குட்டியும் வவுத்த அறுத்த மூணே முக்கா நாழியில சாவுமா என்று பயபக்தியோடு சொல்லிக்கொள்வார்கள். பிறகு அந்த பச்சைக் குட்டியையும் ஆட்டையும் அறுத்து சோறு ஆக்கி மிச்சம் மீதி இல்லாமல் தின்று தீர்ப்பார்கள். ஆட்டைக் கொன்றது போதா தென்று இந்த சாமியாடிகள் தீவட்டி, வலயக்கம்பு வைத்துக்கொண்டு குதிகுதியென்று குதிப்பார்கள். பெரியவர்கள் எல்லோரும் இவர்கள் காலில் விழுந்து வருதி(வரம்) கேட்பதோடு சின்னப்பிள்ளைகளாகிய எங்களையும் கூட்டி வந்து அவர்கள் காலில் விழவைப்பார்கள். கீழே விழுந்து எழுந்ததும் சாமியாடிகள் மஞ்சள் காப்பை கைநிறைய அள்ளி மண்டையில் போட்டு நெற்றியிலும் பூசி விடுவார்கள். அவர்கள் போடும் வேகத்திற்கு மஞ்சள் காப்பு முதலில் கண்ணில்தான் விழும். விழுந்ததும் இரண்டு மூன்று நிமிஷத்திற்கு கண் எரிவதோடு எதையும் பார்க்கவும் முடியாது. அழவும் கூடாது, சொல்லவும் கூடாது. கொஞ்சம் முனங்கினால்கூட ம்.... பேசாம இரு. கண்ணு எரியுதுகிரியுதுன்னு சொன்னயின்னா சாமி கோவிச்சிக்கிடும் என்று எங்கள் வாயை அடைத்து விடுவார்கள். உச்சந்தலையில் அடைந்து கிடக்கும் மஞ்சள் காப்பு குளத்தில் தினம் தினம் முங்கி முங்கிக் குளித்தால் கூட போகாது. அட்டையாய் ஒட்டிக் கிடக்கும்.

ஒருமுறை இப்படித்தான், சிவகாசிக்குப் போகிற பாதையில் இருக்கும் அய்யனாப் பிள்ளை கோயிலுக்கு மறுநாள் போவதாக பெரிய வர்கள் எல்லாம் சொன்னதோடு அதற்கு உரிய ஏற்பாடும் செய்துவிட்டு

வெள்ளனத்தில் எந்திரிச்சுப் போவணும்; சீக்கிரம் போய் படுங்க என்று எங்களை விரட்டி விட்டார்கள்.

நானும் எனது சித்திமகள் ஜெயாவும் அவர்கள் வீட்டின் மரிசல் பக்கத்தில் படுத்துத் தூங்கிவிட்டோம். காலையில் வண்டி கட்டி கோயிலுக்குப் போனவர்கள் நாங்கள் படுத்த இடம் தெரியாமல் எங்களை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். நாங்கள் எழுந்து பார்த்தால் ஒருத்தர் கூட இல்லை. எனது அம்மாவோ அவள் அம்மாவோ பார்த்துவிட்டால் எங்களை மாடு மேய்க்கவும் விறகு பெறக்கவும் போகச் சொல்லிவிடு வார்களோ என்று பயந்தோம். அழுகையாய் வந்தது.

அதனால் ஒருவருக்கும் தெரியாமல் அவர்கள் கண்ணை மறைத்து விட்டு அய்யனாப்பிள்ளை கோயிலுக்கு புறப்பட்டு விட்டோம். வருசம் ஒரு தடவை போயிருப்பதால் அந்த வழித்தடங்களை நினைவில் வைத்துக்கொண்டு நடந்தோம். பெரியவர்களுக்கே செருப்புகள் கிடையாது. எங்களுக்கு எப்படிக் கிடைக்கும்? அதை விட ஒரு அதிசயம் என்னவென்றால் முள் தைத்தால் வலிக்காது. வெயிலில் நடந்தால் கால் சுடாது. அந்த அளவுக்கு காட்டிலும் மேட்டிலும் நடந்து நடந்து பாதங்கள் காய்ப்பேறியிருந்தன.

நாங்கள் இருவரும் காட்டுப்பாதை வழியே நடந்தோம். வழி நெடுகிலும் ஆடு மேய்ப்பவர்களும் மாடு மேய்ப்பவர்களும் கமலை இறைப்பவர்களும் காட்டில் வேலை செய்பவர்களுமாக நிறைய ஆட்கள் இருந்தார்கள். அவர்களிடம் வழி கேட்டுக் கேட்டு நடந்தோம். பாதி வழி நடந்து வந்துவிட்டோம். அதன் பிறகு ஆட்கள் அவ்வளவாய் இல்லை. எங்களுக்கு வழி தெரியவில்லை. காலையிலிருந்து சாப்பிடாமல் நடந்ததால் பசி வயிற்றைப் பிறாண்ட மறுபடியும் அழுகையாய் வந்தது.

இப்போது வீட்டுக்கும் திரும்ப முடியாது. அப்படிப் போனால் ஆயிரம் கேள்வி கேட்டு என் அம்மா அடிப்பாள். என்ன செய்யலாம் என்று யோசித்து சுற்றும்முற்றும் பார்த்தோம். ஒரு பிஞ்சையில் இறவை இறைத்தார்கள். அதோடு நான்கைந்து பேர் கூட்டமாக உட்கார்ந்திருந் தார்கள். நாங்கள் அந்த இறவைக் கிணற்றில் தண்ணீர் குடித்துவிட்டு அவர்களிடம் வழி கேட்டு நடப்போம் என்று போனோம்.

எங்களைப் பார்த்ததும் யார் என்ன என்று அவர்கள் விசாரித்தார்கள். நாங்களும் ஆட்களோடு கோயிலுக்கு வந்தோம் என்றும், வழி தவறி விட்டோம் என்றும் பொய் சொன்னோம். பாவம் சின்னப்புள்ளைக இம்புட்டு தூரத்துக்கு பசியோட நடந்தா விளங்குமா, உக்காருங்க; நாங்க கஞ்சி குடிக்கப் போறோம்; நீங்களும் குடிங்க; பிறகு பாப்போம் என்றார்கள்.

எங்களுக்கு சாப்பிட வேண்டும் என்று ஆசையாய் இருந்தது. ஆனால் அம்மாவுக்குத் தெரிந்துவிட்டால்... என்று பயமாகவும் இருந்தது.

பிறகு ஒருவருக்கொருவர் காட்டிக்கொடுப்பதில்லை என்று சொல்லிய வாறு சந்தோசம் தாங்காமல் அவர்களோடு உட்கார்ந்தோம்.

ஒரு அக்கா காதில் சிவப்பு கம்மல் போட்டிருந்தாள். லவுக்கை போடாமல் முடியை அள்ளி பெரிய கொண்டையாகப் போட்டிருந்தாள். இப்போதுகூட அந்த முகம் என் நெஞ்சில் பதிந்துள்ளது. எனது அம்மா ஒருநாள் கூட அப்படி அன்பாகக் கூப்பிட்டு கஞ்சி ஊத்தியதில்லை. அவ்வளவு அன்பாக எங்களைக் கூப்பிட்டு உட்கார வைத்து அந்த அக்கா கஞ்சி ஊத்தினாள். மிதுக்க வத்தலும் ஊறுகாயும் வெஞ்ஞனமாக ஆமணக்கு இலையில் இருந்தன. கம்மங்கஞ்சியை ஈயப் போணியில் ஊத்த ஆளுக்கு இரண்டு போணி குடித்தோம். போதுமா, இன்னும் இம்புட்டு வவுத்துக்கு குடிங்க என்று ஊத்தினாள். அவர்கள் அன்பைப் பார்த்துவிட்டு அவர்களிடமே இருந்து கொள்வோமா என்று எனக்குத் தோன்றியது. பிறகு கோயில் பெயரை அவர்கள் கேட்க, சொன்னோம். உடனே ஒரு ஆளைக் கூப்பிட்டு இவர் உங்க கூட வந்து கோயிலைக் காட்டுவார். நீங்க பயப்படாமப் போங்க என்றார்கள். நாங்கள் அவரோடு வந்தோம். கொஞ்ச தூரம் வந்த பிறகு தூரத்திலிருக்கும் கோயிலைக் காட்டி அதுதேன் அய்யனாப்பிள்ள கோயிலு, நீங்க இனி போயிருவீகள்ல என்று அவர் கேட்க நாங்கள் சந்தோசமாக தலையை ஆட்டினோம். கோயில் எங்களுக்கும் அடையாளம் தெரிந்துவிட்டது. பாத்துப்போங்க என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

அவர் போன பிறகு பயம் வந்துவிட்டது. எங்களைப் பார்த்ததும் கோயிலில் இருக்கும் மாமா, அத்தை, சித்தப்பா எல்லோரும் நீங்க யார் கூட வந்தீக என்று கேட்டால் என்ன செய்வது என்று பயந்தோம்.

நாங்க தனியா வந்தோம். ஊத்தாங்கல்லு ஓடைகிட்ட வண்டி நிக்குமின்னு ஓடியாந்தோம். வண்டி ஓடிருச்சு. கொஞ்ச தூரம் வண்டி பின்னாலேயே வண்டிய பிடிச்சிரலாமின்னு ஓடியாந்தோம். ஆனா வண்டி எங்க கண்ணுக்குத் தெரியவே இல்ல. ஊருக்கு திரும்பி வரவும் வழி தெரியல. அழுதுக்கிட்டே அங்கன நின்னோம். அப்ப ஆடு மேய்ச்சிட்டு இருந்த ஒரு அக்கா நாங்க அழுவுறதப் பாத்துட்டு எதுக்கு அழுவுதீகன்னு கேட்டாக. நாங்களும் அய்யனா புள்ள கோயிலுக்கு வந்ததயும் எங்கள விட்டுட்டு வண்டி போனதையும் சொன்னோம். அந்தமான அந்த அக்கா நீங்க கோயிலுக்குதானே போவணும். வாங்க நான் கூட்டிப்போறேன்னு அவுக மேய்ச்ச ஆடுகள அங்கன அமத்திட்டு எங்கள கூட்டிட்டு வந்தாக. இந்தக் கோயிலுக்கு கிட்ட வரவும் அதேன் கோயிலு; நீங்க இன்னி போயிருவீகளான்னு கேக்க நாங்களும் போயிருவோமின்னு சொன்னோம். அந்தமான எங்கள விட்டுட்டுப் போயிட்டாக!

இதுதான் மாமா, அத்தை எல்லோரிடமும் நாங்கள் சொல்ல வேண்டிய கதை. இந்தப் பொய் எப்படி வந்தது என்றால் பெரியவர்கள் இந்த மாதிரி அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறோம். அடுத்தவர்களிடம்

இதைப் பற்றி நம் இரண்டு பேரில் யாரும் சொல்லக்கூடாது என்றும் சத்தியம் செய்துகொண்டோம். பிறகு இருவரும் தோள் மீது கை போட்ட வாறு சந்தோசமாக கோயிலை நோக்கி நடந்தோம்.

நாங்கள் கோயில் போய்ச் சேர்ந்தபோது எல்லோரும் குளித்து பொங்கல் வைத்து சமையலையும் முடித்துவிட்டு சாமி கும்பிடத் தயாராகிவிட்டார்கள். திடுதிப்பென்று எங்களைப் பார்த்ததும் எல் லோருக்கும் ஆச்சரியமாகிவிட்டது.

பெரியவர்கள் எல்லாம் எங்களைச் சூழ்ந்து விட்டார்கள். நீங்க ரெண்டு பேரும் சின்னப் புள்ளைகளாச்சே, எப்படி வழி தெரிஞ்சு வந்தீக, யார் கூட வந்தீக? என்று துளைத்து எடுத்துவிட்டார்கள். நாங்களும் ஜோடித்த பொய்யை வார்த்தை பிசகாமல் ஒன்றுபோல் சொல்லி முடிக்கவும் எல்லோரும் திகைத்துப் போய்விட்டார்கள். எங்கள் இரு வரையும் ஆள் ஆளுக்கு அணைத்துக்கொண்டு கேள்வி மேல் கேள்வி யாய்க் கேட்க நாங்களும் சளைக்காமல் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்ல எங்களுக்கே நாம் சொல்வதெல்லாம் நிஜம்தானோ, நிஜத்தைதான் சொல்லிக்கொண்டிருக்கிறோமோ என்று சந்தேகம் வந்து விட்டது.

சாமி வருத்தினார்கள். சாமி துடியாக வந்ததும் எங்கள் இருவரை யும் கூப்பிட்டு வழக்கம்போல் கண் எரியும்படி திருநீறை அள்ளி வீசினார். வீசிவிட்டு கூட்டத்தைப் பார்த்து சாமி 'அப்பா, என் பாலகர் ரெண்டு பேரும் என் எல்லைக்கு வர முடியாம நடுக்காட்டுக்குள்ள வழி தெரியாம எந்தப் பக்கம் போவோமின்னு மருவி கண்ணுக்குள்ள பறவயாடி தவிச்சி தத்தளிக்கையில என் பாலகங்க மயங்கிட கூடாதே; ஏதும் காத்து கருப்பு அண்டிரக்கூடாதேன்னு நான் தாம்பா உருமாட்டியா போயி அவங்கள அட்டஞ்சுழியாம, அசக்காத்து வீசாம இங்க கூட்டிட்டு வந்தேன்; அச்சப்பட்ட புள்ளைக கொஞ்சம் மருண்டு நிக்காகளே தவித்து அவு களுக்கு வேற ஒண்ணுமில்ல என்று சொன்னார். அவ்வளவுதான், எல்லாரும் குலவை போட்டு விழுந்து விழுந்து கும்பிட்டார்கள்.

பெரியவர்கள் எங்களைக் கட்டிச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு அடி ராசாத்திகா, நீங்க எம்புட்டு கொடுத்து வச்சவக. அய்யனாப் புள்ளையே இல்ல உருமாட்டியா உங்க அணவில வந்திருக்கு என்று கொஞ்சினார்கள். நானும் ஜெயாவும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு ரொம்ப அப்பாவிகளாக நின்றோம். ஆனாலும் எங்கள் குட்டு உடைந்து விடுமோ என்று மனத்திற்குள் பயம் வேறு இருந்தது.

அன்றைய பொழுது நாங்கள்தான் எங்கள் ஊருக்கு செல்லங்கள். ஊரே திரண்டு வந்து எங்களைப் பார்த்தது. உங்களைக் கூட்டிக்கொண்டு போன பொண்ணு எப்படி இருந்தா, என்ன நிறத்துல புதுச் சீல கட்டி யிருந்தா, அவ மேல பொதுபொதுன்னு மணத்துச்சா என்று ஒரே கேள்வி

மயம்தான். கணேசனிடமும் வசந்தாவிடமும்தான் நான் உண்மையைச் சொன்னேன். பிறகு... மூச்...

ஆனால் இருட்டிய பிறகு ஒரு பாட்டி என்னிடம் இந்த விஷயத்தை கேட்பதற்காக வந்தபோது என் அம்மா சொன்னாள், ஆமா ஊரெல்லாம் கேக்காகன்னு நீயும் கேளு. அய்யனாப் புள்ள வந்து இவுகள கூட்டிட்டுப் போவுதாக்கும். இவ நூறு உருமாட்டியா ஆயி அம்புட்டு பேரையும் கூட்டிட்டு போயிருவாளே! இவ பொழப்பு எனக்கில்ல தெரியும்!

ooo

என் அம்மா எங்களுக்கு ஒரு கட்டளை இட்டிருந்தாள். எங்கள் வீட்டில் கூழு, சோளச்சோறுதான் இருக்கும். சில நேரங்களில் வெஞ்ஞனம் எதுவும் இருக்காது. வெங்காயம், பச்சை மிளகாயைக் கடித்துக் கொண்டு சாப்பிடுவோம். ஆனால் மற்றவர்களிடம் முட்டை, பருப்பு, நெய் எல்லாம் போட்டு சாப்பிட்டதாக சொல்லச் சொல்வாள். அவளும் அப்படித்தான் சொல்வாள்.

அப்பா இறந்து விட்டதால் நாங்கள் கூழும் தண்ணியும் குடித்துக் கொண்டு ஏழ்மையில் கிடப்பதாக யாரும் நினைத்து விடக்கூடாதாம். அதோடு பொங்கல், கல்யாணம் என்று யாரும் வந்து எங்களைக் கூப்பிட்டால் எங்கள் அம்மா பெரியம்மாகூட போய்ட்டு வாங்க என்று ஆசையாக சொல்வாள். ஆனால் அது நடிப்புதான். நாங்கள் போகக் கூடாது. எங்களுக்கு பொங்கல் கல்யாணம் எதுவும் வேண்டாம்; நாங்கள் போகமாட்டோம் என்று சொல்ல வேண்டும். இப்படியெல்லாம் எங்களைக் கட்டுப்படுத்தியிருந்தாள். நாங்களும் அதன்படிதான் நடந்து வந்தோம்.

கல்யாணம், பொங்கல் என்று அடுத்த ஊர்களுக்குப் போனால் கூட்டிப்போனவர்கள் எங்களை கவனிக்க மாட்டார்களாம். நாங்கள் வேவாரிக்கு அலைவோமாம். இதுக அப்பன் செத்துப் போனான்; புள்ளைகள புடிச்சி வைக்க ஆளு இல்லாம இப்படி வந்து அலையிதுக என்று சொல்வார்களாம்.

அதனால் எங்களை எங்கேயும் போக விடமாட்டாள். பக்கத்து ஊரில் பொங்கல் வந்துவிட்டால் என் வயதுப் பிள்ளைகள் எல்லோரும் ஓடுவார்கள். நானும் என் தம்பிகளும் வீட்டில் அடைந்துகிடப்போம்.

எனது அத்தை பொங்கலுக்கு எங்களைக் கூட்டிப்போவதற்காக பெருமாள்தேவன்பட்டியிலிருந்து வந்திருந்தாள். இந்த அத்தை எனது அப்பாவுடன் பிறந்தவள். என் அப்பா கூடப் பிறந்தவர்கள் மூன்று அத்தைகள், ஒரு பெரியப்பா, ஒரு சித்தப்பா. எல்லோரும் வசதியாக இருந்தார்கள். எங்களைக் கூப்பிட வந்த அத்தை மட்டும் கஷ்டத்திலிருந்தாள்.

அவர் பிள்ளை வேறு மூளை வளர்ச்சியில்லாமல் இருந்தது.

அத்தை தெருவில் வந்த என்னைப் பார்த்து அணைத்துக்கொண்டு, என்ன தாயீ, சாப்பிட்டயா? என்ன சாப்பிட்டே? என்று கேட்க நானும் வழக்கம் போல் சோறு பருப்பு நெய் என்று சொன்னேன். அத்தையும், சரி பொங்கலுக்கு வாங்க; உங்களக் கூப்பிடத்தேன் வந்துருக்கேன் என்றாள். நான் தலையை ஆட்டிவிட்டு வீட்டிற்கு வந்தேன். பசியாக இருந்ததால் கூழ் வைத்து கரைத்துக்கொண்டிருந்தபோது எம் அம்மாவோடு அத்தை யும் வந்துவிட்டாள்.

எனது வட்டிலிலிருந்த கூழைப் பார்த்துவிட்டு, என்ன இது? என்னென்னமோ ரசகொழம்பா இருக்கின்னு சொன்னா; இப்ப வெறும் கூழ வச்சிக்கிட்டு இருக்கா என்றாள்.

அம்மாவும் காலயிலதேன் எல்லாம் வச்சிட்டுப் போனேன். அதுக் குள்ள அம்புட்டும் ஆயிருச்சு பொலுக்கோ; இந்தா இப்ப ஒருக்கா காய்ச்சப் போறேன் என்றாள்.

பாவம் பச்ச புள்ளைக! நம்ம கசுட்டத்த எதுக்காவ அவுககிட்ட காட்டுத. எதுக்கு ஒரு பொங்க, பூசைக்கு அதுகள அனுப்ப மாண்டேங்க என்று அத்தை கேட்டார்.

உடனே அம்மா அழுதுகொண்டு, அவரு இருக்கும்போது அம்புட்டு வசதியா இருந்தோம்; இப்ப உடுத்த ஒரு நல்ல துணி கூட இல்லாம நக நட்டு இல்லாம புள்ளைக குறக்கோலமா அடுத்த ஊர்ல போயி நின்னா நாலு பேரு அதுக வாயக் கிண்டி நாலு விதமாப் பேசுவாக; பொங்க எங்கே போவுது? இனிமே செழும்பா பொழச்சாப் பிறவு பாத்துக்கிடுதுக என்றாள்.

உடனே அத்தை சொன்னாள். அப்படியெல்லாம் பேசக்கூடாது. நானு இருக்கேன். உம் புள்ளைகள அனுப்பி வையி; நானு ஒரு திக்கம் விடாம அவுகளுக்கு வேணும்ங்க வசுரியம் செஞ்சு பொன்னும் கண்ணுமா பாத்துக்கிடுதேன். ஊருல இருக்க அம்புட்டு புள்ளைகளும் வருது. நம்ம தம்பி புள்ளைகளக் காணமேன்னு நானு மெனக்கெட்டு அதுகளக் கூப்பிட வந்தேன். எங்கூட அனுப்பி வய்யி. ரெண்டு நா இருந்துட்டு வரட்டும்.

நானும் என் மூத்த தம்பியும் அம்மா என்ன சொல்லப்போகிறாள் என்று அவள் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றோம். அவள் கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு அத்தையிடம் உம் மருமக்கமார கூட்டிட்டுப் போ; ஆனா தெருவுலயும் மந்தையிலயும் வேவாரியா அலய விட்டுராத என்றாள்.

இதைக் கேட்டதும் எங்களுக்கு உண்டான சந்தோசத்திற்கு அளவே இல்லை. கூழை வட்டிலோடு தூக்கிக் குடித்துவிட்டு வாயைக் கழுவியும் கழுவாமலும் கணேசன் வீட்டுக்கு ஓடினேன். அங்கே பொங்கலுக்கு நான்

போகப் போவதை சொல்லிவிட்டு வசந்தாவிடமும் சரசுவிடமும் போய் விஷயத்தை சொன்னேன். எல்லோருக்கும் ரொம்ப ரொம்ப சந்தோசம். நாங்கள் நாலு பேரும் சேர்ந்து போவோம் என்று சொன்னபோது கணேசன் மட்டும் அலட்சியமாக நான் ராத்திரி கரகம் தூக்கவும் வந்துருவேன் என்றான். சரி அவன் எப்படியும் போகட்டும் என்று நாங்கள் கிளம்பிவிட்டோம்.

ஊருக்குள் ஒரு குஞ்சு குளுவான் இல்லாமல் பொங்கலுக்குப் போய்விடுவார்கள். ஆடு மாடு பார்க்க ஆளில்லாதவர்கள் அதுகளையும் பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள். சித்திரை மாத பௌர்ணமியில் இந்தப் பொங்கல் வரும். மீனாட்சிபுரம், சொக்கலிங்கபுரத்து ஆட்கள் மொத்தமாக பெருமாள்தேவன்பட்டியில்தான் இருப்பார்கள். ஊரே கலகலப்பாகக் கிடக்கும்.

பஸ் இல்லையாதலால் நடந்துதான் அந்த ஊருக்குப் போக வேண்டும். வெறும் பொட்டல் காட்டில் வண்டித்தடமும், ஒற்றையடிப் பாதையும் தூரம் தூரமாகப் போய்க்கொண்டிருக்கும். அங்கங்கே நட்டு வைத்ததுபோல் கத்தாழைச் செடியும் இலந்தச் செடியும் நிறைந்து கிடக்கும். பழங்களைப் பிடுங்கித் தின்றுகொண்டு ஓடி ஓடி பாட்டும் சிரிப்புமாக விடிந்ததிலிருந்து நடுச்சாமம் வரை ஆட்கள் போய்க் கொண்டிருப்பார்கள். என் இளையதம்பி சின்னப் பையனாக இருந்ததால் எங்களுடன் எங்கேயும் வரமாட்டான். அம்மாவிடமே எந்த நேரமும் ஒட்டிக்கொண்டிருப்பான்.

நானும் மூத்த தம்பியும் எங்கள் சேத்திக்காரர்களோடு கும்மரிச்சமும் கொண்டாட்டமுமாக பொழுது அடைய ஊர் போய்ச் சேர்ந்தோம். அத்தை எனது அப்பா வீட்டில்தான் குடியிருந்தார். எங்கள் வீட்டின் சுவரோடு ஒட்டி இருந்தது சித்தப்பாவின் வீடு. அது பெரிய மாடி வீடு. மாடி வீடு இருப்பது பெரிய அதிசயம். சித்தப்பா பட்டாளத்தில் கேப்டனாக இருந்ததால் பணக்காரராக இருந்தார்.

ஜ۞ஜ

சித்தப்பா வாலிப வயதில் பட்டாளத்தில் ஆபிஸராக இருக்கும் போது ஊரில் பெரிய பஞ்சம் வந்துவிட்டது. ஆடுகளும் மாடுகளும் கடிக்க கரடு இல்லாமல் குடிக்கத் தண்ணியில்லாமல் மெலிந்துபோன தோடு நோய் வேறு வந்துவிட்டது. எங்கள் மூணு ஊரிலும் ஆடு மாடு வளர்ப்பது, விவசாயம் செய்வதுதான் தொழில் என்பதால் எல்லோரும் இந்தப் பஞ்சத்தை பார்த்துப் பதறிப் போனார்கள்.

ஊரில் உள்ள கிணறுகளில் எல்லாம் நெல் காயப்போடுவதுபோல் பாறைதான் தெரிந்திருக்கிறது. ஊர் ஆட்கள் எறும்பு புத்தையும், எலிப்

பொந்தையும் தேடி அலைந்திருக்கிறார்கள். வாகை விதையை எடுத்து வறுத்துத் திங்க சிலர் உடம்புக்கு அது சேராமல் வவுத்துப்போக்கோடு இப்ப சாவமா, இன்னும் சத்த சென்று சாவமா என்று அலைமோதிக் கொண்டு வைத்தியம் செய்யக்கூட பணமில்லாமல் வீட்டிலிருந்த பித்தளை சாமான், வெங்கலச்சாமான் எல்லாத்தையும் கொண்டுபோய் எட்டணா, ஒரு ரூபாய் என்று சத்திரப்பட்டி, ராஜபாளையத்தில் பெரிய பெரிய பணக்காரர்களின் வீட்டுவாசலுக்குப் போய் வித்து துணிமாவு வாங்கி கூழ் காய்ச்சி அதைத் தண்ணியாகக் கரைத்து உப்பைத் தொட்டுக் கொண்டு குடித்திருக்கிறார்கள்.

அப்போதுதான் சித்தப்பா பட்டாளத்திலிருந்து லீவில் வந்திருக் கிறார். அந்தச் சமயத்தில் உலக யுத்தம் நடந்துகொண்டிருந்தது. பட்டாளத் துக்கு பெருவாரியாக ஆட்கள் தேவைப்பட்டிருக்கிறார்கள். சித்தப் பாவுக்கு மேலே இருந்த வெள்ளைக்கார ஆபிஸர் அவரிடம் முந்நூறு பேர் வரை திரட்டிக்கொண்டு வரச் சொன்னாராம். இங்கு வந்தால் ஊரில் நிலைமையும் பரிதாபமாக இருந்திருக்கிறது.

ஆட்களின் இருப்பைக் கண்டு வேதனைப்பட்டிருக்கிறார். இப்படியே இருந்தா செத்துப் போயிருவீக; என்கூட வாங்க; உங்கள பட்டாளத்தில் சேத்துவிடுறேன் என்று சுற்று வட்டாரத்திலிருந்து முன்னூற்று இருபது பேரைக் கொண்டுபோய் சேர்த்துவிட்டார். மாதச் சம்பளமாக கவர்மெண்டு பணம் வந்ததும் ஊர் பஞ்சமும் தீர்ந்ததாம். அதிலிருந்து எங்கள் ஊர்களில் வீட்டுக்கு ஒரு ஆள் பட்டாளத்தில் இருப்பார்.

பொங்கலுக்கு மறுநாள் புதன்கிழமை அத்தை வீட்டு வாசலி லிருந்து சித்தப்பா வீட்டை அண்ணாந்து பார்த்தவாறு பேசிக்கொண்டிருந் தோம். அப்போது சித்தப்பா மாடியில் இருப்பது தெரிந்தது. உடனே எங்களுக்கும் மாடி ஏறி சித்தப்பாவைப் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருந்தது. உடனே நானும் தம்பியும் சித்தப்பாவைப் பார்க்க மாடி ஏறினோம். அவர் வீட்டில் நிறைய ஆட்கள் இருந்தார்கள். எங்களை யார் என்று கேட்க நாங்கள் ரொம்பப் பெருமையாக எங்கள் அப்பா பெயரைச் சொல்லிவிட்டு சித்தப்பாவைப் பார்க்கப் போகிறோம் என்று மாடி ஏறினோம்.

சித்தப்பா எங்களுக்கு முதுகைக் காட்டியவாறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தார். நாங்கள் அவர் பின்னால் போய், அப்பா... என்று கூப்பிட்டோம். அவர் திரும்பி எங்களை ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டு, அடடே வாங்க, யார் கூட வந்தீக என்றார். அத்தையோடு வந்ததைச் சொன்னோம்.

எங்கள் படிப்பைப் பற்றி கேட்டார். நான் படிக்க முடியாமல் போனதையும் மாடு மேய்ப்பதையும் பற்றி சொன்னேன். அப்போது கூட

அவர் படிக்க போடமாட்டரா என்று ஒரு சின்ன ஆசை, ஏக்கம் என் மனத்தில் இருந்தது. ஆனால் அவர் அதைக் கண்டுகொள்ளவில்லை. தம்பியை மட்டும், நன்றாகப் படி; என்னை மாதிரி பெரிய உத்தி யோகத்திற்கு நீ வரணும் என்றார். பிறகு கீழே சின்னம்மா இருப்பா; போய் சாப்புட்டு வாங்க என்று சொல்ல நாங்கள் அத்தை வீட்டில் சாப்பிட்டதைச் சொன்னோம்.

பிறகு அவர் சட்டைப்பையிலிருந்து கட்டாக ரூபாயை எடுத்தார். நாங்கள் அவ்வளவு பணத்தை எப்போதும் பார்த்ததில்லை. ஆச்சரியத் துடன் பார்த்துக்கொண்டிருந்தோம். அந்தக் கட்டுக்குள்ளிருந்து சிவப்பாக இரண்டு ரூபாய் நோட்டுகளை எடுத்து எங்களிடம் கொடுத்து போய் திண் பண்டம் வாங்கித் தின்னுங்க என்றார். யாரிடமும் இதுவரை துட்டு வாங்காமல் இருந்த நாங்கள் இந்த ரூபாய் நோட்டைப் பார்த்ததும் வாங்கிக்கொண்டோம்.

இப்போது எங்களிடம் ஆளுக்கு இரண்டு ரூபாய் இருந்தது. அம்மா வேறு பொங்கலுக்காக ஆளுக்கு நாலணா என்ற கணக்கில் எட்டணா கொடுத்திருந்தாள். இவ்வளவு பணத்தைப் பார்த்ததும் எங்களுக்கு சந்தோசம் பொங்கியது. உடனே கையைக் கோர்த்துக் கொண்டு மந்தைக்கு வந்தோம்.

மந்தையில்தான் மொத்தக் கடைகளும் இருந்தன. அந்த கடைக ளெல்லாம் எங்களுக்கு சொந்தம்போல் தோன்றியது. பிறகு என்ன என்ன வாங்கலாம் என்று பேசிக்கொண்டே எல்லாக் கடைகளையும் சுற்றிப் பார்த்தோம். எங்கள் ஊர் பிள்ளைகளிடம் ரொம்ப கௌரவமாக எதை வாங்குவது என்று ஐடியா கேட்டோம். அதோடு இரண்டு ரூபாய் நோட்டையும் எடுத்துக் காண்பித்தோம். அவர்கள் விழி பிதுங்க ஆச்சரியப்பட்டார்கள்.

சிவப்பு சாயம் போட்ட பாயாசத்தை ஆளுக்கு ஒரு டம்ளர் வாங்கிக் குடித்தோம். கண்ணாடி, குப்பி, பின்னூசி என்று செழும்பாக வாங்கி னோம். இளைய தம்பிக்கும் சேர்த்து மூன்று வாட்சுகள் வாங்கினோம். இரண்டு பந்து, இன்னும் இரண்டு விளையாட்டுப் பொருள்கள் வாங்கிக்கொண்டு அத்தைக்கும் அத்தை மகனுக்குமாக சீனி மிட்டாய், வடிஞ்ச மிட்டாய் எல்லாம் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தோம். அத்தையிடம் கொஞ்சம் மிட்டாய் கொடுத்தபோது அத்தைக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை.

என் கண்ணுகளா! என் தம்பியைப் போலவே பாசமானவகளா இருக்கீக என்று பாராட்டினார். செவ்வாயும் புதனுமாக பொங்கல் முடிந்துவிட்டது. வியாழக்கிழமை ஊருக்குப் புறப்பட்டோம்.

வீட்டுக்கு வந்தபோது தருமன் மட்டும் இருந்தான். அம்மாவைக் காணவில்லை. உடனே நாங்கள் வாங்கி வந்த வாட்சை அவன் கையில்

கட்டினோம். விளையாட்டுப் பொருள்களையும் மிட்டாயையும் கொடுத் தோம். அவனுக்கும் சந்தோசம். பொங்கலைப் பற்றி நாங்கள் சந்தோச மாக பேசிக்கொண்டிருந்தபோது அம்மா வந்துவிட்டாள்.

நாங்கள் வாங்கி வந்த பொருளையெல்லாம் பார்த்துவிட்டு நான் ஆளுக்கு நாலணாதானே கொடுத்தேன். அந்தத் துட்டுக்கு இம்புட்டு சாமான்கள'எப்படி வாங்குனீங்க? என்று கேட்டாள். நானும் தம்பியும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு திருதிருவென்று விழித்தோம். இப்ப சொல்லப் போறீகளா இல்லையா என்று கேட்டவாறு எங்களை அடிக்க கம்பைத் தேடினாள். உடனே தம்பி சித்தப்பாவிடம் பணம் வாங்கியதைச் சொன்னான்.

அவர எப்படிப் பாத்தீக என்றாள். நானும் தம்பியும் கீழே நின்னுக் கிட்டு இருந்தோம்; அப்பா வெளிய வந்து எங்களப் பாத்துட்டு ரெண்டு ரூவா கொடுத்தாரு என்றேன். உடனே அவள் பெரிய கம்பைத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டாள். அவரு கிட்ட நீங்க போயி துட்டு கேட்டீங் களா? இல்ல அவரா கொடுத்தாரா? உள்ளத சொல்லிருங்க; இல்ல கொன்னே போடுவேன் என்றாள்.

ராஜா என்னோடு ஒண்டிக்கொண்டு நின்றான். பிறகு நான் சித்தப் பாவைப் பார்க்க மாடிக்குப் போனதையும், அவர் எங்களுக்கு பணம் கொடுத்ததையும் சொன்னேன். உடனே அவள் என்னையும் தம்பியையும் மாறி மாறி அடித்துவிட்டு இரண்டு தம்பிகளையும் கட்டிக்கொண்டு அழுகையும் கண்ணீருமாக அத்தையைத் திட்டினாள். நாங்கள் வாங்கி வந்த பொருள்களை குப்பையில் கொண்டுபோய் போட்டுவிட்டு வருமாறு சொன்னாள். அதைக் கேட்டதும் இரண்டு தம்பிகளும் அழ ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் அழுவதைப் பார்த்ததும், சரி சரி இனிமே கை நீட்டி யார்கிட்டயும் எதுவும் வாங்கக்கூடாது; இதுதேன் கடைசித்தரம். எதுவும் வாங்குனீங்கன்னு தெரிஞ்சிச்சோ... கையில சூடு வச்சிருவேன் என்று சொல்லிவிட்டுப் போனாள்.

அதன் பிறகு நாங்கள் பொங்கலுக்குப் போனதே இல்லை.

❧

காட்டில் வேலை செய்யும்போது பேசிச் சிரிக்க எப்போதும் ஊர்க் கதைகள் இருந்துகொண்டிருக்கும். கொஞ்ச காலமாக ரத்தினம் அத்தையைப் பற்றிய பேச்சுதான்.

பெருமாளு தூத்துக்குடியில் போலீஸாக இருந்தார். நாம் பட்டணத்தில் வேலை பார்ப்பதால் நாமும் நாகரீகமாக இருக்க வேண்டும், நமக்கு வார பொண்டாட்டியையும் நாகரீகமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார். ஆனால் மூடிவைத்த

அடுக்குப் பானைக்குள்ள எலி சுத்துன மாதிரி பெருமாள்தேவன்பட்டி, மீனாட்சிபுரம், சொக்கலிங்கபுரம் என்று இந்த மூணு ஊரில்தான் அவர் பொண்ணு கட்டவேண்டும். இந்த மூணு ஊர்ப்பெண்களும் ஆடு மாடு மேய்த்துக்கொண்டு காட்டில்தான் அலைகிறார்கள். அதிலும் இவருக்கு காட்டுவழியே ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சொந்த அம்மான் மவள் ரத்னம்தான் பொண்டாட்டியாகக் கிடைத்தாள்.

என்னடா நீ நறுவிசா இருக்கணுமின்னு பொண்டாட்டி கேட்டே. கடைசிக்கு ரத்னம் கெடைச்சிருக்கா. அவ நட்டன புடிச்சவளே. என்னத்த ஒன் சொன்னபடி கேட்டு உனக்கு இசைவா இருக்கப் போறா? என்று பெருமாளின் சேத்திக்காரர்கள் எல்லாம் கேட்டிருக்கிறார்கள்.

ஏலேய், கொஞ்ச நாளையில அவ பட்டணத்துக்காரிக்கே சொடக்கு போடுதாப்பல எப்படி வரப்போறா பாருங்க என்று இவரும் சவால் விட்டிருக்கிறார்.

பிறகு ரத்தினத்திடம், ஏத்தா நானு பட்டணத்தில வீடு பாத்து வச்சிருக்கேன்; நீ உன் ஆடு மேய்க்கிற வேலைக்கு இன்னைக்கோட தலய முழுவிரு; நம்ம ரெண்டு பேரும் பட்டணத்தில போயி இருப்போம்; உனக்கு வேணுங்கிற சவரட்டணைய செஞ்சி தாரேன்; நீயும் முத்தத்து வெய்யிலு மொகத்தில படாம பொங்கிப் பொரிச்சிப் போட்டுக்கிட்டு ராசாத்தி கணக்கா இரு என்று சொல்லிவிட்டார்.

அட, ஒன்ன எரிக்க! நம்ம குருவ ஆடு இன்னைக்கோ நாளைக் கோன்னு குட்டி போடுதாப்பல இருக்கு. அந்த மச்சப்புள்ளி ஆடு பயிராவுத பருவமா கிடா அணவுல மேயுது. மூணு மாத்தைக்கு முன்னால நரி இழுத்துட்டுப் போயி மண்ட வீங்குன ஆட்டுக்கு இப்பத்தேன் வீக்கம் வத்தி ஒண்ணு ரெண்டு புல்லு கடிக்கி. இதுகளெல்லாம் அந்த அந்தமான போட்டுட்டா உம்ம பிறத்தால வரச்சொல்லுதீரு என்று ரத்தினம் கேக்க பெருமாளுக்கு சரியான கோபம்.

மாப்பிள்ளைச் சோறு சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் இனிமே எனக்கு மாப்பிள்ளைச் சோறும் வேண்டாம், மயிரும் வேண்டாம் என்று கோபமாக புறப்பட்டுவிட்டார். பிறகு எல்லோரும் கெஞ்சிக் கூத்தாடி, ரத்தினத்திற்கும் புத்திமதி சொல்லி பட்டணத்திற்கு அவர் கூட அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

அங்கே போன ரத்னத்திற்கு எரிச்சலான எரிச்சல். இங்கே செலாத்தலாக காட்டுவழியே அலைந்தவளுக்கு வீட்டுக்குள் மொடங்கிக் கிடப்பதோடு தனியாக இருப்பது வெறுப்பாய் இருந்திருக்கிறது. பொண்டாட்டிக்கு கத்தரிக்காய், வெண்டைக்காயெல்லாம் வேண்டாமென்று முதன்முதலாக கேரட்டை இந்த பெருமாளு வாங்கிக் கொடுத்தார்.

கேரட்டைப் பார்த்ததுமே ரத்னம், செவக்காட்டு மண்ணுல புள்ள

யாரப் புடிச்சாப்பல என்ன காயி வாங்கிட்டு வந்துருக்கீரு என்று சொல்லி விட்டாள். மறுநாள் முட்டைகோசு வாங்கிவர ரத்னம் அதை உரித்து உரித்து முழுக்க உரித்துப்போட்டு விட்டு, எம்மான்... நீரு ஒரு வெளங் காத மனுசன்னு கடக்காரனுக்கும் தெரிஞ்சி போச்சு பொலுக்கோ! அதேன் காயின்னு வெறும் தொலியத் தூக்கி கொடுத்திருக்கான் என்று வய்ய மறுநாள் புதுமையாக இருக்கட்டுமென்று கோவங்காயை வாங்கிக் கொடுத்துவிட்டு டூட்டிக்குப் போய்விட்டார் பெருமாள்.

கிராமத்தில் ஈக்கியைக் கிழித்து கோவங்காயில் நாலுபக்கமும் குத்தி ஆடுபோல் செய்து பிள்ளைகளுக்கு விளையாடக் கொடுப்பார்கள். ரத்தினமும் விளக்குமாற்று குச்சியை ஒடித்து கோவங்காயின் நாலு பக்க மும் குத்தி ஆடுகள் போல் ஆக்கிவிட்டாள். பெருமாள் டூட்டி முடிந்து வீட்டுக்கு வந்ததும், எம்மான்... உமக்கு ஒரு கூறுமில்ல. உமக்கும் எனக்கும் ஏழர கழுத வயசாயி கல்யாணமும் முடிச்சாச்சி. இன்னும் உமக்கு ஆடு செஞ்சு வெளாடுத வெளயாட்டல்லாம் அயக்கல பொலுக்கோ. இல்லாட்டா வேலிக்காட்டுல கெடக்க கோவங்காய வெலைக்கு வாங்கிட்டு வருவீரா? இந்தாரும் அம்புட்டயும் ஆடாவும் குட்டியாவும் செஞ்சி வச்சிருக்கேன், செழிக்க வெளயாடும் என்று சொன் னாளாம். பெருமாளும் அந்தக் கோவங்காயை எப்படி வெஞ்ஞனம் வைக்க வேண்டுமென்று விளக்கம் சொல்லியிருக்கிறார்.

மறுநாள் பெருமாள் புதிதாக ஒரு அலாரம் கடிகாரத்தை வாங்கி வந்தவர் அதைப்பற்றி ரத்தினத்திடம் சொல்லாமல் டூட்டிக்குப் போய் விட்டார். இந்தக் கடிகாரம் டக்டக்கென்று சத்தம் போட்டதோடு ஒருமுறை கணகணவென்று அலாரமும் அடித்துவிட்டது. ரத்னம் இதற்கு முன்னால் கடிகாரத்தைப் பார்த்ததில்லை. அதனால் அலார ஓசை கேட்ட உடனே பயத்தோடு அதன் அருகில் போய்ப் பார்த்திருக்கிறாள். டிக் டிக்கென்ற சத்தத்தோடு ஒரு முள் ஓடவும், ஒரு முள் மெல்ல நகருவதையும் பார்த்தவள் அது பசி பொறுக்க முடியாமல்தான் இப்படி சத்தம் போடுகிறது என்று நினைத்து விட்டாள். புருசன் மீது கோபம் கோபமாய் வந்திருக்கிறது.

பக்கத்து வீட்டிற்குப் போய், தாயீ தாயீ... என்று கூப்பிட்டிருக் கிறாள். பக்கத்து வீட்டுக்காரப் பெண்ணும், என் பேரு தெரியாட்டா கேளுங்க சொல்லுதேன், அத விட்டுட்டு உங்க இஷ்டத்துக்கு ஒரு பேர வச்சிக்கிட்டு கூப்பிட்டா என்ன அர்த்தம்? என்று சொல்லிவிட்டு சரி எதுக்காக என்னகூப்பிட்டீக என்று கேட்டிருக்கிறாள்.

கோவிச்சிக்கிடாத தாயீ. எம் புருசன் ஒரு பறவய கொண்டாந்து கம்முனாம வீட்டுல வச்சிட்டுப் போயிட்டாரு. அது இப்ப கூப்பாடு போட்டுக்கிட்டு இருக்கு. அதுக்கு ஏதும் கோளாறு சொல்லுவீகன்னுதேன்

கூப்புட்டேன் என்று அச்சப்பட்டக் குரலில் இவளும் சொல்லியிருக் கிறார்.

பக்கத்து வீட்டுக்காரிக்கு இன்னும்கோபம் தீரவில்லை. தாயீ என்று சொல்லாதே என்றால் பிறகும் தாயீ என்கிறாளே என்று அச்சலாத்திப் பட்டவள், ஏம்மா அது எரைக்காக கத்துது. ஏதாவது அரிசியக் கிரிசிய கொஞ்சம் அள்ளிப்போட்டு தண்ணிய ஊத்த வேண்டியதுதானே. இதுக்குப்போயா அடுத்தவககிட்ட யோசன கேப்பாக? என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

இந்த மனுசன வச்சிக்கிட்டு நானு என்னதேன் செய்யட்டும்? காட்டுல அலயித பறவய புடிச்சாந்து வீட்டுக்குள்ள வச்சிக்கிட்டு இப்படி பட்டினியும் பசியுமா போடலாமா? பறவ பாவம் பொல்லாத பாவமில்ல. ஏழேழு பெறப்புக்கும் பறவய இம்சுச்சிவக அட்டக் குழியிலும், செம்மக் குழியிலுமில்ல கெடந்து சாவணும் என்று நினைத் தவள், வீட்டுக்கு வந்து பறவையை எடுத்து பின்பக்கம் பார்த்திருக்கிறாள். சின்ன ஓட்டை இருந்திருக்கிறது. உடனே அரிசியை அள்ளி அம்மியில் வைத்து பொட்டுப்போல் முனுக்கி அந்தக் குழிக்குள் போட்டு தண்ணியை ஊத்திவிட்டாள். இப்போது அது பசிதீர்ந்து சத்தமில்லாமல் தூங்கி விட்டது.

மத்தியானம் புருசன் வீட்டுக்கு வந்தார்.

நீரெல்லாம் ஒரு மனுசனா? ஒரு பறவய புடிச்சிக் கொண்டாந்து வீட்டுல வச்சிக்கிட்டு பட்டினி போடலாமா? என்று சண்டைக்குப் போய் விட்டாள். பெருமாளும் கோபத்தை அடக்கிக்கொண்டு கடிகாரத்தைப் பற்றி அவளிடம் விளக்கமாகச் சொன்னார்.

ரத்னத்திற்கு சோறு காய்ச்சுவதைத் தவிர வேறு எதுவும் செய்யத் தெரியவில்லை. பெருமாள் அவளிடம், என்னத்தா இது? நித்தமும் சோறு தானா? சோத்தவே தின்னு தின்னு மனுசனுக்கு அலுத்துப் போச்சி; ஒரு இட்லி தோசைன்னு போடு என்று சொல்ல ரத்னமும் அரிசி, உளுந்தை ஊறப்போட்டு மாவாட்டி வைத்துவிட்டாள். ஆனால் அவளுக்கு எதுவும் சுடத்தெரியவில்லை. இட்லியை ஊற்றி அவித்தால் துணியைவிட்டு எடுக்க முடியவில்லை. உடனே மாவைக் கூழாக காய்ச்சிவிட்டாள்.

பெருமாளு இதைப் பற்றிக் கேட்டதற்கு, இட்டிலி என்ன பெரிய இட்டிலி! வராஞ்சோறு, குருதாலி சோத்த உருட்டிப் போட்டாப்பல இருக்கு. அத திங்கதுக்கு எதுக்கு இப்படி அலயுதீரு? பேசாம கூழக் குடியும். அரிசிமாவுக்கூழு பொதுபொதுன்னு மணத்துக்கிட்டு எப்பிடித் தேன் இருக்கு என்று சொல்லிவிட்டார்.

சரி, தோசையாவது சுடு என்று புருசன் சொல்ல ரத்னத்திற்கு தோசையும் சுடத் தெரியவில்லை. தோசைக்கல்லில் ஊற்றிய தோசையைச்

சுருட்டி மடக்கி கந்தரகோளமாக்கி விட்டாள். இதென்ன தோச இப்படி பிஞ்சு கெடக்கு என்று பெருமாள் கேட்டால், அட உன்ன எரிக்க! நீ தோசய பிச்சிப்பிச்சுத்தான திங்கப்போற என்று திருப்பி கேட்டாளாம்.

இன்னும் நிறைய விஷயங்களை ஏறுக்குமாறாகவே செய்திருக் கிறாள்.

பெருமாள் நொந்துபோனார். கூட்டிப்போன ஒரு மாதத்திற் குள்ளேயே அரவமில்லாமல் பொண்டாட்டியை திரும்பக் கொண்டு வந்து ஊரில் விட்டுவிட்டுப் போய்விட்டார்.

ஊர்க்காரர்கள் எல்லாம், என்னத்தா... பட்டணத்தில இருக்கப் போறேன்னு பவுசா உன் புருசன் கூடப் போனே! போன மாயத்தில திரும்ப வந்துட்டே என்று கேட்டார்கள்.

ஆமா, கடகாட்டுல போயி வெஞ்ஞனம் வைக்கதுக்கு காய் வாங்கத் தெரியாத கூறுகெட்ட மனுசன்கிட்ட எத்தன நாளைக்குதேன் இருந்து குப்ப போடமுடியும்? அதேன் பட்டணமும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாமின்னு வந்துட்டேன் என்றாளாம் ரத்தினம் ஆடுகளைப் பத்திக்கொண்டே.

கணேசன் மாதத்திற்கு ஒரு வேலை பார்த்துக்கொண்டு இருப்பான். விவசாய வேலை பார்ப்பான். மாடு மேய்க்க வருவான். திடீரென்று காப்பிக்கடையில் பாத்திரங்களை விளக்கிக்கொண்டு இருப்பான். அவன் அப்பா கோபக்காரர். அவர் மட்டும் இல்லை; என் மாமாக்கள் ஏழு பேருமே கோபக்காரர்கள்தான். என் அம்மாவைச் சேர்ந்தவர்கள் பிறகு எப்படி இருப்பார்கள்? எவ்வளவுதான் வேலை செய்தாலும் சரி, பிள்ளை களை அடித்துக்கொண்டும் அதட்டிக்கொண்டும்தான் இருப்பார்கள், அதிலும் கணேசன் அப்பா ரொம்ப பயங்கரமானவர். கணேசன் அவனுடைய அப்பாவின் அடி பொறுக்க முடியாமல்தான் இப்படி யெல்லாம் ஓடிப்போய் கண்ட வேலைகளைச் செய்துகொண்டிருந்தான்.

ஒருமுறை அவன் சினிமா தியேட்டரில் முறுக்கு விற்றுக் கொண்டிருந்தான். 'சினிமா' என்ற சொல்லே கெட்ட வார்த்தையாக இருந்தது. அப்படி இருக்கும்போது சினிமா பார்க்க விடுவார்களா?

யாராவது ஒருவர் சினிமா பார்த்துவிட்டு வந்தால் போதும், அன்றைக்கு எங்களுக்கு அவர்தான் ஹீரோ. அவரிடம் கதை சொல்லச் சொல்லி உயிரை வாங்குவோம். ஊர் மந்தையில் ஒதுக்குப்புறமான இடத்தில் கதை சொல்கிறவரையும் கதை கேட்டுக்கொண்டிருக்கிற எங்களையும் பெரியவர்கள் பார்த்து விட்டால்... அவ்வளவுதான், கையில்

கிடைப்பதை எடுத்துக்கொண்டு, நீதேன் சினிமா பாத்து கெட்டுப் போறே, இவுகளையுமா கெடுக்கே என்று முடுக்குவார்கள். எங்களையும் வைவார்கள்.

கூட்டானம் செல்லாண்டி மாமா சினிமாப் பார்க்க போகிறவர் களையெல்லாம் திட்டுவார். ஏண்டா சினிமாவுக்கு துட்டைக் கொடுத்து கெட்டுப்போறீங்க; அத விட நிலா பூச்சியைப் பாருங்க; அது சினிமாவுக்கும் மிச்சமா இருக்கும் என்று சொல்லி ஒருவரையும் போகவிடமாட்டார். அதனால் எல்லாரும், ஒரு நாளாவது இவரைக் கூட்டிப்போய் சினிமா பார்க்க வைச்சிடணும்; ஒருக்கா சினிமாவை பாத்துட்டார்னு வச்சக்கோ; பெறவு அவரே நம்மள கூப்பிட ஆரம்பிச்சிரு வாருன்னு பேசுனதோட ஒருநாள் அவரை ஏமாத்தி தியேட்டருக்கும் கூட்டிட்டுப் போயிட்டாங்க.

தியேட்டருக்கு போன பிறகுதான் அவருக்கே விஷயம் தெரிஞ் சிருக்கு. உடனே துட்டை பாழாக்காதீகன்னு புத்தி சொல்ல ஆரம்பிச் சிட்டார். இவர்களும் எவ்வளவோ ஆசை காட்டிப் பார்த்திருக்கிறார்கள். அவர் ஒரேயடியாய் தலையைக் குலுக்கிவிட்டார். சினிமா பார்க்கிற துட்டுக்கு எனக்கு நிலக்கடலை வாங்கி கொடுத்துட்டுப் போங்க. நீங்க வரதண்டியும் நானு இங்கேயே கடலையைத் தின்னுக்கிட்டு இருக்கேன் என்று சொல்லிவிட்டார்.

அப்போது சினிமாவிற்கு இரண்டணா டிக்கெட். ஒரணாவிற்கு ஒரு படி நிலக்கடலை. இவருக்கு இரண்டு படி நிலக்கடலை வாங்கிக் கொடுத்துவிட்டு எல்லோரும் போய்விட்டார்கள்.

சினிமா முடிந்து வரும்போது இந்த மாமா இரண்டு படி கடலை யையும் தின்றுவிட்டு அங்கிருந்த மாட்டு வண்டியில் படுத்திருந்தாராம். இவர்கள் அவரை எழுப்பி கூட்டி வரும்போது வயிற்று வலியால் வேலியைப் பார்த்து ஓடியிருக்கிறார். இரண்டு படி பச்சைக் கடலையை ஒரே நேரத்தில் தின்றதால் பேதியாகி இரண்டு நாள் படுத்த படுக்கை யாகக் கிடந்தார்.

பிறகு ஒரு நாள் அந்த சினிமாவில் அப்படி என்னதான் இருக்கு என்று இவரும் எங்கள் ஊர்க்காரர்களோடு போய் சினிமா பார்த்திருக் கிறார். அது சரித்திரக் கதை. ராஜா கையில் வாளோடு குதிரை மீது ஏறி வேகமாக முன்னால் வர இவர் அய்யய்யோ... அய்யய்யோ என்று கூப்பாடு போட்டுக்கொண்டு தியேட்டரைவிட்டு வெளியே ஓடியிருக் கிறார். அவருடன் வந்தவர்களும் அவர் பின்னாலேயே ஓடி வந்து அவரைப் பிடித்து நிறுத்தி எதுக்கு இப்படி ஓடி வாரீக என்று கேட்க கூட்டானம் மாமா உங்களுக்கு கொஞ்சமாவது அறிவிருக்கா? அந்த தாயோளி கையில கத்தியோட குதிர மேல ஏறிக்கிட்டு நம்மள வெட்ட வருவானாக்கும்! நம்ம பாத்துக்கிட்டு இருக்கணுமாக்கும் என்று சண்டை

போட்டு அப்படி அசிங்கமாக வைதிருக்கிறார். இவர்களும் எவ்வளவோ சொல்லிப் பாத்துவிட்டு இது தேறாத கேஸ் என்று விட்டுவிட்டார்கள்.

ooo

'ஆரியமாலா' என்ற சினிமா தியேட்டரில் ஓட எங்கு பார்த்தாலும் அதே பேச்சு. மந்திரம் தந்திரம் நிறைந்த படம். பெரியவர்கள் கூட அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு அவர்கள் பிள்ளைகளையும் அனுப்பி வைத் தார்கள். அது மட்டுமில்லாமல் ஊருக்குள் வந்து கதை கதையாகச் சொன் னார்கள். எனக்கும் தோழிகளுக்கும் அந்தப் படத்தைப் பார்க்க வேண்டு மென்று ஆசையாக இருந்தது. எனது அம்மாவிடம் கேட்டபோது நம்ம பொழப்புக்கு சினிமா வேற கேக்குதா என்று சொல்லிவிட்டாள். ஆனால் வசந்தா, நான், இன்னும் ஒரு மாமாவின் மகளான துளசி, சரசு எல்லோரும் சேர்ந்து இந்தப் படத்தை எப்படியும் பார்த்து விடுவது என்று முடிவு செய்தோம்.

துட்டு வேண்டுமே என்ன செய்வது என்று கணேசனிடம் சொன் னதும் அவன் நான் தியேட்டரில் முறுக்கு விற்பதால் உங்களுக்கு நான் பொறுப்பு என்று சொல்லிவிட்டான்.

எல்லோரும் சேர்ந்து ஒரே இடத்தில் படுப்பதுதான் வழக்கம். படுப்பதற்கு கோணிதான். மழைக்காலங்களில் இரண்டு சாக்கு. ஒன்று படுப்பதற்கு. இன்னொன்று நனையாமல் கொங்காணி போட்டுக் கொண்டு மாடுமேய்க்க, வேலைக்குச் செல்வதற்காக. அவ்வளவாக யாரும் குடை பிடிக்கமாட்டார்கள். அபூர்வமாக யாராவது குடை பிடித்துப் போனால் அவர்கள் பணக்காரர்களாக இருப்பார்கள்.

அன்று எங்கள் வீட்டில் எல்லோரும் படுத்துக்கொண்டோம். வீடுகள் சின்னதாக இருக்கும். முற்றம் பெரியதாக இருக்கும். பத்துப்பேர் வரை ஒவ்வொரு முற்றத்திலும் ஒன்றாக உட்கார்ந்து கூட்டாஞ்சோறு சாப்பிடுவார்கள். நெத்து, நெருவு காயப் போடுவதற்கு நெல்லு அவிப் பதற்கு... இன்னும் நிறைய வேலைகளுக்கு முற்றம்தான் பயன்படும். எங்கள் அம்மா வீட்டிற்குள் போய்ப் படுத்த பிறகு நாங்கள் எங்கள் சாக்கு களில் வைக்கோலைத் திணித்து படுத்திருப்பதுபோல் வைத்து சரி பண்ணினோம். இதற்குள் கணேசன் எங்களைக் கூட்டிப்போக வந்து விட்டான்.

சினிமா தியேட்டர் சத்திரப்பட்டியின் எல்லையில் இருந்தது. வழி நெடுகிலும் சோளக்கருது, கம்மங்கருதுகள் விளைந்து வாசமேறிக் கிடக்கும். மிளகாய்த் தோட்டம், பருத்தி என்று ஒரே வெள்ளாமைக்காடு தான். அந்த நேரத்துக்குக்கூட சில சமயம் ஆட்கள் இறைத்துக் கொண் டிருப்பார்கள். இரண்டு பக்க வெள்ளாமையினூடே போகவேண்டும். நிலா இல்லாத காலங்களில் மினுக்கட்டான் பூச்சிகள் இருட்டைக்

கலைத்தவாறு அங்குமிங்கும் பறந்துகொண்டிருக்க அவைகளை போட்டி போட்டுப் பிடித்தவாறு நடப்போம். அதனால் எங்களுக்கு பயம் என்பதே கிடையாது.

கணேசனோடு சேர்ந்து நாங்கள் ஐந்து பேர். இரண்டாவது ஆட்டத்திற்காக நாங்கள் காட்டுப்பாதை வழியாக இரண்டு மைல் தொலைவில் இருக்கும் தியேட்டருக்குப் போய்க்கொண்டு இருக்கும்போது வெள்ளிக் கண்ணு பெரியப்பா சற்று தூரத்தில் எங்கள் எதிராக வந்து கொண்டிருந்தார். எனக்கு பயம் என்றால் சொல்லி முடியாது. நான் பக்கத்திலிருந்த மிளகாய்த் தோட்டத்தில் ஒளிய ஓடினேன். வசந்தாவும் என்னுடன் ஓடி வந்தாள். என் அம்மாவைப் போலவே வசந்தாவின் அப்பாவும் கடுசானவர். எடுத்ததற்கெல்லாம் அடி உதைதான். நாங்கள் ஒளியப் போவதைத் தடுத்த துளசி ஆளுக்கு ஒரு துண்டை தலையில் கட்டிக் கோங்க, அவருக்கு அடையாளம் தெரியாது என்றாள்.

அவருக்கு விழிகள் வெள்ளையாக இருக்கும். எதையும் உற்றுத் தான் பார்ப்பார். அதனால் ஊரில் எல்லோரும் அவரை வெள்ளிக்கண்ணு வெள்ளை என்று சொல்வார்கள். ஆனால் அன்று எங்கள் கிட்டத்தில் வந்த அவர் உற்றுப்பார்க்காமலே எங்களை அதிலும் குறிப்பாக என்னை அடையாளம் கண்டுவிட்டார். என் அம்மாவிடமும் போய்ச் சொல்லி விட்டார். பிறகு கேக்க வேண்டுமா?

ரெண்டாவது ஆட்டம் சினிமா பாக்கிற அளவுக்கு வந்துட்டயா? என்று என் அம்மா அடிக்க நானும் வசந்தா, துளசியெல்லாம் போகலாமா என்று கேட்டேன். அவர்கள் எல்லாம் கணேசனுக்கு தங்கைகளாம். நான் மட்டும் முறைப்பெண்ணாம். அதனால் அவன் கூடப் போனது தப்பாம். அதோடு அம்மா விடவில்லை. கணேசன் வீட்டிலும் போய்ச் சொல்லி விட்டாள். ஆள் ஆளுக்கு அடியும் வசவும் கிடைக்க ஆர்யமாலா படம் பார்த்தது மறந்தே போனது. கணேசன் சொன்னான், உங்க அம்மா வஞ்சா ஆர்யமாலாவைப்போல அவளத் தொட்டு கல்லா ஆக்கிற வேண்டியது தான!

ooo

கோடை வந்துவிட்டாலே மாடுகளுக்கு பச்சைப்புல் கிடைப்பது அரிதாகிவிடும். எங்கு பார்த்தாலும் நிலங்கள் காய்ந்து பொருக்குத் தட்டிப்போய் கிடக்கும். அப்போதைக்கு வரப்பில் இருக்கும் புற்கள் கூட காய்ந்து காலில் குத்தி எக்காளம் செய்யும். வத்தாமல் நீர் ஊத்து பிடித்த சில கிணறுகளில் மட்டுமே வெள்ளாமை கொஞ்சமாய் பசுமையோடி பூக்கட்டுமா? காய்க்கட்டுமா? என்று கேட்பதைப்போல் செழிப்பு இல்லாமல் இருக்கும்.

நாங்கள் அப்படி வெள்ளாமை இருக்கும் இடங்களையெல்லாம் பகலில் பார்த்து வைத்துக் கொள்வோம். பிறகு விடியற்காலை மூன்றே கால் சங்கு அடிக்கும் சத்தம் கேட்டதும் செழித்த இடம் நோக்கி இடுப்பில் பண்ணரிவாளும், கையில் சொரண்டியுமாகப் புறப்பட்டு விடுவோம்.

அந்த நேரத்திற்கு கீ... என்று இருட்டுதான் கருப்பு பூத்துக் கிடக்கும். புதர்களும் மரங்களும் அடர்ந்த ஓடைகளில் நரிகளின் ஊளையும் ஆந்தையின் அலறலும் கேட்க நாங்கள் அதை ரசித்துக்கொண்டு விடியலின் வெக்கை இல்லாத குளிர்ந்த காற்றில் நடப்போம். தேய்பிறை நிலா வெட்டிப்போட்ட கட்டை விரலின் நகம் போல எங்கள் கூடவே வரும். சில சமயங்களில் அந்த நிலவும் இருக்காது. பிச்சிப்பூவான நட்சத்திர வெளிச்சத்தில் கிசுகிசுப்பாக பய்ய பேசிக் கொண்டு நடப்போம். வெட்டென்று விடியும் முன்னால் ஒவ்வொரு கட்டுப் புல்லோடு அதிகாலை ஐந்து மணி சங்கு ஊதுமுன் வீடுவந்து சேர்வோம்.

அந்தக் காலத்தில் முதன்முதலில் நடுச்சாமத்தில் தூரத்தில் ராஜபாளையம் மில்லின் முதல் சங்கு ஊதியிருக்கிறது. உடனே சொக்கலிங்கபுரத்துக்காரர்கள் எல்லாம் கடுவாய்தான் ஊருக்குள் வந்துவிட்டது என்றும் அதை அடிக்காவிட்டால் நம்முடைய ஆட்டையும் மாட்டையும் தூக்கிக்கொண்டு போய்விடும் என்றும் பயந்துவிட்டார்கள். அதனால் எல்லோரும் ஒன்றுசேர்ந்து கடுவாயை அடித்துவிடவேண்டுமென்று கம்புகத்திகளைத் தூக்கிக்கொண்டு ஓடியிருக்கிறார்கள். அதற்குள் சங்கு சத்தம் நின்றுவிட்டது. நடுச்சாமம் என்பதால் எங்கு பார்த்தாலும் கரிய இருட்டாக இருந்திருக்கிறது. அந்த இருட்டுக்குள் இவர்களுக்கு கடுவாய் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. முத்தரசு சீயான் தன் மடியிலிருந்த தீப்பெட்டியை எடுத்து உரச அதன் வெளிச்சத்தில் அம்பாரமாகக் குமித்திருந்த எள்ளுச் சண்டுதான் தெரிந்திருக்கிறது. உடனே இவர்கள் கடுவாய் இந்த எள்ளு சண்டுக்குள்தான் ஒளிந்து இருக்க வேண்டுமென்று அதற்கு தீ வைத்துவிட்டார்கள். பிறகு தீ எங்கும் பரவிவிடாமல் இருக்கவேண்டுமே என்பதற்காக சிலர் வீட்டிலிருந்து தண்ணீர் சுமந்தார்களாம்.

நானும் கணேசனும் எங்களோடு சரசுவும் விசயாவும் சேர்ந்து முக்கால்வாசி நாட்கள் விடிய ஒரு சாமம் இருக்கிறபோதே களவு புல்லுக்குப் போய் விடியுமுன்னே யாருக்கும் தெரியாமல் புல்லுக் கட்டைக் கொண்டுவந்து விடுவோம். இதோடு போகாமல் மாடுகளையும் அவிழ்த்து வெள்ளாமையில் விட்டுவிட்டுப் போய் விடுவோம். இதில் நானும் கணேசனும்தான் கூட்டாளி. மற்றவர்கள் எங்களுடன் சேர மாட்டார்கள். எங்கள் மாடுகள் கூட எங்களுடன் புத்திசாலித்தனமாக ஒத்துழைக்கும். நாங்கள் வருமுன்னே அவை வயிறு நிறைய மேய்ந்து

விட்டு எங்களுக்காகக் காத்திராமல் கொட்டத்தில் போய் அப்பாவியாகப் படுத்துக்கொள்ளும்.

ஏகதேசம் ராத்திரி புல்லுக்கு போக முடியாமல் போய்விட்டால் எனக்கு பகலில் புல்லு பிடுங்க உடம்பு வளையாது. காட்டுக்குப் போகும்போதே கொஞ்சமாய் புல்லைப் பிடுங்கிக்கொண்டு போவேன். பிறகு சாக்கு நிறையவோ, புல்கட்டின் அடியிலோ காயும் நெத்துமாக இருக்கும் பயத்தம் செடிகளைப் பிடுங்கி அதன்மேல் புல்லை வைத்து மறைத்துக்கொண்டு வந்துவிடுவேன். அதை இரவு காடியில்தான் போடுவேன். இதனால் எங்கள் மாட்டுச் சாணியில் வெறும் பயறும் பச்சையுமாக இருக்கும். யாரும் தொளிசாணி எடுக்க வந்து நம் குட்டு நெட்டை அறிந்துகொள்வார்களோ என்று பயந்து விடியும் முன்பே சாணியை அள்ளிக் குப்பையில் போட்டுவிடுவேன்.

ஸ்ரீ

கோள் மூட்டிவிட்ட வெள்ளிக்கண் பெரியப்பா மீது எங்களுக்கு ஒரே கோபம். எப்படியாவது அவரைப் பழி வாங்க வேண்டும் என்று காத்திருந்தோம்.

கருது காய் விளைந்திருந்தால் திருடர்கள் வந்து அறுத்துக்கொண்டு போய்விடுவார்கள் என்று வீட்டில் இருக்கும் பெரியவர்கள் பிஞ்சை காவலுக்குப் போவார்கள்.

அப்போதெல்லாம் காடுகளில் நிறையக் களவு போகும். வானத்து நட்சத்திரங்களாய் வெடித்துப் பூத்திருக்கும் பருத்திச் சுளைகள் காணாமல் போக வெற்றுச் சொங்குகள் சோறு இல்லாத கும்பாக்களாக செடியில் உட்கார்ந்திருக்கும். விக்கலும் கக்கலுமாய் விளைந்து அரிவாளுக்காகக் காத்திருக்கும் சோளம், கம்பு, கேழ்வரகுப் பயிர்கள் மறுநாள் விடியு முன்பே தங்கள் கருதுகளை இழந்துவிட்டு மொட்டைத் தலையாக ஆட்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும்.

ஆமணக்கு, அகத்திக் கொளைகளை கொள்ளை அடித்து அழிம்பு பண்ணி தோட்டத்தின் அழகையே கெடுத்திருப்பார்கள். கொடியின் பாரம் தாங்காமல் சவண்டு கிடக்கும் மொச்சிக்காய், தட்டாங்கா யெல்லாம் யார் வீட்டு அடுப்பிலாவது வாசனையோடு வெந்து கொண்டிருக்கும். பவளச் சிதறல்களாய் பசிய தோட்டத்தை அழகு படுத்திக்கொண்டிருக்கும் மிளகாய்ப் பழங்கள் மறுநாள் இருக்கவே இருக்காது.

அதனால் வீட்டில் உள்ள பெரியவர்கள் எல்லாம் இரவு ஊர் அடங்கிய வேளையில் நீளக் கம்போடு பிஞ்சைக் காவலுக்காகப் போய்விடுவார்கள்.

ஒருநாள் இந்த வெள்ளிக்கண் பெரியப்பா அவர் காட்டுக்கு காவலுக்குப் போய்க்கொண்டிருந்தார். நாங்கள் ஒரு முள் புதரில் ஒளிந்து காத்திருந்தோம்.

பண்ணரிவாள் போல் நிலாவும் எங்கள் கூடவே வந்தது. வெளிச்சம் அவ்வளவாக இல்லை.

பெரியப்பா கையில் கம்போடு வேகமாக நடக்க நாங்கள் கொஞ்சம் இடைவெளிவிட்டு அவர் பின்னாலேயே போனோம். போகும்போது மெல்ல முனங்கிக்கொண்டும் பெரிதாக மூச்சுவிட்டுக் கொண்டும் போனோம். எங்கள் முனங்கல் சத்தம் கேட்கும் போதெல் லாம் அவர் திரும்பிப் பார்ப்பார். ஒளிந்து கொள்வோம். ஒற்றையடிப் பாதைதான். பாதையின் ஓரங்களில் வெள்ளாமை அடர்வாக இருக்கும். அதனால் ஒளிய ரொம்ப வசதியாக இருந்தது. பெரியப்பாவும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே பிஞ்சைக்குப் போய்விட்டார். அவர் பிஞ்சையில் சின்னக் குடிசை இருந்தது. அவர் குடிசைக்குள் நுழைந்து விளக்கு பொருத்துவதற்காக தீக்குச்சியை உரசினார். அந்த வெளிச்சம் அணையும் முன்னே கருப்புக் கம்பளியில் தயாரர்க இருந்த கணேசன் அவர் முன்னால் சென்று தலையை மட்டும் ஆட்டிவிட்டு நிமிஷத்தில் வெளியே வந்துவிட்டான். ஓடி ஒளிந்து கொண்டோம். அவ்வளவுதான், அவர் அலறிய அலறலில் பக்கத்துப் பிஞ்சையில் காவல் இருந்தவர்கள் எல்லாம் வந்து கூடிவிட்டார்கள்.

மறுநாள் குளிரும் காய்ச்சலுமாக அவர் நடுங்கிக்கொண்டு கிடக்க சாமி கும்புட்டு திருநீறு போட்டார்கள். கோயில் பூசாரியின் மேல் சாமி வந்து இது முதுகுடியான் குத்தம்; அவனுக்கு பொங்கல் வைத்து நெய் தீபம் போடுங்கள். எல்லாம் சரியாகிவிடும் என்று சொல்ல வேடிக்கை பார்த்த எங்களுக்கு சிரிப்பாய் வந்தது.

ooo

முதுகுடியான் சாமி எங்களுக்கு பல விதத்திலும் உதவி செய்திருக் கிறார். அந்தக் கோயில் ஊருக்கு வடக்கே இருக்கிறது. ரொம்ப துடியான சாமி என்று சொல்வார்கள். சிலைகளைப் பார்த்தாலே பயமாய் இருக்கும். அதிலும் குதிரை மீது இருக்கும் அய்யனாரைச் சுமந்தவாறு நிற்கும் பூதத்தான் என்ற சிலை அதிக பயத்தை கொடுக்கும். எங்கள் ஊரில் எதற்கெடுத்தாலும் முதுகுடியானைத்தான் வேண்டிக்கொள்வார்கள்.

ஒரு ஏக்கர் பரப்பளவிற்கு படர்ந்து கிடக்கும் பெரிய ஆலமரத் தினடியில்தான் இந்த முதுகுடி சாமி அமர்ந்திருந்தார். அந்தச் சாமிக்கு துணையாக நிறைய குட்டிக்குட்டிச் சாமிகள். கோயில் பொட்டல் வெளியில் இருந்ததால் நாங்கள் மாடுகளைக் கொண்டுபோய் அங்கே

விட்டு விட்டு ஆலவிழுதுகளைப் பற்றித் தூறியாடுவோம்.

காரச்செடிக்கும் மஞ்சனத்திக்கும் குறைவிருக்காது. அந்தச் செடி களில் எங்களுக்காகப் பழங்கள் கனிந்து சொரிந்து கிடக்கும். மாடுகளைக் கொண்டுபோய்விட்டதும் எங்களுக்குப் பழம் பறிப்பதுதான் வேலை. அந்தக் கோயில் பக்கத்திலேயே ஒரு பெரிய குளம் இருக்கும். பால் ஊற்றிய காப்பியை போல் அதில் தண்ணீர் சிவந்து சின்னச் சின்ன அலை களை எழுப்பியவாறு தத்தளித்துக் கிடக்கும். எங்களுக்கு மாட்டைப் பற்றி கவலை கிடையாது. தண்ணீருக்குள் விழுந்து கும்மாளமடிப்போம். உச்சிவெயில் வரையிலும் மேய்கிற மாடுகள் தாகத்துக்காக குளத்தைத் தேடி வருகிறவரை நாங்கள் தண்ணீருக்குள் விளையாடுவோம்.

முதுகுடி சாமியான கதை இதுதான்:

முதுகுடி ரொம்ப தாழ்ந்த சாதிக்காரர். ஒரு ஜமீன் வீட்டில் வேலைக்கு அமர்ந்திருக்கிறார். ஆள் ரொம்ப பலசாலி. எதிரில் வரும் நான்கு பேரைக்கூட ஒண்டியாக அடித்துவிடுவார். கம்புச்சண்டை, குத்துச் சண்டை, மர்மப்பிடி எல்லாம் கற்று வைத்திருக்கிறார். அது மட்டுமில் லாமல் ஆளும் திருக்கிவிட்ட மீசையோடு அழகாக அம்சமாக இருந்திருக் கிறார்.

அவரை வேலைக்கென்று ஜமீன்தார் வைக்கும்போது மீசையை எடுக்கும்படி சொல்ல முதுகுடி அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு சொன்னார். எஜமான், தினத்துக்கும் உங்க சாட்டையால பத்து அடி அடிங்க. பொறுத்துக்கிறேன். ஆனா மீசையை மட்டும் எடுக்கச் சொல்லா தீங்க. அதுதேன் என் உசுரு.

ஜமீன் வீட்டில் இவருக்கு பொட்டு வண்டி (பெண்பிள்ளைகள் போவது) ஓட்டும் வேலை. அதிலும் முக்கியமாக ஜமீன் வீட்டுப் பெண் களை அடுத்த ஊருக்கு கூட்டிப்போவது. அங்கிருந்து பத்திரமாய் கூட்டி வருவது. கோயில் தோப்பு என்று போய் வருவது.

அந்தக் காலத்தில் கள்ளர்கள் பயம். அடுத்து ஜமீன் பகையாளிகள் வேறு. அதிலும் தீவட்டிக் கொள்ளைகாரர்களுக்கு ஜமீன் வீட்டு வண்டி என்றால் தெரிந்துவிடும். அதனால் பெண்களை பத்திரமாய் பார்த்துக் கொள்ள பலசாலியான இவரை பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள்.

கெட்டிக்காரரான முதுகுடி மீது ஜமீன்தார் மகள் ரத்தினகிளிக்கு ஆசை வந்துவிட்டது. ஆனால் முதுகுடி அரண்மனைக்குள் போகக் கூடாது. ரத்தினகிளி வெளியே வரக்கூடாது. அவள் தன் ஆசையை முது குடியிடம் சொல்ல முடியாமல் தவித்தாள்.

ஒருநாள் அவளும் அவள் தாத்தாவும் தூரத்து ஊருக்குப் போயிருக் கிறார்கள். துணைக்கு முதுகுடி. வழியில் ஒரு மலை. மலையிலிருந்து அருவி வெள்ளிக் கம்பியாகக் கொட்டியிருக்கிறது. அதைப் பார்த்ததும்

ரத்னகிளிக்கு குளிக்க வேண்டுமென்று ஆசை வந்துவிட்டது. தாத்தா விடம் சொன்னபோது அவர் மறுத்துவிட்டார். ஆனாலும் அவள் அவரைத் தாங்கித் தடுக்கி எப்படியோ சம்மதம் வாங்கி குளிக்கப் புறப் பட்டு விட்டாள். கொஞ்ச நேரத்தில், அய்யோ... என்னை காப்பாத்துங்க, என்னை காப்பத்துங்க என்று அவள் அலற தாத்தா பயந்து விட்டார். வயதாகிவிட்டதால் அவருக்கு காலும்கையும் உடம்பும் சேர்ந்து நடுங்க அவர் முதுகுடியை காப்பாற்றும்படி சொன்னார். அவர் மறுத்து விட்டார். எஜமான், நான் தாழ்ந்த சாதிக்காரன்; எப்படி அவங்களைக் காப்பாத்து வேன் என்று கேக்க ஆபத்திற்கு பாவமில்லை என்று தாத்தா சொல்ல இதற்குள் மீண்டும் ரத்னகிளியின் அலறல் கேட்க தாத்தா அவசரப்படுத்தி முதுகுடியை அனுப்பி வைத்தார். இவரும் பயந்து கொண்டே அவளைக் காப்பாற்றப் போனார்.

இவர் போனதுதான் தாமதம், சும்மாவாச்சும் அலறியவாறு துணி யோடு மறைந்திருந்த ரத்னகிளி இவரைக் கண்டதும் பாய்ந்து வந்து கட்டிக் கொண்டு அவர் மீது தனக்குள்ள ரஞ்சிப்பை சொன்னாள். முதுகுடியும் தான் கீழ் சாதிக்காரன் என்று எவ்வளவோ எடுத்துச் சொன்னார். ரத்னகிளி கெஞ்சியும் கொஞ்சியும் அவரை மயக்கிவிட்டாள். இரண்டு பேரும் ஒன்றாகி விட்டார்கள். அதோடு இந்த சந்திப்பு சமயம் கிடைக்கும் போதெல்லாம் தொடர்ந்திருக்கிறது.

ஒருநாள் இதே மாதிரி ஒரு பிரயாணத்தின் போது அவர்கள் வளைவுசுளிவாக இருந்தபோது தாத்தா பார்த்துவிட்டார். ஆனாலும் பார்க்காத மாதிரி இருந்துவிட்டார். போகிற இடத்துக்கு போய் வந்த பிறகு நடுச்சாமத்தில் தன் மகனை ரகசியமாகக் கூப்பிட்டு விஷயத்தை சொல்ல ஜமீன் அதிர்ச்சியாகிவிட்டார்.

இந்த விஷயம் வெளியே தெரிந்தால் எவ்வளவு அவமானம் என்று நினைத்த ஜமீன் வீட்டு ஆட்கள் இரவு முழுக்க கூடிப்பேசி ஒரு முடிவு எடுத்தார்கள். அதன்படி ஒரு வாரம் கழித்து ஜமீன்தாரும் அவர் தம்பியும் ஊருக்கு புறப்பட முதுகுடி வண்டி ஓட்டி இருக்கிறார்.

நடுக்காட்டில் இருக்கும் ஆற்றோரத்தில் இரண்டு ஜமீன்களும் சாப்பிட்டார்கள். முதுகுடி தூரமாகப் போய்விட்டார். இவர்கள் அவருக் கென்று இருந்த சோற்றில் விஷத்தை கலந்துவிட்டு போய் சாப்பிடச் சொன்னார்கள்.

அவரும் சரி என்று நாலு வாய் சாப்பிட வயிற்றில் ஏதோ சங்கடம் செய்ய எனக்கு சோறு வேண்டாம் என்று எழப்போனவரை இரண்டு பேரும் விடவில்லை. சாப்பிடு என்று மிரட்ட முதுகுடிக்கு சந்தேகம் வந்து விட்டது. முடியாது என்று திமிர சின்ன ஜமீன் தான் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து அவர் கழுத்தை நோக்கி வீசியிருக்கிறார். குறி தவறி முதுகுடி தோளில் விழ அவருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. எப்படி

யாவது உயிர் தப்பிக்க வேண்டும் என்று ஓடியிருக்கிறார். பரம்பரையாய் அடிமையாக இருந்ததில் ஜமீன்களை எதிர்க்க அவருக்குத் தோண வில்லை. தோளில் ரத்தம் வழிய வயிற்றுக்குள் போன விஷம் வேலை செய்ய அதையெல்லாம் சமாளித்தவாறு ஓடிக்கொண்டிருந்தார் முதுகுடி. பெரிய ஜமீன் இடுப்பிலிருந்த கத்தியை எடுத்து வீசினார். அந்தக் கத்தி அவர் காலைப் பதம் பார்த்துவிட்டது. அவரால் ஓட முடியவில்லை.

எங்கள் ஊர் பக்கம் வந்ததும் அங்கிருந்த குளத்தில் தண்ணீரைக் குடித்திருக்கிறார். தொடர்ந்து வந்த ஜமீன் அரிவாளால் ஒரே போடு போட்டார். அவ்வளவுதான், உயிர் போய்விட்டது. உயிர் போகும்போது ரத்னகிளி... என்று அலற, அந்தப் பெயர் சுற்று வட்டாரத்தில் காடுகளில் வேலை செய்துகொண்டிருந்த ஆட்களின் காதுகளில் தெளிவாகவே கேட்டது.

எல்லோரும் கசமுசவென்று பேச ஆரம்பித்து விட்டார்கள்.

ஜமீன் வீட்டு வேலைக்காரன் ஜமீன் மகளை பேர் சொல்லிக் கூப்பிடுகிறானே இதில் ஏதோ இருக்க வேண்டும் என்று ரகசியம் பேச, இந்த ரகசியம் ஊருக்குள் பரவி அரண்மனைக்குள் அதுவும் ரத்னகிளி காதில் விழுந்துவிட்டது. உடனே அவள் தன் அலங்காரங்களை யெல்லாம் கலைத்துவிட்டு தலைவிரி கோலமாக நெஞ்சிலும் தலை யிலும் அடித்துக்கொண்டு தரையில் புரண்டவாறு அழுதிருக்கிறாள். கொலைகாரப் பாவிகளா... இப்படி ஒரு உயிரை கொன்னுட்டீங்களே என்று அழ எல்லோரும் அரண்டு போனார்கள்.

அப்போதே வேலைக்காரர்களையெல்லாம் வெளியே அனுப்பி விட்டு ரத்னகிளியை ஆசுவாசப்படுத்தி விவரத்தைக் கேட்க அவள் தான் முதுகுடியோடு ஒன்றாகிவிட்டதைச் சொன்னதும் அதிர்ந்து போனார்கள்.

போனது போகட்டும், ஊரையே ஆளும் ஜமீன் குடும்பத்தில் ஒரு கீசாதிக்காரன் கால் படலாமா? கால் வாசப்படியில் பட்டாலே தீட்டு என்று அந்த இடத்தை கழுவுகிறோமே! காலடிகள் எல்லாம் வெளியே கிடக்கணும். நீ அவனை மறந்துரு. உனக்கு ஒரு ஜமீனை மாப்பிள்ளை யாக பார்க்கிறோம். நம் ஜமீனிலும் பாதி எழுதி வைக்கிறோம் என்று தேற்றினார்கள்.

அவள் ஆவேசமாக எழுந்துவிட்டாள். அவரு வெள்ளாமை வச்ச தானியம் வேணும். அவரு வளத்த மாடு கண்ணு வேணும். ஆனா அவர் தொட்ட இடம் தீட்டு. அப்படித்தானே. இந்த உடம்பும் அவரு தொட்டது தான். நானும் இனி உங்களுக்கு தீட்டுதான். இந்த தீட்டோட நானு இந்த அரண்மனையில் இருக்க விரும்பல. நானு அவரு சாதி சனத்தோட இருக்கப்போறேன் என்று சொல்லிவிட்டு தலைவிரி கோலமாக வெளியே ஓட அவளை எல்லோரும் பிடித்துக்கொண்டு வந்தார்கள். எவ்வளவோ கெஞ்சிக் கும்புட்டுப் பார்த்தார்கள். பிறகு அடி அடியென்று அடித்தார்கள்.

அவள் எதற்கும் மசியவில்லை. முதுகுடியின் வீட்டுக்குப் போவதிலேயே குறியாக இருந்தாள்.

ரத்னா, இந்த ஜமீன் வீட்டுப் பொண்ணு கீழ் சாதிக்கார குடிசையில் இருந்தா நமக்கு மட்டுமல்ல; எல்லா ஜமீனுக்கும் அசிங்கம். வேற வழி ஏதாவது இருந்தா சொல்லு; நாங்க கேட்டுக்கிறோம் என்றார் அவள் தாத்தா.

நாளைக்கே ஊர் சாட்டி நான்தான் முதுகுடி பொண்டாட்டின்னு ஊர் அறியச் செய்யணும். அதோட என் புருசன் செத்துட்டதால ஊரைக் கூட்டி என் பூ, பொட்டு, இந்த ஆடை, ஆபரணம் எல்லாத்தையும் அழிச்சு என்னை விதவையாக்கணும். அப்படி செஞ்சீகன்னா நான் விதவைக் கோலத்தோட வாழ்நாள் பூரா இந்த அரண்மனையில இருக்கேன். இதுல ஏதாவது மாறி நடந்ததோ நான் அவரு சாதிசனத்தோட போய் இருக்கது மில்லாம ஒவ்வொரு ஜமீனா போவேன். போயி நீங்க முதுகுடிய கொலை செஞ்சதை சொல்லுவேன். இதுக்கு ஒரு முடிவு கட்டாம விடமாட்டேன் என்றாள்.

கேட்டவர்கள் ஆடிப்போனார்கள். இவள் சொன்னதோடு நிற்க மாட்டாள், செய்தும் காட்டுவாள் என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டது.

உடனே ரத்னகிளியின் தாத்தா, சரி ரத்னா நீ அவன் மேல இவ்வளவு ஆசை வச்சிருப்பேன்னு நாங்க நினைக்கல. நீதான் எங்களுக்கு வேணும். அதனால சோசியரப் பாத்து நாளு, நேரம் எல்லாம் குறிச்சி முறைப்படி செய்வோம். நீயும் அவனும் சேந்த சடங்கத்தான் செய்யல; செத்ததை யாவது செய்வோம் என்று சொல்ல அவளும் சம்மதித்தாள்.

அதன்படி ஒரு வாரம் கழித்து விடியற்காலை முதல் கோழி கூப்பிட்டதும் ஜமீனின் தானியக் கிடங்குக்குள் அக்னி வளர்த்தார்கள். எலும்புக்கூடாகத் தரையில் சுருண்டு கிடந்த ரத்னகிளியை எழுப்பிக் கூட்டி வந்தார்கள். எல்லோரையும் ஒன்றுசேரப் பார்த்த அவள் மிரண்டு விழித்தாள்.

அவள் தாத்தா அவளை அன்போடு தடவிக்கொண்டே சொன்னார். சோசியர்கிட்டே கேட்டோம் ரத்னா. அவரு இந்த மாதிரி எந்த ஜமீனுலுயும் நடந்ததில்ல. அதனால உனக்கு விதவைக் கோலச் சடங்கு வைக்கிறதுக்கு முன்னால ஒரு அக்னி பூஜை நடத்தணுமின்னுட்டாரு. இப்ப அதுக்குத்தான் எல்லா ஏற்பாடும் செஞ்சிருக்கோம். நாங்க எல்லாரும் குளிச்சிட்டோம். நீயும் போயி குளிச்சிட்டு வா.

அவளும் தாத்தா சொன்ன மாதிரியே குளித்துவிட்டு வந்தாள். அவளுக்கென்று இருந்த நகையெல்லாம் போட்டுவிட்டு பட்டுசேலை உடுத்தினார்கள். பிறகு அக்னியை சுற்றி வந்தார்கள். இரண்டு சுற்று முடிந்து மூணாவது சுற்று. அவளை யாரோ திடீரென்று அக்னியில் தள்ளினார்கள். அக்னியில் விழுந்த ரத்னகிளியின் உடம்பு தீப்பிடித்து

எரிந்தது. அவள் கலகலவென்று சிரித்தாள்.

உங்களுக்கு மனுசங்கள அழிக்கத்தான் தெரியும். வாழ வைக்கத் தெரியாது. நான் உங்ககிட்ட உயிரோடு இருந்து சித்ரவதைப் படுறதை விட இப்படி செத்து என் முதுகுடி கிட்ட போவத்தான் ஆசைப்படுறேன். ஆனாலும் இந்த ஜமீன் இப்படியே இருக்காது. அது அழிஞ்சு போகும் என்ற வார்த்தையோடு அப்படியே வெந்து தீயோடு கலந்துவிட்டாள். ஜமீன் வீட்டு ஆட்களும் செல்லமாய் வளர்த்த மகளை இப்படி உயிரோடு தீயில் தள்ள வேண்டி வந்துவிட்டதே என்று அழுகையும் கண்ணீருமாக கவலையோடு கிடந்தார்கள். பிறகு பொய்யாக ரத்னகிளிக்கு விஷக் காய்ச்சல் என்று ஒரு வதந்தியை ஊருக்குள் பரவ விட்டார்கள். அதே பொய்யோடு ஒரு வாரத்திற்கு வைத்தியரையும் அரண்மனைக்கு வர வழைத்து மருந்து வாங்கினார்கள். பிறகு விஷக்காய்ச்சலில் ரத்னகிளி இறந்து விட்டதாகவும் அரண்மனைத் தோட்டத்திலேயே எரித்து விட்ட தாகவும் சொல்லி விட்டார்கள். இது ஜமீன் விஷயமாதலால் யாரும் மறுத்துப் பேசவில்லை. கொஞ்ச நாளில் அதை மறந்தும் போனார்கள்.

முதுகுடி எங்கள் ஊர் பூசாரியின் மீது வந்துவிட்டார். கெட்டவை இந்த ஊருக்குள் புகுந்து விடாமல் காவல் தெய்வமாக இருந்து கிருஷ்ண வகை சாதியாருக்கு நல்லது செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுக்க அந்த இடத்தில் ஒரு கோயில் கட்டி கும்பிட்டு வருகிறார்கள்.

முதுகுடிக்கு வெண்ணை என்றால் பிரியமென்று வெண்ணை தீபம் போட்டுவிட்டுப் போவார்கள். தீபம் காற்றுக்கு அணைந்துவிடும். நாங்கள்தான் அதையெல்லாம் தின்று தீர்ப்போம். முதுகுடி காவல் என்பதால் யாரும் அந்தப் பக்கம் காவலுக்கு வரமாட்டார்கள். எங்கள் பாடு கொண்டாட்டம்தான். இரவில்கூட களவு புல்லுக்கு போகும்போது பருத்தி பூக்க வெடித்துக்கிடந்தால் ஒரு மடி எடுத்து சேவு, சீனிக்கிழங்கு என்று வாங்கித் தின்போம்.

நான் மாடு மேய்க்கப்போகும் வேலை சனி, ஞாயிறு மற்றும் பள்ளி விடுமுறை நாட்களில் மாறிவிடும். எனது மூத்த தம்பி ராஜா மாடு மேய்க்கப் போக வேண்டும். அன்றைக்கு நான் காட்டு வேலைக்குப் போவேன். களை எடுக்க, மிளகாய்ப் பழம் பறிக்க, நாற்று நட என்று இன்னும் நிறைய வேலைகள் இருக்கும். இந்த வேலைகள் எல்லாம் கோடை காலங்களில்தான். மழைக்காலங்களில் வயலில்தான் வேலை. தொளி மிதிப்பது, நாற்று நடுவது, தொளிக்காக காட்டில் இருக்கும் கொளைகளையெல்லாம் பிடுங்கிக் கொண்டுபோய் போடுவார்கள்.

இந்த வேலை என்றால் கூலிக்காரர்களுக்கு ரொம்ப சந்தோசம்.

ஏனென்றால் ஒரு கட்டு கொளைக்கு ஆறணா தருவார்கள். பகல் முழுக்க வேலை செய்தால் எட்டணா கூலிதான். கொளை என்றால் ஒரு நாளைக்கு நாலு கட்டுகூட போட்டு விடுவார்கள். அப்போது ஒரே நாளில் ஒன்னரை ரூபா கிடைக்கும்போது சந்தோசம்தானே. இந்த ஒன்னரை ரூபாய்க்கு மூன்று பகல் அல்லவா வேலை செய்ய வேண்டும்.

இப்படி கொளை போட, பேசி தட்டை அறுக்க என்ற வேலைக் கெல்லாம் எனக்கு பெரியப்பா முறை வேண்டிய பப்பாடு வீரப்பாதான் கொத்தனாராக இருந்தார். அவர் மூலமாக வேலைக்குப் போனால் சம்பளமும் அதிகமாகக் கிடைக்கும். வேலையும் சுளுவாக இருக்கும். அதனால் அவர் என்ன சொன்னாலும் வைதாலும் அவரை அனுசரித்தே போவார்கள். அவருக்கு ஒரு மகனும் மகளும் இருந்தார்கள். மகள் பெயர் புஷ்பா. எனக்கு ஐந்து வருடம் மூத்தவள்.

அந்தப் பெரியப்பாவுடன் வேலைக்குப் போகிற எல்லோருமே என்னைவிடப் பெரியவர்கள். நான்தான் சின்னப்பிள்ளை. ஆனாலும் என் அம்மாவின் கண்டிப்புக்காகவும் எங்களின் ஏழ்மைக்காகவும் இரக்கப் பட்டு கூட்டிப்போவார்கள். எல்லோரும் அவரவர் வேலையைச் செய்ய நான் மட்டும் புஷ்பாவிற்கும் சேர்த்துச் செய்ய வேண்டும். இந்த கொளை விஷயத்தில் அவளுக்கு செடி பிடுங்கிக் கொடுப்பதோடு சேர்த்தும் கமக்க வேண்டும்.

இருட்டோடு இருட்டாக கிளம்பி விடுவார்கள் கொளை பிடுங்கும் வேலைக்காக. வேலி, கிணறு, புதர்க்காடு என்று கொளை பிடுங்கி வயக் காட்டின் சற்று தூரத்தில் கொண்டுவந்து போடுவார்கள். பிறகு அலங் காரமாக கட்டுக் கட்டுவார்கள். கொங்கணி, குறுஞ்செடி, செருக்கு கொளை, உச்சிக்கொளை என்று அலங்காரம் செய்வார்கள். அப்படி யெல்லாம் எனக்குக் கட்டத்தெரியாது. அதனால் அடுத்தவர்கள் உதவி செய்ய நான் கட்டிக்கொள்வேன். அந்த இடம் வரையிலும் நான் புஷ்பாவின் கட்டைச் சுமந்து வந்து அவளுக்கு கொடுத்துவிடுவேன். புஷ்பாவின் அப்பாவிற்காக எல்லோரும் அவள் மீது பிரியமாக இருப் பார்கள். அவளுக்காக நான் நீ என்று உதவி செய்வார்கள். எனக்கு அவள் மீது பொறாமையாக இருக்கும். நாம் அவளாகப் பிறந்திருக்கக் கூடாதா என்று ஏங்குவேன்.

இந்த கொளை சமயங்களில் குளமெல்லாம் பெருகி எங்கு பார்த்தாலும் தண்ணீர்தான். வயல் வரப்புகளில் ஈரமண்ணை அள்ளிப் போட்டு வரப்பு சாத்துவார்கள். காலை வைத்தால் வழுக்கிக்கொண்டு ஓடும். ரொம்ப கவனமாக நடக்க வேண்டும். கொஞ்சம் தடுமாறினால் கூட நடுவைக்குத் தயாராக இருக்கும் வயலில் இறங்கி விடுவோம். கால் முட்டிவரை ஆழத்திற்குப் போய்விடும். பிறகு தலைச்சுமையோடு அதில் நடந்து வரப்பேறுவது என்பது கஷ்டமான வேலை. இதில் வயலுக்கு சொந்தக்காரர்கள் நாற வசவு வைவார்கள்.

அதோடு குளம் பெருகி மட்டம் தட்டிப்போவதால் ஒரு குளத்து தண்ணியை மறுகுளத்துக்குப் பிடுங்கிவிட்டு விடுவார்கள். மடைவழியே தண்ணீர் பெருகி ஓடும். வயலுக்குப் போக வேண்டுமென்றால் அந்த தண்ணீரைக் கடந்துதான் போக வேண்டும். தண்ணீர் இடுப்பளவு கூட ஓடும். ஆண்கள் நிறையப் பேர் அங்கே உட்கார்ந்துகொண்டு சேலையைத் தூக்கிப் பிடித்தவாறு போகும் பெண்களைப் பார்த்து கேலி பேசுவார்கள்.

ஒருமுறை நானும் வசந்தாவும் இந்த மடை வழியே நாற்று சுமந் தோம். எனக்கு முன்பே வசந்தா இரண்டு கட்டு சுமந்து இருந்ததால் நாற்றுச் சுமையோடு தண்ணீருக்குள் இறங்கினோம்.

பாரதா, இந்த ரக்குல பாத்து காலை எடுத்து வையி; அங்கன ஒரு கல்லுகிடக்கு, தட்டி விழுந்திரப்போற என்றாள் வசந்தா. ஆனால் சொல்லி முடிக்கும் முன்பே அதே கல் தட்டி கட்டைக் கீழே போட்டு விட்டாள். அவளும் தண்ணீருக்குள் விழுந்து விட்டாள். அவளைப் பிடிக்கிறேன் என்று நானும் எனது கட்டோடு விழுந்து விட்டேன். ஒருவழியாக இரண்டு பேரும் தட்டுண்டு தடுமாறி எழுந்து பார்த்தால் எங்கள் நாற்றுக்கட்டை காணவில்லை. நாற்று அடுத்தவரிடம் விலைக்கு வாங்கியது. ஒரு பாத்தி பத்து ரூபாய் என்று விற்றார்கள். பத்து ரூபாய் என்பது பெரிய தொகை. நாற்றுக்கட்டு தண்ணியோடு போய்விட்டால்... எங்களுக்கு வீட்டில் சோறு கிடைக்காது. சோறு இருக்கட்டும், வீட்டின் உள்ளேயே நுழைய முடியாது.

அய்யோ அய்யோ... என்று மீண்டும் நாங்கள் இருவரும் தண்ணீரில் விழுந்தடித்துக்கொண்டு நாற்று போன திக்கம் ஓடினோம். நல்லவேளை, அங்கேயிருந்த ஒருவர் எங்கள் மீது இரக்கப்பட்டு தண்ணி யோடு நீந்திப்போய் எங்கள் கட்டுகளை இழுத்து வந்து கொடுத்தார். ஒருவழியாக ஈரத்துணியோடும் ஈரச்சுமையோடும் வழுக்கும் வரப்புகளில் நடந்து போனோம்.

வசந்தாவின் அப்பா எங்களுக்கு எதிரே கடுகடுப்போடு நின்று கொண்டு இவ்வளவு நேரம் என்ன செஞ்சீக என்று வைதவாறு அடிக்க வர நாங்கள் நாற்றுக்கட்டு தண்ணிக்குள் விழுந்த விவரத்தைச் சொன் னோம்.

ஒரு வட்டில் திங்கத் தெரியும்; இதை சுமக்க முடியாதாக்கும் என்று சொல்லிவிட்டு, சரி சரி முடியையாவது வயலுக்குள் சிதறுங்கள்; நான் போயி நடுவைக்காரியைச் சத்தம் கொடுத்துட்டு வாரேன் என்று அவர் சொல்லிவிட்டுப் போனார்.

நாங்களும் வயல் முழுக்க தொழிக்குள் இறங்கி ஒவ்வொரு கட்டாகப் போட்டுவிட்டு இந்த வரப்பில் ஏறினோம். மாமா தூரத்தி லிருந்தே கத்திக்கொண்டு வருகிறார். என்ன என்று பார்த்தால் அவர் பொறுப்புக்காக எடுத்திருக்கும் வயல் நாங்கள் நாற்றுக்கட்டை சிதறிய

வயல் இல்லையாம். அவர் சும்மா இந்த வயலோரம் நின்றாராம். மீண்டும் தொழிக்குள் இறங்கி கட்டுகளைப் பெறக்கி... போதுமடாசாமி! சென்மத்துக்கும் போதும் என்று ஆகிவிட்டது.

நெல் நடுவையில் இப்படி கஷ்டமென்றால் நெல் கருதறுப்பில் இதைவிட கஷ்டம் அதிகமாய் இருக்கும். சில வயல்களில் களம் ரொம்ப தூரம் இருக்கும். அதோடு வழியில் ஓடை, ஆறு என்று குறுக்கிடும். ஆற்றில் இடுப்பு வரை தண்ணீர் ஓடும். இதில் தலையில் கருதுக் கட்டோடு ஜாக்கிரதையாக அடி எடுத்து வைத்து நடக்க வேண்டும். தவறி கட்டைத் தண்ணீருக்குள் போட்டுவிட்டால் அவ்வளவுதான். கருதுக்கு சொந்தமானவர்களிடம் வசவு வாங்கி முடியாது. அதோடு அந்த ஈரக் கட்டையே தலையில் தூக்கி வைப்பார்கள். ஈர உடை, ஈரக்கட்டு - கழுத்து ஒடியாததுதான் பாக்கி. நடக்க முடியாமல் இடுப்புக்குள் வலி எடுக்கும். குறுக்கே வரப்பு, வாய்க்கால் வந்துவிட்டால் ஏறவும் முடியாது, தாண்டவும் முடியாது. அந்த வரப்பும் வாய்க்காலும் பெரிய மலையாகத் தெரியும். அடிவயிற்றுக்குள் திகில் பரவ நெஞ்சுக்குள் பயமும் பதமுமாக உடம்பெல்லாம் வேர்த்துக்கொட்டும். உப்பு நீர் கண்ணுக்குள் வடிந்து பார்வையை மறைக்கும். இரண்டு கைகளும் தலைக்கட்டை இறுகப் பிடித்திருப்பதால் வியர்வையைத் துடைக்க முடியாது.

அந்த மாதிரிதான் கருதறுப்பு வேலையும். கருதறுப்பு வேலை முடிய இரவு ஏழு மணி எட்டு மணிகூட ஆகிவிடும். கருதறுப்புக் கூலி கொடுப்பதோடு கடைக்காக மூன்று கூட்டுக்கை நெல் கொடுப்பார்கள். இரண்டு கை நிறைய நெல் அள்ளி மூன்று முறை போடுவார்கள். கூலி நான்கு படி. உபரியாக இந்த நெல் வேறு. மனதிற்குள் சந்தோசம் பொங்கும். வேலை செய்த அலுப்போ. உடம்பு அரிப்போ எதுவுமே தெரியாது. கூட்டுக்கை நெல்லை கடையில் போட்டு தின்பண்டங்கள் வாங்கித் தின்றுக்கொண்டே பாட்டும் கதையுமாக வீடு வந்து சேருவோம்.

புரட்டாசி மாதம் வந்துவிட்டால் போதும். முதல் சனி, இரண்டாவது சனி என்று ஐந்து சனிக்கிழமையும் எங்கள் ஊரில் இருக்கும் வயசுப் பெண்கள் எல்லோரும் ஸ்ரீவில்லிப்புத்தூர் அருகே திருவண்ணாமலை கோயிலுக்குப் புறப்பட்டு விடுவார்கள். நாங்கள் சும்மா இருப்போமா? அவர்களுக்கு முன்னால் போய் நிற்போம். இந்த ஐந்து கிழமையும் எல்லோருடைய வீட்டிலும் தவறாமல் தோசைக்குப் போட்டிருப்பார்கள். சோளத்தோசைதான்.

அன்றைய தினம் மூன்றாம் சாமத்திற்கே ஊர் கலகலத்துப் போகும். எல்லா அக்காக்களும் எழுந்து ஒவ்வொருவரையும் எழுப்பிக் கொண்டும் புறப்பட்டுக்கொண்டும் இருப்பார்கள். தோசை சுடும் விளக்கெண்ணெய் வாசம் வீடு முழுக்க மணக்கும். அவசர அவசரமாக எல்லா வேலைகளையும் அந்நேரத்துக்கே முடித்துவிட்டு பித்தளை, ஈய தூக்குப் போணிகளில் தோசைகளை வரிசையாய் அடுக்கும்போது சூரியன்

கிழக்குத் திக்கமாக புரட்டாசியின் குளிர்ந்த மேகத்தினுள் புறப்பட்டு விடுவான்.

எங்கள் ஊரிலிருந்து திருவண்ணாமலை பதினைந்து கிலோ மீட்டர் தூரத்திலிருந்தது. மொட்டைமலை, வாடிமலை என்று மலையை ஒட்டிய வண்டிப்பாதையில் நாங்கள் நடப்போம். பாதையின் இருபுறமும் ஆவாரம் பூக்கள் சில்லெடுத்து மவுந்து போயிருக்கும். எங்களுடன் வரும் எல்லா அக்காக்களும் இந்தப் பூக்களை கவுரும்கப்புமாகப் பறித்து ஒன்றோடு ஒன்று கோர்த்து கழுத்தில் சங்கலியாக, கையில் வளையலாகப் போட்டுக் கொள்வார்கள். காது வளர்த்தவர்கள் ஒரு கொத்தைப் பிடுங்கி 'பாம்படம்' போல் தொங்கவிட்டுக் கொள்வார்கள். பிறகு எல்லாருடைய தலையிலும் ஆவாரம்பூ சொருகல்தான். எங்கள் கழுத்திலும் கையிலும் பூட்டிவிடுவார்கள். கோயிலுக்குப் போகும் நாங்கள் மஞ்சள் பூத்துக் கிடப்போம்.

ஒருமுறை திருவண்ணாமலை கோயிலுக்கு நடந்து சென்றோம். ஒரு சின்னப்பெண் பெரிய ஓலைச்சுமையோடு எங்களுக்கு எதிரில் வந்து கொண்டிருந்தாள். ஓலைக்கட்டு அவள் பார்வையை மறைத்ததால் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வழி கேட்டாள். அந்தப் பெண்ணின் கண்களில் கண்ணீர் தளும்பிக்கொண்டிருந்தது. எல்லோரும் பாதையை சொல்லி விட்டு நடந்தார்கள். எனக்குப் பாவமாக இருந்தது. நான் அந்தப் பெண்ணி டமிருந்து ஓலைச்சுமையை வாங்கிக்கொண்டேன். அவள் காட்டிய இடத்தில் சுமையை இறக்கியதும் அந்தப் பெண் என் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

திரும்பி நான் தனியாக கோயிலுக்கு வந்த உடன் என்கூட வந்தவர்கள் எல்லாம் சிரித்தார்கள். ஓலைக்கட்டைப் போட்டதோட ஏன் வந்தே? அப்படியே அவளுக்கு தண்ணி எடுத்து, வெங்கலப் பாத்திரம் கழுவி, சோறு ஆக்கி வச்சுட்டு வரலாமில்ல என்றார்கள். நான் எதுவும் பேசவில்லை. சில சந்தோசங்களும் சில துன்பங்களும் நாமே அனுபவிக்கத்தான்.

ooo

எனது பெரியப்பா மகள் பெயர் மணிக்கொடி. அவர்கள் ஸ்ரீவில்லிப் புத்தூரில் இருந்தார்கள். இவள் எட்டாவது படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கும் என் வயதுதான். ஆனால் அவள் காடு கரை என்று எங்கும் போனதில்லை. அடிக்கடி விருந்தாளியாக எங்கள் ஊருக்கு வருவாள். அவள் அக்காவை எங்கள் ஊரில்தான் கட்டிக் கொடுத்திருந்தார்கள். ஒருமுறை அவள் வந்திருந்தபோது நான் புல் பிடுங்குவதற்காக புறப் பட்டேன். அவளும் என் கூட புல் அறுக்க வருவதாகச் சொன்னாள்.

வேண்டாமென்று சொல்லிப் பார்த்தேன். அவள் கேட்கவில்லை; கூடவே வந்துவிட்டாள்.

நாங்கள் வடக்குப் பக்கமாகப் போனோம். அங்கே சோளக்காடுகள் எல்லாம் பச்சை முகம் காட்டியவாறு செழித்துக் கிடந்தன. சோளக் கருதுகள் விளைந்தும் விளையாமலும் பாலடைத்துப் போய் இருக்க நான் மணிக்கொடியை புல் அறுக்கச் சொல்லிவிட்டு கொஞ்சம் தள்ளி அறுக்கப் போய்விட்டேன். இவள் சோளப் பயிரை புல் என்று நினைத்து ஒரு கட்டு அறுத்து விட்டாள். நான் வந்து பார்த்ததும் எனக்கு பயம் பிடித்துக் கொண்டது.

என்ன மணி, இப்படி அறுத்து இருக்கே என்று கேட்டதற்கு அவள் நீதான அறுக்கச் சொன்னே என்று என் மீதே குற்றத்தைத் திருப்புகிறாள்.

யாரோ வரும் காலடியோசை கேட்டது. அவ்வளவுதான், அவளை வா என்று சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தேன். அவள் பாவாடையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு பதறாமல் கரையிலிருந்து கீழே இறங்கினாள். வந்தது காட்டுக்காரர்தான். விளைந்த சோளக்கருதை அறுத்தால் பார்த்து விட்டு யாரும் சும்மா இருப்பார்களா? சோளப் பயிர்களை அள்ளி ஒரு கட்டாகக் கட்டி அவள் தலைமீதே வைத்து ஊருக்குள் கூட்டி வந்து விட்டார்.

நான் வடக்குப் பக்கமாக ஓடினேன். அங்கேதான் ஏழு மாமாக் களின் பிஞ்சைகளும் வரிசையாக இருக்கின்றன. எப்போதும் ஏதாவது ஒரு பிஞ்சையில் வேலை செய்துகொண்டு இருப்பார்கள். நானும் வேலைக்கு வந்ததுபோல் களை எடுக்க ஆரம்பித்தேன்.

என்ன பாரதா, உன் அம்மாகிட்ட கள வெட்ட பாரதாவ வரச் சொல் லுன்னேன். அவ வேலையிருக்கின்னு சொல்லிட்டாளே என்று அத்தை கேட்டாள்.

அம்மாதேன் அத்த போவச் சொன்னா என்று பொய் சொல்லி விட்டேன். ஆனால் ஊருக்குள் என்ன நடக்கிறதோ என்று பதட்டமாய் இருந்தது.

மணிக்கொடியை கூட்டிப் போனவன் ஊர் நாட்டாமையிடமே போய்விட்டான். வழியில் எனது அத்தைமகள் வீரலட்சுமி காட்டிலிருந்து வந்திருக்கிறாள். அந்தப் பிஞ்சைக்காரன் அவளும் இவளும் சேர்ந்துதான் சோளக் கதிரை அருத்து நாசமாக்கினார்கள் என்று சொல்லி சாமிக்கு முன்னால் சத்தியமும் செய்துவிட்டான்.

மணிக்கொடி ஏங்கி ஏங்கி அழுதிருக்கிறாளே தவிர என்னைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை. அந்த அளவுக்குப் பயந்துவிட்டாள்.

பாலடைத்த சோளப்பயிர் வாடிக் கிடப்பதைப் பார்த்த ஊர்க் காரர்கள், அப்பவும் ரெண்டு பேரும்கூடி வட்டுலுக்கு வந்த கஞ்சியவில்ல

நாசமாக்கிருக்காக! அப்பவும் மாடு காப்பாத்த ஒருத்தன் பிஞ்சையில வச்ச வெள்ளாமையவா நாசம் செய்வாக என்று பேசியிருக்கிறார்கள். வீரலட்சுமி நான் புல்லுக்கே போகவில்ல என்று அழுதிருக்கிறாள். பிறகு ஊர் நாட்டாமைதான் எப்படியோ பிஞ்சைக்காரனை தன்னக்கட்டி கெஞ்சிக்கதறி ஒருவழியாக அனுப்பி வைத்திருக்கிறார்.

எனக்கு இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரியும். அதனால் மாமா பிஞ்சையைப் பார்த்துப் போய்விட்டேன். பொழுது அடைய நான் வீட்டுக்கு வந்தேன்.

ஏண்டி உன்ன புல்லுக்குப் போவச் சொன்னா எதுக்காவ உன் மாமானுக்கு களவெட்ட போனே என்று அம்மா கேட்டாள்.

நான் எங்க போனேன்? எம்பாட்டுக்கு வடக்குப் பிஞ்சயில புல்லு புடுங்கிக்கிட்டு இருந்தேன்; அத்த வந்து கையோடு கூட்டிட்டு போயிட்டா என்று இன்னொரு பொய்யைச் சொன்னேன்.

பிறகு நாங்கள் எல்லோரும் கூடி இருந்தபோது சோளப் பயிரை அறுத்துவிட்டு மணிக்கொடியும், வீரலட்சுமியும் பிஞ்சைக்காரனிடம் பட்ட பாட்டை சொன்னபோது நான் அப்புராணியாக கேட்டுக் கொண்டிருந்தேன்.

ooo

எங்கள் ஊரில் வைகாசி மாதம் ஒரு செவ்வாயில் பொங்கல் முடிந்துவிட்டால் மறு செவ்வாயிலிருந்து முப்பளம் ஆரம்பமாகி விடும். இந்த முப்பளம் பட்டாளத்துக்காரக முப்பளம், பொம்பளை முப்பளம், ஆட்டுக்காரக முப்பளம் என்று இப்படியே நாலைந்து செவ்வாய் வரை நீண்டுகொண்டே போகும்.

முப்பளத்தன்று காலையிலேயே ஒரு கட்டுப்புல்லை, நாங்கள் கொண்டுவந்து போட்டுவிட்டால்போதும். பிறகு எங்களுக்கு வேறு வேலை கிடையாது. எங்கள் இஷ்டத்திற்கு குளத்திற்கு குளிக்கப் போகலாம்; விளையாடலாம். அதோடு அன்று இரவு வில்லடி, சாமி ஆட்டம் என்று வேடிக்கை வேறு நடக்கும்.

அதனால் நானும் சரசுவும் நிலம் தெளியுமுன்பே புல்லுக்குப் புறப் பட்டு வடக்குத் திக்கமாக வந்தோம். அங்கே நாய்க்கர் காடுகள்தான் அதிகமாக இருக்கும். நாங்கள் சோளக்காட்டில் புல் அறுத்து கட்டுக் கூட கட்டிவிட்டோம். சோளக்காட்டுக்கு இரண்டு பிஞ்சை தள்ளி கரும்புக் காடு. கரும்பு நன்றாக விளைந்து செழித்துக் கிடந்தது. அதைப் பார்த்ததும் சரசு சொன்னாள். பாரதா, இதில ஆளுக்கு ரெண்டு கரும்ப ஒடிச்சிட்டுப் போவோம். அப்பத்தேன் வில்லடிக்கு முன்னால உக்காந்துக்கிட்டு கரும்ப தின்னுக்கிட்டு கேக்கலாம்.

மூவாயிரம் பொன் பெறுமாம்
மூக்குத்தியாம் வைரக்கல்லாம்
காதில ஒரு லோக்கடிய மாட்டினா
அவ ராதாருக்குமணி
வளையலிட்டு நீட்டின்னா - [illegible] விடிய, விடிய உறக்கம் வராம கேக்கலாமின்னு [illegible]னக்கும் கரும்பு மீது ஆசை வந்துவிட்டது.

நாங்கள் உடனே கரும்புக் காட்டுக்குப் போனோம். கரும்பை ஒடிப்பது ரொம்ப லேசு. நுனிக்கரும்பைத் தொட்டு இலேசாய் வளைத்தால் போதும், சடாரென்று ஒடிந்துவிடும். இரண்டு கரும்பை ஒடித்து ஒருத்தியின் கட்டில் வைத்துக்கட்டி அவளுக்கு கட்டைத் தூக்கிவிடுவது என்றும், இன்னொருத்தி கனமில்லாத புல்லுக்கட்டைத் தானாக தூக்கிக் கொள்வது என்றும் பேசி முடித்தோம். பிறகு இரண்டு கரும்பை ஒடித்து அதன் தோகைகளை ஆய்ந்துவிட்டு அதை சின்னச்சின்னதாக வேறு ஒடித்து கட்டுக்குள் வைத்துக் கட்டிக்கொண்டோம். ஏதோ பெரிய காரியத்தை செய்துவிட்டதுபோல் எங்களுக்கு சிரிப்பாணி அள்ளியது. கட்டைத் தூக்கப் போகும்போது புதூர் ரங்கசாமி வந்துவிட்டான். எங்களை விட அவன் நாலு ஐந்து வயது மூத்தவனாயிருப்பான். எங்களுக்கு அவன் செய்யும் தொல்லைகள் சொல்லி முடியாது. புல் அறுத்து குமித்திருந்தால் அள்ளிக்கொண்டு போய் விடுவான். நாங்கள் கிணற்றுக்குள் குளித்துக்கொண்டிருந்தால் மேலே இருந்து குதிப்பான். களவாணிப்புல் பிடுங்கிக்கொண்டிருந்தால் காட்டுக்காரர்களைக் கூட்டி வந்துவிடுவான். அவன் வேறு சாதிக்காரன்.

நாங்கள் என் அம்மாவிடம் இப்படி எங்களிடம் சேட்டை பண்ணுகிறவர்களைப் பற்றிச் சொன்னால் அவள், ஆமா உங்க பொழப்ப பத்தி தெரியாதாக்கும்! அந்தமான பொன்னும்கண்ணுமா அடங்கி இருப்பேகளாக்கும்! ஆடுகாலிக் கழுதைக, அப்புராணி அவன நீங்க என்ன பாடு படுத்துனீகளோ... அவனாவா உங்ககிட்ட சேட்ட செய்தான் என்று சொல்லிவிடுவாள்.

அவனைப் பார்த்ததுமே எங்களுக்கு வயிறு கலங்கிவிட்டது. ரங்கசாமி வந்ததே சரியென்று சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு எங்கள் கட்டைத் தூக்கிப் பார்த்தான். பிறகு கட்டு என்ன சவமா கனக்கு? கரும்ப ஒடிச்சி வச்சிருகேளாக்கும்! இன்னைக்கு உங்கள விடப் போறதே இல்ல. நீங்களா கட்ட தூக்கிட்டு எங்கூட எங்க ஊருக்கு வாரீகளா? இல்ல நானே ஒரு கட்ட தூக்கிட்டுப் போவட்டுமா? என்றான்.

'கண்ணுக்குள்ள இருக்க கிட்ணனுக்கு' பொதுவா சொல்லுதோம்; கரும்ப ஒடிக்கவே இல்லை என்று நாங்களும் சத்தியம் செய்தோம்.

உங்க களாணித்தனம் எனக்கு தெரியாதாக்கும். ம்... கட்ட தூக்குங்க என்றான்.

இந்த மாதிரி சமயங்களில் பழக்கம் காரணமாகவோ, என்னமோ எங்கள் கண்கள் கை சொடுக்கும் நேரத்தில் ரகசியம் பேசிவிடும்.

நான் உடனே, கிணத்துக்குள்ள தண்ணி குடிக்கப் போன சரோசாவும் வந்துரட்டும்; மூணு பேரும் சேந்து வாரோம் என்று சொன்னேன்.

அவ வேற வந்துட்டாளா? ஆக்கம் பொங்கும் என்று சொல்லிக் கொண்டு கமலை வழியாகத் தலையை நீட்டி கிணத்துக்குள் எட்டிப் பார்த்தான். அந்த நிமிஷம் எங்களுக்குப் போதும். இரண்டு பேரும் சேர்ந்து அவனை கிணற்றுக்குள் தள்ளிவிட்டுவிட்டு கட்டைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வேறு பிஞ்சைக்கு வந்து அடர்ந்த குருதவாலிக் காட்டுக் குள் கட்டை ஒளித்து வைத்தோம். பிறகு அப்புராணிகளாக வரப்பில் புல் அறுத்துக்கொண்டு சாவகாசமாக வீட்டிற்குப் போனோம்.

அன்று பொழுது மசங்கும் நேரம். ரங்கசாமி அவன் அப்பா நாராயணசாமி நாய்க்கரோடு எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டான். என் அம் மாவிடம் அவன் அப்பா நாங்கள் அவனை கிணற்றுக்குள் தள்ளியதைப் பற்றி சொல்லிக்கொண்டிருந்தார்.

எம் மவ புல்ல, புளிச்சியத்தேன் களவாம்பா, இப்படியெல்லாம் செய்யமாண்டாளே என்ற அம்மா என்னைக் கூப்பிட்டுக் கேட்டாள்.

நான் அப்புராணியாக பரக்கப் பரக்க விழித்துக்கொண்டு, அய்யய்யோ! இன்னைக்கு நாங்க அவுக பிஞ்ச திக்கம் போகவே இல்ல. கிழக்க நம்ம பிஞ்ச பக்கந்தேன் போனோம். வேண்ணா சரசு, விசயா, வசந்தா அம்புட்டு பேரயும் கூப்புட்டு கேளு என்று சொல்லிவிட்டேன்.

என் அம்மாவும், பாத்தீகளா... உங்க பையனுக்கும் இவளுக்கும் எதுவும் சண்டகிண்ட வந்துருக்கும். அதேன் இப்படி பையன் உங்ககிட்ட பொய் சொல்லி இருக்கு என்றவள் என்னிடம் காசு கொடுத்து இரண்டு சோடா வாங்கிவரச் சொல்லி அவர்களுக்குக் கொடுத்தாள். சோடாவை குடித்துக்கொண்டே அவன் அப்பா என் அம்மாவிடம் வேறு விஷயங்கள் பேசிக்கொண்டிருக்க ரங்கசாமி என்னைக் கடுகடுவென்று பார்த்தான். நான் அவனை அழுத்தம் காட்டிக்கொண்டே அவன் கையிலிருந்த சோடா பாட்டிலை வாங்கினேன்.

அன்று இரவு வில்லடிக்காரியின் முன்னால் நானும் சரசுவும் உக்காந்திருக்கும்போது எங்களுக்கு கரும்பைத் திங்கக்கூட நேரமில்லை. ரங்கனைப் பற்றி எங்கள் சேத்திக்காரர்களிடம் சொல்லிச் சொல்லிச் சிரித்தோம்.

திருச்சுழி முத்தையா கோயில் கொண்டநேரி கம்மாயில் இருக்கிறது. குளம் கெத்தளிக்கப் பெருகிவிட்டால் அந்தக் குளத்து வயல் காட்டில் மட்டும் ஆளுக்கு இரண்டு மூடை நெல்லுக்கு மேல் கருது அறுத்துவிடலாம். நெல்லும் கையில் அள்ளினால் தெறித்துப் போவது போல் அப்படி ஒரு விளைச்சல் விளைந்திருக்கும். கோயிலுக்கு சற்று தூரத்தில்தான் களமும் இருந்தது. நாங்கள் கருதுக்கட்டோடு கொஞ்சமாய் கோயிலை ஒட்டிப் போனால் கூட சரி, அன்னக்கொடி அம்மிக்கு கோவம் எக்கச்சக்கமாய் வரும்.

ஏண்டி சக்களாத்திகளா! முத்தய்யா பொதையல்ல விழுந்து சீரழிஞ்சி சீப்பட்டு சாவப் போறீகளா? 'துட்டனக் கண்டாதூர விலகின்னு எட்டிப் போங்கடின்னு' நாயா கத்திக்கிட்டு இருக்கேன், எவளாச்சிலும் கேக்கீகளா? என்று வஞ்சிகொண்டே இருப்பாள்.

ஒரு நாள்களத்தில் கட்டைக் கொண்டுவந்து போட்டுவிட்டோம். இன்னும் பிணையலுக்கு மாடு வரவில்லை. அதனால் சாவகாசமாக சாப்பிட உட்கார்ந்தோம். இவ்வளவு நேரமும் உடம்பை எரித்த வெயிலுக்கு வேப்பமரக் காற்று ரொம்ப சுகமாயிருந்தது.

கதிர் அறுத்த வயல்களினூடே இரை தேடி வெண்பஞ்சுகளாக அலைந்தன கொக்குகள். நாங்கள் மரக் கொப்புகளிலிருந்த தூக்குச் சட்டிகளை எடுத்து ஆவலோடு திறந்தோம். புளித்த கம்மங்கஞ்சி, சோளக் கஞ்சியின் வாசனையோடு, வெஞ்ஞனத்துக்காக சுட்ட கருவாட்டின் கருகல் மணமும் ஒட்டிக்கிடந்த வயிற்றுப் பசிக்கு நாக்கில் ஒட்டிக் கொள்ளும் தேனாக இனித்தது.

எப்போதும் வேலைமேல் குறியாக கடுகடுவென்று இருக்கும் அன்னக்கொடியின் முகம் கூட வெற்றிலைச் சிவப்பில் பூரித்த தாய்மை யோடு கனிந்திருக்க வேலம்மாதான் பேச்சை ஆரம்பித்தாள்.

எதுக்கம்மி திருச்சுழி முத்தையா கோயிலுப் பக்கம் ஒத்த எட்டு வச்சாக்கூட வெளமெடுத்துப் போயி சண்டைக்கு வார என்று கேட்டாள்.

அடியே, அவன் பொல்லாதவன்டீ... சின்னஞ்சிறுசுன்னு வெடலப் புள்ளைகள கண்டா போதும். வெள்ளேம்மாள அப்புனாப்புல அப்பிக் கிடுவான்ல என்று சொல்லவும் நாங்கள் எல்லோரும் அது யாரு வெள் ளேம்மா? பொணய மாடு வரந்தண்டியும் அந்த விவரத்த சொல்லும்மி என்று படுத்த அன்னக்கொடி ஆரம்பித்தாள்.

விடியமின்ன எந்திரிச்சி தூத்து தொளிச்சி கோலத்தப் போட்ட வெள்ளையம்மா தண்ணி எடுக்கதுக்காக கொல்லப்புறத்துக்கு வந்தா. வந்தவ அப்படியே திகப்பூண்டுல மிதிச்சாப்பல நின்னுட்டா. பளபளன்னு விடியமின்ன கல்லெறிபட்ட காக்கா கணக்கா வீட்ட வுட்டு

ஓடுத அவ அண்ணங்க ஆறு பேரும் ஒரு மூலையில குக்கிக் குறுவிப் போயி உக்காந்து கிடக்க மூத்தவன மட்டும் காணம்.

இவ அவுககிட்ட வந்து, என்னண்ணே இப்படி மொகத்தில 'அருளு' இல்லாம உக்காந்திருக்கீகன்னு கேட்டா. மூத்த அண்ணன மட்டும் எங்கே காணோமின்னு இவ கேக்கா. என்ன தாயீன்னு கேட்டுக் கிட்டே அங்கிட்டுருந்து மூத்தவன் கூட்டுக் கையும் கையில அரளிக் காயுமா வரான். அண்ணன் கையில அரளிக்காயப் பாத்ததும் வெள்ளை யம்மாளுக்கு ஈரக்கொலயே ஆடிருச்சி. எதுக்கண்ணே அரளிக்காயப் புடுங்கிட்டு வாரீகன்னு கேக்கவும் மூத்தவனுக்கு கண்ணு கலங்கிடுச்சி.

தாயீ, நாங்க இனிம உசுரோட இருக்க முடியாது. அப்படி இருக் கணுமின்னு நெனச்சாலும் இன்னைக்கு ஒத்தப் பொழுதுதேன் இருப் போம். நாளைக்கு ஜமீந்தாரு இந்த ஊரு முச்சந்தியில வச்சி ஊரு சனங் களுக்கு முன்னால உங்கண்ணமாரு ஏழு பேரயும் கழு ஏத்திக் கொல்லப் போறாரு. ஊரு சனங்க முன்னால அவமானப்பட்டு அசிங்கப்பட்டு சாவறதவிட இன்னைக்கே இந்த அரளிக்காயத் தின்னு அரவமில்லாம எங்க உசுர மாச்சிக்கிடதுன்னு முடிவெடுத்துட்டோம். அண்ணங்க எல்லாம் செத்துப் போனாங்களேன்னு நீ நொந்து நொறுங்கிப் போவாத தாயீ. உனக்கின்னு இன்னி ஒருத்தன் பெறக்கப் போறதில்ல. எங்கிட்டோ முந்தியே பெறந்திருப்பான். இந்த அண்ணங்க உன்ன வெம்பரப்பா விட்டுட்டுப் போவல. ஆண்ட பண்டம் அறுவதும் உனக்கு சம்பாரிச்சி வச்சிட்டுதாம் போறோம். உம் மனசுக்குப் புடிச்சவனுக்கு வாக்கப்பட்டு நீரும் நிலமும் பொருந்துனாப்பில இருத்தா. செத்துப்போன எங்கள நெனச்சி அழுதுக்கிட்டு இருக்காத அப்படீன்னு மூத்தவன் சொன்னான்.

அண்ணே, நீங்க எதுக்காவ ஒண்ணுபோல சாவப்போறீக? விவரத்த சொல்லுங்கன்னு வெள்ளையம்மா கேட்டா.

நாங்க என்னாத்த தங்கச்சி சொல்லுறது. போன அமாசையிலிருந்து முந்துன அமாவாச வரைக்கும் ஜமீன் கொடிக்கால்ல வெத்தல காணாமப் போவுது. நாங்களும் இன்னைக்கு கள்ளனப் புடிச்சிருவோம், நாளப் புடிச்சிருவோமின்னு எம்புட்டோ கண்ணுங்கருத்துமா ராவிடிய முழிச்ச மான கொடிக்கால சுத்திச் சுத்தி தேடிக்கிட்டுத்தேன் இருக்கோம். ஆனா அந்தக் கள்ளன் என்ன மாயந்தேன் படிச்சிருக்கானோ, இல்ல மந்தரந்தேன் படிச்சிருக்கானோ! முழிச்ச முழிய அப்படியே தோண்டுனாப்பல எப்படியோ களாண்டுக்கிட்டுப் போயிருதான். இப்படியே நாளைக்கு நாளைக்குன்னு நாள கடத்திக்கிட்டு இருந்தா ஜமீந்தாரு எத்தன நாளைக்குத்தேன் பொறுப்பாரு. அதேன் நேத்து எங்கள கூப்புட்டு வச்சிக் கிட்டு நாள ஒரு பொழுதுதேன் உங்களுக்கு மாப்பு. நாள ராத்திரியும் நீங்க கள்ளனப் புடிக்கலேன்னா நாளநின்னு உங்கள கழுவுல ஏத்திருவேன்னு

சொல்லிட்டாரு. இத்தன நாளும் நாங்க புடிக்காத கள்ளன், இன்னைக்கா புடிபட்டுரப் போறான்? அதேன் இப்படி ஒரு முடிவுக்கு வந்தேன்னு சொன்னான்.

வெள்ளையம்மா தன்னோட அண்ணங்க ஏழு பேரு கிட்டவும், நீங்க சாவுறதுன்னு முடிவு எடுத்துட்டீங்க; இந்த தங்கச்சிக்கு ஒரு சத்தியம் பண்ணிக் கொடுத்துட்டு சாவுங்கன்னு சொன்னா.

சொல்லுத்தா என் தங்க முடியா, நீ கேளு... எதுன்னாலும் நாங்க வாக்கு மாற மாண்டோமின்னு ஏழு பேரும் சத்தியம் பண்ணிக் கொடுத் தாங்க.

அண்ணே, இன்னைக்கு ஒருபொழுது கொடிக்கா காவலுக்கு என்னை அனுப்பி வைங்க! நானு அவனப் புடிச்சிருதேன். அப்படி அவன நானு புடிக்கலேன்னு வச்சிக்கோங்க. நானும் உங்க கூடவே சேந்து என் உசுர மாய்ச்சிக்கிடுதேன். நீங்க இல்லாத இந்த தேசத்திலெ எனக்கு மட்டும் என்ன இருக்குன்னு சொல்லவும் அவளோட ஏழு அண்ணன்களும் பதறித் துடிச்சிப் போனாக.

என்ன தாயீ சொல்லுதே? ஆம்பளைக எங்களாலயே புடிக்க முடிய லயே. நீ என்னத்த புடிப்பே! அதுவும் இப்படி உருமாட்டி வேல செஞ்சு களாங்குதவன் அப்புராணி சப்புராணியா இருக்கமாண்டான். எல்லாத் துலயும் தெளியக் கடஞ்சவனாத்தேன் இருப்பான். உன்னயும் பாழாக்கி ருவான்.

அண்ணே, நீங்க எனக்கு சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கீக. அதையும் இதையும் நெனச்சி மறுவி தவிக்காம தெம்பா என்ன அனுப்பி வைங்க. நானு அவனப் புடிச்சிக் காமிக்கேன்னு சொல்ல அண்ணன்களும் அவ சொல்ல தட்டமாண்டாம சரின்னு சொல்லிட்டாக.

பொழுது இருட்டிருச்சி. வெள்ளையம்மா நல்லா விளஞ்சி வாச மேறிப் போயிருந்த மஞ்சக் கெழங்க எடுத்து அம்மியில வச்சி ஒரு வழிக்கு நாலு வழி மஞ்சள அரச்சி உச்சில இருந்து உள்ளங்காலு வரைக்கும் தேய்ச்சிக் குளிச்சா. பெறவு அவ மொழிங்காலத் தொட்டுக்கிட்டு இருந்த முடிய சீவிச் சிக்கெடுத்து அள்ளிச் சொருவு கொண்டையாப் போட்டா. கொண்ட நிறைய மல்லியப்பூ, மரிக்கொழுந்து, பிச்சின்னு சொமக்க மாண்டாம பூவ வச்சிக்கிட்டா. பொதுபொதுன்னு மணக்கிற மஞ்சனைய அள்ளி கழுத்து இடுக்கு, கை இடுக்கின்னு அம்புட்டும் தேச்சா. உதடு ரெண்டும் வெத்தல பாக்கு சுண்ணாம்பு கலவையில செவந்து நத்தமா கெடக்கு. வெள்ளாவியில மணத்த 'எள்ளுக் கருக்குச் சேலய' எடுத்து பச்சரிசிக் கொசுவம் வச்சி உடுத்திக்கிட்டா. இடுப்புல வங்கிய எடுத்து மறவாம சொருவுனவ அண்ணனன்கள கூப்புட்டா.

அண்ணே, நானு கொடிக்காலுக்குப் போறேன். அந்த கள்ளனப்

புடிச்சிட்டேன்னா முழங்க ஒரு குலவய போடுவேன். நீங்க ஓடியாந் துருங்க. அப்படி என்னால புடிக்க முடியல, ஏதாவது ஒரு அதங் கொதமான வேல நடந்துருச்சின்னு வைங்க - உங்க தங்கச்சி கொடிக்கா தோட்டத்தில பெணமா கெடப்பா. தூக்கிப் பொதச்சிட்டு நீங்க சாவுங் கன்னுட்டு வெளிய வந்தா.

அன்னைக்குப் பாத்து பௌரணைக்கு ரெண்டு நா பிந்தின நிலா. சும்மா சீம்பாலா அடிக்கு. சில்லறயக் கொட்டி சில்லறய அள்ளலாம்; அப்படி வெளிச்சத்தக் கொட்டுது. கொடிக்காலுக்கு ஒரு சின்ன தொண்டு வாசல் இருக்கு. இவ அந்த வழிதேன் வந்தா. சுத்திலும் பாத்தா. ஒருத்தரக் கூடக் காணம். கொடிக்காலுக்குள்ள நல்லா நிலா வெளிச்சம் விழுற இடமா பாத்து நின்னுக்கிட்டா.

வழக்கம்போல கள்ளன் வந்தான். வேலி தாண்டி வெத்தல தோட்டத்தில மொளஞ்சதுமே பூவாசமும் பொம்பள வாசமும் அவனத் தாக்கிருச்சி. அம்புட்டுத்தேன், அவனுக்கு தான் களாங்க வந்தோமிங்கிற விசயமே மறந்து போச்சு. வாசம் எங்கிட்டு இருந்து வருதுன்னு மோப்பம் பிடிச்சிக்கிட்டே போனான். அப்போ குளுந்த மேகாத்துல ஒரு பாட்டுச் சத்தம் இவன் காதுல குயில் கூவுன மாதிரி வந்து விழுவுது.

சங்கம் புதையாம்
கருங்கிளி முத்தய்யாவுக்கு
சாஞ்சதொரு வேப்பமரம்
சரசமாட புன்னமரம்
வெத்தல ஆயவந்த முத்தய்யா
உன் வேட்ட இன்னும் தீரலயோ...

இந்த பாட்டக் கேட்ட உடனே அந்தத் திக்கம் வந்த கள்ளன் வெத்தலை தோட்டத்துக்குள்ள நிக்கிற வெள்ளையம்மாளப் பாத்ததுதேன் அப்படியே கிறங்கி கிறுகிறுத்துப் போனான். அந்த தோட்டத்து வெத்தலையோட வெத்தலயா அவளும் ஒரு கொழுந்து வெத்தல கணக்கா இருக்கா. அந்த நிலா வெளிச்சத்துக்கு பச்சத் தளிரு கணக்கா அப்படியே துவண்டுபோயி நிக்கா. சும்மாவே அவன் பொம்பள ஆச புடிச்சவன். இவள விடுவானா? அவகிட்ட போனான்.

இவன் வர வர வெள்ளையம்மா கொஞ்சம் கொஞ்சமா நவண்டு நடுதோட்டத்துக்குள்ள வந்தவ அவனப் பாத்து மெல்ல சிரிச்சா. மருதாணியில பூத்து செவந்து கிடந்த தன் கையவும் நீட்டுனா. இவன் அப்படியே ஆவிசேந்து அவளக் கட்டிக்கிட்டான். வெள்ளையம்மா நொட்டாங்கையால அவன அணச்சமான சோத்துக்கையால இடுப்பில இருந்த வங்கிய எடுத்து அவன் நெஞ்சில நாலஞ்சு குத்துக் குத்துனா. அவ்வளவுதேன், ஆறடி வேங்கமாதிரி இருந்த அவன் வேரத் தறிச்ச மரங்

கணக்கா அவளயும் சேத்தமான கீழே சாஞ்சான். அப்ப வெள்ளையம் மாளோட குலவச்சத்தம் அந்த சில்லா எட்டும் மட்டும் கேக்க அவ அண்ணந்தம்பிக ஓடி வந்தாக. அவள இறுக்கிப் பிடிச்சமான ரத்தக் கொளமா விழுந்து கிடக்கான் முத்தையய்யா. உசுரு போயிருச்சு. அவம் பிடிச்ச பிடியில வெள்ளையம்மா உசுரும் போயிருச்சு.

அவள அவன்கிட்ட இருந்து பிரிக்க முடியல. அதுனால ரெண்டு பேரையும் சேத்தே பொதைச்சாகளாம். ஆனாலும் முத்தையாவுக்கு இன்னும் பெண்ணாசை விடாம தேடிக்கிட்டே இருக்கானாம்.

ஏ... அன்னக்கொடி! பொணய மாடு வர சத்த தேரமானா அந்த மானக்கி கதை போட உக்காந்திருவயே... எந்தரிச்சி வாங்கத்தா என்று வயல்காரர் அவயம் போட்டார்.

திருச்சுழி முத்தையாவை உற்றுப் பார்த்துக்கொண்டே எழுந்து போனோம்.

ஸ

எங்கள் ஊரில் கடைகளே அப்போது இல்லாமல் இருந்தது. எந்தப் பொருள் வாங்க வேண்டி இருந்தாலும் சத்திரப்பட்டிக்குத்தான் போக வேண்டும். விருந்தாளிகள் வந்துவிட்டால் ஒரு கடுங்காப்பி போட்டுக் கொடுக்க, பொறிகடலை வாங்கித் துவையல் அரைக்க என்றாலும் சரி, சத்திரப்பட்டிக்குத்தான் ஓட வேண்டும்.

அந்த சமயம் பார்த்து எங்கள் ஊருக்கு ஒருவர் கடை போட வந்தார். அவர் முஸ்லீம். அவர் கடை போட வந்ததை நினைத்து எல்லோரும் சந்தோசப்பட்டார்கள். அதனால் அவரை வரவேற்று அவருக்கு வேண்டிய உதவிகளை பெரியவர்கள் செய்ததோடு எங்களையும் செய்யச் சொன்னார்கள். அந்தக் கடைக்காரரை பெரியவர்கள் மாமூ என்று அழைப்பார்கள். எங்களை மாமா என்று கூப்பிடும்படி சொன்னார்கள். கடைக்கார மாமா, மாமியோடு ஒரு அக்காவும் இருந்தாள். அந்த அக்கா ரொம்ப சிவப்பாக அழகாக இருந்தாள். அந்த அக்கா பெயர் பாத்திமா. அவள் பெரிய பெண் என்றும் அதனால் வெளியே வரக்கூடாது என்றும் சொன்னார்கள். எங்கள் ஊரில் அப்படி ஒரு பழக்கம் இருந்ததில்லை. அதனால் வெளியே வராத இந்த அக்காவைப் பார்க்க எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அக்காவோட அம்மாவும் அப்பாவும் இருட்டிய பிறகும் ரொம்ப நேரம் கடையில் இருந்ததால் எங்களை அந்த அக்காவிற்குத் துணையாக இருக்கச் சொல்லி என் மாமா, அம்மா அனுப்பி வைத்தார்கள். எங்களுக்கு சந்தோசம் என்றால் சொல்லி முடியாது. அந்த அக்கா பித்தளையில் ஒரு பல்லாங்குழி வைத்திருப்பாள். நாங்கள் ஏழெட்டுப் பேர் சேர்ந்துகொண்டு சாமம் வரையிலும் பல்லாங்குழி

விளையாடிக்கொண்டிருப்போம்.

ஒவ்வொரு சமயம் கடைக்கு சரக்கு வாங்கப்போகும் அந்த மாமா வெளியூரிலேயே தங்கி ஒரு நாள், இரண்டு நாள் கழித்துதான் வருவார். அப்போதெல்லாம் எங்களுக்கு அங்கேதான் படுக்கை. அந்த அக்கா சின்னப் பெண்ணாக இருக்கும்போது கீழே விழுந்து முன்பல் இரண்டும் உடைந்துவிட்டதால் இரண்டு பல் கட்டியிருந்தாள்.

ஒருமுறை அக்காவைப் பெண் பார்க்க வருவதாகவும் சமையல் செய்து வைக்கும்படியும் சொல்லியிருந்தார்கள். அக்காவுடைய அம்மாவும் அப்பாவும் மாப்பிள்ளை வீட்டுக்காரர்களை சத்திரப்பட்டிக்கு கூப்பிடப் போய்விட்டதால் இந்த அக்காவே சமையல் செய்தாள். வெஞ்ஞனத்திற்கு யார் காட்டிலாவது காய் இருந்தால் பிடுங்கி வருமாறு எங்களை அனுப்பிவைத்தாள். எங்களுக்குப் பெருமை என்றால் சொல்லி முடியாது.

ஊரை ஒட்டி இருந்த காட்டில் கேப்பை போட்டு வாய்க்காலில் மொச்சையும் போட்டிருந்தார்கள். அன்றைக்கு காவலுக்கு யாருமில்லை. நாங்கள் உள்ளே புகுந்து மொச்சைக்காயைப் பிடுங்கியதோடு பூசணிக்காய், கத்தரிக்காய், தக்காளி என்று எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு வந்தோம். அக்கா எல்லாக் காய்களையும் அறுத்து என்ன என்னமோ குழம்பு வைத்தாள். நாலைந்து பேர் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வரவும் நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். அன்று இரவு வழக்கம் போல் அவர்கள் வீட்டிற்கு விளையாடப் போனோம். அங்கே அக்கா ஒரு மூலையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருக்க அந்த மாமாவும் மாமியும் அவரைத் திட்டிக்கொண்டிருந்தார்கள்.

நாங்கள் திடுக்கிட்டுப்போய் நின்றோம். இவ்வளவு அழகான அக்காவை யாராவது திட்டுவார்களா? அழுத அக்காவை சமாதானப் படுத்திக் கொண்டிருந்த எங்கள் ஊர் பாட்டி எங்களைக் கண்டதும் இந்தா வந்துருச்சுகள்ல... சனியனுங்க! இனிமே இந்த வீட்டுக்குள்ள காலு வச்சீக... காலை ஒடிச்சிருவேன் என்று வய்ய மாமா வந்து பாட்டியைத் தடுத்தார். சின்னப் பிள்ளைகளை எதுக்காவ வய்யிறீக? அதுக நல்லதுதான செஞ்சிருக்குக. இவதான் மூளையில்லாம நடந்துக்கிட்டா என்று மறுபடியும் அக்காவை மாமி வய்ய எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பொங்கிக்கொண்டு வந்த கண்ணீரை அடக்கியபடி பேசாமல் வந்து விட்டோம்.

மறுநாள்தான் விஷயம் தெரிந்தது. நாங்கள் பிடுங்கிக்கொண்டு போன மொச்சிக் காயை அக்கா அவரைக் காய் என்று பருப்போடு சேர்த்துக் குழம்பு வைத்திருக்கிறாள். அதைத் தின்று பார்த்தவர்களுக்கு மொச்சிக் காயின் வீச்சம் தெரிந்துவிட்டது. மொச்சிக் காய்க்கும் அவரைக் காய்க்கும் வித்தியாசம் தெரியாத பெண்ணைக் கட்டிக்கொண்டு போய்

என்ன செய்வது என்று கேட்டதோடு இந்தப் பெண்ணே எங்களுக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்களாம்.

ஒரு வாரம் வரையில் அந்த வீடு களை இல்லாததோடு எங்களை யும் கலகலப்பு இல்லாமல் ஆக்கிவிட்டது. கொஞ்ச நாள்தான். பிறகு பழையபடி சந்தோசமாகிவிட்டது. அக்காவுடன் போய் விளையாடி னோம்.

இப்படியே நாள் போனது. சத்திரப்பட்டி போய் யாரும் கூட்டி வராமலே பாத்திமா அக்காவை பொண்ணு பார்க்க இந்த முறை வந்து விட்டார்கள்.

வீடுகளில் குளியலறை கிடையாது. திறந்த வெளியில்தான் துணியை உடுத்திக் குளிப்பார்கள். பாத்திமா அக்கா வீட்டில் இருக்கும் அங்கணக்குழியில்தான் குளிப்பாள். அன்று வீடு நிறைய ஆட்கள் வந்து விட்டால் குளிக்க முடியவில்லை. உடனே அந்த மாமி எங்களைக் கூப் பிட்டு, பாத்திமா இன்னும் குளிக்காம இருக்கா; புதுக்கிணத்தில இறைக் காங்க; அக்காகூடப்போயி பாத்திமா குளிக்கத்தண்டியும் கூட இருந்து கூட்டி வாங்க என்றார். இவ்வளவு சொன்னால் எங்களுக்குப் போதாதா? அக்காவைச் சுற்றிக்கொண்டு இறவைக் கிணத்துக்கு கூட்டிப் போனோம்.

வாய்க்காலில் தண்ணீர் கொஞ்சமாக ஓடிக்கொண்டிருந்தது. குளிக்கும்போது அக்கா பத்தக்காலில் கூனைக்கு நேராக முகத்தைக் காட்டினார். அவ்வளவுதான், அவர் முன்புறம் கட்டியிருந்த பல் இரண்டும் தண்ணீர் அடித்த வேகத்தில் கழண்டு ஓடிவிட்டது.

ஓ... என்று அக்கா சத்தம் போட்டு அழ நாங்கள் பயமும் ஆச்சரிய முமாக திகைத்துத் திண்டாடிக்கொண்டு நின்றோம். பிறகு தண்ணீர் இறைத்த பெரியப்பா இறவையை நிறுத்திவிட்டு என்ன தாயீ... எதுக்கு அழுவுதே என்று கேட்க அக்கா விஷயத்தைச் சொன்னார். அதைக் கேட்டதும் எங்களுக்கு சிரிப்பு சிரிப்பாய் வந்தது. அக்காவை அதிசய மாகப் பார்த்தபடி சிரித்தோம். ஆனால் அக்கா சிரிக்கவில்லை. விக்கலும் விம்மலுமாக அழுதார்.

பெரியப்பா வாய்க்கா வரப்பில் பல் கிடக்கிறதா என்று எங்களைத் தேடிப் பார்க்கச் சொல்லி விரட்டினார். இதற்குள் அக்காவை கூப்பிட ஆள் வந்துவிட்டார்கள். நாங்கள் ஒவ்வொரு மடையாகப் பார்த்துக்கொண்டே வந்தோம். நல்லவேளை, முதல் வாமடையிலேயே பல் கிடைத்து விட்டது. கூப்பிட வந்த ஆளோடு அழுதுகொண்டே போன அக்காவைக் கூப்பிட்டவாறு நாங்கள் கீழ் மூச்சு மேல் மூச்சு வாங்க ஓடினோம். அக்கா அழுதவாறே திரும்பினாள். நாங்கள் பல்லைக் கொடுத்ததுதான் தாமதம், அவள் முகமெல்லாம் பழைய சிரிப்பு வந்துவிட்டது. அழுததால் கண் மட்டும் சிவந்து கிடக்க பாத்திமா அக்கா முன்னைவிட அழகாக இருந்தாள்.

பெண் பார்க்க வந்தவர்களுக்கு அவரைப் பிடித்துவிட்டதும் ஒரே வாரத்தில் அவருக்கு தடபுடலாக கல்யாணம் ஆனதும் எங்களுக்குப் பிடிக்கவில்லை. அக்கா போன பிறகு எங்களை அந்த வீட்டில் சீந்து வாரில்லை. அக்கா போன கொஞ்சநாள்தான் அந்த மாமாவும் கடை வைத் திருந்தார். பிறகு அவர்களும் போய்விட்டார்கள். பழையபடி கடை இல்லாமல் நாங்கள் சத்திரப்பட்டிக்கு நடந்தோம்.

ooo

கோடை காலங்களில் எங்கள் ஊரில் புல்லோ புளிச்சியோ எதுவுமே கிடைக்காது. அதனால் நாங்கள் இரண்டு மைல் தொலைவில் உள்ள கம்மாபட்டி, கொண்டநேரி குளங்களை ஒட்டிய வயல்களுக்கு புல்லு பிடுங்கவும், கரும்புத் தோகைக்காகவும் போவோம்.

விடிகாலை மூன்று மணிக்கு எழுந்து நடந்தால் பொழுது செங்கல் மங்கலாக விடியும் வேளையில் போய்ச்சேருவோம். தூரம் அதிகம் என்பதால் ஒருவருக்கொருவர் எழுப்பி விடுவார்கள். முந்தி எழுந்த வர்கள் நடுத்தெருவில் காத்திருப்பார்கள். பிறகு எல்லோரும் வந்து விட்டார்களா என்று பார்த்துவிட்டு அடுத்தவர்களிடம் கேட்டு வராதவர் யாரும் இருந்தால் அவர்களையும் கூப்பிட்டுக்கொண்டு ஒன்று போல் போவோம். எங்கள் துணைக்கென்று ஒன்றிரண்டு ஆண்கள் வருவார்கள்.

வளர்பிறைக் காலத்தில் எங்களுக்கு துணையாக இருக்கும் நிலா விடிகாலை நேரம் எங்கேயாவது போய் ஒளிந்து கொள்ளும். அப்போ தெல்லாம் கருத்துக் கிடக்கும் வானத்தில் வெள்ளிப் பொட்டாக மின்னும் நட்சத்திரங்கள் மெல்லிய வெளிச்சத்தைக் காட்ட, நாங்கள் புழுதி படிந்த பொட்டலில் ஒற்றையடிப் பாதையைத் தேடி நடப்போம். வெட்ட வெளி யில் அடிக்கும் காற்று எங்கள் வியர்வையை ஆற்றும். எங்களுக் கெல்லாம் தலைமையாக ரச்சுமி என்ற அக்கா வருவார். அவருக்கு எப்போதும் பாட்டுத்தான்.

பாதையோர பிஞ்சையிலே
பயத்தான் நெத்து எடுக்கையிலே
பாத்தனய்யா உன் முகத்த
பகச்சனய்யா என் சனத்த!
வெங்கல ரோதயில
வேல பாக்கும் அயித்தமவன்
வெத்தல வேணுமின்னா
விட்டெறிங்க பட்டுத்துண்ட!
கீழத்தெரு சேவலு
கிணுக்கு மணி போட்ட சேவலு
மேலத் தெரு கோழியோட
மேஞ்சடைய வாரதெப்போ?

இப்படிப் பாட்டும் படிப்புமாக கரும்புக்காடு போய்ச் சேருவோம். வயல் போய்ச் சேரும்வரைதான் இந்த பாட்டு கதை எல்லாம். அங்கே ஒருத்தியைப் பார்க்க ஒருத்திக்கு நேரமிருக்காது. எறும்பின் சுறுசுறுப் போடு புல்லு பிடுங்குகிறவர்களும் கரும்புத் தோகை ஆய்கிறவர்களும்... ஒரே பரபரப்புதான். காட்டுக்காரர்கள் கரும்புத் தோகையை சும்மா ஆய விடமாட்டார்கள். அவர்களுக்கு ஒரு நிறை கரும்பை வெட்டிவிட்டு ஆயவேண்டும். ஏழு மணிக்கெல்லாம் எங்கள் தலையில் சுமை ஏறிவிடும். பிறகு பாட்டாவது கதையாவது! ஒரே ஓட்டம்தான்.

ஒருநாள் கரும்புத் தோகை ஆயும்போதே எனது சேத்திக்காரிகளான ராக்குவிற்கும் தனத்திற்கும் சண்டை வந்துவிட்டது. சண்டை என்றால் பெரிய சண்டை. ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்ள பெரியவர்கள் அவர்களைத் திட்டி சண்டையை விலக்கிவிட்டார்கள். வீடு வந்து சேர்ந்து இரண்டு, மூன்று நாள் வரையிலும் அவர்கள் முகம் கடுகடுவென்று பொரிந்து கிடந்தது. பிறகு ஒரு வாரம் கழித்து இருவரும் பேசிக் கொண்டார்கள்.

ஒருநாள் நடுச்சாமம். ராக்குபோய் தனத்தை எழுப்பி, என்னத்தா எல்லாரும் கரும்பு தோவைக்குப் போய்ட்டாக; நீ போவலயா? என்று கேட்டாள்.

நிசம்மாவா போய்ட்டாக! நீ போவலயா? என்று தனம் கேட்டிருக் கிறாள்.

எனக்கு சேட்டமில்ல. அதேன் நா போவல என்றதும் தனமும் எம்புட்டு தொலவு போயிருப்பாக என்று கேட்க இப்பத்தேன் மந்தை கிட்ட போயிருப்பாக என்று ராக்கு விளையாட்டாகச் சொல்லிவிட்டாள். அவ்வளவுதான், இந்த தனம் சும்மாட்டுத்துணியை எடுத்துக் கொண்டு, எக்கா எக்கா... சத்த நில்லுங்க இந்தா வந்துருதேன் என்று கூப்பிட்டுக் கொண்டே ஓடியிருக்கிறாள்.

ரொம்பதூரம் ஓடிய பிறகு அவளுக்கு முன்னால் இருந்த கிணற்றில் ஏதோ டொம் என்ற விழுந்த சத்தம் கேட்டு திடுக்கிட்டு சுற்றிமுற்றிப் பார்த்திருக்கிறாள். எங்கேயும் கீ... என்ற இருட்டு. ஆள் அரவத்தை காணோம். உடனே அய்யய்யோ அப்பா... என்று அழுதுகொண்டே வீடு வந்து படுத்தவள்தான், பிறகு எழுந்திரிக்கவே இல்லை. சாமியாடியைக் கூட்டி வந்து சாமி வருத்தி 'திருநூறு' போட்டார்கள். ஒன்றும் பயனில்லை.

நாங்கள் காட்டு வழியே வெயிலிலும், மழையிலும் பசியோடு வேலை செய்யும்போதும் மாடு மேய்க்கும்போதும் இந்த மரங்கள்

எங்களுக்கு நிழல் கொடுப்பதோடு, எங்களின் பசியைப் போக்கும் தாயாகவும் இருந்திருக்கிறது. உண்மையிலேயே ஏழைகளுக்குகாகத்தான் இயற்கை இந்த மரங்களைப் பரிசளித்திருக்கிறது.

சுட்டு எரிக்கும் வெயிலென்றாலும் சரி, கொட்டும் மழையென்றாலும் சரி, பசி அதிகமாகிவிட்டால் இந்த மரங்களைத் தேடித்தான் ஓடுவோம். அரசமரம், இச்சிமரம், ஆலமரம், அத்திமரம், புளியமரமென்று எல்லா மரங்களும் கனிகளைக் கொடுத்து எங்கள் பசியைத் தீர்த்து வைக்கும். இதில் எல்லாவற்றிலும் மஞ்சனத்தி மரம் தான் ரொம்பவும் இஷ்டம். மஞ்சனத்தி எப்போதும் பழத்தோடுதான் கனிந்து கிடக்கும். கொஞ்சம் காயாக இருந்தாலும் நாங்கள் அதைப் பறித்து சாம்பலுக்குள் புதைத்து விடுவோம். மறுநாள் பார்த்தால் அத்தனையும் பழங்கள்தான்.

அது மட்டுமல்ல, சித்திரைத் திருவிழா, வைகாசிப் பொங்கல், தை மாதப் பிறப்பு இப்படி நல்ல நாட்களில்தான் எங்களுக்கும் பூ கிடைக்கும். மற்ற நாட்களில் பெரியவர்கள் பூவைப் பற்றியே நினைக்க மாட்டார்கள். ஆனால் எங்களுக்கு பூ வைத்துக் கொள்ள ஆசையாய் இருக்கும். காலையில் எழுந்ததும் மஞ்சனத்தி மரங்களை நோக்கி ஓடுவோம். அந்த மரத்தில் வானத்து வெள்ளியாகப் பூக்கள் மலர்ந்திருக்கும். மடி நிறையப் பறித்துக் கொண்டுவந்து தொடுத்து எங்கள் தலையில் வைத்துக் கொள்வோம். சாயங்காலம் கொரண்டி பூ, காத்தாழைப் பூ, வெடிப் பூ என்று எல்லாப் பூவையும் பறித்து... பச்சை இலை, துளசி இலையோடு விதவிதமாகக் கட்டி தலையில் வைக்கும்போது மல்லிகைப் பூவிற்கு கூட அதன் அழகு இருக்காது. அதிலும் எங்களுக்கு நெருக்கமான, பிரியமான விஷயம் மருதாணி. தினமும் அதைப் பறித்து வந்து அரைத்து ஒரு சிரட்டை நிறைய வைத்துக்கொண்டு இரவு நேரத்தில் கதை சொல்லும் பெரிய ஆட்களோடு உட்கார்ந்து ஒருவருக்கொருவர் இட்டுக் கொள்ளும் போது சந்தோசமாக இருக்கும். எங்களோடு பெரிய ஆட்களும் மருதாணி வைக்க அவர்களை முறைக்காரர்கள் கேலிபேச, மருதாணியைவிட அவர்கள் சிவந்து கிடப்பார்கள்.

வேலைகளில் புளியம்பூ தூத்துகிற வேலை எங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். இந்த வேலைக்கு ஆனி ஆடி மாதங்களைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். அப்போதுதான் காற்றடித்து பூக்கள் எல்லாம் உதிரும். மேற்கு மலையை ஒட்டிய வனங்களை அடுத்து இந்தப் புளியமரங்கள் பெரிய தூர் பரப்பி நிழல் பூச்சோடு அடர்ந்து கிடக்கும். அதன் அடியில் சிவப்பேறிய புளியம்பூக்கள் நிலம் தூந்து படுக்கை விரித்திருக்கும். நாங்கள் அந்த மரத்தை நோக்கிப் போகும்போதே 'காட்டுமொச்சி' செடியில் இருக்கும் கொப்புகளை ஒடித்து விளக்குமாறைப் போல கட்டிக் கொள்வோம். இந்தக் காட்டுமொச்சிக் கம்புகள் வளையும். கூடை பின்னுகிறவர்கள் இதை அறுத்து வந்து வளைத்துதான் பெரிய பெரிய கூடைகளைப் பின்னுவார்கள்.

பிறகு ஒவ்வொரு மரமாகப் போய் உட்கார்ந்துகொண்டு பூக்களைக் கூட்டிக் கூட்டி சேகரித்து சாக்குகளில் அள்ளுவோம். அப்போது பெரியவர்கள் அந்த வனங்களில் திரியும் பேய்களைப் பற்றிப் பேசுவார்கள். அவர்கள் எப்படிப் பேயாக மாறினார்கள் என்கிற கதைகளையும் சொல்வார்கள். கேட்கக் கேட்க பயமும் ஆச்சரியமும் எங்களைப் பற்றிக்கொள்ள கண்களைக் கூட சிமிட்டாமல் அவர்களின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருப்போம். இப்படி ஆரம்பிக்கும் கதை மத்தியானம் கஞ்சி குடிக்கும் நேரம்தான் அரைகுறையாக முடிவடையும். புளிய மரத்தை சேர்த்து குறுக்கு மறுக்குமாக ஓடும் ஒடைகளில் தண்ணீர் தெள்ளத்தெளிவாக மெல்ல ஓடிக்கொண்டிருக்கும். அதன் அடியில் சிறு குறுமணல்கள் சூரிய வெளிச்சத்திற்கு வெள்ளியாக மின்னும். எனக்கு அதை பார்த்தாலே சந்தோசம் தாங்காது. அதோடு இந்த மணலும் கறுப்பாக சிவப்பாக நீலமாக இருக்கும் அதிசயத்தை பார்த்துக்கொண்டே இருக்கலாம் என்று தோன்றும்.

இப்படிக் கதை பேசியவாறு வெயிலைப் புறக்கணித்துவிட்டு மரத்துக்கு மரம் குவித்திருக்கும் மென்மையான பூக்களை அள்ளுவோம். வெளியே வெயில் சுட்டு எரிக்கும். ஒவ்வொருவருக்கும் ஒரு மூடை பூ சேர்ந்த பிறகுதான் புளியந்தோப்புகளை விட்டுப் புறப்படுவோம். இதற்குள் பொழுது மசங்கிவிடும். பூவின் சுமை பூவாகவே இருக்கும். விறகுச் சுமை போல் எங்களை ஒடிக்காது.

இப்படி தூரத்து வேலைகளுக்கு நிலாக் காலங்களில்தான் முக்கியமாக போவோம். அதனால் நாங்கள் வரும்போது நிலாவும் எங்கள் கூடவே வரும். அடர்ந்த மரங்களினூடே திடீர் திடீர் என்று மறைந்து பிறகு வெட்டவெளியில் முகம் காட்டிக் காட்டி கண்ணாமூச்சி விளையாடும் நிலாவோடு போட்டி போட்டிக்கொண்டு நடப்பேன். எங்களை வீடு வரை அழைத்து வரும் நிலாவிற்கு திரும்பிப் போக மனசு இருக்காது. எங்களின் வாசலிலேயே நின்று நாங்கள் வேலை செய்வதை, சாப்பிடுவதை, விளையாடுவதைப் பார்த்துவிட்டு அது கொஞ்சமாய் மேற்கே சாயும்போது அந்த நிலாவைக் கண்ணில் வைத்தவாறு தூங்கி விடுவேன்.

ooo

பக்கத்து ஊரிலிருந்து ஒரு பாட்டி தினமும் வடையும் பயறும் விற்கக் கொண்டுவருவார். எனக்கும் வசந்தாவிற்கும் வடை திங்க வேண்டுமென்று ஆசையாய் இருந்தது. வடை கேட்கும்போதெல்லாம் எனது அம்மாவும் அவள் அப்பாவும் சேர்ந்து வறுத்த பயறும் குத்துன அரிசியும் இருக்கையில வடை எதுக்கு? இன்னொரு நாளைக்கு வட வாங்குவோம்; இப்பதுட்டுமில்ல ஒண்ணுமில்ல என்று சொல்லி விரட்டி

விடுவார்கள். ஆனால் எங்களுக்கு எப்படியும் வடை திங்க வேண்டும் என்று இருந்தது.

ஒரு நாள் வசந்தாவின் பிஞ்சையில் நடுவை. நடுவைக்கென்று போகிறவர்கள் பொழுது அடைந்துதான் வருவார்கள். மற்ற வேலைக்குப் போனால் கஞ்சி குடிக்கிற சாக்கில் வீட்டுக்கு வந்து ஏதாவது வேலை செய்துவிட்டுப் போவார்கள். என் அம்மாவும் அவர்களுக்கு நடுவைக் குப் போய்விட்டாள்.

இதுதான் நல்ல சமயம் என்று நானும் வசந்தாவும் இரண்டு கை உளுந்தை அள்ளி உரலில் போட்டு கடகடவென்று ஆட்டினோம். எண் ணெயை கடையில் வாங்குவதில்லை. வீட்டில் ஆட்டி கலயம் கலயமாக வைத்திருப்பார்கள். நல்லெண்ணெயைத் தங்கம்போல் பாவிப்பார்கள். அதை சின்னப்பிள்ளைகள் தொடாமல் இருக்க உயரத்தில் உரி கட்டித் தொங்கவிட்டு விடுவார்கள்.

அந்த எண்ணையை விருந்தாளிகள் வந்தால் நெல்லுச் சோறு ஆக்கி அவர்களுக்கு ஊத்துவார்கள். கோழிக்குழம்பு வைத்து அதில் ஊற்று வார்கள். அதோடு சோளச்சோறு சூடாக இருந்தால் பெரியவர்கள் சாப் பிடும்போது நாங்களும் சாப்பிட்டால் சோளச் சோற்றுக்குள் கொஞ்சம் குழி பறித்து அதில் கொஞ்சம் கருப்பட்டி போட்டு எண்ணெயை விடுவார்கள். மற்றபடி எல்லாவற்றுக்கும் விளக்கெண்ணெய்தான்.

தலைக்குத் தேய்க்கவும் விளக்கெண்ணெய்தான். ஒரு கைவிட்டு தலையில் அழுத்தித் தேய்த்து மரச்சீப்பால் வரட் வரட்டென்று இழுக்க வலி உயிர் போகும். சீவிச் சடைபோட்டு வேட்டிக் கரை அல்லது சேலைக் கரையை கிழித்து முடிந்துவிட்டால் பத்து நாள் சென்றாலும் சரி, ஏதோ தெய்வத்திடம் சத்தியம் வாங்கியதுபோல் சடை கிடக்கும். மற்றவர்கள் அவிழ்த்தால்தான் சடை அவிழும். இல்லாவிட்டால் அது பாட்டுக்கு கிடக்கும். காது வழியே தலையில் தேய்த்த எண்ணெய் வழிந்து கொண்டிருக்கும்.

எங்கள் வீட்டில் கலயம் நிறைய எண்ணெய் இருந்தது. என் அம்மாவிற்கு கடுமையாக கண்டிக்கத் தெரியுமே தவிர மற்றபடி வீட்டில் அரிசி, சோறு, எண்ணெய், பருப்பு இதெல்லாம் குறைந்திருப்பது தெரியாது. அதைக் கண்டுகொள்ளவும் மாட்டாள். ஆனால் வெண்ணை குறைந்ததை மட்டும் பார்த்துவிடுவாள். வெண்ணை வாங்குகிற பெரியம் மாவிடம், நாளைக்கு வாக்கா, பத்து பலம் வெண்ணை இருக்கு, போடு றேன் என்பாள். நானும் ராஜாவும் அதைத் திருடித் தின்றுவிட்டு மூன்று பலம் ஆக ஆக்கியிருப்போம். இளைய தம்பி மட்டும் திருடு, பொய் எதிலும் சேர மாட்டான்.

கலயத்தில் இருந்த விளக்கெண்ணெயை எடுத்து வடைச்சட்டியில் ஊற்றினோம். வடையில் என்ன என்ன போட வேண்டுமென்று எங்

களுக்குத் தெரியாது. வெறும் உப்பை மட்டும் போட்டுப் பிசைந்து தட்டித் தட்டிப் போட்டோம். மொத்தம் பதினாறு வடை இருந்தது. முழு உளுந்தைப் போட்டு ஆட்டியதால் வடை கருப்பாக ஒரு கட்ரா நிறைய இருந்தது.

வடையைச் சுட்டு முடித்து எண்ணெயை ஆற வைத்து பழையபடி கலயத்துக்குள் ஊற்றிவிட்டோம். பிறகு இரண்டு பேரும் ஒன்றாக வடையைத் தின்ன வேண்டும் என்று தீர்மானித்தோம். மனசுக்குள் சந்தோசம் பொங்கியது. சிரிப்பு சிரிப்பாக வந்தது.

நாங்கள் சிரித்துக்கொண்டிருக்கும்போது வசந்தாவின் அம்மா வந்துவிட்டாள். எங்களைப் பார்த்ததும் ரெண்டு பேரும் என்ன செய்தீக? என்னம்மோ ஒரு வடியா மணக்கு என்றாள். எங்களுக்கு பயத்தில் நெஞ்சு குழி பறித்தது. அவள் மூக்கை உறிஞ்சிக்கொண்டே வாசம் பிடித்தாள். பிறகு வசந்தாவிடம் நீ இப்படி வெட்டியா நிப்பேன்னு தெரியும்; களத்திலை வரகு காய வச்சுட்டுப் போனேனே, அள்ளி குத்தலாமில்ல? போயி வரக அள்ளிட்டு வா; நா நாவிப் போடுதேன்; நீ குத்து என்றாள். பிறகு உம்... நடுவ முடிஞ்சிருக்கும், இன்னைக்கு வம்பாதண்ணி வத்திப் போச்சே என்று சொல்லிக்கொண்டே அவளையும் கையோடு கூட்டிப் போனாள்.

இந்த அத்தைக்குத்தான் என் அம்மாவும் நடுவை நட்டப் போனாள். அதனால் அவளும் வந்துவிடுவாளே என்று எனக்கு பயமாகி விட்டது. நான் அவசரமாக வடையைத் தூக்கி குலுக்கை கடவுக்குள் வைத்துவிட்டு வெளியே வந்தேன். வசந்தாவின் வீட்டுக்குப்போய் அவள் என்ன செய்கிறாள் என்று பார்க்கலாம்; வேலை செய்யாமல் இருந்தால் வெளியே போவதுபோல் வடையைக் கொண்டுபோய் திங்கலாம் என்று நினைத்தவாறு அவள் வீட்டுக்குப் போனேன். அவள் அழுத முகத்தோடு வரகு குத்திக்கொண்டிருந்தாள்.

என்னைக் கண்டதும், போய்விடு போய்விடு என்று கண்ணால் சாடை காட்டினாள். சரி ஏதோ நடந்துவிட்டது என்று நினைத்தவாறு கணேசனிடம் சென்றேன். வடை சுட்டும் அதைத் திங்க முடியாமல் அது குலுக்கை கடவுக்குள் இருப்பதைச் சொன்னேன்.

நீ போய் வடையை எடுத்துக்கிட்டு கொல்லைப் பக்கத்துக்கு வா; நான் அவளை எப்படி வரச்சொல்றேன் பாரு என்றவன் வசந்தா வீட்டை நோக்கி நடந்தான். நான் வீட்டிற்கு வந்தபோது என் அம்மாவும் வந்து விட்டிருந்தாள். நான் அவள் கண்ணை மறைத்துவிட்டு வடையோடு கொல்லைப்புறம் போகும் முன்னே வசந்தா மாடுகளோடு மந்தைக்கு வந்துவிட்டாள். அங்கே நின்றிருந்த கணேசன் நீ போய் வடையை வசந்தாவிடம் கொடுத்துவிட்டு வா என்று சொல்லிவிட்டு வேகமாய் எங்கள் வீட்டை நோக்கி நடந்தான்.

நான் வடையை வசந்தாவிடம் கொடுத்துவிட்டு வருவதற்குள் என் அம்மா என் எதிரே வந்ததோடு எங்கே போய் தொலைஞ்சே? சோளக்காடு அழிஞ்சி மாடுகள்லாம் அப்படி மேயுதாம். நீயும் சீக்கிரம் மாட்டைப் பத்திட்டு போ என்று விரட்டினாள்.

எம் மேல வருற சாமிக்கு இதுதானே வேணும் என்று நானும் அவசரமாய் மாட்டைப் பத்திக் கொண்டு மந்தையைப் பார்க்க ஓடினேன். கணேசன் என் பக்கத்தில் வந்து எல்லாம் நம்மோட வேலைதான்; நீங்க எங்கேயாவது மாட்டை மேய விட்டுட்டு செழிக்க வடையைத் தின்னுங்க என்றான்.

நீயும் வாயேன் சேந்து திம்போம் என்றதற்கு, நானு எங்கய்யா கூட ஒரு இடத்துக்குப் போறேன்; என்னால முடியாது; நான் ராத்திரிக்கு வந்து திங்கட்டுமின்னு மிச்சம் வச்சிராதீக; ஏன்னா வடை ஊசிப்போகும் என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டான்.

எனக்கும் வசந்தாவுக்கும் சந்தோசம். கணேசன் சொன்ன மாதிரி மாட்டைப் பத்திக் கொண்டுபோய் கடக்க விட்டுவிட்டு ஆளுக்கு எட்டு வடை என்று பகிர்ந்து தின்றோம். அன்று இரவு என் தம்பி தர்மன், என்னக்கா கொஞ்சமா சாப்பிடறே, சேட்டமில்லையா என்று கேட்ட போது அவனுக்கு ஒரு வடை கூட கொடுக்காமல் தின்றதை நினைத்து வருத்தமாக இருந்தது.

❧

யார் வீட்டிலாவது நகை காணாமல் போனால் போலீசில் சொல்ல மாட்டார்கள். பகடையைவிட்டு வீட்டுக்கொரு சாணி உருண்டை கொடுக்கச் சொல்லி ஊருக்குள் சாட்டவிடுவார்கள். நகையை எடுத்த வர்கள் சாணி உருண்டைக்குள் வைத்துப் போட்டு விடுவார்களாம். எனது பெரியம்மா வீட்டில் சங்கிலி ஒன்று காணாமல் போய்விட்டது. உடனே ஊர் சாட்டி சாணி உருண்டையைக் கொடுக்கச் சொன்னார்கள்.

அதற்கு முன்னால் பெருமாளக்கா வீட்டில் கொலுசு காணாமல் போய்விட்டது. பாவம் அந்த அக்கா ரொம்பவும் ஏழை. வேலைக்குப் போனால்தான் சாப்பிடமுடியும். அடை மழை பிடித்துவிட்டாலோ, அல்லது விதைப்பு, அறுப்பு இல்லாத காலங்களிலோ அவளுக்கு காட்டு வேலை இருக்காது. அதனால் வீடுகளில் குத்திக் கொடுத்து, பயறு பச்சை என்று உடைத்துக் கொடுத்து அதற்குக் கூலியாக சோறு வாங்கிச் சாப்பிடுவாள்.

அந்த அக்காவிற்கு நகை போடுவதற்கு நிறைய ஆசை. ஆனால் அவர் வரும்படிக்கு நகை வாங்க முடியாதாகையால் காத் துட்டும், அரைத் துட்டுமாக சேர்த்து காலுக்கு ஒரு கொலுசு வாங்கியிருந்தாள்.

சித்திரைப் பொங்கலுக்குத்தான் அந்த கொலுசை போட்டிருந்தாள். பிறகு கழட்டி அடுக்குப் பானையில் வைத்திருக்கிறாள். யாரோ தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். கொலுசு காணாமல் போனதை நினைத்து நினைத்து அந்த அக்கா ஒரு மாதம் வரை பசியும் பட்டினியுமாக அழுது கொண்டிருந்தாள். ஊரைக் கூட்டவோ, சாணி உருண்டை கொடுக்கச் சொல்லவோ அவளால் முடியவில்லை.

எனது பெரியம்மா சாணி உருண்டை கொடுக்கச் சொன்னதுமே வீட்டுக்கு வீடு ஒரு பெரிய சாணி உருண்டையைக் கொண்டுபோனார்கள். அதை இரண்டு பெரிய பெரிய அண்டாக்களில் போட்டுக் கரைத்தார்கள். காலையிலிருந்து மத்தியான வரைக்கும் கரைத்ததுதான் மிச்சம். பெரியம்மாவின் சங்கிலி கிடைக்கவே இல்லை. ஆனால் அந்த அக்காவின் கொலுசு கிடைத்துவிட்டது! அக்காவிற்கு சந்தோசமென்றால் அப்படி ஒரு சந்தோசம். அந்த அக்கா கண்ணீர் விட்டவாறே பெரியம் மாவைக் கையெடுத்துக் கும்பிட்டபோது அங்கிருந்த எல்லோருமே சந்தோசப்பட்டார்கள்.

ஆடி

கார்த்திகை மாதம் மாதிரி கல்யாண நாள் வந்தாலும் எங்களுக்கு கொண்டாட்டம்தான். பெரும்பாலும் இந்தக் கல்யாணங்கள் தை மாதமும் சித்திரை மாதமும்தான் நடக்கும். அதுவும் ஒரு கல்யாணமாக முடிக்க மாட்டார்கள். ஏழு எட்டுக் கல்யாணங்கள் சேர்ந்து நடக்கும்.

கல்யாண வீட்டுக்காரர்கள் தங்கள் வீட்டு நெல்லை அள்ளி ஊர்க்காரர்களிடம் கொடுத்துவிடுவார்கள். ஊர்க்காரர்கள் அதை அவித்து காயப்போட்டு வைப்பார்கள். அதோடு இந்தக் கல்யாணங்கள் நிலாக் காலங்களில்தான் நடக்கும்.

காயப்போட்ட நெல்லை சிறுபிள்ளைகளான எங்களிடம் சின்னச் சின்னப் பெட்டிகளில் அள்ளிக் கொடுக்க நாங்கள் கொண்டுவந்து மந்தை யில் சிறு சிறு குமிகளாக குமிப்போம். அந்தக் குமியை ஆண்கள் குத்து வார்கள். பெண்கள் புடைத்துப் போடுவார்கள். நெல்லைக் குத்தவும் கொண்டுபோய்க் கொடுக்கவுமாக ஒரே உற்சாகம்தான். எங்களுக்கு சந்தோசம் தாங்காது.

நெல் வேலை முடிந்ததும் பயறு உடைக்கும் வேலை ஆரம்ப மாகும். துவரம் பயறு, தட்டாம் பயறை முளைக்கட்டி எடுத்து காயப் போட்டு வைப்பார்கள். மற்ற பயறுகளை வறுத்து உடைப்பார்கள். பயறு உடைக்கும் வேலையும் மந்தையில்தான். பிறகு நான்கு மாதத்திற்கு முன்பே கல்யாணத்துக்காக வெட்டிப் போட்ட மரங்களை ஆண்கள் கீற நாங்கள் அதையும் அள்ளி ஒரு இடத்தில் சேர்ப்போம்.

கல்யாணத்தன்று காலையிலேயே எங்களை காய் பிடுங்கி வரு மாறு பிஞ்சைகளுக்கு அனுப்பி வைப்பார்கள். யார் பிஞ்சை, என்ன ஏது என்று கேள்வி கிடையாது. விளைந்த காய்கள் எந்தப் பிஞ்சையில் இருந்தாலும் பிடுங்கலாம். இந்தக் கல்யாணத்திற்கென்று ஒவ்வொரு வீட்டிலும் ஒரு படி பால் காய்ச்சி கடைந்து நெய் கொண்டுவந்து ஒரு கலயத்தில் ஊற்ற வேண்டும். ஊருக்குள் யாரும் சோறு ஆக்கக்கூடாது. எல்லோருக்கும் கல்யாணச் சாப்பாடுதான். மந்தை முழுக்க பந்திதான். மூன்று நாள் கல்யாணம். முதல் நாள் பெண் அழைப்பு. மறுநாள் கல் யாணம். மூன்றாம் நாள் மஞ்சள் நீராட்டு. எங்களை யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள். இந்த மூன்று நாளும் மாடு மேய்ப்பதற்கென்று 'ஊர்க்காலி' ஒருவர் இருப்பார். எல்லா மாட்டையும் அவர் பத்திக் கொண்டு போய்விடுவார். சாணியும் அள்ளி விடுவார்.

நாங்கள் நினைத்த நேரம் சாப்பிடவேண்டியது, விளையாட வேண்டியது. புதுப்பொண்ணு மாப்பிள்ளைகளை வேடிக்கை பார்க்க வேண்டியது. தினமும் கல்யாண நாளாக இருக்கக்கூடாதா என்று ஏங்குவோம்.

முதல் நாள் பெண் அழைப்பு முடிந்ததும் பெரியவர்கள் சமைய லுக்குப் போய்விடுவார்கள். மறுநாள் பெண்ணையும் மாப்பிள்ளை யையும் சோடித்து ஒரு அறைக்குள் உட்காரவைப்பார்கள். மாப்பிள் ளையும் முடி வளர்த்து கொண்டை போட்டு இருப்பார். ஆண்களுக்கு சின்னப் பிள்ளையில் காது குத்திய ஓட்டை மறைந்துபோய் இருக்கும். அதனால் அன்றைக்கு காதைக் குத்தி நாதாங்கி கடுக்கன் என்று பெரிய தோடு போடுவார்கள். காது வீங்கி விடைத்துக் கிடக்கும். மாப்பிள்ளை இரண்டு கைகளாலும் காதைத் தாங்கிக்கொண்டு கல்யாண சந்தோசமே இல்லாமல் முகம் முழுக்க வேதனையோடு உக்காந்திருப்பார். உடம் பெல்லாம் எண்ணெய் தேய்திருப்பதால் மினுமினுவென்று மின்னுவார்.

எங்கள் சாதியில் வயசுப் பெண்களை வீட்டிற்குள் வைக்கமாட் டார்கள். மூணே மூணு ஊரில்தான் திரும்பத் திரும்ப சம்பந்தம் செய்வார்கள். ஆணும் பெண்ணும் எந்த நேரமும் காடுகளில் வேலை செய்துகொண்டிருப்பதால் எல்லோரையும் எல்லோருக்கும் தெரியும். அதோடு பொங்கல் திருநாளில் கண்டிப்பாக எல்லோரும் பார்த்து விடு வார்கள். சில நேரங்களில் மாப்பிள்ளை பெண்ணைப் பார்க்க வேண்டு மென்று கட்டாயப்படுத்தினால் உலக்கையை தன் முகத்திற்கு நேராகப் பெண் பிடித்துக்கொண்டு குத்துவதுபோல் நிற்க பிள்ளைகள் பார்த்து விட்டுப் போவார்கள்.

சோடித்து அறைக்குள் இருக்கும் பெண்ணை தாய்மாமன் மண வறைக்குத் தூக்கி வர வேண்டும். மணப்பெண் குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருக்க இடது கையால் கண்களைப் பொத்தியிருப்பாள். விரல்களின் இடுக்கு வழியே பார்க்கலாம்.

முறைமாமன் ஒருவர் ஆப்புசம் கெட்டவராக இருந்ததால் தடியாக இருந்த மருமகளைத் தூக்க முடியாமல் தூக்கி கீழே போட்டுவிட்டார். பெண்ணுக்கு இடுப்பு நகண்டு விட்டது. மணவறையில் உட்கார்ந்த அவளை ஒருவர் தாங்கிக் கொள்ள எப்படியோ கல்யாணம் முடிந்த கையோடு இடுப்பு வலியை மருந்து போட்டு ஆற்றினார்கள்.

இன்னொரு மணப்பெண் அப்படித்தான், கை இடுக்கின் வழியே மாப்பிள்ளையைப் பார்க்க அவர் எண்ணெய் தேய்ப்பில் மினுமினுத் திருக்கிறார். இவளும் தன் சேத்திக்காரிகளிடமெல்லாம், அடியாத்தா எனக்குப் புருசனா வரப் போறவரு உசந்த கொண்டையோட தோள் வளைவி போட்டு என்னம்மா மினுமினுகிறார் தெரியுமா என்று சொல்லி சந்தோசப்பட்டு இருக்கிறாள். அதே பெண் வாரம் கழித்து காட்டிலிருந்து வந்த புருசனைப் பார்த்துவிட்டு, அய்யய்யே எம் புருசனுக்கு கீச் சொண்டும் மேச்சொண்டும் ஆயுது; நானு அவரு கூட வாழமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்த கதையைச் சொல்வார்கள்.

முதலில் தாலி கட்டும் வேலை முடிந்து மறுவீடு போய்விட்டு வந்து ஒரு சீலை உடுத்தி பொதுக்கினற்றில் குளிப்பார்கள். பெண்ணின் சீலையை மாப்பிள்ளை சுற்றிக்கொள்ள, மாப்பிள்ளை வேட்டியை பெண் சுற்றிக்கொள்ள ஒரே கேலியும் சந்தோசமுமாக இருக்கும்.

பிறகு அழகர் பெருமாளில் வைத்து ஆட்டுவார்கள். நாலு கம்பைக் கட்டி ஒரு பக்கம் பெருமாள் படத்தைக் கட்டியிருப்பார்கள். மறுபக்கம் மாப்பிள்ளை நடுவில் இருக்கும் கம்பைப் பிடித்து நிற்க வேண்டும். மச்சினமார்கள் ஆட்டி ஆட்டி மாப்பிள்ளையை விழவைத்து வேடிக்கை பார்ப்பார்கள்.

மூன்றாம் நாள் மஞ்சள் நீராட்டு விழா. இதில் மாப்பிள்ளை, பெண் வீட்டுக்காரர்கள் மட்டுமில்லை, ஊர்க்காரர்கள் மொத்தமும் கலந்து கொள்வார்கள். அண்டா அண்டாவாகத் தண்ணியை நிரப்பி மஞ்சளைக் கரைத்து வைத்துவிடுவார்கள். முறைக்காரர்கள் மீது யாரும் ஊற்றலாம். அம்மான் மகளும், அயித்தை மகனுமாக சின்னப்பிள்ளை களாகிய நாங்களும் சேர்ந்துகொண்டு ஒரே கொண்டாட்டம்தான். எங்கே பார்த்தாலும் மஞ்சள் காடு பூத்துக்கிடக்கும்.

இப்படிக் கல்யாணம் முடித்தவர்கள் மூன்று மாதம் கழித்துதான் ஒன்று சேர்வார்கள். மூன்று மாதம் வரையிலும் மாப்பிள்ளைக்கு மாமியார் வீட்டில் விருந்துச் சாப்பாடு. மனைவி மாப்பிள்ளையின் முன்னால் வரவே மாட்டாள். மாப்பிள்ளைக்கு எல்லா சவரட்சணையும் மாமியாரும் கொழுந்தியாளும்தான் பார்ப்பார்கள். எத்தனை கஷ்டப் பட்டாலும் மாப்பிள்ளைக்கு நெல்லுச்சோறுதான் போடவேண்டும். நல்லெண்ணெய் ஊற்றி கருப்பட்டி தட்டிப் போட வேண்டும். ஏதாவது ஒரு பருப்பு கடைந்து வெஞ்ஞனம் வைப்பார்கள். கூட்டானத்திற்கு புளியம் பூ ரசம்.

புளியம் பூக்களைப் பரசி அள்ளி சாக்குகளில் கொண்டுவந்து அதை நார்க்கட்டிலில் போட்டு தூசி, தும்பு தட்டி அடுக்குப் பானைகளில் அள்ளி வைத்துக்கொள்வார்கள். காலையில் ஒரு செறங்கை எடுத்து ஊறப்போட்டு ரசம், கூட்டானம் வைப்பார்கள். புளியம் பூத்துவையலும் உண்டு. கொஞ்சம் வசதியானவர்கள் புளி வாங்கி வைத்துக் கொள் வார்கள்.

அதோடு மாப்பிள்ளைக்கு ஒரு நோஞ்சான் ஆட்டை அறுத்து உப்புக்கண்டம் போட்டு வைத்துக்கொண்டு... தினமும் நெல்லுச் சோறும் உப்புக்கண்ட வறுவலும்தான். ஆடு வாங்க முடியாதவர்கள் வீட்டில் வளர்க்கும் கோழி, காட்டில் கிடைக்கும் காடை, கவுதாரி என்று கொண்டு வந்து மாப்பிள்ளையை கவனிப்பார்கள்.

இங்கே மாப்பிள்ளை நன்றாக விருந்து சாப்பிட அவர் பொண் டாட்டி எப்போதும்போல் காட்டுக்குப் போய் வேலை செய்து விட்டு வந்து தன் சேத்திக்காரிகள் வீட்டுக்கு படுக்கப் போய்விடுவாள். மூன்று மாதம்இப்படி விருந்து நடந்த பிறகு புருசன், பொண்டாட்டியை தனியாக, அல்லது மாமியாரோடு கூட்டுக்குடும்பமாக கூட்டிப்போய் வைத்துவிடுவார்கள்.

செல்லாண்டித் தாத்தாவுக்கு கல்யாணமான புதிதில் நான்கு ஐந்து மாதம் ஆகியும் அவர் பொண்டாட்டி அவருடன் பேசாமலே இருந்திருக் கிறாள். மாப்பிள்ளைக்கு இதில் ரொம்பவும் வருத்தம். அவர் கொஞ்சம் அப்பாவி என்பதால் கல்யாணமே வேண்டாமென்று, பிரம்மச்சாரியாக இருந்திருக்கிறார். யாராவது கல்யாணம் முடிக்கும்படி சொன்னால், அட போப்பா அது ஒரு சோலாந்தரம் புடிச்ச வேலை. முதல்ல பொண்டாட் டியை நம்ம வசப்படுத்தி பிறகு அவளுக்கு நம்ம வசப்பட்டு நம்ம இஷ்டத்துக்கு இருக்கவிடாம நய்... நய்..ன்னு ஏதாவது சொல்லுவா என்று சொல்லி ஒதுங்கிவிடுவாராம். அவரைப்போட்டு இழுத்துப் பறித்து கல்யாணத்தை முடித்துவிட்டார்கள்.

அவருடன் கல்யாணம் முடித்தவர்கள் எல்லோரும் புருசன் இறைக்க பொண்டாட்டி தண்ணி பாய்ச்ச; புருசன் ஏர் உழ பொண்டாட்டி விதைபோட; புருசன் வரப்பு போட பொண்டாட்டி பாத்திகட்ட... என்று சோடி சோடியாய் வேலை செய்திருக்கிறார்கள். அதைப் பார்த்துவிட்டு இவருக்கு ரொம்ப வயிற்றெரிச்சல்.

தன்னுடைய நண்பர்களிடம் போய், நான் கல்யாணமே வேண் டாம்னு சொன்னேன்; நீங்க சேர்ந்து முடிச்சி வச்சுட்டீங்க; இப்ப பாரு அவ நா சொன்னபடி கேக்க மாட்டேங்கிறா என்று சொல்லியிருக்கிறார்.

அவர்களும், என்னப்பா இது! சரி போகட்டும், சும்மாவாச்சிலும் பேசிக்கிட்டு இருந்தயா? அதுவும் இல்லையா என்று கேட்க, அவரும் நான் எங்க பேசுறது? அவ பொழுது அடையுமுன்ன வீட்டுக்கு வந்து

காய்ச்சி வச்சிட்டு வீட்டாவழியே போயி படுத்துக்கிறா என்று சொன்னார்.

அடப்பாவி நீ எதுக்கு அவளை வெளிய போக விடுறே? அவ வீட்டுக்குள்ள மொளஞ்சதும் நீ போயி கதவப் பூட்டிரு, பிறகு அவ எப்படி வெளிய போவா, உன்கூட பேசித்தான ஆவணும் என்று இவர்களும் யோசனை சொல்லிவிட்டார்கள்.

மறுநாள் இவர் பொண்டாட்டி எப்போது வீட்டிற்குள் போவாள் என்று காத்திருக்கிறார். அவளும் எப்போதும்போல் அடுப்படியில் சோறு ஆக்கிக்கொண்டிருக்க இவர் அரவமில்லாமல் போய் துரவாலை எடுத்து கதவைப் பூட்டிவிட்டு வெளியே படுத்துக்கொண்டார்.

மறுநாள் விடிந்துவிட்டது. தன் நண்பர்களிடம் போய், என்னப்பா நீங்க சொன்ன மாதிரியே அவளை வீட்டிற்குள் வைத்து பூட்டி வெளியே படுத்துக்கிட்டேன்; அவ ஒரு வார்த்தைக்கூட பேசலயே; இப்ப போயி கதவை திறந்து விடட்டுமா வேண்டாமா என்று கேட்க எல்லோரும் அடகிறுக்குப் பய மவனே என்று சிரிப்பாய்ச் சிரித்தார்களாம்.

ooo

எனது பெரிய தாத்தா மகளும் இதே மாதிரிதான் கல்யாணம் முடிந்து மூன்று மாதம் ஆகியும் புருசனோடு பேசாமல் பொழுது அடைந்ததும் தன் அத்தையின் மெத்தில் போய் படுத்துக்கொள்வாளாம். அவள் புருசனுக்கு கோபம் என்றால் அப்படி ஒரு கோபம். அவளைத் தேடிப் போய் கூப்பிடுவதற்கும் வெட்கம். பெரியம்மாவிடம் போய், ஆத்தா இனி என் பொண்டாட்டி வந்தா அவளை உன் மெத்துல படுக்க விடாதே என்று கோபத்தோடு சொல்லியிருக்கிறார்.

நான் என்னப்பா செய்வேன்; அவ எங் கண்ணை மறைச்சிட்டு மெத்துக்கு ஓடிருதா; அவ எந்நேரம் போறா வாரான்னு நானு கண்டுக்கிட்டா இருக்க முடியும்; நீதான் அவளை பக்குவமா கூட்டிட்டு போவணும் என்று அவரும் சொல்லிவிட்டார்.

மறுநாள் பொண்டாட்டி எப்போது மெத்தில் ஏறுவாள் என்று பார்த்திருந்து இவரும் ஏறிவிட்டார். இவரின் தலை ஏணியின் உச்சியில் தெரிந்ததுமே, இப்ப நீரு கீழே இறங்கப் போறீரா இல்ல நானு இப்படியே குதிச்சிரட்டுமா என்று அவள் பயமுறுத்த இவர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அவள் கேட்கவில்லை. கீழே குதித்து விடுவேன் என்று மெத்து ஓரத்தில் போய் பயமுறுத்த இவருக்கு கோபம் சண்டாளமாய் வந்துவிட்டது.

சரசரவென்று கீழே இறங்கியவர் அப்படியே ஏணியையும் தூக்கிக்கொண்டு போய்விட்டார். தைமாதம் அவருக்கு கல்யாணம்

முடிந்திருந்தது. இப்போது சித்திரை தொடங்கியிருந்தது. பெரியம்மா ஏணியைக் காணோமே என்று கேட்க, உன் மருமவ வெய்யில்ல சோறும் தண்ணியுமில்லாம கிடக்கட்டும்; அப்பத்தேன் என் வசத்துக்கு வருவா என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மறுநாள் அவருக்கு காட்டில் வேலையே செய்ய முடியவில்லை. நம் பொண்டாட்டி இந்த வெயில்ல மொட்டை மெத்தில் சூடு தாங்காமல் என்னமாய் பரிதவிக்கிறாளோ என்று நினைத்தவர் காட்டிலிருந்து வீட்டுக்கு வந்துவிட்டார். வந்தவர் கீழே நின்றுகொண்டே, ஏன் இப்படி பச்சத் தண்ணி பல்லுல ஊத்தாம வெய்யில்ல கிடந்து சாவுறே; வா நம்ம வீட்டுக்குப் போவோம்; நானு போயி ஏணியை கொண்டு வரட்டுமா? என்று கேட்க மெத்திலிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. இன்னும் உனக்கு கொழுப்பு அடங்கல; வெய்யில்லேயே கிடந்து சாவு என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

அன்றைய பொழுதும் போய்விட்டது. மறுநாளும் விடிந்து விட்டது. மூன்று நாள் ஆனதைக் கண்டு அத்தைக்குப் பொறுக்கவில்லை. இந்தக் கத்தரி வெயிலில் மூணு நாளும் ஒருத்தி கிடந்தால் என்ன ஆகும் என்று உறவுக்காரர்களிடம் சொல்ல எல்லோரும் அவரிடம், நீ ஒரு மனுசனா? இந்தத் தீ பறக்கிற வெயில்ல ஒரு பொம்பளையப் போட்டு வறுத்து எடுக்கிறயே; அவளுக்கு என்னமும் ஒண்ணு ஆச்சின்னா... நீ உசு ரோட இருந்துக்கிடமாட்டே என்று ஆள் ஆளுக்கு விரட்ட அவர் பயந்து விட்டார். உடனே ஏணியைக் கொண்டு ஏறி மெத்தில் போய்ப் பார்க்க அங்கே ஒருவரையும் காணோம்!

என்ன நடந்தது என்றால், புருசன் ஏணியைத் தூக்கியதுமே அவர் பொண்டாட்டி தன் சேத்திக்காரிகளைக் கூப்பிட்டு ஒரு ஏணி கொண்டுவரச் சொல்லி இறங்கிப் போய்விட்டாள்.

பிறகு எல்லோரும் போய்க் கூப்பிட்டார்கள். வேவாத வெயில்ல என்னைப் போட்டு கொல்ல நினைச்சவருக்கு பொண்டாட்டி வேறே கேக்குதாக்கும் என்றவள் அவர் கூட வாழவே மறுத்துவிட்டாள். அடுப்பில வச்ச கொள்ளி எரிஞ்சிதானே தீரணும் என்று எல்லோரும் சமாதானப்படுத்தி அவர்களைச் சேர்த்து வைத்தார்கள்.

ஐஐஐ

தை மாதம் நெருங்க நெருங்க எங்கே பார்த்தாலும் வெள்ளாமை கள் 'கக்க கனிக்க' விளைந்து கிடக்கும். கருதின் சுமை தாங்க முடியாமல் தட்டையும் தாளும் ஊடுவரப்பு தெரியாமல் சரிந்து அரிவாளுக்காகக் காத்திருக்கும். எங்கும் தரிசு தப்பட்டையே கண்ணுக்குத் தெரியாது. விடியற்காலை பனியோடு விளையாடும் ஈரப்புற்கள் எங்களது

பாதங்களை கிச்சுகிச்சு மூட்ட யாருக்கும் தெரியாமல் அந்த வரப்பில் நுழைந்து புல் அறுப்போம். அறுப்பது காட்டுக்காரர்களுக்குத் தெரிந்து விட்டால் எங்களைக் கொன்றே போடுவார்கள். ஆனால் அவர்களால் பார்க்க முடியாது. அவர்கள் 'இந்த வட்டம் எம்புட்டுத் தானியம் பொலி யாவும்' என்று காட்டைச் சுற்றிச் சுற்றி வந்து கணக்குப் போட்டுக் கொண்டிருக்க நாங்கள்தான் காட்டுக்குள்ளே புல்லை அறுத்தவாறு அவர் களைப் பார்த்துக் கொண்டிருப்போம். அந்தப் புல் அடர்வில் எத்த னையோ முறை பாம்புகள் சுருண்டு கிடப்பதைப் பார்த்து திடுக்கிட்டிருக் கிறோம். அரிவாளின் நுனியால் அதை விரட்டிவிட்டு புல் அறுப்போம். சிலநேரம் அதன் உடலையும் புல்லோடு சேர்த்து அறுத்துவிட்டு பயத் தோடு நடுங்குவோம். சமயங்களில் நட்டுவாக்களி சிக்கிவிடும். அதை அடிக்காமல் விடவேமாட்டோம். அதை அடித்துப் புதைத்துவிட்டு ஏழு எட்டு நாள் கழித்து எடுத்துப்பார்த்தால் அதன் வாலில் உள்ள பாசிகள் நீளவடிவத்தில் இருக்கும். அதைப் பச்சப் பிள்ளைகளுக்குப் போட்டால் மாந்தம் பிடிக்காது என்பதால் அதற்கு ஏகக் கிராக்கி.

இப்படித்தான் கதிரேசன் பெரியப்பாவிற்கும், கோசலை பெரியம் மாவிற்கும் முன்பு சின்ன வயசில் கல்யாணம் பேசி முடித்து பூ வைத்து மஞ்சனையும் பூசியாகிவிட்டது. ஒருநாள் அவள் தோட்டத்திற்கு காய் பிடுங்குவதற்காக வந்திருக்கிறாள். அவர் பட்டாளத்தில் இருந்ததால் பூட்ஸ் காலோடு இந்த பெரியம்மாவின் கிணற்றுக்கு குளிக்க வந்திருக் கிறார். அவர் வரும்போது வரப்போரம்நின்றிருந்த கோசலை அந்த இடத்திலே அசையால் நிற்க கதிரேசனுக்கு ஆச்சரியம். தன்னைக் கண்டாலே எட்டடிக்கு அந்தப் பக்கம் துள்ளிக்கிட்டு ஓடுறவ இப்ப எதுக்கு இப்படி நிக்கா? எதுவும் அக்குசான சேதி கண்டு சொல்லப் போறாளா? என்று நினைத்தவாறு இன்னும் கொஞ்சம் அவள் பக்கமாய் நடக்க, இப்போதும் கோசலை அசையவே இல்லை. குனிந்த தலை குனிந்தபடியே நின்றிருக்கிறாள்.

இவ இப்படி நிக்கான்னா ஏதோ ஒண்ணு இருக்கணும் என்று நினைத்தவர், என்னத்தா கோசல! நானும் அப்ப புடிச்சிப் பாக்கேன்; நின்ன ரக்குலயே எதுக்கு நின்னுக்கிட்டு இருக்கே என்று கேட்டிருக்கிறார்.

கோசலை ராஞ்சனையும் பயமுமாக, கால்ல ஒரு பாம்பு எம்புட்டுக்கிடுச்சு; கால எடுத்தா எங்கன பாம்பு கடிச்சிருமோன்னு பயமா இருக்கு என்று சொல்ல அவர் திடுக்கிட்டுப் போனார். பக்கத்தில் வந்து பார்த்தார். நிஜமாகவே அவள் பாதத்துக்கு அடியில் நல்லபாம்பு கழுத் தோடு மிதிபட்டுக் கிடக்க அதன் வால் தரையிலும், அவள் காலிலுமாக அடித்துக்கொண்டு இருந்திருக்கிறது.

உடனே அவர் ஒரு ஐடியாவோடு தன் அருணாக் கயிற்றில் கிடந்த

சின்னக்கத்தியை எடுத்துக்கொண்டார். இந்தா பாரு கோசல நானு இந்த பாம்ப அடிக்க முடியாது. அதனால இந்த கத்திய வச்சி துண்டா அத அறுத்துப்போட்டுட்டு தள்ளி அங்கிட்டுப் போயி நின்னுக்கிட்டு உன்ன ஓடிருன்னு ஒரு சத்தம் கொடுக்கேன்; நீயும் ரெண்டு கா பாய்ச்சல்ல ஓடிரு. அறுபட்ட பாம்பு அந்த ரக்குலேயே சத்தோடம் துள்ளிட்டு பெறவு செத்துப்போயிரும் என்று சொல்ல கோசலை தலையை ஆட்டியிருக்கிறாள்.

பிறகு ஓடுவதற்கு பூட்ஸ் தடையாய் இருக்குமென்று பூட்ஸை வரப்போரம் கழற்றி வைத்துவிட்டு சொன்னபடியே கத்தியால் பாம்பின் உடம்பைத் துண்டாக அறுத்துப் போட்டிருக்கிறார். இரண்டு பிஞ்சைக்கு அப்பால் போய் நின்றுகொண்டு, கோசல... செடி நெருக்கமில்லாத திக்கமா ஓடிரு என்று எரச்சம் போட்டுச் சொல்ல கோசலையும் 'கறிக் கொடல கையில ஏந்திக்கிட்டு' தெக்குப்பக்கமாக ஓட்டம் பிடித்தாளாம்.

ooo

4

நடுச்சாமம் ஆகிவிட்டால் போதும் எல்லோரும், இனி முதுகுடியான் ஊருக்குள் வந்துருவாரு; ரொம்ப துடியான சாமி; அவரு எதுக்க கிதுக்க தட்டுப்பட்டுட்டோம், அம்புட்டுத்தேன் என்று சொல்லியவாறு போய் படுத்துக்கொள்வார்கள். அவர்கள் சொன்னமாதிரி நடுச்சாமத்துக்கு ஆட்டுக்கல் கடகடவென்ற சத்தத்தோடு ஆட்டும் சத்தம் கேட்கும். டக் டக்கென்று குதிரை ஓடுவதுபோல் கேட்கும். கோயில் மணி வேறு கலகலவென்று ஒலிக்கும். வயசுப் பெண்கள் உச்சிமத்தியானத்துக்கு சோடித்தவாறு கோயில் வழி போனால் மறுநாளே காய்ச்சலாக விழுந்து விடுவார்கள். சாமி கும்பிட்டு கேட்டால் முதுகுடி சாமி வந்து நானு வேட்டைக்கு கிளம்பும்போது இவ எதுக்க வந்துட்டாப்பா. என் பாலகிய நானு காப்பாத்துதேன் என்று துண்ணூரு போட உடனே காய்ச்சல் சீராகிவிடும். முத்தம்மா பாட்டிதான் கதை கதையாய் சொல்வாள்.

பெருமாள்தேவன்பட்டிக்கும் சொக்கலிங்கபுரம், மீனாட்சிபுரத்திற்கும் சம்பந்தம் நடந்தால் இரவில்தான் மறுவீடு போவார்கள். அதுவும் முதுகுடியான் கோயில் வழிதான் மங்கம்மாசாலையில் போவார்கள். போகும்போது ஒரு எறி தேங்காயை வீசிவிட்டுப் போவார்கள். முருகாயிக்கு கல்யாணம் முடிந்து இந்த முதுகுடி கோயில் வழி மறுவீடு வரும்போது அவள் கல் தடுக்கி விழுந்துவிட்டாள். இரவு நேரமாதலால் எல்லோரும் பயந்துவிட்டார்கள். அதிலும் மரங்களடர்ந்த அடர்வில் அந்தக் கோயில் தனியாய் ஒதுங்கியவாறு எல்லோரையும் பயமுறுத்திக் கொண்டிருக்கும். கோயிலைச் சற்றி ஓடைகளும் தாவுகளும் குளமுமாக இருட்டில் கருத்துக் கிடக்கும். ஆலமரம், இலுப்பைமரம், வில்வமரம் என்று மரங்கள் உயர்ந்து, அடர்ந்து வானத்தை அடைத்துக்கொள்ள எங்கும் கீ... என்ற இருட்டுதான்.

அந்த மாதிரி இருட்டுக்குள் விழுந்த முருகாயியை எல்லோரும்

பதறி அடித்து தூக்கி, என்னத்தா எங்குட்டும் அடி கிடி பட்டுருச்சா? கால தூக்கி வச்சி பாத்து வரக்கூடாது? இது சாமிக்கான எல்லையாச்சே என்று பதற, ஒரு தாத்தா சரி சரி, நம்மளுக்கு எது ஒண்ணு வந்தாலும் அந்த முதுகுடி தேன் காவலு; நடங்க என்றார்.

எல்லோரும் வீடு வந்து சேர்ந்த பிறகு முருகாயிக்கு காய்ச்சல் வந்து விட்டது. புதுப்பொண்ணானதால் எல்லோரும் பயந்து போனார்கள். அவள் புருசன் மாப்பிள்ளைச் சோறு கூட சாப்பிடாமல் குக்கிப்போய் உக்காந்திருந்தான். உடனே மருளாடியைக் கூப்பிட்டு திருநூறு போட ஆரம்பித்துவிட்டார்கள். மருளாடி மேல் துடியாக வந்த முதுகுடியான் 'ஆய்' என்று ஒரு அவயம் போட்டுவிட்டு சொன்னது :

அப்பா... நான் எண்ணைத் தல முழுவி, ஏகாந்தப் பொட்டு வச்சு வண்ணக்கவிபாடி வருகிற வேளையில அவன் ஆனான ஆணுமில்ல, ஆமணக்குத் தண்டுமில்ல; அவ பொண்ணான பொண்ணுமில்ல, பொடச்சிப் போட்ட பொக்குமில்ல. மரிக்கொழுந்தும் மஞ்சனயும் மணக்கிறதப் பாத்து அழகுபட்ட பொண்ணாயிருக்குமோன்னு வந்தேன். ஆனா பொண்ணு அசிங்கமா இருக்கப்போயி என் பெருவிரலால ஒரு எத்து எத்துனேன்ப்பா. அதேன் இப்ப துண்ணூரு போடுதேன். சரியாப் போவும்.

ஒருகை எரிச்சாம்பலை அள்ளி முருகாயி முகத்தில் போட முருகாயி அன்றே வெளிச்ச முகமும், சிரிப்பு ஒலியுமாய் அலைந்தாளாம்.

இதைக் கேள்விப்பட்ட எனது தாத்தாவிற்கு முதுகுடி மீது பயங்கரமான கோபம். முதுகுடியான் பொண்டுகள காப்பாத்தறதுக்கு இருக்காரா? இல்ல அவுகள சேத்துக்கிறதுக்கு இருக்காரா? இன்னைக்கு முதுகுடியான் கிட்டப் போயி அவர் நெஞ்சுக்கு நேரவே இத கேட்டுட்டு வாரேன் என்று ஆவேசத்தோடு புறப்பட்டு விட்டாராம். அவரது கல்யாணத்துக்கு சில தினங்களே இருந்திருக்கிறது. உடனே என் பூட்டி தன் தம்பி மகனைக் கூப்பிட்டு, ஏலேய், உம் மாமன் விருதா கூறுகெட்ட பய; முதுகுடியாங்கிட்டப் போயி என்னம்மோ கேக்கப் போறேன்னு போறான்; நீயும் அவங்கூடவே போ; அவன் என்னமும் அதங்கொதமான வேல செஞ்சான்னா அவங்கிட்ட ஏச்சிப்பேசி கூட்டிட்டு வந்துருடா என்று அனுப்பியிருக்கிறாள்.

மாமாவும் தாத்தாவும் போயிருக்கிறார்கள். போகும்போதே தாத்தா முதுகுடியானை வஞ்சிகொண்டே போயிருக்கிறார்.

எம்மான், முதுகுடியான் துடியான சாமி. மழ பேயுமின்னா பேயும். உம்ம பாட்டுக்கு எதையும் பேசிக்கிட்டு இருக்காதரும் என்று மாமா சொல்லி எச்சரித்திருக்கிறார்.

அவரு அப்படி துடியான சாமின்னா அவருமேல மோளுதேன்;

என்ன செய்தாருன்னு பாப்போம் என்று சொல்லிவிட்டு தாத்தா அப்படியே செய்திருக்கிறார். அவர் அப்படி செய்யும்போதே எங்கிட்டு இருந்தோ ஒரு குரல் இடிபோல 'போட்டேம் பாரு' என்று கேட்டதாம்.

''அய்யய்யோ செத்தேன்'' என்று அப்படியே விழுந்துவிட்டார். பிறகு அவருக்கு மூணு மாதம் இடுப்பு வரவில்லை. தாலி கட்டும்போது கூட இரண்டு பேர் பிடித்துக்கொள்ளதாலி கட்டினாராம். பிறகு வைத்திய மான வைத்தியம் செய்து முதுகுடியானுக்கு கிடா வெட்டி, பொங்கல் வைத்தபிறகும் அழகுத் தாத்தா கொஞ்சம் கூனலாகத்தான் அலைந் திருக்கிறார்.

நான் ஏதாவது சேட்டை பண்ணினால் முத்தம்மா பாட்டி சொல்வாள்.

நீ ஒன் சீயான் 'அழவு' மாதிரிதேன் சேட்ட பண்ணிக்கிட்டு இருக்கே; வம்பா சீரழியப் போறே என்பாள்.

அப்படி என்னதேன் என் சீயான் செஞ்சிட்டாரு? என்று நான் கேட்டதும் முத்தம்மா பாட்டி சொல்ல ஆரம்பித்தாள்.

உன் அம்மாவப் பெத்த தாத்தா பேரு அழகு. அவன பட்டாளத்து அழவுன்னுதேன் சொல்லுவாக. ஏன்னா நம்ம ஊருக்கே முத ஆளா பட்டாளமின்னு போனவனும் அவன்தேன். போயி கொஞ்ச நாளயில பட்டாளத்தில இருந்து சொல்லாமக் கொள்ளாம ஓடியாந்தவனும் அவன்தேன். இவன் பாட்டுக்கு எடுத்தேன் கவுத்தேன்னு ஓடியாந்துட் டான். அவனத் தேடி பட்டாளத்திலே இருந்து தொரைமார்க பத்து நாளைக் கொருக்கா வந்துருவாக. அப்பபெல்லாம் உன் அம்மி, அதேன் உன் சீயானப் பெத்தவ அவன ஒளிச்சி வைக்க அந்தப் பாடு படுவா. குலுக்கக் குள்ளயும், மாட்டுக் காடி, கெணறுன்னும் ஒளிச்சி வச்சிட்டு தொரை மாருக போவந்தண்டியும் ஈரக்கொலய கையில புடிச்சிக்கிட்டு பதறிப் போயி கெடப்பா.

தொரைக போய்ட்டாகன்னு தெரிஞ்சப் பெறவுதேன் உன் சீயான் மொகத்த வெளிய காட்டுவான். எதுக்குடா இப்படி ஒளியுதே. நானு உங்க கூட வரலன்னு சொல்லிட்டு உம் பாட்டுக்கு இருக்கவேண்டிதானன்னு சொன்னமின்னா... உனக்கு வெள்ளக்காரனப் பத்தி தெரியாது. இங்க நல்லவன் கணக்கா பேசி கூட்டிட்டுப் போயி தூண்கல்லுல கட்டி வச்சிக்கிட்டு, ஏண்டா பட்டாளத்த விட்டுட்டுப் போனேன்னு சாட்டயக் கொண்டி அடிச்சே கொன்னுபோடுவான்னு சொல்லவும் அவன் ஆத்தா, அய்யா என் ராசா! நீ எங்கயும் போவ வேண்டாம்; நம்ம காடு கரயப்

பாத்துக்கிட்டு பேசாம சம்சாரி வேல செஞ்சுக்கிட்டு இருன்னு சொல்லிட்டா.

இம்புட்டுச் சொன்னா உன் சீயானுக்குப் போதாதா? ரெண்டு கால மாட்டப் புடிச்சிக்கிட்டு நல்லாத்தேன் சம்சாரி வேல பாத்தான். நானுங் கிற ஆம்பளகூட அவன கணக்கான வேல செஞ்சிக்கிடமாண்டான். அப்படி வேல செய்வான். ராவுன்னு இல்ல, பகலுன்னு இல்ல. காடே கதின்னு கிடப்பான். இப்படி காட்டுலேயே கிடக்கானேன்னு உன் அம்மிய அவனுக்கு கட்டிவச்சா உன் பூட்டி.

பெறவுனாச்சிலும் வீடுன்னு தங்குனானா? சுத்துப்பட்ட ஊரு அம்புட்டும் போயி விளையாடிட்டு விடியக்கால தேரந்தேன் வீட்டுக்கு வருவான். ஊருக்கு ஒரு பொம்பள, இல்லயில்ல, தெருவுக்கு ஒரு பொம்பளன்னு வச்சிக்கிட்டு அலஞ்சான். அம்புட்டு பொம்பளைகளும் அவனுக்குத்தேன் ஆசப்பட்டாகளோ இல்ல அவன் இடுப்புல போட்டுருந்த 'பட்டரங்காக் கொடிக்கு'த்தேன் ஆசப்பட்டாகளோ!

பட்டரங்காக் கொடியா? அப்படின்னா என்னது பாட்டி?

அது வெள்ளில செஞ்சது. விரலு தண்டி இருக்கும். உன் சீயான் கருத்த ஆளாங்காட்டி அவன் இடுப்புல அந்தக் கொடி கானாக்கடியன் பாம்பு கணக்கா ஒரு மினுமினுப்பு கொடுத்துக்கிட்டு இருக்கும். நான்கூட, ஏலேய்... ஆம்பளைக்கு எதுக்கடா நவ? இந்த கொடியக் கொண்டா; ஆசாரிகிட்ட கொடுத்து அத அழிச்சி உன் பொண்டாட்டிக்கு தண்ட, கொலுசு செஞ்சு போடுவோமின்னு சொன்னேன்.

அதுக்கு அவன், போக்கா! இந்தக் கொடியப்பத்தி உனக்கு என்ன தெரியும்? இதுல ஒரு வசிய மருந்து வச்சிக்கிருக்கேன்! அந்த மருந்துல தேன் அம்புட்டு பொம்பளைகளும் எம்மேல பிரியப்படுதாக. என்னக் குத்தணும் கொல்லணுமின்னு வார என் பகையாளிகூட என்னக் கண்டு அஞ்சுதான்னா அதுக்கும் இதுல இருக்க வசிய மருந்துதேன் காரணம் அக்கான்னு அவன் சொல்லவும் நானுகூட அத நெசமின்னு நம்பிட்டேன்.

ஒருநாளு உன் சீயான ரகசியமா கூப்புட்டு ஏண்டா நெசமாத்தேன் உன் இடுப்புக்கொடியில வசிய மருந்து இருக்கான்னு கேட்டுதேன். அவன் கடகடன்னு சிரிச்சிக்கிட்டு, அக்கா இதுல மருந்துமில்ல, ஒண்ணு மில்ல. நானாத்தேன் அம்புட்டு பேருகிட்டவும் இப்படி ஒரு புரளிய கிளப்பிவிட்டுக்கிட்டு இருக்கேன்னு சொல்லவும் எனக்கு ஆச்சரியாமப் போச்சி.

எதுக்குடா இப்படி செய்தேன்னு கேக்க அவன், அக்கா இப்படி ஒரு புரளிய கிளப்பிவிட்டாத்தேன் என் எதிராளிக்கு எம்மேல இருக்க குறிய விட, இந்த கொடிமேலதேன் குறி இருக்கும். ஒரு மெரட்டல்தான். அத வச்சி நானு ஒரு எடங்கல் மடங்கல்ல தப்பிக்க தோதா போயிரும் இல்ல.

அதுக்குத்தேன் அப்படி சொல்லிக்கிட்டு அலையிதேன்னான்.

ஆனாலும் பொம்பள விஷயத்தால, ஊருக்குள்ள சண்ட போட்டுக் கிட்டு கட்டுக்கு அடங்காம இருந்தாலும் ஒரு விஷயத்தில அந்த புண்ணியவான் நல்லா உதவிசெஞ்சான்!

அது என்ன உதவி பாட்டி?

அந்தக் காலத்தில கம்பு விளையாட்டுல கெட்டிக்காரனா இருக்க வக ஊர் ஊருக்கு வந்து கம்பு விளையாட்டுல என்ன செயிக்க ஆளு இருக் கான்னு கேப்பாக. அவன செயிக்க ஆளு இல்லேன்னா அவனுக்கு ஊருக் குள்ள இருந்து 'படி' அஞ்சு ரூவா கட்டணும். அப்படி கட்டலேன்னா ஊரவே அழிச்சாட்டியம் பண்ணிட்டுப் போயிருவான். அதுலயும் இந்த ஒச்சினன் இருக்கானே...

அது யாரு பாட்டி ஒச்சினன்?

அவன் ஒரு பலவற்றப் பய. ஆளு ஒங்கும்தாங்குமா பெரிய மீசையுமா... ஆளப் பாத்தாலே நமக்கு வவுத்த கலக்கிரும். அப்படி ஆளு! ஆளுதேன் அப்படின்னா கொணத்திலயும் ரொம்ப தரவலியா போய்ட் டான். காடுகள்ல விளஞ்ச கருது காய அறுக்குறது. வசமான காள கன்னு பசு கட்டிக்கிடந்தா அவுத்துட்டுப் போறது. வெடலப் புள்ளைக ஒத்த சத்தயா காடு கரைக்குப் போனா அதுககிட்ட 'அதங்கொதமான' பேச்சு பேசுறது இப்படி சுத்துப்பட்டு ஊரு ஆளுகளயெல்லாம் பாடா படுத்திக் கிட்டு இருந்தான்.

ஒரு நா இப்படித்தேன் விடியமின்ன நடுத்தெருவுல வந்து நின்னுக் கிட்டு, ஏலேய்... என்கூட கம்பு விளையாட யார்ரா வாரதுன்னு மீசையை திருக்கிவிட்டுக்கிட்டு ஒச்சினங் கேட்டான். அவன் ஊருக்குள்ள வந்தாலே சனங்க 'அர்ச்சுனம் பேரு பத்துன்னு' ஓடுவாக. இவனுக்கு எதிர நின்னு யாரு பதிலு பேசுவா? அவன் வந்து நின்னதுமே நாயீ கோழி முதக் கொண்டு பதறிக்கிட்டு ஓடிருச்சி. அவன்கூட வந்த ஆளுக 'படி' வாங்க வந்தாக. உன் சீயானுக்கு பெரியப்பன்தேன் நாட்டாம. அவருதேன் முன்னக்கூடி ஒச்சினனுக்கு ரூவாயக் கொடுத்துட்டு பெறவு ஊருக்குள்ள வீட்டுக்கு வீடு துட்டு வசூலிப்பாரு. அன்னைக்கும் அப்படித்தேன். 'அம்மனுக்கு உகந்த வேப்பல கணக்கா பசேர்னு அஞ்ச ரூவா நோட்ட' எடுத்து ஒச்சினன் ஆளுககிட்ட நீட்டுனான். அதப் பாத்துக்கிட்டு இருந்த எனக்கு அந்த அம்மன் என் உடம்புக்குள்ள பூந்தாப்பல ஒரு வெறி வந்து ருச்சு. படக்கின்னு நாட்டாம கையில இருந்த அஞ்சு ரூவாய புடுங்கிட்டு, அடேய் அந்த ஒச்சினன் பயகிட்ட போயி சொல்லுடா. எந்தம்பி அழகு அவன கம்புல இல்ல, கம்பு முனையிலயே செயிச்சி காட்டுவான்னு! போடா போய் சொல்லுடான்னு வெறி புடிச்சாப்பல கத்திட்டேன்.

உன் பூட்டன் நாட்டாமயே பதறிப்போனாரு. என்னத்தா இப்படி

சொல்லி ஊருக்குள்ள வில்லங்கத்த வரவழைச்சிட்டயே? இவன் ஒதிய மரங்கணக்கா எப்படியாக் கொந்த ஆளு! அழவு சீத்தக் குஞ்சி கணக்கா இருக்கானே. இந்த முரட்டுப்பயகிட்ட புள்ளய பறிகொடுக்கப் போறயே, பறின்னாச்சிலும் கொடுத்துட்டுப் போறமின்னா இவன் இன்னி இதோட போவ மாண்டானே. செயிச்சிட்டோமிங்கிய மப்புல ஆதாளி போட்டுக் கிட்டுல்ல திரிவான்னு வாலறுந்த நாயா துடிக்காரு.

அதெல்லாம் எந்தம்பி செயிப்பான்னு சொல்லிட்டு வீட்டுக்கு வந்துட்டேன். என் வாயில இருந்து இந்த பேச்சு வந்ததுதேன். ஊரச்சுத்தி எட்டுத் திக்கமும், கல்லெறி கொல்லெறின்னு கிடக்கு. அப்பவே ஊரு ஆளுக என்னயதுட்டி கேட்டு வராப்புல வந்துட்டாக. நானு ஒருத்தர்கிட்ட ஒண்ணு பேசல. குக்கவந்த கோழி கணக்கா பேசாம மொடக்கி கெடக் கேன். நடுச்சாமம். உன் சீயான் வந்தான்.

எதுக்குக்காக இப்படி சொன்னே? ஏற்கெனவே நானு வம்புதும்புல மாட்டிக்கிட்டு கெடக்கேன். இது வேறயா? அதுலயும் அவன் ஆளும் விருமாந்தடி கணக்கா இருப்பானாம். பெரிய சண்டியருங்கூடயாம். கம்பு விளையாட்டுல பெரிய கெட்டிக்காரனாம். நானு அவனுக்கு முன்னால நிக்க முடியுமா? எனக்கு முதுவுல கூனலு வேறன்னு சொன்னான்.

எனக்கு வெளம் வந்துருச்சி. ஏண்டா கூனலு விழுந்தவன் நம்மளால ஒண்ணும் முடியாதுன்னு உம்பாட்டுக்கு வேல உண்டும், சோலி உண்டுமின்னு இருக்கயா? ஊரு வம்பயெல்லாம் இழுத்துட்டு வாரே. உம் மொகரைக்கு எத்தன பொம்பளைக? உன்னால எத்தன பேரு கதிகலங்கிக் கெடக்காக! அப்படித்தேன்டா இந்த ஒச்சினனும்! மனுசரப் பாடா படுத்துதான். பொம்பள புள்ளைகள ஒத்தையில சத்தையில போவ விடமாணேங்கான். இப்படியே அவன் அட்டகாசத்த எத்தன நாளைக்கு பொறுக்கது? ஒண்ணு நீ அவன செயிக்கணும்; இல்ல அவன் கையால சாவணும் அம்புட்டுத்தேன் நானு சொல்லுவேன்னன்.

உன் சீயான் சிரிச்சிக்கிட்டு, அட தாயோளி மவளே உனக்கே இம்புட்டு கெம்பிதம் இருக்கின்னா எனக்கு எம்புட்டு இருக்கும்! நானு நீ சொன்னபடியே அவன செயிச்சி காட்டுதேன்னு சொல்லிட்டான்.

உன் சீயான் ஒச்சினன் கூட கம்பு வெளாட்டுக்கு சம்மதிச்சிட் டான்னு தெரிஞ்சதும் அவன் எதிராளிக அதான் பொம்பளைகள காபந்து பண்ண முடியாத பயலுக அம்புட்டு பேரும் ஒச்சினங் கிட்டப் போயி 'தீப்புடிச்ச வீட்டுக்கு காத்து மாதிரி' மூட்டி விட்டுட்டாக. எய்யா, நீ கம்பு வெளாடுத சாக்குல அவன எப்படியாச்சிலும் கொன்னுரு. அப்படிக் கொல்ல முடியலேன்னா அவனோட ஒத்த காலனாச்சிலும் ஒடிச்சிப் போட்டுரு. அவன் கட்டுலுக்குள்ள மொடங்கிட்டானாம்னு எங்க காது குளுர கேட்டாப் போதும். அதுக்குண்டான செலவயும் நாங்க பாத்துக்கிடு

தோம். உனக்கு ரூவாயும் தாரோமின்னாக. அவன் கிட்டத்தில போயி, அய்யா அவன அடிக்கணுமின்னா மொத அவன் இடுப்புல போட்டுருக் கானே பட்டரங்காக்கொடி... அத அத்துப்போடு. அதுலதேன் அவன் அம் புட்டு வசியமும் வச்சிருக்கானாம். அத மட்டும் அத்துப் போட்டன்னு வச்சிக்கோ! அவன் பெறவு மூக்கணம் பூறுன காளதேன்! பெறவு நீ அவன என்னமும் செஞ்சிக்கிடலாமின்னு ரகசியமா குசுகுசுன்னு வேற சொல் லிட்டாக.

அவன்கிட்ட இம்புட்டு சொன்னதுமல்லாம இதே சோலியா அலஞ்சி உன் சீயான்கிட்ட வம்பு இழுத்து, ஏலேய் எங்ககிட்ட எதுக்குடா பேசுத; நீ சரியான ஆம்பளையின்னா ஒச்சினங்கிட்ட உன் வீரத்த காமி டான்னு சூடேத்திவிட்டாக. உன் சீயான் ஒச்சினன பாத்தது இல்லையாங் காட்டி அவன் என்ன பெரிய கொம்பனா? விளாசி தள்ளிரமாண்டேன்னு வீறாப்பா பேசிக்கிட்டு அலஞ்சான்.

அந்தா இந்தான்னு போட்டி நாளும் வந்துருச்சு. சங்கரபாண்டிய புரம் ஊருக்குள்ள ஒரு பொது எடத்தில வச்சி இந்த கம்பு வெளாட்டு நடக்கு. ஒச்சினன் செயிச்சிட்டா உன் சீயான் அவனுக்கு சொன்னபடி கேக்கணும். அவன் கூப்பிட்ட நேரமெல்லாம் போவணும். அவனுக்கு முன்னால கைகட்டி நிக்கணும். உன் சீயான் செயிச்சிட்டா ஒச்சினன் இம்புட்டவும் செய்யணுமின்னு பேச்சு.

இவுக போட்டியப் பாக்க சுத்துப்பட்டு ஆளுக மொத்தமும் திமு திமுன்னு கூடிட்டாக. நம்ம ஊர் மொத்தமும் கிளம்பிப் போச்சு. உன் சீயான் களத்தில இறங்கேலதேன் ஒச்சினனப் பாத்துருக்கான். பாத்ததுமே அவனுக்குள்ள கொஞ்சம் திடுக்கின்னுதேன் இருந்திருக்கு. ஆகா... இவன் எம்புட்டு பெரிய ஆளு. நம்ம எம்புட்டு ஆளுன்னு நினச்சவன் சரி மலத் தண்டில இருக்க ஆனய இம்புட்டுக்காணம் இருக்க சிங்கம் அடிச்சி சாச்சிருது. இதெல்லாம் ஒரு கணக்கான்னு தன்ன தெம்புபடுத்திக் கிட்டான்.

ஒச்சினன் பெரிய கெட்டிக்காரனாங்காட்டி ஒரு கண்வீச்சில எதிராளியப் பத்தி 'துணுப்பமா' எட போட்டுருவானாம். தன்னப் பாத்ததுமே அரண்டாப்பல வேர்த்து விறுவிறுத்துப் போன உன் சீயானப் பாத்ததும் அவனுக்குத் தெம்பு கூடிப்போச்சி. போயும் போயும் இவன் கூட சண்ட போடவா நம்மள கூப்புட்டாக! போட்டின்னு வச்சி என்ன கேவலமில்ல படுத்திட்டாக. சரி இப்ப நம்ம அதப்பத்தி என்னமும் சொன்னமின்னா பயந்துக்கிட்டு சொல்லுதான்னுருவாக. அவன ஒரே அடியில அடிச்சி சாச்சிட்டு பெறவு பேசிக்கிடுவோமின்னு முடிவு எடுத் துட்டான். அதுமட்டுமில்லாம உன் சீயான் இடுப்புல இருக்க அந்த கொடிய அத்து ஒரு பொம்பள கழுத்துல போட்டு அவன கேவலப்

படுத்தணுமின்னு தன்னோட ஆளுககிட்டவும் கெம்பிதமா சொல்லி யிருக்கான்.

கம்பு விளையாட்டு ஆரம்பமாயிருச்சி. காநாழி, அரநாழியில ஒச்சினந்தேன் கம்ப அடிச்சிக்கிட்டு வாரான். உன் சீயான் அவன எதுத்தே அடிக்கல. அவன் கம்படிய வாங்கிக்கிட்டு பின்னாலேயேதேன் வாரான். அவனுக்கு தெரிஞ்சி போச்சி, ஒச்சினன விளயாடி செயிக்க முடியாது; தந்திரமாத்தேன் செயிக்கணுமின்னு! அதனாலதேன் கம்பு வாங்கிக்கிட்டு பின்னாலயே வரான். இவன் இப்படி பின்வாங்கவுமே ஒச்சினனுக்கு தெம்பு கூடிப்போச்சி. என்னப் பாத்ததுமே பய அரண்டு போனான். ஆனாலும் கொஞ்சமாச்சிலும் எதுத்து நிப்பான்னு பாத்தா பயந்துக்கிட்டு பின்னுக்கேவில்ல போறான். அப்ப மொத இவன சாய்ப்பமா? இல்ல இவன் இடுப்புல இருக்க கொடிய அத்து அத்த கம்பாலயே பொம்பள கழுத்தில அதுவும் அவன் சேத்திருக்க பொம்பள கழுத்திலேயே போடுவ மான்னு ரோசிச்சிக்கிட்டே கொஞ்சம் 'அசமந்தமா' இருக்கையில உன் சீயான் சுதாரிச்சிக்கிட்டான்.

பின்னுக்குப் போறது கணக்காப் போயி ஒரு கட்டத்தில இவன் தலைக்கு மேல வீச்சுப் போட்ட ஒச்சினன் கம்ப இவன் கம்போட சேத்துப் புடிச்சி, புடிச்ச மாயத்தில அவன் காலவும் தட்டி விட்டுட்டான். அம்புட்டுத்தேன்! வேரு அறுந்த மரங்கணக்கா ஒச்சினன் மட்ட மல்லாக்க தரையில சாய, வெட்டவெளிப் புழுதியெல்லாம் அவன் முதுவுலதேன் ஒட்டிக்கெடக்கு!

இம்புட்டு போதாதா உன் சீயானுக்கும், நம்ம ஆளுகளுக்கும்! இவன் கழுத்தில ஒரு மாலயப் போட்டு தலயில பட்டு உருமாலக் கட்டி ஆகோய் அய்யாகோயின்னு அவன தோள்ல தூக்கிக்கிட்டு அன்னைக்குப் பொழுது ஊரு பூரா சுத்தியிருக்காக. அதிலயும் எதிராளிக நெஞ்சில ஏறி மிதிச்சாப்பல சத்திரப்பட்டி போயி அவுக வீட்டையேதேன் ஆதாளி போட்டுக்கிட்டு சுத்தியிருக்காக.

எதிராளிகளுக்கு இன்னும் கடுப்பு ஏறிப்போச்சி. இவன் பொகய காணாம விடக்கூடாதுன்னு ஒவ்வொருத்தனும் வென்னித்தண்ணிக்குள்ள விழுந்தாப்புல கொதிச்சிருக்காக. பெறவு எல்லாரும் ஒண்ணாக் கூடுனாங்க. ஒச்சினன நம்பியிருந்தோம். அவன் மூக்க அறுத்துட்டான். இனி யாரயும் நம்பக்கூடாது. நம்மளே அவன தந்திரமும் மந்திரமுமா புடிக்கணுமின்னு கூடிப் பேசயில அவுகளுக்கு ஒரு ரோசன தோணிருச்சி.

சத்திரப்பட்டி ஊருக்குள்ள உன் சீயானுக்கு ஏகப்பட்ட பொம்பளைக கூட பழக்கமிருந்தாலும் கோமதி மேலதேன் அவனுக்கு ரொம்ப ஆச. அவளும் பாத்தா பசி அடங்குறாப்புல அப்படி பொம்பள யாம். ஒரு பிடி இடுப்பும், உள்ளங்கை கணக்கா இத்தினீ முகமும்,

எடுத்துக்கட்டுன நாசியுமா எலஞ்சிப்பூவா... இருப்பாளாம். அவளப் பாக்காம, அவகூட பேசாம ஒரு நாகூட உன் சீயானுக்கு இருக்க முடியாது. அவளும் அப்படித்தேன். இவனப் பாராம அவ இருக்க மாண்டா. இவன் அவ வீட்டுக்கு தனிக்கர வரலாம், போவலாமிங்கிறதுக்கு அடையாளமா வெளிய இருக்க மாடக்குழியில ஒரு பூக்கோலம் போட்டு கிளியஞ் சட்டியில தீவம் போட்டு எரிய வச்சிருவாளாம். உன் சீயான் வெளியூரு கிளியூரு போய்ட்டான்னா இவ தீவம் போட்டு வச்சத என்னத்தக் கண்டான்? போவாம இருந்துருவான். அவ ஒரு சாமம் வரைக்கும் பாப்பா. அப்பவும் இவன் போறாப்பல தெரியலன்னு வச்சிக்கோ. அப்பவே. ஒரு ஆள மச்சத்தோட நம்ம ஊருக்கு அனுப்பி வச்சிருவா. இப்படி இவுக ரெண்டு பேரும் 'உள்ளங்கையும் பெறங்கையுமா' இருக்கது ஊருக்கெல்லாம் தெரியும்.

உன் சீயானோட எதிராளிக எல்லாம் அவளச் சேந்த சாதி சனந்தேன். இவுக எல்லாம் கூடி அவளப் புடிச்சாத்தேன் இவனப் புடிக்கலாமின்னு திட்டம் போட்டு அவளத் தேடிப் போனாக.

ஒரு வேத்து சாதிக்காரன் வந்து நம்ம சாதி பொம்பளைகள அழிச்சட போட்டுக்கிட்டு இருக்கான். பொம்பளைகளும் அவனுக்கு எடம் கொடுத்துக்கிட்டு இருக்கீக. அதுலயும் நீதேன் அவன மொத்தமா கையிருப்பா வச்சிக்கிட்டே. இது நம்ம ஊரு ஆம்பளைகளயே கேவலப் படுத்துதாப்பல இருக்கு. அதனால நாங்கள்லாம் கூடிப்பேசி ஒரு முடிவு எடுத்திருக்கோம்னு சொன்ன உடனே அவ பதறிப் போனா.

என்ன முடிவுன்னு ருக்கி கொராவிப் போயி பய்ய கேட்டு இருக்கா.

நீ அவன இன்னைக்கு ராத்திரிக்கு வரவழைச்சி எப்பவும் போல அவன் கூட சிரிச்சி பேசிக்கிட்டு இருக்கே. நாங்க அவன் வாரத பாராதது கணக்கா பாத்துட்டு பத்து இருவது பேரு வரையிலும் ஒன் வீட்ட சுத்தி வளச்சிப் புடிச்சிருதோம். இதுக்கு நீ சம்மதப்படலேன்னா இப்பவே உன்ன கையக் காலக் கட்டிக் கொண்டுபோயி அவன் வீட்டுல போட்டுட்டு வந்துருவோம். நீ பெறவு அந்தப்புறத்து ஆளுதேன். நம்ம ஊரு எல்லயக் கூட மிதிக்கக்கூடாது. எங்க யாருகிட்டவும் தாயீ புள்ளைன்னு பேசவும் கூடாதுன்னு சொல்லுதாக.

கோமதியோட தேகமெல்லாம் ஆட்டங் கண்டுருச்சி. அந்தமான வந்தவக கால்ல விழுந்துட்டா. எனக்கு தாயி புள்ளைகதேன் பெருசு. நாள ஒரு ஈக்கேடு எசகேடு வந்துட்டா வேத்து சாதிக்காரப் பய வந்து உதவு வானா? நீங்க என்ன சொன்னாலும் நானு கேக்கேன்னு மண்டிக்கால் போட்டு அழுதிருக்கா.

இவுகளும் அவள எழுப்பிவிட்டாக. பெறவு இன்னைக்கு மொதல்ல அவன வரச் சொல்லிவிடு. பெறவு நாங்க பாத்துக்கிடு

தோமின்னு சொல்லிட்டு வாரவன புடிக்க என்ன செய்யலாம், எப்படிப் புடிக்கலாமின்னு கூடிப்பேசுதாக. ஆனா அவுகளுக்கு மாடக்குழியில விளக்கேத்தி வைக்குத விசயம் தெரியாது. கோமதி சொல்லவுமில்ல.

உன் சீயான் வேலயெல்லாம் முடிச்சிட்டு உன் அம்மி வட்டில்ல வச்ச சோத்த திங்க உக்காந்திருக்கான். கோமதியோட தூது ஆளு மச்சத்தோட வந்துட்டான். கோமதின்னாத்தேன் இவனுக்கு பனங்கருப் பட்டி கணக்காவில்ல. நீ போ நானு வாரேன்னு அந்தமான வெளுத்த வேட்டி துண்ட போட்டுக்கிட்டு மடியில வங்கியவும் தூக்கிச் சொருவிக் கிட்டு சாப்புடாம போயிட்டான். ஆனா போற போக்குலயே மாடக் குழிய பாத்திருக்கான். அங்க எண்ணயுமில்ல. தீவமுமில்ல. அப்பவே இவனுக்கு என்னமோ நடக்கப் போவுதுன்னு புரிஞ்சிபோச்சி. ஆனாலும் முன்வச்ச காலப் பின்வைக்கக்கூடாதுன்னு வீம்பு புடிச்சிப் போயி கோமதி வீட்டுக்குள்ள மொளஞ்சிட்டான்.

இவன வரச்சொல்லிவிட்ட கோமதியப் பாத்தா அவ ஆடு மேஞ்ச முருங்கக் கன்னு கணக்கா மொட்டையா கெடக்கா. ஒரு சிரிப்பில்ல சிணுக்கமில்ல. இருளடிச்சாப்பல இவனுக்கு முன்னால வந்து உக்காந்தவ வாயத் தொறந்து எதுவும் பேசாம சுத்தியும்முத்தியும் வெருண்டுபோயி பாக்கா. ஒன் சீயான் தண்ணியில தடமெடுப்பான், தருமரோட வழிநடப் பான்! அப்படியாக் கொந்தவனுக்கு இவுக வேசங்களா தெரியாது? இவனும் ஒண்ணும் தெரியாதவன் கணக்கா, என்ன கோம்தி! முக மெல்லாம் ஒருவடியா கெடக்கு; மேலுக்கு சேட்டமில்லயா? நீ வரச் சொன்னேங்கவும் நானு காட்டுல இருந்தமான வந்துட்டேன். வவுறு பசிக்கு. இம்புட்டு மோரு இருந்தா கடைஞ்சி கொண்டா குடிப்போ மின்னு பய்ய அவள அங்க இருந்து போவச் சொல்லிட்டான். அவ அங் கிட்டுப் போகவும் இவன் கட்டுல்ல ஏறி சுவர்ல கால வச்சி நாலு ஓட்டப் பிரிச்சி வெளிய வந்துட்டான்!

ஓட்டு மேல இருந்துக்கிட்டு சுத்திலும் பாத்திருக்கான். பெரிய பெரிய படப்புகளும், கந்து கந்தா வெறவுகளும், கப்பும் கவுறுமா வீச்சோடிக் கெடக்குற வாக, வேம்பு மரங்களும் அங்கங்க மறவு வச்சாப் பல இருக்க, அதுக்குள்ள ஆளுங்க பதுங்கி இருப்பாகன்னு இவனுக்கு தெரிஞ்சி போச்சி. ஆகா நம்மள புடிக்கதுக்குன்னு இவுக வலய விரிச்சிருக் காக. நம்ம தெரியாம வந்து இங்க மாட்டிக்கிட்டோம். நம்ம எப்படியும் இவுககிட்ட இருந்து தப்பிச்சிரணும். அப்படியே நம்ம உசுரு போனாலும் இவுக கையால போவக்கூடாதுன்னு நெனச்சவன் ஒண்ணுபோல வரிசயா இருந்த ஓட்டுவீட்டு மேலகூடியே ஒரு வீட்டுக்கு ஒரு வீடு தாவி ஏழாவது வீட்டுக்கு வந்துட்டான். அந்த வீடு உன் சீயானுக்குப் பிரியமான சேத்திக் காரன் நகுலன் வீடு. நகுலன் வீட்டு ஓட்டப் பிரிச்சி ஒரு சத்தம் பய்ய கொடுக்கவும் நகுலன் பாத்துக்கிட்டு அரவமில்லாம கொல்லப்புறத்து

கதவ தொறந்து விட்டுருக்கான்.

அங்க கோமதி, அய்யய்யோ அந்த முடிவானக் காணமே நானு என்னத்தப் பேசட்டுமின்னு அவயம் போட ஆளுக அங்கிட்டும் இங்கிட்டும் திடுதிடுன்னு ஓடவுமா இருக்க எந்தம்பி பிரிச்ச ஓட்ட பழைய படிக்கு போட்டுட்டு ஓட்டுல இருந்து கீழே குதிச்சி கொல்லப்புறமா வீட்டுக்குள்ள மொளஞ்சதும் நகுலன் அவன குலுக்கைக்குள்ள எறக்கி விட்டு குலுக்க மூடியவும் ஒருக்கழிக்க மூடிவச்சிட்டான்.

அதுக்குள்ள நகுலன் வீட்டு கதவயும் தட்டிருக்காக. நகுலன் பதறாம வந்து கதவத் தொறந்து பாத்தா வெளிய திமுதிமுன்னு ஆளுக நின்னுக்கிட்டு இருக்காக. இவன் என்னன்னு கேக்குமுன்னேயே அவுக 'அளவு' இங்க வந்தானான்னு கேக்க இவனும், என்னப்பாகூறுகெட்டாப் பல கேக்கீக? அவன் உங்களுக்கு பகையின்னா எனக்கும்தான பகையாளி! நானு மட்டும் அவன கூப்பிட்டு உள்ள வச்சிருப்பனா? நானும் எம் பொண்டாட்டியும் தவுத்து வீட்டுக்குள்ள யாருமில்ல. வேண்ணா வந்து பாத்துக்கோங்கன்னு சொல்ல இவுகளும் வீட்டுக்குள்ள வந்து தேடிட்டு யாருமில்லன்னு போயிட்டாக. பெறவு எப்படியோ உன் சீயான் ஒருவழியா விடியக்காலத் தேரம் இருட்டோட இருட்டா வீடுவந்து சேந்தான்.

நான் சத்திரப்பட்டி போகும்போதெல்லாம் சில சமயம் 'இவதான் அழகு பேத்தியாளா...' என்றவாறு தங்களுக்குள் குசுகுசுவென ஏன் பேசிக்கொள்கிறார்கள் என்று எனக்கு இப்போதுதான் புரிந்தது.

இம்புட்டு கெட்டிக்காரரா இருந்தவரு பெறவு எப்படி பாட்டி ஊரு விட்டு ஊரு போயி செத்தாரு?

அது அவன் செஞ்ச நட்டண. உனக்குப் பூட்டன் அதேன் உன் சீயானுக்கு சின்னப்பச்சி செத்துப்போனான். அவனுக்கு புள்ளயுமில்ல கொள்ளியுமில்ல. இவன்தேன் கொள்ளிவச்சான். கொள்ளிவச்ச தீக்காலோட ஊரு தேசமின்னு எங்கிட்டும் போகக்கூடாது. பதினாறு நாளைக்கு போகக்கூடாதுன்னாலும் கண்டிப்பா 'பெரிய சாத்திரம்' முடியுத வரைக்கும் போவக்கூடாது. உன் சீயானா கேப்பான்? அம்புட்டு பேரும் சொல்லிப் பாத்தாக. அம்புட்டு எதுக்கு? உன் சீயானுக்கு அவன் ஆத்தான்னா உசுரு. அவ கூட வந்து, எய்யா என் ராசா நீ போவணுமிங்க. ஆனா 'சமனமே' கொடுக்கமாணேங்கு. கட்டுச் சோத்தக் கொண்டாந்து அம்மியில வச்சேன். ஒரு ஆளு தள்ளி விட்டாப்பல அது கீழே விழுவுது. அடுப்புல வெந்துக்கிட்டு இருந்த சோளக்கஞ்சி பான பொத்துக்கிட்டு வீடெல்லாம் சுடுகஞ்சியா கொட்டிக்கிடக்கு. இன்னைக்கு நீ போவ வேண்டாமய்யான்னு சொன்னதுக்கு உன் சீயான் சீனி கணக்கா பல்லுமா கடகடன்னு சிரிச்சிக்கிட்டு, ஆத்தா நீ அம்மி ஓரத்தில கட்டுச்சோத்த

வச்சிருப்பே, அது உளுந்துருச்சி; துடுப்பக் கொண்டி கிண்டுதேன்னு சோளக்கஞ்சிப் பானய இடிச்சிருப்பே, அது பொத்துக்கிடுச்சின்னு அதுதுக்கு ஒண்ணு சொல்லிட்டு அவன் அண்ணன் மகன் ராமசாமியவும் தொணைக்கு கூப்பிட்டுக்கிட்டு மதுரைக்கிட்ட இருக்க சுப்பலாபுரத்துக்கு மாடு புடிக்க போயிருக்கான். அப்ப பாத்து அந்த ஊருல எல்லாருக்கும் காலரா வந்து செத்தும் சாவாமயும் உசுருக்குப் போராடிக்கிட்டு இருந்திருக்காக. உன் சீயானுக்கும் காலரா வந்துருச்சி. அவனுக்கு நம்ம செத்துப் போவோமின்னு தெரிஞ்சுபோச்சி. அப்போ பஸ்சு வசதியுமில்ல. தன் அண்ணன் மவங்கிட்ட ஏலேய் இன்னி நானு பொழைக்க மாண்டேன். நீ போயி பெரிய அப்பச்சிய வண்டிகட்டச் சொல்லி கூட்டிட்டு வான்னு சொல்லி அனுப்பிவச்சான். அவன் கால் நடயா இங்க வந்து ஊருக்குள்ள விவரத்த சொல்லி வண்டி கட்டிப் போவாங்குள்ளயும் உன் சீயான் செத்துப் போனான். காலராவில செத்தவகள ஊருக்குள்ள கொண்டு போவக்கூடாதுன்னு அங்கயே புதைச்சிட்டு வந்துட்டாக.

போன எடம் தெரியாம போவட்டுமின்னு எந்த பத்தினி, உத்தமியா வாக்கு விட்டாளோ... அது உன் சீயான் விஷயத்தில சரியாப் போயிருச்சி என்ற பாட்டி நீண்டபெருமூச்சுவிட்டாள்.

ooo

அக்காவுக்கு சேட்டமில்லயாம்; அதேன் நம்ம எல்லாரும் மெட்ராசுக்குப் போயி அவளப் பாத்துட்டு வருவோம் என்றாள் என் அம்மா. அதைக் கேட்டதும் எங்களுக்கு வந்த சந்தோசம் சொல்லி முடியாது. அதோடு அக்காவுக்கு எப்பவும் சேட்டமில்லாமல் போகட்டும்; அப்பத்தேன் நம்ம எப்பவும் மெட்ராசுக்கு போகலாம் என்று ராஜாவும் நானும் பேசிக்கொண்டோம்.

ரயிலில் போவதென்று ஏற்பாடு. அம்மா என்ன மாயம் செய்தாளோ! கொட்டத்திலிருந்த மூன்று மாட்டை காணோம். இரண்டு சின்னக் கன்னுக்குட்டிகள் மட்டும் தனிக்கர கூளத்தைத் தின்று கொண்டிருந்தன. அதையும்கூட வசந்தாவின் அப்பா பிடித்துக்கொண்டு போய்விடுவாராம்.

சோத்து மூட்டையெல்லாம் கட்டி, தலை சீவி கொஞ்சம் புதுசான ஒரு தடவை இரண்டு தடவை மட்டுமே வெளுத்த சட்டையை அன்று போட்டிருந்தோம். அன்று முழுக்க எங்களுக்கு கால் ஒரு இடத்தில் நிலை கொள்ளவில்லை. ஊரெல்லாம் ஓடி ஓடிக் கேட்டவர்களிடமும் கேக்காதவர்களிடமும் நாங்கள் மெட்ராஸ் போறோம், மெட்ராஸ் போறோம் என்று சொல்லிவிட்டு வந்தோம். ஒரு சில வேண்டிய சேத்திக்காரகளுக்கு நாங்கள் சேத்து வைத்திருந்த தட்டாங்கல், மாங்கொட்டை, புளியங்

கொட்டை எல்லாவற்றையும் கொடுத்து நாங்கள் மெட்ராஸிலிருந்து வரும்வரை விளையாடுங்கள் என்று சொன்னோம்.

சத்திரப்பட்டி போய் பஸ் ஏறி ராஜபாளையம் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கியபோது எனக்கும் மூத்த தம்பிக்கும் சந்தோசம் தாங்க முடியவில்லை. இளையவன் மத்தியானம் அம்மாவை ஒட்டியவன்தான், பிறகு பிரியவே இல்லை. எங்களுடன் கூட வரமாட்டேன் என்று சொல்லி விட்டான்.

நாங்கள் ஸ்டேஷன் முழுக்க ஓடி ஓடி அலைந்தோம். அக்காவிடம் என்ன என்ன சொல்ல வேண்டுமென்று பேசினோம். முதலில் அக்காவிடம் கேட்ட வேண்டியது இதுதான். எங்கள் ஊரில் நிலா இருக்கு. நாங்க எங்கே போனாலும் அதுவும் எங்க கூடவே வருது! உங்க மெட்ராசுல நிலா இருக்கா? அது உங்க கூடவே எங்க போனாலும் வருதா? அப்போ உலகத்துல எத்தன நிலா இருக்கு?

நாங்கள் ஒரு விளையாட்டு விளையாடுவோம். இந்த விளையாட்டுக்கு வசந்தா, கணேசன் யாரையும் சேர்க்க மாட்டோம். எங்கம்மா இல்லாத நேரத்தில் நானும் தம்பிகளும் வாசலில் படுத்துக்கொண்டு மேகத்தைப் பார்த்தவாறு இருப்போம். இந்த மேகத்தை குதிரையாக யானையாக அரக்கனாக நம் இஷ்டம்போல் நினைக்க வேண்டும். அதை உடனே அடுத்தவரிடம் காட்ட வேண்டும். அவர்கள் பார்க்கும்போது நாம் நினைத்த மிருகமாக அவர்களுக்குத் தெரிந்தால் நாம் ஜெயித்தவர்கள். அப்படித் தெரியாவிட்டால் தோற்றவர்கள். இந்த விளையாட்டை அக்காவிடம் சொல்லி அவளோடு விளையாடவும் ஆசைப்பட்டோம்.

ரயில் வந்துவிட்டது. என் அம்மா இளைய தம்பியைத் தூக்கிக் கொண்டு மூட்டை முடிச்சுகளையும் ஏற்றிக்கொண்டு சீக்கிரம் ஏறி வாங்க என்று எங்களிடம் சொல்லிவிட்டு ரயிலுக்குள் போய்விட்டாள். நாங்கள் ஏறுவதற்குள் நிறைய ஆட்கள் எங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு ஏறிக்கொண்டே இருந்தார்கள். எங்களால் ஏற முடியவில்லை. கூட்டத்திற்குள் போய் நுழைவோம், பின்னுக்குத் தள்ளுவார்கள். இப்படியே இருக்க கொஞ்ச நேரத்தில் நாங்கள் வெளியே நிற்கும்போது ரயில் போய் விட்டது. நாங்கள் இருவரும் அம்மா... அம்மா... என்று கத்திக் கொண்டும் அழுதுகொண்டும் ரயிலின் பின்னாலேயே ஓடினோம். ரயில் போயே போய்விட்டது. இரண்டு பேரும் அழுதுகொண்டே அங்கேயே நின்றோம். யாரும் எங்களை என்ன ஏது என்று கேட்கவில்லை.

கொஞ்ச நேரம் அழுதுவிட்டு வீட்டை நோக்கி நடந்தோம். சஞ்சீவி மலையை ஒட்டிதான் ரயில் தண்டவாளம் போகிறது. அந்த மலைக்கு அடிக்கடி வந்ததால் ஊருக்குப் போவதற்கு எங்களுக்கு வழி தெரிந்தது. நானும் ராஜாவும் கண்ணீரைத் துடைத்தவாறு கையைக் கோர்த்துக் கொண்டு தண்டவாளம் வழியே நடந்து ரோட்டுக்கு வந்து பிறகு ஊருக்கு

வந்தோம். ஊருக்கு வரும்போது இருட்டிவிட்டது. எங்களைப் பார்த்த வர்கள் எல்லாம், என்னத்தா இது! மெட்ராசுக்குப் போறேன்னுட்டு கண்ணீரும் கம்பலையுமா வாரீக; உங்கம்மாள எங்கே என்று கேட்டார்கள்.

நாங்கள் யாரிடமும் பேசவில்லை. விக்கி விக்கி அழுதுகொண்டே எங்கள் வாசலில் வந்து சேர்ந்தாற்போல் படுத்து முடக்கிக்கொண்டோம். பெரியம்மா, அத்தை, பாட்டி என்று எல்லோரும் வந்து அவர்கள் வீட்டில் சாப்பிடவும் படுக்கவும் எங்களைக் கூப்பிட்டார்கள். நாங்கள் பேசாமல் படுத்திருந்தோம். வசந்தாவிற்கும் சரசுவிற்கும் தெரிந்து அவர்களும் வந்து எங்களைக் கூப்பிட்டார்கள். அப்போதும் நாங்கள் அழுதுகொண்டு தான் இருந்தோம். அவர்கள் போய் கணேசனிடம் சொல்லி அவனைக் கூட்டி வந்தார்கள்.

அவனும் சாப்பிடக் கூப்பிட்டான். நாங்கள் அதற்கும் பேசாமல் இருக்க அவன், நீங்க சாப்பிடமாட்டீகன்னு தெரிஞ்சுதான் இந்தா எலந்தப் பழம் கொண்டாந்தேன்; இதையாவது தின்னுங்க என்றான். அதை வாங்கித் தின்றுவிட்டு தண்ணியைக் குடித்தோம்.

பத்து பதினோரு மணி இருக்கும். என் அம்மா அலைமோதிக் கொண்டு வீட்டிற்கு வந்தாள். தர்மன் ஓடிவந்து எங்களைக் கட்டிக் கொண்டான். எங்களுக்கு தம்பியைப் பார்த்ததும் அழுகையும் சிரிப்புமாய் வந்தது.

ஏண்டா, ரயில்ல ஏறுங்கன்னு சொன்னேனே ஏன் ஏறல என்று ராஜாவிடம் கேட்டாள் அம்மா.

எங்களால ஏறமுடியல என்றான் அவன்.

எங்க போனாலும் அவதேன் அசமந்தம் புடிச்சாப்பில நிப்பா; உனக்கென்ன வந்துச்சு, நீ ஏற வேண்டியதுதான என்று அம்மா கேக்க அவனும் நாங்கள் ஏறப் பட்ட பாட்டைச் சொன்னான்.

நல்லவேளை வீட்டுக்குனாச்சிலும் வந்தீக. முன்னால உங்க பெரியக்கா தொலஞ்சு போயி எங்கள அந்தப் பாடு படுத்திட்டா. அப்படித்தேன் நீங்களும் காணாமப் போயிட்டீகளோன்னு பதறிப்போயி பரிதவிச்சி ஓடியாறேன். சரி, இன்னி நானும் தம்பியும் மட்டும் மெட்ராசுக்கு போறோம். உன் பள்ளிக்கூடத்து லீவுக்கு நீயும் அவளும் போங்க என்றாள். அவனும் சரி என்று தலையை ஆட்டினான்.

அம்மா ரயிலுக்குள் ஏறி கூட்டத்தைக் கடந்து மூட்டையை வைத்து விட்டு உட்காருவதற்குள் ரயில் ஸ்ரீவில்லிப்புத்தூரைக் கடந்து விட்டதாம். அதன் பிறகு சிவகாசியில் இறங்கி பஸ் பிடித்து வீட்டிற்கு வந்திருக் கிறாள். பிறகு சோத்து மூட்டையை அவிழ்த்து எல்லோரும் சாப்பிட்டு விட்டுப் படுத்தோம்.

மழைக்காலம் முடியும்வரை வீட்டில் அங்கங்கே ஒழுகும். ஊரெல்லாம் ஒரே தண்ணிதான். இந்த மழைக்காலங்களில்தான் நிறைய வேலை இருக்கும். ஏழையிலிருந்து பணக்காரர்கள் வரை மழையில் நனைந்துதான் ஆக வேண்டும். சின்னது பெரியது குஞ்சு குளுவான் எல்லாம் காட்டில்தான் கிடப்பார்கள். சின்னப்பிள்ளைகள் மரத்தில் கட்டியிருக்கும் தூளிகளில் தூங்கிய நேரம் போக எல்லா வேளையும் பசியோடு அழுதுகொண்டிருக்கும். அடுத்தடுத்துப் பிறந்த பிள்ளைகள் அண்டியும் சவலையுமாக நான்கைந்து வருசம் ஆகியும் நடக்க முடியாமல் குண்டியை மட்டுமே இழுத்துக்கொண்டு பார்க்க பரிதாபமாய் அலையும். பசி நேரத்தில் மட்டும் அவர்களுக்கு வெங்கலக் கும்பாவில் ஏதாவது ஒரு கஞ்சியை கரைத்து வைத்து விடுவார்கள். கும்பா கனமாக இருக்குமா தலால் அதைத் தூக்கவோ, கஞ்சியைக் கீழே கொட்டவோ பிள்ளைகளுக்கு முடியாது. கஞ்சியைக் குடிக்கிறேன் என்று மேலும் கீழுமாய் அள்ளி அள்ளி... அவர்களின் முகம் உடம்பு முழுக்க கஞ்சி வடிந்து கிடக்கும். சிந்திய கஞ்சிக்கு ஈக்களும் போட்டி போடும். தாய்க்காரிகளுக்கு இவர்களை கவனிக்க நேரமிருக்காது.

வேலைக்கு கூப்பிட்டவள் ஓடிஓடி நிறை போடுவாள். அவளைத் தொடுத்து நிறை கொண்டு போகவேண்டும். அப்படிப் போகாமல் பின் தங்கிக் கிடந்தால் ஏசுவார்கள். அதோடு மறுநாள் முகத்தை திருப்பிக் கொண்டு போவார்கள். அடுத்தவர் வேலைக்கு கூப்பிட வந்தால் அவர் களிடமும் சொல்லிவிடுவார்கள். அய்யய்யோ... அவளையா வேலைக்கு கூப்பிடப் போறே? விளங்கினாப்பிலதேன், அவளுக்கு வேல செய்ய ஒரு துப்புமில்ல. மூணு நிரைக்குப் பின்னால தொங்கிட்டு கிடக்கா. நம்ம நிரைய வெட்டுனமா? உச்சி தேரம் கஞ்சிக்குப் போனமான்னு இல்லாம இவ நிரைய வேற கூட்டாங் களை வெட்ட வேண்டி இருக்கு. மத்தியானந் தேன் இந்தப் பாடுன்னா பொழுது அடயேலயும் முழுசா ஒரு நிறையப் போட்டு வச்சிருக்கா. பாம்புலுக்கும் இவளுக்கு அழுவத்தானா கிடக்கு! இந்தப்பாடு இழிவாகப் பேசுவார்கள். காட்டில் இப்படி என்றால் வீட்டில் மூணு நேரத்துக்கும் பசி அமத்தும் வேலை பெரிய வேலைதான்.

நெல்லரிசி என்பது தங்கம் மாதிரிதான். கடைகளில் அம்சமாக சாக்குகளில் உட்கார்ந்திருக்கும். வீட்டில் மழைக்குப் பதத்துப்போன குருதவாலி, வரகு, சாமை, தினை, கேப்பை இவைதான் அடுக்குப் பானை களில் குளுகுளுத்துப் போய்க்கிடக்கும். ஒருசில வீடுகளில் அதுவும் இருக்காது.

காடுகரைகளோடு கொஞ்சம் வசதியாக இருப்பவர்களிடம் நாளைக்கு வேலை செய்து கழித்து விடுகிறேன் என்று சொல்லி சிலர் தானியம் வாங்கி வருவார்கள். அந்த தானியம் ஈரம் கோர்த்துப் போய் இருக்கும். அதை வெயிலில் காயப் போடாமல் குத்த முடியாது. வெயிலே அந்த நேரத்தில் அடிக்காது. அப்படியே கொஞ்சம் முகம்

காட்டினாலும் தரையில் ஈரம் நசநசத்துக் கிடக்கும். வீட்டுத் திண்ணை களில் போடலாமென்றால் கோழிகளுக்கு ஒரு ஆள் காவல் இருக்க வேண்டும்.

எனது பாட்டி இப்படித்தான் நாழிக்கேப்பையை சாக்கை விரித்து காயப்போட்டிருக்கிறார். அன்றைக்கு கிடைத்த கூலி அவ்வளவுதான். கண்ணும் கயிந்தையுமாக ஆறேழு பிள்ளைகள். காயப்போட்டவர் வீட்டிற்குள் ஏதோ வேலையாகப் போய்விட்டு வருவதற்குள் பெரிய சேவலும் நாலைந்து கோழியுமாக மொத்த கேப்பையையும் தின்று விட்டது. அதைப் பார்த்ததும் பாட்டிக்கு திக்கென்று ஆகிவிட்டது. எல்லாம் சாப்பிடுகிற பிள்ளைகள். அவர்களை வைத்துக்கொண்டு இப்போது என்ன செய்வது என்று யோசித்திருக்கிறார். வேறு ஒன்றும் வழி தெரியவில்லை. உடனே ஒவ்வொரு கோழியாகப் பிடித்து அதன் இரைப்பெட்டியை பிளேடால் கிழித்து கேப்பையை தட்டிவிட்டு மீண்டும் ஊசி நூல் கொண்டு தைத்து விட்டார். கோழிகளும் பிழைத்து விட்டன. பிள்ளைகளின் பசியும் அமர்ந்துவிட்டது.

இதே மாதிரி வேறொரு அத்தை கூலியாக தவசம் வாங்கிக் கொண்டு வரும்போது வரப்பில் கால் தட்டி தவசத்தை பிஞ்சைக்குள் கொட்டிவிட்டார். கொட்டிய தானியம் தெரியாமல் வெறும் புல்லும் சருகும் அதை மறைத்துவிட்டது. தானியத்தை அப்படியே போட்டுவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டால் பிள்ளைகளின் பசி அமரவேண்டுமே என்று எல்லாவற்றையும் பிடுங்கி சுத்தம் செய்து பிஞ்சைக்குள் விளக்குமாறைக் கொண்டு பெருக்கக் கூடாததால் தன் சேலை முந்தியைக் கொண்டே அனைத்தையும் கூட்டி அள்ளிக்கொண்டு வந்து இரவெல்லாம் தூங்காமல் நாவிப் புடைத்து தானியத்தைப் பிரித்திருக்கிறார்.

மழைக்காலத்தில் பகலில் தானியத்தை காயப் போடமுடி யாதவர்கள் இரவில் கஞ்சி காய்ச்சி முடித்ததும் அடுப்புச் சாம்பலை சுத்தமாக வெளியே தள்ளிவிட்டு அடுப்பிற்குள் தானியத்தைக் கொட்டி விடுவார்கள். பத்து நிமிஷத்துக்கு ஒருமுறை அதைக் கிண்டிவிட தானியம் நன்றாகக் காய்ந்துவிடும். பிறகு முதல் கோழி கூப்பிடும்போதே எழுந்து குத்திப்புடைத்து வைத்தால்தான் அன்றைய பசி ஆறும். மழைநாள் வந்து விட்டால் நாங்கள் விடிந்த பிறகுதான் புல்லுக்குப் போவோம். எப்போதும்போல் விடியற்காலை இருட்டில் போனோம். வெம்பரப் பாய்க் கிடக்கும் நிலங்களில் பதிந்திருக்கும் ஈரக்கால் தடங்களை வைத்தே எங்கள் ஊருக்கு வந்துவிடுவார்கள். அவ்வளவு எதற்கு? அந்த ஈரத் தடங்கள் ஊத்தாங்கல் ஓடைக்கு வந்துவிட்டால் போதும். அது வேறு யாருடையதாக இருந்தாலும் சரி. என்னையும் கணேசனையும் தான் சொல்லிவிடுவார்கள். அதனால் நாங்கள் மழைக்காலங்களில் விடிந்த பிறகுதான் புல்லுக்குப் போவோம். இந்த மாதிரி மழைக்காலங்களில் கணேசன் வரமாட்டான். அவன் உழ வேண்டும். பிஞ்சைக்குள் கிடக்கும்

மரம், செடி, கொடிகளை வெட்ட வேண்டும். அதனால் சில நேரம் நான் மட்டும் போவேன். இப்படி தனியாகப் போவதென்றால் எனக்கு ரொம்ப பிடிக்கும்.

மழைக்காலங்களில் புற்கள் பனியில் குளித்து தங்களின் தலையில் சிறு சிறு வைரக் கிரீடங்கள் அணிந்து இரு பக்கப் பாதைகளிலும் கம்பீரமாக அணிவகுத்து இருக்கும். அந்தப் புற்களுக்கு பாப்பாத்தி பூச்சிகள் சிவப்பு வெல்வெட்டில் சேலை கட்டிப் பணிவிடை செய்து கொண்டிருக்க ரயில் வண்டிப் பூச்சிகள் அவர்களை ஏற்றிக்கொண்டு போகத் தயாராகக் காத்திருக்கும். நான் பாப்பாத்தி பூச்சியை மிதித்து விடாமல் ஜாக்கிரதையாக அடி எடுத்து வைப்பேன்.

மழைக்காலங்களில் ஈரத்தானியங்களை குத்தி அரிசியாக்குவதற்கு படாத பாடு படுவார்கள். எங்கு பார்த்தாலும் திருவை மயம்தான். ஆனால் மழைபேய்ந்து ஓய்ந்துபோன இரவுகளில்கூட ஓடைகளுக்கு மீன் பிடிக்க ஊரோடு போய்விடுவோம். ஊருக்குள் ஒரு சனம் இருக்காது. வீட்டுப் பெரியவர்கள் முதற்கொண்டு குஞ்சுகுளுவான் எல்லாரும் ஓடையில்தான் இருப்போம். அவர்களின் நடுவே சின்னச்சின்ன அரிக்கன் விளக்குகள் மஞ்சள் நிறத்தில் தனக்குள்ளேயே வெளிச்சத்தைக் காட்டிக்கொண்டிருக்கும்.

அயிரை மீனும், கெண்டை மீனும் சேலை ராவலில் குவித்துவிடும். அதிசயமாக ஒன்று இரண்டு கெளுத்தி மீன்களும் விழுவதுண்டு. அப்படி நாலைந்து கெளுத்தி மீன் இருந்துவிட்டால் என்னமோ கிடைக்காத பொருள் மாதிரி வீட்டில் புதிதாய் வந்திருக்கும் மருமகனுக்கோ அல்லது வேறு பிரியமானவர்களுக்கோ அதைக் கொடுத்துப் பெருமைப்பட்டுக் கொள்வார்கள். இதையெல்லாம் பார்த்தவாறு வானத்தில் மழைக் காலத்து பூச்சி நிலா மேகங்களினூடே மறைந்து மறைந்து குளிரில் நடுங்கியவாறு போய்க்கொண்டிருக்கும். சின்னப் பிள்ளைகளான நாங்கள் தண்ணீரைக் காலால் எத்தி எத்தி எங்களுக்கு ஏற்றமாதிரி மீன்களைப் பிடித்துக்கொண்டிருப்போம்.

மறுநாள் எல்லோருடைய வீட்டிலும் மீன் கொழம்புதான். மசாலா வாடையில் ஊரே மணமணத்துக் கிடக்கும். மீன் பிடிக்கமுடியாத ஒன்றி ரண்டு வயசான தாத்தா பாட்டிகளுக்கு 'கொட்டுக்கூடை' வழியாக மீன் கொழம்பு போய்ச் சேர்ந்துவிடும். அன்று காடுகளில் சுறுசுறுப்பாக வேலைகள் நடக்கும். அப்படி நடக்கும்போது மீன்கொழம்பின் பேச்சுத் தான். மரங்களின் ஒடிந்த கொப்புகளில் மாட்டி இருக்கும் பித்தளை, ஈய தூக்குப்போணிகளில் வரகஞ் சோறு, சாமைச் சோறு, குருதவாலிச் சோறு என்று உருண்டை உருண்டையாக மீன் கொழம்புக்குள் புதைந்துகிடக்க

எங்களுக்கு வேலை ஓடாது. எப்போது சாப்பாட்டு நேரம் வரும், எப்போது பொழுது உச்சியிலிருந்து மேற்கே சாயுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்.

சூரியன் கொஞ்சமாய் மேற்கே நகர்வதுபோல் தெரிந்தாலே போதும், செய்யும் வேலைகளை அப்படி அப்படியே விட்டுவிட்டு எழுந்துவிடுவார்கள். பிஞ்சைக்காரர்களின் வசவும் முணுமுணுப்பும் யார் காதிலும் விழாது. வாய்க்கால்களின் சலசலத்து ஓடும் நீரில் காலைக் கையைக் கழுவிக்கொண்டு தூக்குச்சட்டியை நோக்கி ஓடுவார்கள். திறந்த வெளிகளில் மரங்களின் குளிர்ந்த நிழலில் உட்கார்ந்தவாறு அரட்டை யடித்துக் கொண்டு மீன் கொழம்புச் சோறு சாப்பிடும்போது எல்லோரு டைய முகத்திலும் வெளிச்சமும் மகிழ்ச்சியும் கூடு கட்டியிருக்கும். வெந்த மீன்களின் அணைவில் சோற்றுப் பருக்கைகள் தானாகவே தொண்டையை நோக்கிப் பாயும். முக்கால்வாசி இந்த மழைக்காலங் களில் வயல் வேலைகள்தான் நிறைய இருக்கும். சோறு முடிந்ததும் வெற்றிலை பாக்கு போயிலை வேறு.

இப்படித்தான் ஸ்ரீவில்லிபுத்தூர் ஐயர் தினமும் தன் வயல் வேலை களை கூலி ஆட்கள் செய்துகொண்டிருக்க இவர் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருப்பாராம். சாப்பாட்டு நேரத்திலும் இவர்கள் கூடவே இருந்திருக்கிறார். அவர்கள் மீன் கொழம்போடு சோற்றையும் சேர்த்து சாப்பிடுவதைப் பார்த்து இவருக்கு வாய் ஊறிவிட்டது. கூலி ஆட்களிடம் கொஞ்சம் சோறு கேட்டு வாங்கிச் சாப்பிடுவதற்கும் இவருடைய கௌரவம் இடம் கொடுக்கவில்லை. நெஞ்சுக்குள் நினைத்துக்கொண்டே இருந்திருக்கிறார். மறுநாள் உடம்பு, கை, கால் எல்லாம் வீங்கிவிட்டது. அவர் மனைவி பதறிப் போனார். என்னமோ ஏதோ என்று வைத்தியரைக் கூப்பிட்டு வர ஆள் அனுப்பும்போது ஐயர் தடுத்துவிட்டார்.

எனக்கு நோய் எதுவுமில்லை. நம் வயல்ல வேலை செய்கிறவங்க சாப்பிடுறதைப் பாத்தேன். அப்படி ருசிச்சி சாப்பிடுறாங்க. எனக்கும் அவங்க சாப்பிடுற அயிரை மீன் குழம்பு வைச்சுக்கொடு. என் வீக்கத்திற்கு அதுதான் மருந்து. மத்தபடி வைத்தியர் மருந்தில என் உடம்பு குணமாகாது என்றும் சொல்லிவிட்டார். ஐயர் சொல்லும்போதே அவர் மனைவிக்கு அடி வயிற்றிலிருந்து ஓங்காரிப்பு வந்துவிட்டது.

நாம என்னைக்கு கறி மீனு சமைச்சோம்; இவரு புத்தி ஏன் இப்படிப் போவுது; இவரு அயிரை மீனை ஒரு தடவை சாப்பிட்டு பாத்துட்டா விட மாட்டாரு; அதோட அசிங்கம் வேறே என்று நினைத்த அவர் சம்சாரம் இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தாள். ஒரு நல்ல யோசனை வந்து விட்டது. அதாவது நெற்கதிரின் தூரும் அயிரை மீனும் ஒன்றுபோல்தான் சின்னதாக வெள்ளையாக இருக்கும். அதனால் அந்த தூரைப் போட்டு குழம்பு வைத்துக் கொடுத்து விடுவோம் என்று நினைத்தாள். பிறகு வேலைக்காரனை விட்டு மூன்று நான்கு நெல்தூரை அறுத்துக்

கொண்டுவரச் சொன்னாள்.

வேலைக்காரனும் கொண்டுவந்து கொடுக்க இவர் மசாலாவோடு தேங்காயும் அரைத்துப் போட்டு மணக்க, மணக்க குழம்பு வைத்து விட்டாள். பிறகு தானும் மீன் குழம்பு வைத்திருக்கிறேன் என்று ஐயரை சாப்பிடக் கூப்பிட்டபோது அவருக்கு ரொம்ப சந்தோசம். அப்போதே உடம்பிலிருந்த வீக்கம் பாதி வத்திவிட்டது. பெரிய வாழை இலையில் குவித்திருந்த சோற்றின் முன்னால் உட்கார்ந்தார். அவர் மனைவி குழம்பை ஊற்றவும் வாசம் பிடித்தவாறு நெல்தூரோடு சோற்றையும் எடுத்து வாயில் வைக்க அவர் முகம் போன போக்கு சொல்ல முடியாதாம்.

என்ன இது? வதக் வதக்கினு ஒரு ருசியுமில்லாம இருக்கு; இதையா வேலசெய்றவங்க அப்படி ருசிச்சி சாப்பிடுறாங்க என்று கேட்டிருக்கிறார்.

ஆமா, அவங்க இதைத்தான் அப்படி சாப்பிடுதாங்க. ஏன்னா அவங்க எப்பவும் வெங்காயம், பச்சமிளகான்னு கடிச்சி சாப்பிடுவாங்க. அதை விட்டா துவையலு, கீரைன்னு சாப்பிடுவாங்க. மசாலா அரைச்சி என்னைக்கு குழம்பு வச்சாங்க! அதிசயமா ஆறு மாத்தைக்கு ஒருக்கா இப்படி குழம்பு வைக்காங்களாங்காட்டி அவங்களுக்கு அவ்வளவு ருசியா இருக்கு என்று ஐயரம்மா சொல்லிவிட்டாள்.

அய்யருக்கு அந்த நிமிஷமே மீன்கொழம்பின் ஆசைவிட்டு விட்டது. உடம்பும் சப்பமாய் வற்றிவிட்டது.

❧

அடைமழைக்காலத்தில் தண்ணீர் எங்கள் ஊரைச் சுற்றிச் சூழ்ந்து கொள்ளும். தண்ணீர் நடுவே எங்கள் ஊர் மட்டும் மிதப்பதுபோல் தெரியும். சுற்றிலும் செந்நீர் சலசலத்துக்கொண்டு ஓடும். ஊரைச் சுற்றிய மேடுகளில் அங்கங்கே ஆட்கள் போகவும் முடியாமல், வரவும் முடியாமல் கொத்துக் கொத்தாக நிற்பார்கள். தலைச்சுமை, புத்தகச்சுமை களோடு சின்னப்பிள்ளைகள் எல்லாம் ஓடையில் இறங்க முடியாமல் அந்தப் பக்கம் கரையில் நிற்போம். ஊரிலிருந்து பெரியவர்கள் வந்து எங்களைக் கூட்டிப்போவார்கள்.

ஒருமுறை எங்கள் ஊருக்கு மேற்கே இருக்கும் குளம் உடைந்து தண்ணீர் திபுதிபு என்று எங்கள் ஊரை வளைத்துக்கொண்டு ஓடைக்குள் இறங்கி கம்மாயை நோக்கி ஓடியது. தண்ணீரோடு குடம், சருவம், ஆடு, கோழி என்று சேர்ந்து வந்தன. சிலர் தைரியமாக தண்ணீருக்குள் இறங்கி கையில் அகப்பட்டதையெல்லாம் எடுத்து தண்ணீருக்கு வெளியே வீசினார்கள்.

கருப்பாயி பெரியம்மா ரொம்ப அவக்காச்சி பிடித்தவள். இந்த

வெள்ளம் வரும்போது மேட்டில் அகப்பட்டுக் கொண்டாள். எல்லோரும் தண்ணியில் வரும் பொருள்களை எடுத்துக் கொள்வதைப் பார்த்து, அடப்பாவிகளே! இப்படி அம்புட்டயும் அள்ளுதீகளே! என்ன தண்ணிய கழிச்சி விடுங்க; நானும் எதையாச்சிலும் எடுக்கேன் என்று அலமோதிக் கொண்டிருந்தார்.

அடடா பச்சப் புள்ளைகளனாச்சிலும் பொறுத்துக்கிடலாம் பொலுக்கோ. உன் நச்சு தாங்கமுடியலயே என்று ஒரு மாமா தண்ணீரைக் கடத்திவிட்டார். இப்போது தண்ணீரும் கொஞ்சம் குறைந்திருந்தது. அந்தப் பெரியம்மா ரொம்ப அவசரமாக சேலையை வரிஞ்சி கட்டிக் கொண்டு ஓடைக்குள் குதித்தார். குதித்த மாத்திரத்தில் தண்ணீருக்குள் தூழாவினார். பிறகு இந்தா கெடச்சிருச்சி; எனக்கும் ஒண்ணு கெடச்சிருச்சி என்று சந்தோசத்தோடு கத்திக்கொண்டு கையில் கிடைத்ததை வெளியே எடுத்தார். அது ஒரு அருவா சொரட்டி! அந்தப் பெரியம்மா முகம் போன போக்கு சொல்லமுடியாது.

அங்கிருந்தவர்கள் எல்லாம், ஏத்தா உன் கெட்டிக்காரத்தனத்த சும்மா சொல்லக்கூடாது; தாமுசமா வந்தாலும் தங்கப் பொதயலவில்ல தேடி எடுத்துட்டே என்று சொல்லிச் சிரித்தார்கள்.

ரச்சுமி அத்தை செத்துப்போனாள். அவளைக் கொண்டுபோய் சுடுகாட்டில் வைத்து தீயைப் பொருத்தி வைத்த கொஞ்சநேரத்தில் மழை வந்துவிட்டது. உடனே எல்லோரும் வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.

அன்று மழை என்றால் அப்படி ஒரு மழை. காடுகளில் மிளகாய் மாறு, பருத்திமாறு, துவரங்கட்டை கிடக்கும்போது இப்படி மழை பெய்தால் மறுநாள் மாறு பிடுங்க ஆள் கிடைக்காது. முதல் நாள் இப்படி மழை பெய்த உடனே மறுநாள் எனது மாமா பிஞ்சைக்கு பருத்திமாறு பிடுங்கப் போனேன். முதல் நிரை பிடிப்பதுதான் வழக்கம். நான் முதல் நிரை பிடித்து ஒரு பாத்தி பிடுங்கிவிட்டேன். பாத்தியின் ஓரத்தில் இருந்த மாறை பிடுங்கப் போனவள் திடுக்கிட்டு அலறினேன்.

எல்லோரும் என்ன என்ன என்று ஓடிவந்தார்கள். எனக்கு காலும் கையும் கிடுகிடுவென்று ஆடியது. எதுவும் பேச முடியவில்லை. கையை மட்டும் நீட்டி ஒரு இடத்தைக் காட்ட அதைப் பார்த்தவர்களும் அலறிக் கொண்டு ஓடினார்கள். அங்கங்கு வேலை செய்து கொண்டிருந்த ஆண்கள் ஓடிவந்து பார்த்தார்கள். செத்துப் போன அந்த அத்தையை முதல் நாள் சுடுகாட்டில் வைத்து தீயைப் பொருத்தியதும் மழை வந்துவிட்டதால் யாரும் பிணம் எரியும் வரை அங்கே இல்லாமல் ஓடிவந்து விட்டார்கள். பாதி அளவே வெந்த பிணம் வெள்ளத்தில் மிதந்து இந்தப் பருத்திக்

காட்டின் கரையோரம் தங்கிவிட்டது. மாறுகள் தடுத்ததால் அங்கேயே கிடந்திருக்கிறது. நான் பார்க்கும்போது கையும் காலும் மடங்கி கருப்பாக இருந்தது. முகத்தில் கண், மூக்கு இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு குழிகள் மட்டுமே இருந்தன. பார்க்கவே பயங்கரமாக இருந்ததால்தான் நான் அலறினேன்.

பிறகு எல்லோரும் சேர்ந்து பிணத்தைத் தூக்கி அந்தக் கரையோரமே விறகு அடுக்கி எரித்தார்கள். அவரவர் வீட்டிற்கு முன்னால் துளசிச் செடியைப் பிடுங்கித் தட்டி ஒரு வட்டம் போட்டு சூடத்தைக் கொளுத்தினார்கள். அறையும்குறையுமாய் பிணம் வெந்து கிடந்தால் அதன் ஆவி யார் வீட்டிற்குள்ளாவது புகுந்து விடுமாம்.

நான் இன்னும் நடுங்கிக் கொண்டுதான் இருந்தேன். என்னால் எந்த வேலையும் செய்ய முடியவில்லை. எங்கே பார்த்தாலும் கண் மூக்கு குழி விழுந்து கரிக்கட்டையாக நிறைய உருவங்கள் நிற்பதுபோல் தெரிந்தது.

மறுநாள் எனக்கு உடம்பு கொதித்தது. காது இரைந்தது. உடம்புக் குள் ஏதோ அதிகமாகிவிட்டது போல் திகிலாக இருந்தது. வேலை செய்த காட்டில் அப்படியே வரப்பில் சுருண்டு விட்டேன். பிறகு இருவர் என்னைத் தூக்கி கையணைவாக வீட்டிற்கு கூட்டி வந்து படுக்க வைத் தார்கள். என் தம்பிகள் என்ன என்ன என்று ஓடி வர அம்மாவும் வந்தாள். என்னால் பேசமுடியவில்லை. பிறகு தண்ணீர் மந்திரித்து திருநீறு போட்டு சாமி கும்பிட்டார்கள். வசந்தா என் அருகில் வரவே பயந்தாள். என்னமோ நான் தான் அந்தக் கரிக்கட்டை என்று நினைத்துக்கொண்டு தூர நின்று வெறித்துப் பார்த்தாள். சரசு கணேசனைக் கூட்டி வந்தாள். நான் இப்படி பயத்தோடு சுருண்டு கிடப்பதைப் பார்த்து அவர்களுக்கு சிரிப்பாக வந்தது. போயும் போயும் ஒரு எரிஞ்ச பிணத்துக்குப் பயப்படுதாளே; நம்ம மூக்குலயும், கண்ணுலயும் கரியத் தடவிக்கிட்டுப் பாரு; நம்மளும் அந்தப் பிணம் போலத்தேன் கிடப்போம் என்றான் கணேசன். இப்படி பயந்தவாறு அவர்களின் கேலிக்கு ஆளாகிக் கிடப்பதை நினைக்கையில் வெட்கமாக இருந்தது.

நான் எழுந்து உட்கார்ந்தேன். நான் ஒண்ணும் பயந்துக்கிட்டு படுத்துக் கிடக்கல, சும்மாதேன் படுத்திருந்தேன் என்றேன்.

சும்மா ஏன் படுத்திருக்கே? நாங்கள்லாம் பேசி மாறு பிடுங்கப் போறோம்; நீயும் வா என்றான் கணேசன்.

தினக்கூலிக்கு வேலை செய்யாமல் இத்தனை ஆட்களின் சம்பளத்தை கொடுத்து விடுங்கள் என்று பேசி வேலை செய்தால் கூலியும் அதிகம் கிடைக்கும். சீக்கிரமும் வீட்டுக்கு வந்துவிடலாம். அதன் பிறகு அவர்களோடு மாறு பிடுங்கப் போனதில் எல்லாம் மறந்து போய் விட்டது.

ஊரின் அருகே தெற்குப் பக்கமாக இருக்கும் கானாங்குளம் எங்களுக்குப் பிரியமான கண்மாயாக இருந்தது. குளம் பெருகி சின்னச் சின்ன அலைகளாக கரையில் மோதிக் கொண்டிருக்கும்போது மட்டுமே சற்று தூரத்திலிருந்து அழகு பார்ப்போம். பெரியவர்களும் அதனருகில் எங்களை அண்ட விடமாட்டார்கள்.

கம்மாயும் கருவேலமரமும் சிலுசிலுத்த காற்றில் பால்நிலா வெளிச்சத்தில் குளித்துக் கொண்டிருக்கும். மூணுபக்கமும் பெரிய பெரிய ரயில்களாக உயர்ந்த கரைகள் காவல் இருக்க கரையோர செடிகளி லிருக்கும் கொறண்டிப் பூக்களும்துளசியும் பச்சை இலையுமாய் வாசனை நெஞ்சைத் தொட்டுப் பரவசப்படுத்தும். இது போதாதென்று கருவேல மரங்களின் மேற்பரப்பில் மல்லிகைப் பந்தாக கொக்குகள் அடைந்து கிடக்கும்.

தண்ணி வற்றிவிட்டாலோ நாள் முழுக்க எங்களின் ஆட்டம் பாட்டமெல்லாம் அங்கேதான். குளம் வற்றிய பிறகு கிடங்குக்கு கிடங்குத் தண்ணீர் குல்லாராசாகடை டீயைப்போல் நிறைந்து கிடக்கும். அதில் இறங்கி நாள் முழுக்க முங்கிக் கிடப்போம். தண்ணீரைக் காலால் எத்தி மீன்களைப் பிடிப்போம். ஈர மண்ணை எடுத்து வீடு கட்டி, பொம்மைகள் செய்து விளையாடுவோம். அந்த கம்மாயில் கருவேல மரங்கள் அங்கங்கே பரந்து கிடக்கும். மத்தியான வேளையிலும் இருட்டிய பிறகும் நாங்கள் அங்கே இருந்தால் பெரியவர்கள் வந்து வசவான வசவு வைது எங்களை வீட்டுக்கு விரட்டி அடிப்பார்கள்.

ஏனென்றால் அங்கே வவுத்து பண்டாரச்சி என்கிறவள் வங் கொலையாக மாண்டுவிட்டாளாம். சிறியவர்களிலிருந்து பெரியவர்கள் வரை அவர்கள்உடம்பின் மீது உடன்கொண்டு பேயாட்டம் ஆட்டி வைக் கிறாள் அவள் என்று சொல்லி எங்களை அண்டவிடாமல் அடிப்பார்கள். அவள் இறந்ததற்கு அடையாளமாக கல்லினால் ஒரு சிலை செய்து அதைக் கழுத்து வேறு, கை கால் வேறு என்று தனித்தனியாகப் போட்டிருந் தார்கள்.

இந்த வவுத்துப் பண்டாரச்சி மிகவும் அழகாக இருப்பாளாம். ஒரு கொடங்கை தலைமுடியும், ஒரு புடி இடுப்புமாக, அச்சியில் ஊத்தி எடுத்த மாதிரி செவப்பு உருட்டையாக சீனிக்கட்டியாக அப்படி இருப்பாளாம். அவளுக்குக் கல்யாணமாகி ஒரு பெண்வேறு இருந்திருக்கிறாள். ஆனாலும் இவள் வேறு சாதி ஆண்களோடு பழக்கமாக இருந்திருக் கிறாள். இதில் ஆண்களுக்குள்ளேயே போட்டியும் பொறாமையும் வந்த தோடு சாதிச்சண்டையும் வரப்பார்த்திருக்கிறது. உடனே இதற்கு ஒரு வழி பண்ண வேண்டுமென்று நாலைந்து பேர் இவளிடம் பண ஆசையைக் காட்டி நடுச்சாமத்தில் இந்தக் கண்மாய்க்கு வரவழைத்து விட்டார்கள்.

இவள் புதுப்புடவையும், பூவாசமுமாய் கண்மாய்க்குள் வந்தது தான் தாமதம், ஒருவர் மூர்க்கமாக அவளை நெருங்க இன்னொருவர் பக்கத்தில் வர இவளுக்கு அதிர்ச்சியாகிவிட்டது. ஏதோ நடக்கப் போகிறது என்ற பயத்தில் கூக்கசத்தம் போட்டவாறே அவர்களிடமிருந்து தப்பிக்க கருவேல மரங்களினூடே ஓடியிருக்கிறாள். மல்லிகைப்பூவின் வளைவில் இவ்வளவு நேரமும் பெரிய கொண்டையாக அடங்கியிருந்த அவள் தலைமுடி அவிழ்ந்து முள்மரக் கொப்பில் சிக்கியிருக்கிறது. காலெல்லாம் கருவேல முள்ளு. உடம்பிலும் முட்கள் கீறி ரத்தக் கோலம் போட அவள் கத்தியிருக்கிறாள். கதறியிருக்கிறாள். கையெடுத்து கும்பிட்டும் இருக்கிறாள். ஆனால் இவர்கள் விடவில்லை. அவளைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்டுவிட்டு போய்விட்டார்கள். மறுநாள் சுற்றுவட்டாரமே கம்மாயில் வேடிக்கை பார்ப்பதற்காக அடைந்து கிடந்திருக்கிறது. இது எங்கள் காலத்துக்கு முன்பே நடந்தது. ஆனால் வங்கொலையாக, வவுத்தெரிச்சலோடு மாண்டதால் அவள் அப்படியே பேயாகிவிட்டதாகப் பெரியவர்கள் சொல்வார்கள். மத்தியான கட்ட கட்ட உச்சி நேரமும் சரி, இலைதழை தளும்பாத நடுச்சாமமும் சரி, வெள்ளைச்சேலையோடு ஒரு பெண் கருவேலங்காட்டுக்குள் நடக்கிறாள்; மரத்துக்கு மரம் சிக்கிக்கொண்ட முடிகளையெல்லாம் எடுத்து தலையில் வைத்து அழகு பார்க்கிறாள்; அந்நேரத்துக்குத் தெரியும் ரத்தக் காலடித் தடங்களைப் பார்த்து பேய்ச் சிரிப்பு சிரிக்கிறாள் என்று நிறைய நிறையச் சொல்லி எங்களைப் பயமுறுத்துவார்கள். அந்த கண்மாய்க்குள் கோடை காலங்களில் தலைமுடியில் உச்சி வகுந்ததுபோல் நிறைய வழித்தடங்கள் குறுக்கும்மறுக்குமாக விழுந்திருக்கும். நாங்கள் அந்த வழியாகத்தான் சத்திரப்பட்டி, சமுசிகாபுரத்திற்குப் போவோம். ஆனால் எங்கள் ஊரிலிருக்கும் ரேணுகா அக்கா மட்டும் அந்த இடம் வந்தவுடன் பேயாட ஆரம்பித்துவிடுவாள். நாங்கள் விதர்ப்பட்டு மூலைக்கு ஒருவராக ஓட ஒரு சிலர் அக்காவிடம், யார் நீ? எதுக்காவ இந்த பச்ச மதலய பாழாக்குதே என்று கேட்பார்கள். ஆனால் அக்கா கலகலவென்று சிரித்துக்கொண்டே மயங்கி விழுந்துவிடுவாள். பிறகு எல்லோரும் சேர்ந்து அவளைத் தூக்கிக்கொண்டு போவார்கள்.

அந்தக் கண்மாயின் தெற்குப் பக்கம்தான் வயல்கள் நிறைந்து கிடக்கும். நெற்கதிரை அறுத்து முடித்த உடனே பருத்தியைப் போட்டு விடுவார்கள். அது செழித்துக் காயும் பூவுமாக இருக்கும். தினம் தினம் வடக்கே புல்லுக்குப் போய் அலுத்துப் போன நாங்கள் சில இரவுகள் தெற்கே இந்த வயல்களைத் தேடிப் புறப்பட்டு விடுவோம். கண்மாய் வழிதான் போவோம். என் தோழி நிலா வெள்ளை பூத்துக் கிடக்கும் மேகங்களினூடே ஒளிந்து ஒளிந்து என்னோடு கண்ணாமூச்சி ஆடிக் கொண்டு கூடவே வருவாள்.

ஆனால் வவுத்துப் பண்டாரச்சி மட்டுமே வரவேமாட்டாள். எனக்கு ஏக்கமாக இருக்கும். எல்லாக் கண்ணுக்கும் தெரிகிற அவள் எங்களுக்கும் தெரிந்தால் என்ன என்று நினைப்பேன்.

நாங்கள் நடுச்சாமத்தில் கண்மாய் வழியாக புல்லுக்குப் போனதைப்பற்றி என் தம்பி அம்மாவிடம் சொல்வான். பக்கத்திலிருக்கும் சின்னம்மா, அத்தை யாராவது உம் மவள கொஞ்சம் கண்டிச்சி வையி. இப்படி சாமம் ஏமமின்னு கம்மா வழியும் கர வழியும் அலைஞ் சான்னா பேயி, முனின்னு எதுவும் அடிச்சி கோளாறா ஆயி வயசுபுள்ள அப்படியே நின்னுரப்போறா என்பார்கள். காலம் பூராவும் சின்னப் பெண்ணாகவே இருந்து விடுவேனாம்.

இவளா கோளாறா ஆவா? இவளயும் இவ கூட்டாளியவும் கண்டு அந்த வவுத்துப் பண்டாரச்சி எங்கனயும் கோளாறாயி கெடக்காளோ என்னவோ என்று என் அம்மா சொல்லிவிடுவாள். இதைப்பற்றி கணேசனிடம், சரசுவிடம் கேட்டால் கணேசன் சொல்வான். 'எமன் பிள்ளய பேயடிக்காது. இரும்புத்துண்ட கரயான் அரிக்காது.'

ஐ

ஒரு நாள் வசந்தாவும் நானும் வசந்தாவின் கீழக்காட்டில் கருது அறுத்துக்கொண்டிருந்தோம். நாத்துக் கருதாக இருந்ததால் ரொம்ப உயரமாக இருந்தது. கைக்கு சரியாக எட்டவில்லை. அதனால் நாத்தை தூரிலிருந்து அறுத்துப் போட்டோம். ஒரு இடத்தில் மட்டும் கரம்பை நிறைந்திருந்ததால் அந்த இடத்தில் நாத்தும் தும்பையும் இன்னும் பல கொளைகளும் அடர்ந்து கிடந்தன. நாங்கள் கொளைகளை அறுத்து விடலாம் என்று போனபோது அந்த அடர்வுக்குள் ஒரு கட்டு நாத்து அப்படியே தரையோடு பரத்திக்கிடந்தது. என்ன இது... யார் இப்படி போட்டிருப்பார்கள் என்று அதை ஒதுக்கினோம். அந்த நாத்தின் அடியில் மண்ணில் குழி பறித்து இரண்டு பானைகள் புதைக்கப்பட்டிருந்தன. பானைகள் நிறைய நரை கட்டியவாறு தண்ணீர் பொங்கி இருந்தது. வசந்தா குனிந்து அதை மோந்து பாத்துவிட்டு, பாரதா ரெண்டு பான பதினிய எவனோ கொண்டாந்து இங்கே ஒளிச்சி வச்சிருக்கான் என்றாள். நானும் மோந்து பாத்தேன். புளித்த வீச்சம் முகத்தை திருப்ப வைத்தது.

என்ன இது, பதினின்னு சொல்லுதே! பதினி கணக்கா மணக் கலயே, காடி புளிச்சண்ணி கணக்காவில்ல மணக்கு என்றேன்.

அது இன்னும் பதினி ஆகல. பனமரத்துலருந்து அப்படியே எறக்கி கொண்டாந்து மூடி வச்சுட்டாக. இனி சுண்ணாம்பு போட்டு கருப்பட்டிய தட்டிப் போட்டாத்தேன் பதினி ஆவும். அதுக்கு மின்ன நம்ம பாத்துட் டோம் என்றாள்.

தூக்குப்போணியின் மூடியைக் கொண்டுவந்தவள் அந்த தண்ணி யின் மேலிருந்த தூசியையெல்லாம் விலக்கிவிட்டு மூடி நிறைய மோந் தாள். ரெண்டு பேரும் ஆளுக்கு கொஞ்சம் இத குடிப்பமா என்றாள். எனக்கு பானையிலிருந்த நுரையைப் பார்த்தாலே அசிங்கமாக இருந்தது. தூசியும் தும்பும் எறும்புமாக இன்னும் என்ன என்னவோ கிடந்தது. சை, இப்படி அசிங்கமா கிடக்கு, இதையா குடிக்க... என்று கேட்டேன்.

இது தனி பதினி. இத குடிச்சமின்னா சூடு புடிக்காது. உடம்புக்கும் நல்லது என்றாள்.

பிறகு மூடியிலிருந்ததைக் குடித்துவிட்டு மீண்டும் ஒரு மூடி குடித்தாள். என்னையும் குடிக்கச் சொன்னாள். வாய்கிட்ட கொண்டு போனதுதான், ஒரே வீச்சம். சே சே, இது பதினி இல்ல. பதினி நல்லா மணக்குமே என்றேன்.

நிலாச்சாற குடிக்கமே; இத குடிக்கதுக்கு என்ன! கருப்பட்டி போடாததுனாலதேன் இப்படி இருக்கு என்றாள். சரி என்று நானும் கஷ்டப்பட்டு இரண்டு மூடி குடித்தேன்.

பிறகு பழையபடிக்கு எங்கள் வேலையைத் தொடங்கினோம். ஆனால் வேலை செய்யமுடியவில்லை. ஒரே வாந்தி, கிறுகிறுப்பு. மடமடவென்று வாந்தி வாந்தியாய் எடுத்தோம். வாந்தி எடுத்ததும் நிற்க முடியாமல் கமலைக்குழியில் உட்காருவோம் என்று உட்கார்ந்தால் நெஞ்சையே பிளந்து விடுவதுபோல வாந்தி ஓங்காரிப்பு. பேசாமல் படுக்கலாம் என்றால் அதற்கும் முடியவில்லை. வாந்திதான். பேசவும் முடியவில்லை. கொஞ்ச நேரத்தில் அரைச்சீவனாகி விட்டோம்.

பத்துமணிக்கு மேல் வசந்தாவின் அக்கா நாத்து அறுப்பதற்காக வந்தவள் நாங்கள் பேச்சு மூச்சு இல்லாமல் சுருண்டு கிடப்பதைப் பார்த்து வீட்டுக்குப் போய் மாமாவைக் கூட்டி வந்துவிட்டாள். அவர் ஒரு பாட்டியையும் கூட்டி வந்தார். பாட்டி ஏதோ பச்சிலையைக் கசக்கி அதன் சாறை உப்புச் சோடாவோடு கொடுத்தாள். வாந்தி நின்றது. ஆனால் எங்களால் நிற்க முடியவில்லை.

எதுக்கு இப்படி கிடக்கீக என்று மாமா கேட்டதற்கு மட்டும் பானை இருக்குமிடத்தைக் காட்டிவிட்டு அப்படியே கமலைக்குழியில் சுருண்டு படுத்தோம்.

மாமா அந்த பானையில் இருந்ததை தூக்குப் போணியில் கொஞ்சம் ஊத்திக்கொண்டு மீதியைக் கீழே கொட்டிவிட்டு பானையை உடைத்துப் போட்டாராம். அது வசந்தா சொன்னது போல் பதினி இல்லையாம். கள்ளாம். யாரோ ஒளித்து வைத்திருக்கிறார்கள்.

அன்று முழுவதும் நாங்கள் கமலைக்குழியில் படுத்துக் கிடந்தோம். பொழுது அடைந்ததும் வீடு வந்து சேர்ந்தோம்.

அன்றைக்கு அதிசயமாக வென்னி வைத்துக் கொடுத்த என் அம்மா வசவான வசவு உரிச்சாள். நாங்கள் இப்படி அவஸ்தைப்பட்டதைக் கேள்விப்பட்டு எங்களைப் பார்க்க வந்த கணேசன், கூறுகெட்ட வேல செஞ்சிட்டீகளே; பான இருக்க விவ்ரத்த எங்கிட்ட மட்டும் சொல்லி யிருந்தீகன்னா அந்தக் கள்ள மொத்தமா வித்து காசாக்கியிருப்பேனே என்றான்.

ஜ

போத்தி அண்ணனும், வெங்கட்டம்மா அக்காவும் எப்போதும் ஒரே இடத்துக்குத்தான் வேலைக்குப் போக விரும்புவார்கள். இதற் காகவே அக்கா தூக்குப் போணியில் கஞ்சியை ஊத்திக்கொண்டு புதூரி லிருந்து எங்கள் ஊருக்கு வந்துவிடுவாள். கம்மவார் சாதிக்காரி. அக்கா சிவப்பாக அழகாக இருப்பாள். அவளுக்கு நெருங்கிய அடர்த்தியான புருவக்கட்டு. அதுவே ஒரு அழகாய் இருக்கும்.

நெல்கருது அறுக்கப் போனால் அந்த அண்ணனும், அக்காவும் தான் முன்னுத்தி ஆளாக இருப்பார்கள். அண்ணன் நெஞ்சு உயரத்திற்கு அரியை அள்ளிவைக்கச் சொல்லி கட்டுவார். பிறகு யாராவது இந்தக் கட்டைத் தூக்கி களத்துத்துல கொண்டி சேத்துட்டா நானு அவுகளுக்கு மிட்டாசு வாங்கித்தாரேன் என்பார். உடனே அக்கா நானு அந்த கட்டத் தூக்கிட்டுப் போயிருதேன். ஆனா முக்காத்துட்டு மிட்டாசு எதுக்கு? நானு கேட்டத வாங்கித்தரணும் என்பாள்.

அண்ணனும் கெம்பிதமாக, அப்படியா! அப்ப கட்ட தூக்குத வகளுக்கு என்ன வேணுமோ இந்தக் கூட்டத்தில வச்சிக் கேக்கட்டும், இப்பவே நானு கொடுத்திருந்தேன் என்று சொல்ல அக்கா வெக்கத்தில் சிவந்து குழைந்து போவாள். பக்கத்திலிருப்பவளிடம் அக்கா, இப்ப எனக்கு சீ...ன்னு இருக்கு, பொறாட்டிக்கு உங்கிட்ட சொல்லி விடுதேன் என்பாள்.

அண்ணன் கருதை வீசி வீசி அடிக்கும்போது இந்த அக்கா அவர் பக்கத்தில் 'குத்துக் கல்லுக்கு' நிற்பாள். அண்ணன் அடித்த கருதை அவள் மீது வீசியெறிய அவள் பொய்க் கோபத்தோடு அண்ணனை முறைக்க எல்லோரும் சிரித்துக் குலுக்குவார்கள்.

அண்ணன் இறைக்கப் போகும் பிஞ்சைக்குத்தான் அக்காவும் களை வெட்டவோ பருத்தி எடுக்கவோ வருவாள். கூட வேலை செய்பவர் களுக்கு குடிக்கத் தண்ணி வேண்டுமென்றால் அக்காதான் குடத்தைத் தூக்கிக்கொண்டு கமலையை நோக்கிப் போவாள். இறைவையினூடே இவர்கள் சிரிப்புச் சத்தம் கலகலத்துக் கேட்கும். களை வெட்டுபவர்கள் எல்லோரும் இந்த வெங்கிட்டுக்கும் ரொம்ப சேட்டை இருக்கு, எப்ப

பாத்தாலும் அந்த போத்திகூட சிலுவ புடிச்சிக்கிட்டுத்தேன் [illegible]ருக்கா என்பார்கள். அக்கா ஆடி அசைந்து [illegible] குடம் தண்ணி கொண்டுவந்து மரத்தடியில் வைத்துவிட்டு இரண்டு [illegible] [illegible]வாள். பிறகு தண்ணீர் குடிப்பதற்காக குடத்தருகில் வருகிறவள், அய்யய்யோ காக்காயோ, குருவியோ தண்ணிக்குள்ள எச்சமிட்டுருச்சு; என்ன செய்ய என்பாள்.

என்னத்த செய்ய? நீ இன்னொருக்காப் போயி குடத்த நல்லா விளக்கி கழுவிட்டு ஒரு குடம் தண்ணிய கொண்டாந்து மரத்தடியில் வையி. பெறவு ஒண்ணுக்கு நாலு ஆமணக்கு எலயப் புடுங்கி குடத்துமேல வச்சி அதுமேல ஒரு பொடிக் கல்ல வையி என்பார்கள்.

மீண்டும் அக்கா தண்ணீர் கொண்டு வருவதற்காகப் போவாள். பிறகும் சிரிப்புச் சத்தம் வெளிக்காற்றோடு எங்களை வந்து சேரும். சோளக் கருதோ, கேப்பைக் கருதோ ஏழு எட்டுப் பேர் அறுத்தால் அதைச் சுமந்துகொண்டு போய் களம் சேர்க்க இரண்டு பேர் வேண்டும். ஆண்கள் தான் முக்கால்வாசி சுமை எடுக்கும் வேலையைச் செய்வார்கள். அண்ணன் சுமப்பதற்கு சும்மாடு கூட்டு முன்பே இந்த அக்காவும், நானும் சொமக்கத்தேன் போறேன் என்று புறப்பட்டு விடுவாள். இவர்களின் சுமையினூடே அக்காவின் மடியில் கனத்துக்கிடக்கும் திண்பண்டங்கள் அண்ணனின் கைக்குப் போய்ச் சேரும். போகும்போதும் வரும்போதும் சிணுங்கலும் சிரிப்புமாகத்தான் இருக்கும்.

ooo

அக்கா சரோஜா எனக்கு மூத்தவள். அந்த அக்கா எனக்கு பெரியம்மா மகள். என்னைப் பிரியமாக வைத்துக்கொள்வாள். அவள் சடங்காகிக் குச்சிலுக்குள் இருந்த நேரம். இப்படி யாராவது சடங்காகிக் குச்சிலுக்குள் இருந்தால் என்னை மாதிரி சின்னப் பெண்களுக்கு சில சலுகைகள் உண்டு. அவர்களுடன் போய் பல்லாங்குழி, தட்டாங்கல், தாயம் என்று விளையாடலாம். இருட்டியபிறகு ஒரு இரும்புத்துண்டை அவர்களின் கையில் கொடுத்து வெளியே போகச் சொல்லும்போது நாங்களும் போகலாம். இரும்புக்கு பேய் பயப்படுமாம்.

ஒருநாள் இரவு வழக்கம்போல் 'உடும்பு தடும்பு' விளையாடிக் கொண்டிருந்தோம். எனக்கு விளையாடுவதில் ரொம்ப ஆசை என்றால் யாருக்கும் தெரியாமல் ஒளிந்து கொள்வதில் ரொம்ப ரொம்ப ஆசை. உடும்பு தடும்பு தத்தலி புத்தலி மவ்வா சுவ்வா பால் பரங்கி காட்டுமா சூட்டுமா சல் என்று என்னை விடுவிக்கும் முன்பே நான் ஒளிவதற்காக சிட்டாய்ப் பறப்பேன்.

அன்றும் அப்படித்தான், அக்கா சரோஜாவின் குச்சிலுக்குள் போய் ஒளிந்துகொண்டால் யாராலும் பிடிக்க முடியாது என்று அங்கே ஓடினேன். அக்கா... எக்கா... என்று ரகசிய குரலில் கூப்பிட்டுக் கொண்டே மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தேன். எங்கும் இருட்டு அடைந்து கிடக்க தெருவிளக்கின் வெளிச்சம் மட்டும் தெள்ளுமாவைப்போல் தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் நாலு கால்கள் குச்சிலுக்குள் துணுப்பாகத் தெரிய நான் திடுக்கிட்டுப் போனேன். சற்றுமுன் நான் பார்த்தபோது கூட அக்கா விற்கு இரண்டு கால்தான் இருந்தது. உடனே சுற்றும் முற்றும் பார்த்த வாறு நான் பெரியம்மா... பெரியம்மா என்று எரச்சம் போட்டு கூப்பிட் டேன்.

இப்ப பேசாம போவப் போறியா? வந்து செவிட்டுல அறையட் டுமா என்று குச்சிலுக்குள்ளிலிருந்து ஆண் குரல் அதட்ட நான் ஓட்டம் பிடித்தேன். அங்கே போய்ப் பார்த்தால் சரோஜா அக்கா விளையாட்டு கும்பலில் உட்கார்ந்திருக்கிறாள்.

அக்கா, நீ இங்க உக்காந்திருக்கே! உன் குச்சிலுக்குள்ள நாலு காலு தெரியுது என்றேன்.

அந்தமான அக்கா, நீ பேயி பிசாசு கால பாத்திருப்பே என்று சொல்லிவிட்டாள். அவளுக்கு சிரிப்பை அடக்கமுடியவில்லை. நான் வெலவெலத்துப் போய் நின்றேன்.

எங்கள் வீட்டருகில் மீனாட்சி பாட்டி இருந்தாள். அந்தப் பாட்டியை எங்களுக்கெல்லாம் பிடிக்கவே பிடிக்காது. நாங்கள் ஏதாவது கூடிப்பேசி சிரித்துக்கொண்டிருந்தால் அந்தப் பாட்டி வந்து, கும்பி கூழுக் கழுதுச்சாம், கொண்ட பூவுக்கழுதுச்சாம்னு விடிஞ்சு எந்திரிச்சா காட்டு வழியே அலைகிற கழுதைகளுக்கு என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கு போறீ களா என்ன என்று விரட்டுவாள். அதோடு என் அம்மாவிடமும் வசந்தாவின் அய்யாவிடமும் எங்களைப் பற்றி குறை சொல்லிக் கொண்டேயிருப்பாள்.

சில்லுக்கருப்பட்டி செதறிக் கெடக்கு
அள்ளிப்போடு மீனாட்சி

என்று அந்தப் பாட்டியின் முன்னே போய் ஆடுவோம். அந்தப் பாட்டி கல் மண்ணைத் தூத்தி எங்களை விரட்டுவாள். எங்களை ஒன்றாகப் பார்க்கும்போதெல்லாம், விளங்காத கழுதைக எந்நேரமும் எமன்காலன் தூதங் கணக்கா களவாண்டுக்கிட்டு ஒண்ணாவே அலஞ்சா என்ன உருப் படும்! இவுகள வீட்டுக்குள்ள சேத்து வச்சிருக்காகளே அவுகளச் சொல்லணும். நானா இருந்தா இந்நேரத்துக்கு எப்பவோ குழியத்

தோண்டி புதைச்சிருப்பேன் என்று வைதுகொண்டே இருப்பார்.

அந்தப் பாட்டி மீது எங்களுக்கெல்லாம் அநியாயத்துக்கு கோபம். இவளை என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தோம்.

ஒருநாள் அரவம் ஒடுங்கிவிட்டது. பாட்டி அப்போதுதான் கேப்பையைத் திரித்து களி கிண்ட ஆரம்பித்திருந்தாள். அவள் களி கிண்டுவதை நாங்கள் ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்தோம். கிழக்குப் பக்கம் அடுப்பு. மேற்குப் பக்கம் வாசல். வாசல் பக்கத்தில் ஒளிந்திருந்தோம். இந்தப் பாட்டி களியைக் கிண்டி முடித்துவிட்டு அங்கிருந்த அம்மியில் கிண்டிய களியை அகப்பையால் மோந்து போட்டு உருட்டி உருட்டி அவருக்கு சற்றுத் தள்ளி பின்புறமிருந்த சட்டியில் வைத்துக் கொண்டிருந்தாள். இந்தப் பக்கம் திரும்பாமலே வேலைகளைச் செய்துகொண்டிருந்தாள்.

சீமைத்தண்ணிக் கூடு விளக்கு மாடக்குழியியல் இருந்தது. அந்த விளக்கு வைத்திருக்கிற இடத்தில் மட்டும் வெளிச்சம் தெரிந்தது. மற்ற இடங்கள் எல்லாம் இருட்டாகத்தான் இருந்தது. இந்தப் பாட்டிக்கு கண்ணு கொஞ்சம் மங்கல். அதனால் அவள் திரும்பாமலே களி உருண்டையை பின்புறம் இருந்த சட்டியில் போட நாங்கள் ஒவ்வொரு உருண்டையாகத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டோம். மொத்தம் ஐந்து உருண்டைகள். கடைசி உருண்டையை மட்டும் அங்கிருந்த நாயைக் கூப்பிட்டு அதற்குப் போட்டுவிட்டு மற்ற உருண்டைகளை எடுத்துக் கொண்டு போய் ஊருக்கு கிழக்கே இருக்கும் வேலியில் போட்டுவிட்டு வந்தோம்.

தெருவில் இருந்த விளக்கு வெளிச்சத்தில் நாய் களி உருண்டையைத் தின்பதைப் பார்த்துவிட்டு, இரண்டொருவர் பாட்டியிடம் விவரத்தைச் சொல்லிவிட்டு நாயை விரட்டிக்கொண்டு ஓட இந்தப் பாட்டி அந்த நாயை வசவான வசவு வஞ்சிகொண்டு வந்தாள். என் அம்மா, அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லோரும் பாட்டிக்கு ஆறுதல் சொன்னதோடு ஆள் ஆளாளுக்கு சாப்பாடு கொண்டுவந்து தருவதாகச் சொன்னார்கள். நாங்கள் அங்கே அப்பிராணிகளாக நின்றோம்.

மறுநாள் காலை அந்தப் பாட்டி எங்களைக் கூப்பிட்டாள். நாங்கள் அவள் பக்கதில் போனதும், என் கண்ணுகளா! ஒரு செம்பட்ட நாயீ ராவு நான் கிண்டி வச்சிருந்த மொத்த களியவும் தூக்கிட்டுப் போயி தின்னுட்டு என்ன பட்டினி போட்டுருச்சு; அந்த நாயி எங்கன இருந்தாலும் புடிச் சிட்டு வாங்க; இல்லன்னா எங்கிட்ட வந்து சொல்லுங்க; அத கவுத்தக் கட்டி தூக்குனாத்தேன் எங் கண்ணுக்கு உறக்கம் வரும் என்றாள்.

சரி பாட்டி என்று தலையை ஆட்டினோம். அப்படி உங்களுக்கு நாய கொண்டு வரமுடியாட்டி அது யாரு நாயீன்னாச்சிலும் அடையாளம் சொல்லுங்க; பிறவு நாய்க்காரிய நானு வச்சிக்கிடுதேன் என்றாள்.

இதற்கும் தலையை ஆட்டிவிட்டு வந்தோம். எங்களுக்கு சிரிப்பு என்றால் அப்படி ஒரு சிரிப்பு. சரசு வீட்டு நாய் என்று சொன்னால் பாட்டி கங்கையா மாமாவுக்குப் பயந்து அடங்கி விடுவாள். ஆனால் அதை நம்ப மாட்டாள். கேப்பைக் களி தின்னும் நாயில்ல அது. பாலும் பழமும் ரொட்டியும் கறியும்தான் அது சாப்பிடும்.

களி திருடிய நாய்கள்லாம் இங்கன நிக்கையில எந்த நாய நம்ம போயி புடிக்க என்று கணேசன் சொல்ல நாங்கள் மீண்டும் சிரித்துவிட்டு திரும்பினால் எனது மூத்த தம்பி நிற்கிறான். மனசு திடுக்கிட்டது. என்னடா நீ இங்க நிக்கே, எப்ப வந்தே? என்று கேட்டேன்.

பாட்டி களிய நீங்கதேன் எடுத்தேகளாக்கும்; நான் போயி அம்மாகிட்ட சொல்லுதேன் என்று வீட்டைப் பார்க்க அவன் நடந்தான்.

அவ்வளவுதான், எங்கள் குடல் நெஞ்சுக்கு ஏறிவிட்டது. அவனை என்னஎன்னமோ சொல்லி சமாதானப்படுத்திப் பார்த்தோம். அவன் ஒரு சொல் வீரன். ஒரே ஓட்டமாக எங்கள் வீட்டைநோக்கி ஓடினான். என்ன நடக்குமோ என்று பயந்தவாறு வீட்டிற்குப் போக மனமில்லாமல் போனேன்.

உள்ளே நுழையுமுன்பே, ஏண்டி தம்பி சொல்றதெல்லாம் நெசம் தானா? நீங்களா அவ களிய எடுத்து தின்னீக என்று அம்மா கேட்டாள்.

இல்லயே, அவ களிய எதுக்கு நாங்க எடுக்கோம் என்று முனங்கினேன்.

அதான பாத்தேன்; ஊரா வீட்டுல களிய களாண்டு திங்குத புள்ளயவா நான் வளத்து வச்சிருக்கேன். போ போயி வேலயப் பாரு என்றாள்.

அன்று எனக்கு நல்ல காலம். சந்தோசத்தோடு இந்த விஷயத்தை என் சேத்திக்காரர்களிடம் சொல்ல ஓடினேன்.

கங்கையா மாமா படுகோபக்காரர். ஒருநாள் அவர் தூரத்து ஊருக்கு ஒரு வழக்கு விசயமாக போவதாகவும், வர இரண்டு நாள் ஆகுமென்றும் சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டார். போகும்போது ஞாபகமாகவும் கண்டிசனுடனும் அவர் மனைவியிடம், இந்தா பாரு பய தொலஞ்சான்னு காட்டுலயும் வீட்டுலயும் அப்படியே வேலயப் போட்டுக்கிட்டு வாரவகிட்ட வாயளந்துக்கிட்டு இருந்தயோ வந்ததே சரின்னு உன்ன மொகட்டுல தூக்கி கட்டி ரெண்டு கண்ணு முழிய மட்டும் விட்டுட்டு தொலிய உரிச்சிருவேன்; நெஞ்சுல பதிய வச்சிக்கோ என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

இந்த அத்தையும் அவர் சொன்ன மாதிரி கறிக்கொடலை கையில் ஏந்திக்கொண்டு காட்டிலும் வீட்டிலும் நிலைகொண்டு நிற்காமல் வேலை பார்த்திருக்கிறாள். வேலை மும்மரத்தில் நாய்க்கு பால் ஊற்றி

வைக்க மறந்துவிட்டாள். பிள்ளைகளின் பொறுப்பில் அதைவிட்டுவிட்டு காடே கதி என்று கிடக்க இந்த நாய் இரண்டு நாளில் வாடிவிட்டது. சரசுவும் தங்கச்சிகளும் தாங்கள் தின்ன மிச்சம் மீதிச் சோற்றை, கஞ்சியை அதற்கு ஊற்றி வைத்திருக்கிறார்கள். அந்த நாய் நுரைபொங்க ஒரு சொம்பு பால், ரொட்டி, பிஸ்கட் என்று தின்று வளர்ந்தது. இந்த மிச்சம் மீதியைத் திங்குமா?

இரண்டு நாளில் வருகிறேன் என்று போன மாமா ஒரு வாரம் கழித்து வந்தார். அவர் ஆசையாக வளர்த்த நாய் வரிச்செலும்பு தெரிய மெலிந்து ஒரு மூலையில் முடங்கிக் கிடக்க அதைப் பார்த்த மாமாவிற்கு கோபமான கோபமில்லை. அதுவுமில்லாமல் இந்த நாய் அவரைக் கண்டதும் முனங்கிக்கொண்டே நகண்டு நகண்டு வந்து அவர் காலடியில் சுருண்டு படுத்துவிட்டது. ஏற்கெனவே மாமா கோபக்காரர். இப்போது சும்மா இருப்பாரா? தீக்கோட்டையாக மாறி எல்லோரையும் அடி நொறுக்கிவிட்டார். இவர் அத்தையை அடித்த அடி அவள் கண்ணில் பட்டு கண்கலங்கிவிட்டது. காலம் பூராவும் அந்த அத்தை ஒரு கண் பார்வையோடுதான் இருந்தாள்.

ஒரு தடவை தைப்பொங்கல் அன்று எனக்கும் மூத்த தம்பி ராஜாவிற்கும் 'டைபாயிடு' வந்து கண்ணை முழித்துப் பார்க்காமல் அனத்திக்கொண்டு கிடந்தோம். ஏழு மாமாக்களில் இரண்டாவது மாமா, மாட்டு வண்டியில் எங்களை வைத்து ராஜபாளையம் கவர்மென்ட் ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டுப் போய்விட்டார்.

எனது அம்மாவிற்கு வீட்டில் நிறைய வேலைகள் இருந்ததால் எனது ஒன்றுவிட்ட பெரியம்மாவை எங்களுக்கு காவல் வைத்துவிட்டுப் போய்விடுவாள். எங்கள் படுக்கையின் இரண்டு பக்கத்திலும் பவுன் என்று ஒரு அக்காவும் கிருஷ்ணசாமி என்று ஒரு அண்ணனும் படுத்திருந் தார்கள். அவர்கள் இருவருக்கும் ஒரு ஒற்றுமை இருந்தது. திருமணம் நிச்சயமாகியிருந்தது.

கிருஷ்ணசாமி அண்ணன் நாய்க்கமார். காடு கரை தோட்டம் என்று பெருத்த வசதி. இளங்காளைகள் பூட்டிய வண்டியில் அவருக்கு வேண்டிய சொந்தக்காரர்கள் இந்த அண்ணனைப் பார்க்க வருவார்கள். ஆஸ்பத்திரி வளைவுக்குள் வண்டி வரும்போதே சலங்கை மணிகளின் சத்தம் கணீரிடும். உடனே இந்த அண்ணன் வீமனும் விஜயனும் எனது சொந்தக் காரர்களை கூட்டி வருகிறார்கள் என்று சொல்லுவார். காளைகளுக்குத் தான் அவர் வீமன், விஜயன் என்று பெயர் வைத்திருந்தார். அந்த அண்ணன் ஒரே பிள்ளை, அதுவும் செல்லப்பிள்ளை என்பதால் அவர் அம்மா

வண்டியை விட்டு இறங்கும்போதே 'நா கொடுகா' என்று கூப்பிட்டுக் கொண்டே வருவாள். மகனைச் சேர்த்து அணைத்து முத்தம் கொடுப்பாள். மெலிந்து போய் குச்சியாய்க் கிடக்கும் அவர் உடம்பைத் தடவிக்கொடுத்த வாறே கண்கலங்குவாள்.

பக்கத்திலிப்பவர்கள் எல்லோரும் சொல்வார்கள். எதுக்கு கவலப் படுறே. அதேன் உம் மவனுக்கு சேட்டமாயிப் போச்சில்ல. இன்னி வீட்டுக்கு கூட்டிப் போயி கறிய புளிய செஞ்சி போடு. தண்ணியா தெளிஞ் சிருவான். வயசுப்பய தான!

நம் அம்மா ஒரு நாளாவது நம்மை இப்படி அன்பா தடவிக்கொடுக் கிறாளா என்று நான் ஏங்குவேன். இந்த அண்ணனுக்கு கல்யாணம் பேசி பரிசம் போட நாள் பார்த்துவிட்டார்கள். அன்று இரவு பரிசச் சாமானும் வாங்கி வந்தபோது இந்த அண்ணனுக்கு காய்ச்சல் நெருப்பாய் கொளுத்தி யிருக்கிறது. உடனே நாட்டு மருந்து கொடுத்துப் பார்த்து முடியாமல் ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து சேர்த்து விட்டார்கள். 'டைபாய்டு' காய்ச்சலில் மூன்று மாதம் வரை படுக்கையில் கிடந்தவர் இப்போது சௌகரியமாகி இருந்தார். ஆனால் எலும்பும் தோலுமாக இருந்தார். அவர் பக்கத்திலிருந்த நாங்களும் ஒரு மாதமாகக் கிடந்து கொஞ்சம் தேறியிருந்தோம். அண்ணனுக்கு இன்று 'டிஸ்சார்ஜ்' என்றும் நாங்கள் பத்து நாள் வரை ஆஸ்பத்திரியில் இருக்கவேண்டுமென்றும் சொல்லி விட்டார் டாக்டர்.

அதோடு அண்ணனுக்கு அன்று ஒரே வென்னியாய் வைத்து உடம்புக்கு குளிப்பாட்டி சோறு கொடுக்கும்படியும் டாக்டர் சொல்லி விட்டுப் போனார். உடனே இந்த அண்ணன் அவர் அம்மாவிடம் பச்ச நெல்லைக் குத்தி சோறாக்கி, உளுத்தம் பருப்பு கடைந்து கொண்டு வரச் சொல்லியிருக்கிறார். நெல்லைக் குத்தி அரிசியாக்கி தீட்டுவார்கள். தீட்டிய தவிட்டை புடைக்காமல் சோறு ஆக்குவார்கள். உளுந்தம் பருப்பைத் தோலோடுதான் கடைவார்கள். இத்தனை விவரமும் எனக்கு அப்போது தெரியாது. பிறகு அன்று இரவு எல்லாரும் கூடிப் பேசும்போது தான் தெரிந்தது.

மகன் ஆசைப்பட்ட மாதிரி சோறு, பருப்போடு மாட்டு வண்டியில் இவரைக் கூட்டிப் போவதற்காக நெருங்கிய உறவினர்களை யும் அழைத்துக்கொண்டு அவர் அம்மா சாயங்காலமே வந்துவிட்டாள். இவரைக் கல்யாணம் செய்து கொள்ளப்போகும் பெண்தன் கையாலேயே சமையல் செய்து கொடுத்து அனுப்பியதோடு இவரின் வரவுக்காக வீடு, வாசல் கழுவி கோலம் போட்டுக்கொண்டு இருக்கிறதாம்.

இந்த அண்ணனுடைய அம்மா அந்த விஷயத்தைப் பற்றி ஆஸ்பத்திரியில் எல்லோரிடமும் சொல்லிக்கொண்டிருந்தாள். பிறகு அண்ணனை வென்னித் தண்ணியில் குளிப்பாட்டினார். அண்ணன்

பச்சரிசிச் சோற்றையும் பருப்பையும் ஆவலோடு அள்ளி அள்ளிச் சாப்பிட்டார். இத்தனையும் எங்கள் கண்முன்னே நடந்தது.

அண்ணன் சாப்பிடும்போது மாலை ஐந்து மணி. பிறகு படுக்கை, இத்தனை நாளும் இருந்த சட்டிபொட்டி எல்லாவற்றையும் வண்டியில் ஏற்றிவிட்டு டாக்டரிடம் சொல்லிவிட்டுப் போவதற்காகக் காத்திருந்தார்கள்.

சாப்பிட்ட கொஞ்ச நேரத்தில் அண்ணன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு வலிக்கிறது என்று அலறோஅலறு என்ற அலறினார். அவர் அலறலில் ஆஸ்பத்திரியே அரண்டுவிட்டது. பாவம் அவர் அம்மா. 'நா கொடுகா, ஏமி செய்யேவு?' என்று தலையில் அடித்துக்கொண்டு அழ டாக்டரை கூப்பிட ஓடினார்கள்.

டாக்டர் வந்து அண்ணனைப் பார்த்துவிட்டு அவர் அம்மாவிடம், சாப்பிட என்ன கொடுதுதீகன்னு கேட்டார். அவர் அம்மா எதுவுமே கொடுக்கவில்லை என்று பொய் சொல்ல டாக்டர் அவரை அடிக்காத குறையாக அதட்டிக் கேட்ட பிறகு பச்சரிசிச் சோறு கொடுத்ததைச் சொன்னார். அவர் சொல்லி முடிக்கும் முன்பே டாக்டர் அந்த அம்மாவை கன்னத்தில் ஒரு அறை அறைந்ததோடு ஆஸ்பத்திரி கட்டிடமே இடிந்து விழும்படி சத்தம் போட்டார். அவர் சத்தத்தில் எல்லோரும் இறுகிப் போய்க் கிடந்தார்கள். பிறகு டாக்டரும் நர்சுகளும் எதை எதையோ தூக்கிக்கொண்டும் ஓடிக்கொண்டும் அண்ணனுக்கு ஊசி போட்டுக் கொண்டும் இருந்தார்கள்.

என்ன செய்தும் அண்ணனின் அலறலும் துடிப்பும் ஓயவில்லை. மணி இரவு பத்து இருக்கும், பாவம்! அந்த அண்ணன் செத்துப் போய் விட்டார். அவர் அம்மா 'நா கொடுகா' என்று அலறியவாறு மயங்கி விழுந்தார். பிறகு இரண்டு பேரையும் அந்த வண்டியில் போட்டு அவர்கள் ஊருக்குக் கொண்டுபோனார்கள்.

இந்த பவுனு அக்கா கதையும் சோகம்தான். இந்த அக்காவிற்கு பட்டாளத்து மாப்பிள்ளை பார்த்திருக்கிறார்கள். கல்யாணம் பேசி முடிந்துவிட்டது. ஒரு நாள் பொழுது கருகரு என்று மசங்கும் நேரம். இந்த அக்கா மொட்டை மெத்தில் காயப் போட்ட பயறைக் கூட்டிக் குமிக்கப் போயிருக்கிறாள். தற்செயலாக இவருக்குப் பேசிய மாப்பிள்ளை பக்கத்து மெத்தில் இருந்திருக்கிறார். அக்கா தனியாக மெத்திற்கு வந்ததைப் பார்த்ததும் ஆசையோடு பேசுவதற்காக இவரும் அக்கா இருக்கும் மெத்திற்கு வந்து அவர் கிட்டத்தில் போக அக்கா வெட்கப்பட்டு பின்னுக்கே போயிருக்கிறாள். பிள்ளைச் சுவர் இல்லாமல் மாடி மொட்டையாக இருந்ததால் அப்படியே மல்லாக்க விழுந்து விட்டாள். இடுப்பில் இருக்கும் குறுக்கெலும்பு உடைந்து நடக்க முடியாமல் போய் விட்டது. உடனே ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து சேர்த்துவிட்டார்கள்.

இது நாங்கள் போகும் முன்னாலேயே நடந்துவிட்டது. ஆனால் நாங்கள் போன பிறகும் அக்கா அங்கேதான் இருந்தாள். அவளுக்கு பார்த்த மாப்பிள்ளை வேறு ஒரு பெண்ணைக் கட்டிக்கொண்டு பட்டாளம் போய்விட்டார். ஆனால் இந்த அக்கா மட்டும் அவரை மறக்காமல் அவரையே நினைத்துக்கொண்டு அவரைப் பற்றியே பேசிக்கொண்டு இருப்பாள்.

நாங்கள் ஆஸ்பத்திரியில் இரண்டு மாதம் வரையில் படுக்கையி லேயே இருந்தோம். அப்போது இரண்டு தடவை அந்த அக்காவைப் பார்க்க அவளது அம்மா, அப்பா, அண்ணன் வந்தார்கள். அப்போதும் அந்த அக்காவுக்கு தனக்குப் பேசிய மாப்பிள்ளையைப் பற்றிய பேச்சுத் தான். இப்போது அவர் எப்படி இருக்கிறார், பட்டாளத்தில் வேலை அதிகமாக இருக்குமோ என்று அவரைப் பற்றியே பேச அக்காவுடைய அப்பா, அம்மா, அண்ணன் எல்லோரும் அக்காவை அடிஅடியென்று அடித்ததோடு அந்த கொள்ளையில போறவன் உன்னை இந்த கதிக்கு ஆளாக்கிவிட்டுப் போய்ட்டான். அவனப் பத்தி உனக்கென்னடி பேச்சு? வாழுற வயசுல இப்படி காலு ஒடிஞ்சி ஆஸ்பத்திரியில் அனாதையா கிடக்காளேன்னு உன்னப் பாக்க வந்தா அந்தப் பாவியப் பத்தி பேசி எங்க வவுத்தெரிச்சல ஏண்டி கொட்டிக்கிறே என்று வய்ய அப்போதும் அந்த அக்கா என்னை அடிங்க, கொல்லுங்க; ஆனா என் நெஞ்சுக்குள்ள அவருதான் இருக்காரு என்று சொல்லுவாள். அவள் இப்படி சொல்லச் சொல்ல மேலும் மேலும் அவளுக்கு அடிதான் விழும். பிறகு அங்கிருப் பவர்கள் வந்து விலக்கி அக்காவின் அப்பா அம்மாவை வெளியே கொண்டுபோய் விட்டுவருவார்கள்.

பிறகு எனது மூத்த தம்பிக்கு காய்ச்சல் சரியாகி வீட்டுக்குப் போனான். பத்து நாள் கழித்து அதே காய்ச்சலோடு திரும்பியும் ஆஸ் பத்திரிக்கு வந்தான். என் இளையதம்பியும் டைபாய்டு காய்ச்சலோடு கூடவே வந்துவிட்டான்.

நாங்கள் ஆஸ்பத்திரியில் கிடக்கும்போது எனது சின்னம்மாவும், அம்மாவும் பேச மாட்டார்கள். இன்னொரு பெரியம்மாதான் பக்கத்தி லிருந்து எங்களை கவனித்துக்கொண்டு இருந்தாள். என் அம்மா மாட்டை யும் கன்னையும் பார்த்துக்கொண்டு ஆஸ்பத்திரியில் இருக்கும் பெரியம் மாவிற்கும் சாப்பாடு கொண்டுவந்து கொடுப்பாள். அப்போது நானும் ராஜாவும் மட்டும் பிழைப்போமோ மாட்டோமோ என்று ரொம்பவும் கிடந்தோம்.

எனது சின்னம்மா மீது சாமி வரும். அவள் சாமியாடிக் கொண்டே

திருநீறு போட்டால் எப்படிப்பட்ட நோயும் போய் விடும் என்று ஊரில் சொல்வார்கள்.

ஒரு மாமா என் அம்மாவிடம், மெட்ராஸ் ராக்கு! உன் தங்கச்சி கிட்ட இம்புட்டு துண்ணூறு வாங்கி உன் பிள்ளைகளுக்கு போடலா மில்ல! காய்ச்சலும் இந்தா இந்தான்னு ஓடிரும் என்று சொல்ல என் அம்மா சண்டைக்குப் போய்விட்டாள்.

அவ என் புள்ளைகளுக்கு துண்ணூரு போடவும் வேண்டாம். எம் புள்ளைகள அவ பாக்கவும் வேண்டாம். இனிமே அவ சவாசமே ஆவாதுன்னு நானு இருக்கேன். நீ அவ பேச்ச ஏன் பேசிக்கிட்டு இருக்கே. இனிமே அவ பேச்சவே என்கிட்ட எடுக்காத என்று சொல்லிவிட்டாள்.

இந்த மாமா என் அம்மா சொன்னதையெல்லாம் என் சின்னம் மாவிடம் போய்ச் சொல்லிவிட்டார்.

எம் பிள்ளைகள பாக்கதுக்கு இவ என்ன சொல்லது? இவகிட்ட என்ன நானு துண்ணூரு கொடுத்துவிடது? இன்னைக்கே நானு ஆசுபத் திரிக்குப் போயி எம் புள்ளைகள பாத்துட்டு அதுகளுக்கு வேணுங்கிறத செஞ்சிட்டு வரப்போறேன். அவகிட்ட போயி சொல்லு. அவ என்ன செய்யணுமோ செஞ்சிகிடட்டும் என்று சொல்லிவிட்டு சின்னம்மா அன்றே ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டாள். நாங்கள் அவளைப் பார்த்ததும் அழுதோம்.

எங்களை அன்போடு தடவிக் கொடுத்தாள். அழுவாதீக தாயீ, பொக்குன்னு சீராப்போவும். இன்னும் பத்து நாளையில வீட்டுக்கு வந்து அழகா நேத்து ஈன்ட கன்னுக்குட்டி கணக்கா விளயாடுவீக! என்று சொன்னாள்.

அப்போது பக்கத்திலிருந்த பெரியம்மாவும், செல்லம்! நீ சொல்லல! உம் மேல வார அந்த தலமல ராக்குதேன் சொல்லுதா! இந்த புள்ளைக மூணு மாசமா அன்னம் தண்ணி குடியாம இப்படி படுத்த படுக்கயா கிடக்குகளே. எந்திரிச்சி வீட்டுக்கு வந்து நாலு பேரப் போல நடமாடுங்களா, இல்லே... தாயி நீ ஒரு குளுந்த வாத்தயா சொல்லு என்றதும் சின்னம்மா மீது சாமி வந்துவிட்டது.

பொன்னுந்தலமல, புகழ் பெத்த மந்திரி, உனக்கு
கடுவாதலமாடாம், காட்டு ஆனகால்மாடாம்
சிங்கம் தலமாட்டாம், சிறு புலிக கால்மாடாம்
மலையும் மலை அழகும் மந்திரிமார் இருக்குந்தடம்
செடியும் சிலை அழகும் சீமாங்க வாழ்ந்த இடம்
மலையா மொளைக்கையில மருந்தா மொளச்சவ நானு
இருக்கேன் இருக்கேன். உன் கண்ணும் கயிந்தலயும்

கண்கூடா பாலகங்களையும்
நானு எழுப்பி விடுதேன். நீ மலைக்காதே

என்று பாடிவிட்டு திருநூறை அள்ளி எங்களுக்குப் பூசிவிட்டாள். சின்னம்மா சொன்னது போல் பத்துநாள் கழித்து மூன்று பேரும் எலும்பும் தோலுமாக தலையில் முடியெல்லாம் உதிர்ந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தோம்.

❧

கொத்தனார் சித்தப்பா பரமுவிற்கு ஒரு தகவல் வந்தது. அதாவது மலையடிவார மேலக்காட்டில் நாலு ஏக்கரில் உள்ள உளுந்தஞ்செடி களைப் பிடுங்கிக் கட்ட வேண்டும்; அதனால் நாப்பது ஆள் வரையில் கிடைத்தாலும் பரவாயில்லை என்று கூட்டி வரச்சொல்லி ஆள் விட்டார்கள்.

அவ்வளவுதான், ஊருக்குள் திருவிழாவே வந்துவிட்டதுபோல் ஏவளே, நீ வரயா? ஏத்தா, நீ வாரயா? என்று ஆள் ஆளுக்கு கூப்பிட்டுக் கொண்டே அப்போதே அடுப்பைப் பற்ற வைத்துவிட்டார்கள், மறுநாள் சாப்பாட்டிற்காக. அந்நேரத்திற்கே வெளிச்சமும் புகையும் கந்துகந்தாய் எழும்பி இருட்டில் நழுவிக் கொண்டிருந்தது.

சித்தப்பா சொன்னார். அவுக நாப்பது ஆளு கேட்டுருக்காக. நம்ம இருவது ஆளு மட்டும் போவோம். ஒரே நாளையில சிக்கி முக்கி கல்ல தட்டுனாப்பல வேலய முடிச்சிட்டு நாப்பது ஆளு சம்பளத்தயும் வாங்கி இருவது பேரும் பவுந்துக்கிடுவோம். ஒரே நாளையில ரெண்டு ஆளு சம்பளமில்ல கிடைக்கும் என்றார். எல்லோருக்கும் ஏகப்பட்ட சந்தோசம். சம்பளம் ஆளுக்கு ஒரு ரூபாய்.

ரெண்டு ஆளு சம்பளம் கிடைக்குன்னு அம்புட்டு பேரும் வாயத் தொறந்துக்கிட்டு இருந்தா மட்டும் போதாது. நெலம் தெளியமுன்னே பிஞ்சயில போயி குனிஞ்சாத்தேன் பொழுது அடையுமுன்ன வேலய முடிக்க முடியும். தொலவட்டு நடக்கணும். அதனால மொதக்கோழி கூவலேயே செய்ற வேலய செஞ்சிட்டு கஞ்சிய ஊத்திக்கிட்டு கௌம் பிருங்க என்று சொல்லிவிட்டார்.

அன்று இரவு யாருமே உறங்கவில்லை. கிணற்று உருளைகளும் வாசலில் கிடந்த உரல்களும் சத்தமிட்டுக் கொண்டிருந்தன. இருட்டு நேரம் காட்டு வழியே ராஜபாளையம் தாண்டி பத்து மைல் தூரம் போக வேண்டி இருந்ததால் யாரும் கருவாடு, எண்ணெயிட்ட வெஞ்ஞனம் என்று கொண்டு போகவில்லை. காணத்துவையலும், கல்லுப் பயறுத் துவையலுமாக அரைத்து எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

இரண்டு ஆண்களில் ஒருவர் முன்னாலும், ஒருவர் பின்னாலும் நடக்க நடுவில் பெண்கள் கைகளைத் தட்டிக்கொண்டே வந்தார்கள். வழியில் பூச்சி பொட்டு இருந்தால் விலகிவிடும்.

நிலா மட்டும் தன்னந்தனியாக மிதந்தது. எங்கள் கூடவே வந்தது. பாதையை மறைத்தவாறு அடர்ந்திருந்த கிளைகளுக்குள் நுழையும்போது தன் முகத்தை துடைத்துவிட்டு மீண்டும் பளிச்சென்ற முகத்தோடு வந்து கொண்டிருந்தது. நிலா மறையும் போதெல்லாம் மினுக்கட்டான் பூச்சிகள் செடிகளுக்கு நகை பூட்டி அழகு செய்தன. சில்லென்று பூத்த காட்டுப் பூக்கள் வெட்டவெளிக் காற்றுக்கு வாசம் சேர்த்தன. வழக்கம்போல் பாட்டும் கதையுமாக நடந்தோம் நடந்தோம், நடந்துகொண்டே இருந் தோம். கிழக்குப்புற வானத்தில் ஈரத்திருநீறாக வெள்ளைக் கோடுகள் நீண்டு விடியப் போவதைச் சொன்னது. உளுந்தங்காட்டையும் காணோம். ஒண்ணையும் காணோம். விடிய விடிய நடந்து வழிதவறி விட்டோம். மலையடிவாரத்திற்கு வந்துவிட்டோம்.

எங்கு பார்த்தாலும் தூரு பெருத்துச் செறிந்த அடர்ந்த மரங்கள்தான் வானத்தை மறைத்துக் கொண்டிருந்தன. சற்று தூரத்தில் சோவென்று அருவி மலையிலிருந்து கொட்ட வானமும் பூமியும் வெள்ளி ஆபரணத் தில் செய்ததுபோல் ஒன்றுக்கொன்று பின்னிக்கிடந்தது. அருவியைச் சுற்றி தூர தூரமாக இருந்த செடிகளில் மஞ்சள் சிவப்பு நீலம் என்று பூக்கள் வித விதமாய்ப் பூத்துக் கிடந்தன. பூக்களைச் சுற்றிய வண்டுகளின் இரைச்சலினூடே வால் விரித்த குருவிகள் அங்கும் இங்கும் பறக்க எங்கோ ஒரு குயில் கூவியது. பெரிய பெரிய அணில்கள் மரத்துக்கு மரம் தாவி ஓடின. நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் அருவியை நெருங்கிப் போனோம்.

உயர்ந்த மலையிலிருந்து சோவென்று கொட்டிப் பாறையின் விளிம்பில் வெள்ளிமணிகளாகத் சிதறித் தெறிக்கும் அருவியை நான் அதுவரை பார்த்ததே இல்லை. எனக்கு சந்தோசமென்றால் சொல்லி முடி யாது. செழித்துப் பசுமை வாங்கிக் கிடந்த மரங்களினூடே தானாக ஓடும் குரங்குகளும், குட்டியைச் சுமந்தவாறு ஓடும் குரங்குகளும் குரங்கு களுக்குப் போட்டியாக விதவிதமான இறக்கைகளோடு பறக்கும் தும்பி களும் பட்டாம் பூச்சிகளும் பாய்ந்து வரும் அருவிக்கு கம்பீரத்தை கொடுத்துக் கொண்டிருந்தது. எங்கள்கூட வந்த பெரியம்மா, அத்தை மார்கள் எல்லோருமே இந்த அழகைப் பார்த்து ரசித்தார்கள்.

அடியாத்தா... எப்படித்தேன் இருக்கு! இந்த அருசவத்த கண்ணால பாத்தாலும் போதுமே, நமக்கு சுகிருதம் இல்ல கெடைக்கும்! வாங்கடி, இன்னைக்கு எல்லாரும் இங்கன குளிச்சி முழுவி கொண்டாந்த கஞ்சிய குடிச்சிட்டு இந்த பூமரத்தயும் மாமரத்தையும் பாத்துட்டுப் போவோம்.

வருச முழுக்கும் வேல செஞ்சி என்னத்தக் கண்டோம் என்று சக்கம்மா அத்தை சொன்னதும் சித்தப்பாவிற்கு மூர்க்கமான கோபம் வந்துவிட்டது.

எவளாவது அருவிக்கிட்ட காலு எடுத்து வச்சீக கால ஒடிச்சிப் போடுவேன். மனுசன் ஒரு நாளு துட்டயும் பறிகொடுத்துட்டு கொடுத்த வாக்கையும் தொலச்சிட்டு என்னடா செய்வோம், நாளப் பின்ன எவன் நம்மள மதிச்சி வேல கொடுப்பான்னு கதிகலங்கி கெடக்கேன்; உங்களுக்கு குளிப்பு சொகம் கேக்குதோ என்று கத்திக்கொண்டிருந்தார்.

ஆமா இவரு பெரிய தருமதொர! கொடுத்த வாக்க காப்பாத்து தாராம் என்று முனக்கத்தோடு சக்கம்மா அத்தை சொல்ல சித்தப்பாவிற்கு கேட்டுவிட்டது.

எவடி அவ? வாய்க்குள்ளயே முனங்கது... உங்கள எல்லாம் வேலைக்கு கூட்டிவந்தேன் பாரு என்னச் சொல்லணும் என்று சொல்லவும் பூவாயி சித்தி சித்தப்பாவிடம் சண்டைக்குப் போனாள்.

என்னம்மான் பேசுதீரு? நம்ம என்ன வேணுமின்னா இங்க வந்தோம். எப்படியோ வழிதவறி வந்துட்டோம். பிஞ்சைக்குப் போவ வழி தெரியல. இங்கன வந்து மாட்டிக்கிட்டோம். உமக்குத்தேன் ஒரு சம்பளம் போவுதா? எல்லாருக்குந்தேன் போவுது. வந்தது வந்துட்டோம். இங்கன குளிச்சி முழுவி சுத்துப்பிரயாணம் போனாப்பல இத பாத்துட்டு கொண்டாந்த கஞ்சியவும் குடிச்சிட்டு பதறாம வீட்டுக்குப் போவோம். நாளத்தொட்டு அந்த பிஞ்ச எங்கிட்டு இருக்கின்னு நல்லா விசாரிச்சி வச்சிக்கிட்டு இதுக்கு மிச்சமா வெள்ளனத்துல வந்துருவோம் என்று சொல்ல சித்தப்பா முகத்தை கடுகடுவென்று வைத்துக்கொண்டு எப் படியோ உங்க இசுட்டப்படி செய்ங்க என்றார்.

அவ்வளவுதான், எல்லாரும் அவுத்துவிட்ட கன்னுக்குட்டிகளைப் போல நுரைத்துக்கொண்டு ஓடும் ஆற்றில் பாய்ந்து நீச்சலடித்து குளித்து வெளியே வந்தோம். அருவியில் நின்று ஆட்டம் போட்டோம். பசி வயிற்றைப் பிறாண்ட இரண்டு வேளைக்கென்று கொண்டுவந்த கஞ்சி ஒரு வேளைக்கே கண்டும்காணாமல் போய்விட்டது.

நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது இரண்டு பளியர்கள் அந்தப் பக்கமாக வந்தார்கள். அவர்களுக்கு கொஞ்சம் கஞ்சி கொடுத்து விட்டு நாங்கள் போகவேண்டிய காட்டைப் பற்றி சித்தப்பா விசாரித்தார். ஒருவன் கையை தெற்குப்புறமாக நீட்டி ஏதேதோ விவரம் சொல்லிக் கொண்டிருந்தான். எனக்கு அவன் மீது கோபமாக வந்தது. எனக்கு ஒண்ணும் தெரியாது என்று சொல்லிவிட்டு அவன் பாட்டுக்கு போனா னென்றால் நாள் முழுக்க இங்கேயே இருக்கலாமே என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

அவன் சொன்ன மாயம்தான், உடனே சித்தப்பா கிளம்பிவிட்டார்.

எல்லாரும் ஆப்பாரக் குளிச்சி சாப்புட்டீகளே, வாங்க. இவன் சொல்லதப் பாத்தா குறுக்க ஒரு ஓடையும், ரெண்டு தோப்பையுந்தேன் கழிக்கணும் பொலுக்கோ. அதுக்கங்கட்டுத்தேன் நம்ம வேல செய்ய வந்த உளுந்தங் காடு இருக்கு. எவளும் அங்க வந்து வேல செய்ய வேண்டாம். வெறும் தூக்குப் போணிய வச்சிக்கிட்டு என்னத்த வேல செய்ய? பிஞ்சக்காரககிட்ட ஒரு வாத்த சொல்லிட்டுப் போயிருவோம்.

என்னன்னு சொல்லப் போறீரு? என்று ராமு அக்கா கேக்க, என்னத்த சொல்லுவாக; இப்படிக்கு இப்படி பாத மாறிப் போய்ட்டோம்; நாளதட்டும் வந்து உங்களுக்கு வேலய முடிச்சி கொடுத்துருவோமின்னு சொல்லத்தேன்.

ஆமா இதுக்கு மெனக்கெட்டு சொல்லப் போவணுமாக்கும். நாளைக்கு வெரசயா வந்துருவோம். அதேன் பிஞ்சய விசாரிச்சிக் கிட்டீருல்ல என்று ராமு அக்கா சொன்னதுதான், சித்தப்பா கோபத்தில் குதிகுதியென்று குதித்தார்.

நானு நாணயம் தவறாதவன். உங்கள கூட்டிவந்த கொடுமைக்கு நானு கேவலப்பட்டு அலயத்தேன் செய்யணும். வந்த கழுதைக வாங்க வராத கழுதைக போங்க என்று சொல்லிவிட்டு விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்துவிட்டார். பிறகு என்ன செய்வது? எல்லோரும் அவர் பின்னால் ஈரச் சீலயும் ஈர உடம்புமாகத் தடுக்கிட்டுக் கொண்டு ஓடினோம்.

வழி விசாரித்தவாறு ஓடை, மேடு, சரளி என்று தாண்டி குளிர்ந்த தென்னந்தோப்பினூடே நடந்து உளுந்தங்காட்டைப் போய் சேர்ந்தோம். பிஞ்சைக்காரர் இப்போதும் எங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்.

சித்தப்பா அவரிடம் போயி அய்யா வழி தப்பிப் போச்சி எங்கள பொறுத்துக்கோங்க. நாள வெள்ளனத்தில வந்துருதோம் என்றார்.

நானு ஆயிரக்கணக்குல பணம் கொடுத்து கன்னு வாங்கியிருக் கேன். உம்பாட்டுக்கு இப்ப வந்து நின்னா அருத்தம்? எனக்கு ஏழு மூட உளுந்து வரும். எதுக்கு அத்தனயும் புடுங்கிட்டு உழவுக்கு விடணு மிங்கேன். உன்னச் சொல்லி குத்தமில்ல. உன்ன நம்பி விட்டான் பாரு. அந்தப் பயல சொல்லணும் என்று இன்னும் என்ன என்னமோ சொல்லி காட்டுக்காரர் வய்ய ஆரம்பித்தார். கடைசியாக நீ என்ன செய்வயோ? ஏது செய்வயோ இன்னைக்கு உளுந்தஞ்செடிய புடுங்கி கொடுத்துட்டுப் போறே; இல்ல நட்ட ஈடா நூறு ரூபாய் கொடுத்துட்டுப் போ என்று சொல்லிவிட்டார்.

பாவம் சித்தப்பா பரக்க முழித்துக்கொண்டு நின்றார். ஒரு அத்தை காட்டுக்காரரோடு சண்டைக்குப் போக சித்தப்பா அத்தையை சமாதானப் படுத்திவிட்டு, அய்யா எல்லாரும் வவுத்துப் பசியோட இருக்கோம்.

உங்க சொல்லுக்கு கட்டுப்பட்டு நானு வேண்ணா வேல செய்யிதேன். மத்தவங்க செய்யமாண்டாங்க என்றார்.

சித்தப்பா சொன்னது உண்மைதான். ஏனென்றால் அப்போது பொழுது மேற்கில் விழுந்துகொண்டிருக்க எங்கள் நிழல்கள் கிழக்கில் சாய்ந்துகொண்டிருந்தன. பிறகு காட்டுக்காரர் தன் வேலை ஆட்களோடு ஏதோ பேசிவிட்டு உங்களுக்கு சாப்பாட்டுக்கு நானு ரெடி பண்ணுதேன்; கூட ஒரு ரூபா சம்பளமும் தாரேன்; வேலய செய்யிங்க என்றார்.

பாறையில் விழுந்த அருவி இப்போது எல்லோருடைய முகங்களிலும் உற்சாகமாய்த் தெறித்தது. காட்டுக்காரரின் வேலைக்காரர் ஒரு பையில் நாலு படி அரிசியும், ஒரு பொட்டணத்தில் ஊறுகாய், ஒரு கலயம் நிறைய மோர் என்று இரண்டு சுமைகளை சைக்கிளில் தொங்கப்போட்டுக் கொண்டு வந்தார்.

பெரியபானை ஒன்றைக் கொடுத்தார்கள். நாங்கள் விறகு பெறக்கிவர பெரிய ஆட்கள் கல்லடுப்புக் கூட்டி பானையில் உலையை ஏற்றினார்கள். தண்ணீர் ஓடையில் சலசலத்தது போதாது என்று பானையிலும் கொதித்தது. அரிசியைக் கழுவவுமில்லை, கல் மண் பார்க்கவுமில்லை. அப்படியே தூக்கி உலைக்குள் கொட்டினார்கள். அங்கே பிஞ்சைகளில் விளைந்திருந்த தக்காளி, பச்சை மிளகாய், வெங்காயம் எல்லாவற்றையும் கொண்டுவந்து முள்வாங்கியோடு பின்னிக்கிடந்த கத்தியை எடுத்து வெட்டி ஒன்றாக உப்புப்போட்டுப் பிசைந்தார்கள். சோறு வெந்துவிட்டது. தென்னை மரத்து அணைவிலேயே ஒரு ஆப்பை செய்து எல்லோர் தூக்குப் போணியிலும் கஞ்சியும் தண்ணியுமாக சோறு போட்டு கொஞ்சமாய் மோரு ஊத்த உப்புக்கற்கள் கரைந்து ருசி கொடுக்க... பொரச இலைகளில் ஊறுகாயும் தூக்குச்சட்டி மூடியில் பிணைந்து வைத்திருந்த தக்காளிக்கூட்டையும் வைக்க மோர் சோற்றின் வாசம் பசியின் உந்தளிப்பில் அங்கிருந்த பூவாசத்தைப் பின்னுக்கு தள்ளியது. பசி போன உடனே எல்லோருக்கும் சுறுசுறுப்பு வந்து விட்டது. உளுந்தங்காட்டில் இறங்கிவிட்டார்கள். இனி பூமியில் நமது ஆட்சிதான் என்று மமதையோடு இருந்த உளுந்தஞ்செடிகள் அனைத்தும் வேரோடு பிடுங்கப்பட்டு அம்பாரமாக குவிந்து கிடந்தன.

பொழுது ஆக ஆக பறவைக்கூட்டங்கள் வண்ணச் சிதறல்களாக வனத்தை நோக்கிப் பறந்தன. மலைக்காற்று சிலுசிலுத்தது. எங்கேயோ தாழம்பூக்கள் மடலவிழ்ந்தன. வெயிலுக்கு வெடித்துச் சிதறிய உளுந்து வாசனையும் சேர்ந்துகொள்ள மனசெங்கும் சந்தோசமும் சுறுசுறுப்பும் தான். சோர்வும் சலிப்பும் கண்காணாத இடுக்கில் போய் மறைந்து கொண்டன.

நிலவு வெளிச்சத்தில் நாங்கள் வேலையை முடித்தபோது அந்தக்

காட்டுக்காரர், பரமு நீ கெட்டிக்காரன்; வேலய முடிச்சிக்கொடுத்துட்டே என்று பாராட்டியவாறே சம்பளப் பணத்தை எண்ணிக் கொடுத்தார். என் வேலக்காரன் உன்கூட வந்து டவுணுல கிளப்பு கடையில காப்பி வாங்கி கொடுப்பான்; குடிச்சிட்டுப் போங்க என்றார். எங்களுக்கு அப்போதிருந்த சந்தோசத்தை சொல்ல முடியாது.

ஊர்சனமெல்லாம் எங்களுக்காக மந்தையில் காத்துக் கிடந்தார்கள். அவர்களுக்குக் கேட்கவும் எங்களுக்குச் சொல்லவும் நிறைய கதை இருந்தது. நான் நிலாவையே பார்த்துக் கொண்டிருந்தேன். கூடவே திரும்பி வந்திருந்தது.

மழைக்காலத்தில் அரிசி கண்டுபிடிக்க அந்தப் பாடு என்றால் வெஞ்ஞனப்பாடும் பெரிய பாடுதான். கீரைதான் முக்கிய வெஞ்ஞனம். வேலை முடிந்து வரும்போதே மடி நிறைய துயில் கீரை, மவுளிக்கீரை, சாரணத்திக் கீரை, குப்பைக் கீரை, பருப்புக் கீரை, புளியஞ்சிறு கீரை, கும்பிடிக் கீரை என்று இன்னும் பலவகைக் கீரைகளைக் கொண்டுவந்து கடைவார்கள்.

ஒவ்வொரு சமயம் ஆற்றிலும் குளத்திலும் சீலை முந்தியையோ, தலையில் இருக்கும் சும்மாட்டுத் துணியையோ தண்ணீருக்குள் முக்கி ராவி எடுத்து மீன் பிடித்து வருவார்கள். மீன் குழம்பு என்றால் அன்று பிள்ளைகளுக்கு கொண்டாட்டம்தான்.

ஒவ்வொரு வீட்டிலும் வதவதவென்று ஆட்கள் இருப்பதால் கொஞ்சம்தான் மீன் குழம்பு கிடைக்கும். இப்படித்தான் ராக்கம்மா பாட்டி ஒருநாள் குளத்தில் மீன் பிடித்து குழம்பு வைத்திருக்கிறார். குழம்பு ருசியாக இருந்ததால் அவர் மகன் இன்னும் கொஞ்சம் இன்னும் கொஞ்சம் என்று கேட்டுக்கேட்டு சாப்பிட்டிருக்கிறார். எல்லாப் புள்ளைகளுக்கும் வேண்டாமா? அதுவுமில்லாம இது கூத நாளு. விடிஞ்சதும் வெறும் கஞ்சிய குடிக்க முடியாது. சுண்டப் போட்டு வச்சா விடியங்காட்டுல ஆளுக்கு இம்புட்டு ஊத்திக்கலாம் என்று சொல்லி குழம்பை பத்திரப் படுத்திவிட்டார் பாட்டி. மகனுக்கு தூக்கம் வரவில்லை. மனசெல்லாம் குழம்பு மேல்தான். கொட்டக்கொட்ட விழித்துக்கொண்டே படுத்திருந் திருக்கிறார். எல்லாரும் உறங்கிய பிறகு பைய எழுந்து அடுப்படிக்கு வந்து குனிந்துகொண்டே சட்டியிலிருந்த மீனை அரித்து அரித்து தின்றிருக்கிறார்.

உறங்கிக்கொண்டிருந்த பாட்டிக்கு முழிப்பு வந்துவிட்டது. ஏதோ சத்தம் கேட்கிறதே என்று காதைக் கூர்மையாக்கி கேட்டதோடு சத்தம் வந்த திக்கில் உற்றுப் பார்த்தார். அடுப்புக்கு முன்னால் இருட்டில்

கருப்பாக தெரிந்திருக்கிறது. இதற்கு முந்தைய இரண்டு நாளும் எந்த நாயோ வீட்டிற்குள் வந்து கஞ்சியைக் குடித்துவிட்டு வெறும் பானை யாக்கிவிட்டு போய்விட்டது. பாட்டிக்கு வந்ததே கோபம்!

சக்களாத்தீ நாயி... நல்ல தின்னு கண்ட ருசிக்கில்ல இன்னைக்கும் வந்திருக்கு என்று வெளமெடுத்து எப்போதும் பக்கத்தில் வைத்திருக்கும் கம்பை எடுத்து இரண்டு போடு போட்டிருக்கிறார். பாட்டியின் மகன் அய்யோ என்று கத்திவிட்டார். நாயீன்னு நினைச்சோம் எந்தக் களவாணிப் பயலோ வில்ல வந்து களவாண்டு திங்கான் என்று பாட்டி ஆத்திரத்தோடு வசமான போடாக இன்னும் நாலு போட்டிருக்கிறார்.

ஆத்தா... அடிக்காத... ஆத்தா நாந்தேன் என்று அலறியவாறே பாட்டி மகன் கீழே விழுந்தார். பிறகு அவர் எழுந்து நடக்க நாலு மாதம் ஆனது.

அய்யனாப் பெரியம்மா மகளுக்கு குழந்தை பிறந்திருந்தது. என்ன கஷ்டப்பட்டாலும் பிள்ளைக்கு பால் வேண்டும் என்பதற்காக பிள்ளை பெற்றவளுக்கு கறி, மீன் என்று வாங்கி குழம்பு வைத்துக் கொடுப் பார்கள்.பெரியம்மா மகளின் புருசன் துரும்பு பெருமாள் ஒன்றுக்கும் உதவாதவன். எப்போதும் வாய்க்கு ருசியாகத் தின்பதற்கு அலைவான். ஆனால் வேலை செய்ய உடம்பு வளையாது.

அன்று பெரியம்மா மகளுக்காக கறி எடுத்து குழம்பு வைத்து மகளுக்கு சாப்பிடக் கொடுத்துவிட்டு மிச்சத்தை மத்தியானத்துக்கு இருக் கட்டுமென்று பத்திரப்படுத்திவிட்டாள். அன்றைக்கு பிள்ளை பெற்ற பொண்டாட்டியைப் பார்க்க புருசன் வந்துவிட்டான். மருமகன் வந்து விட்டாரே என்று அவருக்கும் கறிக்குழம்போடு சாப்பாடு போட்டுவிட்டு வெளியே போய் யாருடனோ பேசிக்கொண்டு இருந்திருக்கிறாள்.

ஒரே வீட்டிற்குள் ஒரு சீலையை மறைவு கட்டி அந்தப் பக்கம் இருக்கும் கட்டிலில் பிள்ளை பெற்றவள் படுத்திருக்க இந்தப் பக்கம் அடுப்படி. பார்த்தார் மருமகன், இதுதான் சமயமென்று மாமியார் பத்திரப்படுத்தியிருந்த கறிக்குழம்பை எடுத்து அங்கே இருந்த தூக்குப் போணியில் மொத்தமாக ஊற்றிக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டு விட்டார்.

பிள்ளை பெற்று சீலை மறைவில் படுத்திருந்த அவர் பொண்டாட்டி ரச்சுமி தனது புருசன் சட்டிபொட்டியை உருட்டுவதைப் பார்த்துவிட்டு, என்ன செய்தீரு என்று கேட்டிருக்கிறாள். பதில் சத்தத்தை காணாததால் ஆத்தா ஆத்தா... என்று பெற்றவளைக் கூப்பிட்டிருக்கிறாள்.

அவள், என்ன தாயீ எதுக்கு இப்ப கூப்பிடுதே என்று கேட்டுக் கொண்டே வந்திருக்கிறாள்.

ஆத்தா, உம் மருமவன் அடுப்படியில சட்டிய உருட்டிக்கிட்டு இருந்தாரு; என்னன்னு கேக்கேன், பேசவே காணோம்; அது என்னன்னு

போயி பாரு ஆத்தா என்று மகள் சொல்ல பெரியம்மா வந்து பார்க்க கறிக் குழம்பு சட்டி வெறுமையாகக் கிடக்கிறது. பக்கத்திலிருந்த ஈயத்தூக்குப் போணியைக் காணோம்.

குழம்பு போனால் போகட்டும். ஆனால் கறிக்குழம்பை சும்மா காட்டு வழியே கொண்டுபோனால் குழம்பு வாடைக்கு காத்து கருப்பு அண்டி விடுமே என்று இரண்டு அடுப்புக் கரித்துண்டை எடுத்துக் கொண்டு அய்யா மருமகனே சத்த நில்லுங்க என்று கூப்பிட்டுக்கொண்டே ஓடியிருக்கிறார். கரித்துண்டை கறிக்கொழம்பில் போட்டால் காத்து கருப்பு அண்டாது.

மாமியார் தன்னைக் கூப்பிட்டுக்கொண்டே வருவதைப் பார்த்த துரும்பு, அதுவும் கரி... கரி என்று சொல்லிக்கொண்டு வருவதைப் பார்த்த மருமகன் குழம்பைப் பிடுங்கத்தான் மாமியார் வருகிறாள் என்று ஓடு கிறான். வழியில் பார்த்தவர்கள் இதென்ன கொடுமை! மாமியாளும் மருமக னும்இந்த ஓட்டம் ஓடுதாகளே... என்னமும் அக்குசான விசயமில்லாமயா இப்படி ஓடுவாவ, அது என்னன்னு கேப்போம் என்று இவர்களும் பின்னால் ஓட மருமகன் ஊர் எல்லைக்குப் போனதும் ஊர்க்காரர்கள் அவனையும், விரட்டி வரும் மாமியாரையும் தடுத்து நிறுத்தி விவரம் கேட்டுவிட்டு இரண்டு பேரையும் வசவான வசவில்லை, அப்படி வஞ்சி இருக்கிறார்கள். உனக்கு கொஞ்சமாவது அறிவிருக்கா? அப்பவும் பச்ச உடம்புக்காரிக்கு வச்ச குழம்ப ஊத்திக்கிட்டு ஓடியார துரும்பன காத்தடிச்சா என்ன கருப்படிச்சா என்ன?

ஜ ஜ

தாத்தா கோவிந்தனுக்கு எங்கள் மீது ரொம்ப ரொம்ப கோபம். எப் போதும் வஞ்சிகொண்டே இருப்பார். கழுதைக ராவுன்னும் இல்லாம, பகலுன்னுமில்லாம களாண்டுக்கிட்டு திரியுதுக. போற ரக்குல பூச்சி பொட்டு புடுங்கித் தொலைக்க மாணேங்கே என்று வைவதுமில்லாமல் நாங்கள் போகிற இடத்தையெல்லாம் எப்படியோ ஊசாட்டம் பார்த்து வந்துவிடுவார்.

எங்களுக்கு அவரைப் பற்றிய பயம் நிறைய இருந்தது. அதோடு, ஒருநா ஒரு பொழுதாச்சிலும் அவுகள நானு காயும் கனியும் களாங்கும் போது கையும் களவுமா புடிச்சி கொடுக்கலே எம் பேரு கோவிந்தன் இல்ல என்று வீறாப்பு பேசியவாறு எங்களைப் பிடிக்க 'கங்கு' கட்டிக் கொண்டு அலைந்தார்.

அவர் நிறையக் குடிப்பார். ஒருநாள் அவர் மருமகன் பட்டாளத் திலிருந்து லீவில் வந்திருந்தார். இவர் கொண்டுவந்த ரம் பாட்டிலைக் குடித்துவிட்டு களத்து காவலுக்கு தாத்தா வந்திருக்கிறார். அவர் நிறையக்

குடித்திருக்கிறார் என்கிற விஷயம் கணேசனுக்கு தெரிந்துவிட்டது. முது குடியான் கோயிலை ஒட்டி பெரிய களமிருந்தது. அதில் கருதுகள் பிணையலுக்காகக் காத்திருக்கும். அதோடு துவரங்காய், உளுந்தங்காய் அடிப்பதற்காக சாணை வைத்திருப்பார்கள். அந்தக் களத்திற்கு யாருமே காவலுக்கு வரமாட்டார்கள். முதுகுடியான்தான் காவல் என்று சொல்லி விடுவார்கள்.

கோவிந்தன் தாத்தா காவலுக்கென்று களத்துக்குப் புறப்படும் போது அவர் மகன், எப்பச்சி... முதுகுடி களத்துக்குப் போனீருன்னா சாமி கோவிச்சிக்கிடப்போவுது. அதுவுமில்லாம நீரு நிறைய குடிச்சி இருக்கீரு; பேசாம இங்கன படுத்து உறங்கும் என்று சொல்லியிருக்கிறார்.

போடா... அந்த முதுகுடியான் கிழிச்சான் என்று இன்னும் கெட்ட வசவாக வஞ்சிகொண்டு வந்தாராம்.

நேத்து பேஞ்ச மழைக்கு இன்னைக்கு முளைச்ச காளான் கணக்கா நாலு சிறுக்கி புள்ளைக சேந்துக்கிட்டு பிஞ்சய அழிக்காடா ஆக்குதுக. அதுகள இந்த முதுகுடியான் கையக்கால மொடக்க மாணேங்காரு. காவலு காக்காராம்! மசுரப்புடுங்கன காவலு! என்று சொல்லிவிட்டு கையில் கம்போடு வந்து களத்தில் படுத்துவிட்டார்.

அன்று நாங்கள் களவுபுல்லுக்குப் போகவில்லை. இவருக்காக மெனக்கட்டு எங்களோடு இன்னும் ஐந்து ஆறு பேரையும் சேர்த்துக் கூட்டி வந்தோம். பட்டாளத்தண்ணியை குடித்ததில் தாத்தா நன்றாக குறட்டை விட்டு களத்தில் தூங்கிக்கொண்டிருந்தார். நாங்கள் அவரைத் தூக்க மாண்டாமல் தூக்கிக்கொண்டுபோய் முதுகுடி சிலைக்குக் கீழே கால் மாற்றிப் போட்டுவிட்டு வீட்டுக்கு வந்து வழக்கம்போல் தெருவில் மந்தையில் படுக்காமல் அவரவர் வீட்டில் பெரியவர்களுக்குத் தெரியும் படியாக படுத்துக்கொண்டோம்.

மறுநாள் காலை கண்விழித்த தாத்தா தான் இடம் மாறி கால் மாற்றிக் கிடப்பதைப் பார்த்து திடுக்கிட்டார். அவருக்கு எங்கள் மீதான் சந்தேகம். களத்திலிருந்து அப்பறக்குப்புற பாய்ந்தவாறு ஊருக்குள் வந்து எங்களது வீடுகளில் ராத்திரி நாங்கள் எங்கே போனோம், எங்கே படுத் தோம் என்று விசாரிக்க அவரவர் அம்மா அய்யா எல்லோரும் ஒன்று போல இம்புட்டு நாளும்னாச்சிலும் தெருவு மந்தைன்னு படுத்துக்கிடங் குங்க. ஆனா ராவு சிவசிவான்னு எங்க வீட்டுக்குள்ளதேன் மொடங்கி கிடந்துச்சுக என்று சொல்ல அவர் விதிர்விதிர்த்துப் போனார்.

பிறகு வழக்கம்போல் முதுகுடியானை வரவழைத்து சாமியாடி திருநீறு போட்டார்கள்.

மழை வருவதற்குள் ஊருக்குள் போய்விடலாம் என்றுதான் காட்டிலிருந்து வேகவேகமாக வந்தோம். அதற்குள் மழை பிடித்துக் கொண்டது. ஓடிப் போய் முதுகுடி கோவில் ஆலமரத்தின் அடியில் ஒண்டி னோம். அங்கே நின்றிருந்த செல்லம்மாக் கிழவி, என்னடி குயிலி மாதிரி ஓடி வாறீக என்று கேட்டாள். பிறகென்ன, மழைக்கும் குளிருக்கும் ஏற்ப குயிலி கதையைச் சொல்லச் சொல்லி கிழவியை நச்சரித்தோம். மடியை அவிழ்த்து வெற்றிலையைப் போட்டுக்கொண்டே கதையைத் தொடங் கினாள்.

ஊரடக்கம் ஒடுங்கின நேரம். எல்லாரும் கஞ்சியத் தண்ணிய குடிச் சிட்டு தெருவு மந்தைன்னு படுத்துட்டாக. அந்த நேரத்துக்கு எப்பவும் போல குயிலியோட குலவைச்சத்தம் கேட்டு எல்லோரும் எழுந்து பாத்தாக.

குயிலியோட வீடு தெருக்கோடியில இருக்கு. அவளுக்கின்னு பொறந்தவீட்டில சொல்லிக்கிறாப்ல யாருமே இல்ல. சடங்கான மூணாம் மாசமே குயிலிக்கு கலியாணம் முடிஞ்சு நம்ம ஊருக்கு வந்துட்டா. அவளும் அவ புருசனும் அப்படி பொருந்திப்போயி இருந்தாக. மூணு மாசம் முடிஞ்சதுமே பாம்பு கடிச்சி குயிலி புருசன் செத்துப் போனான்.

அவன் செத்ததுமே குயிலி அப்படியே அல்லாடிப் போனா. ஒரு மாசம் வரைக்கும் படுத்த படுக்கைய விட்டு எந்திரிக்கவே இல்ல. தலைவிரி கோலமா படுத்த மானைக்கே கிடந்தா. புருசனப் பெத்த கெழடுக இவளக் கண்டுக்கிடல. ஊர்க்காரகதேன் ஆத்தித்தேத்தி இம் புட்டு கஞ்சி தண்ணி கொடுத்து உசுரு உண்டாக்கி விட்டாக. இப்பவும் அவ புருசன் செத்து வருசம் திகஞ்சிபோச்சி. அவளும் கொஞ்சம் தேறித் தெளிஞ்சிட்டா. விடியமின்ன காட்டு வேலைக்குப் போறவதேன். மாங்குமாங்குன்னு வேலையிலேயே தன்ன கரைச்சிக்கிற மாதிரி அப்படி வேல செஞ்சா. அப்படி வேல செஞ்சவ மேல இப்ப ரெண்டு மாசமா முதுகுடியான்சாமி உடன்கொண்டுக்கிட்டு அவளப் பாடாப் படுத்துதாரு. எந்த எடத்தில எசவுபிசவா அவர் கண்ணுல சிக்குனாளோ தெரியல. ஊரு அடங்கிருச்சின்னாப் போதும், குலவச் சத்தமும், குதியாட்டமுமா அந்த முதுகுடி கோயிலுக்கே ஓடிருதா. ஒரு பத்து இருபது நாளு ஊர்க்காரகளும் ஓடைவரைக்கும் ஓடுனாக. அவ ஓடையைத் தாண்டி ஓட இவுக அப்படி அப்படியே நின்னுட்டாக. முதுகுடியான் மெய்யான தெய்வம். மழை பெய்யுமின்னா இன்னைக்கு பேஞ்சிதேன் ஆகும். அப்படித் துடியான தெய்வத்துக்கிட்ட சாமி வந்தவதேன் போறான்னா வராதவகளும் போகலாமா? அதேன் ஊர்க்காரக எல்லாம் ஊத்தாங்கல்லு ஓடையி லேயே நின்னு குயிலி கோயிலு எல்லைக்குள்ள மொளயந்தண்டியும் பாத்துட்டு திரும்பிட்டாக. அதுல இருந்து இப்படித்தான். பாவம் குயிலி!

'அவதியப் போட்டு பவதிக்கு அடிச்ச மாதிரி' அவள முதுகுடியான் இந்தப் பாடு படுத்துது. அந்தச் சாமிய எப்படியும் விலக்கணும்னு அவ சொந்தக்காரங்க கோடாங்கி அடிச்சி குறி கேட்டாக.

முதுகுடியான் உடன் கொண்டவ குயிலி மேலேயே அகோதரமா வந்திருச்சி. சாமியாடிக்கிட்டே குயிலி கத்துனா. அடேய்... இந்தப் பயிரு எனக்கு சொந்தமானது. நானு எப்பவோ இவளத் தொட்டுட்டேன். இவ கிட்ட இருந்து என்னைப் பிரிச்சிரணும் முறிச்சிரணுமின்னு நினைச்சீ களோ...? எண்ணி எட்டு நாளையில இந்த கன்னி உசுருக்கு ஆவத்து. நானு வேண்ணா அதுக்குண்டான மாறுபாட்ட தச்சிரூவமா காமிக்கவா என்று கேட்டதும் ஊர்க்காரக எல்லாம் அவ கால்ல விழுந்துட்டாங்க.

வேண்டாம் சாமி! அப்புராணி உன் மருளாடி புருசனத்தேன் எளந்து நிக்கா. இனி உசுரயும் எளக்க வேண்டாம். அவ பாட்டுக்கு புண்ணியவான் பூமியில 'பத்து விரலால பாடுபட்டு, அஞ்சு விரலால அள்ளிச் சாப்பிட்டு' தன்னோட உசுரனாச்சிலும் காப்பாத்திக்கிடட்டும்னு சொல்லிட்டாக.

அன்னக்கில இருந்து குயிலி இப்படி சாமத்துல ஓடிருவா. ஊர்க்காரகளும், பாவம் குயிலி! வேல செஞ்சிட்டு வந்தமா, ஒழக்க கொதிக்க வச்சமா... சாப்பிட்டமா... மொடக்கி எந்திரிச்சமான்னு இல்ல. இந்த முதுகுடி அவள அலுப்பாற விடாம அந்தப் பாடு படுத்துதுன்னு எல்லாரும் குயிலி மேல பரிதாபப்பட்டாக. இப்பவெல்லாம் அவ பின்னால யாரும் ஓடுறது இல்ல. அவ ஓடும்போது கையெடுத்து கும்பிட்டு வழி அனுப்பி வச்சாக. இப்படி ஒரு சாமத்துக்கு ஓடுற குயிலி மம்மலோட தான் வீட்டுக்கு வருவா. வரும்போது அவ முகத்தில ஒரு தெளிச்சியும் குறுகுறுப்பும் இருக்கிறத ஊர்க்காரக பாப்பாங்க. பாத்ததுமே, அடியாத்தா குயிலி முகத்தில என்னமா நச்சத்திரம் பூத்தாப்ல லச்சணம் பொங்கிப் போயிருக்கு. ஒரு பாட்டம் தண்ணிக்கு வாட்டம் கொண்ட பயிரு கணக்கா முந்தியெல்லாம் சொணங்கிக் கிடந்தவ அந்த முதுகுடியான் தொட்டதில இருந்துதேன் இப்படி 'குறுவமணி' கணக்கா அலயுதா. நல்லவேள இப்படியே இருக்கட்டும்னு பேசிக்கிட்டாக.

ரொம்ப நா கழிச்சு அவ ஊருல இருந்த அவளோட சின்னத்தா மகன் மருதமுத்து குயிலியப் பாக்கிறதுக்காக வந்திருந்தான். ஆடுகளையும் பத்திக்கிட்டு வந்தான். இந்தப் பக்கம் கூலிக்கிடை போடலாம்னு. அவன் கொஞ்சம் விவரம். நாலு ஊர்களுக்குப் போயி நாலு விஷயமும் அறிஞ்சவன். அவன் கிட்டவும் ஊர்க்காரக முதுகுடியான் குயிலிகிட்ட உடன்கொண்டு இருக்கதப் பத்தி சொன்னாக. இதைப்பத்தி குயிலிகிட்ட கேட்டான். அவ வாயத் திறக்கல. வார்த்த ஒண்ணு பேசல. பேசாம முகத்த திருப்பிக்கிட்டுப் போயிட்டா. இப்படியே ஒரு மாசம் ஆயிருச்சி. மருதமுத்தும் இந்த ஒரு மாசமா ஊர்லதான் இருக்கான்.

ஒரு நாளு அப்பிடி முதுகுடியான் சாமிகிட்ட இவளுக்கு விடியத்தண்டியும் என்ன வேலதேன் இருக்குன்னு நினைச்சவன் எப்பவும் போல சாப்பிட்டு கெடைக்குப் போயிட்டான். ஊர் அரவம் ஒடுங்கிருச்சி. கெடையிலிருந்து வந்து முதுகுடி கோயிலுக்குப் பின்னால் ஒளிஞ்சிக் கிட்டான். முழங்க குலவையப் போட்டுக்கிட்டு குயிலி ஓடி வர்றா. அவன் அப்படியே திகைச்சிப் போனான். ஏன்னா குயிலி கோயிலுக் குள்ளேயே போகல. வெறிபிடிச்சமாதிரி ஓடவுமில்ல. கோயில்ல இருந்து பிரிஞ்ச ஒத்தயடிப்பாதையில அவ மெல்ல நடந்து போனா. இவனும் அவளுக்குத் தெரியாம பின்னாலயே போனான். அங்க ஒரு முதுகுடி... சரியான இளவட்டம் இவளுக்காகக் காத்திருந்தான். இவளப் பார்த்ததுமே அவன் ஓடிவந்து அணைச்சிக்கிட்டான். ரெண்டு பேரும் அங்கேயிருந்த படப்பு மறவுக்குப் போனாக. எப்பவுமே வாய் பேசாம தானுண்டு, தன் வேல உண்டுன்னு இருக்கிற குயிலியோட சிரிப்புச் சத்தம் கலகலன்னு கேட்டது. மருது அப்படியே சிலையா நின்னுட்டான். ஆனாலும் அவுக இவனப் பாத்துட்டாக. பிறகு கொஞ்ச நாள்லயே குயிலியக் காணோம். ஊர்க்காரக கிணறு குட்டைன்னு தேடப் போக மருதுதான் தேட வேணாம்னுட்டு அந்தக் கதையச் சொன்னான்.

ராக்காச்சி கோவிலுக்குப் போனாலும் நடந்துத்தான் போக வேண்டும். வழி நெடுக புளியமரம், வாகைமரம், பூவரசமரம், தூங்குமூஞ்சி மரமென்று மரங்கள், மரங்கள், மரங்கள்தான். அதிலும் புளிய மரங்கள் அநியாயத்திற்கு நிழலைக் கொடுத்தவாறு அடர்ந்து இருக்கும். அதன் பூ, பிஞ்சு, காய், பழம் எல்லாமே எங்களை அதன் பக்கத் திற்கு கொண்டு வந்துவிடும். எதுவுமே இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது புளிய இலைகள். பறித்துக் கல்லில் வைத்து தட்டி வாயில் ஒதுக்கிக் கொள்வோம். அதோடு இரண்டு உப்புக்கல்லும் வைத்து விட்டால்... நாள் முழுக்க பசிக்கவே பசிக்காது.

நடப்பவர்களின் களைப்பு தெரியாமல் இருக்க இரண்டு பர்லாங் தூரத்தில் ராக்காச்சி கோயிலுக்கு அருகே சின்ன வட்டக்கிணறு இருப் பதோடு அதில் 'தில்லாவும் போட்டிருக்கும்.' தாகத்தோடு இருப்பவர்கள் தண்ணீர் இறைத்துக் குடித்துக் கொள்ளலாம்.

இந்த பெரிய மரங்களினூடே கொழிஞ்சியும் சித்தகத்திச் செடிகளும் அடர்ந்து கிடக்கும். நம் காலடிச்சத்தம் கொஞ்சம் கேட் டாலும் போதும், இந்த செடிகளின் அடியில் கூடு கட்டியிருக்கும் காடை, கதுவாலிகள் விருட்டென்று பறந்து ஓடும். இந்த காட்டினூடே எப்போதும் மாறாத வறுத்த உளுந்தின் மணம் காற்றில் கலந்திருக்கும்.

நமக்கு தோசையின் நினைவைக் கிளறிவிடும்.

இந்த உளுந்தின் வாசனையைப் பற்றி கேட்டால் என் சின்னம்மா, பாட்டி எல்லாம் ஒரு கதை சொல்வார்கள்.

ஒரு கொடுமைக்கார மாமியாரிடம், ஒரு அப்பிராணி மருமகள் இருந்தாளாம். அந்த மருமகள் மாசமாக இருந்தாளாம். அவளுக்கு உளுத்தம்பயறை வறுத்துத் திங்க வேண்டுமென்று ஆசையாய் இருந்ததாம். ஆனால் கண்கொத்திப் பாம்பாகத் தன் பக்கத்திலேயே இருக்கும் மாமியாருக்குத் தெரியாமால் எப்படித் தின்பது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டு இருந்தாளாம்.

ஒருநாள் பக்கத்து ஊரில் மாமியாருக்கு வேண்டியவர் செத்துப் போய்விட அந்த துட்டிக்காக மாமியார் போய்விட்டாள். மருமகளுக்கு ஒரே பரபரப்பு. பொழுது மலை வாசலுக்குள் விழுந்த பிறகுதான் மாமியா வருவாள். அதற்குள் நாம் கொஞ்சம் உளுந்தை எடுத்து வறுத்துத் தின்றுவிடுவோம் என்று அவசரமாய் 'வரையோட்டில்' உளுந்தை வறுத்து விட்டாள்.

இதற்குள் ஓடையைத் தாண்டிய மாமியார் வீட்டைத் திறந்து போட்டு அதில் தனிக்கர மருமகளை விட்டு விட்டு வந்துவிட்டோமே; அவள் எதையாவது எடுத்து தின்னு அழிச்சாட்டியம் பண்ணிவிடுவாளோ என்று எண்ணியவாறு திரும்பிவிட்டாள். மாமியார் வருவதை தூரத்திலேயே பார்த்துவிட்ட மருமகள் வறுத்த பயறை மடியில் கொட்டி கொசுவத்தோடு சேர்த்து இடுப்பில் சுற்றிக்கொண்டாள். வீட்டிற்குள் வந்த மாமியார் எல்லாவற்றையும் நோட்டம் பார்த்துவிட்டு மருமகளிடம், நான் வரத்தண்டியும் நீ காட்டில் போய் விறகு பெறக்கு; நானு வந்த பெறகு வா என்று சொல்லி கதவைப்பூட்டி துரவாலை மடியில் வைத்த வாறு போய்விட்டாள். மருமகளுக்கும் இதில் ரொம்ப சந்தோசம். காட்டிற்கு வந்து தன்னிச்சையாக பயறைத் திங்கலாம் என்று வந்தாள்.

ஆனால் ஓடையைத் தாண்டி கொஞ்ச தூரம் நடந்த மாமியாருக்கு திடுதிப்பென்று மீண்டும் ஒரு நெனப்பு. நம்ம இல்லாதபோது மருமகள் எந்தப் பண்டத்தையாவது அள்ளி தன் மடிக்குள் ஒளித்துவைத்திருப் பாளோ? மடியைப் பார்க்காமல் விட்டுவிட்டோமே என்று மீண்டும் காட்டுக்கு வந்துவிட்டாள். அப்போதுதான் ஒரு கல்லில் உட்கார்ந்து கொண்டு ஒரு வாய் பயறை வாயில் போடப் போன மருமகள் மாமியார் வருவதைப் பார்த்துப் பதறிப் போனாள். தன்னையும் தன் மடியையும் சோதிக்கத்தான் மாமியார் வருகிறாள் என்று அவசர அவசரமாய் வறுத்த பயறை ஒரு புதருக்குள் அதுவும் பாம்பு புத்தை ஓட்டி இருந்த புதருக்குள் கொட்டிவிட்டாளாம். அதுதான் இப்போது காடெல்லாம் மணக்கிறது என்று சொன்னார்கள்.

இதைப் பற்றி மாமாவிடம் கேட்டதற்கு, அவுகளுக்கு வேலை

யென்ன பொம்பளை புத்தியை காட்டிட்டாகளே; அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல; நல்ல பாம்பு முட்டையிட்டிருக்கு; அதேன் அந்த உளுந்து வாசன வருது என்றார்கள்.

ராக்காச்சி கோயில் நாலு பக்கமும் மண்சுவர் வளர்த்து மேலே மூங்கில் கழியால் மெத்தை போடப்பட்டு சின்னதாக இருக்கும். அதற்கு கதவில்லை. எப்போதும் திறந்தவெளியாகத்தான் இருக்கும். இந்த ராக்காச்சி மீது ஆட்டுக்காரர்களுக்கு ரொம்பவும் பக்தி. மலையில் மேய்க்கும் ஆடுகள் காணாமல் போய்விட்டால் அவை மற்ற மிருகங் களுக்கு இரையாகி விடாமல் இந்த தெய்வம்தான் காப்பாற்றி ஒரு ஆட்டை நாலு ஆடாக அதாவது தாயும் புள்ளையுமாக உண்டாக்கி தொலைத்துவிட்ட ஆட்டுக்காரர்களிடமே மீண்டும் சேர்த்துவிடும் என்ற நம்பிக்கை ஆடு மேய்ப்பவர்களிடையே இருக்கிறது. அதனால் வருசா வருஷம் கெடை கீதாரிகள் எல்லாம் சேர்ந்து ஏழு எட்டு கிடாக்களோடு பத்து மாட்டுவண்டி வரையில் பூட்டி ஊரோடு தங்கள் சொந்தபந்தங் களையும் கூட்டிக்கொண்டு போவார்கள். அந்தக் கோயில் மலையை ஒட்டி இருந்ததால் பாதி வழி போகும்முன்பே காடு ஆரம்பமாகிவிடும். அந்தக் கோயிலுக்குப் போவதென்றால் எங்களுக்கு ஒரே கொண்டாட்டம். காட்டை நெருங்கியதுமே இத்தனை நேரமும் வண்டியோட்டியவர்கள் கீழே இறங்கிக் கொள்வார்கள். ரொம்ப திறமைசாலிகளும் ரொம்ப சுதானமாக வண்டி ஓட்டத் தெரிந்தவர்களும்தான் அந்த கோயில் வரைக்கும் வண்டியை ஓட்டுவார்கள். உள்ளே போகப் போக நெட்டி லிங்க மரங்களும் இலுப்பை மரங்களும் வானத்தின் சின்ன இடைவெளி கூட தெரியாமல் மறைத்தவாறு உயர்ந்திருக்கும். ஓணான் கொடிகளும் கோவைக் கொடிகளும் மரத்தோடு மரமாகப் பின்னிக் கிடக்கும். மூங்கில் புதர்களும் காரையும் அடர்ந்து கிடக்க அதற்குள்ளிருந்து வரும் சத்தம் மனசுக்குள் அச்சத்தை ஏற்படுத்தும். ஆடாதோடையும் காட் டாமணக்கும் நெருக்கமாக வளர்ந்திருக்க அதனூடே தலையை விரித்துப் போட்டவாறு ஒன்றிரண்டு பனைகள். அந்த இருண்ட வனத்திற்குள் வண்டிப் பாதைமட்டும் புழுதி பரிந்து ரெட்டைக்கோடாய் நீண்டு போகும்.

கோயிலுக்குப் போய்ச் சேர்ந்த உடனே எங்களுக்கு இருக்கும் சந்தோசம் சொல்லிமுடியாது. சிறியவர் பெரியவர் என்று இல்லாமல் எல் லோரும் மடியைக் கூட்டிக்கொள்வோம். விளாம்பழம், மாம்பழம், நெல்லிக்காய் என்று ஓடி ஓடிப் பெறக்குவோம். புத்துக்கால்காரர்கள் யானைச் சாணியைத் தேடிப் போவார்கள். பெரிய ஆட்கள் சீயக்காய், புங்கங்காய் என்று பெறக்குவார்கள். எங்களின் இரைச்சலினூடே காட்டுக் கோழிகள் மாயத் தாவு தாவி மறைந்து ஓடும். இந்தக் கோயிலில் பொழுது கொஞ்சம் மசங்கினால்கூட இருக்கக்கூடாதாம். பகலில் தெய்வமாக இருக்கும் ராக்காச்சி இரவில் முனியாக ஆகிவிடுவாளாம். இந்த

கோயிலில் தங்கியவர்களைக் காவு வாங்கிவிடுவாளாம்.

அதனால் ஆண்கள் எல்லாம் ரொம்ப மும்முரமாக கிடாக்களை வெட்டவும், கறிகளைத் துண்டு போடவும் பெரிய பெரிய கற்களை அடுப்புக் கூட்டவுமாக இருப்பார்கள். எங்களோடு வரும் அண்ணன்கள் காடெல்லாம் மணக்கும் தாழம்பூவை மடலோடு அறுத்துக்கொண்டு வருவார்கள். போகும்போது ஒட்டிய வயிறும் பரட்டைத் தலையுமாக இருக்கும் நாங்கள் கறிச்சோற்றின் விருந்தோடும் தாழம்பூ மணத்தோடும் திரும்புவோம்.

ராமாயிப் பாட்டி இந்தக் கோயிலுக்கு கீதாரிகளோடு வந்திருக் கிறாள். அந்தப் பாட்டிக்கு கறி என்றால் அப்படி ஆசையாம். ஆனால் எடுத்துத் தின்பதற்கு பணவசதியுமில்லை. அதனால் வருசம் ஒருமுறை இந்த ஆட்டுக்காரர்களோடு இந்தக் கோயிலுக்கு வந்து ஆசையைத் தீர்த்துக் கொள்வாளாம். இந்த முறை இவள் வந்தபோது ஏழு கிடா வெட்டியிருக்கிறார்கள். பாட்டி ஆசையைக் கட்டுப்படுத்த முடியாமல் முதல் பந்திலேயே உட்கார்ந்து விட்டாள். ஒரு ஆப்பைச் சோறும் நாலு ஆப்பை கறியுமாக வாங்கி வாங்கிச் சாப்பிட்டிருக்கிறாள். கடைசியில் அவளால் சாப்பிட்ட இடத்திலிருந்து எழக்கூட முடியவில்லை. எப் படியோ தட்டுத்தடுமாறி எழுந்துவிட்டாள். இன்னும் ஐந்து ஆறு வரிசை பந்திக்குமேல் இருந்திருக்கிறது. பாட்டிக்கு உட்காரமுடியவில்லை. முதல் நாள் தூங்காததால் வயிறு நிறைய சாப்பிட்ட மயக்கத்தில் தூக்கம் கண்ணைச் சுற்றியிருக்கிறது.

உடனே மனசுக்குள் கணக்குப் போட்டுப் பார்த்திருக்கிறாள். எல்லோரும் சாப்பிட்டு முடித்து வண்டி கட்டிப் புறப்பட மூணு நாலு நாழி ஆகும். அதற்குள் நாம் சத்த தலையைச் சாய்ப்போம் என்று பெரிய இலுப்பை மரத்தின் மறுபக்கம் போய் படுத்துவிட்டாள். அவ்வளவு தான், தூக்கம் வந்து அப்பிக்கொண்டது. எவ்வளவு நேரம் தூங்கினாளோ! விழித்துப் பார்க்கும்போது ஒரே இருட்டு. கோயிலுக்கு வந்த ஆட்கள் புறப்படும் அவசரத்தில் இவளை மறந்துவிட்டார்கள்.

பாட்டிக்கு திகீரென்றது. எங்கு பார்த்தாலும் ஒரே இருட்டு. மரங்களின் அடர்வுக்கு வானத்து நட்சத்திரங்கள் கூட தெரியவில்லை. வினோதமான உறுமல்களின் சத்தம் நாலா திக்கமிருந்து வர பாட்டியின் காலடியில் ஏதோ ஒன்று ஊர்ந்து போக பாட்டி துள்ளித் துடித்து அலறி யிருக்கிறாள். பகலிலேயே உடும்புகளுக்கும் பாம்புகளுக்கும் குறைச்சல் இருக்காது. குரங்குகள்வேறு மரத்துக்கு மரம் தாவிக் கொண்டாட்டம் போடும். இப்போது கேட்கவா வேண்டும்! எங்கு பார்த்தாலும் பேய்கள் தலையை விரித்து ஆடுவதுபோல் இந்த பாட்டிக்கு தெரிந்திருக்கிறது. பாட்டி நடுநடுங்கிவிட்டாள். அவளால் நிற்க முடியவில்லை. எப்படியோ தட்டுத் தடுமாறி கோயிலுக்குள் வந்து ராக்காச்சியின் அருகில் உட்கார்ந் திருக்கிறாள். கோயிலின் வாசலிலேயே ஒரு பேய் வந்து சிரிக்கிறதாம்.

ஒன்று அழுகிறதாம். ஒரு பேய் இதையெல்லாம் மிஞ்சி பாட்டியை விளையாடக் கூப்பிட்டதாம். பயந்து போன பாட்டி ராக்காச்சியை சேர்ந்துக் கட்டிக்கொள்ள அந்த நேரத்தில் சிலை சுட்டிருக்கிறது.

அப்போதுதான் பாட்டிக்கு ராக்காச்சி இரவில் முனியாக மாறி விடுவாள் என்ற ஞாபகம் வர அலறி அடித்துக்கொண்டு வெளியே ஓடிவந் திருக்கிறாள். இனிமே வாழ்நாளில் நான் கறி திங்க ஆசைப்படவே மாட்டேன். இந்த ஒரு தடவை மட்டும் என்னை காப்பாத்து என்று தனக்கு ஞாபகத்தில் வந்த தெய்வங்களிடமெல்லாம் மானசீகமாக வேண்டியிருக் கிறாள். அருவியின் குளிச்சியோடு ஊ... ஊ... என்று காற்று வீச இந்தப் பாட்டிக்கு வியர்த்துக் கொட்டியிருக்கிறது. எப்படியோ ஒருவழியாய் மரங்களின் அடர்வில் விடியலின் வெளிச்சம் தெரிய பாட்டி அரைச் சீவனாக ஊரை நோக்கி நடந்திருக்கிறாள்.

இங்கே ஊரில் பாட்டியை வேலைக்கு கூப்பிடுவதற்காக மம்மலோடு போன பெரியம்மா பாட்டி வீட்டுக் கதவில் கொண்டி சொரு கியது சொருகியபடியே இருக்க அலறியடித்துக்கொண்டு வந்து எல்லோரி டமும் சொல்லியிருக்கிறாள்.

உடனே நாலைந்துபேர் பாட்டியைத் தேடி கோயிலுக்குப் போயிருக்கிறார்கள். பாதி வழி போனதும் பாட்டி இவர்கள் எதிரில் வந்துவிட்டாள். ஒரே இரவில் அவள் வெளுத்துப் பழுத்து விட்டாள். உடல் தீயாய்க் காந்தியிருக்கிறது. பிறகு ஒரு மாமா அவளைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு ஊருக்குள் வர ஊரே பாட்டியைச் சுற்றிக் கூடிவிட்டது. பாட்டி அங்கிருந்தவர்களிடம் இரவு காட்டில் நடந்த பயங்கரத்தை ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லி அழுதிருக்கிறாள். மத்தியானவரையில் சொல்லிவிட்டு தவிப்போடு ஒரு வாய் தண்ணீர் கேட்டிருக்கிறாள். தண்ணீர் வருமுன்னே அவர் உயிர் பிரிந்துவிட்டது.

ooo

கிழக்கே சுடுகாட்டை ஒட்டி எங்களுக்கு ஒரு பிஞ்சை இருந்தது. அதில் ஒரு வருசம் எனது அம்மா வரகு, குருதவாலி என்று விதைப்பாள். மறுவருசம் சின்னம்மா ஏதாவது வெள்ளாமை செய்வாள். ஒருதடவை கேழ்வரகு நட்டிருந்தாள் சின்னம்மா. இப்படிப் பயிர்களின் நடுவில் தட்டாம் பயறு, பாசிப் பயறு, மொச்சைப் பயறு என்று பயறுகளை விதைத்து விடுவார்கள். அவை இளங்குருத்தாகக் கொடி வீசுவதோடு கொத்துக்கொத்தாகக் காய்களையும் நெத்துகளையும் சவட்டித்தள்ளும். இப்படிக் காய்க்கும்போது அவற்றைப் பிடுங்கி வந்து அவித்து பெரிய வட்டச் சொளகில் தட்டி விடுவார்கள்.

இந்த காய் வாசனையில் குஞ்சு குளுவான் பெரியவர்கள் என்று ஒரு

கூட்டமே வாசலில் கூடிவிடும். பிறகு சொளகை வெறுமையாக்கி விட்டுத்தான் போவார்கள்.

ஒரு தடவை சின்னம்மா வெள்ளாமை செய்தபோது 'குரங்குத் தட்டான் காய்' கொத்துக் கொத்தாகக் காய்த்துக் கிடந்தது.

சின்னம்மா என்னையும், தனது மகளையும் கூப்பிட்டு, இன்னைக்கு என்னால காட்டுக்கு போவ முடியாது; நீங்க ரெண்டு பேரும் போயி கீழப் பிஞ்சயில தட்டாங்காய புடுங்கிட்டு வாங்க; அவிச்சித் திம்போம் என்றாள்.

நாங்கள் இரண்டு பேரும் பிஞ்சைக்கு வந்தோம். தங்கை எனக்கு இரண்டு வருசத்துக்கு மேல் இளையவள். எனது சின்னம்மா எப்போதும் பிள்ளைகளை எங்கம்மாவைப்போல் கடிந்து வேலை ஏவமாட்டாள். அதனால் அவள் பிள்ளைகளுக்கு காடுகரைக்குப் போய் வேலை செய்யும் பழக்கம் அவ்வளவாக இல்லை.

அன்று என் தங்கையும் நானுமாக பிஞ்சைக்குப் போய் காய் பிடுங்கிக்கொண்டிருக்கும் போதே சத்திரப்பட்டி சுடுகாட்டில் பிணத்தை கொண்டுவந்து வைத்துவிட்டார்கள். பிணம் எரிந்துகொண்டிருக்க இங்கே எங்களுக்கு காய் பிடுங்கவே மனசில்லை. இந்த மாதிரி விஷயங்கள் என்றால் எனக்கு ஆவல் பொறுக்காது. வேடிக்கை பார்க்கக் கிளம்பி விடுவேன்.

வா நம்ம போயி பொணம் எப்படி எரியுதுன்னு பாப்போம் என்று தங்கையை கூட்டிக்கொண்டு வந்தேன். பிணத்தை எரிப்பவன் மட்டும் சற்று தள்ளி உட்கார்ந்து பீடியைக் குடித்துக்கொண்டிருந்தான். மற்றவர்கள் யாரும் அங்கே இல்லை.

நாங்கள் இருவரும் பிணத்தருகில் நின்றவாறு வேடிக்கை பார்க்கும் போது சடாரென்று பிணத்தின் கால் ஒன்று நிமிர்ந்துவிட்டது. அவ்வளவு தான், பொட்டியிலிருந்த காயை அப்படியே போட்டுவிட்டு அலறியவாறு வீட்டுக்கு ஓடிவந்தோம். நாங்கள் ஓடிவந்ததைப் பார்த்து எல்லோரும் என்ன என்ன என்று பதட்டத்தோடு கேட்க எங்களால் பேச முடியவில்லை. எங்கள் பின்னாலேயே ஓடி வந்த அனத்தலை (வெட்டியான் பெயர்) எல்லா விவரத்தையும் சொல்ல அவனை ஆள்ஆளுக்கு அடிக்கப் போனார்கள்.

ஏண்டா சின்னப் புள்ளைக வந்து பிணத்தோரம் நின்னா அவுகள சத்தம் போட்டு முடுக்கிவிடாம பாத்துக்கிட்டு இருந்திருக்கயே? உனக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கா? என்று வைதுவிட்டு எங்களைக் கூட்டிப் போய் சாமியாடியின் முன்னால் உக்கார வைத்து 'திண்ணூறு' போட்டார்கள்.

கார்த்திகை மாதத்தில் கருதுகள் எல்லாம் விளைந்து விக்கலும் கக்கலுமாக நெரிகட்டிப்போய் இருக்கும். இந்த கார்த்திகை மாத பௌர்ணமியில்தான் புது தானியத்தை எடுத்து புதுச்சோறு ஆக்குவார்கள். அதுவரை பழைய தானியத்தை குத்திதான் காய்ச்சுவார்கள். பழைய தானியம் இல்லாதவர்கள் தானியத்தை கடனாக வாங்குவார்கள். இந்தப் புது தானியம் வந்த உடனே குருதவாலி, சாமை, தினை ஆகிய மூன்று தானியங்களை ஒன்றாகப் போட்டு அவித்து வெயிலில் காயப்போட்டு குத்திச் சோறு ஆக்கி, பருப்பு ரசம் வைத்து தேங்காய் உடைத்து சூடம் காட்டி கலப்பைக்கு முன்னால் கும்பிட்டுவிட்டு வந்து சாப்பிட ஆரம்பிப் பார்கள். வரிசையாக தேக்கு இலையும், தாமரை இலையும் விரித்திருக்க அந்த இலைகளில்தான் விரதமிட்டு சொந்தக்காரர்களையும் 'புதுச்சோறு' சாப்பிட வாங்க என்று கூப்பிட்டு எல்லோரும் ஒன்றாகச் சாப்பிடுவார்கள். பிந்தி விதைத்தவர்கள் தங்கள் காடுகளில் ஒன்றிரண்டு விளைந்த கருது களையே பெறக்கி வந்து காலால் கசக்கி தானியத்தை எடுத்து அவித்து குத்திப் புதுச்சோறு ஆக்குவார்கள். யாரிடமும் புதுதானியத்தை கடனாக வாங்கமாட்டார்கள். பிஞ்சை இல்லாதவர்கள் மறு கருது (தப்பிய கருது) பெறக்கி சோறு ஆக்குவார்கள்.

கார்த்திகை மாதத்தில் மட்டும் அப்படி வேலை இருக்கும். கருதறுக்க, தட்டை அறுக்க, நெத்து எடுக்க என்று ஒரே வேலை, வேலை தான். வானம் அப்போது உலைமூடியை வைத்து மூடிய பானைபோல் இருண்டு கிடக்கும். களங்களெல்லாம் ஈரம் கோர்த்தவாறு பதத்துக் கிடக்க கருதுகள் சிறு சிறு படப்புகளில் புழுங்கி வெயிலுக்காக ஏங்கிக் கிடக்கும்.

நிலாக்காலங்களில்தான் தட்டை அறுப்பு பேசுவார்கள். இருபது ஆளுக்கு பேசிவிட்டு பத்து ஆள் அறுக்கப் போவார்கள். சேலையை வரிஞ்சி கட்டிக்கொண்டு தட்டையில் வாகாக அரிவாளை வைத்து விட்டால் போதும். நிலாவின் பால் வெளிச்சத்திற்கும் மெல்லிய குளிர்ந்த காற்றுக்கும் வேலை செய்வதே தெரியாது. ஒரே கதையும் நொடியும்தான்.

நாத்தனார் இன்னொரு நாத்தனாரை கேட்பாள்; ஏவளே நானு ஒரு அளிப்பான் கத போடுதேன்; அத அளிச்சிட்டேனா என் உள்ளங்கையில சோறு ஆக்கி உனக்குப் போடுதேன் என்று கேட்க மற்றவள், அப்படி என்ன கதய போடப்போறே சொல்லு என்பாள்.

'கவுறு ஒடிக்கெடக்கு; காளகட்டிக்கெடக்கு' பதில் சொல்லு என்று கேட்க, எம் மாமன் எவளயும் உரசிப் பாத்துருப்பான், கட்டிப் போட்டுருப்பாக; அத நீ அளிப்பாங் கதயா போடுதயாக்கும் என்று பதிலுக்குக் கேட்க அங்கே சிரிப்பாணி அள்ளிக்கொண்டு போகும்.

போத்தி அண்ணன் வாய்க்கால், வரப்பு போட, பாத்திகட்ட

வருவார். நாங்கள் பாத்தியில் கடலைப் பருப்பை ஊனிக்கொண்டே போவோம். வாய்க்கா வரப்பில் தட்டாம் பயிறு அல்லது பாசிப் பயறை ஊன வேண்டும். ஆடையாக இருக்கும் செம்மண், ஏர் கலப்பையின் கூர்மை வகிர்ந்ததால் ஆட்டு ஈரலாகத் துவண்டுகிடக்கும். மடியிலிருந்து விதையை எடுக்குமுன்பே புழுதியோடிய நிலம் கொஞ்சமாய் மவுந்து ஏற்றுக்கொள்ள எங்களுக்கு வேலை செய்யும் அலுப்பே தோணாது. உச்சி வெயிலில் தூரதூரமாய் கானல் நீர் மினுமினுக்க அதோடு போட்டி போட்டு வரப்போரத்து மண்ணும் மினுக்கம் கொடுக்கும்.

பாத்தி கட்டிக்கொண்டே அண்ணன் சொல்வார், நானு பாட்டுப் பாடுதேன். எதுப்பாட்டு பாட ஆளு இருக்காகளா? என்று கேட்கும் முன்பே வெங்கிட்டு அக்கா, ஆமா இவரு மயிலும் குயிலும் கூவுனாப்பல பாடிருவாரு. இவரு பாட்டுக்குப் பாட ஆளே இல்லையாக்கும் என்பவள் பக்கத்தில் இருப்பவளிடம், எக்கா! உந் தம்பியப் பாடச் சொல்லு நானு எதுப்பாட்டு எப்படி பாடுதேன் பாரு என்பாள்.

உடனே அண்ணன் பாடுவார் :

கடலைக்கு களையெடுக்க ஏலேலங்கடி ஏலேலோ
நானு கருசக்காடு போயிவாரேன் ஏலேலங்கடி ஏலேலோ...

அவர் பாடி முடிக்கவும் அக்கா தொடர்வாள் :

களைக்கு நான் சொரண்டியாவேன்
கருசகாட்டு வரப்பாவேன் ஏலேலோ

கிழக்குப் பிஞ்சையில ஏலேலங்கடி ஏலேலோ
நான் கெடையமத்தப் போயி வாரேன் எலேலங்கடி ஏலேலோ

கெடைக்கு நான் ஆடாவேன்
கீழக்காட்டு வரப்பாவேன்

என்று இப்படியே மாறி மாறிப்பாட எல்லோரும் அலுப்பு மறந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

ஒருநாள் வரகங் கருது அறுத்துக் கொண்டிருந்தோம். ஏறு பொழுதிலேயே கருதறுப்பு முடிந்துவிட்டது. ஒரு முருசல்தான் பாக்கியிருந்தது. வரகங்கருதின் இருபக்க நிறையிலும் துவரம் செடிகள் பூவும்காயுமாகச் சவண்டு செழித்துக் கிடந்தன. கோலப்புள்ளிகளாக சிறுமஞ்சள் பூவோடு, நெறிஞ்சிகட்டி கோர்த்துக் கிடக்கும் துவரஞ்செடியை விலக்கி கருதை அறுப்பதற்கு எல்லோருக்கும் அச்சலாத்தியாக இருந்தது. சே... இப்படியா நெருக்கி தொவரய ஊனுவாக! மனுசருக்கு குனிஞ்சி அறுக்க முடியுதா? தல முடியவெல்லாம் பிச்சிப் புடுங்கி வைக்கு என்று பூமாரி சொல்ல அண்ணன், நீங்க வேண்ணா போயி பருத்திக் கள எடுங்க. நானும் வெங்கிட்டும் குறக் கருத அறுத்துட்டு வாரோம் என்று சொல்ல

எல்லோருக்கும் திருப்தி. அத்தை முத்தம்மா, எப்பா போத்தி நீ நல்லா யிருப்பே. நாங்க போயி பருத்திக் கள எடுக்கோம்; நீங்க ரெண்டுபேரும் அறுத்துட்டு வாங்க என்று சொல்லிவிட்டு பருத்திக் காட்டுக்கு வர நாங் களும் அவர் பின்னாலேயே வந்துவிட்டோம்.

நாங்கள் பருத்தியில் களை எடுப்பதற்காக மடியைத்தான் கூட்டி யிருப்போம். அக்கா வெங்கிட்டைத் தேடி பிஞ்சைக்கே புதூரிலிருந்து ஆள் வந்துவிட்டார்கள். அக்காவின் பாட்டி இறந்துவிட்டதாகவும் 'திரி'ப்பிடிக்க பேத்தி வரவேண்டுமென்றும் கூப்பிட வந்தார்களாம். நாங்கள் எல்லோரும் பருத்திக்காட்டில் நிற்க அண்ணனும் அக்காவும் மட்டும் துவரங்காட்டுக்குள் கருது அறுக்கிறார்கள் என்று தெரிந்ததும் அக்காவை வஞ்சி கையோடு இழுத்துக்கொண்டு போனார்கள். அதன் பிறகுதான் அவர்களுக்கு சந்தேகம் ஆரம்பமானது.

எனக்கு தங்கை முறை வேண்டிய ராதாவும் நானும் சேர்ந்து புல்லுக்குப் போனோம். அவள் என்னைவிட துணிச்சல்காரி. நாளை கருதறுக்கப் போகிற வெள்ளாமைகளில் கூட கூசாமல் நுழைந்து புல்லை அறுத்துவிட்டு வந்துவிடுவாள். அன்றும் இப்படித்தான் நானும் அவளு மாக புல்லுக்குப் போனோம். நன்றாக விளைந்த சோளக்காடு. வரப்பு வழியே போகிறவர்களுக்கு உள்ளே இருக்கும் ஆள் தெரியாது. புல்லும் பயிரும் அடர்ந்து கிடந்தது. பொழுதும் மசங்கிக்கொண்டு வந்தது. மடியில் நிறைந்திருந்த புல்லைக் குமித்துவிட்டு வருவோம் என்று முருச வாய்க்காலுக்குப் போனோம். முருச வாய்க்கால் கொஞ்சம் அகல மாகவும், வரப்புகள் உயர்ந்தும் இருக்கும். தண்ணீர் அந்த வழியே போய் தான் பாத்திகளில் பாயும். அதனால் அதன் வரப்புகள் கெட்டியாக இருக்கும். அது மட்டுமில்லாமல் அதில் வளரும் புல்லும் செழிம்பாக இருக்கும்.

அதனுள் புல்லைக் குமித்துவிட்டுத் திரும்பும்போது, யாரோ ஆணும் பெண்ணும் ஒன்றாகப் பின்னிக்கிடக்க நாங்கள் பார்த்து பயத்தில் அலறிவிட்டோம். அவர்கள் எங்கள் ஊர்க்காரர்கள்தான். எனக்கு அண்ணன் முறையாக வேண்டிய அவர் எழுந்து வந்தார். எங்களை ஆளுக்கு ஒரு அறை விட்டார். நாங்கள் இன்னும் சத்தமிட்டு அலறியவாறு வெளியே ஓடிவர பக்கத்து பிஞ்சையில் வேலை பார்த்துக்கொண்டிருந்த பெரியப்பா என்ன என்ன என்று கேட்டுக்கொண்டே வந்துவிட்டார். அந்த அண்ணனோடு இருந்த பெண் எந்தப் பக்கம் பறந்தார் என்றே தெரிய வில்லை.

பதறி ஓடி வந்த பெரியப்பாவிடம் எங்கள் பின்னாலேயே வந்த

அண்ணன் எங்களைக் குறைசொல்லி வைதார். இப்படி விளைஞ்ச சோளக் காட்டுக்குள்ள மொளஞ்சு குத்தறுப்பும் கொலை அறுப்புமா அறுக் காகளே விளங்குமா? உள்ளே வந்து பாருங்க. ஒரு பாத்தி மானைக்கு என்னமா ஒடிஞ்சி கிடக்கின்னு! வெயிலுன்னு மழையின்னு பாராம பாடு பட்ட எனக்கு வவுத்தெறிச்ச தாங்க முடியல. அதேன் ஆளுக்கு ஒரு அறை வச்சேன். நீங்களே வந்துபாருங்க என்று சொல்ல பெரியப்பாவும் போய்ப் பார்த்தார்.

நிஜமாகவே ஒரு பாத்தி நாசமாகிக் கிடந்தது. அதை எட்டிப் பார்த்த பெரியப்பா, கருது விக்கலும் கக்கலுமா இருக்கையில நீங்க வந்து இப்படி உளப்பலாமா? போயி ஒரு தரிசு தப்பட்டையப் பாத்து புல்லு புடுங்குங்க என்றவர் அந்த அண்ணனிடம், எப்பா நீயும் சின்னப்புள்ளைகளுக்கு எடுத்துச் சொல்றதை விட்டுட்டு அடிக்கலாமா; ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிரப் போவுது என்று அதட்டிவிட்டுப் போனார்.

எங்களால் பேசவே முடியவில்லை. பேசாமல் வெறைத்துப் போய் நின்றோம். பிறகு அண்ணன் புல்லை அள்ளுங்க என்று அதட்ட அள்ளிக் கொண்டு வெளியே வந்தோம். அவர் எங்களையே பார்த்தார். எங்களுக்கு அழுகையாக வந்தது. பிறகு அண்ணன் எங்கள் தோளைத் தட்டி டவுசர் பாக்கெட்டில் கையை விட்டு ஆளுக்கு பித்தளை ரெண்டு பைசா எடுத்துக் கொடுத்தார். பிறகு சொன்னார். இந்தா பாருங்க, இங்க நடந்தத யார் கிட்டயும் சொல்லாதீக. அந்த அக்காவுக்கு நட்டுவாக்கிளி கடிச்சிருச்சு. அதுக்கு நான் பச்சில புழிஞ்சிக்கிட்டு இருந்தேன். அப்ப பாத்து நீங்க வந்துட்டீக. பச்சில முறிஞ்சி போனா மனுசருக்கு விஷம் ஏறிரும். அதேன் உங்களை அடிச்சிப் போட்டேன். நாள வந்து வேணுங்கிற புல்லை புடுங்கிட்டுப் போங்க. நானு கொடுத்த ஒரணாவுக்கு என்னமும் வாங்கித் தின்னுங்க.

என் அம்மா எந்த தப்புக்கும் கொஞ்சம் மன்னிப்பாள். அடுத்தவர் களிடம் துட்டோ வேறு எதுவும் பொருளோ வாங்கினால் மட்டும் மன்னிப்பே கிடையாது. கொன்னே போடுவாள். அப்பன் இல்லாத பிள்ளைகளை அவுக ஆத்தா கஞ்சிக்கு இல்லாம போட்டுருதா. அதுக பாவம் யாரும் என்னமும் கொடுக்க மாட்டாகளான்னு அலைஞ்சி கேட்டு வாங்கி வவுத்த நிரப்பிக்கிட்டுத் திரியுதுக என்று பேசி விடுவார்களாம்.

பைசாவை அந்த அண்ணனுக்கு நேரே வரப்பில் வைத்துவிட்டு புல்லுக்கட்டோடு வீடு வந்தோம். ஒரு வாரம் வரையில் அடி வாங்கிய நினைவாகவே இருந்தது.

எங்கள் ஊருக்கு வடக்கே ரெட்டைக் கமலைக் கிணறு ஒன்று இருந்தது. எப்போதும் அதில் எதிரும் புதிருமாக இரண்டு கமலைகளைக்

கட்டி இறைத்துக்கொண்டிருப்பார்கள். அதனால்தான் அந்தப் பெயர் வந்தது. அந்தக் கிணற்றின் இருபக்கமும் இரண்டு ஓடைகள் மொட்டை மலைக்கும், எங்கள் ஊருக்குமாக வீச்சோடி நீண்டு கிடக்கும். அந்த ஓடையில் கள்ளிச் செடிகளும் கத்தாழைச் செடிகளுமாக அடைந்து எப்போது பார்த்தாலும் திகிலடிக்கும். உச்சிநேரத்திலோ, இருட்டிய பிறகோ யாரும் அந்தப் பக்கம் போவதற்குப் பயப்படுவார்கள். இப்படி ஏற்கெனவே பயமுறுத்திக்கொண்டிருந்த அந்தக் கிணற்றில் ஒரே மாதத்திற்குள் அடி தொடியாக மூன்று பெண்கள் விழுந்து தற்கொலை செய்துகொண்டார்கள்.

அந்த மூன்று பேருமே ஆளானவர்கள்தான். அதில் ஒரு அக்காவிற்கு மட்டும் கல்யாணம் முடிந்திருந்தது. அவர்கள் வங்கொலையாகச் செத்தாலும் செத்தார்கள். ஊருக்குள் எப்போதும் அவர்கள் பேச்சுதான். அதிலும் சிவப்புச் சேலை உடுத்தி செத்துப்போன பாப்பா அக்காதான் ரொம்ப ஆதாளி போடுகிறாள் என்பதோடு என் கண்ணுக்கு தெரிந்தாள், உன் கண்ணுக்கு தெரிந்தாள், கத்தாழை முள்ளின் மீது படுத்துக் கொண்டு கலகலவென்று சிரித்தாள் என்று இன்னும் நிறைய பயங்கரமான கதைகளாகப் பேசினார்கள். அந்த வழி போகும்போது தூக்குப் போணியின் மூடி தானாகக் கழண்டு விழுகிறது என்றார்கள். கலார் கலார் என்று தண்டைச்சத்தம் கேட்டது என்றார்கள். அந்த மூன்று பேரைப் பற்றி அவர்கள் பாட்டுக்கு மரக்கால் இல்லாமலே அளந்துவிட்டார்கள்.

எங்களுக்கு ஒரு பயமும் கிடையாது. அதிலும் எனக்கு பேயைப் பார்க்கவேண்டும் என்று ஆசை வருமே தவிர பயம் என்பதே கிடையாது.

அன்றைக்கு மாடு மேய்க்கப் போகும்போது என் அம்மாவிடம் சண்டை போட்டுவிட்டு சாப்பிடாமல் போய்விட்டேன். பசி என்றால் குடலைத் தின்கிற பசி. கத்தாழைப் புதருக்குள் இருந்த காரங்காயைப் பிடுங்கிப் பசிக்கு ஆற்றமாட்டாமல் நிறையத் தின்றுவிட்டேன். தொண்டையில் விக்கிக்கொண்டது. தண்ணி குடித்தால் தான் சரி ஆகும் போலிருந்தது. சுற்றிலும் பார்த்தேன். இந்த கிணற்றைத் தவிர வேறு கிணறு தெரியவில்லை. அடிச்சாயும் நேரம் என்பதால் வெயில் சுட்டு எரிக்க எங்கு பார்த்தாலும் கானல்நீரின் தகதகப்பு கண்ணைக் கூசவைத்தது. என்ன வந்தாலும் வரட்டுமென்று அந்த கிணற்றுக்குள் இறங்கி விட்டேன். கால் நனையக் கடைசிப் படியில் நின்றுகொண்டு கூட்டுக்கையாக நாலு கை தண்ணியை அள்ளி குடித்துக் கொண்டிருக்கும்போதே குபீரென்று சிவப்புச் சேலை கொஞ்சமாய் விரிந்துவர நான் அதிர்ச்சி அடைந்தேன். இப்போது மெல்லிய முனங்கல் சத்தம் வேறு கேட்க நான் இரண்டு இரண்டு படியாகத் தாவித் தாவி வெளியே வந்து ஊரைப் பார்த்து ஓட்டம் பிடித்தேன். பின்னால் சிரிப்புச் சத்தம் கேட்டது. அப்போதும் பார்க்கலாமா வேண்டாமா என்று மெல்ல திரும்பினால்

கணேசனும் சரசுவும் நிற்கிறார்கள். அவர்கள்தான் என்னைப் பயமுறுத்துவதற்காக சிவப்புத் துண்டைப் போட்டிருக்கிறார்கள். எனக்கு பேச்சு மூச்சே வரவில்லை. கொஞ்ச நேரம் ஆயாசம் தாங்காமல் வாகை மரத் தடியில் விழுந்து கிடந்தேன்.

ஐ

வயதான தாத்தா பாட்டிகளுக்கு நிறைய மதிப்பு இருந்தது. அவர்களுக்கு கண் தெரியாவிட்டாலும்கூட அவர்களுக்குரிய வேலைகள் இருந்ததால் எல்லோரும் சீயான், எம்மி என்று அவர்களைத் தாங்கிக் கொண்டு இருந்தார்கள்.

சீயான்கள் புளிச்சநாறை குளம் குட்டையில் ஊறப்போட்டு பக்குவமாய் கயிறு திரித்துக் கொடுப்பார்கள். பனை ஓலைகளைக் கொண்டு குட்டிக்கூடு மேய்ந்து கொடுப்பார்கள். காட்டு மொச்சி மாறு கொண்டுகளங்களைக் கூட்டுவதற்கு விளக்குமாறு கட்டுவதோடு செறட்டையினால் அகப்பை, தென்னை மட்டையினால் துடுப்பு, மழைக்கு கொங்காணி, வீடுமேய ஓலை என்று செய்வதற்கு இப்படி எத்தனையோ வேலை அவர்களுக்கு இருந்தது.

அதேபோல் அம்மிகளுக்கு கண் தெரியாவிட்டால்கூட நாலு மரக்கால் வரகு, கேப்பை என்று நாவிப் புடைத்து திருவையின் பக்கத்தில் இந்த தானியங்களையும் வைத்து அவர்களை உட்கார வைத்துவிடுவார்கள். பிறகு பயறு உடைப்பது, ஆமணக்கு நெறிப்பது என்றும் வேலைகள். நடுவைக் காலங்களில் இவர்களைக் கூட்டிப்போய் நாற்றாங்காலில் உட்காரவைத்துவிட்டால் போதும், ஆறேழு பேர் நடுவதற்கு தோதாக நாற்று பிடுங்கிக் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். இப்படி அவர்களுக்கு எத்தனையோ வேலைகள் இருந்ததோடு அவ்வப்போது குடும்பத்திற்கு, பிள்ளைகளுக்கு, பிள்ளை பெறுகிறவர்களுக்கு மணிமணியான யோசனை சொல்வதால் அவர்களின் குடும்பத்தவர்களும் மற்றவர்களும் பெரியவர்களை அணைத்து ஆதரித்து அவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு மதிப்பு அளித்து வந்தார்கள். அதோடு பெரியவர்கள் ஏதாவது சண்டையில் மனம் குமுறி சாபமிட்டுவிட்டால் நமது குடும்பத்திற்கு கோளாறு வந்து விடுமென்று பயந்தார்கள்.

யாருமே வீட்டைப் பூட்டி பத்திரப்படுத்துவதில்லை. ஒரு வேளை பணம் இல்லையென்பதாலா கள்ளர்கள் அதிகம் இல்லையென்பதாலா என்றும் தெரியவில்லை. அப்படியே களவு போனாலும் காடு கரையில் தான் போகும். பெட்டி பீரோ என்று வீட்டில் எதுவும் கடையாது. வீடுகளே முக்கால்வாசி இருட்டாகத்தான் இருக்கும். அந்த இருட்டுக் குள்ளும் இன்னும் இருட்டான இடம் பார்த்து நீளவாக்கில் சுவரைத்

தோண்டி அதனுள் ஒரு கலயத்தைப் பொருத்தி விடுவார்கள். அந்தக் கலயம் உள்வரை போகும். அதனுள்ளேதான் காசு, பணம் புழக்கம். சிலர் எரியும் அடுப்புக்கு முன்னால் குழி தோண்டி கலயத்தைப் புதைத்து அப்படியே சாணியால் மெழுகி விடுவார்கள். ஆயிரக்கணக்கில் யாரிடமும் பணம் இருக்காது. மிஞ்சிப் மிஞ்சிப் போனால் நூறு இருநூறு இருக்கும்.

வீரம்மா பாட்டி தான் பெத்த பிள்ளைகளுக்கு நல்ல கஞ்சி, வெஞ்ஞனம் வச்சி ஊத்தாமல் துட்டு துட்டு என்று துட்டு மேல அவகாச்சியா சேத்துச் சேத்து வச்சா. அவளுக்கு நாலு ஆண்பிள்ளைகள். சேத்து வைத்த காசை எங்கே பத்திரப்படுத்துவது என்று அவளுக்குத் தெரியவில்லை. குலுக்கை தானியத்திற்குள் ஒளித்து வைப்போமென்றால் இவள் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, எவனாவது ஒருவன் குலுக்கைக்குள் இறங்கி தானியத்தை அள்ளிக் காயப்போட்டு குத்த புறப்பட்டு விடுகிறான். இதனால் குலுக்கைக்குள் ஒளித்து வைக்க முடியாது. அடுப்புக்கு முன்னால் தோண்டிப் புதைத்து விடுவோமென்றால் மூத்தவன் காலில் ஈரம் தட்டுப்பட்டால் போதும், அப்பவே அந்த லக்கை தோண்டிப் பார்த்தால்தான் அவன் மனசு ஆறும். இப்படி ரெண்டு தடவை தோண்டிப்பார்த்து துட்டை எடுத்து ருசி கண்டவன் அவன். அதனால் இந்தப் பாட்டி யோசித்துப் பார்த்துவிட்டு வீட்டிற்குள்ளிருந்த அங்கணக் குழி துவாரத்தில் துணியில் காசுகளை முடிந்து திணித்து வைத்துவிட்டாள். பேருக்குத்தான் அங்கணக்குழி இருக்கும். ஆனால் சட்டி பொட்டி கழுவுவது, குளிப்பது எல்லாம் திறந்தவெளியில்தான். குளிப்பவர்கள் முக்கால்வாசிப் பேர் குளம், கிணறுகளில் குளித்துவிடுவார்கள். எப்போதாவது வீட்டில் குளிக்கும்போது கொல்லையில் போய் சுற்றிலும் ஆள் வருகிறார்களா என்று பார்த்துக்கொண்டே குளித்துவிடுவார்கள். அதனால் இந்த பாட்டியின் துட்டு அங்கணக் குழியிலேயே பத்திரமாய் இருந்திருக்கிறது.

மூத்த மகனுக்கு கல்யாணம் முடித்தாள். அதற்கும் பாட்டி செழிம்பாக செலவழிக்கவில்லை. இறுக்கி இறுக்கி முடிந்து ஒப்பேற்றி விட்டாள். அடுத்து இளையவனுக்கும் அதற்கு அடுத்தவனுக்கும் கல்யாணம் முடிந்தது. அதற்கும் அந்த ஊர் பணக்காரரிடம் என் பிள்ளைக உங்களுக்கு வேலை செஞ்சு துட்ட கழிப்பாக; முன்னக்கூடி கல்யாணத்துக்கு கொஞ்சம் பணம் கடனா கொடுங்க என்று வாங்கி கல்யாணத்தை முடித்துவிட்டாள்.

புதுசா கல்யாணம் முடிச்ச பிள்ளைகள் புதுப் பொண்டாட்டியுடன் பேசக்கூட நேரமில்லாம வாங்குன கடனை அடைக்க ராவும் பகலுமா அப்படி வேலை செஞ்சிருக்காக. அவுக அப்படி செஞ்சும் கடன் அடைபடாம பொண்டாட்டிகளையும் கூட்டிப்போய் வேலை செஞ்சிருக்காக.

அவுகளுக்கு பெத்தவ மேல கோபமின்னா கோபமில்ல. ஒரு நாள் ஆத்தாகிட்ட சண்டைக்கு வந்தார்கள். என்னாத்தா இப்படி அநியாயாம்

செய்யிறே? நாங்க வருச முழுக்கும் வேலை செஞ்சி எங்க கூலிய உங் கிட்ட கொண்டாந்து கொடுத்தமே, நீ என்னதேன் செஞ்சே? எங்களுக்கு நல்ல கஞ்சி காய்ச்சி ஊத்தல. நாங்க எல்லாம் ஆம்பளை புள்ளைகளாங் காட்டி சடங்கு, சமித்தியம் செஞ்சேன்னுமில்ல. கல்யாணச் சுமையையும் எங்க தலையிலேயே வச்சிட்ட. எல்லாத் துட்டையும் என்னதேன் செஞ்சே? என்றுகேட்டார்கள்.

போங்கடா பொசகெட்ட பயகளா! ஒவ்வொருத்தனும் நேரத்துக்கு ரெண்டு கும்பாகஞ்சியும் நாலு ஆப்ப வெஞ்ஞனமும் தின்னா எந்த துட்டு மிஞ்சும்? எங்கிட்ட ஒரு செல்லாத முக்காத்துட்டு கூட கிடையாது. வீடுவாச அம்புட்டயும் நீங்களே நல்லாப் பாத்துக்கோங்க. நான் என்ன வீம்புக்கா வச்சிக்கிட்டு இல்லேங்கேன் என்று சொல்லிவிட்டாள். இதுக்கு மேல் என்னத்தை பேசுவது என்று பிள்ளைகளும் பேசாமல் இருந்துவிட்டார்கள்.

ஒருநாள் மூத்த மருமகள் கருது அறுத்துக்கொண்டு இருக்கும்போது கதுவாலி ஒன்று வசமாக அகப்பட்டுக்கொண்டது. அன்றைக்கென்று இந்தப் பாட்டி மேலக்காட்டுக்கு புளியம்பூ தூத்தப் போய்விட்டாள். இனி மசங்கிய பிறகுதான் வருவாள். அதனால் இவள் ரெண்டு கொழுந்தன், அவுக பொண்டாட்டிகிட்ட விஷயத்தை சொல்ல எல்லோருக்கும் சந்தோசமாகிவிட்டது. எல்லாரும் வேலையை அப்படி அப்படியே போட்டுவிட்டு வீட்டுக்கு வந்தார்கள். நாலுபடி பச்சை நெல்லை எடுத்து குத்தி சோறாக்கிட்டு, குழம்பு வைக்கிறதுக்கு இந்த கது வாலிய அடிச் சிருக்காக. வெளிய வச்சி அறுத்தா யாராவது பாத்து மாமியாகிட்ட சொல்லிருவாகன்னு நினைச்சி வீட்டக்குள்ள இருக்க அங்கணக்குழியில அறுத்துக் கழுவி தண்ணிய வெளிய தள்ளி இருக்காக. தண்ணி வெளியே போகவே இல்ல. தண்ணி வெளியே போகாததுக்கு என்ன காரணமின்னு அங்கணக் குழியில எதுவும் அடைச்சிருக்கோன்னு பெரிய கம்பக் கொண்டுவந்து குத்தித் தள்ளுனா முடிச்சு முடிச்சா நாலு அஞ்சு முடிச்சி வருது. அவுத்துப் பாத்தா அத்தனையும் துட்டு. இவுகளுக்கு சந்தோசம். கோபமும் எரிச்சலும் கூட. இம்புட்டு துட்ட வச்சிக்கிட்டு நம்மளை அந்தப் பாடு படுத்தினாளே. பெத்த புள்ளைகளக் காட்டியும், அவுக சந்தோசத்தக் காட்டியும் இவளுக்கு துட்டுதான பெருசாப் போச்சு. இவ நம்மள ஏமாத்தி கழுத்தறுத்த மாதிரி நம்மளும் அவளை திருப்பி செய்யணும் என்று கூடிப்பேசி எல்லோரும் அந்தப் பணத்தை அப்படியே அமுக்கிவிட்டார்கள்.

இந்த பாட்டி புளியம்பூ தூத்துவிட்டு இருட்டியபிறகு அலுத்துப் போய் வந்து சாப்பிட்டு படுத்தவள்தான். விடிந்த பிறகு வழக்கம்போல் எல்லோரும் காட்டுக்குப் போய்விட இவள் எப்பவும் போல் துட்டு பத்திரமாயிருக்கிறதா என்று அங்கணக் குழியைப் பார்த்திருக்கிறாள். ஓட்டை எந்த அடைப்பும் இல்லாமல் வெளிச்சத்தோடு விரீச்சென்று

இருந்திருக்கிறது. அவ்வளவுதான், அய்யோ அய்யோ என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுது அலைமோதிக்கொண்டு வந்திருக்கிறாள்.

பிள்ளைகள் எல்லாம் என்ன என்ன என்று கேட்க இந்த பாட்டியால் சொல்ல முடியவில்லை. உண்மையைச் சொன்னால் தனக்குப் பொல்லாத பேர் வந்துவிடுமென்று நினைத்து வாயில் துணியைத் திணித்துக்கொண்டு விம்மலும் விக்கலுமாக பொருமியிருக்கிறாள்.

பெத்தவள் இக்கட்டில் மாட்டிக்கொண்டதைப் பார்க்கையில் பிள்ளைகளுக்கு கொண்டாட்டமாக இருக்கிறது. அவர்களும், எதுக் காத்தா இப்படி வாயிலயும் வவுத்தலயும்அடிச்சிட்டு அழுவுதே என்று கேட்க என்னம்மோ என் தலைவிதி அழுவுதேன்; உங்க சோலியப் பாத்துக் கிட்டுப் போங்க என்று முடுக்கி விட்டுவிட்டாள். அன்றிலிருந்து இந்தப் பாட்டிக்கு சுதாரிப்பு போய்விட்டது. குன்னிக்குறுகிப்போய் யாரிடமும் பேசாமல் ஏதோ பேருக்காக வாழ்ந்திருக்கிறாள்.

ஊர்ப் பெரியவர்கள் பிள்ளைகளக் கூப்பிட்டு எதுக்கு உங்க ஆத்தா கமலை இல்லாத கிணறு கணக்கா வேத்து முகம் பட்டுப் போயி இருக்கா? என்று கேட்க அவர்களும் ஆத்தா இவர்களுக்குத் தெரியாமல் பணம் ஒளித்து வைத்ததையும் தாங்கள் எடுத்துக்கொண்டதையும் சொன்னார்கள்.

அதைக் கேட்ட பெரியவர்கள், பாவம் உங்காத்தா குக்க வந்த கோழி மாதிரி என்னம்மா உக்கிப்போயி கிடக்கா! அங்கணக்குழியி லிருந்த ரூவாய பேசாம அவ கிட்ட கொடுத்துருங்க என்று சொல்லியிருக் கிறார்கள்.

அதற்கு அவள் பிள்ளைகள், ஆத்தாவை இப்படி பாக்க எங்களுக் கும் விசாரமாத்தேன் இருக்கு. ஆனா அவ கையில பணத்த கொடுத்துட்டா எங்களுக்கு முக்காத் துட்டு கொடுக்க மாட்டா. என் பொண்டாட்டிக்கு புள்ள பொறந்துருக்கு. என் தம்பி பொண்டாட்டிக குளியாம இருக்காக. அடுத்தவகளுக்கே நாங்க வேலைக்குப் போயி என்னைக்கு எங்க கடன அடைக்க? அதனால சொந்தமா ரெண்டு காளமாடு புடிச்சி கூளம் கொடுக்க வாங்கி சொந்தத்தில சம்சாரி வேல செய்யப்போறோம். ஆத்தாளுக்கு வவுத்துக்கு கஞ்சி ஊத்தி வேணுங்கிறத வாங்கிக் கொடுத்து ஒரு கொறவுமில்லாம பாத்துக்கிடுதோம் என்று சொல்லிவிட ஊர்ப் பெரியவர்களால் எதுவும் பேச முடியவில்லை.

ஆனால் அந்தப் பாட்டி அதற்குப் பின் யாருடனும் பேசவுமில்லை, சிரிக்கவுமில்லை. குனிந்த தலை நிமிராமல் வேலைக்குப் போவதோடு சரி. அவசரமாக வேலைக்குப் போகிறவர்களைக்கூட நிறுத்தி வைத்து வளவளவென்று பேசுகிறவள் இப்போது இரண்டு மூன்று தடவை கூப் பிட்டாலும் என்ன என்று கேட்பதில்லை. அந்த இடத்திலேயே நிற்ப தில்லை. காட்டில் கஞ்சி குடிக்கும்போது கூட தனியாக உட்கார்ந்து

புலம்பிக்கொண்டேயிருந்திருக்கிறாள். இதைப் பார்த்த அவள் தங்கை மகள் ஊரிலிருக்கும் பாட்டியின் தம்பிக்கு சொல்லிவிட்டாள்.

பாட்டியின் தம்பி வந்து பிள்ளைகளை வஞ்சதோடு தன் கையிலிருந்து நூறு ரூபாயை சில்லறையாக மாற்றி பாட்டியிடம் கொடுத்துவிட்டுப் போனார். பாட்டி அதை வாங்கித் தன் இடுப்பிலிருந்த சுருக்குப் பையில் போட்டுக்கொண்டாள். அதன் பிறகு தன் குடும்பத்திலேயே யாரிடமும் பேசாமல் தனித் தீவாக வாழ்ந்துவிட்டு சாகும்போது தன் சுருக்குப் பையில் இருந்த மொத்தப் பணத்தையும் தம்பியிடம் சேர்ப்பித்துவிட்டு செத்துப்போனாள்.

ஒருநாள் நடுச்சாமம் இருக்கும். எனக்கு வயிற்றைப் புரட்டி வலி எடுத்தது. வெளியே போகலாம் என்று கதவைத் திறந்தேன். எங்கு பார்த்தாலும் கும்மென்ற இருட்டு அப்பிக்கிடந்தது. இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் என் அம்மாவை எழுப்பினால் கொன்றுபோடுவாள். அதோடு கொறயா திங்க வேண்டியதுதான. கழுத முழுங்கினாப்பில முழுங்கிட்டு இப்ப அலுத்துச் சலுத்து கெடக்கவள எழுப்பிக்கிட்டு... என்று பக்கத்து வீடெல்லாம் கேட்கும்படி வைவாள். இலேசான தூறல் விழுந்திருந்தது. அதனால் நாங்கள் அவரவர் வீட்டில் படுத்திருந்தோம்.

நான் கொஞ்சம் தெம்பாக மந்தைப் பக்கம் வந்தேன். மந்தைக்குச் சற்று தள்ளி சுடுகாடு இருந்ததால் இங்கே இருந்து பார்த்தாலே எல்லாம் தெரியும். நான் ஒருகையால் கண்ணை மறைத்தும் மறையாமலும் கீழே பார்த்துக்கொண்டே நடந்தேன். வடக்குத்திக்கம் ஒரு பெரிய கிணறு. இரண்டு மாதத்துக்கு முன்னால்தான் வடிவு என்ற குமரிப்பெண் தன் ஆத்தாவோடு சண்டை போட்டுவிட்டு கோபத்தில் இந்த கிணற்றில் விழுந்து இறந்துவிட்டாள். வழக்கம்போல் ஊர்க்காரர்கள் நடுச்சாமம் போல வடிவு கிணற்றைச் சுற்றிச் சுற்றி வந்து அழுவதாகவும், தலைவிரி கோலமாக ஊருக்குள் அலைவதாகவும், பிறகு சுடுகாட்டுக்கு விடியு முன்னே ஆடிக்கொண்டே போவதாகவும் பேசிப்பேசி எல்லோரிடமும் ஒரு பீதியை உண்டாக்கி இருந்தார்கள்.

நிலாவிற்கு அன்றைக்குப் பார்த்து சேட்டமில்லாமல் போய்விட்டது போலிருக்கிறது. பூச்சி அரித்தாற்போல் பாதி முகத்தோடு கருத்த இருட்டை கொஞ்சமாகப் போக்கிக்கொண்டிருந்தது. நான் பயந்து கொண்டே முள்வேலியின் பக்கம் போனேன். கண்ணைமூடி இருந்த விரல்களினூடே மெல்ல ஒற்றைக்கண்ணைத் திறந்து கிணற்றைப் பார்த்தவள் திடுக்கிட்டுப் போனேன். கிணற்றிலிருந்து ஒரு மெல்லிய உருவம் கருப்பாக சுடுகாட்டை நோக்கி நடந்துபோனது.

அப்படியே வேர்த்து விறுவிறுத்துப் போனேன். நெஞ்சு படக் படக்கென்று அடித்துக்கொள்ள பயம் ஒரு பக்கம் இருந்தாலும் இப்படியும் பேய் நடந்துபோகுமா? என்ற ஆச்சரியம் வேறு. நான் அந்த உருவத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். சுடுகாட்டை நெருங்கிய உருவம் இப்போது சடாரென்று திரும்பி என்னை நோக்கி வர ஆரம்பித்தது. நான் அந்த உருவத்தை கடைசி வரைக்கும் விடாமல் பார்த்து விடுவது என்று முடிவெடுத்தேன். அதோடு நாலுகால் பாய்ச்சலுக்குத் தயாராய் நின்றேன். என்னை நோக்கி வந்த உருவம் கொஞ்சமாய் திரும்பி ஊருக்குள் நடக்க ஆரம்பித்தது. அது முகத்தைத் திருப்பியபோது அங்கே இருந்த கல் விளக்கின் வெளிச்சத்தில் அதன் முகம் நன்றாகவே தெரிந்தது. அது நான் நினைத்ததுபோல் பேயுமில்லை; கிணற்றுக்குள் விழுந்த வடிவுமில்லை. கிறுக்கி கற்பகம் தான் அது! எனக்கு அவள் தங்கை முறைதான் வேண்டும். பகலில் அவளை வீட்டிற்குள் போட்டுப் பூட்டி வைத்துவிடுவார்கள். இருட்டில் அவர்கள்தான் திறந்துவிட்டார்களோ, இல்லை அவளாகத்தான் வெளியே வந்தாளோ தெரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் புரிந்தது. இவ்வளவு நாளும் இவளைப் பார்த்துத்தான் எல்லோரும் பயந்திருக்கிறார்கள்.

ooo

மொட்டை மலையைச் சுற்றி எங்கள் ஊர்க்காரர்கள் காடுகள்தான் நிறைய இருந்தன. அதில் ஒரு தாத்தாவிற்கு மாந்தோப்பு ஒன்று இருந்தது. அந்த மாந்தோப்பில் எல்லாக் காய்களும் பழக்காய்களாக மஞ்சனையாகச் சிவந்திருந்தன. அப்படி இருந்தால் எங்களிடமிருந்து அந்தக் காய்கள் தப்பாது. அன்று மத்தியானம் மாடு மேய்க்கும்போது அந்தக் காய்களைப் பார்த்த நான், கணேசன், சரசு மூன்று பேரும் அன்று இரவு வந்து அந்தக் காய்களைப் பிடுங்க வேண்டுமென்று பேசி முடித்தோம்.

சொக்கலிங்கத் தாத்தாதான் எங்கள் ஊருக்கே பெரிய பணக்காரர். ஊரைச் சுற்றிலும் காடுகளும் வயல்களும் அவருக்கு இருந்தன. ஆடு மாடுகளும் நிறைய இருந்தன. அவரை பெரிய வீட்டுக்காரர் என்று சொல்வார்கள். ஊர் ஆட்களில் முக்கால்வாசிப் பேர் அவர்கள் காட்டுக்குத்தான் வேலைக்குப் போவார்கள். பிள்ளைச்சோறு, ஊர்ச்சோறு வேண்டுமென்றால் அவர்கள் வீட்டுக்குத்தான் முதலில் போவார்கள்.

பகலிலும் இரவிலும் அவர்கள் வீட்டில் நெருப்பு எரிந்து கொண்டே இருக்கும். சமையலுக்கென்றே மூன்று பேர் இருப்பார்கள். முதல் நாள் மாலை நாலு எடை கத்தரிக்காய், பூசணிக்காய் என்று எதையாவது ஒருத்தி அறுத்து வைப்பாள். அதோடு ஒரு எடை வெங்காயம், அரை எடை பச்சை மிளகாயையும் அரிந்து வைப்பாள். சீனியவரைக்காய்,

ஏதாவது கீரை என்றால் ஆய்ந்து வைப்பாள். அந்தத் தாத்தாவின் தங்கை விதவையாக அவர் வீட்டில்தான் இருந்தாள். அதிகாலை மூன்று மணிக்கு அடுப்பு பற்றவைப்பாள். நாலு அடுப்பு பற்ற வைப்பாள். ஒரு அடுப்பில் சோளச் சோறு, கம்மஞ்சோறு, கூழு ஏதாவது ஒன்று மூன்றுபடி வேகும் பெரிய மொடாவில் வெந்துகொண்டிருக்கும். அதற்கு அடுத்ததில் இரண்டு படி நெல்லுச்சோறு. அதற்கு அடுத்ததில் இரண்டு படி குருதாலி, சாமை, தினை, வரகு என்று ஏதாவது ஒன்று வேக நாலாவது அடுப்பில் கத்தரிக்காயோ, பூசணிக்காயோ குழம்பாகிக் கொதித்துக் கொண்டிருக்கும். இந்த நாலு பானைகள் வெந்து இறக்கிய பிறகு மீண்டும் நான்கு பானைகள் அடுப்பில் ஏறும். ஒன்றில் வெஞ்ஞனமென்று கீரை, சுரக்காய் ஏதாவது வேகும். மற்றொன்றில் தின்பண்டத்திற்காக சீனிக் கிழங்கு, நிலக்கடலை, மொச்சிக்காய். மூன்றாவது அடுப்பில் பெரிய பானை நிறைய ரசம் கொதிக்கும். அடுத்ததில் காப்பி. அடுப்பு எரிப்பதற் கென்றே ஒருத்தி இருப்பாள். அவள் மாறி மாறி அடுப்பு எரிக்க வீடே தீப்பிடித்தது போல் வெளிச்சம் சிவப்பாக ஒளிர்ந்துகொண்டிருக்கும்.

இருட்டி ஒரு சாமத்திற்குப் பிறகு நான், கணேசன், சரசு மூன்று பேரும் பிஞ்சையை நோக்கிப் போனோம். நிலா நிறைய வெளிச்சத்தோடு எங்கள் கூடவே வந்தது. அந்த நிலா வெளிச்சத்தில் மரம், செடி, கரை, ஓடை எல்லாமே அழகாக, பார்க்கப் பார்க்க அழகாக இருந்தது. காற்று சிலுசிலுத்தவாறு வீசிக்கொண்டிருந்தது.

நீண்ட ஓடைவழியேதான் சொக்கலிங்கத் தாத்தா பிஞ்சைக்குப் போகவேண்டும். கத்தாழையும் கள்ளிச்செடிகளும் புதராக அடர்ந்து கிடந்தன. நிலவின் ஒளியில் ஓடை மணல் குருணை அரிசியைக் கொட்டியதுபோல் பரவிக் கிடக்க எங்கள் காலடி ஓசையில் கத்தாழைக் குள் அடைந்து கிடக்கும் கீரிப்பிள்ளைகளும் வெருவுகளும் விதர்ப்பட்டு ஓட்டம் பிடித்தன.

வாகைமரக் கொப்புகளின் அடர்த்தியில் விழித்திருக்கும் ஆந்தை கள் அலறியவாறே வேறு மரம் தேடி சடசடத்தவாறு பறந்துபோயின.

மரத்துக்கிட்டே போய் விட்டோம். மாங்காய்கள் காதில் கிடக்கும் குண்டலம் போல் காற்றுக்கு மெல்ல ஆடியவாறிருந்தன. கீழும் மேலு மாய் நிறைய காய்த்துக்கிடக்க எங்களுக்கு சந்தோசம் பொறுக்க முடிய வில்லை. கணேசன் சொன்னான், உங்களுக்கு எவ்வளவு வேணுமோ அவ்வளவு புடுங்கிக்கோங்க; காயா இருந்தாலும் நம்ம வீட்டுல இருக்க நெல்லுக்குள்ள புதைச்சு வச்சிட்டமின்னா பழுத்திரும் என்றான். மடியைக் கட்டி காயைப் பிடுங்கப் போகும்போது பொம்பளை சிரிப்பு கேட்டது. நாங்கள் திடுக்கிட்டுப் போனோம்.

பேயாக இருக்குமோ என்று நானும் சரசுவும் கேட்டதற்கு கணேசன் நம்மளே ஒரு பேய்தான்; நமக்கு மேலயா பேய் இருக்கு என்றானே தவிர

இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. ஒருவருக்கொருவர் நடுங்கிய வாறு கண்களை இறுக மூடிக்கொண்டு கைகளை இறுகப் பற்றியவாறு அப்படியே நின்றோம். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. ஏதாவது காலடிச் சத்தம் கேட்கிறதா என்று உற்றுக் கேட்க காலடிச் சத்தத் திற்குப் பதில் மீண்டும் பொம்பளை சிரிக்கும் சத்தம் கேட்க... இப்போது அதைத் தொடர்ந்து ஆண் குரலும் கேட்டது.

ஆண் குரல் எங்களுக்குப் பழக்கமான குரல். எங்களுக்குப் பயம் தெளிந்துவிட்டது. ஒருவரை ஒருவர் தெம்பாகப் பார்த்துக்கொண்டோம். இப்போது பேய் பயம் மாறி பழக்கமான குரலோடு பேசுகிறவர் யாராயிருக்கும் என்று சந்தேகத்தோடு மெல்ல சத்தம் வந்த திக்கம் நோக்கி நடந்தோம். சற்று தூரத்தில் கிணறு இருந்தது. அந்தக் கிணற்றை ஒட்டி பாதி மண்சுவர் வளர்த்து மேலே கூரை போட்டு வீடாக்கியிருந்தார்கள்.

அந்தக் கூரை வீட்டிற்குள் இருந்துதான் சிரிப்புச் சத்தம் கேட்டது. நாங்கள் பய்ய பய்ய நடந்து போய் மண் சுவரின் இடுக்கு வழியே பார்த்த போது நிலா வெளிச்சத்தில் இரண்டு ஆட்கள் உள்ளே இருப்பது தெரிந்தது. அதோடு ஆண் குரலின் அடையாளமும் தெரிந்துவிட்டது.

அது அந்தப் பெரியவீட்டுத் தாத்தாவின் மகன்தான். எனக்கு சித்தப்பா முறை வேண்டும். கணேசனுக்கு மாமா முறை வேண்டும். அவரை அடையாளம் தெரிந்த உடனே எங்களுக்கு தைரியமும் பழைய குறும்பும் வந்துவிட்டது. சற்று தள்ளி பெரிய மரம். பக்கத்தில் நாங்கள் மூவரும் ஒளிந்துகொண்டதோடு கணேசன் கனத்த குரலில் யாரது என்றான். அவ்வளவுதான் கப்சிப்பென்று ஆகிவிட்டார்கள். கொஞ்ச நேரம் ஆனது.

அந்த சித்தப்பா ரொம்ப அழகாக இருப்பார். எங்கள் ஊருக்கே பணக்காரராக இருந்ததால் ஒரு வேலையும் செய்ய மாட்டார். பொட்டி தேய்த்த வேட்டி, சட்டை போட்டு ஜோராயிருப்பார். அதோடு கையில் கடிகாரம், மோதிரம் எல்லாம் போட்டிருப்பார். வாட்சு என்பதே அபூர்வ பொருள். இந்த சித்தப்பா சேக்கு ஒதுக்கி மீசையைத் திருக்கிவிட்டு தெரு வழி போகும்போது அவர் அம்மா, உறவினர்கள் எல்லோரும், 'இவன் எட்டெடுத்து வீதி வழி போனா பாதை கலகலக்கும். பாதையெங்கும் பூ மணக்கும். வீதி கலகலக்கும். வீதியெங்கும் பூமணக்கும்' என்று புகழ் வார்கள். அவருக்கு கல்யாணமாகி ஒரு பையன் இருந்தான். அவர் பொண்டாட்டியை ஒதுக்கிவிட்டு தனியாக அப்பா அம்மா கூட இருந்தார். அவர் பொண்டாட்டி அவருக்கு ஏத்தவள் இல்லையாம்.

கணேசன் மீண்டும் அதே இறுகிய குரலில், இப்படிப் பேசாம இருந்தா நாங்க போயிருவோம்னு நினைக்காதீங்க; உங்கள அடையாளம் பாக்காம போக மாட்டோம் என்றான். அவன் இப்படி சொன்னது நல்லாவே வேலை செய்தது.

யார்ரா... அது? இந்நேரத்துக்கு எங்க பிஞ்சையில் வந்து என்னை கேள்வி கேக்கிறது என்று கேட்டவாறு அந்தச் சித்தப்பா வெளியே வந்து விட்டார். இப்போது அவர் எதிரில் போக எங்களுக்குப் பயம். அதுவு மில்லாமல் நாங்கள் மாங்காய் திருடத்தானே போயிருக்கோம். உடனே நாங்கள் ஓட ஆரம்பித்தோம். அவர் எங்களை ஒரே எட்டில் பிடித்து விட்டார்.

எங்களைப் பார்த்த உடனே அவருக்கு ஆச்சரியமும் கோபமும் வந்துவிட்டது. கணேசனிடம் சட்டையைப் பிடித்துக்கொண்டு இந் நேரத்துக்கு எதுக்கு வந்தீங்க, எங்கே வந்தீங்க என்று கேட்டுக் கொண்டிருக்கும்போதே நாங்கள் அந்த வீட்டிற்குள் பய்ய எட்டிப் பார்த்து அந்த பொம்பளையையும் அடையாளம் கண்டுவிட்டோம்.

அதுமட்டுமில்லாமல் சித்தப்பாவிடமே, என்ன சித்தப்பா கோமதி உள்ளே இருக்காங்க என்று கேட்டு விட்டோம். இதற்குள் சித்தப்பாவின் பிடியிலிருந்து விடுபட்டிருந்த கணேசனும் போய் பார்த்துவிட்டு வந்தான்.

கோமதியும் எங்களுக்குச் சொந்தக்காரிதான். பக்கத்து ஊர்க்காரி. அவளுக்கும் திருமணம் ஆகியிருந்தது. அந்தக் காலத்திற்கு அவளும் விதவிதமாய் அலங்கரித்து நாகரீகமாக இருப்பாள். நாங்கள் மூன்று பேருமே அவளைப் பார்த்துவிட்டதால் சித்தப்பா அவளை வெளியே கூப் பிட்டார். கோமதி வெளியே வந்ததும் நாங்கள் ஆச்சரியமும் அதிசய முமாகப் பார்த்துக்கொண்டு நின்றோம்.

உண்மையைச் சொல்லுங்க, எதுக்காக இந்நேரம் இங்கே வந்தீங்க என்று சித்தப்பா கேட்டார். நாங்களும் பயத்தோடு மாங்காய் பிடுங்க வந்ததைச் சொன்னோம். அவர் எங்களை அதட்டினார். இனிமே இந்தப் பக்கம் வந்தீகன்னு தெரிஞ்சிச்சு தோலை உரிச்சுப்போடுவேன் என்று அதட்டிவிட்டு கூரைவீட்டிற்குள் போய் ஆளுக்கு இரண்டு மாங்காயும் கொய்யாப்பழமும் கொடுத்தார். பிறகு இங்கே கோமதி இருந்ததைப் பத்தி யாரு கிட்டேயும் சொல்லாதீக என்று எங்களை அனுப்பிவைத்தார்.

நாங்கள் ஊர் வந்து சேர்ந்தபோது முதல் கோழி கூவிவிட்டது. போகும்போது வெள்ளாமையில் அவிழ்த்துவிட்ட மாட்டை இப்போது பிடித்து வந்து தொழுவில் கட்டிவிட்டுப் படுத்தோம். யாருக்கும் தூக்கம் வரவில்லை. பயம் பாதி ஆச்சரியம் பாதியாக அவர்களைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம்.

எங்கள் ஊரில் இந்த மாதிரி தப்பு செய்தால் பச்சநாயியை வைத்துப் பெற்றவர்களே கொன்று விடுவார்கள் என்று பேசிக்கொள்வார்கள். இந்த கோமதி பெரிய தப்பு செய்துவிட்டதுபோல் எங்களுக்குத் தோன்றியது.

மறுநாள் தூங்கி எழுந்ததும் முதல் வேலையாக இந்த விஷயத்தை குசுகுசுவென்று ரகசியமாக ஊருக்குள் பரப்பி விட்டோம்.

அவ்வளவுதான், பொழுது அடி சாய்வதற்குள் இந்த விஷயத்தால் ஊரே கலவரப்பட்டுப் போனது. அந்த சித்தப்பாவுடைய அப்பா, அம்மா, மாமா என்று ஆள் ஆளுக்கு ஒரு கம்பை எடுத்துக்கொண்டு காட்டுக்குப் போனார்கள். ஊரே அவர்கள் பின்னால் போனது. பிஞ்சையில் அவர்கள் இருவரும் இல்லை. பிறகு கோமதி ஊருக்கு ஆள் விட்டார்கள். அங்கே யாரும் இல்லையென்று ஆள் வந்துவிட்டது. பிறகு அதே சோலியாக துப்பு விசாரித்து அவர்களைக் கண்டுபிடித்து ஊருக்கு கூட்டி வந்தார்கள்.

ஊரில் கூட்டம் போட்டு அவர்களைப் பிரிந்து விடும்படி கூறினார்கள். அந்தச் சித்தப்பாவும் கோமதிச் சின்னம்மாவும் நாங்கள் கல்யாணம் முடித்துக்கொண்டோம். இனி எங்களால் பிரிய முடியாது ஒன்றாகத்தான் வாழ்வோம் என்று சொல்லிவிட்டார்கள். அப்போ ஊரை விட்டுப் போகச் சொன்னார்கள். அதற்கும் அவர்கள் முடியாது என்று சொல்லவே ஊரைவிட்டு அவர்களையும், அவர்களின் குடும்பத்தையும் தள்ளி வைத்துவிட்டார்கள்.

ஊரை விட்டுத் தள்ளி வைப்பது என்றால் அது கேவலமான விஷயம். ஊருக்குள் யாராவது எக்குத்தப்பாக நடந்துகொண்டால் அவர்களுக்குத் தண்டனையாக ஊரைவிட்டு தள்ளி வைத்துவிடுவார்கள். தள்ளுப்பட்டவர்களிடம் யாரும் பேசக்கூடாது. அவர்களுக்கு யாரும் வேலைக்குப் போகக்கூடாது. ஊர் கடையிலோ, ஊருக்குள் வரும் வியாபாரியிடமோ அவர்கள் எதுவும் வாங்கக்கூடாது. துவைப்பவர், முடி வெட்டுபவர், வைத்தியர் யாரும் அவர்களுக்கு வேலை செய்யக் கூடாது. ஊர்க்காரர்கள் யாராவது அவர்களிடம் பேசிவிட்டால் அவர்களையும் சேர்த்து தள்ளிவைத்து விடுவார்கள்.

இந்த சித்தப்பா குடும்பத்தைத் தள்ளி வைத்துவிட்டு ஊர்க்காரர்கள் தான் திண்டாடிப் போனார்கள். ஊரைச் சுற்றிலும் பெரும்பாலும் இவர்களின் காடும் வயலும்தான். ஊர் மக்கள் தண்ணீர் எடுப்பது இவர்கள் கிணற்றில்தான். கூலி ஆட்கள் அவர்களுக்குத்தான் வேலைக்குப் போவார்கள். நிறைய வேலிகளும் அவர்களுடையதுதான். எல்லோரும் அதில்தான் விறகு பெறக்குவார்கள். இப்படி எல்லா வகையிலும் அவர்களின் உதவி ஊர்க்காரர்களுக்குத் தேவைப்பட்டது.

அதோடு காட்டு வேலை செய்ய முடியாத கிழவிகள், நடக்க முடியாதவர்கள் எல்லாம் அவர்கள் வீட்டிற்கு கேப்பை திரிப்பது, பயறு உடைப்பது, நெல் அவிப்பது, ஆமணக்கு நெறிப்பது, சண்டுவத்தல் பெறக்குவது, பொக்கு பொடி என்று புடைத்தெடுப்பது இப்படி ஏதாவது வேலை செய்து கூலி வாங்குவார்கள். அதனால் ஊர்க்காரர்களே மீண்டும் கூட்டம்போட்டு அபராதமாய் கோவிலுக்கு மூன்று சிதறுகாய் போடச் சொல்லி ஊருக்குள் மீண்டும் சேர்த்துக்கொண்டார்கள்.

நானும் வசந்தாவும் நாலு பர்லாங் தூரத்தில் இருக்கும் பிள்ளையார் குளம் என்ற ஊருக்கு பருத்தி விதை ஊனும் வேலைக்காகப் போயிருந்தோம். எங்கள் ஊரில் எட்டணா சம்பளம். அடுத்த ஊருக்கு வேலைக்குப் போனால் முக்கால் ரூபாய் சம்பளம்.

இந்த நாலணா சம்பளத்துக்காக எங்கள் ஊர்க்காரர்கள் இன்னும் கொஞ்ச தூரம் நடக்கக்கூட தயாராக இருந்தார்கள். காலை ஒன்பது மணிக்குள் காட்டுக்குப் போய்விட்டால் பொழுது அடைந்து இருட்டிய பிறகுதான் வீட்டுக்கு விடுவார்கள். அடி திரும்ப சாப்பாட்டுக்கு விடுவார்கள். மேற்கில் இருக்கும் நிழல் கிழக்கில் திரும்பும் நேரம்.

பக்கத்து ஊருக்கு மாடு வாங்குவதற்காக போயிருந்த வசந்தாவின் அப்பா நாங்கள் வேலை செய்துகொண்டிருக்கும் காட்டு வழியே வந்தார். எங்களைப் பார்த்ததும் காட்டுக்காரர்களிடம், பொழுது அடஞ்சிருச்சே, இவுகள விடுறீகளா நான் கூடவே கூட்டிட்டுப் போயிடுதேன் என்றார். ஏற்கெனவே நாங்கள் வீட்டுக்குப் போகும் நேரம். அதோடு மழை வேறு கிழக்கில் குமுறிக்கொண்டிருந்தது.

காட்டுக்காரர்களும், கூட்டிட்டுப் போரும்; நல்லவேளதேன் வந்தீரு; மேகம் கருத்துக்கிட்டு வாரதோட இடியுமில்ல குமுறிக்கிட்டு இருக்கு என்றார்கள்.

நாங்கள் மாமாவோடு கிளம்பினோம். கொஞ்ச தூரம்தான் வந்திருப்போம். மழை பிடித்துக்கொண்டது. மழை என்றால் மழை அப்படியொரு மழை. குமுறிக் குமுறிப் பெய்தது. கொட்டுகிற மழையில் நடக்க முடியாமல் நாங்கள் பக்கத்துப் பிஞ்சைக்கு ஓடினோம். அங்கே ஆட்டுக்காரர்கள் குட்டிகளுக்காக கூடு போட்டிருந்தார்கள்.

நாங்கள் ஓடிப்போய் அந்த கூட்டின் பாதுகாப்பில் நனையாமல் இருந்தோம். ரொம்ப நேரம் வரை மழை கொட்டியது. மாமா மழையை வஞ்சிகொண்டே மடியிலிருந்து ரூபாய் நோட்டுகளை எடுத்தார். தாயோளி மழை இப்படி வரும்னு தெரிஞ்சிருந்தா மாடு பிடிக்கவே போயிருக்க மாண்டேன். அப்படியே போயிருந்தேனே இந்த ரூவாய அவுக கிட்டனாச்சிலும் கொடுத்துட்டு வந்தேனா; இப்ப நா நனஞ்சாலும் ஒண்ணும் சேதமில்ல; ரூவாயுமில்ல நனஞ்சிரும் போலுக்கோ என்றவாறு அந்த ரூபாய்களை ஊதி ஊதிப் பத்திரப்படுத்திக்கொண்டிருந்தார்.

எனக்கும் வசந்தாவிற்கும் அவர் மீது கோபமாய் வந்தது. இந்த நேரத்துக்கு அவர் மட்டும் வராமல் இருந்திருந்தால் நாங்கள் எப்போதோ நனைந்துகொண்டே வீடு போய்ச் சேர்ந்திருப்போம். நனைவது எங்களுக்கு ரொம்ப பிடிக்கும். அதனால் நனைந்துகொண்டும், காலால் தண்ணியைத் தள்ளிக்கொண்டும் ஜாலியாக பேசியவாறு வீட்டிற்கு வந்திருப்போம். எல்லாவற்றையும் இவர் கெடுத்துவிட்டார் என்ற கோபத்தோடு பேசாமல் இருந்தோம்.

மழை ஓய்ந்துவிட்டது. நாங்கள் கூட்டைவிட்டு வெளியே வந்தோம். எங்கே பார்த்தாலும் இருட்டு கசமாகக் கிடந்தது. மழைநீர் மட்டும் சளசளவென்று ஓடும் சத்தம் கேட்டது. மாமா தலையைத் திருப்பித் திருப்பி இருட்டை உற்றுப் பார்த்தார். பிறகு அடடா இம்புட்டுக்கு இருட்டிப்போச்சே; மடியில வேற ரூவா இருக்கு. எங்கய்யா தலமல! நீதேன் எனக்கு தொண வரணும் என்றார். எங்களுக்கு சிரிப்பாக வந்தது.

அவர்களின் எல்லா வீடுகளிலும் மூத்த பிள்ளைகள் பெயர் தலை மலை என்றுதான் இருக்கும். அது அவர்களின் குலதெய்வத்தின் பெயர். அதனால் நான், என்ன மாமா இந்நேரத்துக்கு எந்த தலமலய கூப்பிடுதீக; இந்நேரத்துக்கு யாரும் வரமாட்டாக என்றேன். அம்புட்டு பேரும் குறட்ட விட்டு தூங்கிக்கிட்டு இருப்பாக என்றாள் வசந்தா.

அவருக்கு எங்கள்மீது பயங்கர எரிச்சல். சரிசரி ரெண்டு பேரும் வாய மூடிக்கிட்டு கம்னாம எங்கூட நடக்கணும்; என்னத்தயும் பேசுனோம் சிரிச்சோமின்னு சிரிச்சீகளோ... கொன்னே போடுவேன் என்று அதட்டி விட்டு நடக்க அவர் கூடவே நடந்தோம். வானத்தில் சோளப் பொறியாக ஒன்றிரண்டு வெள்ளிகள் எட்டிப்பார்த்தன.

கொஞ்ச தூரம் வந்திருப்போம். பேச்சு சத்தம் கேட்டது. ஆண் குரல். உடனே மாமா காதில் கையை வைத்து சத்தம் வந்த திக்கம் உற்றுக் கேட்டார். இருட்டுக்குள் எதுவுமே தெரியவில்லை. பிறகு வேட்டியை அவிழ்த்து தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டார். சட்டையைக் கழட்டி சுருட்டி கக்கத்தில் இடுக்கிக்கொண்டார். இப்போது அவர் உடம்பில் கோமணம் மட்டுமே இருந்தது.

என்ன மாமா என்று நான் வாய்திறக்கு முன்பே அவர் உஷ் என்று அதட்டினார். இந்தா இப்ப ஆளுக வார சத்தம் கேக்கு. எத்தன பேரு வராகன்னு சரியா தெரியல. ஒருத்தன் ரெண்டு பேருன்னா பரவாயில்ல. நாலஞ்சு பேரா வந்தா எம் பொழப்பு நாறிப்போவும். என்கிட்ட பணம் வேற இருக்கு. நீங்களும் பொம்பளப்புள்ளைகளா இருக்கீக. நீங்க எங்கூட பேசாம வாங்க. முடிஞ்ச வரைக்கும் நானு பாத்துக்கிடுதேன். முடியாத பச்சத்துக்கு உங்கள ஓடுங்கன்னு சொல்லுவேன். நீங்க நம்ம ஊரப் பாக்க ஓட்டம் புடிச்சிருங்க என்றவர் ஓடிருவீகள்ல என்று கேட்டார்.

எங்களுக்கு அப்போதுதான் ஏதோ ஆபத்து வரப்போகிறது என்று திகில் உண்டானது. ஒருவருக்கொருவர் இருட்டில் பார்த்துக்கொண்டு கையோடு கை கோர்த்தவாறு மாமாவை ஒட்டி நடந்தோம். ஆள் சத்தம் நெருங்க நெருங்க மாமா ஏற்கெனவே பாதுகாப்பாக வைத்திருந்த கம்பை ஊனிக்கொண்டு கூனலாக நடந்தார். குளிருக்கும் காற்றுக்கும் ஏற்கனவே நடுங்கிக்கொண்டிருந்த உடம்பு இப்போது ரொம்ப நடுங்க ஆரம்பித்து விட்டது.

பேச்சு சத்தம் எங்களை நெருங்கிவிட்டது. உற்றுப் பார்த்தோம்.

மூன்று பேர் இருந்தார்கள். அவர்கள் நெருங்கியதும் மாமா எங்களை இழுத்துக்கொண்டு வேகமாக நடந்தார். உடனே ஒருவன் ஏ... பெருசு நில்லு என்று அதட்டினான். நான் கொஞ்சம் பயமும் கொஞ்சம் ஆவலு மாக நடந்தேன். வசந்தாவிற்கு தொண்டையில் விம்மல் தெறித்தது.

ஒருவன் மீண்டும் அதட்டவும் நாங்கள் நின்றோம். மற்றவன் எங்கள் அருகில் வந்து, இந்நேரத்துக்கு எங்க போறீக என்றான். மாமாவும் நடுங்கும் குரலில், அய்யா கெட காவலுக்கு வந்தேன்; இந்த மழையில எந்தக் கெடைய போடன்னு காட்டுக்காரன் போகச் சொல்லிட்டான் என்றார்.

நீதேன் கெட பாக்க வந்த; இந்த புள்ளைக எதுக்காவ வந்துச்சுக என்று கேட்டான். மாமாவும் சளைக்காமல் பேசினார். நான் வரவும் இவுக ஆத்தா என் பின்னாலயே கெடக்கூலிய வாங்கியாரச் சொல்லி அனுப்பி வச்சிட்டா. கெடையே போடலயே அவன் என்னத்த கூலிய கொடுப்பான். நானும் இந்தப் புள்ளைக மொவத்துக்காவ பாருங்கய் யான்னு எம்புட்டோ கெஞ்சிட்டேன். அவன் கல்லு மனசு எறங்கல. பெஞ்ச மழைக்கு அங்கன நின்னுட்டு வாரோம். அய்யா, உங்களுக்கு என்னமும் வேலை இருந்தா சொல்லுங்க. இந்தமானிக்கு நானு வாரேன். இந்தப் புள்ளைக கையில் மட்டும் ஒண்ணோ ரெண்டோ ரூவா இருந்தா கொடுத்துவிடுங்க. நீங்க நல்லா இருப்பீக.

ரொம்ப நல்லா இருக்கு பெருசு நீ சொல்றது. நாங்களே எங்கிட்டு பெறக்கி திம்போமின்னு அலையிறோம். நீ எங்க கிட்டயே பெறக்கப் பாக்குறயா? பெரிய மனுசனா ரெண்டு பொட்டப் புள்ளைகளோட நிக்கற யேன்னு உட்டுட்டுப் போறோம்.காலாகாலத்தில வீடு போய் சேரு. இருட்டுக்குள்ள ஏதாச்சும் பூச்சு பொட்டு புடுங்கி வைக்கப் போகுது என்று சொல்லிவிட்டு நடந்தார்கள்.

சரி சாமி என்று மாமாவும் தலையை ஆட்டிவிட்டு அதே கூனலோடு நடந்தார். அவர்கள் கொஞ்ச தூரம் போன பின்பு சொன்னார். தாயோளிக... எவங்கிட்ட ரூவா இருக்கும் புடுங்குவோமின்னு கள வாணிப் பயக அலையிதாக. போறது போல போக்கு காட்டிட்டு திரும்பி வந்தாலும் வருவாக. நம்ம இன்னி இங்கன நிக்கக் கூடாது. ஓடியாங்க. ஒரே ஓட்டந்தேன் என்றவர் வரிஞ்சி கட்டிக்கொண்டு ஓட நாங்களும் சளப்சளப்பென்று மேலெல்லாம் தண்ணி அடிக்க அவரைத் தொடர்ந்து ஓடினோம். அந்த மூன்று பேரும் எங்களை விரட்டிக்கொண்டு வருவதுபோல் நெஞ்சில் பயம் தோன்ற ஒரே ஓட்டம்தான்.

அன்று இரவு வீடு வந்து சேர்ந்ததும் நடந்த விஷயத்தை இன்னும் கொஞ்சம் சோடித்து பெரிய ஆட்களிடமும் எங்கள் சேத்திக்காரர்களிட மும் சொல்ல வேண்டும் என்று நினைத்தோம். ஆனால் மாமா முந்திக் கொண்டு நாங்கள் புளுகுவதற்கு வாய்ப்பில்லாமல் அவரே

சொல்லிவிட்டார். ஆனாலும் நாங்கள் விடவில்லை. எங்கள் வயசுப் பிள்ளைகளிடம் மரக்கால் இல்லாமலே பொய் பொய்யாக அளந்தோம். என் தம்பி ராஜா, அந்நேரத்துக்கு நான் அங்கே இருக்கணும்; அவுக கால வாரித் தட்டியிருப்பேன் என்றான். இனிமே நீங்க எங்க வேலைக்குப் போறதா இருந்தாலும் என்கிட்ட சொல்லிட்டுப்போங்க; பொழுதடைய நான் அங்கே வந்துருதேன் என்றான் கணேசன்.

ooo

ஊரில் எப்போதும் மாடுகளை வெட்ட வெளிகளில்தான் கட்டி யிருப்பார்கள். பலத்த மழை வந்து விட்டால் மட்டும் வீடுகளை ஒட்டிய நீண்ட தொழுவில் மாடுகளைக் கொண்டுவந்து கட்டுவார்கள். எனது மாமா வெள்ளச்சாமியின் எருமை மாடு காணாமல் போய்விட்டது. அது நிறை சினை. இன்னும் பத்து இருபது நாளில் ஈண்டு விடுமென்று மாமா கணக்குப் போட்டு வைத்திருக்கிறார். மாடு காணாமல் போனதும் இடிந்து போனார்.

தன் நண்பர்களைக் கூட்டிக்கொண்டு சுத்துப்பட்டு ஊரெல்லாம் தேடிப்பார்த்துவிட்டார். மாடு கிடைக்கவே இல்லை. ஏழு எட்டு நாள் வரை ஆகிவிட்டது. நம் கையை விட்டுப் போன பொருள் இனி என்னத்த கிடைக்கப் போகிறது என்று விட்டுவிட்டார்.

பத்து நாள் கழித்து அவருக்கு ஒரு தகவல் வந்தது. அதுவும் திடுக் கிடும் தகவல். பிணத்தை இழுத்துக்கொண்டே ஒருமாடு அலைகிறதாம் என்று. மாமா இந்த இடத்தை விசாரித்துப் போய் பார்த்திருக்கிறார். அது அவர் மாடுதான். ஆனால் போலீஸ்காரர்கள் அதை சூழ்ந்துகொண்டு இருந்திருக்கிறார்கள். என்ன நடந்தது என்றால் மாட்டை திருடியவன் ரொம்ப தூரம் அதைப் பத்திக்கொண்டு போய்விட்டான். மாடும் அவனும் களைத்துப் போனார்கள். கொஞ்ச நேரம் உட்கார்ந்து ஓய்வெடுத் தால்தான் நல்லது என்று நினைத்தவன் மாட்டை மரத்தில் கட்டிப் போட்டுவிட்டு உறங்கினால் தன்னைப் போலவே வேறு யாராவது கள்ளன் வந்து அவிழ்த்துக்கொண்டு போய்விடுவான் என்று தன் காலிலேயே கட்டிக்கொண்டு படுத்துவிட்டான். மாடும் படுத்துவிட்டது. கொஞ்சநேரம் கழித்து விடியத் தொடங்கியதும் மாடு சுற்றிலும் பார்த்தி ருக்கிறது. புது இடம். புது ஆள். மாடு மிரண்டு விட்டது. தரதரவென்று தன் காலில் கட்டியவனையும் சேர்த்து முரட்டுத்தனமாக இழுத்துக் கொண்டு ஓட கள்ளனும் காலை அவிழ்த்துக் கொள்ள எவ்வளோ முயன்று பார்த்திருக்கிறான் முடியவில்லை. நடு பொட்டல்காடு. எங்கு பார்த் தாலும் வெறிச்சோடி கிடக்கிறது. கள்ளனும் என்னக் காப்பாத்துங்க, காப் பாத்துங்க என்று அலறியிருக்கிறான். ஆனால் அங்கே கட்டை

கட்டையான பனைமரங்களும் இண்டஞ்செடிகளும்தான் புதரோடிக் கிடந்திருக்கின்றன. யாரும் உதவிக்கு வரவில்லை. இப்படி ஓடிக் களைத்த மாடு கடைசியாய் ஒரு குளத்தில் போய் விழுந்துவிட்டது.

அது நீந்திக் கொண்டே நடுக்குளத்திற்குப் போக கள்ளனால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ரத்தக் காயங்களோடு தண்ணீரில் மூழ்கி செத்துப் போனான். பிறகு மாமா ஊரிலிருந்து ஆட்களைக் கூட்டிப் போய் போலீஸ்காரர்களிடம் சீரழிந்து சீப்பட்டு தன் மாட்டை வாங்கிக் கொண்டு வந்தார். ஆனால் வரும்போது கன்றுக்குட்டியும் சேர்ந்து வந்தது.

ooo

5

வரகு கருதை இரவில்தான் அடிக்கிறார்கள். அது ஏன் என்று இன்று வரை தெரியவில்லை. இரவில் வரகங் கருதை அடிப்பவர்களைப் பார்த்தால் அவர்களும் கருப்பாக பேய் மாதிரி இருப்பார்கள். ஒருமுறை முதுகுடி கோயில் பக்கத்தில் இருந்த களத்தில் எங்கள் கருதை அடித்து முடித்து முதல் நாள் தானியத்தை கொண்டுபோய் வீடு சேர்த்தோம்.

மறுநாள் இரவு ஆனதும் வரகங்கூளத்தை சுமக்க ஆரம்பித்தோம். அந்த சமயம் அக்கா மெட்ராஸிலிருந்து வந்திருந்தாள். எங்களைப் பார்ப்பதற்காக அடிக்கடி ஊருக்கு வந்து விடுவாள். அவள்தான் மூத்தவள் என்பதால் எங்களை ஒன்றாக அரவணைத்துக் கொள்வாள். அதோடு வரும் போது நிறைய தின்பண்டம், புதுத்துணி எல்லாம் எடுத்து வருவாள். அவள் வந்துவிட்டால் மாமாவும் கூட இருந்தால் நல்ல சாப்பாடு கிடைக்கும். எங்கள் வேலையில் பாதியை அக்காவே செய்துவிடுவாள். அவளுக்கு இரண்டு பையன்கள். அவர்களோடு எப்போதும் விளையாட்டுத்தான். அதனால் எப்போது வருவாள் என்று எதிர்பார்த்து இருப்போம்.

அக்கா வந்துவிட்டால் எங்களை குளத்திற்கு விடாமல் சோப்பு போட்டு குளிக்க வைப்பாள். தலையில் எண்ணெய் விட்டு சீவி புதுரிப்பன் வைத்து சடை போடுவாள், பூ வைப்பாள். பொட்டு, கண்மை எல்லாம் உண்டு. முக்கியமாக எனக்கு இதெல்லாம் செய்வாள். இப்படி அலங்காரத்துடன் வெளியே போகவே எனக்கு கூச்சமாக இருக்கும். அவளோடு வெளியே கூட்டிப்போவாள். பார்ப்பவர்கள், அட! பாரதா இன்னைக்கு என்ன சில்லெடுக்கிறா என்பார்கள்.

இப்போதும் மாமாவோடு வந்த அக்கா கருது, காய் வேலை இருந்ததால் மாமாவைப் போகச் சொல்லிவிட்டு எங்களோடு இருந்தாள். இரவில் எங்களோடு வரகங்கூளம் சுமந்தாள்.

முதுகுடி கோயிலிலிருந்து அம்மா என்னிடம் கட்டைக் கொடுக்க வேண்டும். நான் கொண்டுபோய் அக்காவிடம் கொடுக்க வேண்டும். அவள் படப்பு அடியில் கொண்டுபோய் போட்டுவிட்டு வருவாள். இப்படி இடைவிடாமல் சுமந்துகொண்டு இருந்தோம்.

நல்ல நிலா. வானத்தில் நிலாவைக் கண்டுவிட்டால் போதும், என் மனத்தில் சந்தோசம் நிறைந்துவிடும்.

இரவு மணி பத்துக்குமேல் ஆகிவிட்டது. இன்னும் நான்கு கட்டுகள்தான் இருந்தன. கஷ்டப்பட்டு சுமந்துவிட்டால் மறு நாள் இந்த வேலைக்காக மெனக்கெட வேண்டாம். சீக்கிரம் நடங்கள் என்று அம்மா சொல்ல அவசரமாக சுமந்தோம்.

கடைசிக்கட்டுக்கு முந்தைய கட்டு. பாதி வழியிலேயே என்னிடம் வந்து கட்டை வாங்கிக்கொள்ளும் அக்காவைக் காணோம். எனக்கு திடுக்கிட்டது. இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் அம்மா, அக்கா இருக்கிறார்கள் என்று இத்தனை நேரமும் சுமந்துகொண்டிருந்தேன். இப்போது அக்கா இல்லை என்றதும் என்ன செய்வது என்று தெரியாமல் கட்டைக் கொண்டுவந்து படப்பின் அடியில் போட்டேன். அங்கேயும் அக்கா இல்லை. அவள் மெட்ராஸிலேயே இருந்ததால் அவளுக்கு அவ்வளவாக வேலை செய்து பழக்கம் இல்லை. ஒருவேளை வீட்டுக்குப் போய்விட்டாளோ என்று வீட்டிற்கு வந்தேன். அங்கே தம்பிகளும் அக்கா பிள்ளைகளும் நன்றாக உறங்கிக்கொண்டிருந்தார்கள். அக்காவைக் காணோம். எனக்குப் பயமாகிவிட்டது.

உடனே களத்தை நோக்கி ஓடினேன். எனக்கு எதிரில் கூளக்கட்டை கொண்டுவந்த அம்மாவிடம் விஷயத்தை சொன்னேன். அவள் உடனே தலையில் இருந்த சுமையைக் கீழே போட்டுவிட்டு, அம்புட்டுக்கு காடு கர தெரியாத புள்ளையாச்சே, எங்கிட்டு போனாளோ என்று பதறினாள். படப்பு, வீடு எல்லாம் தேடிவிட்டு கொல்லை, சின்னம்மா வீடு எல்லாம் தேடினோம். அக்காவையே காணோம். எனக்கு அழுகை அழுகையாய் வந்தது.

எம் மவ எங்கிட்டுப் போனாளோ! என் செல்ல மக! அமுத மக என்று அரற்றியவாறே அம்மா வந்தாள். அக்காவைத் தேடி ஓடை வழியே வடக்கு நோக்கி நடந்தோம்.

என்னை எப்போதும் அம்மாவிற்குப் பிடிக்காது. அவள் பேச்சை கேட்கமாட்டேன். கொஞ்சம் வளர்ந்து விட்டதால் அவளிடம் பதிலுக்குப் பதில் பேசி சண்டை போடுவேன். அம்மா என் மாமாவை, சின்னம்மாவைத் திட்டினால் அவர்களிடம் போய் சொல்லிவிடுவேன். கொஞ்ச நேரம் விளையாட விடாமல் சேத்திக்காரிகளிடம் பேச விடாமல் வேலை ஏவிக்கொண்டே இருக்கும் அம்மா மீது எனக்கு எப்போதும் வெறுப்புத்தான். அதனால் அவள் என்னுடன் வரும்போது என் அருமை மகள்

போனதுபோல் நீ போகக் கூடாதா என்று வஞ்சிகொண்டே வந்தாள்.

நிலவு வெளிச்சத்தில் ஓடை மணல் தெளிவாகத் தெரிந்தது. அதில் வரகங்கூளமும் சிந்திக்கிடப்பது தெரிந்தது. அதை அடையாளம் பார்த்துக் கொண்டே போனோம். அங்கே ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது. அந்த ஆலமரத்தில் முனி குடி இருப்பதாகச் சொல்வார்கள்.

அந்த ஆலமரத்தடியில்தான் நாங்கள் தேடிப்போன அக்கா நின்று கொண்டிருக்கிறாள். அவள் பக்கத்தில் கூளக்கட்டும் கிடக்கிறது. அவளைப் பார்த்தபின்தான் எங்களுக்கு உயிர் வந்தது. அம்மா பாய்ந்து போய் அவளை உலுக்கிக்கொண்டே, என்னடி ராமு, இங்க எப்படி வந்தே? யார் உன்னைக் கூட்டிட்டு வந்தா? என்று கேள்வி மேல் கேள்வி யாகக் கேட்டாள். அக்கா இன்னமும் பரக்கப்பரக்க பார்த்துக்கொண்டு நின்றாள். எதுவுமே பேசவில்லை.

அடியே ராமு, அய்யய்யோ எம் மவளுக்கு என்ன ஆச்சு? இவதானே எனக்கு தங்கமான பொண்ணு, என் பொண்ணு இப்படி நிக்காளே என்று அம்மா அவயம் போட இவ்வளவு நேரமும் அழுகையை அடக்கிக் கொண்டிருந்த எனக்கு அதன் பிறகு அடக்க முடியவில்லை. அக்காவின் கையைப் பிடித்துக்கொண்டு அக்கா... அக்கா என்று நான் அழ அவள் என்னைப் பார்த்துவிட்டு, பாரதா நீ எப்படி இங்கே வந்தே? என்று கேட்டாள்.

பேசிட்டாளா? என் தங்கமக பேசிட்டாளா? ஏண்டி ராமு நீ எப்படி இங்க வந்தேன்னு நாங்கள்ல உன்னை கேக்கணும். ஆமா கூளம் சுமந்துக்கிட்டு இருந்தயே, இங்க எப்படி வந்தே? என்று அம்மா கேட்டாள்.

யாரோ ஒரு ஆள் என் கூட வா என்று கூட்டி வந்தார். இந்த மரத்துக் கிட்ட வந்ததும் அந்த ஆளைக் காணோம். எனக்கு திகப்பூண்டுல மிதிச்ச மாதிரி இருக்கு என்றாள் அக்கா.

அய்யய்யோ இந்த இடத்தில் முனிப்பார்வை இருக்கே. அதுதேன் உன்ன உருமாட்டியா கூட்டிட்டு வந்துருக்கு. நம்ம தெய்வம் நமக்கு துணை இருக்கப்போயி இம்புட்டுக்கு பிழைச்சே. இல்லாட்டா இந் நேரத்துக்கு என்ன ஆயிருக்கும் என்றாள் அம்மா. எங்களுக்கு கிருஷ்ணன் துணை எப்போதும் இருக்கும் என்று பெரியவர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

நான் என்ன ஆகியிருக்கும் என்று பதிலுக்கு கேட்க, வாயை மூடு என் குடியில்ல கெட்டுப் போயிருக்கும் அந்த முனி லேசானதா என்றாள்.

எனக்கு என்னமோ வியர்வையில் அழிந்து நெற்றி முழுக்க பரவிக்கிடந்த சிவப்புப் பொட்டும் கலைந்த தலையும் திருதிருவென்று விழிக்கும் அவள் விழிகளுமாக... அக்காதான் அப்போதைக்கு ஒரு முனியாகத் தெரிந்தாள். எனக்கு அவளைப் பார்த்து சிரிப்பு பொத்துக்

கொண்டு வர அந்த சூழ்நிலைக்குப் பொருந்தாமல் சிரித்துவிட்டேன்.

என்னை எரித்து விடுவதுபோல் பார்த்த அம்மா இவளை ஒரு முனியும் கூட்டி தொலைஞ்சு போக மாட்டேங்கே; இவ போனா நான் நிம்மதியா இருப்பேன்; இவ இருந்து உயிரை வாங்குறாளே என்றாள்.

சரி சரி, அதேன் என்னைப் பாத்துட்டேல்ல; வா வீட்டுக்குப் போவோம் என்று அக்கா என் கையைப் பிடித்துக்கொண்டு முன்னே நடக்க அம்மா முனியையும் என்னையும் திட்டிக்கொண்டே வந்தாள். பொதுவாகவே எங்கள் ஊரில் யாரும் அவ்வளவாக பயப்படமாட்டார்கள். அதிலும் எங்கள் வீட்டில் சுத்தமாக நானும் அக்காவும் பயப்படவே மாட்டோம். அதனால் படுக்கும்போது அக்காவிடம், ஏங்க்கா நிசமாவே உன்னை ஒரு ஆளு கூட்டிட்டுப் போச்சா என்று கேட்டேன்.

எனக்கு எதுவுமே சரியா நினைவில்லே என்றாள். பிறகு யோசித்து விட்டு சொன்னாள். அம்மா பக்கத்திலிருந்த மாமா கூளத்தை விலைக்கு வாங்கணுமின்னு சொன்னா. அப்படி வாங்கினாளோ இந்த நிலாக்காலம் முழுக்க நம்மளை செமக்க வைச்சே தொலைச்சிருவா. நானு இப்படிப் போனதால இன்னி அந்தக் கூளத்தை வாங்க மாட்டா என்று சொல்லிச் சிரிக்க நானும் அவளோடு சேர்ந்து சிரித்தேன்.

ஒரு நாள் நான் குருதவாலி காட்டிற்குள் புல்லறுக்கப் போனேன். கருது செழித்து சடைபின்னியது போல் ஒன்றுக்கொன்று பின்னிக் கிடந்தது. ஊடுவரப்பில் வெள்ளைச் சோளம் போட்டிருக்க பால் அடைத்த சோளக் கருது பன்னீர் சொம்பு போல் நீண்டு ஆள் காட்டியாக வளர்ந்து பெரிய, பெரிய தோகைகளால் அந்த குருதவாலிக் காட்டையே வளைத்திருந்தது. மத்தேங்கா புல்லும், சோளக்கட்டைப் புல்லும் ஒரு ஆள் படுத்தால்கூட தெரியாத அளவுக்கு வளர்ந்து, செழித்து ஒரு எருமையைக் கூட மறைக்கும்படி வளர்ந்து கிடந்தது. நடுக்காட்டிற்குள் உட்கார்ந்துகொண்டு அவசரமும் பயமுமாக புல்லைப் பிடுங்கினேன். என் பக்கத்தில் முணுமுணுவென்று பேச்சு சத்தம் கேட்டது. யாராயிருக்கும்? ஒருவேளை காட்டுக்காரர்கள்தான் வந்துவிட்டார்களோ என்று கொஞ்ச நேரம் நின்று பார்த்தேன். ஒன்றும் கேட்கவில்லை. மீண்டும் என் வேலை தொடர்ந்தது. மறுபடியும் அதே முணுமுணுப்பு. நான் மெல்ல சத்தம் வந்த திக்கம் நோக்கி நடந்தேன். எனக்கு மாமா முறை வேண்டிய ஒருவரும் வேறொரு அத்தையும் ஒன்றாக உரசிக்கொண்டு இருந்தார்கள்.

என்னைக் கண்டதும் அந்த மாமா, ஊர்க்காரக உன்ன வைதாகன்னா அவுக மேல குத்தமில்ல என்றார்.

நான் வெள்ளாமையிலும் விளைஞ்சதிலும் புல்லு புடுங்குகிறேன்

என்றும் அழிச்சாட்டியம் பண்ணுகிறேன் என்றும் வைவார்கள். புல்லு கொண்டு வரவில்லையென்றால் அம்மா வீட்டிற்குள் விடமாட்டாள்.

இந்த மாதிரி நேரங்கெட்ட நேரத்தில விளஞ்ச கருதுக்குள்ள காலு வச்சு உளப்பனா விளங்குமா? என்றார்.

நானாச்சிலும் எங்கம்மா வைவான்னு புல்லு புடுங்க வந்தேன். நீங்க விளஞ்ச கருதுக்குள்ள என்ன செய்தீக என்றேன்.

அவரும், உங்க அத்தைக்கு முள்ளு எடுக்கேன் என்றார்.

என்னைக் கண்டதும் அந்த அத்தை, நீரு முள்ளு எடுத்து ரெண்டாப் போச்சு; நானு போறேன்; புள்ளைகளுக்கு கஞ்சி காய்ச்சணும் என்று சொல்லியவாறு எழுந்து போய்விட்டாள்.

ஒரு வாரம் கழித்து ஒரு துவரங்காட்டில் புல் பிடுங்கிக் கொண்டிருந்தேன். துவரை அடர்ந்து சவண்டு கிடந்தது. அங்கேயும் அந்த மாமாவுடன் அதே அத்தை. என்னை மாமா முறைத்துப் பார்த்தார். பார்வையில் உச்சி வெயிலின் வெக்கை தெரிந்தது.

அவர் கோபத்தைப் பொருட்படுத்தாமல், என்ன மாமா அத்தைக்கு இன்னைக்கும் முள்ளு தச்சிருச்சா? என்றேன்.

என்னைக் கண்டதும் அந்த அத்தை பெருமூச்சோடு அன்னைக்கு தச்ச முள்ளுதேன் பொறையோடிக் கிடக்கு; இன்னைக்கு எடுப்போம் நாளைக்கு எடுப்போமின்னு இப்படியே நாளு தள்ளிக்கிட்டுப் போவுது என்றாள்.

எனக்கு சிரிப்பாக வந்தது. சிரித்தால் மாமா வைவார் என்று பேசாமல் இருந்துவிட்டேன்.

நான் இப்போது கொஞ்சம் பெரிய பெண்ணாகிவிட்டேன். ஆனாலும் விளையாட்டுப் புத்தியோடுதான் இருந்தேன். எந்த ஒரு கூறும் கிடையாது என்பாள் அம்மா.

வசந்தாவிடம் வந்து, என்ன இது, எப்போ பார்த்தாலும் இந்த மாமாவும் அந்த அத்தையும் அங்கங்க வெள்ளாமைக்குள்ள உக்காந்திருக்காக, கேட்டா முள்ளு எடுக்கிறதா சொல்றாக என்று கேட்டேன்.

அவுக ரெண்டு பேரும் சேத்திக்காரக என்றாள்.

நம்மளும் சேத்திக்காரதானே!

ஆமா நம்ம புல்லு புடுங்குற சேத்திக்காரக; அவுக முள்ளு எடுக்கிற சேத்திக்காரக என்று சிரித்தாள்.

ஜ

இருட்டி ஒரு நாழிகை ஆனபிறகு நாங்கள் களவு புல்லுக்குப் போவோம். அப்படி மந்தை வழி போகும்போது ரொம்ப ஜாக்கிரதை

யாக காலடிச்சத்தம் கேளாமல் போவோம். ஏனென்றால் ஒரு பாட்டி மந்தையில் படுத்திருப்பாள். கொஞ்சம் சத்தம் கேட்டாலும் போதும், உடனே அது யாரு? எங்க போறீக? என் புருசன களவாண்டுக்கிட்டாப் போறீகளா? என்று இன்னும் என்ன என்னமோ சொல்லி கூச்சல் போட ஆரம்பித்து விடுவாள். பிறகு ஊரே எழுந்துவிடும்.

அந்தப் பாட்டி பெயர் விருமாயி. சின்னப் பெண்ணாக அந்தப் பாட்டி இருக்கும்போது அவளைப் பெற்ற தாயும் தகப்பனும் இறந்து போனார்களாம். இவளை ஊர்க்காரர்கள்தான் வளர்த்திருக்கிறார்கள். அப்பொதெல்லாம் பிள்ளைகளை வளர்ப்பதில் எந்த கஷ்டமுமில்லை. எல்லோரும் வாசலில் வைத்துதான் கஞ்சி குடிப்பார்கள். குளங்களிலும் வாய்க்காலிலும்தான் குளிப்பார்கள். பெரியவர்கள் கட்டிக் கிழிந்து போன சேலை, வேட்டியில் ஒரு சின்ன துண்டுத் துணியைக் கிழித்து உடுத்திவிடுவார்கள். ஏதாவது உடம்பு சரி இல்லையென்றால் ஆட்டு மருந்து எடுத்து குடிக்கக் கொடுப்பார்கள். இல்லாவிட்டால் ஒரு சங்கு விளக்கெண்ணெயில் கோவை இலைச் சாறோ, மொடக்கத்தான் சாறோ ஒரு சொட்டுவிட்டு குடித்துவிட்டால் அவ்வளவுதான்; வயிற்றுக்குள் இருப்பதெல்லாம் வெளியே வந்து வயிறு காலியாகிவிடும்.

இப்படித்தான் அந்தப் பாட்டி வளர்ந்திருக்கிறாள். அவளுக்கு காட்டு வேலையை யாரும் சொல்லி கொடுக்கவில்லை. வீடுகளில் பச்சைப்பிள்ளைகளைப் பார்த்துக்கொண்டு குத்திக்கொடுத்து நெல் அவித்து, வரகு திரித்து... இப்படி வேலைகளைச் செய்தே வளர்ந்திருக் கிறாள். அவள் ஆளானதும் ஆளுக்கு கொஞ்சம் செலவு செய்து கல் யாணம் முடித்து வைத்தார்கள். புருசனுக்கு ஆடு மேய்ப்பதுதான் தொழில். பாம்புலுக்கும் ஆடு மேய்த்துவிட்டு கெடையில் கொண்டு போய் சேர்த்துவிட்டு இரவு ஒன்பது மணிக்கு மேல்தான் வீட்டுக்கு வருவார். இந்தப் பாட்டி அவருக்கு சாப்பாட்டை வைத்துவிட்டு தன் வீட்டு வேலையை ஆரம்பித்து விடுவாள். பகலெல்லாம் ஊர் வேலை.

அந்நேரம்தான் தன் வீட்டு சாப்பாட்டிற்கு குத்துவது சோறு ஆக்குவது என்று எல்லா வேலையையும் முடிப்பதற்கு விடியற்காலை ஐந்து மணி ஆகிவிடும். அதற்குப் பிறகு புருசனுக்கு சாப்பிடுவதற்கு வட்டிலிலும், பகலில் ஆடு மேய்க்கும்போது சாப்பிடுவதற்காக கலயத் திலும் கஞ்சியை ஊற்றி வைத்துவிட்டு படுத்துவிடுவாள். பிறகு அவள் எழுந்திரிக்க காலை பத்து மணி ஆகிவிடும். அவள் இப்படியே இருந்த தால் புருசனுக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. இது என்னடா பொழப்பு! காட்டுல அலஞ்சு வந்தமா? பொண்டாட்டி கூட வளவு சுளுவா இருந்தமான்னு இல்லாம... இப்ப வவுத்துக் கஞ்சிக்கு இல்லன்னா கல்யாணம் முடிச்சேன்? என் பெரியாத்தா இருக்கா கஞ்சி காச்சி ஊத்தாத் தான்னு சொன்னாப் போதும் அம்புட்டு அருமையா வாயும் கையும் மணக்க மாதிரி காச்சி வைப்பா. இவள என்னத்துக்கு தெண்டத்துக்கா

முடிச்சேன் என்று மனம் நொந்துபோய் ஊர்க்காரர்களிடம் பொண்டாட்டி நடத்தையை சொல்லியிருக்கிறார்.

கிழவிகள் அவளைக் கூப்பிட்டு இலைமறை காயாக விஷயத்தை சொல்லியிருக்கிறார்கள். அவள் கேக்கவில்லை.

அவன் கிடக்கான் வெறும் பய; இவன் கூட கிளுகிளுப்பு பண்ணிக் கிட்டு நாளைக்கு அண்டியும் சவலையுமா அஞ்சாறு புள்ள பெத்துட்டா யாரு வளப்பா? எங்களுக்கு குந்த வைக்க குடிச இல்ல, கொதிக்க வைக்க தவசமில்ல; ஆழாக்கு ஒழக்குன்னு அளந்து கொடுக்க ஆளுமில்ல; என்னத்த வச்சுப் பொழைக்கிறது; இவன் ஆசைப்படுறதுக்கெல்லாம் அஞ்சு வருசம் போவணும் என்று சொல்லிவிட்டார்.

இதைக் கேட்ட தாத்தா ரொம்ப நொந்து போனார். மனுசன் அலஞ் சிட்டு வந்தா ஒரு அணவு ஆதரவில்லாம என்ன பொழப்பு! நீங்க இதுக்கு ஒரு வழி பண்ணுதீகளா? நானு கவுறு கண்ணியப் போட்டு உசுர மாய்க்கட்டுமா? என்று ஊர்க்காரர்களிடம் கேட்டார்.

உன் பொண்டாட்டி கிட்ட எம்புட்டோ சொல்லிப்பாத்துட்டோம். அவ நா புடிச்ச முயலுக்கு மூணு காலுதேன்னு நிக்கா. நீ பேசாம ரெண்டாந் தாரமா ஒருத்திய கட்டிக்கோ. இவ திருந்தி வந்தா பாத்துக்கிடுவோம் என்று அவர்களும் சொல்ல தாத்தா இன்னொரு கல்யாணம் முடித்துக் கொண்டார். புதுப்பொண்டாட்டியும் அவருமாக வேறு ஒரு வீடு பாத்து வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது இந்த விருமாயி அங்கேயும் போய் விட்டாள். கதவைத் தட்டிக்கொண்டு கல்லை எடுத்து வீட்டு மேல் எறிந்த வாறு, ஏண்டி சக்களத்தி, எம் பொழப்பவாடி கெடுக்க வந்தே என்று கெட்ட கெட்ட வசவாக வஞ்சிகொண்டு விடிய விடிய அந்த வீட்டையே சுத்தி சுத்தி வந்திருக்கிறாள்.

அங்கேயும் புருசனுக்கு நிம்மதி இல்லை. அவளும் நம்முடன் வந்து வாழ மாட்டேன் என்கிறாள். நம்மையும் வாழவிடாமல் அடிக் கிறாள். இதுக்கு என்னதேன் செய்ய? என்று விசாரமும், வேசடயுமா மறு படியும் ஊர்க்கார்களிடம் கேட்டார்.

நாங்க என்னப்பா செய்யது? அவள எம்புட்டோ சொல்லிப் பாத்துட்டோம். கேக்க மாணேங்கா. பேசாம உன் புதுப்பொண்டாட்டிய கூட்டிகிட்டு கங்காணாத மறவில போயி குடும்பம் நடத்து. ஒரு நல்லது பொல்லதுன்னா சொல்லிவிடுதோம் வா என்றார்கள் ஊர்க்காரர்கள். தாத்தாவும் சனியன் விட்டது என்று ஊரை விட்டுப் போய்விட்டார்.

அன்றைக்கிலிருந்து பாவம் இந்த பாட்டி புத்தி பேதலித்து வீட்டை மறந்து தாத்தாவைத் தேடத் தொடங்கி விட்டாள். வீதியிலும் மந்தை யிலும் சுருண்டு முடங்கிக் கிடப்பாள். சருக்கென்று சத்தம் கேட்டால் போதும். எழுந்து கூப்பாடு போட ஆரம்பித்துவிடுவாள்.

தாசய்யா என்று ஒரு மாமா இருந்தார். தினமும் அவர் ஊரடக்கம் ஒடுங்கிய பிறகு ஊத்தாங்கல்லுக்கு அந்தப்புறம் இருக்கும் ஓடைப்பக்கம் போவார். ஓடை நெடுக ஒரே மணல்தான். என்னதான் அவசரமென்றாலும் கால் புதைந்துகொண்டு நமது நடையைத் தாமதப்படுத்திக் கொண்டுதான் இருக்கும்.

இந்த மாமாவிற்கு கல்யாணம் முடியவில்லை. அண்ணன், அக்கா என்று சொந்தங்கள் இருந்ததாகவும் தெரியவில்லை. எப்போதும் துவண்டுபோய் எதையோ தொலைத்துவிட்டவர் போல் கவலையடைந்து கிடப்பார். ஒரு நாள், இரண்டு நாள்தான் வேலைக்குப் போவார். பிறகு மந்தை, கோயில் திண்ணை என்று முடங்கிக்கிடப்பார். நான் எங்கேயாவது போகும்போது, என்ன மாமா படுத்திட்டீரு என்று கேட்டால், உன் சோலியப் பாத்துட்டுப் போ என்று எரிந்து விழுவார். பகலில் இப்படி படுத்துக்கிடக்கிறவர் இருட்டியபிறகு ஓடையின் மணல் தேடிப் போய்விடுவார்.

எனக்கும் சரசுக்கும் அவர் எதற்காக தினமும் இப்படிப் போகிறார்; அங்கே போய் அப்படி என்னதான் செய்கிறார் என்று பார்ப்பதற்கு ஆசையாக இருந்தது. ஒருநாள் இதை எப்படியும் பார்த்துவிட வேண்டுமென்று முடிவெடுத்தோம்.

வழக்கம்போல் எங்கள் விளையாட்டு எல்லாம் முடிந்து படுக்கப் போகும் நேரம். ஊர் அரவம் ஒடுங்கிவிட்டது. இந்த மாமா ஓடையைப் பார்க்கப் புறப்பட்டுவிட்டார். நானும் சரசுவும் பதுங்கிப் பதுங்கி அவர் பின்னாலேயே போனோம். அன்றைக்கென்று சிறிய இண்டு இடுக்குகளில் கூட நிலா தன் வெளிச்சத்தைப் பாய்ச்சிக்கொண்டிருந்தது.

இந்த மாமா தூரமாய்ப் போய்விட்டார். நடுவில் ஓடை. சுற்றிலும் சித்திக் கொளையும், காட்டுமொச்சியும், ஓணாங்கொடியுமாகப் பின்னிப் பச்சைக் கோட்டையாக வளைத்திருந்தது. இந்த மாமா சுற்றிலும் பார்த்துவிட்டு பதுங்கினார். எங்களுக்கு சிரிப்பு என்றால் அப்படி ஒரு சிரிப்பு. எவ்வளவு அடக்கியும் அடக்கமுடியவில்லை. சிரித்துவிட்டோம். மாமா எங்களைப் பார்த்தாரோ இல்லையோ? அவருக்கு கோபமென்றால் அப்படி ஒரு கோபம். தாயளி புள்ளைகளா... என்று அவர் எங்களை விரட்டிக் கொண்டு வர ஓட்டம் பிடித்தோம்.

மறுநாள் அவர் எங்கள் வீட்டுக்கே வந்துவிட்டார். எக்கா, நீ புள்ளையா வளக்கே? எரும மாட்டவில்ல வளக்கே! மாடுனாச்சிலும் வீடு அடங்கிக்கெடக்கும். உம் மவ பொட்டப்புள்ள. நாள ஒருத்தன் வீட்டுக்குப் போவணும் வரணுமின்னு நினைக்கயா? உம் மனசுல என்னதேன் நெனச்சிருக்கே. இந்நேரத்துக்கு எம் மவளா இருந்தா கையக் கால ஒடிச்சி அடுப்புல வச்சிருவேன் என்று வய்ய ஆரம்பித்துவிட்டார்.

சரசுவின் அப்பா கங்கையா மாமாவிற்குப் பயந்து யாரும் அவர்கள் வீட்டிற்கு குற்றம் சொல்லி போகமாட்டார்கள்.

அப்படி என்னப்பா செஞ்சா? என்று அம்மா கேட்க நானு ஒரு சோலியா வடகாட்டுக்குப் போய்க்கிட்டு இருக்கேன். இவளும், உன் அண்ணன் மவ ஒரு நாதாரி நாயீ இருக்கில்ல... அவளும் என் பின்னாலயே வாராக என்றார்.

எனது சின்னம்மா, இவுக வாரது இருக்கட்டும்; நீ எதுக்கு அந் நேரத்துக்கு அங்கே போனே என்று கேட்டார்.

நானு ஆம்பள. எங்கிட்டும் போவேன். எனக்கு ஆயிரம் சோலி இருக்கும் என்று மாமா சொன்னார்.

சின்னம்மா என்னைப் பார்த்து அவன் பின்னால போனீகளா என்ற கேட்க நான் இல்லவே இல்லை என்று தலையைக் குலுக்கினேன்.

கங்கய்யா மாமா வாராரான்னு அத்த பாக்க சொன்னாக. அதேன் நானும் சரசும் ஊத்தாங்கல்லு ஓடைவரைக்கும் போயி பாத்துட்டு வந் தோம் என்றேன். உடனே சின்னம்மா சரசுவை கூட்டிவரச் சொன்னாள். நான் போய் அவளை கூட்டி வந்தேன். வரும்போதே எல்லா விவரத்தை யும் சொல்லிவிட்டேன். அதென்னமோ தெரியவில்லை, இரண்டு பேருக் கும் மாமாவைப் பார்த்ததும் மீண்டும் சிரிப்பு வந்துவிட்டது.

அவர் தீப்பார்வையுடன், பாத்தியாக்கா... அவுக சிரிக்கத; இன்னி எங்கனயும் இவுக என்ன தொடுக்கதப் பாத்தேன்னு வச்சிக்கோ, பெறவு என்ன குத்தம் சொல்லாதீக என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அடுப்புல வெஞ்ஞனத்த வச்சிட்டு வந்தேன்; தீஞ்சிருச்சோ என்னம்மோ; இவளுக்கு ஒரு சாவும் வரமாணேங்கு; இருந்து உசுர வாங்குதா என்று சொல்லிக்கொண்டு அம்மா போனாள்.

சின்னம்மா எங்களிடம் ரகசியமாக நெசமாத்தேன் நீங்க அவன் பின்னால போனீகளா என்று கேட்டாள். நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு இல்லையென்று இன்னும் வேகமாகத் தலையை ஆட்டினோம். சின்னம்மாவும் பாவம், அவன் நோக்காட்டுக்காரன். பொண்டாட்டி புள்ளைன்னு எதுவுமில்ல. கயிறறுந்த பம்பரமாத் தட்டளிஞ்சிக்கிட்டு வாரான். இனிம அவன் பின்னால போனேன், முன்னால போனேன்னு போகாதீக என்றாள்.

ooo

ஒருமுறை எனது அக்கா அவள் பிள்ளைகளோடு ஊருக்கு வந்திருந் தாள். அப்போது எங்கள் வீட்டிலிருந்த மாடுகள் எல்லாம் சினையாக இருந்தன. செனைப் பாலை குடித்தால் பிள்ளைகளுக்கு சேராது என்பதால்

விடிகாலை மூன்று மணிக்கே என் அம்மா எழுந்து டிப்போவில் போய் பால் வாங்கி வருவாள்.

ஒருநாள் அக்கா, அம்மா, தம்பி எல்லோரும் வெளிவீட்டிற்குள் படுத்திருந்தார்கள். நான் மட்டும் வீட்டை ஒட்டிய அடுப்படியின் வாசற் படியில் தலைவைத்துப் படுத்திருந்தேன். திடீரென்று பெருமூச்சு விடுவது போல் சத்தம் கேட்டு நான் முழித்துக்கொண்டேன். என் தலைமாட்டில் வெள்ளைச் சேலையுடன் யாரோ நிற்பது தெரிந்தது. என் அம்மாதான் பால் வாங்குவதற்காக எழுந்து வருகிறாள் போலிருக்கிறது என்று நினைத்து, என்னம்மா பால் வாங்கப் போறியா? என்றேன். அம்மாவிட மிருந்து எந்த பதிலும் வரவில்லை. ஒருவேளை நான் சொன்னது கேட்கவில்லையோ என்று நினைத்து மீண்டும் நானு வேணா போயி பாலு வாங்கிட்டு வரட்டுமா? என்றேன். அதற்கும் பதிலில்லை. எனக்கு மனது லேசாக திடுக்கிட்டது. கொஞ்சம் பயத்தோடு எம்மா என்று கூப்பிட்டுக் கொண்டே தலையை நிமிர்த்த அது என் அம்மா இல்லை. பரட்டைத் தலையோடு கன்னங்கரேலென்று பெரிய வாயாக, வாயெல்லாம் பல்லாக என் முகத்தின் அருகில் வந்து கூர்ந்து பார்த்தது. அவ்வளவுதான் நான் கண்ணை இறுக மூடிக்கொண்டு அம்மா அம்மா... என்று கத்தினேன்.

நான் கத்தியதில் அக்கா, அம்மா, தம்பி மட்டுமில்லை, அந்தத் தெருவே எழுந்துவிட்டது. பாரதா, எதுக்கு இப்படி கத்துதே என்று எல்லோரும் என்னிடம் ஓடிவர என் உடம்பு கிடுகிடுவென்று ஆடியது. கண்ணைத் திறக்கவே பயமாயிருந்தது. அக்கா சின்னதாக இறக்கி விட்டிருந்த விளக்கைப் பெரியதாகத் தூண்டிவிட்டாள். பாரதா, கண்ணைத் தெறந்து பாரு. நீ அலறுறதப் பாத்து புள்ளைகளும் அலறுது பாரு என்று தொட்டு எழுப்ப மெல்ல கண்ணைத் திறந்தேன். சற்றுமுன் என்னைப் பயமுறுத்திய உருவத்தைக் காணோம்.

அப்போது எதிர் வீட்டில் இருந்த மாமா என்னிடம் வந்து நான் சற்று முன் பார்த்த உருவத்தின் அடையாளத்தை சரியாகச் சொல்லச் சொன்னார். சொன்னேன். அப்படி ஒரு பொம்பளதான் என் கண்ணுக்கும் தெரிஞ்சிச்சு என்றார். எனக்குப் பயங்கர ஆச்சரியம். ஏனென்றால் அவர் சொன்னது சரியாக இருந்தது.

எல்லோரும் அது யாரு யாரு என்று மாமாவைக் கேட்க, அது ஒரு தட்டுவாணிக் கழுத. இப்பத்தேன்சத்த முந்தி என்தலமாட்டுல நின்னுச்சி. நானு கட்டுலுக்கிட்ட இருந்த செருப்ப தூக்குனேன். இங்கிட்டாம வந்துருச்சி பொலுக்கோ என்றார். நான் கண்ணால் கண்ட அந்தக் காட்சி இன்று வரையிலும் புதிராகத்தான் இருக்கிறது.

சரசு வீட்டில் ஒருநாள் ஒரு பூனை பாலைக் கொட்டிவிட்டது. உடனே நானும் சரசுவும் கதவை அடைத்துக்கொண்டு அதை அடிக்கப் போனோம். அப்போது சரசுவின் பாட்டி முத்துப்பேச்சி சொன்னாள். ஏத்தா, உங்க் பாட்டுக்கு பூனய அடிக்காதீக. பெறவு உங்க சீயான் வில்லாயிரங் கணக்கா அந்த பூனயே வந்து உங்கள பயமுறுத்தி கொன்னுரப் போவுது!

இதைக் கேட்டதும் எங்களுக்கு சிரிப்பாணி அள்ளியது. ஏம்மி, எங்கயாச்சிலும் பூன பயமுறுத்தி கொல்லுமா? என்று சரசு கேட்டாள்.

நானு சொல்லுத வெசயத்த கேட்டீகன்னா நீங்க இப்படி பேசமாண்டீக!

சொல்லும்மி, அப்படி என்னதேன் நடந்துருச்சி?

உங்க சீயான் வில்லாயிரம் இருந்தாருல்ல உங்களுக்குத் தெரியுமா?

கேளுங்க, அவரு வீட்டுல இப்படித்தேன் ஒரு பூன அப்படி அட்டூழியம் பண்ணியிருக்கு. காச்சி வச்சிருக்க பால குடிக்கது. இப்படி குடிக்கேன்னு எங்குட்டும் மறவா பொத்தி வச்சா பானையோட உடைக்கது. அடுக்குப் பானைக்குள்ள இருக்க கருவாட்ட திங்கதுக்கு அம்புட்டு பானையவும் உருட்டி உடைக்கது. மூடி வச்ச உல மூடிய தள்ளி உடச்சிட்டு நிறபானைக் கஞ்சியில வாய வச்சி அசிங்கம் பண்ணுறது. ஒரு நல்லது பொல்லதுக்குன்னு வீட்ட விட்டு வெளியேறினா காலுக்குள்ள வந்து மியாவின்னு சத்தம் கொடுத்துக்கிட்டு ஒடுறதுன்னு அது செஞ்ச அழிம்பாட்டத்த அவராள பொறுக்க முடியல. அதனால அவரு இந்தப் பூனய இனி உசுரோட விட்டு வைக்கக்கூடாது கொன்னுரணுமின்னு நினச்சுட்டாரு.

அப்பவெல்லாம் வீட்டுக்கு, வீடு பொறி வச்சிருப்பாக. அப்ப ஊரச்சுத்தியும் வெள்ளாமக்காடு செழிச்சிக் கெடக்கும். கொல்லப் புறத்தில கூளமும் வெறவும் படப்பா அடுக்கிக் கெடக்கும். அது உள்ள ஒளிஞ்சுக்கிட்டு இருக்க கீரிப்புள்ள ஆளுகள்லாம் காட்டுக்கு வெளியேறுனாப் பெறவு ஊருக்குள்ள வந்து கோழிய மட்டும் புடிக்கது இல்லாம வியாங்க ஒரு குஞ்சியக் கூட விட்டு வைக்காம புடிச்சிட்டுப் போயிரும். மக்க மனுசராள அத அடிக்க முடியாது. அவுகளகண்டாலே வழுவிக்கிட்டு ஓட்டம் புடிச்சிரும். அதனால அதப் புடிக்கதுக்கின்னுதேன் இப்படி ஒரு பொறி வச்சிருப்பாக.

உங்க சீயான் இந்தப் பொறிய வாங்கி அது உள்ள கருவாட்டுத் துண்டு குத்தி வச்சிட்டாரு. ரெண்டு, மூணு நா உழுவவே இல்ல. பெறவு இவரு சந்தைக்குப் போயி புது கருவாட்டுத்துண்ட வாங்கிட்டு வந்து ரெண்டு, மூணு துண்ட குத்தி வச்சிட்டாரு. புதுக் கருவாட்டு வாசனைக்கு வந்த பூன பொறிக்குள்ள சிக்கிக்கிடுச்சி. அம்புட்டுத்தேன். அவருக்கு

இருந்த சந்தோசத்த சொல்லி முடியாது. அந்தப் பொறியத் தூக்கிட்டு ஊருக்குள்ள இருக்க அம்புட்டு பேரு கிட்டவும், தாயளி பூன வீட்டுக் குள்ள சட்டிய உடைக்கவும், பொட்டிய உடைக்கவுமா அம்புட்டு பாடு படுத்துச்சி. இப்ப பொட்டியாரு பட்டுக்கிட்டாரு ன்னு சொல்லிக்கிட்டு அலஞ்சாரு. கறிக்கு நத்தம் செத்துக் கெடக்க ஒண்ணு ரெண்டு பேரு, எய்யா அந்தப் பூனய எங்கிட்ட கொடு; பூனக்கறி பஞ்சா இருக்கும்; நானு அடிச்சி இம்புட்டு செழிக்க தின்னுக்கிடுதேன்னு கெஞ்சினாக. ஆனா அவரு நானே அத கொன்னாத்தேன் எம் மனசு ஆறுமின்னு சொல்லி அவரு கெணத்துக்கு கொண்டுக்கிட்டுப் போயி தண்ணிக்குள்ள முக்கி கொன்னு போட்டாரு. அதுக்குப் பெறவுதேன் அவருக்கு நிம்மதியாச்சு.

பூனயக் கொன்ன அஞ்சாறு நாளைக்குப் பெறவு வில்லாயிரம் பிஞ்சைக்குப் போயிருக்காரு. அவரு பிஞ்ச ஓடைய சேந்து இருந்துச்சு. ஓடையில குத்துக்கத்தாழயும், கல்லு மூங்கிலயும் வேலிக்காவ புதரா வளத்திருந்தாரு. ஒரு ஆடோ மாடோ பிஞ்சைக்குள்ள நுழையாதபடிக்கு ஒரே அடசலா வேலி அடஞ்சி கெடந்துச்சி. எந்நேரம் பாத்தாலும் உளுந்து வாசனயோடதேன் அந்த திக்கமிருந்து காத்து வந்துக்கிட்டு இருக்கும். அந்த வேலியச் சேந்து பூசணிக்கா, சொரக்கா, பீக்கங்காங்கன்னு தன்னால காய்ச்சி சவண்டு கெடக்கும்.

உங்க சீயான் பொட்டி பொட்டியா காயைப் புடுங்கிட்டு சத்தரப் பட்டிக்கு விக்க கொண்டு போவாரு. அன்னைக்கு தெனத்துக்கு அவரு மடியில சில்லறயும், பெட்டியில திம்பண்டமும் கனத்துக்கிட்டு இருக்கும்.

அன்னைக்கும் வேலியில இருக்க காயெல்லாம் பிஞ்சி வாட்டம் கண்டுக்கிட்டு வெஞ்சனத்துக்கு தோதா இருக்கா, புடுங்குவமா வேண்டா மான்னு பாத்துக்கிட்டு இருக்கேல மியாவ்னு பூன கூப்புடுதாப்புல ஒரு சத்தம் பக்கத்தில கேட்டுருக்கு. பூன சத்தம் கேக்கவும் உங்க சீயான் சுத்தும் முத்தும் பாத்துருக்காரு. பூனயக் காணம். சரி அங்குட்டு வேலிக்குள்ள கூடி பூன போவுது பொலுக்கோ. அதேன் சத்தம் கேக்குன்னு இவரு பாட்டுக்கு நாலெட்டு நடக்க பெறகு ஒருக்கா மியாவ்னு பூன கணக்கா கூப்புடுது. அந்தமான வில்லாயிரம் வேலிக்குள்ள சுத்தி சுத்திப் பாத்துருக்காரு. ஒண்ணும் தெரியல. ஆனா பிஞ்சையில நிக்கவும் பயந்து வருது. அதனால விறுவிறுன்னு வீட்டுக்கு வந்தவரு பொண்டாட்டியப் போயி காய புடுங்கிட்டு வரச் சொல்லிட்டாரு.

அவளும் போயி அம்புட்டுக் காயவும் புடுங்கிட்டு வந்துட்டா. அவ வரவும் ஏத்தா, வேலிக்குள்ள பூன கீன அலயுதா? சத்தம் கித்தம் கொடுத்துச்சான்னு கேட்டுருக்காரு. அவரு பொண்டாட்டி, உமக்கென்ன கிறுக்கு கண்டுபுடிச்சிருச்சா? பட்டப்பகல்ல வேலிக்குள்ள எங்கனாச்

சிலும் பூன அலயுமான்னு கேக்க இவருக்கு பேச்சில்ல மூச்சில்ல.

பெறவு ரெண்டு நாளு கழிச்சி ஏறு பொழுதுக்கு பிஞ்சயில பாத்தி கட்டுவோமின்னு தூக்குப் போணியில கஞ்சியக் கொண்டுக்கிட்டுப் போனாரு. பிஞ்ச வரப்புல மிதிச்சதுமே பூன யாவகம் வந்துருச்சி. நெஞ்சாங்குழியில கொஞ்சம் பயமும் கூட. ஆனா மம்பட்டியப் புடிச்ச வரு உச்சிப் பொழுது வரைக்கும் பாத்தியக் கட்டிட்டாரு. வவுத்துப் பசி. போயி கஞ்சிய குடிச்சிட்டு வருவோமின்னு கெணத்துக்குள்ள எறங்குனாரு. மியாவ்னு சத்தம் கொடுத்துக்கிட்டு ஒரு பூன பாம்பர சுவத்தில ஓடுச்சி. அச்சு அசலா அவரு வளத்த பூன கணக்காத்தேன். அவரு வீட்டுக்குள்ள களாண்ட பூன ஒரு செங்க கலரும், ஊட ஊட கருத்தக்கோடுமா பாக்க அளகாவும், தெறிச்சி விழுந்துருதாப்பல உசந்தும் இருக்கும். கண்ணு ரெண்டும் சிறுத்து பச்ச வாங்கி கொடூரமா குறுவமணி கணக்கா இருக்கும். இந்தப் பூனயும் அப்படித்தேன் இருந்திருக்கு. மனுசன் வேர்த்து வெலவெலத்துப் போனாரு. அந்தமான நாலெட்டுல கெணத்துக்கு வெளிய வர அந்தப் பூன கத்திக்கிட்டே வந்து இவரு நெஞ்சுல பெறாண்டிட்டு ஓடிருச்சி. இவருக்கு கையும் காலும் ஆட்டம் கண்டுருச்சி. பக்கத்துப் பிஞ்சயில வேல செஞ்ச காள கிட்ட ஓடி இருக்காரு. இவரு ஓடி வந்ததப் பாத்து அவனும், என்ன அப்பச்சி... இப்படி பதறுனாப்பல ஓடியாறீரு? மொகமெல்லாம் பேயக் கண்டாப்பல அரண்டு கெடக்குன்னு கேட்டான். இவரும் பூன விசயத்தப் பத்தி சொல்றாரு.

போரும் அப்பச்சி போரும். அப்ப நம்ம வருசத்துல நாலஞ்சி கெடாவ வெட்டுதோம். நல்ல நாளு, திங்க நாளுன்னு வந்தா கோழியப் புடிச்சி கொதவளய திருவுதோம். காட கதுவாலின்னு சன்ன உசுரவா கொல்லுதோம். அம்புட்டுமா இப்ப உம்ம சுத்திக்கிட்டு உசுக்காட்டுது? உமக்கு மனசுல இருக்க அச்சந்தேன் இம்புட்டு கோளாறு பண்ணுது. தெம்பா வீட்டுக்கு போரும். ரெண்டு நா கழிச்சி பிஞ்சைக்கு வாரும்னு சொல்லி அனுப்பி வச்சான்.

இவருக்கும் அவன் சொல்லது சரின்னுதேன் தோணுச்சி. ரெண்டு நா பூனய மறந்துட்டு ஆளுக கூட பேசிக்கிட்டு திரிஞ்சாரு. மூணாவது நாளு இம்புட்டுக்காணு பூன நம்மள என்ன செஞ்சிருமின்னு நெனச்சிக்கிட்டு மம்பட்டியோட பிஞ்சைக்கு வந்து ஓடி ஓடி கொறப் பாத்தியவும் கட்டுனாரு. உச்சி வெயிலு. மரம் செடி நினலுகள்லாம் தங்கள சுருக்கிக்கிட்டு அதது தூருக்குள்ளேயே அடங்கிக் கெடக்கு. இவரு கெணத்துக்கு வந்து நாலு படிதேன் எறங்கி இருக்காரு. மியாவ், மியாவின்னு சத்தக்காடு எங்கிட்டுப் பாத்தாலும் கேக்கு. பிரண்ட, கிளுவப் புதருல இருந்து அதே செங்களிச்ச நிறத்தில வெருவு கூட்டம் இவரு பக்கமா புலிப் பாய்ச்சலோட ஓடியார உங்க சீயானுக்கு பசி எப்பவோ போயிருச்சி. சிலீருன்னு மனசுக்குள்ள பனிக்கட்டி விழுந்தாப்பல குளுரு எடுக்க செத்தேன்

பெழச்சேன்னு ஓடியாந்துருக்காரு. கத்தாழைக்குள்ள இருந்தும் நிறைய வெருகு கூட்டம்! வில்லாயிர சீயானுக்கு அதுக்குமேல ஓட முடியல. அங்கனயே சுருண்டு விழுந்தவருதேன், செத்துப் போனாரு. ஊருக்காரக காத்து கருப்பு எதுவும் அடிச்சிருக்கும் என்று சொல்லிட்டு உங்க சீயான சுருவாட்டுக்கு தூக்கிட்டுப் போறாக. அவுக போற பாதையில இருக்க புழுதியில பூனத்தடமும் சுருவாட்டு வரைக்கும் போயிருந்துச்சாம்.

ஙஙங

ரத்தம். சரசுவும் அவள் தம்பி தங்கைகளும் அப்பாவைத் தடுக்க முடியா மல் தடுத்துக்கொண்டு குய்யோ முறையோ என்று கத்துகிறார்கள்.

என்ன மாமா இது என்று கேட்டுக்கொண்டே நானும் அவர் பிள்ளைகளோடு சேர்ந்து அவரைத் தள்ளினேன். என்ன நினைத்தாரோ தெரியவில்லை, சட்டென்று எல்லோரையும் ஒரு முறைப்பு முறைத்து விட்டுப் போய்விட்டார். நான் அழுது கொண்டிருந்தவர்களை சமாதானப் படுத்திவிட்டு என் அம்மாவைக் கூட்டி வாறேன் என்று புறப்பட்டபோது அத்தை தடுத்துவிட்டாள்.

தாயீ, இது ஒரு நா கூத்துன்னா அடுத்தவகள கூப்புடலாம். இது நித்தம் நடக்கிற கூத்து. நா வாங்குன விதிக்கு அடுத்தவகள கூட்டியாந்து என்ன செய்ய? யாரும் வந்தாங்கன்னு தெரிஞ்சா அவுக கிட்டயும் இந்த மனுசன் வெட்டு குத்துக்குப் போவாரு. நீ ஒருத்தரையும் கூப்பிட வேண் டாம் என்று சொல்லிவிட்டாள்.

பிறகு நானும் சரசுவுமாக அத்தையின் காயத்தைக் கழுவி ஈனாத மாட்டின் சாணியை எடுத்து ஒத்தடம் கொடுத்தோம். சரசு அழுது கொண்டே இருந்தாள்.

கால் ஒடிந்து வராண்டாவில் படுத்திருந்த சின்னம்மாவிற்கு காய்ச்சலே வந்துவிட்டது. பாவம், நடுங்கியவாறு குறுகிக் கிடந்தாள். அந்த சின்னம்மாவிற்கு கும்பாவில் சோறு வைத்து குழம்பு ஊத்தி அவள் பக்கத்தில் வைத்திருப்பார்கள். பித்தளைப் பாத்திரங்கள்தான் அதிகம். இந்த சின்னம்மாவிற்கு பாசம் பிடித்த ஒரு சொம்பில் தண்ணியும் வைக்கப்பட்டிருக்கும். சோறு திறந்து கிடக்குமாதலால் ஈ மொலு மொலு வென்று அதில் அப்பிக் கிடக்கும். சின்னம்மா சாப்பிடவே மாட்டாள். எந்த நேரமும் தலை கவிழ்ந்து உட்கார்ந்திருப்பாள். கண்ணீர் வடிந்து கொண்டே இருக்கும். இந்த மாதிரி சமயங்களில் மாமா வந்து விட்டால் ஏய்.. என்ன சாப்புடாம நீலிக்கண்ணீர் வடிச்சிக்கிட்டு உக்காந்திருக்கே? இப்ப திங்கப் போறியா இல்லையா? என்று அதட்டலோடு கத்த உடனே சின்னம்மா சாப்புடுதேன் சாப்புடுதேன் என்று சோற்றை அள்ளி வாயில் வைத்து விழுங்க முடியாமல் விழுங்கி விக்கலும் கக்கலுமாய் செருமி தண்ணியைக் குடித்து வைப்பாள். அவளுக்குச் செருமலாக வரும். செருமிக்கொண்டு தலையில் தட்டியவாறு இருப்பாள். இவ சாப்புடு தாளா என்னன்னு பாத்துட்டு வந்து எங்கிட்டச் சொல்லு என்று எனக்கு கட்டளையிட்டு விட்டு மாமா போய்விடுவார். மாமா தலை மறைந்ததும் சின்னம்மா அந்தச் சோற்றை மாட்டுக்குப் போடச் சொல்லிவிட்டு மாமாவிடம் சொல்லாதே என்பாள். நானும் சொல்லமாட்டேன். அதன் பின் தலையிலும் நெஞ்சிலும் அடித்துக்கொண்டு இந்த அநியாயத்தை கேப்பார் இல்லையா என்று சொல்லிக்கொண்டே அழுவாள்.

ஒருநாள் காலை நேரம். ஊருக்குள் கசமுச என்று பேச்சாகக் கிடந்தது. சரசு கிணற்றுக்குள் விழுந்து செத்துப் போனாள். அவளுக்கு நீச்சல் நன்றாகத் தெரியுமாதலால் தன் கைகளையும் கால்களையும் எப்படியோ கட்டிக்கொண்டு கிணற்றுக்குள் விழுந்துவிட்டாள். எனக்கு அடிவயித்துக்குள் தீச்சட்டியை வைத்ததுபோல் எரிந்தது.

நானும் கணேசனும் செய்தி கேட்டு ஓடினோம். மற்றவர்களும் ஓடி வந்தார்கள். நாங்கள் போவதற்குள் அவளை சுடுகாட்டுக்கு கொண்டு வந்துவிட்டார்கள். உயிரோடு தூங்குவதுபோல் படுத்திருந்தாள். அவள் அப்பா மார்பின் மேல் கையைக் கட்டிக்கொண்டு எங்கேயோ பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தார். அவள் அம்மா சுடுகாட்டிற்கே வரவில்லை. வீட்டிலேயே இருந்துவிட்டாள்.

சரசு ஆள் சிவப்பாக அழகாக இருப்பாள். என்னைவிட ரொம்ப தைரியசாலி. கமலை பிடித்து இறைப்பாள். ஒரு ஏக்கர் நிலத்தைக்கூட ஒரே நாளில் பாத்தி கட்டி விடுவாள். களத்தில் இடுப்பு உயரத்தில் தாள் கிடந்தாலும் உள்ளே இறங்கி பிணையல் அடித்து விடுவாள். ஆண் பிள்ளைகள் போல் மந்தையில் கிடக்கும் இளவட்டக் கல்லை ஒரே தூக்காகத் தூக்கி விடுவாள். ஆனால் அவள் அப்பாதான் சரி இல்லை.

எங்களால் எதுவுமே பேச முடியவில்லை. நேற்றுவரை எங்களுடன் ஆடிப்பாடி சேத்தியாக இருந்தவள் இன்று பிணமாகக் கிடந்தால் என்ன செய்வது? அன்று முழுக்க எந்த வேலையும் ஓடவில்லை. பிரமை பிடித்ததுபோல் இருந்தோம். வசந்தா சொன்னாள், சாகப்போகும் போது நம்மளிடம் சொல்லியிருந்தால் நம்மளும் சேந்து செத்திருக் கலாம்.

பெரிய ஆட்கள் எல்லோரும் வந்து எங்களை விரட்டிவிட்டு அவளை எரித்தார்கள். எனக்கு சரசுவின் நினைவுதான். எந்த வேலை செய்தாலும் அவள்தான் குறுக்கே நின்றாள். எந்த நேரமும் அழுகையும் கண்ணீரும் எனக்குள் பொங்கிக்கொண்டிருந்தது. ஏன் சாக நினைத்தாள் என்று எதுவும் புரியவில்லை.

கணேசனிடம் இதைப் பற்றி சொன்னேன். அவன் எனக்கும் அவள் மீது பாசம்தேன். அதுக்காக செத்தவளையே நினைச்சிக்கிட்டு இருக்க முடியுமா? நீ கொஞ்ச நாளைக்கு தனியா எங்கேயும் போகாதே; எங் கூடவே வா; நம்ம கண்டத கடியதப் பேசுறதில அவள மறந்திரலாம் என்றான்.

ஒரு சித்திரை மாதம் ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு வடக்கே இருக்கும் அழகர் கோயிலுக்குப் போய்விட்டு நாங்கள் வந்துகொண்டிருந்தோம்.

வெயில் சுட்டு எரித்தது. ரோட்டு வழியே வருவது சுற்று என்பதால் வயல், வரப்புகளினூடே குறுக்குப் பாதையாக நடந்தோம். வண்டிப்பாதையின் செம்மண் புழுதி பாதையோரத்திலிருந்த செடிகொடிகளை செம்பட்டை யாக்கியிருந்தது. மிளகாய்ச் செடிகளும் சோளப் பயிரும் வெயிலில் துவண்டு வாட்டத்தோடு தண்ணீர் கேட்டுக் கொண்டிருந்தன.

பொழுது தூருக்குள் போகும் நேரம். கோயில் வாசலில் பத்து பைசாவிற்கு வாங்கிய செவ்வந்திப் பூக்கள் எங்கள் தலையில் மஞ்சளாய்ப் பூத்துக்கிடந்தன. சூரியனும் பூமி எங்கும் மஞ்சளைத் தெளித்திருந்தான்.

எங்களைப் பார்க்கும் ஆவலில் நிலா கிழக்கு திக்கத்திலிருந்து பவளச் சிவப்புனூடே முளைத்து எழுவதற்காகக் காத்திருந்தாள். வெகு தூரம் நடந்ததில் நாங்கள் எல்லோரும் கிறுகிறுத்துப்போய் நடக்க முடியா மல் நடந்துகொண்டிருந்தோம். ஊர் போய் சேர இன்னும் ஐந்து மைல் தொலைவு இருந்தது. தண்ணி தவை வேறு வாட்டியது. ரோட்டுவழி வந்திருந்தால் திலாக் கிணறுகள் இருக்கும். இறைத்துக் குடித்திருக்கலாம். இன்று சித்திரை பிறப்பு என்பதால் எல்லோரும் கோயில்குளங்களுக்குப் போய்விட்டதால் யாரும் தோட்டக்காட்டில் இறைக்கவுமில்லை, அங்கங்கே வாயகன்ற கிணறுகள் மட்டும் ஆழத்தில், ரொம்ப ரொம்ப ஆழத்தில் கொஞ்சமாய் தண்ணீரைத் தேக்கியிருந்தன. உள்ளே இறங்கிக் குடிக்கலாமென்றால் ராமு அக்கா, ஏத்தா நல்லா கேட்டுக்கோங்க! எவளும் தண்ணி குடிக்கப்போறேன், கிண்ணி குடிக்கப்போறேன்னு கிணத்துக்குள்ள எறங்குனீகளோ... வெளக்கமாறு பிஞ்சிபோவும். பொழுது மசங்குத தேரம். புருசன் மேல கோவம், புள்ள மேல கோவமின்னு எந்த பாதகத்தி எந்த கெணத்துக்குள்ள விழுந்து வங் கொலயா உசுர மாச்சிருக்காளோ நமக்குத் தெரியாது. இந்த நிற பௌரணையில எவளப் புடிப்போம், எவ மேல ஏறுவோமின்னு தட்டழிஞ்சிக்கிட்டு வருவா. நம்ம அறியாத காட்டுல இருக்கோம். இந்நேரத்துக்கு பேய் புடிச்சவள, பிசாது புடிச்சவளகட்டி இழுத்துக்கிட்டு ஊரு போயி சேர முடியாது என்று ஒரு அதட்டல் போட்டு எங்களை கட்டுப்படுத்தியிருக்க நாங்கள் நல்ல பிள்ளைகளாக நடந்து கொண்டிருந்தோம்.

வயக்காட்டுப் பாதை முடிந்து மேடேறும்போது இரண்டு குறுக்கம் வரையிலும் சோளப் பயிர்கள் பச்சை பூத்துக் கிடந்தன. அப் போதுதான் கலப்பித்து இருப்பார்கள் போலிருக்கிறது. வரப்பில் பயிர்கள் குமிகுமியாய்க் குமித்துக் கிடந்தன. நட்டமாய் நின்ற மீதி சோளப்பயிர்கள் வெட்டவெளியின் மேகாத்துக்கு மெல்லிய ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தன. நான் ரசித்தபடி வர என்னோடு வந்த பூங்கா வரப்பில் குமித்துக் கிடந்த பயிர்களை அள்ள ஆரம்பித்தாள். எல்லோரும் அவளை எவ்வளவோ தடுத்துப் பார்த்தார்கள். அக்கா ராமு, இந்தா பூங்கா...

வருசத்தில ஒருநாளு, கோயிலுக்குப் போயிட்டு பொடச் செடுத்தாப்பல போனமா, வந்தமான்னு இல்லாம இந்த சொமய எதுக்கு உன் தலயில அள்ளி போடப்போற என்று சொன்னாள்.

அவள் யார் பேச்சையும் கேட்காமல் அங்கே இருந்த புளிச்ச மட்டையைப் பிடுங்கி ஒரு கட்டுப் பயிரை அள்ளிக் கட்டித் தூக்கிக் கொண்டு முக்கி முனங்கியவாறு எங்களோடு வந்தாள். அதுவும் சும்மா வரவில்லை. கோடிப் பயிரு வரப்புல குமிஞ்சி கெடக்கு. எப்படி பாத்துட்டு மனசார வரமுடியும்? அதுவுமில்லாம இன்னைக்கு நம்ம மாடுக நம்ம இல்லாம தட்டயவும் தாளவும் தின்னுட்டு பச்சைக்கு ஏங்கிக் கெடக்கும். இத கொண்டி போட்டமின்னா அதுக வவுறார திங்கும் என்று சொல்லிக்கொண்டு வந்தாள்.

ஊர் மந்தை வந்ததும் ஆளாளுக்குப் பிரிந்து அவரவர் வீட்டுக்குப் போய் விட்டோம். கொஞ்ச நேரம்தான் ஆகியிருக்கும். எய்யா, அடிக்காதரும், அடிக்காதரும் என்று பூங்கா அலறும் சத்தம் கேட்டு ஓடினோம். அங்கே போய் பார்த்தால் அவர்களின் நெத்தி வெள்ளைமாடு நாலு காலையும் வெறைத்தபடி செத்துக்கிடக்க பூங்காவின் அய்யா, சிறுக்கி மவளே சனமாட்ட கொன்னு போட்டியே என்று அவளை அடி விளாசிக் கொண்டிருந்தார். கோடைப்பயிர், அதிலும் தண்ணிவிடாத பயிராங் காட்டி அதை அவகாச்சியில் தின்ற மாடு பயிர் சொருகிச் செத்துப் போய் விட்டது.

நாங்கள் நாலைந்து பேர் வெள்ளாமையில் புகுந்து ஒருநாள் நாச மாக்கிக் கொண்டிருந்தபோது பிஞ்சைக்காரர்கள் வந்துவிட்டார்கள். பதறிப்போய் கொண்டுபோன அரிவாள் சுரண்டி எல்லாவற்றையும் பிஞ்சைக்குள்ளேயே போட்டுவிட்டு வந்துவிட்டோம். பிஞ்சைக்காரர்கள் போகட்டுமென்று ஒரு இடத்தில் மறைந்து இருந்தோம். அந்த ஆட்களும் கொஞ்ச நேரம் இருந்துவிட்டுப் போய்விட்டார்கள். பிறகு எங்கள் பொருட்களைத் தூக்கி வந்துவிடலாம் என்று பிஞ்சைக்குள் நுழைந்தது தான் தாமதம், பிஞ்சைக்காரர்கள் சுற்றிவளைத்து விட்டார்கள். எங்களைப் பிடிப்பதற்காகவே போவதுபோல் போக்கு காட்டிவிட்டு வந்து விட்டார்கள்.

என்னுடன் வந்தவர்கள் எல்லாம் கருதையும் காயையும் உழப்பிக் கொண்டு ஓட நான் மட்டும் ஓடவில்லை. என் பக்கத்தில் நின்றிருந்த தங்கை ராதா கையையும் பிடித்துக்கொண்டேன். எனக்கு ஓட முடியாது என்று தெரிந்துவிட்டது. சுரண்டி இல்லாமல் வீட்டிற்குப் போனால் எனது அம்மா இன்னொரு சுரண்டி ஒடியும் வரை அடிப்பாள். பிஞ்சைக்காரர்கள்

கிட்டத்தில் நெருங்குவதைப் பார்த்து தங்கை என்னை ஒட்டி நின்றாள். அவர்கள் மொத்தம் நான்கு பேர் நின்றிருந்தார்கள்.

அதில் ஒருவன் மட்டும் என்னை நெருங்கி, நீ யாரு மக என்று கேட்டான்.

கங்கையா மக என்றேன்.

அவ்வளவுதான், என்னை நெருங்கியவர்கள் இரண்டு எட்டு பின்னுக்கு நகர்ந்தார்கள்.

ஏந்தாயீ இப்படி வெள்ளாமய நாசக்காடாக்கி புல்லு புடுங்குறதும் கனிகளகளவாங்குறதும் உங்க அய்யாவுக்கு தெரியுமா? என்றார் ஒருவர்.

அவர் அப்படி கேட்டதும் என் அப்பா ஞாபகம் வந்துவிட்டது. அப்பா எங்களை நிறைய படிக்கப் போட வேண்டும்; டாக்டராக, வக்கீலாக ஆக்க வேண்டும் என்று கனவு கண்டதோடு எங்களிடமும் சொல்வார். ஆனால் இப்போது நான் காடு காடாய் புல்லுக்கு அலைந்து இப்படி கண்டவர்களிடமெல்லாம் வசவு வாங்குவதை நினைத்து தானோ என்னமோ அழுதேன்.

விக்கலும் விம்மலுமாக அழுதுகொண்டே தெரியாது என்றேன். நிஜமாகவே செத்துப் போன என் அப்பாவிற்கு அவர் பிள்ளைகள் இப்படி கஷ்டப்படுவது தெரியுமா? அதனால் நான் உண்மையைத்தான் சொன்னேன்.

அவர்கள் ஆளாளுக்கு தங்களுக்குள்ளாகவே பேசிக்கொண்டார் கள். பிறகு சொன்னார்கள். தாயீ நீங்க நல்லா இருப்பீக; நாங்க உங்க சொரண்டி அருவாளப் பிடுங்கினத உங்க அய்யாகிட்ட சொல்லிராதீக. நீரு எப்பனாலும் வந்து புல்லு புடுங்கிட்டுப் போரும். காய்கனி வேணு மின்னா சொல்லும். நாங்களே புடுங்கித் தாரோம்! ஆனா நாங்க உம்ம அதட்டுனதயும் யாரு மகள்னு கேட்டதயும் சொல்லிராதீரும். இங்க நடந்தது மட்டும் உங்கய்யாவுக்கு தெரிஞ்சிச்சு... அம்புட்டுத்தேன் எங்க பாடு. அம்புட்டு கூட வேண்டாம். அவரு நாய ஏவி விட்டாலே போதும், வேற வின வேண்டாம்.

பிறகு எங்கள் எல்லோரையும் புல்லு புடுங்கிக்கொண்டு போகும் படி சொன்னார்கள். ஆளுக்கு ஒரு சீனிக்கிழங்கு வேறு கொடுத்தார்கள். எங்களுக்கு சிரிப்பு என்றால் அப்படி ஒரு சிரிப்பு. ரொம்ப கெத்தளிப்பாக புல்லைப் புடுங்கிக்கொண்டு சீனிக்கிழங்கோடு வந்தோம்.

சண்டியர் மாமாவின் பெயரும் என் அப்பாவின் பெயரும் ஒன்றுதான்.

காளி கேட்டாள், என்னம்மி நீ சொல்லுத விஷயமெல்லாம் ஏறுக்கு மாறாத்தேன் இருக்கு; அப்புராணி வேலம்மக்காளப் பத்தியும் இப்பிடித் தான சொன்னே என்றதும் எல்லோரும் அதென்னம்மி சொல்லு சொல்லு என்று கேட்டதும் வெள்ளச்சி பாட்டி தன் பிறந்த ஊரான சொக்கலிங்க புரத்தில் நடந்ததைச் சொல்ல ஆரம்பித்தாள்.

வேலம்மா சிங்காரத்துக்குப் பொண்டாட்டியா வந்ததப் பாத்தது தேன். சிங்காரம் தம்பி கோபாலுக்கு உச்சந் தலயெல்லாம் கிறு கிறுத்துப்போச்சி. அப்படி பதினாறு களையும் பொருந்திப்போயி பொம் பள அம்புட்டு லச்சணமா இருக்கா. நவ்வாபழம் கணக்கா முழியும், கோவம்பழங் கணக்கா உதடுமா தண்ணிபட்டா தெறிச்சிப் போறாப்பல எடுத்துக்கட்டுனாப்பல உடம்புமா அப்படி அழகா இருக்கா.

இப்பவெல்லாம் கோபாலுக்கு வேலைக்குப் போவவே மனசில்ல. அண்ணன் பொண்டாட்டி பக்கத்திலேயே இருக்கணுமின்னு இருக்கு. அவளுக்கு வெறவு வெட்டிக்கொடுக்க, வரகு குருதாலி குத்திக் கொடுக்க, படப்புல கூளம் புடுங்க இப்படி உரல சுத்துன கோழி கணக்கா அவளவே சுத்திக்கிட்டு இருக்கான்.

சிங்காரம் ஒரு அப்புராணி. அவனுக்கு சூது வினயமெல்லாம் கிடையாது. அவன் பாட்டுக்கு கறந்த மனசா வேல உண்டு, அவன் உண்டுன்னு காட்டு வழியே அலைவான். உரசலும் பரசலுமா தன் பின்னால அலயிற கொழுந்தன்மேல வேலம்மாளுக்கு ஒரு திண்டு விழுந்திருச்சு.

ஒரு நாளு, என்ன கொழுந்தனாரே! உங்க அண்ணன் பாம்புலுக்கும் காட்டுல அலய நீரு நிழலு சொகம் கண்டு வீட்டுக்குள்ளயே அடஞ்சி கெடக்கீரு. இந்நேரத்துக்கு உம்ம ஆத்தா அய்யா இருந்தா இப்படி இருப் பீரா? அண்ணனாங்காட்டி உம்ம பாட்டுக்கு அலயுதீருன்னு சத்தம் போட்டா.

மதினீ, உள்ளத சொல்லதுக்கென்ன... உன்னக் கணக்கா ஒரு அழகு பட்ட பொண்ண நானு இந்த உலகத்திலேயே பாத்ததில்ல. உன்ன என்னைக்குப் பாத்தனோ அன்னைக்கிலிருந்து பூமி மேலாக்கவும், மானம் கீழாக்கவும் தெரியுது. காடு கரையின்னு வேலைக்குப் போனா அங்க ஒன் நெனப்புத்தேன். என்னை என்ன செய்ய சொல்லுதேன்னான் கோபாலு.

அவளும் அப்ப நீரு உங்கண்ணனுக்கு முன்னக்கூடி என்ன பொண்ணுகேட்டு கட்டிக்கிட வேண்டியதுதானன்னு சொன்னாள்.

அதத்தான நானு செய்யாம போனேன். இப்பவும் ஒண்ணும் கொறஞ்சி போகல. அண்ணன் பொண்டாட்டி அரப்பொண்டாட்டிதான. எனக்கு நீ சொன்னபடி கேட்டா நானு ஒரு குளத்துமடையவே வெளைய வச்சி கொண்டாந்திருவேன்னான்.

ஆத்தாடி இது என்ன கொடும! கட்டுன புருசனுக்கா துரோவம் பண்ணச் சொல்லுதீரு?

அதெல்லாம் அண்ணந்தம்பிக்குள்ள கணக்கில்ல. நீர் அடிச்சி நீரு விலவுமான்னு நீ எனக்கும் சொன்னபடி கேட்டு இரு. நானு இந்தமான காலம் பூராத்துக்கும் கல்யாணம் காச்சி முடியாம நீயே தஞ்சமின்னு வேற ஒரு பொம்பளய நெனைக்காம இருக்கேன். வீடு, கொல்ல, காடு, கரைன்னு எதையுமே பவுர வேண்டாம். அண்ணன் கேட்டா எனக்கு கல்யாணமே வேண்டாண்ணே. நம்ம ஒரே குடும்பமா இருப்போமின்னு சொல்லிருதேன்னு அவன் கெஞ்சினான்.

இப்ப இப்படித்தேன் சொல்லுவீரு. பெறவு நாளைப்பின்ன நானு கல்யாணம் முடிக்கப்போறேன். செய்யப்போறேன்னு நீரு மும்மரிச் சீருன்னா நானு என்ன செய்யட்டும்? இந்த வெக்கக்கேட்ட வெளிய சொல்ல முடியுமான்னு வேலம்மா கேட்டா.

என் கண்ணான சத்தியம், சத்தியம், சத்தியமின்னு அவ தலயில அடிச்சி தன் தலயிலயும் அடிச்சி சத்தியம் செய்ய, வேலம்மா அவன் சத்தியத்த நம்பினதுமில்லாம அவன் கூடயும் நல்லாப் பழகிக்கிட்டு இருந்தா.

இப்ப ஒரு வேலைக்கு, இரு வேலையா செஞ்சி தானியமும் தவசமுமா கொண்டாந்து குலுக்கய நிரப்புதான். மாடும் கன்னும் ஆடும் வீடு நிறைஞ்சி கிடக்கு. வேலம்மாளுக்கு சத்த நாழி நிக்கக்கூட நேரமில்ல. அப்படி வேல கெடக்கு. அதோட வருசத்துக்கு ஒரு புள்ளைன்னு அஞ்சாறு புள்ளைக்களுக்கு மேல இருக்கதோட எப்பவும் வவுத்துல வேற புள்ள. கோபாலு கூட பேசக்கூட அவளுக்கு நேரமில்ல. அவன் ஆசையோட இவகிட்டப் பேசுவோமின்னு வார நேரமெல்லாம் புள்ளைக்கு பாலு கொடுத்துக்கிட்டு இருக்கா. இல்ல சேட்டமில்லாத புள்ளைக்கு பக்குவம் பாத்துக்கிட்டு இருக்கா. பொம்பளயும் முந்தி கணக்கா லச்சணமா இல்ல. எந்நேரமும் பிஞ்ச மண்டயும் பீத்த சீலயுமா வேவாரியா கிடக்கா.

இப்பவெல்லாம் கோபாலுக்கு வேலம்மாளப் பாக்கவே புடிக்கல. அவ எதுக்க வந்தாலும், எதும் சொன்னாலும் இவனுக்கு மொள காய அரைச்சி தடவுனாப்பல எரியுது. இப்பவெல்லாம் அவன் வீட்டுக்கு வாரதே இல்ல. காடே கதின்னு கெடந்தான். இப்படி இருந்தவன் ஒரு நாளு, வேலம்மாளக் கட்டிக்கிட்டு அழுவணுமின்னு அண்ணனுக்குத் தேன் தலவிதி; நமக்கென்ன தலவிதியா? ஏதோ இம்புட்டு நாளும் அனுபவிச்சோம்; அதும் சும்மா அனுபவிக்கல, அவளுக்கு கோடி வேல செஞ்சோம்; இனி ஒரு கல்யாணத்த முடிச்சிக்கிட்டு நம்ம பாட்டுக்கு சந்தோசமா இருக்கவேண்டியதேன்னு நினச்சிட்டான். அன்னைக்கு தினத்துக்கே அண்ணன்கிட்ட, எண்ணே! நான் பாட்டுக்கு பேசாம

இருந்தாலும் ஊருக்குள்ள இருக்க நம்ம தாயீ புள்ளைக எல்லாம் என்ன கோவாலு, உனக்கு சன்ன வயசா ஆவுது? ஒரு கல்யாணம் காச்சின்னு முடிக்க வேண்டியதுதான? எத்தன நாளைக்கு உங்கண்ணன் வீட்டுலயே அண்டிக் கெடப்பேன்னு கேக்காகன்னு சொல்லவும் சிங்காரத்துக்கு சங்கடமாப் போயிருச்சு.

தம்பி, என்னப் பொறுத்துக்கோப்பா; உனக்கு கல்யாணம் முடிக்கணுமிங்கிறதவே நானு அயத்தே போனேன். இது என்ன கார்த்திக மாசம்தான; மார்கழி முடியட்டும். உனக்கு தையில ஒரு பொண்ணப் பாத்து பேசி முடிச்சிருவோமின்னு சொன்னான்.

கோபாலுக்கு சந்தோசமா போயிருச்சி. சரிண்ணேதை பிறக்கவுமே கல்யாணத்துக்கு நாளப் பாத்துருங்கன்னு சொல்லிட்டுப் போய்ட்டான்.

மறுநாளு வேலம்மா புருசன் இல்லாத தேரம் பாத்து கொழுந்தன் கிட்ட வந்தா. இவளப் பாத்ததுமே அவன் மூஞ்சிய திருப்பிக்கிட்டான்.

இதென்ன கோவாலு, அநியாய அக்ரமுமா இருக்கு. நானு காலம் பூரா கல்யாணம் முடிக்கமாண்டேன்; என் சொன்னபடி கேட்டு இருந்தேன்னா நம்ம ஒரே குடும்பமா சொத்தப் பிரிக்காம இருப்போ மின்னு நீரு சொல்லப்போயிதான நானு உமக்கு அணவா இருந்தேன். உம்மாலதேன் புள்ளயும் குட்டியும் வதவதன்னு பெருவியும் போச்சு. அதோட 'பூவுல' அழிக்கேன், 'காயில' அழிக்கேன்னு அழிச்சி எம் உடம்பும் பூணு கழண்ட உலக்கையா இத்துப்போச்சி. என் மேனிய குறச்சி, என் தேகத்த குறச்சி என்ன அரைஉசுரா ஆக்கிட்டு இப்ப நீரு கல்யாணம் முடிக்கணுமின்னா நானு என்ன செய்வேன்? எம் புருசன் அப்புராணி. அவருக்கு வெளுத்ததெல்லாம் பாலுதேன். அவர வச்சிக் கிட்டு இத்தன புள்ளைகளையும் நானு எப்படி வளப்பேன், எப்படி கரை சேப்பேன்னு கண்ணீரோட கெஞ்சினா.

ஏதோ எனக்கு வயசுக்கோளாறு. அப்படி இருந்தேன். நீயாவது, ஏலே கிறுக்குப்பயலே அண்ணன் பொண்டாட்டி உனக்கு பெத்த தாயி கணக்கான்னு புத்தி சொல்லதுக்கில்லாம புண்ணியத்துக்கு ஒரு புருசனுக்கு ரெண்டு புருசன் கிடைச்சான்னு உலுப்பிக்கிட்டு அலஞ்சே. இப்ப நானு கல்யாணம் முடிக்கணுமிங்கவும் உனக்கு வலிக்காக்கும்! இந்தமான இந்தப் பேச்ச விட்டுட்டு நீயும் அண்ணன்கூட சேந்து எனக்குப் பொண்ணப் பாத்து வச்சேன்னா நானு பேசாம இருப்பேன். இல்லேன்னா நீ என்கூட இருந்தத அண்ணன்கிட்ட சொல்லது மட்டுமில்லாம ஊரெல்லாம் சொல்லி உன்ன கேவலப்படுத்திப் போடுவேன்னு சண்டைக்கு வர வேலம்மா பேசாம வீட்டுக்கு வந்துட்டா.

இங்க கருதறுப்பெல்லாம் முடிஞ்சி குலுக்கை நிறைய தானியத்த கொண்டாந்து சேத்தாச்சி. தட்ட, தாளெல்லாம் அறுத்து படப்பும்

போட்டாச்சி. காடுக எல்லாம் பச்ச வரப்புல வெள்ளையோடிக் கெடக்கு.

வேலம்மா அவ புருசன்கிட்ட, இங்க அம்புட்டு வேலையும் பாத்துட்டீரு; ஊர்ல எங்காத்தா காட்டுலயும் களத்துலயும் கருது காயப் போட்டுக்கிட்டு பரிதவிச்சிக் கெடக்கா; நீரு போயி அங்க ஏழு எட்டு நாளைக்கி இருந்து ஆத்தாளுக்கு வேலய முடிச்சி கொடுத்துட்டு வாரும்; அவளுக்கும் நம்மள விட்டா யாரு இருக்கான்னு சொன்னா.

ஆமா வேலு... நல்லவேள நீ சொன்ன! அயித்தைக்கும் வேல நடக் கணுமில்ல; நானு போயிட்டு வாரேன்னுட்டு சிங்காரம் தம்பிகிட்டவும் சொல்லிட்டுப் போயிட்டான்.

புருசன் போன மறுநாளு வேலம்மா கொழுந்தன கூப்புட்டு, கோவாலு... பெரிய குலுக்கைக்குள்ள எறங்கி நாலு மரக்கா சாமைய அள்ளிக்கொடு; நானு அவிச்சிப்போடுதேன்; அதோட என் பொங்கட்டி, சிறவவும் துணியில முடிஞ்சி தெக்கோரத்து மூலையில வச்சிருக்கேன் அதையும் எடுத்து கொடுமின்னு சொன்னா.

கோபாலும் சரின்னு குலுக்கைக்குள்ள எறங்குனான். அவன் எறங்கினதே சரின்னு வேலம்மா குலுக்கைக்குள்ள எறங்க, ஏற வாய்ப்பா இருந்த ஏணிய சரட்டுன்னு வெளிய இழுத்துப் போட்டு குலுக்க தட்டவும் கொஞ்சம் தொறந்தாப்புல வச்சி மொத்தமா மூடிட்டா. ஏற்கெனவே சாலு வழுக்கும். இவனுக்கு வெளிய வரமுடியல. தட்டுத்தடுமாறி வெளிய வந்து குலுக்க விளிம்ப புடிப்போமின்னா புடிக்க முடியல. சத்தமும் போட முடியல. அப்படியே போட்டாலும் வெளிய கேக்க மாணேங்கு. வேலம்மா குலுக்கய மூடுனவதேன்.

எடுவட்ட பய! ஒரு பொண்ணு புள்ளயப் பாழாக்கிபோட்டு இப்ப இன்னொரு கல்யாணம் முடிப்பே! உள்ளயே கெடன்னு வஞ்சிட்டு மூணு நாளு என்னன்னுகூட எட்டிப்பாக்கல.

மூணாம் நாளு பய்ய எட்டிப் பாத்தா. கோபாலு எலும்பும் தோலுமா பேசக்கூட தம்சமத்து இவளப் பாத்து கையெடுத்து கையெடுத்து கும்பிடுதான்.

மதினி, என்ன வெளியே விடுங்க. நானு இன்னி கல்யாண பேச்சவே எடுக்கமாண்டேன்னு சொல்றான்.

வேலம்மா ஏணிய எடுத்து உள்ள எறக்கிவிட்டா. அவன் தட்டுத்தடுமாறி மேல வர இவ கீழ இறக்கிவிட்டா.

இப்பவெல்லாம் எங்கனயும் கல்யாண்ப் பேச்சு பேசுனாகன்னா கோபாலு அந்த ரக்குலயே நிக்காம ஓடுதானாம்.

சரசு செத்துப்போனதால் அவள் அப்பா கங்கையா மாமா அடிக் கடி என்னைக் கூப்பிட்டு வேலை ஏவுவார். அவர்களின் பாதுகாப்பில் நாங்களும் இருந்ததால் மாமாக்களின் காடுகளுக்குத்தான் வேலைக்குப் போவேன். நல்லவேளை, அவர்களுடன் பிறந்த கடைசி மாமா எனது அக்காவோடு சென்னையில் இருந்தார். அவர்கள் எல்லோரும் காட்டில் இருக்கும் மிளகாய்ப் பழம், ஆமணக்கு எல்லாவற்றையும் கட்டி என் தலையில் தூக்கி விடுவார்கள்.

நான் இந்த மாமா வீட்டிற்கு வரும்போதெல்லாம் கால் ஒடிந்து படுக்கையில் கிடக்கும் அந்த சின்னம்மா பாவிப்பய, பெத்த மவளவே அடிச்சி கிணத்துக்குள்ள விழுவ வச்சிட்டான்; மத்தவங்கள விட்டு வைப்பானா? கடவுளு இவன் கையில என்னக் காட்டிக் கொடுத்துட் டாரே... என்று புலம்பிக்கொண்டே இருப்பாள்.

ஒருநாள் கூட அவள் ஆசையாக சோறு சாப்பிட்டதில்லை. அந்த வீட்டிற்குள் நுழைந்ததும் என்னுடைய முதல் வேலை அவளுக்கு வைத் திருக்கும் சோற்றைத் தூக்கி மாட்டுக்கு கொட்டுவதுதான்.

இப்படியே அவள் இருந்ததில் படுத்த படுக்கையாகிவிட்டாள். சீலையின் உள்மடியில் ஒரு சுருக்குப்பை வைத்திருப்பாள். அதில்தான் காசுகளைப் போட்டு யாருக்கும் தெரியாமல் பத்திரப்படுத்தியிருந்தாள். இப்படி பட்டினியாய்க் கிடப்பவள் யாருமில்லாத நேரத்தில் அந்த சுருக்குப்பையிலிருந்து காலணா எடுத்து என்னை கலர் வாங்கி வரச் சொல்லி குடிப்பாள். ஒருதடவை நான் சீசாவை கொண்டுபோய் சடையில் கொடுக்கும்போது மாமா பார்த்துவிட்டார். என்ன அது கலர் சீசா மாதிரி என்றார். நான் சற்று பயந்துவிட்டு கலர் வாங்கி குடிச்சேன் மாமா என்றேன். உடனே அவர், கடையில் கலர் வாங்கி குடிக்கத அளவுக்கு ஆளாயிட்டயா? வீட்டுக்குப் போ வாரேன் என்றார். நான் பேசாமல் வந்து விட்டேன். பிறகு அதைப் பற்றி அவர் கேட்கவில்லை.

சின்னம்மா இப்போதும் படுக்கையிலேயேதான் இருந்தாள். மாமா அவரை வஞ்சி அதட்டிப் பார்த்தார். அப்போதும் அவள் எழவே இல்லை.

கடைசியில் மாமா பழையபடி வண்டியைக் கட்டி அவளை அவளது ஊரிலேயே கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தார்.

கொஞ்ச நாள் கழித்து அந்த சின்னம்மா செத்துப்போனாள்.

இந்த சின்னம்மாவை நினைக்கும்போது என்னுள் அதிர்ச்சியை ஏற்படுத்திய வேறு இரண்டு பெண்களின் நினைவு வரும். நாங்கள் மாடு களை மொட்டை மலையில் விட்டு விட்டு கீழே இருக்கும் பெரிய ஆல மரத்தில்தான் குதியாளம் போடுவோம். ஒருநாள் ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் வந்து இந்த நிழலில் தங்கினார்கள். தங்கினார்கள்

என்பது கூட சரியல்ல, அந்தப் பெண்ணை கட்டாயப்படுத்தி தங்க வைத்தார்கள்.

ஆனால் அவளோ தலையிலும் நெஞ்சிலும் அடித்துக்கொண்டு மேற்குப் பக்கமாக ஓட ஒரு ஆள் அவளை இழுத்து வந்து இன்னொருவர் கையில் ஒப்படைக்க அவர் அடித்து கிழக்கு திக்கமாக கூட்டிப்போகிறார். ஆனால் அவள் அவரிடமிருந்து திமிறி விடுபட்டு குப்புறப்படுத்துக் கொண்டு வரமாட்டேன் என்று அழுதாள். ஆனால் அவரோ அவளை அடித்து இழுத்துக்கொண்டு போனார். நாங்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தோம்.

அக்கம்பக்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த பெரிய ஆட்கள் இவள் அழுகைச் சத்தம் கேட்டு வந்தார்கள். எதுக்கு இப்படி அந்த பொம்பளய இம்சப் படுத்துதே; வரமாண்டேன்னா உட்டுட்டு போவ வேண்டியதுதான என்றார்கள்.

உடனே அவள் அழுதுகொண்டே சொன்னாள். அந்தா நிக்கவன் எம் புருசன். இந்த காலாண்டி அய்யன்கிட்ட என்ன முப்பது ரூவாய்க்கு அடவு வச்சிட்டான். அடவு வச்சி ஒரு வருசம் ஆச்சு. நானு சாணி அள்ளி, சவதி அள்ளி அம்புட்டு வேலயும் செஞ்சு, மூணு காய விழுத்தட்டி கர்ப்பங் கலச்சி, தெரிஞ்சும் தெரியாம ஒண்ணு ரெண்டுமா சேத்து வச்சு அந்த ஊருல இருக்க என் அயித்த மவ கிட்ட பத்து ரூவா கடன் வாங்கி இவன் கிட்ட கொடுத்து என்னய நானே திருப்பிக்கிட்டேன். ஆனா இப்ப மறு படியும் என்ன முப்பது ரூவாய்க்கு அடவு வைக்கானே எம் புருசன்! வேண் டாப்பா. என்ன அடவு வைக்காதே. பச்சத் தண்ணிய குடிச்சிக்கிட்டு னாலும் நானு ஒன்னோட எம் புள்ளைக முகத்தப் பாத்துக்கிட்டு இருக்கேன்னு கையெடுத்து கும்பிட்டேன். பொய்காரப்பாவி. சரி சரின்னுட்டு இப்ப ஒருக்கா என்ன அடவு வச்சிட்டானே என்று சொல்லிச் சொல்லி அழுதாள்.

எனக்கு அப்போது பதிமூன்று வயது இருக்கும். சின்னம்மாவிடம் இதைச் சொல்லி வேதனைப்பட்டபோது இதெல்லாம் அவுகளுக்கு வழக்கந்தேன் என்றாள். அன்று பார்த்த அந்தப் பெண்ணின் பரிதாபமான முகம் இன்னும் மறக்கவில்லை.

இதுபோல் மனசில் வடுவாக நிலைத்துவிட்டது இன்னொரு காட்சி. கூலிக்காக கத்தரி, தக்காளி என்று காய்கள் பிடுங்கப் போவோம். காய் பிடுங்குவதோடு அந்தச் சுமைகளை சுமந்துகொண்டுபோய் ராஜ பாளையத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்துவிட்டால் இன்னும் அதிகமான கூலி கிடைக்கும். ஆனால் கழுத்து வலி கொல்லும்.

ஒருநாள் எனது பெரியம்மா மகள் என்னிடம் சொன்னாள். நம்ம ரெண்டு பேரும் சேந்தே தக்காளிய இங்க வாங்கி அங்க கொண்டுபோயி விக்கலாம். ராசபாளயத்துக்குள்ள நா ஒரு தெரு போனாப் போதும்.

எனக்குக் குடு, உனக்குக் குடுன்னு ஒத்த தெருவுலேயே பழம் அம்புட்டும் வித்துப்போவும். சத்தோடத்தில பழத்தப் போட்டுட்டு காரச்சேவு வாங்கித் தின்னுக்கிட்டு கூடவே வந்துருவோம் என்று கூட்டிப்போனாள்.

நாங்கள் போன தெருவில் நிஜமாவே அக்காவிற்கு நல்ல பழக்கம் இருந்தது. அக்காவின் குரல் கேட்ட உடனே கூப்பிட்டு வீடு தவறாமல் பழம் வாங்கினார்கள். ஒரு வீட்டின் முன்னால் பொட்டியை கொண்டு போய் வைத்த அக்கா, தாயீ பழம் கொண்டாந்திருக்கேன் என்று குரல் கொடுத்தார்.

அந்த வீட்டின் வாசலில் ஒரு பெண்ணைச் சங்கிலியால் காலில் கட்டியிருந்தார்கள். மொட்டைத்தலையாக இருந்தாள். கிழிந்த பழைய சேலையை மட்டும் உடம்பில் சுத்தியிருந்தாள். பக்கத்தில் ஒரு ஈயத் தட்டும் ஈயக்கிளாசும் உருண்டு கிடந்தது. அக்கா நாலு தக்காளிப் பழத்தைக் கொண்டுபோய் அவளிடம் கொடுத்தவாறு, என்ன தாயீ, என்னமும் சாப்பிட்டயா? என்றார். அந்தப் பெண் பழத்தை வாங்கவு மில்லை, எதுவும் பேசவுமில்லை. தலையைக் குனிந்தவாறு உட்கார்ந் திருந்தாள். கண்ணீர் மட்டும் வடிந்துகொண்டே இருந்தது.

உடனே அக்கா, அழுவாதத்தா; நீ வாங்கிட்டு வந்த வரம் அம் புட்டுத்தேன்; போன செம்மத்துல பெரிய பாதகம் செஞ்சிட்டே பொலுக்கோ; அதேன் இந்த செம்மத்துல அத தித்துவளி ஆக்குதே என்றாள்.

அவள் எந்த பதிலும் பேசவில்லை. தலையில் கையை வைத்துக் கொண்டு கண்ணீர் விட்டவாறே இருந்தாள்.

வீட்டிற்குள்ளிருந்து பழம் வாங்க வந்த பெண்ணிடம் அக்கா, தாயீ... நீயாச்சிலும் உன் அண்ணன்கிட்ட எடுத்துச் சொல்லக்கூடாதா? ஒரு பொண்ணும்புள்ளய இந்த வங்கொடும செய்யலாமா? என்றாள்.

பழம் வாங்க வந்த பெண் சொன்னாள். நானு என்னக்கா செய்யட்டும்? எம்புட்டோ எடுத்துச் சொல்லிப் பாத்துட்டேன். அண்ணன் கேட்டாத்தானே. அவன், உன் சோலி மயிரப் பாத்துக்கிட்டு ஒழுங்கு மருவாதியா இங்கன இருக்கன்னா இரு. இல்லே எனக்கு புத்தி கித்தி சொல்லிக்கிட்டு இருந்தே ராவோட ராவா உன்கால ஒடிச்சி கவுத்தக்கட்டி தூக்கிட்டு என் தங்கச்சி வவுத்துவலின்னு கவுத்தப் போட்டுக்கிட்டான்னு சொல்லி சுடுகாட்டுல கொண்டுபோயி எரிச்சிருவேன்; கட்டுன புருசன் கல்லுகணக்கா இருக்கையில ஊர் மேயப் போனவள இப்படி கட்டிப் போட்டாத்தேன் மத்தவளுக்கும் புத்தி வருமிங்கான். பிறவு அவங்கிட்ட என்னத்தப் பேச...

ஊருக்கு திரும்பும்போது அக்காவிடம் கட்டிப்போட்டியிருந்த பெண்ணைப் பற்றி கேட்டேன். அக்கா சொன்னாள்: கல்யாணம் முடிந்த அந்தப் பெண் கணவனுக்குத் தெரியாமல் யாருடனோ திருட்டுத்தனமாக

தொடர்பு வைத்திருந்தாளாம். அதை அவள் புருசன் ஒருநாள் பார்த்து விட்டானாம். உடனே தாலி கட்டுன புருசனுக்கு துரோவம் செய்யுற பொம்பளய ஊருக்கெல்லாம் தெரியும்படி அவமானப்படுத்தி அலங் கோலமாக்கணும். அப்பத்தேன் இந்த பொம்பளகளுக்கு புத்தி வருமின்னு தலய சிரைச்சி தெருவிலேயே மொள அரஞ்சி சங்கிலியப் போட்டு கட்டி வச்சிட்டானாம். அவளுக்கும் சொந்தம் என்று யாரும் இல்லாததால் யார் யாரோ வந்து சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் அவன் கட்டிய கட்டை அவிழ்த்து விடவில்லையாம்.

சொடலையின் பெண்டாட்டி பூமாலையைப் பார்த்து ஊரே வாயாறிப்போனது. இடி விழுந்து கருகிப்போன பனைமரம் கணக்கா இருக்கிற சொடலைக்கு இப்படி ஒரு பொண்டாட்டியா? இவ இம்புட்டு அழகா இருப்பான்னு அவ, ஆத்தா அப்பனுக்கு தெரிஞ்சிதேன் இப்படி பூமாலைன்னு பேரு வச்சாகளா? அப்பவும் கருப்பட்டிக்குள்ள ஒரு சீனிக்கல்லு பொதிஞ்சி கிடக்காப்பல இப்படி ஒரு அழகா? என்று ஊர் அதிசயப்பட்டு நின்றது.

சொடலை வசதியானவன். மடைக்கரை நஞ்சையும், வடகரை பிஞ்சையும் கண்ணுக்கெட்டும் தூரம் வரையில் கிடந்ததோடு கல்லுக் காரம்போல் பெரிய வீடும் காசும், பணமும் நிறைய இருந்தது. என்ன இருந்து என்ன செய்ய? அவனை ஒருக்கா பார்த்தவர்கள் மறுக்கா பார்க்க மாட்டார்கள். அப்படியே பார்த்தாலும் அன்னைக்குப் பொழுது கஞ்சி குடிக்க மனசில்லாமல்தான் கிடப்பார்கள். அப்படி ஒரு அவலட்சணத் தோடு இருந்தான். இத்தனை சொத்துபத்து இருந்தும் அவன் ஊரில் மட்டு மில்லை. சுத்துப்பட்டு ஊரு அம்புட்டும் போய் பொண்ணு கேட்டுப் பார்த்துவிட்டான். யாருமே பெண் கொடுக்கத் தயாராக இல்லை. அவன் நம்ம வீட்டுக்கு பொண்ணுகேட்டு வரப்போறான் என்று கேள்விப் பட்டதுமே ஊரிலுள்ள குமரிப்பெண்கள் விளக்குமாறும் கையுமாக வாசலிலும் தெருவிலும் அவனை அடிப்பதற்குத் துணிந்துவிட்டார்கள்.

• எத்தனை சொத்து இருந்துதான் என்ன செய்ய? ஒரு பெண் புருசனோடு மனசோடு மனம் பொதிஞ்சி வாழ வேண்டாமா?

சொடலை நொந்து போனான். தூரத்து ஊரில் யாரோ சொந்தம் இருப்பதாகப் போனவன் இப்படி ஒரு அழகுப்பட்ட பொண்ணை கல்யாணம் பண்ணிக்கொண்டு ஊர் மெய்க்க வந்துவிட்டான். ஒரு கொடங்கை தலைமுடியும், ஒருபிடி இடுப்பும், பசுவெண்ணையில செஞ்சு வச்ச மாதிரி உடம்பும் சீனிக்கட்டி மாதிரி பல்வரிசையும், நத்தம் கணக்கா உதடுமா பூமாலை அந்த தெருவுக்குள் வந்தபோது விடியக்கால

சூரியன் புறப்பட்டு வந்த மாதிரி இருந்ததைப் பார்த்த ஊர்க்காரர் களுக்குப் பேசித் தீரலை.

எள்ளுப்புண்ணாக்குல கையும் காலும் மொளச்சாப்புல நெளிஞ்ச மூஞ்சியும், திருவுன உடம்புமா கிடக்கவனுக்கு அலமோதி வந்தாப்பல இப்படி ஒரு பெண்டாட்டியா? என்று பெண்கள் பேசிப் பேசி சலிக்க; ஆண்கள் நெஞ்சில் தீக்கொழுவை இறக்கியதுபோல பூமாலை நினைப்பில சாப்பாடு மறந்து, உறக்கத்த மறந்து தட்டழிஞ்சிக்கிட்டு இருந்தார்கள்.

ஆனா பூமாலை எதையுமே கண்டுக்கிடல. புருசன்மேல அவளுக்கு ஆசையின்னா ஆச, அப்படி ஒரு ஆசை! எங்கே போனாலும் அவளும் அவன் கூடவே போக ஆண்கள் எல்லாம், அடடா காக்கா கோவப்பழத்த கொத்தன மாதிரி என்னம்மா போறாக பாரு என்று அவ போன தடத்திலயாவது நம்ம மிதிச்சிப் போவோமின்னு ஏக்கம் புடிச்சி எளச்சி துரும்பா மெலிஞ்சிக்கிட்டே போறாக.

கல்யாணம் முடிஞ்ச மூணாம் மாசமே பூமால மாசமா இருந்தா. சொடலைக்கு சந்தோசமின்னா இந்த மட்டு இல்ல. அவன்கூட இப்ப கொஞ்சம் தெளிச்சியும் நிறமும் கொடுத்த மாதிரி இருந்தான்! பத்து மாசம் ஆனதும் பூமாலைக்கு பொம்பளப் புள்ள பெறந்துச்சி. ஆனா பெறந்த புள்ள புருசன எங்கேன்னு, சொல்லப்போனா அதவிட அசிங்கமா பிறந்திருச்சி. அப்படி பிறந்தாலும் 'காக்கைக்கு தன் குஞ்சி பொன்குஞ் சிங்கிற' மாதிரி பூமால மவள கொஞ்சுற கொஞ்சு சொல்ல முடியாது. எந்த நேரமும் ஒரு குரங்குக்குட்டிய இடுக்கின மாதிரி மகள இடுப்பில இடுக்கியிருப்பா. சொடல தன் மவளுக்கு என்ன பேரு வச்சானோ என்னமோ தெரியல. ஆனா அவள எல்லாரும் காளி காளின்னுதான் கூப் பிட்டாக. ஏன்னா எந்நேரமும் பூமால மக வீர்... வீர்...ன்னு கத்திக்கிட்டு தேன் இருப்பா.

ஆனாலும் நிறையப் பேரு பூமாலயத் தொடணுங்கிறதுக்காகவே அந்தக் காளிய வம்படியா தொட்டுக் கொஞ்சது போல பூமாலயவும் தொட்டுப் பாத்துக்கிட்டாக. இப்படியே பத்துப் பதினைஞ்சி வருசம் போயிருச்சி. காளி இப்ப வயசுக்கு வந்துட்டா. சின்னப்புள்ளை யிலன்னாச்சிலும் கொஞ்சம் பாக்கிறமாதிரி இருந்தா. ஆனா இப்ப நனைஞ்சிபோன கிழட்டுப் பெரிச்சாளி மாதிரி அம்புட்டுக்கு அசிங்கமா இருக்கா.

சொடலைக்கு இப்ப மாப்பிள்ளை பார்க்கிறது பெரிய வேலையாப்போச்சு. உள்ளூரு மாப்பிள்ளைகளுக்கெல்லாம் காளியோட லச்சணத்தப் பத்தி தெரியுமாங்காட்டி அவ பேரச் சொன்னாலே 'அருச்சனன் பேர் பத்துன்னு' பின்னங்கால் பொடதில அடிக்கும்படியா

ஓடுனாங்க. அதனால சொடல வெளியூரு மாப்பிள்ளையத் தேடிக் கொண்டாந்தான். அவுக காளியப் பாத்ததும், மறுக்கா திரும்பியே பாக்காம ஓட்டமெடுத்து ஓடி ஊரு எல்லையை கழிச்சப் பிறகுதான் மூச்சே விடுதாக.

சொடலையும் பூமாலையும் நொந்து நூலாப் போயிட்டாங்க. காளிக்கு வயசு இருபத நெருங்கிக்கிட்டு இருக்கு. கோடி சொத்து இருந்து என்ன செய்ய? மகள ஒருத்தன் சீந்த மாண்டேங்கான். அதோட போவாம ஊர்க்காரங்க வேற இவங்கள இத வச்சி ஏசி ஏசி காமிக்காக. அப்ப பத்து, இருபது மைல் தொலைவுல இருந்து ஒரு வியாபாரி வந்தான். அவன் பேரு பூபதி. பூபதி இந்த ஊருல யாரு பெரிய விவசாயின்னு ரெண்டு பேரு கிட்ட கேட்டான். எல்லோரும் சொடலை வீட்டைத்தான் காமிச்சாக. பூபதியும் அங்கே போயி சொடலையை கூப்பிட்டான். சொடலை அப்ப வீட்டுல இல்ல. பூமாலைதான் வெளிய வந்து யாரு? என்ன வேணுமின்னு கேட்டா. பூமாலையைப் பாத்ததுதான், பூபதி அப்படியே சொக்கிப் போய்ட்டான்.

ஆகா இப்படியும் ஒரு அழகு இந்த உலகத்தில இருக்கா! இப்படிப் பட்ட அழகை நம்ம அனுபவிக்காம வாழ்ந்துதான் என்ன பிரயோசனம்? ஒருநாள் ஒரு பொழுதாச்சிலும் இவ கூட வாழ்ந்து ஆகணும்னு நினைச் சிட்டு தான் வந்த விவரத்தையும் சொன்னான். நீங்க கொஞ்சநேரம் உக் காருங்க. இதோ எங்க வீட்டுக்காரரு வந்துருவாருன்னு சொல்லிட்டு பூமாலை சமையல் வைக்கிறதுக்காக போயிட்டா.

ரொம்ப நேரம் கழிச்சி சொடலை வந்தான். பூபதி தான் வந்த விவரத்தை சொல்ல ரெண்டு பேரும் பேசிக்கிட்டு இருந்தாங்க. இன் னைக்கு இங்கேயே சாப்புடுங்கன்னு சொடலை வற்புறுத்தினான். அதைக் கேட்டதும் பூபதிக்கு ரொம்ப சந்தோசமா இருந்துச்சு. உண்மைய சொல்லப்போனா பூபதிக்கு பூமாலையை விட்டுட்டு போகவே மன சில்ல. காலம் பூரா அவகிட்டயே இருக்கணுமின்னுதான் நினைச்சான்.

இதே நேரம் பூமாலைக்கு என்ன தோணுதுன்னா இவனுக்கு சொத்துபத்து அத்தனையும் எழுதிக்கொடுத்து தன்னோட மகளுக்கு எப்படியாவது இவனை மாப்பிள்ளையாக்கிரணுமின்னு தோணுது. யோசனையை புருசன்கிட்ட சொன்னதும் அவனுக்கும் ரொம்ப சந்தோசம்தான்.

உடனே பூபதியோட வரலாற கேட்டப்ப பூபதி இவங்க சாதி மட்டு மில்ல; தூரத்துச் சொந்தக்காரனாவும் இருந்தான். உடனே சொடலை இன்னைக்கு ராத்திரி நீங்க இங்கேயே தங்கிட்டு நாளைக்குப் போங்கன்னு சொல்லிட்டு பிஞ்சைக்குப் போயிட்டான். பூமாலை பூபதிக்கு ஒரு சொம்பு நிறைய பால் காய்ச்சி குடிக்கக் கொடுத்தா. அப்படியே என்

மகளுக்கு நாங்க மாப்பிள்ளை பாத்துட்டு இருக்கோம். நீங்க மருமகனா வந்தா ரொம்ப சந்தோசப்படுவோம்னு சொல்ல பூபதியும் உங்க மகளை நானு பாக்கவே இல்லையேன்னு சொன்னான்.

உடனே பூமாலை காளிகிட்ட இனிப்பு பலகாரங்கள் வெற்றிலை பாக்கு எல்லாம் கொடுத்துவிட்டாள். பலகாரத் தட்டோட வந்த காளியப் பாத்த உடனே பூபதிக்கு கொஞ்ச நேரத்துக்கு முன்னால குடிச்ச பாலெல் லாம் குடலைப் பிரட்டிட்டு வெளியே வாந்தியா வருது. அப்பவே அவங்க வீட்டவிட்டு ஓடணுமின்னு நினைச்சான். ஆனா பூமாலையோட அழகு அவனைக் கட்டிப் போட்டுருச்சி.

காளி போன உடனே பூமாலை பூபதிகிட்ட வந்து என் மகள கட்டிக்க உங்களுக்குச் சம்மதமான்னு கேட்டாள். பூபதியும் நான் உங்க மகளை கட்டணுமின்னா நீங்க எனக்காக ஒண்ணு செய்யணுமின்னு சொன்னான்.

நீங்க என் மகளைகட்டிக்கிறதா இருந்தா நான் எது வேண்ணாலும் உங்களுக்கு செய்தேன். இன்னைக்கே எங்களுக்கு இருக்கிற அம்புட்டு சொத்தையும் உங்க பேருல எழுதிவைக்கிறேன் என்று சொன்னாள். உடனே பூபதி, எனக்கு சொத்தும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம்; நீங்கதான் எனக்கு வேணும். உங்ககூட பேசிப் பழகி இருக்கணுமின்னு நான் ஆசைப்படுறேன்னு சொன்ன உடனே பூமாலைக்கு அதிர்ச்சி யாயிருச்சி.

உடனே பூமாலை, இந்த மாதிரி நீங்க பேசலாமான்னு கேட்டாள்.

உங்க மகளப் பார்த்தவன் எவனுமே கல்யாணமின்னு முடிக்க மாட்டான். ஆனா நானு அவள முடிச்சிக்கிறேன்னு சொல்றேன்னா அது உங்க மேல இருக்க ஆசையாலதான். உங்களுக்கு சம்மதமின்னா சொல் லுங்க. நானு இருக்கேன். இல்லாட்டி நானு மாமா வந்ததும் சொல் லிட்டுப் போறேன்னு சொன்னான்.

பூமாலை யோசிச்சிப் பாத்தா. எத்தனையோ மாப்பிள்ளைக இது வரைக்கும் வந்தாக. ஆனா ஒருத்தன் கூட கட்டிக்கிறேன்னு சொல்லல. இவ்வளவு சொத்து இருந்தும் மக இன்னமும் குமரியா இருக்கிறதுனால நமக்கு ஒரு சந்தோசமும் இல்ல. மக விசாரத்தாலே நம்ம புருசனும் இத்துக் கழண்டு எரவாணத்துல சொருவுற மாதிரி மெலிஞ்சு போயிட் டாரு. ஊர்க்காரங்க வேற ஏசிப் பேசி எலங்கய அழிக்கிறாங்க! அதனால மகளுக்காக நம்ம ஒரு தடவை தப்பு செய்றதுல ஒரு குத்தமுமில்லன்னு நினைச்சா.

பிறகு பூபதிகிட்ட உங்க சொல்லுக்கு நான் சம்மதிக்கிறேன். ஆனா நீங்க கல்யாணமாகி மூணே மூணு மாதத்தில என் மகள கூட்டிக்கிட்டு உங்க ஊருக்குப் போயிரணும். அவ கண்கலங்காம நல்லபடியா வச்சி

காப்பாத்தணும்; என்ன சொல்றீங்கன்னு கேட்க அவனும் நான் மறுவீடு முடிஞ்சதுமே ஒரு மாசத்தில அவளக் கூட்டிட்டுப் போயிருதேன்னு சொல்லிட்டான்.

இவங்க குட்டுநெட்டு தெரியாத சொடலை காட்டுலருந்து வந்ததும் பொண்டாட்டிகிட்ட, என்னத்தா 'பூ மலந்திருச்சான்னு' கேட்டான். அவளும் 'பூ மலர்ந்திருச்சின்னு!' சொன்ன உடனே சொடலைக்கு இருந்த சந்தோசம் சொல்லி முடியாது.

உடனே இவன் ஊருக்கு மட்டுமில்ல, சுத்திப்பட்டு கிராமத்துக்கே விருந்து வச்சி மகளுக்கும் பூபதிக்கும் கல்யாணம் முடிச்சிவச்சான். காளிக்கு தாலி கட்டும்போது கூட பூபதி மாமியாளப் பாத்துக்கிட்டுதான் தாலி கட்டினான். தாலி கட்டி முடிஞ்சதுதான், பொண்டாட்டிய ஏறிட்டுக் கூடப் பாக்கல; மாமியார் கூடத்தான் பேசிட்டு இருக்கான். இவனுக்கு ஏத்த மாதிரி சொடலை ராத்திரிக்கும் காட்டுக்குப் போக இவன் பாடு ரொம்ப 'வேளா வேட்டமா' போயிருச்சி.

ஒருநாள் இவன் பூமாலை கூட பேசிட்டு இருந்தபோது காட்டுக்குப் போன சொடலை தீப்பெட்டி எடுக்கிறதுக்காக திரும்பி வந்தவன் மாமியாளும் மருமகனும் ஒன்னுமன்னா இருந்ததைப் பாத்துட்டான். அவ்வளவுதான், அவனுக்கு ஒரே அதிர்ச்சியாயிருச்சி. அப்படியே தீப்பெட்டிய கூட எடுக்காம பிஞ்சைக்குப் போயிட்டான். புருசன் பாத்தத பூமாலையும் பாத்துட்டா. உடனே அவ அழுவுதா. நானு பாதகத்தி! இந்த மாதிரி ஒரு துரோகம் செஞ்சிட்டேனேன்னு கத்துதா, கதறுதா. தலையிலயும் நெஞ்சுலயும் அடிச்சிட்டு அழுவுதா.

உடனே பூப்தி, அத்த... தப்பு எல்லாம் என் மேலதான். நானு போயி மாமாவ சமாதானப்படுத்தி கூட்டியாந்து உங்ககிட்ட விட்டுட்டு நானு எம் பொண்டாட்டிய கூட்டிட்டு போயிருதேன்னு சொல்லிட்டு விறு விறுன்னு காட்டுக்கு வந்தான். வந்ததே சரின்னு அங்கன இருந்த கடப்பாறை கம்பிய எடுத்து ஒரே குத்தா மாமன குத்திக் கொன்னுபோட்டான்.

பிறகு வீட்டுல வந்து, அத்த... மாமா கிட்டப்போனேன்; அதுக்குள்ள அவரு கடப்பாறய எடுத்து தன்னோட வவுத்துல குத்தி செத்துப் போயிட்டாரு; நானும் காப்பாத்த எவ்வளவு முயற்சி பண்ணுனேன்; ஆனா தம்பி என்ன காப்பாத்த ஆசப்படாதீங்கன்னு சொல்லி முடிக்க முன்னயே செத்துப் போயிட்டாருன்னு சொல்லி கள்ள அழுகை அழுதான்.

பூமாலை அப்படியே இடிஞ்சிபோனா. அவளை பொன்னும் கண்ணுமா வைச்சிருந்த புருசனை நினைச்சி நினைச்சி அவ அனல் இல்லாத நெருப்பா வெந்துக்கிட்டு இருந்தா. ஆனா பூபதியோட தொந்தரவு தாங்க முடியல. அவன் கட்டுன பொண்டாட்டி பக்கம்கூட போகல. இப்ப சொடலை வேற செத்துப் போனதினால காளிதான் காடு

கரைகளுக்குப் போயி விவசாயத்த பாக்கவேண்டிய வேல வேற வந்துருச்சு.

இப்படிதான் இன்னொரு நாள் இவங்க பேசிப்பழகிக்கிட்டு இருந்தபோது சொடலைக்கு சொந்தக்காரி பொசுக்கின்னு உள்ள வந்துட்டவ, இந்தக் கண்காட்சியப் பாத்துட்டு, அடி பாதகத்தி! இதுக்குத்தேன் புருசன கொன்னு போட்டியான்னு சொல்லிட்டு வெளிய ஓடுனா.

பூமாலை அப்படியே துடிச்சி கத்தி கதறுனா.

அய்யய்யோ அத்த... அழுவவே அழாதீங்க. நானு போயி அவங்களசமாதானப்படுத்திட்டு வந்த மாயத்தில எம் பொண்டாட்டிய கூட்டிட்டுப் போயிருதேன். இனிமே இங்கே இருக்கவே மாட்டேன்னு இருட்டுக்குள்ள ஓடுனவன் சொடலையோட சொந்தக்காரிய கிணத்துல புடிச்சி தள்ளிட்டு வீட்டுக்கு வந்துட்டான்.

அத்த, நானு அந்த அம்மிய கூப்பிட்டுக்கிட்டு பின்னாலயே ஓடுதேன். அவுக போனதே சரின்னு கிணத்துக்குள்ள விழுந்துட்டாக; என்னத்த செய்யட்டுமின்னு வந்ததும் சொன்னான். இதை பூமாலையால நம்ப முடியல. இருந்தாலும் நம்மளால என்ன செய்ய முடியும்? புருசன் காலடியிலேயே இருந்து பழகிட்டோம். ஒரு தெக்க வடக்க தெரிய மாண்டேங்கு.இவன நாலு பேருகிட்ட சொல்லி அசிங்கப்படுத்தி ஊருல இருக்கவிடாம முடுக்கலாமின்னா மக வாழ்க்கை பாழாப் போயிரும். அதோட ஊருக்குள்ள இருக்க மற்ற ஆம்பளைங்க வேற 'பீச்சி வச்ச பாலுக்கு பூன சுத்தன மாதிரி சுத்திட்டு வராங்க' அதனால எப்படியாவது மருமகன் கால்ல விழுந்து மக்கூட சேத்து வைக்கணும். காத்தடிச்சி தாழ பூத்த மாதிரி மக வவுத்துல ஒரு புள்ள பொறந்துட்டா இவன் குணமும் அந்த பச்ச மொகத்தப் பாத்து மாறிருமின்னு நினைச்சா.

அதனால மருமகன்கிட்ட கெஞ்சிக் கெதறி கூத்தாடி மகளப் பத்தி எவ்வளவோ எடுத்துச் சொன்னாள். ஆனா அவன் அதை காதுலயே வாங்கல. உன்ன நினைச்சிதான் அவ கழுத்தில தாலி கட்டுனேன்னு சொன்னவன் பொண்டாட்டிய கூட்டிட்டு ஊரை விட்டும் போகல. மகளும் விடிஞ்சி எந்தரிச்சதும் காட்டுக்குப் போயிர இவன் பாடு ரொம்ப கொண்டாட்டமா போயிருச்சு. பூமாலை இப்ப ரொம்ப மெலிஞ்சி போயிட்டா. ரெண்டு மூணு கருவ வேற கழிச்சதுல உடம்பும் இத்துப் போச்சு.

ஆனா மருமகன் மட்டும் மாறவே இல்ல. ஒரு நாளு பூமாலை அவன்கிட்ட நீங்க என்னை தொந்தரவு பண்ணிக்கிட்டு எம் மவகிட்ட பாராமுகமா இருந்திகன்னா நான் கவுத்துல தொங்கி என் உசுர மாய்ச்சிக்கிடுவேன்னு சொன்னா.

நல்லவேள! அப்படி செய்ங்க. நானு விட்டது சனியன்னு உங்க

மவளயும் கொன்னுட்டு ஒரு அழகான பொண்டாட்டிய கட்டிக்கிட்டு உங்க சொத்து சொகத்த மொத்தம் ஆண்டு அனுபவிச்சிட்டு இருப் பேன்னு பூபதி சொன்னதும் பூமாலை அப்படியே ஆடி அரண்டு போனா.

இவன் செஞ்சாலும் செய்வான் கொலகாரப்பாவி. இதுக்குத்தானா நானு இம்புட்டு பாடுபட்டு எம் புருசனயும் கொன்னு, என்னையும் உருக்கொலச்சிக்கிட்டு கிடக்கேன்னு நினைச்சி ஒரு முடிவுக்கு வந்தாள். இனி மகள விட்டு ஒரு சணம் கூடப் பிரியக்கூடாதுன்னு நினைச்சவ அதே மாதிரி 'உங்கிறது ஒரு வட்டுல, உறங்கிறது ஒரு கட்டுலுன்னு' மக கூடவே எந்நேரமும் இருந்தா. பூபதிக்கு வந்த கோபம் இப்படி அப்படி இல்ல.

ஒருநாள் மாமியாகிட்ட, நீ இந்த மாதிரி என் பொண்டாட்டி கூடப் போயி இருந்தேன்னா அங்கேயே உன்ன அசிங்கப்படுத்திருவேன்னு சொல்ல அவ பதறிப்போனா.

அய்யா நீங்க அப்படியெல்லாம் செய்யாதீக. இம்புட்டு நாளும் என் மகளோட வாழ்க்கைக்காக நானு எப்படியெல்லாம் செஞ்சேன்னு எல்லாத்தையும் ஒன்னொன்னா வெலாவாரியா சொல்லிக்கிட்டு வாரா.

அப்ப நேரம் பார்த்து உறக்கத்தில் பெரண்டு படுத்த காளி தன் கூடப் படுத்திருந்த ஆத்தாள காணாமேன்னு எந்திரிச்சிப் பாத்தா. அவளுக்கு ஏற்கெனவே புருசன் மேல கொஞ்சம் சந்தேகம் இருந்தது. ஆனா நம்ம ஆத்தா அப்படிப்பட்டவ இல்லன்னு பரிபூரணமா நெனச் சிருந்தா. இன்னைக்கு கூடப் படுத்திருந்தவள காணமேன்னு எழுந்திரிச்சி பெத்தவள தேடிக்கிட்டே வந்தவ இவுக ரெண்டு பேரும் பேசிக்கிட்டு இருந்த எடத்துக்கு வந்துட்டா. ஆத்தா மகளோட கல்யாணத்துக்கு முன் னால நடந்ததையும், இப்ப நடக்கிற அக்கிரமத்தையெல்லாம் சொல்லிச் சொல்லி அழுவுறதையும், புருசன் அவளப் படுத்துற பாட்டையும் எல்லாத்தையும் கண்கொண்டு பாத்துட்டா. காதுகொடுத்து கேட்டுட்டா. நம்ம தங்கமான அப்பச்சி செத்ததுக்கும் அவன்தேன் காரணமின்னும் தெரிஞ்சிக்கிட்டா. அதுக்குமேல அவளால பொறுக்க முடியல.

அடேய்... கொலகாரப்பாவி...ன்னு ஒரு அவயம் போட்டாள். பேசிட்டு இருந்த பூமாலையும் பூபதியும் திடுக்கிட்டுப் பாத்தாக. காளி நிசம்மான காளி மாதிரியே தீப்பந்தம் புயல் காத்துல எரியுற மாதிரி ஓடிவந்தா. ஒரு பாக்கு கடிக்க நேரம்தான்; நகத்தாலயே பூபதியோட வவுத்தக் கிழிச்சி குடல உருவிட்டா. பூபதி அலறுன அலறல்ல ஊரே வந்து அங்க கூடிருச்சி. எல்லாருக்கும் முன்னால காளி அவன் குடல தன் கழுத்தில மாலையா போட்டுக்கிட்டு கீழே உயிருக்குதுடிச்சிட்டு இருந்த புருசன் நெஞ்சில ஏறி மிதிச்சிக்கிட்டு நடந்த விவரத்தயெல்லாம் ஊருக் காரககிட்ட சொன்னா. அவுக கேட்டுட்டு திகிலடிச்சிப்போயி அப்படியே நின்னாக. இவ கழுத்தில கிடந்த குடல் மாலையோட வீட்டுக்குள்ள

போயி பெரிய வாளை எடுத்துட்டு வந்தா. அத எல்லாருக்கும் முன்னால தரையில நட்டு வச்சி அப்படியே பாஞ்சிட்டா. அதப் பாத்ததுமே பூமாலை உயிரு எப்பவோ போயிருச்சி.

கானாங்குளம் கம்மாயின் தென்கரையில்தான் இந்தக் காளிக்கு பீடம் இருக்கிறது. ஆனால் யாரும் அங்கே பலி கொடுத்து பூசை செய்ததை நான் பார்த்ததில்லை. அந்தக் கிளையே வாரிசு இல்லாமல் போய்விட்டதாம்.

ஸ்ரீ

மூத்த மாமாவுக்கு ஒரு மச்சினர் பட்டாளத்தில் இருந்தார். அழகாக இருப்பார். நாங்கள் இப்போது எங்கள் படுக்கையை அவர் வீட்டுக்குத் தான் மாற்றியிருந்தோம். அடிக்கடி எங்களின் படுக்கை மாறும். அந்த சித்தப்பா எங்களுக்கு நிறைய கதை சொல்லுவார். அவர் நண்பர்கள் வேறு நிறைய வந்துவிடுவார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு எந்தப் பெண்ணைக் கட்டலாம், யார் நிறைய வேலை செய்வார் கள். யார் அழகாக இருப்பார்கள் என்று பேசுவார்கள். நன்றாக வேலை செய்யும் பெண்களுக்குத்தான் அப்போது நிறைய கிராக்கி.

எங்களிடமும் அவ்வப்போது யோசனை கேட்பார்கள். உடனே எங்களுக்கு தலையில் கிரீடம் வைத்த மாதிரி ஆகிவிடும். ஆள் ஆளுக்கு ஒரு அக்காவைப் புகழ்ந்து தள்ளுவோம். செண்பகம் அக்கா நாங்கள் சித்தப்பா வீட்டிற்கு படுக்கப் போகும்போதெல்லாம் எங்களை கூப் பிட்டு வைத்து அந்த சித்தப்பாவைப் பற்றியே பேசுவாள். பிறகு கடலை உருண்டை, கேப்பை ரொட்டி எல்லாம் எங்களிடம் கொடுத்து நீங்களும் தின்னுங்க, உங்க சித்தப்பாவுக்கும் கொடுங்க; கொடுக்கும்போது மறக்காமல் நான் கொடுத்ததா சொல்லுங்க என்பாள்.

என்னக்கா சித்தப்பாவப் பத்தியே பேசுறே; அவருக்கு பண்டம் பலாரமெல்லாம் கொடுத்து விடறே; அவரத்தேன் நீ கட்டிக்கப்போறயா? என்று கேட்டோம்.

உடனே அக்கா, நானு கொடுக்கிற பண்டத்தயெல்லாம் அவரு வாங்கித் திங்கறாருல்ல என்று கேட்க நாங்கள் ஆமாம் என்று தலையை ஆட்டினோம். அந்த அக்காவும், அப்ப நீங்க எங்கிட்ட கேட்டத அவரு கிட்ட கேளுங்க; கேட்டு வந்து எங்கிட்ட சொல்லுங்க என்றாள்.

எங்களுக்கு இதைக் கேட்டதும் பெரிய சந்தோசம். அப்பவே வேகமாய் வந்து சித்தப்பாவிடம் இதைப் பற்றி கேட்டோம். சித்தப் பாவும் யாரு எஞ் சொன்னபடி கேக்காகளோ அவளத்தேன் முடிப்பேன் என்றார்.

மறுநாள் காலை நாங்கள் வெள்ளனத்தில் எழுந்து போகும்போது

அந்த அக்கா எங்களுக்காவே காத்திருந்தாள். எங்களைப் பார்த்ததும், என்னத்தா அவருகிட்ட கேட்டீகளா என்றாள். நாங்களும் ரொம்ப பெருமையோடு அவர் சொன்னதைச் சொன்னோம். அக்காவும், இன்னைக்குப் படுக்கைக்குப் போவீகள்ல, அப்ப அவரு சொன்னபடி நான் கேப்பனாமின்னு சொல்லுங்க என்றாள்.

சித்தப்பாவும் அவ அப்படியா சொன்னா என்று ஆச்சரியமாக கேக்க நாங்களும் ஆமா எங்க கண்ணான சத்தியம் என்றோம். உடனே அவர், இன்னைக்கு நல்ல நிலாதேன்; ராவு எட்டுமணிக்கு மேல நானு அங்கிட்டு இருக்க புதுக்கிணத்துப் பிஞ்சையில நிக்கேன்; அவள அங்க வரச்சொல்லுங்க என்றார்.

இந்தப் பிஞ்சை எங்கள் ஊரிலிருந்து ஒரு பர்லாங் தொலைவில் உள்ளது. நெடுக தோப்புகளும் வெள்ளாமைகளும் நிறைந்திருக்கும். நாங்கள் உடனே போய் அக்காவிடம் சொல்லிவிட்டு கதை பேசியவாறு படுத்துத் தூங்கிவிட்டோம்.

மறுநாள் அந்த அக்கா எங்களைக் கண்டதும் முகத்தை வெடுக் கென்று திருப்பிக்கொண்டு போனாள். எங்களுக்கு எப்படியோ இருந்தது. என்னடா இது, எங்கள கண்ணுல கண்டுட்டாப்போதும், சித்தப்பாவைப் பற்றியே பேசுகிறவள் இப்படி சண்டக்காரிபோல் போகிறாளே என்று நினைத்தவாறே அக்காவை கூப்பிட்டுக்கொண்டே ஓடினோம்.

அக்கா அவசரமாக வீட்டிற்குள் நுழைந்ததோடு, இந்தா எவன் பேச்சையும் பேசிக்கிட்டு எங்க வீட்டுக்கு வராதீக; அப்படி வந்தீக கொன்னே போடுவேன்; போங்க போயி யாரு பேச்சையும்கேளாம உங்க வேலயப் பாருங்க என்று சொல்லிவிட்டு கோபமாகப் போய்விட்டாள்.

எங்களுக்கு எதுவும் புரியவில்லை. நேற்று வரையிலும் ஆசையாக கூப்பிட்டு வைத்துப் பேசியவளுக்கு இன்று என்ன வந்துவிட்டது என்று திகைத்துத் திண்டாடி சித்தப்பாவிடமே போய் விவரம் கேட்டோம்.

அவரும் எரிச்சலோடு, அவளும் ஒரு பொம்பளயா? ஒரு ஆம்பள ராத்திரி நேரத்தில காட்டுக்கு வரச்சொன்னா அவன தாறுமாறா வஞ்சாவில்ல பொம்பளைக்கு லச்சணம்; ஒரு ஈ காக்கா இல்லாத அத்தராத்திரி நேரத்தில நான் சொன்னேன்னு பிஞ்சைக்கு வந்துட்டாளே! ஏதாச்சிலும் ஒரு அதங்கொதமான வேல நடந்துட்டா என்ன செய்வா? அவ மூஞ்சியிலேயே இனி முழிக்க மாண்டேன் என்றார்.

எங்களுக்கு எதுவும் புரியவில்லை. இவர்தான் பிஞ்சைக்கு வரச் சொன்னார். பிறகு இவரே இப்படி கோபப்படுகிறார். அவர் எப்படியும் போகட்டும். ஆனால் செண்பகம் அக்கா எங்களிடம் பேசாததில் எங்கள் எல்லோருக்குமே கஷ்டமாக இருந்தது. இந்த சித்தப்பா மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு மாதம் இரண்டு மாதம்தான் இருப்பார். பிறகு பட்டாளத் துக்குப் போய்விடுவார். அக்கா அப்படியில்லை. அவர் இந்த ஊரிலேயே

இருப்பாள். அதுவுமில்லாமல் அவர்கள் வீட்டில் ஒரு பன்னாங்குழி இருந்தது. அதனால் நாங்கள் அவர்கள் வீட்டில்தான் எந்நேரமும் விளையாடிக் கொண்டிருப்போம். எங்களுக்கு தலை வாரிவிடுவாள். கதை சொல்வாள். அவள் அம்மாவும் அவளையோ இவரையோ, எங்களையோ கண்டுகொள்ளமாட்டார்கள். அதனால் அந்த அக்காவிடம் எங்களால் பேசாமல் இருக்க முடியவில்லை.

அன்று பொழுதடைய எல்லோரும் அந்த அக்கா வீட்டிற்குப் போனோம். அக்கா உள்ளே சமையல் செய்து கொண்டிருக்க நாங்கள் பயந்தவாறு வெளியவே நின்றோம். பிறகு கொஞ்ச நேரம் கழித்து அந்த அக்காவே எங்களிடம், இனிமே இருக்கவன் பேச்சையெல்லாம் பேசாம நீங்க பாட்டுக்கு எப்பவும்போல வந்துக்கிட்டு இருங்க என்றாள்.

எங்கள் சேத்திக்காரிகள் யாரும் அலங்காரம் பண்ணவோ நல்ல ஆடைகள் உடுத்தவோ ஆசைப்படமாட்டோம். அதற்கு வசதியுமில்லை. அதை நினைக்க நேரமுமில்லை. வருசத்திற்கு இரண்டு மூன்று பாவாடை, சட்டைதான் எடுத்துக் கொடுப்பார்கள். அது அங்கங்கே கிழிந்தும் நைந்தும் போய்க் கிடக்கும். வீட்டு வேலை, காட்டு வேலை போதாதென்று இந்த துணி தைக்கும் வேலை வேறு இருக்கும். எப்போது பார்த்தாலும் அரைக்கண் பார்வையுள்ள பாட்டிகள் கண்பார்வை இழந்த இன்னொரு பாட்டியை துணியைப் பிடிக்கச் சொல்லி தடவியவாறு தைத்துக்கொண்டிருப்பார்கள்.

என் அம்மாவிற்கு அவள் அம்மாவோடு பிறந்த பெரியாத்தா இருந்தாள். அவள் பெயரும் ராக்கம்மா. அவள்தான் பாட்டி என்ற உறவில் எங்களுக்கு சிறு சிறு உதவிகள் செய்வாள். நாங்கள் இப்படி கிழிந்ததும் தைத்ததுமாய் உடுத்தியிருக்க என் சேத்திக்காரிகளில் செங்கா என்பவள் மட்டும் ரொம்ப அழகாக நாகரீகமாக இருக்க வேண்டுமென்று நினைப்பாள். அதற்காக எப்போதும் அழுது அழுது தன் தேவைகளை சாதிப்பாள். அதனால் சின்ன சோப்பு, ரிப்பன், மரச்சீப்பு அல்லாத நல்ல சீப்பு எல்லாம் வைத்திருந்தாள். குளிக்க வரும்போது சோப்பைக் கொண்டு வருவாள். நாங்கள் ஆசையோடு வாங்கி மூக்கில் வைத்து பார்ப்போம்.

எப்படித்தேன் மணக்கு! எங்களுக்கு இம்புட்டு குடேன். நாங்களும் தேச்சி குளிச்சிக்கிடுதோம் என்று கேட்டால் கொடுக்கமாட்டாள். இந்த செங்கா கருப்பாக இருப்பாள். அதோடு சோப்பைத் தேய்த்துவிட்டு இப்ப நானு செவப்பா இருக்கனா? என்று எங்களிடம் கேட்பாள். எங்களுக்கும் அவள் முந்திக்கு இப்போது சிகப்பாக இருப்பதுபோல்தான் தோன்றும். உடனே நாங்கள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு, ஆமா இப்ப நீ

செவப்பாத்தேன் இருக்கே என்று சொல்லுவோம். அவளுக்கு நிறைய கற்பனைகள் வேறு. அவளுடைய அத்தை, மாமா பிள்ளைகள் எல்லாம் பெரிய பத்து, சின்னப்பத்து காலேஜ் என்று படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர்தான் தனக்கு மாப்பிள்ளையாக வருவார் என்று நினைப்பு அவளுக்கு. இப்படிப் பலவிதத்திலும் அவள் கனவு கண்டு கொண்டிருந்தபோது அவள் அப்பச்சி திடுதிப்பென்று பெருமாள் தேவன் பட்டிக்குப் போய் ஆடு மேய்க்கிற மாப்பிள்ளையைப் பார்த்து பேசி முடித்து கல்யாணத்திற்கு நாளும் குறித்துவிட்டு வந்துவிட்டார். அவர் பேசிய மாப்பிள்ளைக்கு காடு கரை காரைவீடு என்று நிறைய இருந்தது. செங்காவின் உறவினர்களுக்கெல்லாம் ரொம்ப வருத்தம்.

எதுக்காவ கூத்தாடி ஆட்டுத்தலைக்குப் பறந்தாப்பல போயி இப்படி பேசிட்டு வந்தே? உம் மவ என்ன ஆளாயி அஞ்சாறு வருசமா ஆச்சு? பாவம், நேத்துப் புள்ள. குடிச்ச பாலு குவட்டுக்குள்ள இருக்கு. அதுவுமில்லாம உம் மவளுக்கு கோடி அயித்த மக்க, அம்மான் மக்கன்னு பெரிய பெரிய படிப்பாளிக ராமரு ரச்சுமணரு கணக்கா இருக்காக. அவுக படிப்பு முடிஞ்சதுமே சர்க்காரு வேல இந்தா இந்தான்னு அவுகளத் தேடி ஓடியாந்துரும். நீ இப்படி அந்தப் பச்ச மண்ண பாழாக்கிப்போட்டயே என்று சண்டைக்குப் போய்விட்டார்கள்.

ஏன் நானு பாத்த மாப்பிள்ளைக்கு என்ன கொறச்சிலு. ஊரச் சுத்துன காடும்கரையும் கல்லுக்காரம் கணக்கா காரவீடும்!... இவளுக்கு என்ன குற? குலுக்க நெறயா கெடக்க வரவு, குருதாலிய எடுத்து குத்திக் காய்ச்சிக் கிட்டு பொன்னம்போல வீட்டுக்குள்ள இருக்கப் போறா. இங்க படிக்கான், படிச்சி கிழிக்கான்னு சொல்லுத மாப்பிள்ளைகளுக்கு என்ன இருக்கு? கையவலம் குடிச வீடு நாலாங்கூட்டான் பங்குல. ஒரு கச்சன துணி வீதம் ஒரு பிஞ்ச இருக்கு. சர்க்காரு வேல கெடச்சாலும் முப்பது நாளைக்கு ஓடி ஓடி வேல செஞ்சா பத்துக்கொருவா சம்பளம் கொடுப்பான். அதுவும் எப்ப கொடுப்பான்னு அவன் மூஞ்சிய தொண்ணாந்து பாத்துக்கிட்டு இருக்கணும். அந்த பத்துக்கொருவாய வச்சி வீடு கட்டுவாளா? காடு வாங்குவாளா? நாளைக்கு புள்ள குட்டின்னு பொறந்தா அத வளத்து ஆளாக்குவாளா? காடுகர இருக்கவன் அந்தஸ்சென்ன, மதிப்பென்ன? இவனுக்கு ஈடாவானா கைநீட்டி மாசச் சம்பளம் வாங்குறவன்? ஆள் ஆளுக்கு வந்து பெரிய கெட்டிக்காரன் கணக்கா பேசிட்டா போதாது; அம்புட்டயும் யோசிச்சிப் பாக்கணும் என்று அந்த அப்பச்சி முகம் கடுக்கப் பேசி அனுப்பிவிட்டார்.

ஆகக்கூடி செங்காவின் கல்யாணம் நடந்தே விட்டது. கல்யாணம் முடிந்து ஒரு வாரம்கூட அவள் புருசன் வீட்டில் இருக்கவும் இல்லை; அவனுக்கு சோறாக்கிப் போடவுமில்லை. தினமும் மீனாட்சிபுரம் வந்துவிடுவாள். வந்ததும் வராததுமாய் புருசனை, மாமியாரை,

நாத்தனாரை குறைசொல்லி ஒரே அழுகைதான். இவள் வந்து ஒரு நாழிகை ஆவும் முன்னால் அவள் புருசன் ஆடு மேய்ப்பதற்கு கூலி ஆளை விட்டுவிட்டு இவளைத் தேடி வந்து விடுவான். அவனைக் கண்டாலே செங்காவிற்கு ஆகாது. வசவான வசவு வைவாள். அவள் அப்பச்சி மருமகனிடம், நீ ஊருக்குப் போ; நானு கூட்டியாந்து விடுதேன் என்று அவனை அனுப்பிவைப்பார். வெள்ளனத்தில் இவளைக் கூட்டிப்போய் புருஷன் வீட்டில் விட்டால் திரும்பி வந்து விடுவாள் என்று பொழுதடைய கூட்டிப்போவார். இரண்டு ஊருக்கும் மூணுமைல் தூரம் காட்டுப் பாதைதான் போகவேண்டும். அதுவும் முரப்பான் மேட்டை கழிக்க வேண்டும். அங்குதான் முனிகள் ஆதாளி போட்டுக்கொண்டு பேய்களோடு குடி இருக்கின்றன. பெண்கள் என்றால் அதுவும் குமரிப் பெண்கள் என்றால் அதுகளுக்கு ரொம்பப் பிடிக்குமாம். அவர்கள் மீது உடன்கொண்டு அவர்களை புருசனுடன் வாழவிடாமல் அவளின் ரத்தத்தை தானே உறிஞ்சி இரண்டு, மூன்று வருசத்தில் கொன்று போடுமாம். கொஞ்சம் வயதான ஆண்களைத் தவிர யாரும் தனியாக அந்த வழி போக மாட்டார்கள்.

செங்கா அவள் அப்பச்சியின் கோபத்திற்குப் பயந்துகொண்டு போவாள். போகும்போது அரிசி, பருப்பு, எண்ணை, அன்று இரவு சாப்பாட்டிற்கு சோறு, குழம்பு என்று கடாப்பொட்டியில் போட்டுக்கொண்டு போவாள். உச்சி முரப்பான் மேட்டில்தான் எல்லோருக்கும் பயம். அதைக் கழித்து விட்டால் யாருக்கும் பயமில்லை. அங்கங்கே ஆடு மாடு மேய்த்துக் கொண்டும், காடுகளில் வேலை செய்துகொண்டும் ஆட்கள் நிறைய இருப்பார்கள். அவசர வேலை இருந்தால் செங்காவின் அப்பச்சி, ஏத்தா... இம்புட்டு தொலவு வந்துட்டோம்; இன்னிநீ ஊந்தாப்பல வீட்டுக்குப் போயிரு. எனக்கு கொஞ்சம் அக்குசான சோலி இருக்கு என்று சொல்லும்போது அவள் மண்டையை மண்டையை ஆட்டுவாள்.

பிறகு அவள் அப்பச்சி தலை மறைவதுதான் தாமதம், இவள் புருசன் வீட்டுக்குப் போகாமல் பிறந்த வீட்டுக்கே திரும்பிவிடுவாள். என்ன இப்படி திரும்பிட்டே என்று கேட்டால் நான் பொட்டிய அங்கன வச்சிட்டு ஒதுங்கப் போனேன். கடாப்பொட்டிக்குள்ள ஒரு மூஞ்சி தெரிஞ்சிச்சி. அம்புட்டுத்தேன் எனக்கு மேலகூடி புல்லரிச்சி போயி உடம்பு எல்லாம் கணகணன்னு நெருப்புல பெராட்டானப்புல இருந்துச்சி. கடாப்பொட்டிக்குள்ள போயி பாக்கேன். சீசா நிறய ஊத்தியிருந்த எண்ணயக் காணோம் என்று சொல்வாள். அது மட்டுமில்லாமல் யாரைப் பார்த்தாலும் யாரு நீ? என்ன முடுக்கிரலாமின்னு பாக்கயா? இந்தக் கன்னிதேன் எனக்குப் புடிச்ச கன்னி. இவள கொண்டு போவாம விட மாண்டேன் என்று பெனாத்திக்கொண்டு பேயாட ஆரம்பித்து விடுவாள்.

இதைச் சொல்லியே பத்து நாள் ஓட்டிவிடுவாள். அவள் புருசன்

இவளைப் பார்க்க வந்தால், அடேய்... இவ எனக்குரிய கன்னிடா. அவள மட்டும் நீ தொட்டுப்பாரு. உன் நெஞ்சாங்கறிய வவுந்து காமிக்கிறேன் என்று எழுந்து ஆவேசமாக தலையை அவிழ்த்துப் போட்டுக்கொண்டு தங்குதங்கென்று குதிப்பாள்.

அய்யா உம் பொண்டாட்டி மேல எங்கன கெடந்த கழுதயோ எசவு பெசவா வந்து அப்பிக்கிடுச்சி; அத விரட்டந்தண்டியும் நீதேன் கொஞ்சம் பொறுத்துப்போவணும் என்று பெரியவர்கள் சொல்ல பாவம் அவர், இரண்டு ஊருக்கும் மாறி மாறி நடந்துகொண்டிருப்பார்.

ஒரு நாள் நான், என் தம்பி, கணேசன், வசந்தா, விசயா எல்லோரும் புரட்டாசி சனிக்கிழமை எங்கள் ஊரிலிருந்து மூன்று மைலில் இருக்கும் பெருமாள் கோயிலுக்குப் போனோம். சாயங்காலம். கோயிலுக்குள் நுழைந்து சாமியைத்தான் கும்பிட்டிருப்போம்; மழை பிடித்துவிட்டது. மழை என்றால் வானத்துக்கும் பூமிக்கும் பாவு போட்டதுபோல் அப்படிப் பெய்கிறது. எங்கள் ஊர் பெரிய ஆட்கள் யாருமில்லை. நாங்கள் மட்டும்தான் இருந்தோம். இருட்டி ரொம்ப நேரம் ஆன பிறகுதான் மழைவிட்டது. ஓடையும் தாவும் கரையுமா, பாதையும் மேடும் பள்ளமுமாக கிடக்கிறது. மழைத்தண்ணீர் எங்கு பார்த்தாலும் சோளச் சோறு கொதித்த மாதிரி சத்தமிட்டு ஓடிக்கொண்டிருந்தது.

நாங்கள் பாவாடையைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு காலால் தடவித்தடவிப் பார்த்து எட்டு வைத்து பய்ய பய்ய நடந்தோம். இருட்டு கரும்புகையாகக் கிடந்தது. ஓடைக்குள் இறங்கித்தான் எங்கள் ஊருக்குப் போக வேண்டும். ஓடைக்குள் தண்ணீர் இடுப்புக்கும் மேலே குதி போட்டுக்கொண்டு ஓடியது.

தண்ணியைப் பார்த்துப் பயந்து ஓடைக்குள் இறங்குவோமா வேண்டாமா என்று நாங்கள் யோசித்துக்கொண்டிருந்தபோது வசந்தா அய்யய்யோ அய்யய்யோ... நான் இனிமே இங்கன இருக்க மாண்டேன். அந்தா புழுவாயி அத்த உக்காந்திருக்காளே என்று கண்ணை மூடிக் கொண்டு ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டினாள். திடுக்கிட்டுப் போனோம். நெஞ்சுக்குழி வெளியே தெறித்துவிடும்போல் ஒரு பயம். வசந்தா காட்டிய இடத்தில் உற்றுப்பார்த்தோம். ஒரு ஆள் பரட்டைத் தலையோடு உட்கார்ந்திருப்பதுபோல தெரிந்தது. அவ்வளவுதான், எங்களுக்கு நடுக்கம் எடுத்துவிட்டது.

ஏழெட்டு வருசத்துக்கு முன்தான் புழுவாயி என்ற சின்னம்மாவை அங்கே வெட்டிப்போட்டிருந்தார்கள். எங்கள் ஊரே போய் வேடிக்கை பார்த்தது. அந்த சின்னம்மாவிற்கு பக்கத்து ஊர்தான். தாயும் தகப்பனும்

இல்லாததால் அந்த புழுவாயி தனது அக்காவோடு இருந்தாள். இவள் பொம்பளை நிமிர்வும் நேர்த்தியுமா பார்க்க ரொம்ப அம்சமாக இருப்பாள்.

ஆடி மாதம் கடைசி சனிக்கிழமை பெருமாள் கோயிலுக்கு எல்லோரும் பொட்டி அரிசி கொண்டுபோவார்கள். பொட்டி அரிசி என்றால் பச்சை அரிசியை அளந்து போடாமல் வேணும்ங்கிற அளவுக்கு கூட்டுக்கையாக அள்ளி அள்ளிச் சருவச்சட்டியில் போட்டு பாலை ஊற்றி நனைய வைப்பார்கள். பிறகு தேங்காயைத் திருகி பாலை வடிகட்டி எடுத்த அரிசியில் போட்டு, வட்டுக்கருப்பட்டியையும் அந்த அரிசியில் தட்டிப்போடுவார்கள். பிறகு அப்படியே சாமிக்கு கொண்டுபோய் படைத்துவிட்டு வேண்டியவர்களுக்கு கொஞ்சம் கொடுத்து தானும் தின்பார்கள். இந்த புழுவாயி காட்டிலிருந்து நேரங்கழித்து வீட்டுக்கு வந்ததால் ஊருக்குள் எல்லோரும் பொட்டி அரிசி கொண்டுபோய் விட்டார்கள்.

இவளும் அவசரமாய் குளித்து முழுகி நல்ல சேலை கட்டிக் கொண்டு தனியாக கோயிலுக்கு பொட்டி அரிசியோடு புறப்பட்டு விட்டாள்.

ரத்த விளாரோடு புழுவாயி அக்கா புருஷன் வருவதைப் பார்த்த ஊர்க்காரர்கள் பதட்டத்துடன் என்ன இப்படி ரத்தக்காடா வாரே என்று கேட்டதும் இவன் அழுதிருக்கிறான். அழுதுவிட்டு சொன்னான்.

புழுவாயி பொட்டி அரிசி கொண்டுட்டு போகையில என்னய துணைக்கு கூப்பிட்டா. கோடி ஆளுக அந்த வழி நடமாடிக்கிட்டு இருக்கையில உனக்கெதுக்குதுணைக்கின்னு நானு மாண்டேன்னு சொன்னேன். வாரீரா என்னன்னு வம்படியா கூட்டிட்டுப் போயி ஓடைக்குள்ள வச்சிக்கிட்டு அதங்கொதமா வேல செய்யப் புறப்பட்டா. நானும் வேண்டாமத்தா, அக்கா புருசன் உனக்கு பெத்த தகப்பன் கணக்கான்னு எம்புட்டோ சொல்லிப்பாத்தேன்! அவ நீரு இப்ப என்கூட பேசிப்பழகி இருக்காட்டி நான் எங்கழுத்த அரிவாளால வெட்டிக்கிட்டு சாவப் போறேன்னு பாதகத்தி பொட்டிக்குள்ள ஒளிச்சி வச்சிருந்த அரிவாள எடுத்து சதக்கு சதக்குன்னு வெட்டிக்கிட்டா. நானு போயி எம்புட்டோ தடுத்தேன். அந்தமான எனக்கு ஆவாதவன் எங்கக்காவுக்கும் வேண்டா மின்னு என்னையும் வெட்டிட்டா. அந்த ரக்குல இருந்தா... கொழுந் தியாள காப்பத்தணுமே ஓடியாந்தேன். எல்லாரும் வாங்க அவள பொழைக்க வப்போம் என்று ஆட்களை கூட்டி வந்திருக்கிறான்.

ஓடைக்குள் புழுவாயி ரத்த வெள்ளத்தில் குத்துயிரும் குலை உயிருமா கிடந்திருக்கிறாள். உசுரு தொண்டைக்கும் நாசிக்குமாக இழுத்துக்கிட்டு இருக்கு. அவளோட பெரியப்பா, எதுக்கு தாயீ இப்படி செஞ்சே? அக்கா புருசன் மேல எனக்குப் பிரியமின்னு ஒத்த வாத்த

சொன்னா நாங்க அவனுக்கே உன்ன கட்டி வச்சிருவமில்ல என்று சொல்ல புழுவாயி வாயை வாயைத் திறந்திருக்கிறாள். ஆனால் பேச முடிய வில்லை.

இதுதான் சாக்கு என்று அவர் மச்சானும், கேளும்மான் நல்லா கேளும். இவள பெத்த புள்ள கணக்கா வச்சிருக்க என் மேல ஆசப் படலாமா? என்று சொன்னவனை வெறித்துப்பார்க்க அவள் கண் வழியே உயிர் போய்விட்டதாம்.

மச்சான் மேல இருக்க ஆசைய இவளே வளவுசுளுவா அக்கா கிட்டயே சொல்லி இருக்கலாமே. இப்படி ஊமச்சி கணக்கா இருந்துட்டு அவ தலயில அவளே கல்லப் போட்டுக்கிட்டாளே. இவ மச்சான் நல்ல வனாங்காட்டியும் அவ இவன வெட்டுனதக்கூட பெருசா எடுத்துக்காம கொழுந்தியாள காப்பாத்தணுமின்னு ஊருக்கு ஓடியாந்து ஆளுகளவும் கூட்டியாந்தான். வேறு ஒருத்தன்னா அவள அங்கனயே கணுக்கணுவா வெட்டிப்போட்டுட்டு செயிலுக்குப் போயிருப்பான் என்று ஊர்க் காரர்கள் பேசினார்கள்.

இன்னும் சிலர் அப்பவும் சாமிக்குப் பொட்டி அரிசி கொண்டு போவேலயா இவளுக்கு இந்தப் புத்தி வரணும்? அது சாமி குத்தமில்ல என்று செத்தவளை குறையாகப் பேசி வாய்க்கு வந்தபடி திட்டினார்கள்.

ஆனால் புழுவாயியின் அக்கா மட்டும் புருசனை நம்பவில்லை. இந்த மனுசனால்தேன் ஏதோ கோக்குமாக்கு வேல நடந்திருக்கு என்று நம்பினாள். புருசனிடமே சொல்லிவிட்டாள்.

இந்தா பாரும், நீரு ஊர்க்காரகள வேண்ணா ஏச்சிக்கிடலாம். ஆனா எங்கிட்ட அது செல்லாது. உம் புத்தி எனக்குத் தெரியாதா? எதுக்கு இம்புட்டு ஊனி சொல்லுதேன்னா ஒருக்கா அவ எங்கிட்ட, எக்கா! எங் கழுத்தில தாலி கட்டுதவன் நம்ம தெக்கு தெருவிலதேன் குடியிருக்கான். உம்பாட்டுக்கு வேற எவனவும் எனக்கு மாப்பிள்ளையாப் பாத்திராத. காலமும் நேரமும் கூடி வரயில உனக்கு நானு ஆசப்பட்ட ஆள அடயாளம் காட்டுதேன்னு சொல்லியிருக்கா. இப்ப எங்கிட்ட மட்டும் நீரு உண்மைய ஒத்துக்கிட்டா உமக்கு மாப்பு உண்டு. இல்ல இப்பவே போலீஸ்கார அய்யா கிட்டப்போயி அம்புட்டயும் புட்டு புட்டு வச்சிட்டு எம் பாட்டுக்கு எங்காத்தா வீட்டுல போயி ஒழக்கு தவசத்துக்கு உழைச்சி கஞ்சி குடிச்சிட்டு நிம்மதியா இருந்துக்கிடுவேன். நீருதேன் எந்த நாதியு மில்லாம செயில்ல கிடந்து சாவப்போறீரு.

இவனுக்கு பயம் வந்துவிட்டது. உடனே பொண்டாட்டியிடம் நடந்ததைச் சொல்லிவிட்டான்.

தனியாகப் போனதைப் பார்த்த அக்கா புருசன் தானும் துணைக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறான். வேண்டாம் மச்சான், அதேன் உண்டான ஆளுக போய்கிட்டும் வந்துக்கிட்டும் இருக்காகளே என்று

புழுவாயி சொல்லச் சொல்லக் கேக்காமல் கூடவே வந்திருக்கிறான்.

ஓடைக்குள் இறங்கியதும் தன் குணத்தை காட்ட ஆரம்பித்து விட்டான். இவளும் தன்னைக் காத்துக்கொள்ள மல்லுக்கட்டியிருக் கிறாள். அவனால் அவளைத் தொடவே முடியவில்லை. கடைசியில் தோத்துப்போன ஆத்திரத்தில் கொழுந்தியாளை கண்டதுண்டமாக வெட்டிப் போட்டுவிட்டு தன் கையிலும் தோளிலும் லேசாய் கீறிக் கொண்டு ஊருக்கு வந்து விட்டான்.

அவள் ஊர்க்காரர்களிடம் இந்த விஷயத்தைச் சொன்னதோடு புருசனை விட்டுப் பிரிந்தும் போய்விட்டாள். ஊர்க்காரர்களும் கொழுந் தியாள கொல செஞ்சதுமில்லாம ஊர்க்காரர்களயுமில்ல ஏமாத்தி கேணப் பயலா ஆக்கிட்டான் என்று ஆத்திரப்பட்டு அவனை ஊரை விட்டு தள்ளி வைத்துவிட்டார்கள்.

சின்னப்பிள்ளைகளான எங்களுக்கு இந்த விஷயம் அவ்வளவாகத் தெரியாது. பெரியவர்கள் சொல்லித்தான் கேட்டிருக்கிறோம்.

அந்தக் கொலை நடந்த பிறகு அந்திசந்தி வேளையிலும் உச்சிப் பொழுதிலும் அந்த வழியே யாரும் போகமாட்டார்கள். பொழுது அடைந்து இரண்டு மூன்று சாமம் ஆகிவிட்டால் போதும், செத்தவள் வெட்டுப்பட்ட வலியோடும் பரட்டைத் தலையோடும் எங்கே என் பொட்டி அரிசி என்று கேட்டு அழுவதாகவும் அதிலும் சின்னப்பிள்ளை களைக் கண்டால் இன்னும் அவளுக்கு ஆதாளி அதிகம் ஆகி அவர்கள் உடம்பில் குடியேறிக்கொண்டு அந்தப் பிள்ளைகளைப் பாடாய்ப் படுத்துகிறாள் என்று யாரும் அந்த வழி போக மாட்டார்கள். அப்படிப் போக வேண்டிய சூழ்நிலை வந்தால் கையில் இரும்பு, வெத்திலை கொண்டுபோவார்கள்.

நாங்கள் இப்போது எதுவுமில்லாமல் அந்த இடத்தில் தனியாக நின்றோம். குறுக்கே இருக்கும் ஓடையைத் தாண்ட முடியாது. சுற்றியும் போக முடியாது. புரட்டாசி மாத மழைக்குளிரும் பயமுமாக ஒருவருக் கொருவர் ஒண்டிக்கொண்டு நின்றோம். எங்களுக்கு எதிரே ஒரு பரட்டைத்தலை ஆடுவது போலவும், எங்களையே உற்றுப் பார்ப்பது போலவும் தோன்றியது. தண்ணீருக்குள் இறங்கி மடமடவென்று போய் விடலாமென்றால் இரு கரையையும் நிறைத்துக்கொண்டு வெள்ளம். கொஞ்சம் தடுமாறினாலும் போதும், பிறகு மடைக்குள் முங்கி மூச்சித் திணறிச் சாக வேண்டியதுதான்.

ஒருவருக்கொருவர் கையை பலமாக கோர்த்துக்கொண்டு தண்ணீரில் இறங்கி நடப்போம் என்று கணேசன் சொன்னான். அவன் சொன்னதைக் கேட்டதும் தம்பி ராஜா முடியவே முடியாது என்று அழ ஆரம்பித்துவிட்டான். அந்த பரட்டைத்தலையை மீண்டும் பார்த்தோம். அது அங்கேதான் நிற்கிறது. எனக்கும் கணேசனுக்கும் சந்தேகம்,

அப்பவும் ஒரு பேய் இப்படி நின்ற இடத்திலேயே நிற்குமா என்று! பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள், மனிதர்களைக் கண்டால் பேய் ஆட்டம் போடுமென்று. ஆனால் இது ஒரு ஆட்டமும் போடவில்லை.

இதைப்பற்றி யோசித்ததும் கொஞ்சம் பயம் நீங்கி தைரியம் வந்து விட்டது. ஓடைக்கரையில் இருந்த காட்டுமொச்சி செடியில் பெரிய கம்பாக ஐந்து ஆறு கம்புகளை ஒடித்து அந்த பரட்டைத் தலையை நோக்கி வீசி வீசி எறிந்தோம். அது பேசாமல் அசையாமல் அங்கேயே நின்றது. பிறகு கிட்டேபோய் உற்று தைரியமாகப் பார்த்தோம். அது ஒரு பனை விடலி.

ஓரு நாள் சொக்கலிங்கபுரம் போய்ட்டு வாரேன் என்று சொல்லி விட்டுப் போன அம்மாவை இருட்டி ரொம்ப நேரம் ஆகியும் காண வில்லை. கடைசித் தம்பியும் அவளுடன் போய்விட்டதால் ராஜாவும் நானும் ரொம்ப நேரம் அவர்களுக்கு காத்திருந்தோம். கடைசியில் நாமும் சொக்கலிங்கபுரம் போவோமென்று இருவருமாக புறப்பட்டோம். ஊரிலிருந்து பத்து நிமிஷ நடையில் மேற்கே எங்களுக்கு ஒரு பிஞ்சை இருந்தது. அதை மேலப் பிஞ்சை என்று சொல்வோம். அந்தப் பிஞ்சை வழியாகத்தான் சொக்கலிங்கபுரம் போக வேண்டும். பாதையின் இரு பக்கமும் காரமுள்செடிகளோடு கோவைக் கொடிகளும் குன்னிமுத்துச் செடிகளும் பின்னிக்கிடக்கும். இதனால் பாதை இருட்டடித்துக் கிடப்ப தோடு எப்போதும் ஙீ... ஙீ... என்று ஒரு சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும்.

நானும் என் தம்பியும் கையை இறுகப் பிடித்துக்கொண்டு கண்களுக்கு ஓரம் கட்டியவாறு விறுவிறுவென்று நடந்தோம். கொஞ்ச தூரம் நடந்திருப்போம். யாரோ முனங்குவதுபோல் கேட்டது. அதனால் நாங்கள் அப்படியே நின்றோம்.

மீண்டும் முனங்கல் சத்தம் கேட்டதோடு பாதை ஓரத்தில் எதுவோ கருப்பாக நகன்றது. நானும் தம்பியும் கோர்த்த கைகளை விட்டுவிட்டு மண்ணை அள்ளி அள்ளி கருப்பாகத் தெரிந்த திக்கம் எரிந்தோம்.

யாரப்பா அது? நான் கால் ஒடிஞ்சு கிடக்கேன். மண்ணை எரியாதீக என்று பழக்கமான குரல் கேட்டது.

நாங்களும் கொஞ்சம் தைரியத்தோடு நீங்க யாரு? என்று கேட்டோம்.

அதுவும் பேரைச் சொல்லாமல் நீங்க யாரு? என்று திருப்பிக் கேட்க நாங்கள் சொன்னோம்.

என் கண்ணுகளா! நான் உங்க மாமன்டா; மரத்துலருந்து கீழே

உளுந்து இடுப்பு ஒடிஞ்சி கிடக்கேன்; கிட்ட வந்து என்னத் தூக்குங்க என்று தன் பெயரையும் சொன்னார். நாங்கள் அவர் பக்கத்தில் போனோம்.

அந்த மாமா களவு முருங்கைக்காய் பிடுங்குவதறக்காக அந்நேரம் மரத்தில் ஏறி இருக்கிறார். எப்படியோ கிளை முறிந்து கீழே விழுந்து விட்டார். நடக்க முடியவில்லை. பாதைக்குப் போனால் யாராவது வருவார்கள் என்று தவழ்ந்து தவழ்ந்து பாதைக்கு வந்துவிட்டார். எங்களைக் கண்டதும் மெல்ல என்னைத் தூக்குங்க என்று முனங்கிக் கொண்டே எழுந்து எங்கள் கைத்தாங்கலோடு அவர் வீட்டிற்கு வந்து விட்டார். இதற்குள் அம்மாவும் ஒரு ஆள்துணை பிடித்து வந்துவிட்டாள். நாங்கள் அவளிடம் அந்த மாமா விழுந்து கிடந்த விவரத்தையும் நாங்கள் அவர் வீட்டில் விட்டதையும் சொன்னோம். உடனே அவள், அவன் களவாணிப்பய; நம்ம மரத்து முருங்கக் காயவெல்லாம் அவன்தேன் களாங்குதான்; அவன எதுக்கு வீட்டுல கொண்டி விட்டீக; விடியந் தண்டியும் அவன் அங்கனயே கெடந்து கேவலப்பட்டாவில்ல தெரியும் என்றாள்.

இடுப்பு ஒடிந்த அந்த மாமா பிழைக்கவே இல்லை. இப்போதுகூட இரவு நேரத்தில் ஒரு ஆள் முனகலோடு நகண்டு அந்த பாதையில் போவதாய்ச் சொல்வார்கள்.

ooo

அன்று எல்லோரும் வெங்காயத்திற்கு களை எடுத்துக் கொண்டிருந்தோம். வெள்ளச்சி பாட்டி மட்டும் மத்தியான வரையும் களை எடுத்துவிட்டு, எனக்கு ஒரு வடியா வருது நானு இந்த வாவ மரத்தில சத்த படுத்திருந்துட்டு வீட்டுக்குப் போறேன் என்றாள்.

என்னத்தா வெள்ளச்சி நீயும் இப்பத்தேன் உம் மவளுக்கு கல்யாணம் முடிச்சுவச்சே. முத்துக்கிளி ஆத்தா சொர்ணம் கணக்கா உனக்கு ஏதும் ஏடாகூடம நடந்துருச்சா என்று அரசாத்தாப்பாட்டி கேட்டதும் வெள்ளச்சிப் பாட்டிக்கு அச்சலாத்தி வந்துவிட்டது.

நீ இப்ப உம் பாட்டுக்கு வாயமூடிக்கிட்டு களய வெட்டப் போறியா? இல்ல வெளக்க மாத்துப் பூச வாங்கப் போறியா? என்று எரிந்து விழுந்தாள்.

அந்தமான அரசாத்தாப் பாட்டியும், இதென்னடி யாத்தா... நானு நாட்டுல நடந்தத சொன்னா உனக்கெதுக்கு இம்புட்டு வெளம் வருது; அன்னைக்கு நீ காளி கதையை எம்புட்டு ஆசயாச் சொன்ன என்று கேலி பண்ணிவிட்டு களையை வெட்ட ஆரம்பிக்க நாங்கள் அவளைச் சும்மா விடுவோமா? சொர்ணத்துக்கு என்ன நடந்தது என்று கேட்டு பாடாய்ப் படுத்தினோம்.

பாட்டியும் சொல்ல ஆரம்பித்தாள். அப்புராணி சொர்ணம் புருசன் இல்லாம முதுவுல ஊத்துத தண்ணிய வவுத்துல ஊத்தி பாடுபட்டு பங்கப் பட்டு ஒத்தைக்கொத்தையா வளத்த மவ முத்துக்கிளிக்கு அருணாசலத்த மாப்பிள்ளையாப் பாத்து கல்யாணத்த முடிச்சி வச்சா. கல்யாணத்த எம்புட்டோ சிக்கனமாத்தேன் செஞ்சா. அப்படியும் இந்தாஅந்தான்னு நூறு ரூவா வரைக்கும் கடன் வந்துருச்சு. கடன அடைக்கணுமேன்னு ராவும்பவலுமா பாடுபட்டதுல அர உசுராயி படுக்கையில விழுந் துட்டா. ஊருக்காரக முத்துக்கிளிக்கு சொல்லிவிட்டாக.

முத்துக்கிளி புருசன் அருணாசலம் கஞ்சம் புடிச்சவனே தவுத்து மத்தபடிக்கு நல்லவன். ஏத்தா, உங்காத்தாவுக்கு நல்லது பொல்லது காய்ச்சிக் கொடுத்து 'உண்டானவனுக்கு எண்ணயும் சோறும், இல்லாத வனுக்கு வென்னியும் சோறும்'னு, ஒரு வென்னிய கின்னிய வச்சுக் கொடுத்து உடம்ப தேத்திவிட்டுட்டு வாத்தான்னு முத்துக்கிளிய மாமி யாளப் பாத்துட்டு வரச்சொல்லி அனுப்பி வச்சான்.

அவளும் ஊருக்கு வந்தா. தொலியும் தோலுமா கட்டுலோட கட்டுலாக் கெடக்க ஆத்தாவ பாக்கப் பாக்க அவளுக்கு வவுத்தெரிச்சலா இருந்துச்சு. என்னப் பெத்த ஆத்தா... இப்படி உசுப் பெறப்பத்து கிடக்கயே. நீ செத்துக்கித்துப் போனா நானு என்னத்தா செய்வேன்? எனக் கின்னு யாரு இருக்கான்னு ஒரு பாட்டம் அழுதுட்டு அப்பதைக்கு அப்ப வெதுவெதுன்னு கஞ்சி காய்ச்சி கொடுத்தா. தோச சுட்டுக் கொடுத்து ரெண்டு முட்டயப் பொரிச்சி திங்கச் சொல்லி இப்படியே ஆத்தா பக்கத் தில இருந்து அவ வவுத்த வாடவிடாம கொடுத்துக்கிட்டே இருந்ததுல சொர்ணம் கொஞ்சம் தெளிச்சி கொடுத்துட்டா. இப்ப சத்த எழுந்து தூக்கவும் தொளிக்கவும், பக்கத்து ஓடைகள்ல வேலியில வெறவு பெறக் கிட்டு வரவுமா இருக்கதப் பாத்து மவளுக்கு சந்தோசமா போயிருச்சு.

யாத்த... உனக்கு மேலுக்கு சேட்டமாப் போயிருச்சு. இனி உம் பாட்டுக்கு ஒழக்க கொதிக்க வச்சி குடிச்சிக்கிட்டு இரு. நானு எம் புருசன விட்டு வந்து ஏழு எட்டு நாளாச்சி. எம் புருசன் அலுங்கத்தேன் பேச மாண்டாரு. ஆனா வெனயம் புடிச்சவரு. ஆத்தாளப் பாக்கப் போனவ போக்கழிஞ்சி போயிட்டாளேன்னு மய்யம் பறப்பாரு, மறுவி தவிப்பாரு. நானு ஊருக்குப் போயிட்டு வாரேன்னு மகக்காரி சொன்னா.

தாயீ, நானு படுக்கையிலிருந்து எந்திரிச்சிட்டாலும் நாக்கு செத்துக் கெடக்கு. உப்பு உரப்பா என்னமும் இம்புட்டு திங்கணுமின்னு இருக்கு. நீ ஊருக்கு போனாப் பெறவு ஒரு ஏழு எட்டு நாளு கழிச்சி நானு உன்னப் பாக்க வாரது கணக்கா உன் ஊருக்கு வாரேன். வந்ததும் உன்னப் பாத் துட்டு உன் புருசனுக்கு நேரா போய்ட்டு வாரேன் தாயீன்னு சொல்லு வேன். நீ இருந்துட்டு போ ஆத்தா. மேலுக்கு சேட்டமில்லாதவ எதுக்கு

போறேன் போறேன்னு பறக்கே. ஒரு பத்து நாளைக்கு இரு. கறிய புளிய அவிச்சிப்போடுதேன். உடம்ப தேத்திட்டுப் போன்னு சொல்லி உம் புருசனயும் சொல்லச் சொல்லு. அந்தமான நானு இருந்துட்டு வாரேன்னு அம்மாக்காரி சொன்னா.

எனக்கென்ன ஆத்தா அம்புட்டுக்கு தெரியாமயா கெடக்கேன். நெசமாலுமே நீ வா. நானும் எம் புருசனும் உன்ன கண்ணும் பொண்ணுமா பாத்துக்கிடுதோமின்னு சொல்லிட்டு மக ஊருக்குப் போயிட்டா.

மவ ஊருக்குப் போயி பத்து நாளு ஆச்சு. சொர்ணத்துக்கு இருப்புக் கொள்ளல. நாழி கேப்பயவும், ரெண்டு ஒழக்கு காணப்பயத்தவும் எடுத்து முடிஞ்சிக்கிட்டு மவ ஊருக்கு விருந்தாளியா வந்துட்டா. ஆத்தாளக் காங்கவும் முத்துக்கிளியும் சோறு காய்ச்சி பருப்புக் கடஞ்சி சுடுசோத்துல உள்ளங்கை நிறய எண்ணய ஊத்தி சில்லுக் கருப்பட்டிய தட்டிப் போட்டு கும்பா நிறைய சோறு வைக்க ஆத்தா ஆப்பார சாப்பிட்டா. பெறவு நானு ஊருக்குப் போயிட்டு வாரேன் தாயின்னு புறப்படயிலே மக, பத்து நாளைக்கு இருந்துட்டுப் போன்னு சொல்ல மருமவனும் இருந்துட்டு போங்க அயித்த; ஊருல என்ன மாடு இருக்கா கன்னு இருக்கா; இப்படி பறக்கீகன்னு சொல்லவும் சொர்ணத்துக்கு மனசு குளுந்துபோச்சு. அந்தமான இருந்துக்கிட்டா.

முத்துக்கிளியும் ஆத்தாள நல்லாத்தேன் பாத்துக்கிட்டா. ஆனா ஒரு விஷயத்திலதேன் மக செஞ்சது சொர்ணத்துக்குப் புடிக்கல. எப்பவும் அவ புருசனுக்க சோறு வைக்கேலதேன் ஆத்தாளுக்கும் வச்சா. அதுவும் ரெண்டு பேரையும் ஒண்ணுபோல உக்கார வச்சிதேன் சோறு போடுதா. அவளுக்கு என்னன்னா ஆத்தாளுக்கு மட்டும் தனியா உக்கார வச்சி சோறு போட்டா... நம்ம புருசன் பூலாஞ்சவன், வெனயம் புடிச்சவனும்கூட; நமக்குத் தெரியாம அவ ஆத்தாளுக்கு பொங்கிப் பொரிச்சி போட்டுட்டா லோன்னு நெனப்பான். இதெதுக்கு நமக்கு வம்புன்னுதேன் புருசனுக்கு நேரயே சாப்பாடு வைக்கா.

ஆனா சொர்ணத்துக்கு மருமவனுக்கு முன்னால இன்னும் இம்புட்டு வையின்னு கேட்டு வாங்கிச் சாப்பிட கூச்சமா இருக்கு. மருமவன் என்ன நெனப்பாகளோ; மாமியாக்காரி தான்தின்னி பொலுக்கோ; இப்படி திங்கப்போயிதேன் ஒத்த மவ கல்யாணத்த முடிக்க கடன் வாங்கிக் கிடக்கான்னு நினைப்பானோன்னு அவ திரும்ப கேட்டு வாங்கிச்சாப்பிட மாச்சப்பட்டுக்கிட்டு எந்திரிச்சிருவா.

இப்படியே இருக்கும்போது ஒருநாளு முத்துக்கிளி கோழி அடிச்சி கொழம்புவச்சி மூங்கிச் சம்பா நெல்லெடுத்து குத்தி சோறு காய்ச்சினா. சோறும் கொழம்பும் வேவும் போதே அப்படி மணக்கு. அன்னைக்கு கோழி அடிச்சதினால அருணாசலம் பகல் வேலைக்குப் போகல.

ராவைக்கு கெடை அமத்தப் போறேன்னுட்டு கோழிய அடிக்கவும், பறிக்கவுமா கூடமாட வேல செஞ்சிக்கிட்டு இருந்துட்டான்.

வேலையெல்லாம் முடிச்ச முத்துக்கிளி எப்பவும்போல ஆத்தாளயும் புருசனயும் எதுக்க எதுக்க உக்காரவச்சி சோறு போட்டு கொழம்ப ஊத்துனா. ஆத்தாளுக்கு கோழி மண்டயவும், ரெண்டு காலயும் போட்டா. உடனே அருணாசலம், என்னத்தா இது? அயித்தயே சேட்ட மில்லாதவக, எப்புக்கெட்டு கெடக்காக... நீ உன் பாட்டுக்கு கறிய மோந்து மோந்து வச்சின்னா அவுக உடம்புல புடிக்காம வவுத்தால போயி ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிரப்போவுது; பெறவு நம்ம தலயில சொல்ல வச்சிட்டுப் போயி சேந்துரப் போறாகன்னு சொல்லிட்டான்.

சொர்ணத்தக்கு கோவமின்னா சொல்ல முடியல. அவளுக்கு ரெண்டு ஆப்ப கறிய மோந்து போட்டு கக்கக்கனிக்க செழிக்கத் திங்கணு மின்னு இருக்கு. மனசுக்குள்ள இந்த பாதகத்தி என்னன்னா கோழித் தலயவும் காலவும் போடுதா; அந்தப் பாவி என்னன்னா அதையும்கூட போடவிடாம பேசுதான்; போட்டேன்னு பேருக்கு போட்டுட்டு இப்படி நம்மள காய வைக்காக; இதுக்கு நம்ம பேசாம ஊருலயே இருந்திருக்கலா மின்னு நெனச்சி உலயா கொதிச்சிக்கிட்டு பேசாம இருந்தா.

இருட்டி ஒரு சாமம் ஆயிப்போச்சி. அருணாசலம் கெடைக்குப் போயிட்டு வாரேன்னுட்டுப் போயிட்டான். முத்துக்கிளி நல்லா உறங் கிட்டா. சொர்ணத்துக்கு உறக்கம் வல்ல. கறிக்கொழம்பு நெனப்பு அவளப் பாடாப் படுத்துது. பய்ய எந்திரிச்சி அடுப்படிக்குப் போனா. கறிக்கொழம்பு சட்டி எங்கன இருக்குன்னு கை மெனாவா தடவிப் பாத்தா. அது அடுக்குப்பானைக்குள்ள இருக்கு. இவ மே அடுக்க எறக்கி வச்சிட்டு கறிச்சட்டிய எடுக்கப் போனா.

அதுக்குமுன்ன அருணாசலம் பத்து எட்டுதேன் நடந்திருப்பான். அவன் கூட கெடை அமத்துதவன் இவனத் தேடி வழியிலயே வந்துட் டான்.

ஏலே, இன்னைக்கு கெட மலங்காட்டுக்குப் போயிருச்சாம். கீதாரி நம்மள வரவேண்டாமின்னு சொல்லிட்டாரு. அத சொல்லிட்டுப் போவத்தேன் வந்தேன். நீ எதுக்கு மெனக்கெட்டு பிஞ்சைக்கு அலயப் போறே? பேசாம போயி படுன்னு அவன் சொல்லிட்டுப் போயிட்டான்.

நல்லதாப் போச்சின்னு நெனச்சிக்கிட்டு அருணாசலம் வீட்டுக்கு வந்தான். சுவரோரமா ஒரு ஆளு படுத்திருக்கதயும் அடுக்குப் பானை யோரம் ஒரு ஆளு நிக்கதயும் பாத்தான். உடனே படுத்திருக்கத அவன் சொர்ணமின்னு நினைச்சிக்கிட்டு பாவம் அயித்த சேட்டமில்லாதவக, அசந்து உறங்குதாகன்னு பய்ய பூனபோல நடந்து அடுக்குப்பானை கிட்டப் போனான்.

என்னத்தா, உங்காத்தா வந்தாலும் வந்தா; உங்கிட்ட ஆச தீர பேச முடியல; நானும் அயித்த இன்னைக்குப் போவாக, நாளப் போவாகன்னு தும்பியா துடிச்சிக்கிட்டு இருக்கேன். அவுகளும் போவ மாணேங்காக. நீயும் மனுசன திரும்பிப் பாக்க மாணேங்கே. நல்லவேள கெடைபோடல்லன்னு திரும்பி வந்தேன்னு சொன்னவன் மாமியாள இறுக்கிப் புடிச்சிட்டான். சொர்ணத்துக்கு விக்குனேன்னுமில்ல, வெறச்சேன்னுமில்ல. மருமவன்கிட்ட நாந்தேய்யா உன் மாமியான்னு சொன்னா இந்நேரம் அடுக்குப்பானைகிட்ட உனக்கென்ன சோலின்னு கேப்பான். என்ன சோலிய சொல்லது? கறிய திங்க வந்தேன்னு சொல்ல முடியுமா? அப்படி சொன்னா அப்ப தினமும் நம்ம உறங்கவும் இவ இப்படித்தேன் வந்து களவாண்டு திம்பா பொலுக்கோன்னு நினைச்சிருவானே. இவன்கிட்ட என்னத்த சொல்லுவோமின்னு இவ பதறிப்போயி ரோசிச்சிக்கிட்டு இருக்கா.

அட என்னத்தா, நானு எம்புட்டு ஆசயா வந்துருக்கேன். நீ பாட்டுக்க பேசாம நிக்கே. உன் ஆத்தா இருக்காளேன்னு பாக்கயா? அவ அப்புராணி நல்லா உறங்குதான்னவன் அதுக்கு மேல அவளப் பேசவிடாம அடுக்குப் பானைக்கு அங்கிட்டு இழுத்துக்கிட்டுப் போயிட்டான். சொர்ணம் வாயத் தொறக்கறதுக்குள்ள காரியம் மிஞ்சிப் போச்சி.

மறுநாளு சொர்ணத்துக்கு எந்திரிக்கவே முடியல. எப்படியோ கைய ஊனி கரணம் போட்டு எந்திரிச்சிட்டா. ஆனா நிமிந்து நடக்க முடியல. எப்படியோ ஒவ்வொரு எட்டா வச்சி தன் சீல வாலயெல்லாம் எடுத்து பொட்டணமாக் கட்டிக்கிட்டு ஊருக்குப் புறப்பட்டா. அப்பத்தேன் வாசல தூத்து தொளிச்சிட்டு வந்த முத்துக்கிளி சொர்ணத்தப் பாத்துட்டு, யாத்த இதென்ன கொடும! நேத்து படுக்கந்தண்டியும் நல்லாத்தான இருந்தே. இன்னைக்கென்ன கூனிக்குறுவிக் கெடக்கே! அதுவுமில்லாம இன்னும் நாலு நாளைக்கு இருக்கப்போறேன்னு சொன்னே. இப்பவே புறப்பட்டுட்டேன்னு கேட்டா.

சொர்ணத்துக்கு பேசக்கூட தம்சமில்ல. கைய மட்டும் அலச்சிட்டு வெளிய வந்தா. வாசல்ல பல்லு விளக்கிக்கிட்டு இருந்த அருணாசலம், ஏத்தா... நேத்து நீ கறியும் சோறும் போட்டதுல ஏதோ கோளாறு ஆயிப் போச்சு பொலுக்கோ. அதேன் ஊருக்குப் புறப்பட்டாக. போவட்டும் விடு. எயித்த நீங்க போயிட்டு வாங்க. ஊருக்குப் போயி வேலையே கதின்னு கெடவாம உடம்பையும் பாத்துக்கோங்கன்னு அனுப்பி வச்சிட்டான்.

எங்கள் சிரிப்பாணி வாகை நிழலில் படுத்திருந்த வெள்ளச்சிப் பாட்டிக்குக் கேட்டிருக்கும். தூங்கிவிட்டது போல அனக்கமில்லாமல் கிடந்தாள்.

ஒருநாள் இருட்டி ரொம்ப நேரம் ஆனபிறகு நான் செல்லி வீட்டிற்குப் போவதற்காக வெளியே வந்தேன். அவள் வீட்டை ஒட்டி ஒரு கடவு இருந்தது. அதற்குள்ளிருந்து 'முள் எடுத்த மாமா' விருட்டென்று வெளியே வர நானும் அவரும் முட்டுவது போல் சந்தித்துக்கொண் டோம். மாமாவின் கையில் இரண்டு பெரிய தூக்குப் போணி இருந்தது.

நானும், என்ன மாமா இந்நேரத்துக்கு இங்கிட்டு இருந்து வாரீரு என்று கேட்டேன்.

மாமாவின் முகம் இறுகிக் கிடந்தது. என்னை எரிச்சலோடு பார்த் தார். பெரிய மனுசன் என்னமும் ஒரு அக்குசான சோலியாப் போவான். உன் வேலயப் பாத்துக்கிட்டு போவேன். பெரிய மனுசி கணக்கா என்ன நொன்னன்னு கேட்டுக்கிட்டு... என்று எரிந்து விழுந்தார்.

நான் இந்த விஷயத்தை கணேசனிடம் சொல்ல இரண்டு பேரும் அந்த மாமாவவை வேவு பார்ப்பது என்று முடிவு எடுத்தோம். பிறகு இரண்டு நாள்கழித்து மாமா அதே போல் இரண்டு தூக்குப் போணியோடு கடவிலிருந்து போனார். நாங்களும் அவர் பின்னாலேயே ஒளிந்துஒளிந்து போனோம். அந்த மாமா 'முள்தைத்த அத்தை' வீட்டுக்குத்தான் போனார்.

வாசற்படியில் காத்திருந்த அந்த அத்தை இவரைப் பார்த்ததும், வாரும்... உம்மத்தேன் எதிர்பாத்து உக்காந்து இருக்கேன் என்று வரவேற்க மாமாதூக்குப்போணியை அத்தையிடம் கொடுத்தார். இன்னைக்கு என்ன சோறு என்று கேட்டுக்கொண்டு அத்தை போணியைத் திறந்தாள்.

என்ன சோறுன்னு யாரு கண்டா? புளிச்சண்ணி பானைக்குள்ள கிடந்த உருண்டையில அஞ்சு உருண்டைய எடுத்து போட்டுக்கிட்டு வந்தேன் என்றார். எங்களுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

அந்த மாமாவின் பெண்டாட்டி அப்புராணி. அடித்தால் கூட அழத்தெரியாது. ஆறு பிள்ளைகள். காட்டிலும் வேலை செய்து வீட்டிலும் வந்து குத்திப் பொடச்சி அவள்காய்ச்சி வைக்க இந்த மாமா அவர் சேத்திக் காரிக்கு இப்படி களவாண்டு கொண்டு வந்து கொடுக்கிறார். இந்த அத்தை யும் குத்தி காய்ச்ச உடம்பு வலிக்கிறதென்று இப்படி ஓசியில் சாப்பிடு கிறார் என்று நினைத்துக்கொண்டு பேசாமல் நாங்கள் திரும்பினோம்.

மறுநாள் ஏதோ வேலையாக என் அம்மா முள் எடுத்த மாமா வீட்டிற்கு என்னை அனுப்பினாள். நான் அவர் வீட்டிற்குப் போனபோது மாமாவின் பெண்டாட்டியும், முள்தைத்த அத்தையும் பேசிக்கொண்டிருந் தார்கள்.

என்ன அத்த, உங்க கால்ல தச்ச முள்ள மாமா எடுத்துட்டாரா? என்று நான் கேட்டதுதான், அந்த அத்தை குக்கிப்போய்விட்டார். என்னை முறைத்துப் பார்த்துவிட்டு விருட்டென்று பேசாமல் போய்விட்டார்.

இந்த மாமா பொண்டாட்டி, என்ன பாரதா முள்ளுகிள்ளுன்னு

என்னமோ சொல்லுதே என்றுகேட்க நானும் உண்மை விவரத்தை சொல்லிவிட்டு வேலைக்குப் போய்விட்டேன்.

பொழுது சாய்ந்து வீட்டுக்குத் திரும்பும்போது என் தம்பி ஊத் தாங்கல் ஓடையில் நிற்கிறான். அவனைப் பார்த்ததுமே என் வயிறு கலங் கியது. என்னடா என்றேன். அவன் இரண்டு அத்தைக வீட்டுலயும் ஒரே சண்ட; எல்லாம் உன்னாலதானாம் என்றான்.

எனக்கு இப்போது ஊருக்குள் போவதா வேண்டாமா என்று இருந்தது. என் அம்மாவிற்கு இந்த விஷயம் தெரிந்துவிட்டால் அவ்வளவு தான் என்று நினைத்தவாறு தம்பியிடம், அம்மா என்னைத் தேடுதாளா? என்றேன். உன்ன அவ எப்பவோ புடிச்சி தேடுதா என்றான்.

நான் கொஞ்ச நேரம் யோசித்தேன். பிறகு எப்படியும் ஊருக்குள் போகத்தானே வேண்டும் என்று எண்ணியவாறு நடந்தேன். பயத்தால் கால் பின்னியது. வீட்டில் போய் பய்ய எட்டிப் பார்த்தேன். யாரையும் காணோம். உடனே தம்பியையும் கூட்டிக்கொண்டு எனது சின்னம்மா வீட்டிற்கு வந்தேன்.

சின்னம்மா அம்மாவிற்கு நேர் மாறான குணம் படைத்தவள். கொலையே செய்துவிட்டுப் போனாலும் ஆறுதல் கூறி அரவணைப் பாள். நிலத் தகராறினால் சின்னம்மாவுடன் என் அம்மா பேசமாட்டாள். எங்களையும் பேசக்கூடாது என்று கட்டளை போட்டிருந்தாள். நான் ஒருபோதும் என் அம்மா பேச்சுப்படி நடந்ததில்லை. ராஜாவும் அப்படித் தான். அக்காவும் தம்பி தருமனும்தான் அவள் பேச்சை மீறாமல் நடப் பார்கள்.

என் சின்னம்மாவிடம் போய் எல்லா விவரத்தையும் சொன்னேன்.

இதெல்லாம் உன் வேலைதானா? நீ பாட்டுக்கு ஒரு குழலெடுத்து லேசா பூ... ன்னு ஊதிட்டுப் போயிட்டே, இங்க கல்லெறி கொல்லெறியா கிடக்கு. அப்பவும் ஒரு பொம்பள புளிச்சண்ணி சோத்துக்குப் போவாளா? சரி, நீ உம் பாட்டுக்கு வீட்டுக்குப் போ. நானும் உம் பின்னாலேயே வாரேன். உன் ஆத்தா என்னமும் சொன்னான்னா அவள நாலு கேள்வி கேட்டுட்டு உன்ன எங் கையோடு என் வீட்டுக்கு கூட்டிட்டு வந்துருதேன். என் எட்டுப் புள்ளைகளோட நீ ஒன்பதாவது புள்ளயா இருந் துட்டுப் போ. வெந்தது என்ன விளயவா போவுது. அதுலயும் நீ அரும் பாடு படுதே! உன் அம்மா நல்லா கொழுத்துப்போயி திரியுதா என்றாள் சின்னம்மா.

எனக்கு அப்போதே சின்னம்மா வீட்டில் இருந்து கொள்ள வேண்டும் போல் இருந்தது. ஆனால் அது முடியாது என்று தெரியவும் தம்பியோடு வீட்டிற்கு வந்தேன். வீட்டில் அம்மாவும், முள் எடுத்த மாமாவோட பொண்டாட்டியும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

என்னைக் கண்டதும் அந்த அத்தை, எக்கா உம் மவ நல்லா

யிருப்பா. அவள்ல எங் கண்ண தொறக்க வச்சா. நித்தமும் ஒவ்வொரு மரக்கா வரகும் குருதாலியும் எடுத்து குத்தி பொடச்சி காய்ச்சி புளிச் சண்ணி பான நிறைய உருட்டிப்போட்டா மறுநாளு ஒத்த உருண்ட ரெண்டு உருண்டதேன் கெடக்கும். பாவம் அம்புட்டும் குடிக்குத புள்ளைக. அதுகதேன் நத்தம் செத்துப்போயி புளிச்சண்ணில கெடக்க சோத்த திங்குதுக பொலுக்கோன்னு நானு நினைச்சி அதுகள வஞ்சிக்கிட்டு கூழவும் தண்ணியவும் ஊத்திக்கிட்டு கெடக்கேன். இந்த மனுசன் அந்த சக்களத்திக்கில்ல அம்புட்டு சோத்தையும் கொடுத்துருக்காரு. முள்ளு எடுக்காளாம் முள்ளு. அந்த முண்டைக்கு கால்லயா முள்ளு தைச்சிருக்கு என்று இன்னும் என்ன என்னவோ வய்ய நான் ரொம்ப அப்புராணியாக பக்கத்தில் நின்றேன்.

அந்த அத்தை போகும்போது அம்மாவிடம், நீ ஒரு கிருச கெட்டவ; என் மருமவள போட்டு அடிப்பே! அவ என்ன செய்வா பச்ச மண்ணு! இவ பாக்கும்படியா அந்த ரெண்டு கழுதைகளும் ஒன்னாக் கிடந்தா என்ன ஏதுன்னு நாலு பேருக்குள்ள கேக்கத்தான செய்வாக என்று சொல்லிவிட்டுப் போனாள்.

ஜ○ஜ

நான் கங்கையா மாமாவிற்கு மிளகாய்ப்பழம் எடுக்கப் போனேன். பழம் எடுத்து முடிந்தபோது அந்த மாமா வழக்கம்போல் நாலு பேரோடும் வேட்டைநாயோடும் வரப்பில் வந்து நின்றுகொண்டு எத்தன மூட்டை பழம் எடுத்திருக்கீக என்றார். ஆறு மூடை எடுத்திருக் கோம் என்றோம்.

ஏழு எட்டு ஆளுக சேந்து இம்புட்டுத்தேன் எடுத்தீகளாக்கும். முன்னத்தி ஏர் நல்லா போனாவில்ல பின்னத்தி ஏர் நல்லாப் போகும். இவ ஒரு எழவுக்கும் ஆவ மாட்டா. நீங்க அவள ஏடாசி போட்டுக்கிட்டு இருந் திருப்பீக என்று அவர் பொண்டாட்டியை வஞ்சிவிட்டுப் போய்விட்டார்.

பிஞ்சையிலிருந்து வந்த பிறகு எல்லா வேலையையும் முடித்து விட்டு வழக்கம்போல் விளையாடிக்கொண்டிருந்தோம். கங்கையா மாமாவின் மனைவி என்னைக் கூப்பிட்டாள். என்னதாயீ, ஆறு மூட கட்டி வச்சேன்; இங்க அஞ்சு மூடதேன் கெடக்கு என்றாள். நான் திடுக்கிட்ட வாறு அவர்கள் வீட்டுக்குப்போய் மூடையை எண்ணிப் பார்த்தால் ஐந்து மூடைதான் இருந்தது. எப்படியோ ஒரு மூடையை பிஞ்சையிலேயே போட்டுவிட்டு வந்துவிட்டோம்.

ஆமாத்த, ஒரு மூட பிஞ்சயிலதேன் கெடக்கு பொலுக்கோ என்றேன்.

அய்யோ, உம் மாவன் நடுச்சாமத்துக்கு சீம சாராயத்தப்

போட்டுட்டு வந்து மூடய எண்ணிப்பாப்பான். என்னடி ஆறு மூடன்னு சொன்னே. இப்ப ஒரு மூட கொறயுதே. எங்கடி கடத்துன ஒரு மூடய. இப்படி எனக்குத் தெரியாம கடத்தி வித்து சிறுவாடு வைக்கயாக்குமின்னு என்னக் கொன்னு போட்டுருவானே என்று கதறினார்.

எனக்கும் பயமாகத்தான் இருந்தது. நான்தான் பழமூடையை அவர்கள் வீட்டில் கொண்டுபோய் போடுவேன் என்று தெரியும். மாமா வந்து என்னைக் கேட்டால் என்ன செய்வது என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும்போது வசந்தாவும் செல்லியும் ஓடி வந்தார்கள். அவர்களிடம் மூடை விஷயத்தை சொன்னதும் ஒனக்கு வேற வேலயில்ல, நானு போறேன் என்று வசந்தா ஓடிவிட்டாள்.

தாயீ, நீ நல்லா இருப்பே! மூட கெடக்குத் எடம் உனக்குத்தேன் தெரியும்; யாரயாச்சிலும் கூட்டிட்டுப் போயி தூக்கிட்டு வந்துரு என்ற அத்தை என் அருகில் நின்ற செல்லியைப் பார்த்ததும், கண்ணு நீ பாரதா கூடப் போயி ஒரு மூடப் பழத்த தூக்கிட்டு வந்துரு, நல்லாயிருப்பே என்றார். செல்லியும் மாமா மகள்தான். எனக்கு ஆறுமாதம் இளையவள்.

என்னக்கா இந்நேரத்துக்கே போயி தூக்கிட்டு வரணுமாக்கும் என்றாள் செல்லி.

தூக்கிட்டு வந்துட்டாத்தேன் நல்லது. மாமாவுக்கு தெரிஞ்சிச் சின்னா அம்புட்டுத்தேன், சாமமின்னு இருவாது, ஏமமின்னு இருவாது. அத்தைய போட்டு நொறுங்க வெளுக்கதோட என்னையும் வய்ய வந்துரு வாரு என்றேன்.

அப்ப என்ன செய்யப் போறே என்று கேட்டவளிடம், இந்தா இருக்கு பிஞ்ச; இப்பவே போயி தூக்கிட்டு வந்துரலாமான்னு பாக்கேன் என்றேன்.

பாவம், பச்சபுள்ள மறுவி நிக்க! உங்கூடயே பிஞ்சைக்கு வரலா மின்னு வந்தா எதுர உம் மாமன் வந்துட்டா எவனடி சேத்துருக்கன்னு போட்டு அடிச்சி கேவலப்படுத்துவானே என்று அத்தை கண் கலங்கினாள்.

சரி அத்த, நானு போயி தூக்கிட்டு வந்துருதேன் என்று சொன்னேன்.

இப்பவேவா... ஒரு மூட பழத்தயும் ஒத்திலதூக்கிருவயா என்றாள் செல்லி.

அதுக்குத்தேன் ரோசிக்கேன்; வசந்தா பயந்தரி, வர மாண்டா என்று சொல்லுமுன்னே நான் வேண்ணா வரட்டுமா என்றாள் செல்லி.

எம் மேல வார சாமிக்கு இதுதான வேணுமென்று செல்லியைக் கூட்டிக்கொண்டு போனேன். போகும்போதே செல்லி, நானு பிஞ்சைக் குள்ள வரமாண்டேன்; வரப்புல நிப்பேன் என்றாள்.

இந்த மட்டுக்குமாவது சம்மதித்தாளே என்று அவளோடு போகும்

போதே ஒரு மூடைப்பழத்தையும் நம்மால் தூக்க முடியுமா என்ற யோசனையோடு செல்லியிடம் கேட்டேன். அவளும், இன்னொரு சாக்கு கொண்டு போவோம்; அதில் பாதியை அள்ளி என்னிடம் கொடு; நான் கொண்டு வருகிறேன் என்றாள். அத்தையிடம் இன்னொரு சாக்கு வாங்கிக் கொண்டு போனோம். சுடுகாட்டு ஆலமரத்தை ஒட்டித்தான் மாமா பிஞ்சை இருந்தது.

பிஞ்சையை நெருங்க நெருங்க ஒரு சலனமில்லை. கீ... என்று கிடந்தது. எருக்கலையெல்லாம் காற்றுக்கு பேய்களாக ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தன. நானும் அவளும் பள்ளிக்கூடத்தில் பாடிய கடவுள் வாழ்த்தை பாடிக்கொண்டே நடந்தோம்.

'கடவுளை என்னா லுன்னா கனவிலும் மறவாமல்... திடமகளை, அவரடியை தினமும் துதிப்போமே...'

இப்படியே பாடிக்கொண்டு பிஞ்சைக்குப்போனோம். செல்லி வரப்பில் நின்றாள். நான் எந்த முருசலில் மூடை கிடக்கும் என்று யோசித்த வாறு சாக்கோடு வாய்க்கால் வழியே நடந்துகொண்டிருந்தேன்.

என் பிரிய சேத்திக்காரியான நிலா என் கூடவே வந்து வெளிச்சம் காட்டியது.

மூன்று முருச வாய்க்காலில் தேடிவிட்டு நாலாவதற்காக நான் நடந்தபோது பேச்சு சத்தம் கேட்டது. திடுக்கிட்டுப் போனேன். மனசு என்ன என்னவோ கற்பனை பண்ணியது. சட்டென்று தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டேன்.

இருட்டில் பெரிய பெரிய ஆமணக்குகள் என்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன. தொடர்ந்து பேச்சு சத்தம் கேட்டது. நான் செடிகளுக்குள் உக்கார்ந்தவாறே எட்டிப்பார்த்தேன். கிணற்றை ஒட்டித்தான் அந்தப் பேச்சு சத்தம் கேட்டது.

கங்கையா மாமாவின் குரல்! இரண்டொரு கிணறுகளுக்கு மட்டுமே பம்பு செட் போட்டிருந்தார்கள். இவர் கிணறும் பம்பு செட் போட்டதுதான். கொஞ்ச நேரத்தில் லைட் சில்லென்று எரிந்து நிலா வெளிச்சத்தை பின்னுக்குத் தள்ளியது.

லைட் வெளிச்சத்தில் மாமா மட்டுமல்ல, எங்கள் ஊர் முருகாயி அக்காவும் கூட இருந்தாள். அந்த அக்காவிற்கு கணவர் கிடையாது. வயதானவருக்கு இவரைக் கொடுத்து அவர் இறந்து போக இவள் விதவையாக இருந்தாள்.

அக்கா மீது தொட்டித்தண்ணீரை மாமா மோந்து மோந்து ஊத்த அக்கா ரொம்ப குளுருது குளுருது என்று சொல்லிக்கொண்டே குளித்தாள். பல்பு வெளிச்சம் என் வரைக்கும் தெரிய நான் தரையோடு தரையாகக் கிடந்தேன். கொஞ்ச நேரம் கழித்து இருவரும் ரூமுக்குள் போய்விட லைட்டும் அணைந்துவிட்டது.

உடம்பு முழுக்க பயத்தில் ஆட்டம் போட்டது. மிளகாய்ப் பழ மூடை மறந்துபோனது. வரப்பில் நின்றிருந்த செல்லி எனக்கு மேல் பயந்து போய்கிடந்தாள். என்னைக் கண்டதும் ஓடிவந்து கட்டிக்கொண்டு வாயால் எதுவும் சொல்லாமல் பம்பு செட்டை நோக்கி கையை மட்டும் நீட்டினாள். நானும் தலையை ஆட்டினேன். இரண்டு பேருக்கும் வியர்த்துக்கொட்டியது.

சுடுகாட்டு அருகில் வந்ததும் யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. செல்லி ஏதோ பேய் என்று நினைத்து அலறியவாறு என்னைப் பிடித்துக் கொண்டாள். நானும் அவளைப் பிடித்துக்கொண்டு கண்ணை இறுக மூடிக்கொண்டேன். மாமாதான் வந்து விட்டாரோ என்று எனக்கு பயம். உடம்பெல்லாம் நடுங்கியது.

பாரதா, பாரதா... என்று கூப்பிடும் குரல் கேட்டு கண்ணைத் திறந்தால் கணேசன் நிற்கிறான். எங்களுக்கு ஆச்சரியம். நீ எப்படி இங்கே வந்தே என்று கேட்டோம்.

நான் மந்தைக்கு வந்தேன். வசந்தா மட்டும் விளையாடிட்டு இருந்தா. உன்னைக் காணோம். வசந்தா கிட்டே கேட்டேன். அவதான் நீ பிஞ்சைக்குப் போயிருக்கதைச் சொன்னா. நீ என்கிட்ட ஒரு வார்த்தை சொல்ல வேண்டியதுதானே. எதுக்காவ இந்நேரத்துக்கு இங்க வந்த? சரி நீ போங்க நான் போயி மூடைய தூக்கிட்டு வந்துருதேன் என்று சொல்லி விட்டுப் பிஞ்சைக்குள் போனான்.

ooo

6

வசந்தா பெரிய மனுசி ஆகிவிட்டாள். எனக்கு அவள் கொஞ்சம் மூத்தவள். இப்போது எங்களுக்கு மாடு மேய்க்கும் வேலையைவிட காட்டு வேலைதான் அதிகம். விறகுக்கு மலைக்குப் போவோம். தை மாதம் கறுதறுப்பு. அதிலும் எங்கள் ஊர் பொங்கல் நெருங்கிவிட்டால் இந்த விறகு வேலை ஆரம்பித்து விடும். விடியற்காலை மூன்று மணிக்கே எழுந்து சும்மாட்டுத் துணியில் சோற்றை முடிந்துகொண்டு நடக்க ஆரம்பித்துவிடுவோம். எல்லோரும் பெண்கள்தான். இரண்டு ஆண் களும் வருவார்கள். மூன்று மணிக்கு நடக்க ஆரம்பித்தால் நிலம் தெளியும்போது மலைப்பக்கம் போய்விடுவோம். சில நேரம் இருட் டாகவும் இருக்கும். அப்போதெல்லாம் அங்கிருக்கும் பாறைகளில் உக்கார்ந்துகொண்டு மேலக்காட்டில் அலையும் பேய்களைப் பற்றி பெரியவர்கள் சொல்ல கேட்டுக்கொண்டிருப்போம்.

பெரிய பெரிய ஓடைகளும் வேலிகளுமாக அந்த இடங்களைப் பார்க்கவே பயங்கரமாக இருக்கும். அதற்குள்தான் விறகுகள் கிடக்கும். புதருக்குள் தேடித்தேடி விறகு பெறக்கி கட்டுக்கட்டும்போது மணி பத்து ஆகியிருக்கும். பிறகு ஆற்றில் குழி தோண்டி அந்தக் குழியில் துணியை அப்படியே கஞ்சியோடு உள்ளே வைப்போம். இப்போது தூக்குப் போணிக்குள் இருப்பதுபோல் கஞ்சி இருக்க மண் உள்ளே போய் விடாமல் சுற்றிலும் துணியை விரித்து கல்லை வைத்து விடுவோம். பிறகு ஆற்றுத்தண்ணியை அள்ளி ஊற்றிக் கரைத்து சுற்றுப்புறப் பிஞ்சைகளில் கிடைக்கும் வெங்காயம் பச்சைமிளகாயை வைத்துக்கொண்டு கஞ்சியைக் குடித்துவிட்டு சும்மாட்டுத் துணியை நன்றாக ஆற்று நீரில் அலசிக் காயப்போடுவோம். பிறகு வெத்தலை, பொடி போடுகிறவர்கள் எல்லாம் போட்டு முடிக்க துணி காய்ந்துவிடும். எடுத்து சும்மாடு கூட்டி விறகுக் கட்டைத் தலையில் தூக்கிவிட்டால் பிறகு வீட்டில்தான் இறக்குவோம்.

ஒருநாள் விறகுக்குப் போனபோது ரொம்பவும் இருட்டாய் இருந்தது. எனது சின்னம்மா, வெள்ளிய நல்லா பாக்காம ரெண்டாம் சாமத்துக்கே புறப்பட்டோம் பொலுக்கோ; அதேன் இம்புட்டு இருட்டாக் கிடக்கு என்றார். இரவில் நேரம் பார்க்க வேண்டி வந்தால் நட்சத்திரத்தையும் பகலில் கூரை நிழலையும்தான் பார்க்கவேண்டும்.

எங்கள் கூட வந்த ஆண்கள் நீங்கள் போய் நாலுகா தொறட்டுல உக்காந்திருங்க. நாங்க இந்தா... வந்திருவோம் என்று சொல்லிவிட்டு எங்கேயோ போனார்கள். நாங்களும் சரி என்று அந்த இட்த்தில் போய் உட்கார்ந்தோம். இருட்டு கசமாகக் கிடந்தது.

என் சின்னம்மா சும்மா கிடக்காமல் நம்ம வேற இடத்திலயாச்சிலும் போயி உக்காராமப் போனோமே என்று சொல்ல எல்லோரும் திடுக்கிட்டுப் போனார்கள். பிறகு ஒரு அத்தை, எதுக்கு அப்படி சொல்லுதே? என்று கேட்க சின்னம்மா சீனிக்குட்டியைப் பற்றி சொன்னாள்.

சீனிக்குட்டி ராஜபாளையத்தில் இருக்கும் பணக்கார வீட்டுப் பெண்களில் ஒருத்தி. ரொம்ப வெள்ளந்தியும் கூட. கழுத்திலும் காதிலும் நிறைய நகை போட்டிருப்பாள். ஆனால் சாதியில் குறைச்சல். இவளை விட கொஞ்சம் உயர்ந்த சாதிக்காரன் அடுத்த தெருவில் இருந்திருக்கிறான். அவனுக்கு சீனிக்குட்டி மீதும் அவள் நகைமீதும் ரொம்ப ஆசை. அதனால் அவளை விரும்புவதுபோல் ஏய்ப்பு காட்டியிருக்கிறான். உனக்கு என்ன வேண்டுமென்று சொல்லு, நான் வாங்கித் தாரேன் என்று சொல்ல அவளும் தோப்பில் இருக்கும் மரத்திலேயே கொம்பில் பழுத்து இருக்கும் பலாப்பழம் வேணும் என்று கேட்டாள். இவனும் பழத்தைக் கொண்டு வந்து வீட்டுல வச்சித் தின்னா நல்லா இருக்காது; விடியங் காட்டுல கோழி கூப்பிடுத நேரத்துக்கு எந்திரிச்சி வந்து உன் வீட்டோரம் செரும சத்தம் கொடுக்கேன். நீ எங் கூட வா. மேலக்காட்டுக்குப் போனதும் உனக்கு கொம்புல பழுத்த பழமா புடுங்கித் தாரேன். நீ அங்கன இருக்க பாறையிலேயே வச்சி அம்புட்டயும் தின்னுரு. பெறவு உன்ன கூட்டியாந்து விட்டுருதேன்னான். இவளும் சரின்னுட்டு அன்னைக்கு ரா விடிய இவன் செருமச் சத்தம் எப்ப கேக்குமின்னு முழிச்சி இருந்திருக்கா. இவனும் ஒருச் சாமத்திலேயே அவ வீட்டுக்கிட்டப் போயி செரும இவளும் எந்திரிச்சி இவன் கூடவே மேலக் காட்டுக்கு வந்துட்டா.

இவன் நானு பழம் புடுங்கிட்டு வாரேன். அதுக்குத் தண்டியும் நீ நக நட்டோட இங்கன உக்காந்திருந்தா எவனும் வந்து அவுத்துட்டுப் போயிருவான். நகையெல்லாம் கழட்டிக் கொடு. நானு பத்திரமா வச்சிருக்கேன். உன்ன வீட்டுல கொண்டி விடயில நகயத் தாரேன்னு சொல்ல அவளும் அப்படியே கழட்டிக் கொடுத்துட்டா. பிறவு நீ அம்மணமா படு. உம்மேல எப்படி மணக்குன்னு பாத்துட்டு அந்த மணம் கணக்கா பழம் புடுங்கிட்டு வாரேன்னுருக்கான். பாதகத்தி இவளும்

அப்புராணியாங்காட்டி, ஆகட்டும் மோந்து பாருன்னு படுத்தாள். அவ்வளவுதான், அவளையும் அவ நகையையும் எடுத்துக்கிட்டு ஆளையும் கொன்னுட்டான்.

அவள் இப்பயும் பலாப்பழத்தக் கொடு பலாப்பழத்தக் கொடு என்று சொல்லிக்கொண்டே அலையுதா. அதுக்குத்தேன் அந்த பலாப் பழத்துக்காரி வரமுன்ன அங்கிட்டுப் போயிருவோமின்னு சொல்லுதேன் என்றாள் அந்தச் சின்னம்மா.

ரொம்ப நேரம் ஆகியும், கூட வந்தவர்கள் வரவில்லை. உடனே சின்னம்மா, இம்புட்டு நேரம் ஆச்சு; இன்னும் இவுகள காணம், பொம்பளப் புள்ளைக இருட்டுக்குள்ள உக்காந்து கிடக்குமேன்னு தெரிய வேண்டாம் என்று திட்டினார். பாரதா, நீ எரச்சம் போட்டு உம் மச்சான கூப்புடு; எங்கனயும் அசமந்தம் புடிச்சிப் போயி நின்னாலும் நிப்பாக என்றார்.

நானும், மச்சான்... மச்சான்... என்று சத்தம் போட்டு கூப்பிட்டேன். என்னுடன் சித்தப்பா மகள் பவுனும் சேர்ந்து கூப்பிட்டாள்.

நாங்கள் கூப்பிட்ட மாயத்தில், அதாரு மச்சான்னு கூப்பிடறது? இம்புட்டு நாளும் ஒரு அக்கா மவ கொழுந்தியா கெடயாம பரிதவிச்சேன் என்று சொல்லிக்கொண்டே எவனோ ஒருவன் வந்து எங்கள் எதிரில் நின்றான். ஆளைப் பார்த்தால் மீசையும் முடியுமாக பயங்கரமாய் இருந்தான். நாங்கள் எல்லோரும் பயத்தில் வெடவெடத்துப் போய் நின்றோம்.

என்னை மச்சான்னு கூப்பிட்ட எவ? அவள கூட்டிட்டுப் போவாம நா போவமாண்டேன் என்று அவன் சொல்ல நானும் பவுனும் அவனுக்கு முன்னால் நின்றோம்.

எனக்கு பயத்தை விட வேடிக்கை பார்க்கும் ஆசைதான் நிறைய இருந்தது. பவுன் என்னைவிட இளையவள். ஆனால் ரொம்ப துடுக்கானவள்.

எப்பச்சி, எங்க கூட நாலு ஆம்பளைக வந்தாக; நீங்க நடங்க நாங்க இந்தா ஒதுங்கிட்டு வாரோமின்னு சொன்னாக; அவுகளத்தேன் கூப்புட்டோம்; நீ உம் பாட்டுக்கு உன் சோலியப் பாத்தக்கிட்டுப் போ என்றாள் சின்னம்மா.

என் வேல என்ன மச்சான்னு கூப்பிட்டவள கூட்டிட்டுப் போற வேலதேன் என்று அவன் சொன்னான்.

உடனே சின்னம்மா, அடியே அம்புட்டு பேரும் சீலய வரிஞ்சி கட்டுங்க; இடுப்புல அருவா சொருவி இருக்கீகள்ளல்ல, எடுங்கடி இவன ஒரு வழி பண்ணுவோம்; நிகால் தெரியாமயில்ல வந்து பேசிக்கிட்டு இருக்கான் என்று மும்மரிக்க கூட வந்த அத்தை முழங்கக் குலவை போட்டாள்.

இந்த குலவைச்சத்தம் எங்களுக்கு கோயில் மணி மாதிரி. ஏதாவது ஆபத்து நேருவதுபோல் இருந்தால் இப்படித்தான் குலவை இடுவார்கள். இந்த சத்தம் ரொம்ப தூரம் கேட்கும். கெட்ட எண்ணத்தோடு நெருங்குகிறவர்களைக் கலங்க வைக்கும்.

குலவைச் சத்தம் கேட்ட உடனே எங்களுடன் வந்த ஆண்கள் என்னக்கா... இந்தா வந்துட்டோம் என்று குரல் கொடுத்துக்கொண்டே ஓடிவர இந்நேரம் வரையிலும் எங்களுக்கு எதிரில் நின்றவன் ஓட ஆரம்பித்தான்.

இவர்கள் பக்கத்தில் வந்ததும் பெரியவர்கள் எல்லாம், எங்கள ஒருத்தன் அதங்கொதமான பேச்சு பேசிட்டு அந்தா அங்கிட்டாம ஓடுதான். அவன புடிச்சாந்து எங்க கண்ணு முன்னால நாலு சாத்து சாத்துனாத்தேன் நாங்க இனிமேத்தொட்டு உங்ககூட எங்கயும் வருவோம் என்று சொல்ல அவர்கள் முன்னால் ஓடியவனைத் தொடர்ந்து ஓடினார்கள். ஆனால் அவன் ஓடியே போய்விட்டான்.

வெறுமே முகத்தை தொங்கப்போட்டுக்கொண்டு திரும்பியவர்களை எல்லாரும் சேர்ந்து போன ரக்குல அப்படியே போக்கழிஞ்சி போவீகன்னு தெரிஞ்சிருந்தா நாங்க உங்கள நம்பி வந்துருக்கவே மாட்டோம். சின்னஞ்சிறுசுகளோட வனாந்தரத்தில் இருட்டுக்குள்ள நிக்கமே என்னமும் ஒரு எசவு பிசவு நடந்து போச்சின்னா என்ன செய்ய முடியும் என்று வசவோ வசவென்னு வைதார்கள்.

ஏதோ தெரியாத்தனமா கொஞ்சம் தாமுசம் ஆயிருச்சு; இனி உங்கள விட்டு ஒரு எட்டு நவண்டா எதுக்குடான்னு கேளுங்க என்று கெஞ்சலோடு சொன்னார்கள். இதற்குள் கொஞ்சம் விடிய, விறகு பெறக்க ஆரம்பித்தோம்.

கொஞ்சநேரம் தான் கழிந்திருக்கும். கலாவல்லி அக்கா அய்யய்யோ அய்யய்யோ என்று அலறியவாறு வெளிறி விறுவிறுத்து ஓடி வந்தாள். என்ன என்ன என்று எல்லோரும் போய் பார்த்தோம். பெரிய மலைப்பாம்பு நகர முடியாமல் நகன்று புதரையே அடைத்தவாறு போய்க் கொண்டிருந்தது. நாங்கள் அதிர்ச்சியாகி அதையே பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் அந்த பாம்பு அதிர்ச்சியடைய வில்லை. மனிதர்கள் எல்லாம் எனக்கு தூசிக்கு சமம் என்பது போல் போய்க் கொண்டிருந்தது.

பிறகு எல்லோரும் இன்னைக்கு யார் மொவத்தில முழிச்சமோ தேரமே சரி இல்லை என்று சலித்துவிட்டு, வாங்க அங்கிட்டுப் போயி பெறக்குவோம் என்று போனோம். அன்று யாருக்குமே சந்தோசமில்லை. ஏதோ பேருக்கு பெறக்கிவிட்டு வந்தோம். இன்னி ஏழு எட்டு நா கழிச்சிதேன் வெறவுக்கு வரணும் என்று சொல்லிவிட்டார்கள்.

அருக்காணிக்கு பக்கத்து ஊர்தான். பள்ளர் சாதி. எங்கள் ஊருக்குத் தான் வேலைக்கு வருவாள். எப்போது பார்த்தாலும் தலைச்சுமையுடன் தான் போவாள். லவுக்கை போடாமல்தான் இருப்பாள். வெற்றிலை அடுக்காக இடுப்பு நிறைய கொசுவம் வைத்து சேலையை அழகாக உடுத்தி இருப்பாள். இரு கை கொள்ளாத தலைமுடியை அள்ளிப் பெரிய கொண்டை போட்டிருப்பதோடு தங்கத் தகடாக ஒரு ஆவரம் பூவையும் அதில் சொருகி இருப்பாள். கழுத்தில் மஞ்சள் கயிறு. கையில் பச்சையும் சிவப்புமாய் வளையல்கள். நீண்ட வடிகாதில் சின்னத் தண்டட்டி. காலில் மெட்டியும் தண்டையும் வெள்ளியாக மினுங்கிக்கிடக்கும். சேலையைச் சற்று தூக்கிக் கட்டியிருப்பாள். கெண்டைக்காலில் மயில் வடிவில் பச்சை குத்தியிருப்பாள். அவள் எங்கள் தெரு வழியே போகும்போது ஆம்பளைகள் வாயாறிக் கிடப்பார்கள். அடியாத்தா அருக்காணியப் பாரு! வச்ச கையி வழுவிருதாப்பல என்னம்மா செப்புகணக்கா இருக்கா. தண்ணிபட்டா, பட்ட தண்ணி தெறிச்சிருதாப்பல மேனியுமா பாக்க பதுனாறு கண்ணு வேணும் பொலுக்கோ என்று ஆசைப்பட்டு கிசுகிசுப் பார்கள். அருக்காணிதான் அவ்வளவு அழகாக இருந்தாளே தவிர அவள் புருசன் சொங்கி மாதிரி இருப்பான். காலில் புத்து வேறு. கிந்திக் கிந்தி அவள் பக்கத்தில் ஒடிசட்டையாக நடப்பான்.

கங்கையா மாமாவிற்கு அவள் மீது ஆசையான ஆசை. அவள் போகும்போதும் வரும்போதும் எடக்குப் பண்ணிக்கொண்டு, அவளை உரசிக்கொண்டு தன்னுடைய ஆசையை வெளிப்படுத்தி இருக்கிறார். அவள் கண்டுகொள்ளவே இல்லை. அதோடு, அப்பச்சி மருவாதையா நடந்துக்கோரும். இல்ல்...ல மானங்கெட்டுப் போவும் என்றும் சொல்லி விட்டாள். மாமா கொஞ்சம் அடாவடியான ஆளு. ஏற்கெனவே அருக் காணியின் மேல் இருந்த ஆசை இப்போது வெறியாக மாறிவிட்டது. அவளை குறடிவைத்துக்கொண்டே இருந்திருக்கிறார். ஒருநாள் எப்படியோ ஓடையில் தனிமையில் சந்தித்துவிட்டார்.

ஏய் நில்லுடி, என்ன சொன்ன, மருவாதியா நடந்துக்கோரு மின்னுதான சொன்ன. இப்ப மருவாதியாத்தேன் நடக்கப்போறேன். நீ என்ன செய்யணுமோ செஞ்சிக்கோ என்று எட்டி கையைப் பிடித் திருக்கிறார்.

அவள் அவரிடமிருந்து தப்பித்துக்கொண்டு, உன் வீரத்த ஆம்பளை கிட்ட காட்டு என்றாள்.

உன் புத்துக்கால் புருசன வரச்சொல்லு; அவன்கிட்ட என் வீரத்த காமிக்கேன் என்று எக்காளத்தோடு சொல்லிவிட்டார்.

அருக்காணிக்கு கோபம் தாங்க முடியவில்லை. நெஞ்சுக் கொதிப் போடு புருசனிடம் போய் நடந்ததெல்லாம் சொல்லி நீ ஆம்பளயா

இருந்தா அவன வெட்டிட்டு வா. ஆம்பள இல்ல பொம்பளன்னா இந்தமான கவுத்தப்போட்டு உன் உசுர மாய்ச்சிரு என்று சொல்ல அவள் புருசனுக்கு ஆக்ரோசம் வந்துவிட்டது. இடுப்பு வேட்டியில் வங்கியை மறைவாக சொருகிக்கொண்டு கடைத்தெருவுக்கு வந்திருக்கிறான்.

கடைத்தெருவில்தான் அவர் இருப்பது வழக்கம். கங்கையா மாமாவும் அப்போது ஒரு வண்டிச் சக்கரத்தைப் பழுதுபார்த்துக்கொண்டு அங்கேதான் இருந்திருக்கிறார். இவனைப் பார்த்ததும், ஏலே உம் பொண்டாட்டி என்னமும் சொன்னாளா? என்று கேட்க, என்ன சாமி சொல்லுதீக என்று கேட்டுக்கொண்டே பக்கத்தில் வந்தவன் இடுப்பில் மறைத்திருந்த வங்கியை எடுத்து நாலைந்து குத்து குத்திவிட்டான்.

ஜ۞ஜ

நானும் ராதாவும் முன்பு நட்டுவாக்களி கடித்தவளுக்கு வைத்தியம் பார்த்த அண்ணன் பிஞ்சையில் புல் பிடுங்கிக் கொண்டிருந்தோம். அவர்கள் பிஞ்சையில் இருந்த கொய்யா மரத்தின் பழம் இனிப்பாயிருக்கும். அதனால் அந்த மரத்தில் ஏறி பழம் பறித்துக்கொண்டிருக்கும் போது அந்த அண்ணன் வந்துவிட்டார்.

உடனே இரண்டு பேரும் மரத்திலிருந்து அவசரமாக இறங்கி எங்கே ஒளிவது என்று தெரியாமல் கிணற்றுக்குள் சரசரவென்று இறங்கி மறைந்து நின்றோம். மனசு பயத்தில் படபடத்துக்கொண்டிருந்தது. அந்த அண்ணன் கொய்யாப் பழத்தைக் காணவில்லையென்று வைது கொண்டே கிணத்துப்பக்கமாக வந்துகொண்டும் போய்க் கொண்டுமிருந்தார்.

இதற்குள் யாரோ இரண்டு பேர் நம்ம ஊர்காரன சம்சாபுரத்தில் வச்சி யாரோ குத்திப்போட்டாகளாம் என்று சொல்லிக்கொண்டு ஓட இந்த அண்ணனும், யாரக் குத்துனாக என்று கேட்டுக்கொண்டே அவர்கள் பின்னால் ஓடினார். இதற்குள் குலவைச் சத்தமும் கேட்டது.

நாங்களும் வெளியே வந்து புல்லை அள்ளியும் அள்ளாமலும் ஊரைப் பார்த்து ஓடினோம்.குத்துப்பட்டு அரை உயிராய்க் கிடந்தார் கங்கையா மாமா.

பிறகு மற்ற மாமாக்கள் எல்லோரும் வண்டி கட்டிக்கொண்டு அவரை தூக்கி ராஜபாளையம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனார்கள். அங்கே பார்க்க முடியாது என்று சொல்லவும் மதுரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள். ஊருக்குள் பாதிப் பேருக்கு சந்தோசம். நிறையப் பேர் கோழி அடித்து அந்த சந்தோசத்தை கொண்டாடியதாகச் சொன்னார்கள். என் அம்மாவும் அத்தையும் சின்னம்மாவும்,

சிங்கம் படுத்திருச்சோ, சிறுநரியோ நாட்டாம

வேங்க படுத்திருச்சோ, வெள்ளெலியோ நாட்டாம

என்று அன்று முழுக்க அழுது கொண்டிருந்தார்கள்.

மாமா குத்துப்பட்ட விஷயம் தெரிந்தவுடன் சென்னையிலிருந்த எனது மாமா, அக்கா எல்லோரும் வந்துவிட்டார்கள். மெட்ராஸ் மாமா தன் அண்ணனைப் பற்றிச் சொன்னார். அருவா எடுத்தவன் அருவாளாலயே சாவாங்கது இவன் வரைக்கு சரியா நடந்துருச்சு. இம்புட்டு நாளும் சீமத்துரை கணக்கா நெஞ்ச தூக்கி நடந்துக்கிட்டு ஊர கைக்குள்ள வச்சிருந்தவன் ஒரு கீ... சாதிக்காரன்... அதுவும் ஒரு புத்துக்காலு பயகிட்ட குத்துப்பட்டுட்டானே. எங்கண்ணன் செத்துப் போனா குத்துனவன் பொழச்சான்; எங்கண்ணன் பொழச்சி வந்தான் பிறவு குத்துனவன் ஊரவே தீ வச்சு கொளுத்திருவான் என்று சொல்லிக்கொண்டு இருந்தார்.

நாங்கள் எல்லோரும் மதுரைக்குப் போய் மாமாவைப் பார்த்தோம். முதுகில் பெரிய புண்ணோடு மாமா குப்புறப் படுத்துக் கிடந்தார். எங்களைப் பார்த்ததும் தூக்கி உட்கார வைக்க சொன்னார். சாய்த்து உட்காரவைத்தார்கள். துவண்டுபோய் இருந்தார். ஆனாலும் வீறாப்பான பேச்சை விடவில்லை. நாங்கள் பார்த்துவிட்டு வந்த இரண்டொரு நாளில் மாமா செத்துப்போய்விட்டார்.

எங்கள் வீட்டு எதிரில் ஒரு மாமா இருந்தார். பெயர் பெருமாள் சாமி. அவர் பறவைகளை, மிருகங்களை மிகவும் இம்சிப்பார். சின்னப் பிள்ளைகளை கண்ணில் காணவிடமாட்டார். யாராவது அவர் பிஞ்சையில் புல், தட்டை என்று அறுத்துவிட்டால் அவர்களை அடிக்காமல் விடமாட்டார். அதற்காகவே அவர் பிஞ்சையைச் சுற்றி வேலிகளாக மரங்களை வளர்த்திருந்திருந்தார். அவர் பிஞ்சையில் நாலுபக்கமும் வெறும் பூலான் முள்ளும் காரமுள்ளும் அடர்ந்து கிடந்தது. நடு நடுவே வேலமரம். ஊணாக்கொடியும் வேலிப்பருத்தியும் துடைபருமனில் வேர் வாங்கி முள்செடியோடு பின்னிக்கிடக்க ஈட்டிக் குத்தலாய் காக்கா முள் வேறு. முடக்கத்தான், நாயுருவி, குப்பைமேனி செடியென்று ஒரு சின்ன இடுக்கல் கூட இல்லாமல் வேலியை வளர்த்திருந்தார்.

ஒரு மார்கழி மாதம். குளிர் எல்லோரையும் நடுங்கவைத்துக் கொண்டிருந்தது. ஒரு நாப்பது வயசு அம்மாவும் பன்னிரண்டு வயசுப் பையனும் வந்து எப்படியோ அவர் பிஞ்சைக்குள் நுழைந்து வேலம் பட்டையை வெட்டி உரித்திருக்கிறார்கள். அவர்களின் கெட்டநேரம் போலிருக்கிறது இந்த மாமா அந்த நேரம் பார்த்து பிஞ்சைக்கு போய்விட்டார். புல் பிடுங்கியவர்களையே விடமாட்டார். மரத்தை வெட்டிப் பட்டையை உறித்தவர்களை விடுவாரா? அந்த பொம்பளையையும், அந்தப் பையனையும் வீட்டுக்கு இழுத்துவந்துவிட்டார்.

அவர்கள் வீட்டில் இருந்த தூணில் அந்தப் பையனைக் கட்டிப்போட்டு விட்டார். அவர்கள் கொண்டுவந்த அரிவாள், கத்தி இன்னும் என்ன என்னவோ பொருள்களையும் பிடுங்கி வைத்துக்கொண்டார். அந்த பையன் கதறோ கதறென்று கதற அந்த அம்மா பாவம், மாமா காலில் விழுந்து விழுந்து கும்பிட்டார். ஊர்க்காரர்களிடமும் முறையிட்டு கெஞ்சினார். கையெடுத்தும் கும்பிட்டார். ஆனால் அந்த மாமா என் மரம் நூறு ரூபாய் பெறும். நீ வெட்டிப் பாழாக்கிட்டே. ஒம் மவன் இங்க இருக்கட்டும். நீ உன் ஊருக்குப் போயி நூறு ரூபாய் வாங்கியாந்து என்கிட்ட கொடுத்துட்டு உன் மவன கூட்டிட்டுப் போ என்று சொல்லி விட்டார். என் அம்மாவும் இன்னும் சிலரும் அவரிடம் போய் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். அவர் கேட்கவில்லை. சொன்னவர்களிடமெல்லாம் அவர் அப்ப அந்த நூறுரூவாய நீ கொடு என்று சொல்ல எல்லோரும் மறுபேச்சு பேசாமல் திரும்பி வந்தார்கள்.

அவர்களைப் பார்க்கப் பார்க்க எங்களுக்குப் பாவமாய் இருந்தது. எதுரு வீட்டுல எம்புட்டு தேரம்தேன் இந்த கண்றாவியப் பாக்கது என்று சொன்ன என் அம்மா பிஞ்சைக்குப் போய்விட்டாள். இந்த விஷயம் ஊர் நாட்டாமைக்குப் போய்விட்டது. நாட்டாமை மாமாவை கூப்பிட்டுவிட மாமாவும் எந்த தாயளியும் என்னை ஒண்ணும் பண்ண முடியாது என்று சொல்லிக்கொண்டு வீறாப்பாகப் போனார்.

அவர் தலை மறைந்ததுதான் தாமதம். தம்பி ஓடிவந்து அக்கா அந்தப் பையன நம்ம அவுத்துவிட்டுருவமா என்றான். நான் அவனுக்கு மேல் துடித்துக்கொண்டு இருந்தேன். அவர்கள் வீட்டில் யாருமில்லை. எல்லோரும் காட்டு வேலைக்குப் போய்விட்டார்கள். உடனே வீட்டிற் குள் போய் அரிவாள்மனையை எடுத்து வந்தேன். என் தம்பியும் நானும் கயிறுகளை அறுத்து வீட்டிற்குள் ஒரு சாக்கில் இருந்த அவர்களின் பொருள்களையும் எடுத்துக் கொடுத்துவிட்டு ஓடிருங்க என்று சொன் னோம். அவர்கள் வடக்குப் பக்கமாய் ஓடத் தொடங்கினார்கள். வடக்குப் பக்கம் ஓடாதீங்க. அங்க ஒரே வெள்ளாம. மாமா உங்களத் தேடி வந்து கண்டு புடிச்சிருவாரு. தெக்காம ஓடுங்க; நிறைய ஊரு இருக்கு; ஒளிஞ்சிக்கோங்க என்றேன். அவர்கள் தூசிக்கோட்டையாக ஓடினார்கள். தெருவில் இருந்த ஒண்ணு ரெண்டு பேர் பார்த்தார்கள். ஆனால் எங்களை ஒன்றும் சொல்லவில்லை.

கொஞ்சநேரம் கழித்து மாமா, திமிரா பண்ணிக்கிட்டு இருக்கீங்க என்று யாரையோ வஞ்சிகொண்டு வந்தார். வந்தவர் வெறும் வீட்டைப் பார்த்துவிட்டு, எங்கடா அந்தப் பயலயும், சிறுக்கியவும் காணோம்; யாருடா என் வீடு மொளஞ்சு அவுகள அவுத்துவிட்டது என்றவர் சத்தம் போட்டு எங்களைக் கூப்பிட்டார். என்ன மாமா என்று ரொம்ப அப்பாவி யாக அவர் முன்னால் போய் நின்றோம்.

என் வீட்டுல கட்டியிருந்த பயல எங்க? யாரு அவுகள அவுத்து விட்டது என்று கேட்டார்.

யாரும் அவுத்து விடல மாமா. அவனாதேன் அவுத்தானோ இல்ல அவன் அம்மா அவுத்துவிட்டாளோ தெரியல; ஆனா ரெண்டு பேரும் ஓடத நாங்கபாத்தோம், என்னடா என்று தம்பியைக் கேட்க அவனும் ஆமா மாமா என்று தலையை ஆட்டினான்.

அவர் உடனே ஒரு பெரிய கம்பை எடுத்துக்கொண்டு எங்கிட்டாம போனாக என்று கேட்க நானும் வடக்காமத்தேன் போனாக என்றேன். உடனே அவர் வசவான வசவு வஞ்சி கொண்டு வடக்கு பார்த்து ஓடினார். எங்களுக்குச் சிரிப்பாய் வந்தது. ரொம்ப நேரம் கழித்து பிஞ்சையிலிருந்து வந்த என் அம்மா உன் மாமன்காரன் அந்தப் பாவத்த இன்னுமா வீட்டுக் குள்ள வச்சிருக்கான் என்றாள். அவர்களை அவிழ்த்துவிட்டதை ராஜா சொன்னான். மாமா வீட்டிற்குள் நுழைந்ததற்காக எங்களை அவள் அடிப் பாள் என்று எதிர்ப்பார்த்தோம்.

நல்லவேள செஞ்சீக; ஆனா நீங்க செஞ்சத யாருகிட்டயும் சொல்லிராதீக; உம்மாமன் பய காதுல விழுந்துச்சின்னா பய உங்களயும் கட்டிப் போட்டுருவான் என்றாள். நாங்கள் ஏன் மூச்சு விடுகிறோம்!

எங்கள் ஊருக்கு வருசா வருசம் கழைக் கூத்தாடிகள் வருவார்கள். பரந்து கிடக்கும் சுடுகாட்டு ஆலமரத்தில் வந்து தங்கிக்கொண்டு கூத்தாடு வார்கள். ஊருக்குள் சின்னப்பிள்ளைகள் எல்லாம் சேர்ந்து அவர்களுக்கு ஊர்ச்சோறு வாங்கிக்கொடுப்பார்கள். கழைக் கூத்தாடி வந்துவிட்டால் ஊருக்குள் ஒரு பையன் இருக்க மாட்டான். அதே மாதிரி ஒரு வருசம் வேறு ஒரு கூட்டம் வந்தது. அவர்கள் ஊர் ஊராகப் போய் கட்டபொம்மு, அல்லி அர்ச்சுனா... என்று கதை படித்து ஆடிப்பிழைப்பதாகச் சொன் னார்கள். எங்கள் ஊரில் கதை படிப்பதற்காகத் தங்கினார்கள். அவர்கள் ஏழு எட்டுப்பேர் வரை இருந்தார்கள். பெண்கள் யாருமே இல்லை. ஆண்களே பெண்கள் வேசம் போட்டுக்கொள்வார்கள். நாட்டாமை யிடமும் ஊர் பெரியவர்களிடமும் சம்மதம் வாங்கிக்கொண்டு ஊருக்கு வெற்றிலை பாக்கு வைத்து கும்பிட்டு கதை படிக்க ஆரம்பித்தார்கள்.

வாராண்டா, வாராண்டா வெள்ளக்காரன்
வரட்டும் தாயோளி தொப்பிக்காரன்
வெள்ளக்காரனுக்கு ஒரு வேட்டு வப்போம்
நாட்ட விட்டே அவன ஓட்டுவிப்போம்.

இப்படி பாடிக்கொண்டு நடுச்சாமம் வரையிலும் நடுத்தெருவில் ஆட்டம் போடுவார்கள். ஊர் ஆட்கள் பெரியவர்கள் சின்னவர்கள் என்று

இல்லாமல் எல்லோரும் அங்கே கூடி விடுவார்கள். ஊருக்குள் அவர் களுக்கு எல்லா உதவியும் செய்தார்கள். வீட்டிற்கு ஒரு மரக்கா நெல் என்று வரி போட்டு வாங்கி அதைக் குத்தி அரிசியாக்கிக் கொடுத்தார்கள். பெரிய வர்கள் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என்று அவர்கள் சட்டையில் குத்தி னார்கள்.

பஞ்சவர்ணம், சீனியம்மாள் என்ற இரண்டு அக்காக்களும் முறுக்கு மாலை, பிஸ்கோத்து மாலை என்று தினமும் எங்களிடம் கொடுத்து ஆட்டக்காரர்களுக்குப் போடச் சொல்வார்கள். ஒரு மாதம் என்று வந்தவர்கள் இரண்டு மாதம் ஆகியும் போகவில்லை. தினமும் ஆட்டம் தான், பாட்டுத்தான். இந்த அக்காக்கள் இரண்டு பேரும் நித்தமும் தவறாமல் இப்படி தின்பண்ட மாலை போடுவது சிலருக்குப் பிடிக்க வில்லை. எங்களைக் கூப்பிட்டு சத்தம் போட்டதோடு அவர்களையும் கூப்பிட்டு என்ன கண்ட பயலுக்கெல்லாம் மால போட்டுக்கிட்டு இருக்கீக என்று திட்டினார்கள்.

சத்தம் போட்ட மறுநாளே பஞ்சவர்ண அக்கா மருந்தைக் குடித்து விட்டாள். ராஜபாளையத்துக்கு தூக்கிக்கொண்டு ஓடியும் உயிர் பிழைக்க வில்லை. அந்த அக்கா செத்ததுமே நாடகம் போட்டவர்களை ஊரை விட்டே விரட்டிவிட்டார்கள். பிறகு ஒரு மாதம் வரைக்கும் அதே பேச்சாகக் கிடந்தது.

ஊருக்குள் இப்படி ஏதாவது ஒரு விஷயம் நடந்துவிட்டால் ஒரு மாதம் கழித்து அஞ்சாறு வண்டியோடு ஏதாவது ஒரு கோயிலுக்குப் போய் 'குளுமைக்கு' கொடுத்துவிட்டு வருவார்கள். இந்தத் தடவை கோபால மலைக்கு போவது என்று பேசி முடிவெடுத்தார்கள். இந்தக் கோயில் மதுரைக்குப் போகும் ரோட்டில் இருக்கிறது. மறுநாள் ஆறு வண்டிகள் ஒரு கிடாவோடு கோபால மலைக்குப் புறப்பட்டன.

கோயிலுக்கு போய்ச் சேர்ந்தபோது ஆடெழும்பும் நேரத்திற்கு மேலேயே ஆகிவிட்டது. கோமதி அக்காவும் புருசனோடு வந்திருந்தாள். அவர்கள் இரண்டு பேரும் குடும்ப விஷயம் பேசிக்கொண்டிருக்கும் போதே இருவருக்கும் பெரிய சண்டை வந்துவிட்டது. எல்லோரும் தடுத்துப் பார்த்தார்கள். அவர்கள் தடுத்ததையெல்லாம் மீறி அக்காவின் புருசன் அக்காவை அடித்துவிட்டார். அடி என்றால் சின்ன அடி இல்லை, அப்படி அடித்து ஏறி ஏறி மிதித்து ரொம்ப இம்சைப்படுத்திவிட்டார். கோயிலுக்கு வந்த இடத்தில் இப்படி சண்டை வந்ததைப் பற்றி எல் லோருக்கும் வேதனையாக இருந்தது.

கோமதி அக்கா குப்புறப்படுத்தவள்தான், பிறகு எழுந்திரிக்கவே இல்லை. ஒரு அண்டா சோறு ஆக்கி பருப்பு காய் எல்லாம் வைத்திருந் தார்கள். அக்காவை ஆள் ஆளுக்கு போய் கெஞ்சினார்கள். அக்கா சாப்பிடவே இல்லை. கிடாயை மறுநாள் வெட்ட வேண்டுமென்பதற்காக கட்டிப்போட்டிருந்தார்கள்.

கோமதி புருசனிடம், நீ கோயிலுக்கு வந்த இடத்தில் உன் பொண்டாட்டியைப் போட்டு அடித்தது ரொம்ப தப்பு; அவளை சமாதானப்படத்தி சாப்பிடச் சொல்லு என்றார்கள்.

அவ சாப்பிடாட்டி எனக்கு என்ன வந்துச்சு? என்று சொன்னதோடு இவர் மூக்குப்பிடிக்க சாப்பிட்டார்.

அன்று கோயிலிலேயே எல்லோரும் படுத்துவிட்டார்கள். கோமதி அக்கா கோபத்தில் செத்துக்கித்துப் போய்விடுவாளோ என்று அவள் பெரியம்மா தன் முந்தியில் அவள் முந்தியைச் சேர்த்து முடிந்துகொண்டு படுத்தார்.

விடிந்தபோது அக்காவைக் காணவில்லை. எல்லோரும் பயந்து விட்டார்கள். நன்றாக நீச்சல் தெரிந்தவர்களை விட்டு அங்கிருக்கும் கிணறுகளில் எல்லாம் தேடிப் பார்த்தார்கள். அக்காவைக் காணவில்லை. ஆள் ஆளுக்கு அக்காபுருசனை வய்ய அவர் ஒரு மூலை பார்த்து முடங்கிக் கிடந்தார்.

யாரும் பச்சைத்தண்ணி பல்லில் ஊத்தவில்லை. சின்னப்பிள்ளை களுக்கு மட்டும் முதல் நாள் மிஞ்சிய பழைய சோறை வைத்தார்கள். அந்நேரத்துக்கு குழம்பில் கொதிக்க வேண்டிய கிடா புல் மேய்ந்து கொண்டிருந்தது. கோயிலுக்கு கொண்டுபோன கிடாயை திரும்பவும் உயிரோடு ஊருக்கு கொண்டுபோகவும் கூடாது யாருக்கும் விற்கவும் கூடாது என்பதால் என்ன செய்வது என்று யோசித்தார்கள். பிறகு இரண்டு பேர் மாட்டு வண்டியில் எங்கள் ஊருக்குப் போய் அக்கா இருக்கிறாளா என்று பார்த்துவிட்டு வருவது என்றும் பிறகு கிடாயைப்பற்றி யோசிப் பது என்றும் முடிவெடுத்தார்கள். அதன்படி இரண்டு பேர் வண்டி கட்டி ஊருக்குப் புறப்பட்டார்கள்.

அவர்கள் போன கொஞ்ச நேரத்திலேயே திரும்பி வந்துவிட்டார் கள். என்ன என்று கேட்டதற்கு அக்கா ஊரில் பத்திரமாய் இருப்பதாக ஸ்ரீவில்லிப்புத்தூரிலேயே தாக்கல் தெரிந்துவிட்டது என்று சொன் னார்கள்.

அதன் பிறகு கிடா வெட்டி சோறு ஆக்கிச் சாப்பிட்டு இரவு எட்டு மணிக்கு மேல் வண்டி பூட்டி நடுச்சாமத்தில் ஊர் வந்து சேர்ந்தோம்.

கோபால மலைக்கு வந்தபோது கோமதி அக்காவுக்கு வயிற்றில் நாப்பது நாளாம். அதன் பிறகு அக்கா கணவனோடு வாழவே இல்லை. அக்கா அவர் முகத்தில் முழிக்கவே இல்லை. அம்மா வீட்டுக்குப் போய் விட்டாள். அவரைப் பார்க்கும் பெரியவர்கள் எல்லாம், பெரிய புடுங்கி கணக்கா பொண்டாட்டிய போட்டு அடிச்சியே; இப்ப சீரளிஞ்சு சீப்பட்டு கைக்கஞ்சி காய்ச்சி குடிச்சிக்கிட்டு கிட என்றார்கள்.

மெட்ராசுக்கு மகள் பேறுகாலம் முடிந்து அவளைக் கொண்டு போய் விட்டுவிட்டு அங்கேயே ஒரு மாதம் இருந்து விட்டாள் வெள்ளச்சிப் பாட்டி..மகள் ராஜலட்சுமியோடு அவள் கடற்கரையைப் பார்க்க போனாளாம். அப்போது சின்ன அலையை, பெரிய அலை முடுக்குவதைப் பார்த்தாளாம். ஊருக்குள்ளதான் தங்கச்சிய விடாமல் அவன் முடுக்கினான் என்றால் கடல்ல விழுந்த பெறவுமா அவள இந்த முடுக்கு முடுக்குவான் என்று வயிற்றெரிச்சல் பட்டுவிட்டுத்தான் இந்தக் கதையைச் சொன்னாள்.

எவனையோ வஞ்சி கொண்டே ஆரம்பித்தாள். தாயளி மவன் நாடு விட்டு நாடு போனாலும், மனுச செம்மத்த விட்டு கடலா மாறுனாலும் அவன் சின்னப்புத்தி போவலயே! எங் கண்ணுக்கு கண்டு அவன் உரு மாட்டியா ஆளு கணக்கா தெரிஞ்சான்னு வச்சிக்கோ... சிறுக்கி புள்ளய கால்ல கெடக்க செருப்ப கழட்டிக்கிட்டு சனம் தீர அடி பின்னிருவேன். பய எம்புட மாட்டேங்கானே என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

இவ்வளவு சொன்னால் எங்களுக்குப் போதாதா? என்ன பாட்டி மெட்ராசுக்கு போயிட்டு வந்ததிலருந்து வசவா வஞ்சிக்கிட்டு இருக்கீக. யார வைதீக என்று நாங்கள் அவளைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு கேட்க அவளும் சொல்ல ஆரம்பித்தாள்.

ஒரு அண்ணனும் தங்கச்சியும் இருந்தாக. அவுக ரொம்ப ஏழைக் குடும்பம். மலையில போயி தரகு அறுத்துட்டு வந்தாத்தேன் அவுக பொழப்பு நடக்கும். தினமும் விடிஞ்ச உடனே அவுக ஆத்தா கட்டுச் சோறு கட்டிக் கொடுத்து ரெண்டு பேரையும் மலைக்கு அனுப்பி வச்சி ருவா. இவுக ஒவ்வொரு கட்டு தரகு அறுத்துட்டு பொழுது அடைய வீட்டுக்கு வருவாக. பெறகு அந்த தரவ வித்து அதில் வார தவசத்த வச்சி அன்னைக்குப் பொழுத கழிப்பாக.

இப்படி இருக்கும்போது ஒரு நாளு அண்ணனும் தங்கச்சியும் மலைக்கு தரகு அறுக்கப் போகையில வானம் மப்பும்மந்தாரமுமா இருந்துச்சு. மேகம் கந்து கந்தா வானத்தப் பொத்திக்கிட எங்க பாத்தாலும் ஒரே இருட்டு. சாரக் காத்து வேற. குளிரு தாங்க முடியல.

அப்போதங்கச்சி சொன்னா. அண்ணே, இன்னைக்கு மேகம் இருக்க இருப்பில பெரிய மழ வந்திரும் பொலுக்கோ. ஊருக்குள்ள பொட்டுன்னு தூறல் விழுவங் குள்ளயும் மலையில பெரிய வெள்ளம் வந்துரும். அதனால் நாம தரகு அறுக்க வேண்டாம். காலாகாலத்தில வீட்டுக்குப் போயிருவோமின்னு சொன்னா.

அண்ணனும் சரின்னு சொல்ல ரெண்டு பேரும் மலையிலிருந்து எறங்கி காட்டு வழியே வராக. விடிய மின்னவே மேகம் கூடிட்டதால காடுகரையில ஒரு சனம் இல்ல. தோப்பும் வெள்ளாமையும் மட்டும் காத்துக்கு தலய கோதி விட்டுக்கிட்டு இருக்குக.

கிட்டமுட்ட ஆள் யாருமில்ல. இந்தக் குளிரு, மேகத்தோட இருட்டு எல்லாம் சேந்து இருக்கத பாத்தபோது அண்ணங்காரனுக்கு புத்தி கலங்கிருச்சி. கள்ளுக்குடிச்சவன் மாதிரி தங்கச்சியப் பாக்கான். தங்கச்சியும் அண்ணன் ஒரு வடியா இருக்கிறதப் பாத்தா. உடனே, என்னண்ணே இப்படி பாக்கே? பொக்கின்னு நட; நம்ம பெரிய மழ வரமின்ன ஊரு போயி சேந்திருவோமின்னு சொன்னா.

அவன் உடனே...

கீ... காத்தும் கீ மழையும் வருகுடி பெண்ணே
வாழைக்குள்ளதங்கிவிட்டா என்ன?
வட காத்தும் வட மழையும் வருகுதடி பெண்ணே
வடக்கிருக்கும் கடலைக்குள்ளதங்கிவிட்டா என்ன?
மேகாத்தும் மேமழையும் வருதடி பெண்ணே
மேற்கிருக்கும் மாந்தோப்புலதங்கிவிட்டா என்ன?
தென்காத்தும் தென் மழையும் வருகுதடி பெண்ணே
தெக்கிருக்கும் தென்னைக்குள்ளதங்கிவிட்டா என்ன?

அப்படீன்னு பாடி இருக்கான். உடனே தங்கச்சி பாடுனா.

'பெண்ணே ஏன்று சொல்லாத புத்திகெட்ட அண்ணே
நம்ம வீடு போயி சேரும் வரை உன் காவல் அண்ணே.

ஆனா அண்ணன்காரனுக்கு தங்கச்சி சொன்னது எதுவுமே புத்தியில ஏறல. இப்போதைக்கு அவன் பார்வையில அவ வேற ஒரு பொம்பளயா தெரியதோட கண்ணுக்கு ரொம்ப ரஞ்சிப்பாவும் தெரியிதா. எப்படியும் அவகூட பழகணுமின்னு ரொம்ப ஆசப்பட்டுக்கிட்டு அவள எட்டிப் பிடிக்கப் போறான்.

அவ அவனுக்கு எம்புட்டோ புத்திமதி சொல்லிப் பாத்தா. அவன் கேக்கிற மாதிரி இல்ல. அவள எப்படியும் தன்னோட அணச்சிக் கிடணுமின்னு வெறி வந்துருச்சி. அதனால அவளப் பிடிக்க ஓடுதான். தங்கச்சிக்கும் அவனோட நோக்கம் தெரிஞ்சிக்கிடுச்சி. இனி இந்தப் பயலுக்கு என்ன சொன்னாலும் காதுல ஏறாது. நம்ம இவன் கைக்கு எம்புடாம ஓடிரணுமின்னு நாலு காலு பாய்ச்சல்ல வீட்டப் பாக்க ஓடுதா. இவனும் அவள முடுக்கிக்கிட்டே ஓடியாறான்.

வீட்டுக்கு வந்துட்டா. மேமூச்சி கீமூச்சு வாங்கும்படியா கேவுகேவுன்னு வந்து நிக்கிற மகளப் பாத்து அவ ஆத்தாளுக்கு ஆச்சரியமா இருக்கு.

ஏந்தாயி மலைக்குத் தரவு அறுக்கப் போனவ எதுக்கு இப்படி ஓடியார? அண்ணன் எங்க காணம்னு கேட்டாள்.

உன் ஆசை மவன் தாண்டி
உனக்கு அரும நல்லோ மருமவனா ஆனான்டி
உன் பாச மகன் தாண்டி

படுபாதகனா ஆனான்டி

ஆத்தாளுக்கு ஒண்ணும் புரியல. என்ன விசயமின்னு விவரம் கேக்க மகளும் நடந்த விசயத்த சொல்லிக்கிட்டு இருக்கும்போது மகன் வீட்டுக் குள்ள வந்துட்டான். வந்தவன் ஆத்தாளக் கூட பாக்காம தங்கச்சிய ராவிப் புடிச்சான்.

ஆசமவனே. அரும நல்ல புத்திரனே,
எனக்கு மருமகனா ஆனாயோ?

ஏலேய் அவ உன் கூடப் பொறந்த தங்கச்சி. தங்கச்சி மேல் உனக்கு எப்படி ஆச வந்துச்சின்னு கேட்டா.

அவ கிள்ளு கொசுவத்துக்கோ
கீமடி வெத்தலைக்கோ -அள்ளு
சிறு தேமலுக்கோ ஆச கொண்டேன் உம் மவள?
கெண்டக்கால் அழகுக்கல்லோ
கெளுத்தி மீன் கண்ணுக்கல்லோ
இடது புருவ மச்சத்துக்கல்லோ நான்
இச்ச கொண்டேன் உம் மவளன்னு!

அவனும் பாடிக்கிட்டே தங்கச்சியப் புடிக்கப் போக ஆத்தா குறுக்க வந்து, அட பாவிப்பயலே... தங்கச்சி கூட கூடி இருந்தா உலகம் பொறுக்கு மான்னு அவனைத் தடுத்தா. அம்புட்டுத்தேன், அவனுக்கு வந்த கோபம் இந்த மட்டு இல்ல. ஆத்தாள மண்டையில ஒரே போடு போட்டுட்டு தங்கச்சிய முடுக்கி இருக்கான்.

அவ ஒரே ஓட்டமா கடலப் பாத்து ஓடுனா. இவனும் அவ பின்னா லயே ஓடுனான். அப்பவெல்லாம் கடல்ல அலை கிடையாது. குளம் மாதிரிதான். தளும்பிக்கிட்டு காத்துக்கு அலை எழும்பிக்கிட்டு இருக்கும். இவ போயி அந்தக் கடல்ல விழுந்துட்டா.

அவனும் கடல்ல விழ தங்கச்சி என்ன செய்யன்னு அலையா மாறி ஓட அவ அண்ணனும் அலையா மாறி வெறியோட இன்னமும் தங்கச்சிய துரத்திக்கிட்டே இருக்கான் என்று சொல்லி முடித்தாள்.

கடலில் இப்போது இரண்டு அலைகள் வருகிறதாம். பெண் அலை முன்னால் ஓட ஆண் அலை அதை விரட்டிக்கொண்டு வருகிறதாம்.

ooo

எங்கள் ஊர் பக்கத்தில் புதூரில் முழுக்க முழுக்க கம்மவார் நாயக்கர்கள்தான் குடி இருந்தார்கள். அவர்கள் ஊருக்கு நாங்கள் வேலைக்குப் போவதும் எங்கள் ஊருக்கு அவர்கள் வருவதுமாக ரொம்ப வும் தாயாய் பிள்ளையாய் பழகிக்கொண்டிருந்தோம்.

புதூர்க்காரியான வெங்கிட்டம்மா அக்காவும் எங்கள் ஊர் போத்தி

அண்ணனும் எப்போதும் விளையாட்டும் சிரிப்புமாக பேசிக்கொண்டிருப்பார்கள். இரண்டொரு வருஷமாய் இது நடந்து கொண்டிருந்தது. இவர்களின் பழக்கத்தைப் பார்த்த யாரோ தப்பாகச் சொல்லிவிட வெங்கிட்டம்மா அக்காவை எங்கள் ஊருக்குப் போகக்கூடாது என்று அவள் ஊரில் கட்டுப்பாடு போட்டுவிட்டார்கள். ஒருநாள் இருட்டிய பிறகு அந்த அக்கா தன் அம்மாவின் துணையோடு எங்கள் ஊருக்கு வந்து விட்டாள்.

நம்ம இப்படி கறந்த பாலா பழகுதோம். இத யாரோ தப்பாச் சொல்லி எங்க ஊருக்காரக மனச குலைச்சிட்டாகளே. உங்ககூட வேலைக்கு வராமயும் உங்க கூட பேசாமயும் என்னால இருக்க முடிய லயே என்று அந்த அக்கா அழுதவாறு சொல்லிக்கொண்டிருக்கும்போது போத்தி அண்ணனும் பக்கத்தில்தான் இருந்தார்.

எங்கள் ஊரில் எந்த விஷயம் என்றாலும் நடுத்தெருவில் வைத்து தான் பேசுவார்கள். ஒரு பெரிய ஆட்டுக்கல் கிடக்கும். அதைச் சுற்றி நீள நீளமான பட்டியல் கல் போட்டிருக்கும். பெரியவர்கள் எல்லாம் அதில் உக்காந்திருக்க நாங்கள் கீழே உக்காந்திருப்போம். அன்றும் அப்படித் தான் அக்கா சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தோம். இதற்குள் வடக்கேயிருந்து கூ... கொள்ளையோ என்று சத்தம் கேட்டது. பெரியவர் களிடம் பேசிக்கொண்டிருந்த அந்த அக்கா, எங்க ஊருக்காரகதேன் என்னைத் தேடி வராக; அவுக சண்டைக்கி வந்தாலும் நீங்க நயந்து போங்க என்று சொன்னவள் இருட்டுக்குள் ஓடி மறைந்தார்.

ஊர்ப் பெரியவர்கள் எல்லாரும் சத்தம் கேட்ட திக்கம் நோக்கி ஓடினார்கள். நாங்களும் பின்னாலேயே ஓடினோம். அவர்கள் ஏதேதோ பேச இவர்களும் பதிலுக்குப் பேச பெரிய சண்டையே வந்துவிடுமோ என்று நினைத்தோம். அப்படி சத்தம் போட்டு சத்தம் போட்டு பேசி னார்கள். கடைசியில் இறங்கி வந்து போத்தி அண்ணன் வந்து ஊர்க் கூட்டத்தின் நடுவே விழுந்து கும்பிட்டு மன்னிப்பு கேட்க வேண்டு மென்று சொன்னார்கள். சரி என்று ஊர்க்காரர்கள் சொன்னதோடு வீட்டுக்குப் போய்விட்ட அண்ணனைக் கூப்பிட ஆள் அனுப்பினார்கள்.

ஆனால் அந்த அண்ணன் தன் வீட்டில் கயிறு போட்டு நாண்டு கொண்டு பிணமாகத் தொங்கினார்.

மறுநாள் வெங்கட்டம்மா அக்காவும் அவர்கள் வீட்டு உத்திரத்தில் கயிறு போட்டு செத்துப் போனதாக தாக்கல் வந்தது.

ஙஙக

என் தம்பி ராஜா எட்டாவது வகுப்பு படித்தான். தர்மன் ஆறாவது. நானும் பெரியவளாகி விட்டேன்.

எங்கள் ஊருக்கு வடக்கே கம்மாபட்டி என்ற ஊர் இருக்கிறது. அங்கே இருப்பவர்கள் எல்லோரும் கம்பளத்தார்கள். கைகளில் கங்கணம் போட்டு கழுத்தில் கருகு மணி பாசி அணிந்திருப்பார்கள். தெலுங்கு பேசுவார்கள். பெண்கள் ரவிக்கை அணிய மாட்டார்கள். வெளியே எங்கேயும் பச்சைத் தண்ணீர் கூட குடிக்க மாட்டார்கள். ஆண்கள் கொண்டை போட்டிருப்பார்கள். பலசாலிகள்.

அணில், எலி, பூனை என்று எந்த உயிர்ப்பிராணியைப் பார்த்தாலும் அடித்து தோலை உரித்து வதக்கிவிடுவார்கள். அதனால் அய்யரவு பட்டு சாப்பிட மாட்டோம். அவர்கள் முகம் கோணும்படி நடந்துகொண்டால் 'வாக்கு' விட்டு விடுவார்கள் என்று நினைத்து எல்லோரும் அவர்களுக்குப் பயப்படுவார்கள்.

அந்த ஊருக்கு ரொம்ப பழக்கமாக இருக்கும் முள்வாங்கிப் பாட்டி எங்கள் ஊர்க்காரர்களை அங்கே வேலைக்கு கூட்டிச் செல்வாள். அவர்களுக்கு வேலைக்குப் போனால் நாம் சாப்பாடு கொண்டு போக வேண்டாம். பெரிய மொடாவில் கம்மஞ்கஞ்சியை மோர் விட்டுக் கரைத்து பெரிய அகப்பையும், பக்கத்தில் நாலு தகரப் போணியும் போட்டிருப்பார்கள். அகலமான உலைமூடியில் மிளகாய், வெங்காயம் வதக்கி மிதுக்கு வற்றலோடு வைத்திருப்பார்கள்.

அவர்களிடம் ஒரு பழக்கம் இருந்தது. வேலைக்கு போகும் வயசுப்பெண்கள் மிளகாய்பழம், காய் பறித்துக்கொண்டிருந்தாலும், பருத்தி, கருது என்று பெறக்கி கொண்டிருந்தாலும் சரி, நாம் 'மாத விலக்கு' ஆகிவிட்டால் நம்மிடம் இருக்கும் பொருளை வாங்கிக்கொள்ள மாட்டார்கள்! அதோடு நாம் அவர்கள் பிஞ்சையில் தொடர்ந்து வேலையும் பார்க்கக்கூடாது. நம் மடியிலோ பொட்டியிலோ இருக்கும் பொருள்களோடு நாம் அப்படியே திரும்பி வந்துவிட வேண்டும். முழுச் சம்பளமும் கொடுத்துவிடுவார்கள். வேலைக்கான கூலியும் எங்கள் ஊர் கூலியை விட நாலாணா அதிகம். இந்தப் பாட்டி எங்கள் ஊரிலிருந்து ஆள் கூட்டிக் கொண்டு போகும். கொஞ்சம் நேரம் கழித்து பொட்டி நிறைய பழம், கருது இருக்கும்போது, நீ தலைக்கு ஊத்திட்டேன்னு சொல்லிரு. ஒன்ன வீட்டுக்குப் போகச்சொல்லிருவாக. நீ பொட்டி பழத்தயும் கொண்டு போயிரு. வீட்டுல போயி நம்ம பவுந்து வச்சிக்கிடுவோம் என்று சொல்லிக்கொடுத்து பாடு வாங்குவாள்.

ஒருநாள் நானும் விஜயாவும் அவளுடன் வேலைக்குப் போனோம். பாட்டி இரண்டு நாள் சும்மா இருந்தாள். மூன்றாவது நாள் எங்களையும் பொய் சொல்லச் சொன்னாள். அன்றைக்கு நிலக்கடலை ஆய்ந்து கொண்டிருந்தோம். பாட்டி எங்களை இப்ப தலைக்கு ஊத்திட்டேன்னு சொல்லப் போறீகளா இல்லயா? அப்படி சொல்லாட்டா உங்கள இனிமே இங்க வேலைக்கு கூட்டி வரமாட்டேன் என்று பயமுறுத்தினாள். எங்கள் பொட்டி நிறைய கடலை இருந்தது. எங்களுக்கு பொய் சொல்ல

மனசில்லை என்றாலும் பாட்டியின் அரிப்பு பொறுக்க முடியாமல் தலையை ஆட்டியதுதான் தாமதம், உடனே பாட்டி பிஞ்சைக்காரர்களிடம் போய் பேசினாள்.

பிறகு பாட்டியோடு ஒரு அம்மா வந்தார். என்ன தாயீ, வீட்டுக்குத் தூரமாயிட்டீகளாக்கும். சரி இந்தாங்க இன்னைக்கு சம்பளம். பொட்டி கடலய அப்படியே தூக்கிட்டுப் போயிருங்க. இனி அஞ்சு நாளைக்கு வேலைக்கு வராதீங்க என்றார். எனக்கு அப்போது அழுகை அழுகையாய் வந்தது. விஜயாவைப் பார்த்தேன். அவளும் அழுவதுபோல் நின்றிருந் தாள்.

சம்பளத்தை பாட்டியிடம் கொடுக்கச் சொல்லிவிட்டு பொட்டி யைத் தூக்கி தலையில் வைத்துக்கொண்டு ஊரைப் பார்க்க நடந்தோம். பாட்டி இரண்டு பேர் பொட்டியிலும் எத்தனை படி கடலை இருக்கும், எத்தனை ரூபாய்க்கு விற்கலாம் என்று கணக்குப் போட்டுக்கொண்டு வந்தாள். கொஞ்ச தூரம் வந்திருப்போம். பாட்டி எங்களிடம், அடியே இங்கன நில்லுங்க; நானு இந்தா இருக்கும் ஓடைக்குள்ள ஒதுங்கிட்டு வாரேன் என்று சொல்லிவிட்டுப் போனாள்.

நான் விஜயாவிடம், எனக்கு பொய் சொல்ல மனசே வல்ல. இந்த பாட்டிதேன் உசுர வாங்குதா என்றேன். அவளும் எனக்குந்தேன் மன சில்ல, நீ தலய ஆட்டவும் நானும் ஆட்டிட்டேன் என்றாள். அவள் அப்படிச் சொன்னது எனக்கு சந்தோசமாக இருந்தது.

அப்ப இந்த கடலய கொண்டி அவுக கிட்ட கொடுத்துட்டு நிசத்த சொல்லிட்டு வந்துருவமா என்று கேட்டேன்.

பாட்டி வைவா; பிறவு நம்மள இங்கிட்டு வேலைக்கும் கூட்டிட்டு வர மாட்டா; வராட்டாலும் போறா, நம்ம கடலயக்கொண்டி கொடுத்துருவோம் என்றாள் விஜயா.

இரண்டு பேரும் பொட்டிக்கடலையோடு பிஞ்சைக்குப் போனோம். பிஞ்சைக்காரர்களிடம் பாட்டி பேச்சைக் கேட்டு பொய் சொன்னதாகவும், எங்க குத்தத்த பெருசா எடுத்துக்காம மாப்பு கொடுக்கும்படியும் சொன்னோம்.

எங்களுக்கு எல்லாம் தெரியும் தாயீ. அப்பவும் வேலைக்கு வார ரக்குல ரெட்ட ரெட்ட பேராவாதலைக்கு ஊத்துவாக! அப்படி ஊத்துறவக வெறும் பொட்டியா வெறும் மடியா இருக்கையில ஊத்தட்டுமே பாப்போம்! நீங்க சிறுசுக. எல்லாம் அந்த முள்வாங்கி வேல.கிழவி எது வரைக்குந்தேன் போறான்னு பாப்போம். நீங்க குறப்பொழுதும் வேல பாத்துட்டுப் போங்க என்றார்கள். வேலை முடிந்து வீட்டுக்கு வரும் போது ஆளுக்கு மூணு கூட்டுக்கை கடலையும் போட்டு விட்டார்கள்.

வெளியே ஒதுங்கப் போன முள்வாங்கிப் பாட்டி எங்களைத் தேடியிருக்கிறாள். பிறகு நாங்கள் அந்த இடத்தில் இல்லாததால்

வீட்டுக்குத்தான் போயிருப்போம் என்று ஊருக்கு வந்து விசாரித்திருக் கிறாள். நாங்கள் வரவில்லை என்று தெரிந்ததும் குட்டு விடாமல் இருந்து விட்டு நாங்கள் பொழுது அடைய வந்ததும் மறைவாய் என்ன விவரம் என்று கேட்டாள். நாங்களும் உள்ளதைச் சொன்னோம். ஆனாலும் உன்னக் காட்டிக் கொடுக்கல பாட்டி என்று சொல்ல பாட்டி புலம்பினாள். ரெண்டு கெடுக்காளியும் சேந்து என் மூக்க அறுத்திட்டீகளே, முனி மூக்க ராவிட்டீகளே, இனி நானு எப்படி அவுக மூஞ்சியில முழிப்பேன் என்று எங்களை கடும் பேச்சு பேசினாள். அதோடு எங்களுடன் பேசுவதையும் விட்டுவிட்டாள்.

எங்கள் ஊரில் பட்டாளத்துக்காரர்கள்தான் அதிகம் இருப்பார்கள். அதனால் எல்லோரும் அவர்களைத்தான் விரும்புவார்கள். வசந்தா, பவுனு எல்லோரும் பட்டாளத்து மாப்பிள்ளைக்குத் வாக்குப்படணும் என்று பேசிக்கொண்டார்கள். நான் எந்த மாப்பிள்ளையையும் விரும்ப வில்லை. எல்லோருடைய வீட்டிலும் அப்பா இருந்தார்கள். பணம், நகை எல்லாம் இருந்தது. எங்கள் வீட்டில் எதுவுமே இல்லை. அதனால் நான் என் சேத்திக்காரர்களின் கலியாணத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

ஒரு நாள் கணேசன் கொஞ்சமாய் 'பூ' கொண்டுவந்து என்னிடம் கொடுத்தான். சத்திரப்பட்டியில் இருக்கும் பண்டாரம் இப்படி யாரிட மாவது 'ஊர் பூ' கொடுத்துவிடுவது வழக்கம். வசந்தாவின் அப்பா ஊர் நாட்டாமைக்காரர். அதனால் அவர் வீட்டுக்கு தினமும் கொடுத்து விடுவார். நாங்கள் எல்லாம் ஒன்றாக இருப்பதால் எல்லோருமே பூவைப் பகிர்ந்து வைத்துக்கொள்வோம்.

நான் அவனிடமிருந்த பூவைப் பார்த்துவிட்டு, இது என்ன கணேசா? இம்புட்டுக்கானு பூவை கொடுத்துவிட்டா இதை யாருன்னு வைக்கிறது? வசந்தா, செல்லிக்கெல்லாம் வேண்டாமா? நீ இந்தப் பூவை அப்படியே கொண்டுபோய் பண்டாரத்துக்கிட்ட கொடுத்துரு; அப்பத் தேன் அவருக்குத் தெரியும்; நானும் மாமாகிட்ட சொல்லுதேன் என்றேன்.

நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். பண்டாரம் நிறையத்தேன் பூ கொடுத்தாரு. நாந்தேன் வேண்டான்னுட்டு கொஞ்சமா வாங்கியாந்தேன் என்றான்.

எதுக்கு அப்படி வாங்குனே? அவங்களுக்கெல்லாம் வேண்டாமா என்று கேட்டேன்.

அவுங்களுக்கு எதுக்காவ நானு பூ வாங்கிட்டு வாரேன். நான் உன்னைத்தேன் கட்டிக்கப் போறேன். அதேன் உனக்கு மட்டும்

வாங்கிட்டு வந்தேன் என்று சொன்னவன் உடனே நிற்காமல் விறுவிறு வென்று போய்விட்டான்.

எனக்கு அவன் செய்கை ஆச்சரியமாய் இருந்தது. ஒன்றாகவே இன்னமும் வேலை செய்வது, விளையாடுவது என்று இருக்கிறோம். ஆனால் அவன் ஒருநாளும் இப்படிப் பேசியதில்லை.

இந்த விஷயத்தை உடனே வசந்தாவிடம் சொல்ல வேண்டுமென்று அவள் வீட்டுக்குப் போனேன். அவள் மட்டுமே இருந்தாள்.

என்ன வசந்தா, என்னைக்குமில்லாம கணேசன் பூவ கொண்டாந்து என்கிட்ட கொடுத்துட்டு இப்படி பேசுதான் என்றேன்.

நீ அவன் அயித்த மக; அதேன் அப்படி பேசியிருக்கான் என்றாள்.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது வசந்தாவின் அப்பா வந்து விட்டார். வரும்போதே என்ன என் மகன் உன்னக் கட்டணுமிங்கானா என்று கேட்டுக்கொண்டே வந்தார். கணேசன் அவரது அண்ணன் மகன். நாங்கள் திடுக்கிட்டுப் போனோம். இந்த மாதிரி நாங்கள் ஒரு நாளும் பெரியவர்களிடம் பேசியதில்லை. நான் விருட்டென்று வீட்டிற்கு வந்து விட்டேன். மனசு பயத்தில் பட்படத்தது.

ஒரு வாரம் ஆகிவிட்டது. நாங்கள் இந்த விஷயத்தை மறந்து போனோம். எப்போதும்போல் கணேசனுடனும் மற்றவர்களுடனும் வேலை செய்துகொண்டிருந்தோம்.

ஒருநாள் வசந்தாவின் அப்பா எங்கள் வீட்டுக்கு வந்தார். அப்போது அம்மா இல்லை. தம்பிகளும் பள்ளிக்கூடம் போய்விட்டார் கள். நான் தான் அவரை வாங்க மாமா என்று வரவேற்றேன்.

அவரும் உன் அம்மா எங்க? என்று கேட்க நான் அவள் போன இடத்தைச் சொன்னேன். போய் கூட்டிவா என்றார். நானும் பெரியம்மா வீட்டில் பேசிக்கொண்டிருந்த அம்மாவிடம் போய் மாமா அவளுக்காகக் காத்திருக்கும் விஷயத்தைச் சொன்னேன்.

அவன் எதுக்குடி என்னை கூப்பிடுதான்? அவன் அப்படிக்கூட நம்ம வீட்டுக்கு வரமாண்டானே. நீ என்னமும் ஒண்ணு கிடக்க ஒண்ணு செஞ்சு வச்சுட்டயா? என்று அங்கலாய்த்துக்கொண்டே வீட்டுக்கு வந்தாள்.

வாசல்படி நுழையும்போதே மாமா, என்னத்தா! உம் மவள கணேசனுக்கு கொடுத்துருவோம்; ஒன்னுக்குள்ள ஒன்னு; நீரடிச்சு நீர் விலகாது; பையனும் ரொம்ப விரும்புதான் என்று சொன்னார்.

அண்ணே, இவள எப்ப தொலச்சி விடுவோமின்னுதேன் பரிதவிக்கேன். ஆனா கவருமெண்டு வேலக்காரனுக்கு கட்டிக் கொடுத்துட்டமின்னா அவ பாட்டுக்கு எங்கிட்டும் போயி தொலைவா. அண்ணன் மவன் இங்கன மாடு கன்னு விவசாயமன்னு பாத்துக்கிட்டு

இருக்காக. அவுகளுக்கு கொடுத்தா பிறவுமில்ல எங் காலடில கிடந்துக் கிட்டு என் உசுர வாங்குவா. அதேன் பாக்கேன். மத்தபடி அண்ணனயோ, அண்ணன் மவனயோ நானு ஒரு குத்தமும் சொல்லல என்றாள் அம்மா.

மறுநாள் சாயங்காலம் கணேசன் எங்கள் வீட்டிற்கு வந்தான். நான் என்ன என்று கேட்குமுன்பே, பாரதா... நானு இன்னைக்கு மெட்ராசுக்குப் போறேன்; திரும்பி வரும்போது கவருமென்டு வேலயோடதேன் திரும்பிவருவேன் என்று சொல்லிவிட்டு நான் பதில் பேசும்முன்பே விறு விறுவென்று திரும்பிக்கூடப் பார்க்காமல் போய்விட்டான். அவன் அப்படிப் போனது எனக்கு கஷ்டமாக இருந்தது.

ஒரு மாதம் போயிருக்கும். எங்கள் அப்பா வழியில் சொந்தமான ராமாயி அத்தையும் மாமாவும் இன்னும் நாலு சொந்தக்காரர்களோடு எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். அவர் மகன் பட்டாளத்தில் இருப்பதால் என்னை அவருக்கு கல்யாணம் முடிப்பதற்காக பேசிக்கொண்டிருந் தார்கள். அவர்கள் ராஜபாளையம் என்பதால் என் அம்மாவிற்கு ரொம்ப சந்தோசம். எல்லாரும் என்னஎன்னவோ பேசினார்கள். அம்மா நடுவில் என்னைக் கூப்பிட்டு, இவர்களுக்கு எல்லாம் காப்பி போட்டுத்தரணும், நீ வசந்தா வீட்டுக்குப் போயி பால வாங்கிட்டு வா என்றாள். அப்படியே அந்த மாமாவையும் நான் சொன்னேன்னு கூட்டிட்டு வா என்றாள். அப்போது வசந்தாவின் அம்மாவிற்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந் திருந்தன. அதனால் எந்த நேரமும் அடுப்பில் பால் காய்ந்துகொண்டே இருக்கும்.

நான் வீட்டை விட்டு வெளியே வந்ததும் நிலாவைப் பார்த்து விட்டு நடக்க அதுவும் என் கூடவே வந்தது. வளர்பிறை.

எங்கள் சுவர் ஓரத்தில் ஒரு ஆள் ஒண்டிக்கொண்டு நிற்பது தெரிந்தது. நான், அதாரு... எம்மா இங்க யாரோ... என்று சொல்லுமுன்பே நின்ற ஆள் என் வாயைப்பொத்தி சற்று தள்ளிக்கூட்டிப் போனது. யார் என்று பார்த்தால் செண்பகம் அக்கா! அந்த அக்கா எனக்கு ஆறேழு வருசத் துக்கு மூத்தவளாயிருப்பாள். தன் பேச்சைக் கேட்டு அத்தராத்திரி தன்னைச் சந்திக்க காட்டுக்கு வந்தாள் என்று கிருஷ்ணன் மாமா இவளை மதிக்காமல் வேறு கல்யாணம் முடித்துவிட்டார். இன்னும் அக்காவுக்கு கல்யாணம் ஆகவில்லை. அவளைப் பார்த்ததும் எனக்கு ரொம்ப ஆச்சரியம்.

எதுக்காவக்கா எங்க சுவர்ல ஒண்டிக்கிட்டு இருக்கீக என்று கேட்க, அந்த அக்காவும் ஒண்ணுமில்ல... வயிறு வலிக்கிற மாதிரி இருந்துச்சு; வெளியே போவோமின்னு வந்தேன்; உங்க வீட்டுல நிறய ஆளுகளோட பேச்சு சத்தம் கேட்டுச்சு அதேன் நின்னேன் என்றவர் எதுக்கு இம்புட்டு

ஆளுக வந்துருக்காக அது யாரு என்ன என்று எல்லா விவரத்தையும் கேட்டாள்.

நானும் ராஜபாளையத்திலிருந்து அத்தை வந்ததையும் அவள் மகனுக்கு என்னை கட்டிக்கொடுக்கப் போவதையும் சொன்னேன். அக்கா எல்லாவற்றையும் கேட்டுவிட்டுப் போய்விட்டாள்.

நான் பால் வாங்கி வந்ததும் எல்லோருக்கும் அம்மா காப்பி போட்டுக் கொடுத்தாள். பிறகு நாளைக்கே மெட்ராசிலிருக்கும் என் தம்பிக்கும் கடிதாசி எழுதிப்போடுதேன்; தம்பி வரவும் கல்யாணத்துக்கு நாளு குறிச்சிருவோம் என்றாள்.

அதன் பிறகு நாலு நாள் கழிந்தது. என் மாமா வரவை அம்மா எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் போது இரவு பத்து மணிக்கு மேல் எங்கள் கதவை யாரோ தட்டினார்கள். கிறுக்குப்பய இந்நேரத்துக்கு வந்துருக்கான்; இம்புட்டு தேரத்துக்கு பெறவும் ரயிலு இருக்கு பொலுக்கோ என்று என் அம்மா சொல்லிக்கொண்டே சின்னதாக எரிந்த ராம்பை தூண்டி வெளிச்சத்தை பெரியதாக்கிவிட்டு கதவைத் திறந்தாள். மாமா வந்திருக் கிறார் என்றதும் நாங்கள் எல்லாரும் எழுந்துவிட்டோம்.

கதவைத் திறந்தால்... என்னைப் பெண் கேட்ட ராமாயி அத்தை பதட்டத்தோடு வீட்டிற்குள் நுழைந்தாள். உடனே என் அம்மா, என்னக்கா இந்நேரத்துக்கு வந்திருக்க என்று கேட்க அந்த அத்தையும் அந்தக் கொடுமய என்னத்த சொல்ல... இந்த செம்பவச் சிறுக்கி எம் மவன கூட்டிட்டுப் போயிட்டாளாம் என்றாள். என் அம்மா அதிர்ச்சியோடு, என்ன நிசந்தானா என்று கேட்க அத்தையும், பிறவென்ன நானு பொய்யா சொல்லுதேன். எம் மவன் அப்புராணி; கஞ்சிக்குள்ள கெடக்க ஈயக்கூட எடுக்கத் தெரியாது. அப்படியாக்கொந்த பைத்தியக்காரப் புள்ளய இந்த முண்ட என்ன மருந்து வச்சாளோ மாயம் வச்சாளோ கூட்டிட்டுப் போயிட்டாளே என்றார்.

சரி இப்ப நீ என்ன செய்யப் போறே என்று அம்மா கேட்டாள்.

பெருமாள் கோயில்லயும் திருண்ணாமலயிலயும் ஆளுகள வச்சிருக்கோம்; இந்த முண்ட தாலி கட்ட அங்கதான எம் மவன கூட்டிட்டு வருவா. கூட்டிட்டு வரவும் அவள செருப்பக் கொண்டி அடிச்சி அவளக் கழிச்சிக்கட்டிட்டு எம் மவன கூட்டிட்டு வந்துருவாக; பிறவு நம்ம கல்யாணத்த வச்சிக்கிடுவோம் என்றாள்.

எம் அம்மாவும் முதல்ல உம் மவன கூட்டிட்டு வா; பெறவு பாப்போம் என்று போகச் சொல்லிவிட்டு கதவை அடைத்தாள்.

ஏம்மா, கஞ்சிக்குள்ள ஈ கிடக்கதுக்கூட தெரியாம இருக்கவரு நம்ம வீட்டுக்கு மாமாவா வரவேண்டாம் என்றான் ராஜா.

எனக்கு சிரிப்பாய் வந்தது. நல்லவேளை, ஓடிப்போனான் என்று

இருந்தது. செண்பகம் அக்காவின் தைரியத்தை நினைத்து ஆச்சரியமாய் இருந்தது. எந்த வேலைக்கும் வரமாட்டாள். வீட்டைவிட்டே வெளியே றாதவள்.

வசந்தா என்னிடம் சொன்னாள். பாரதா, நம்ம கல்யாணமே முடிக்கக்கூடாது. கல்யாணம் முடிஞ்சாகஷ்டம் வந்துருமாம். நம்மளால சேந்து ஒண்ணா இருக்கமுடியாது. விளையாடவும் முடியாது. எங்காத்தாளக் கணக்கா புள்ள பெத்துக்கிட்டு சீரழிஞ்சி சீப்பட்டுக்கிடக்கணும்.

வசந்தாவிற்கு கூடப்பிறந்தவர்கள் ஆறுபேர். இப்போது தம்பி தங்கையுமாக இரட்டைக் குழந்தை வேறு பிறந்திருந்தது.

ராஜபாளையத்து அத்தை தன் மகனைத் தேடிய அன்று சாயங்காலம் செண்பகம் அக்கா எங்கள் வீட்டு வழியாக புதுப்பெண் கோலத்தில் வந்தாள். உடுத்தியிருந்த சேலையும் அலங்காரமும் அழகாக இருந்தது. வழக்கம்போல் நாலைந்துபேர் சேர்ந்துகொண்டு செண்பக அக்காவின் வீட்டிற்கு ஓடினோம்.

நான் அந்த அக்காவிடம், ஏங்க்கா பெருமாள் கோயிலிலும் திருண்ணாமலையிலும் நீங்க கல்யாணம் முடிக்க வருவீக; உங்களை அப்படி முடிக்கவிடக் கூடாதுன்னு அத்தயும் மாமாவும் வச்சிருந்தா களாமே; பெறவு எப்படி உங்க கல்யாணம் முடிஞ்சிச்சு என்று கேட்டேன்.

அம்புட்டுக்குத் தெரியாமயா நாங்க கிடக்கோம். இவுக இந்த ரெண்டு கோயில்லயும் ஆளு வச்சிருப்பாகன்னு எங்களுக்கு தெரியும். அதனால நாங்க சீலுத்தூரு போற வழியில சின்ன பிள்ளையாரு கோயிலு இருந்துச்சு. அங்க தாலியக் கட்டிக்கிட்டோம். மச்சான் என்னக் கொண்டாந்து ஊரு வரைக்கும் விட்டுட்டு இப்ப நானு ஊருக்குள்ள வந்தா எங்காத்தா அய்யா பிரச்சன பண்ணுவாக. நானு இந்தமான பட்டாளத்துக்குப் போயிட்டு ஒண்ணு ரெண்டு மாசத்தில வந்திருதேன்னுட்டு சீலுத்தூருல வண்டியேறி அப்படியே போய்ட்டாக என்றாள்.

எங்கள் ஊரில் இதெல்லாம் அதிசயமான அருவருப்பான விஷயங்களாக பேசப்படும். இந்த அக்காவையும் அப்படித்தான் பேசினார்கள். செண்பகம் அக்கா ஒரு ஆள்மூலம் கடிதம் கொடுத்து அந்த மாமாவை ராஜபாளையம் தியேட்டருக்கு வரச்சொல்லி சந்தித்துப்பேசி கல்யாணத்துக்கு சம்மதிக்க வைத்துவிட்டாளாம்.

அவள் ஓடிப்போனவள்; அவள் வீட்டுக்கு போகாதீக என்று எங்களுக்கு கட்டுப்பாடு வேறு போட்டுவிட்டார்கள்.

ஆனால் கொஞ்ச நாளில் அந்த அக்கா மாமியாருடன் சமாதானமாகி ராஜபாளையத்தில் கணவன் வீட்டிற்குப் போய்விட்டாள்.

ஜ

கருதறுப்புக் காலம். மூத்த மாமாவிற்கு அடுத்த மாமாவிற்கு நெல்கருது அறுத்து அடித்து வைக்கோலை உதறி எல்லா வேலையையும் முடிக்க இரவு பத்துமணிக்கு மேல் ஆகிவிட்டது. அவர்கள் வயல் மொட்டைமலையின் அருகில் இருந்ததால் களத்தையும் மலையின் அருகிலேயே வைத்திருந்தார்கள். கருதறுக்க வந்தவர்கள் எல்லாம் போய் விட்டார்கள். களத்தில் மாமா, அத்தை, நான், மாமா மகன் என்னைவிடச் சின்னவன் எல்லோரும் இருந்தோம்.

நெல்லை காவந்தா பாத்துக்கோங்க; நானு போயி வண்டி பத்திட்டு வாரேன்; நெல்லை வீட்டுக்கு கொண்டுபோயிருவோம் என்று வண்டி கொண்டுவரப் போய்விட்டார் மாமா.

நாங்கள் மூன்று பேர் மட்டும் காவல் இருக்க அத்தை மகன் தூங்கி விட்டான். அத்தைக்குத் துணையாக நானும் எனக்குத் துணையாக அத்தையும் இருந்தோம். எட்டுமட்டுக்கும் ஒரு அரவத்தையும் காணோம். வண்டிச்சத்தம் எப்போது கேட்குமென்று ஆவலும் பதட்டமுமாக காத்திருந்தோம். நிலா இன்னும் வரவில்லை. வண்டிச் சத்தம் கேட்க வில்லை. கசமுசவென்று ஆட்கள் பேசிக்கொண்டு வரும் சத்தம்தான் கேட்டது.

சத்தத்தைக் கேட்ட அத்தை காதில் இருந்த முடிச்சி, தண்டட்டி, பாம்படம் எல்லாவற்றையும் கழட்டி என் பாவாடையில் சொருகி வைத்துக்கொள்ளும்படி கூறினாள். நானும் அத்தை சொன்னபடி செய்தேன். மகனை எழுப்பி உட்காரவைத்தாள். இதற்குள் மூன்று பேர் அங்கே வந்துவிட்டார்கள். எல்லோரும் தலைப்பாகையால் முகத்தை மூடிக் கட்டியிருந்தார்கள்.

வந்தவர்கள் எங்களைப் பார்த்துவிட்டு அத்தையிடம், சத்தம் போடாம இருந்தா ஒரு மூடநெல்லோட போயிருவோம்; எதுவும் சத்தம் கித்தம் போட்டீக.... பெறவு என்ன குத்தம் சொல்லாதீக என்று சொல்லி முடிக்குமுன் இன்னொருவன் சாக்கில் நெல்லை அள்ளினான்.

நானும் அத்தை மகனும் இப்படி ஒரு சமயத்துக்காக மடி நிறைய கல்லைப் பெறக்கி வைத்திருந்தோம். கல்லை எறிய வேண்டாம் என்று எங்களைத் தடுத்து விட்டார் அத்தை.

அடேய்... அது யாரடா என் காவல்ல வந்து நெல்லை அள்ளுறது என்று ஆங்காரத்தோடு ஆடிக்கொண்டே அத்தை அவர்கள் முன்னால் போய் நின்றாள்.

அடேய்.... இங்க முழுக்க எங் காவல். இந்த முனியாண்டி காவல்ல கை வச்சவன் ஆயுசு மூணே முக்கா நாழிய தாண்டாதுடா; அதுக்குள்ள நீ ரத்தம் கக்கி சாகலே இந்த முனியாண்டிய கையெடுக்காதடா என்று ஆங்காரத்தோடும் ஆவேசத்தோடும் நெல்லை அள்ளியவன் நெஞ்சில் ஓங்கி ஒரு மிதியும் எதிரே நின்றவனின் தலையில் ஒரு அடியும்

வைத்தாள். இதற்குள் மாட்டின் மணிச்சத்தமும் கேட்டது.

நெல்லை அள்ளவந்த கள்ளர்கள் அத்தையின் மேல் வந்த சாமிக்குத் தான் பயந்தார்களோ அல்லது மணிச்சத்தத்திற்குத்தான் பயந்தார்களோ தெரியவில்லை. மூன்று பேரும் அள்ளிய நெல்லையும் போட்டுவிட்டு திரும்பிப் பார்க்காமல் வந்த வழியே ஓடினார்கள். சற்று நேரத்தில் மாமா கூட ஒரு ஆளையும் கூட்டிக்கொண்டு வண்டியோடு வந்து சேர்ந்தார்.

நாங்கள் அத்தை மேல் முனியாண்டி வந்ததையும் சாமி ஆடி கள்ளன்களை விரட்டியதையும் சொன்னோம்.

என் கிட்டதேன் நிதமும் முனியாண்டி ஆடிக்கிட்டு இருக்கேன்னா அவங்க கிட்டயும் ஆடிட்டயா என்று மாமா கேட்டார்

பின்ன பேசமாட்டீரு! வந்த கள்ளங்க எம்புட்டு நெல்லயும் அள்ளிட்டு போறான்னு எம் பாட்டுக்கு ஒளிஞ்சிக்கிட்டு இருந்தா உமக்கு இப்ப தெரியும் சேதி என்றாள் அத்தை.

❧

இரண்டு மாதம் போயிருக்கும். ஒரு நாள் ஊரடங்கும் நேரம். நடுத்தெருவை ஒட்டிதான் செண்பகம் அக்கா வீடு இருந்தது. அந்த வீட்டின் முன்னால் மாட்டு வண்டி வந்து நிற்க அந்நேரம் எதற்காக வண்டி வருகிறது என்று அறிய ஊர் முழுக்க விழித்துவிட்டது. விளைந்த சோளக் காட்டில் குருவிக்கூட்டம் சேருவதுபோல் ஊர் ஆட்கள் எல்லாம் அக்கா வீட்டின் முன் கூடிவிட்டார்கள்.

முதலில் செண்பகம் புருசன் இறங்க அவரைத் தொடர்ந்து அக்கா இறங்கினாள். வண்டி வந்து நின்றதுமே அக்காவுடைய அம்மா வெளியே வந்தார். இந்த அக்கா புருசன் வண்டியிலிருந்த சாமான்களையெல்லாம் இறக்கி அவர்கள் வீட்டு முன் வைத்துவிட்டு அவள் அம்மாவிடம், இந்தா உன் மகள பத்திரமா கொண்டாந்து உன் கிட்ட ஒப்படச்சிட்டேன். அவ என்ன குத்தம் செஞ்சான்னு ஒம்மக கிட்டவே கேட்டுக்கோ. நீ கொடுத்த சீருவருசயில ஒரு சினுக்கோரியக்கூட மறந்துராம கொண்டாந்து கொடுத் துட்டேன் என்றவர் அந்நேரத்துக்கே வண்டியைப் பத்திக்கொண்டு போய்விட்டார்.

ஊர்க்காரர்களுக்கு எதுவும் புரியவில்லை. யாரும் எதுவும் பேசவும் இல்லை. பிறகுதான் ஊருக்குள் கொஞ்சம் கொஞ்சமாய் விஷயம் பரவியது. இந்த அக்காவின் கணவர் கல்யாணத்தன்றே பட்டாளம் போய் விட்டார். அங்கேயிருந்து அம்மாவிற்கும் அப்பாவிற்கும் தான் செய்தது தப்பு என்றும் என்னை மன்னித்து என் பொண்டாட்டியை கூட்டி வந்து நம்வீட்டில் வைத்திருங்கள்; நான் இரண்டு மாதம் கழித்து வருகிறேன் என்று கடிதம் எழுதியிருக்கிறார். இவர்களும் மகனை மன்னித்து

மருமகளை ராசபாளையம் கூட்டிப்போய் விட்டார்கள். அக்காவின் கணவர் இரண்டு மாதம் கழித்து வந்தபோது அந்த அக்காவிற்கு வயிற்றில் நான்கு மாதம்.

ருக்மணி அக்காவை அண்ணன் இருக்க தம்பி லட்சுமணப் பெருமாளுக்குக் கல்யாணம் பண்ணிக்கொடுத்து விட்டார்கள். இருபது வயசில் எங்கள் ஊருக்கு வந்தாள். அண்ணனுக்கு கால் ஊனமாய் இருந்த தால் யாரும் பெண் கொடுக்கவில்லை. பெற்றவர்கள் அவர் பெயருக்கு காடு கரையை எழுதிவிட்டு வாரிசாக தம்பியை போட்டுவிட்டார்கள். தம்பி ஆடு மேய்க்கப் போய்விடுவார். அண்ணன் ராமசாமி கொழுக்கத் தின்றுவிட்டு வீட்டில் சும்மா இருந்தார். சும்மா இருந்தாலும் பரவா யில்லை. தம்பி பொண்டாட்டியை தன் ஆசைக்கு இணங்கும்படி வற்புறுத்தியிருக்கிறார்.

அக்காவும் மச்சானின் இம்சையைப் பற்றி புருசனிடம் சொன்ன தோடு அவர்களைச் சேர்ந்த இரண்டொரு உறவுக்காரர்களிடமும் சொல்லி யிருக்கிறாள். அவர்கள் அண்ணன்காரனை கொஞ்சம் கண்டித்த தோடு இவளிடம், பாதையில் நட்ந்தாகல்லுமுள்ளுன்னு ரெண்டு கிடக்கத்தேன் செய்யும்; நீதேன் பாத்து பதனமா நடக்கணும் என்று சொல்லியிருக் கிறார்கள்.

மற்றவர்களிடம் சொன்னதிலிருந்து அக்காவிற்கு மச்சானின் தொந்தரவு அதிகமாகிவிட்டது. நான் சொன்னபடி கேக்கலயின்னா என் பேருக்கு இருக்க காடுகரைய உங்களுக்கு விடமாட்டேன்; எனக்கு சம்மதப்படுறவ எவளயாவது கூட்டியாந்து வச்சிக்கிடுவேன் அது இது என்று சீலைப்பேனாக அரித்துக்கொண்டே இருந்திருக்கிறார் அண்ணன் ராமர்.

எப்பவும் போல் ஊரில் மாரியம்மன் பொங்கல் வந்தது.

கோயிலுக்கு முன்னால் பந்தல், வாழைமரம், குழாய் லைட் என்று ஊரே கோலாகலமாய் இருந்தது. நட்டிய கம்புகளில் குழாய் லைட்டுகள் வரிசையாய் எரிந்து நிலாவுக்கு மிச்சமாய் ஒளி காட்டின. ராஜா ஒரு இரும்பு முள்ளைக் கொண்டுவந்து என்னிடம் காட்டினான். கருப்பாய் சுத்துகிற பாட்டுத் தட்டில் இந்த முள்தான் கீறிக்கொண்டிருக்குமாம். பாட்டு தெவங்கும்போது பெட்டியில் உள்ள கைப்பிடியைப் பிடித்து நாலைந்து சுற்று சுற்ற வேண்டுமாம். புதுமுள்ளை மாட்டிவிட்டு பழைய முள்ளை ரேடியோக்காரன் கீழே போடவும் ராஜா எடுத்துக்கொண்டு வந்து விட்டான். நானும் செல்லியும் வசந்தாவும் போய் அந்த ரேடியோப் பெட்டியைப் பார்த்தோம்.

காட்டுராணிக் கோட்டையிலே கதவுகள் இல்லை.
அங்கு காவல் காக்க கடவுளை அன்றி ஒருவருமில்லை

என்று பாடிக்கொண்டிருந்தது.

செவ்வாய்க்கிழமை முடித்து புதன் கிழமை நடுச்சாமம்தான் பொலிகுட்டி வெட்டி கிரகம் கரைப்பார்கள். அப்போது சாமி துடியாக வரும். ஊர் ஆட்கள் எல்லாம் சாமியாடிகளிடம் வரம் கேட்பார்கள்.

கிரகம் கரைப்பதைப் பார்க்க வேண்டும் என்று கால் ஊனமான அண்ணன் ஆசைப்பட அவர் தம்பி அண்ணனைக் கூட்டிக்கொண்டுவந்து கோயிலின் அருகில் உக்கார வைத்துவிட்டார். சாமியாடிகளிடம் வேப்பங் குலையைக் கொடுத்து சாமி வரவழைக்கும்போது ருக்மணி அக்கா மேல் சாமி வந்துவிட்டது. ஊர் சனம் மொத்தமும் சாமியாடி களிடம் நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு வரம் கேட்க இந்த அக்கா ஆய்... என்று அவயம் போட்டவாறு ஆவேசத்துடன் மச்சானை ஒரே தூக்காகத் தூக்கிக் கொண்டுபோய் பக்கத்திலிருந்த கிணற்றுக்குள் போட்டுவிட்டாள். போட்டது மட்டுமில்லாமல் அடேய்... என்று எல்லோரையும் கூப்பிட்டு ஊரின் பெருந்தலையான ஆட்களைப் பற்றி சொல்லிக்கொண்டே போக யாருக்குமே ராமசாமியின் ஞாபகமே வரவில்லை. திகைப்பூண்டுல மிதிச்ச மாதிரி இந்த சாமியாடியின் பேச்சுலயே லயித்துப்போய் நின்றுவிட்டார்கள்.

அக்காவின் மச்சானுக்கு கால் ஊனமாய் இருந்ததால் யாரும் நீச்சல் சொல்லிக் கொடுக்கவில்லை. கொஞ்ச நேரம் கழித்துதான் அவருடைய ஞாபகம் எல்லாருக்கும் வந்தது. இதற்குள் அக்காவிற்கு சாமியும் மலை யேறிவிட்டது.

எல்லோரும் அய்யய்யோ மோசம் போச்சே என்று கிணற்றைப் பார்க்க ஓட இந்த அக்காவும் அப்புராணியாக என்ன என்ன என்று கேட்டுக் கொண்டு கூடவே ஓடினாள்.

வெள்ளச்சி பாட்டி, அடிபாதகத்தி! உனக்கு சாமி வந்த ஆவேசத்தில மச்சானத் தூக்கி கிணத்துக்குள்ளபோட்டுட்டியே என்று சொல்ல அக்கா மச்சான்... என்று நெஞ்சில் அடித்தவாறு கிணற்றுக்குள் பாய்ந்து விட்டாள்.

அவன்தேன் மொண்டிப்பய செத்தா செத்துட்டுப் போறான்; யாருக்கும் நட்டமில்ல; இவ அவன காப்பாத்துதேன்னு இவளும் போய் சேந்துராம என்று எல்லோரும் சொல்லவும் பிறகு இரண்டு பேர் இறங்கி அக்காவை மேலே வரச்சொல்லிவிட்டு அவள் மச்சானை பிணமாக தூக்கிக்கொண்டு வந்தார்கள். அக்காவிற்கு நீச்சல் தெரியும். அக்கா மச்சான் பிணத்தைப் பார்த்துவிட்டு அநியாயத்திற்கு மண்ணில் புரண்ட வாறு நெஞ்சிலும் தலையிலும் அடித்துக்கொண்டு அழுதாள். அவள் அழுவதைப் பார்த்த எல்லோரும், ஏத்தா நீ என்ன வம்புக்கா மச்சானத்

தூக்கி கிணத்துக்குள்ள போட்ட? அவன் ஒரு ஆக்கங்கெட்ட கூக. ஒம் மேல வந்த சாமியப் பத்தி அதங்கொதமான வார்த்தையில பேசியிருப் பான். அதேன் சாமிக்கு வெளம் வந்து அவனத் தூக்கி கிணத்துக்குள்ள போட்டுருச்சி. இல்லேன்னா ஒரு முழுத்த எளந்தாரிய ஒரு கைத்தண்டி பொம்பள கோழிக்குஞ்சியத் தூக்குனாப்பில தூக்கி கிணத்துக்குள்ள போட முடியுமா? என்று அவளை ஆத்திதேத்தி விட்டார்கள்.

பய கோழிச் செல்லாக் கிடந்து மனுசிய அரிச்சதுமில்லாம என்னைய உசுரோட கொன்னு எந்தலயவும் திங்கணுமின்னான்; புண்ணி யத்துக்குப் போய்ச் சேந்தான் என்று அக்காவும் நிம்மதி பெருமூச்சு விட்டாள் என்று வெள்ளச்சிப் பாட்டி அரசாத்தா பாட்டியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

எங்கள் வட்டாரத்தில் சித்திரை வைகாசி மாதங்களில்தான் பொங்கல் கொண்டாடுவோம். பட்டாளத்தில் இருப்பவர்கள் எல்லாம் பொங்கலைக் கொண்டாடுவதற்காக லீவில் வருவார்கள். இவர்கள் வருகைக்காகவே காத்திருந்து கல்யாணம், சடங்கு, கிரகப்பிரவேசம் என்று எல்லா விசேஷங்களையும் செய்வார்கள். வெளியூர்களில் குடும்பத் தோடு குடியிருப்பவர்களும் வந்து சேர ஊரே கலகலப்பாகக் கிடக்கும். எல்லோருடைய சொந்தபந்தங்களின் பெருக்கம் தெரியும். வாயைக் கட்டி வவுத்தைக் கட்டி சீட்டுப் போட்ட பணம், சேத்துவைச்ச பணம் எல்லாம் செலவாவது இந்த மாதத்தில்தான்.

எனக்கும் வசந்தாவிற்கும் அவள் அப்பா மும்முரமாக மாப் பிள்ளை பார்த்துக்கொண்டிருந்தார். பட்டாளத்துக்காரன் மாப்பிள்ளை யாக அமைந்துவிட்டால் நல்லது என்று எல்லோருக்கும் தோன்றியது.

ஒருநாள் பிள்ளையார்குளத்துக்கு வேலைக்குப் போய்விட்டு வந்து நன்றாக தூங்கிவிட்டேன். யாரோ என்னை எழுப்பும் சத்தம் கேட்டு விழித் தேன். என் அம்மா எழுப்ப மெட்ராஸ் மாமா பக்கத்தில் நின்றுகொண் டிருந்தார்.

மாமா வந்ததே எனக்குத் தெரியாது. எப்ப வந்தீக மாமா என்று கேட்டவாறு எழுந்து உக்கார்ந்தேன்.

உன் அம்மாதேன் காயிதம் போட்டு வரச்சொன்னா; உனக்கு கல்யாணத்த முடிச்சிரணுமின்னு அவ நினைக்கா என்றார்.

நான் பேசாமலிருந்தேன். என்ன பேசாம இருக்கே? கணேசன் இப்ப எங்கிட்டதேன் இருக்கான். அவன் பொறுப்புலதேன் வீடு பால்மாடு எல்லாம் விட்டுட்டு வந்துருக்கேன். எய்யா, பாரதாவ எனக்குப் பேசிமுடிச்சிருங்கன்னு அவன் சொன்னான். அவனுக்கு கூடிய சீக்கிரம்

வேல வாங்கிக் கொடுத்துருவேன். உன் சம்மதப்படிதேன் எந்தக் கல்யாணமும் நடக்கும். உன் சம்மதமில்லாம நானு உனக்கு கல்யாணம் முடிக்க மாண்டேன். நாளைக்கு நீ என்ன ஒரு குத்தம் குற சொல்லக்கூடாது பாரு. எங்கண்ணன் வீட்டுகள்ல எல்லாம் மாப்பிள்ளைக இருக்கு. உனக்கு புடிச்ச மாப்பிள்ளையா சொல்லு. அதவே நானு உனக்கு முடிச்சி வைக்கேன் என்றார்.

என் அம்மா என்னைப் பார்க்காமல் எங்கேயோ பார்த்துக்கொண்டு பட்டாளத்துக்காரனுக்கு வாத்தியார் வேல ஒண்ணும் குறவில்ல என்றாள்.

நீ பேசாம இருக்கா. பாரதா இஷ்டப்படிதேன் கல்யாணத்த நடத்தணும். எனக்கு இருக்கது ஒரு மருமக. நாளப்பின்ன அவ கண்ணீரும், கையுமா வந்து நின்னா எனக்குத்தேன் கஷ்டமாயிருக்கும். ஊரும் என்னத்தேன் பேசும் என்று சொல்லிவிட்டு நீ என்ன சொல்லுத என்று மாமா என்னிடம் கேட்டார்.

நான் கல்யாணத்தைப் பற்றியோ மாப்பிள்ளையைப் பற்றியோ ஒன்றும் யோசித்திருக்கவில்லை. தெரிந்துகொள்ளவும் விரும்பவில்லை. அதனால் மாமாவிடம் நான், மாமா வீடுகளைத் தவிர்த்து வேறு எங்கேயாவது என்னைக் கட்டிக்கொடுங்கள் என்றேன்.

சின்னப்பெண்ணாக இருந்தபோது இந்த மாமாக்களின் கோபத்துக்கு ஆளாகி அவர்களுக்கு நாள் முழுக்க உழைத்து அவர்களோடு சேர்த்து என் அம்மாவையும் வெறுத்திருந்ததால் மாமா வீடுகளே எனக்குப் பிடிக்காமல் கசந்துபோய்விட்டது.

ம்புட்டு வெறுப்பா என்று மாமா கேட்க
டன்.

பாரதா எங்க சின்னய்யா உனக்கு
ல்ல; நீ எங்கள விட்டு எங்கேயும் போகக்
ப்படி நினைக்கே; ஆனா அவ நம்ம
எலலாரையும வடடுப பபாகமாடடாங்கா என்றார் என் மாமா.

வசந்தா ஓடி வந்து என் கைகளைப் பிடித்துக்கொண்டு என்னைப் பார்க்க; நான் அவளைப் பார்க்க கொஞ்ச நேரத்தில் ஒருவரு கொருவர் பார்க்க முடியாமல் கண்களில் நீர் நிறைந்தது.



வசந்தாவுக்கு முன்பே எனக்கு கல்யாணம் நடந்தது. என் அம்மா விருப்பம்போல் சொக்க லிங்கபுரத்திலிருந்து வாத்தியார் ராசு எனக்கு கணவராக வந்தார். அப்போது எனக்கு வயது பதினேழு.

நிலாக்கள் தூர தூரமாக

பாரத தேவி

